
இந்திய வரலாறு (பகுதி II)

HISTORY OF INDIA (PART II)



கி.ர. அனுமந்தன்

ந.க. மங்களமுருகேசன்



தமிழ்நாட்டுப் பாடநூல் நி

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—520

இந்திய வரலாறு

(இரண்டாம் பகுதி)

(பட்டப்படிப்பிற்குரியது)

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகிறது)

அன்பளிப்பு
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
சென்னை.

ஆசிரியர்கள்

கி. ர. அனுமந்தன், எம்.ஏ., எம்.எஸ். (விஸ்கான்ஸின்), அமெரிக்கா,
தலைமைப் பேராசிரியர், வரலாற்றுத்துறை,
மாநிலக்கல்லூரி, சென்னை.

ந. க. மங்கள முருகேசன், எம்.ஏ.,
பதிப்பாசிரியர், தமிழக வரலாறு,
குறளகம், சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—November 1973

T.N.T.B.S. (C.P.) No. 520

© Tamil Nadu Text Book Society

HISTORY OF INDIA (Part II)

K. R. Hanumanthan and
N. K. Mangala Murugesan

Price Rs. 9-30

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by:
GUARDIAN PROCESS & PRESS,
Madras - 600005.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதின்மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்றுவருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்து வரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றான **'இந்திய வரலாறு' (பகுதி II)** என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **520**ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **555** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மானிய மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின் கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்

நூன்முகம்

'மன்பதை செய்த மாபெருங்குற்றங்கள், மதிகெட்ட செயல்கள், இடையூறுகள் இவற்றின் பட்டியலே வரலாறு' என்றார் கிப்பன் (Gibbon) என்னும் வரலாற்றுப் பேரறிஞர். ஒரு நாட்டின் வரலாறு என்பது நாட்டை ஆண்டு, மாண்டுவிட்ட அரசர்கள், அரசியர்களுடைய வெற்றி தோல்விகளின் பட்டியல் மட்டுமே என்ற கருத்து மக்களிடையே வேருன்றி இருந்தமையாலேயே அவ்வாறு அன்று அவர் மொழிந்திட்டார். அக் கருத்து அடியோடு மாறுவிடினும், ஓரளவிற்கு மாறி வருவதைக் காண்கிறோம்.

'அரசியல் வரலாறு' என்பது ஒரு நாட்டு வரலாற்றின் எலும்புக்கூடு போன்றது. சமுதாய வரலாறும், அவர்தம் நாகரிக வரலாறும், அதன் சதையும், குருதியும் போன்றன என்ற கருத்து நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகின்றது. இன்றைய நாளில் அறிஞர் பெருமக்கள், சமுதாயமும், மக்களின் பழக்க வழக்கங்களும் பண்பாடும் எங்ஙனம் படிப்படியாக வளர்ந்தன என்பதைத் தெளிவு படுத்துவதே வரலாற்றின் முக்கியக் குறிக்கோளாக இருத்தல் வேண்டும் என்பதனை ஒப்புக்கொள்கின்றனர். இத்தகைய கருத்தின் அடிப்படையில்தான் சென்னைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ள புதிய பாடத்திட்டம் அமைந்துள்ளது. அப்பாடத்திட்டத்தை ஒட்டித் தமிழில் எழுதப்பட்ட இந்திய வரலாற்று நூல்கள் போதுமான அளவுக்கு இல்லா ஒரு குறையை ஒருவாறு போக்குகின்ற முயற்சியில் இந்நூலாசிரியர்கள் முனைந்து செயல்பட்டதன் விளைவே இந்நூல்.

இதுவரை 'இந்திய வரலாறு' குறித்து வெளிவந்த நூல்களுக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு இதுதான். இந்நூல்

இந்திய வரலாற்றரங்கில் தோன்றி மறைந்த அரசர், அரசியர் களின் செயல்களை மதிப்பீடு செய்வதோடமையாமல் இந்தியச் சமுதாயமானது ஒவ்வொரு காலக்கட்டத்திலும் எவ்வாறு மாறிக் கொண்டே வந்துள்ளது; அதன் பொருளாதார முயற்சிகள் யாவை; கலைத்துறையில் அது எய்திய மேம்பாடு யாது என்பன போன்ற செய்திகளைப் பரக்கக் கூறுதலேயாகும்.

இந்திய வரலாற்றில் பாபரின் வருகைவரை உள்ள வரலாற்றுச் செய்திகளை இரண்டு பகுதிகளாகப் பிரித்துள்ளோம். முதலாவது பகுதியில் ஹர்ஷர்வரை உள்ள வரலாற்றை விளக்கமாக எடுத்துரைத்துள்ளோம். நம் நாட்டிற்கே உரித்தான சாதிமுறை, தீண்டாமை பற்றி முதல் தொகுதியில் தனி அத்தியாயமே எழுதப்பட்டுள்ளது. இந்தியத் திருநாட்டின் பண்டை இனத்தவராம் 'திராவிடர்கள்' பற்றியும் அதில் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது. இப்படிப் பல சிறப்பியல்பு களைக் கொண்ட அந்நூலினைத் தொடர்ந்து இவ்விரண்டாம் பகுதி வெளிவருகின்றது.

இதுவரையில் இந்திய வரலாற்றினைத் தமிழில் எழுதிய பெரு மக்கள் தென்னக வரலாற்றிற்குச் சிறப்பான இடம் அளிக் காதது பெரிதும் வருந்தற்பாலதொன்றாகும். அப்பெருங் குறையை ஓரளவு போக்க இந்நூல் முயற்சி எடுத்துக்கொண் டுள்ளது. உலகப் பெரு வீரர்களின் வரிசையில் வைத்து எண்ணத் தக்க இராசராசன் போன்ற தமிழ்நாட்டுப் பெரு மன்னர்களின் சீரும் சிறப்பும் பற்றி இந்நூலில் பரக்கக் கூறப் பட்டுள்ளது.

இங்ஙனம் தமிழ்நாட்டின் வரலாற்றிற்கும், தமிழ் நாகரிகத் திற்கும் தனிச் சிறப்பிடம் வழங்கும் பேறு கிடைத்தது பற்றி உண்மையிலேயே நாங்கள் பெருமிதமடைகிறோம். அங்கியப் படையெடுப்புகளாலும் வேறு பல முயற்சிகளாலும் அழிக் கழிக்கப்பெற்றும், சற்றும் துவண்டிடாது தமிழ்ப்பண்பாடு எங்ஙனம் வீறுபெற விளங்குகிறது என்பதை விளக்க முயன் றுள்ளோம். அதே நேரத்தில் இந்திய தேசீயப் பற்றும், தமிழ் மொழியின்மீதும், நாட்டின்மீதும் கொண்டுள்ள பற்றும் ஒன்றுக்கொன்று முரணானவையன்று என்ற கருத்தும் ஆங் காங்கே வற்புறுத்தப்பட்டுள்ளது. தமிழ்ப் பெரு வேந்தர்களும், ஆழ்வார்களும், நாயன்மார்களும் தமிழர் நாகரிகப் பாதையில் விட்டுச் சென்றுள்ள அடிச்சுவடுகள் ஓரளவு விதந்தோதப் பட்டுள்ளன.

புதிய பாடத் திட்டத்தின்வழிப் பயிலும் பி.ஏ. வகுப்பு மாணவர்களுக்கென எழுதப்பட்டுள்ள இந்நூல் எம்.ஏ. வகுப்பு மாணவர்களுக்கும் பயன்படத்தக்க அளவில் அடிப்படைக் கருத்துகளைக் கொண்டுள்ளது. இதன் ஆசிரியர்கள் பி.ஏ., எம்.ஏ. வகுப்பு மாணவர்களுக்கு இந்திய வரலாற்றைப் பல்லாண்டுகள் கற்பித்ததன் விளைவாகக் கனிந்த கனியே இந் நூல் எனலாம். இந்திய வரலாற்றில் பாபரின் படையெடுப்பு வரையிலும் இந்நூல் செல்கிறது.

படிப்பவர்களின் வசதியை முன்னிட்டு இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பினும், இந்து இந்தியா, முஸ்லீம் இந்தியா என்ற பாகுபாட்டை இந்நூல் மேற்கொள்ளவில்லை. தொடர்ச்சி யினை மனத்தில் கருதி வரலாற்று நிகழ்ச்சிகள் அமைக்கப் பட்டுள்ளனவேயன்றிக் காலவரிசை முறையே எல்லா இடத்திலும் கடைப்பிடிக்கப்படவில்லை. சோழர், பாண்டியர் போன்றோரைக் குறித்த வரலாற்றினை முழுமையாகத் தனித்தனி அத்தியாயமாகச் சேர்த்துள்ளோம். தஞ்சைப் பெரிய கோயிலைப் பற்றித் தனி ஓர் இயலே எழுதப்பட்டுள்ளது.

முஸ்லிம் மன்னர்கள் வடக்கே கோலோச்சி வந்த அதே வேளையில் தென்னாட்டில் ஆண்ட இந்து அரசர்களின் சிறப்பும், கலைக்கு அவர்கள் ஆற்றிய தொண்டுகளும் இஸ்லாமியக் கருத்து களின் மோதலால் இந்தியப் பண்பாட்டில் ஏற்பட்ட மாறுதல் களும் ஒருங்கே எடுத்துக் கூறப்பட்டுள்ளன. ஓயாது இந்தியாவில் ஏற்பட்டு வந்த அரசியல் மாற்றங்களின் பின்னணியில் படிப் படியாய் வளர்ந்த இந்திய நாகரிகத்தைப் பற்றிய இவ் வரலாற்று நூல் சிறப்பாகப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கும், தமிழ்நாடு அரசு பணியாளர் பொறுக்குத் தேர்வை எழுத விழைவோருக்கும், பொதுவாக இந்திய வரலாற்றினை அறிந்துகொள்ள விழையும் அனைவருக்கும், பயன்படக்கூடிய ஒன்றாகும்.

கி. ர. அனுமந்தன்,
ந. க. மங்களமுருகேசன்.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பல்லவர்களின் காலம் ...	1
2.	சோழர் வரலாறு ...	42
3.	பாண்டியர் வரலாறு ...	101
4.	தென்னிந்தியப் பக்தி இயக்கம் அல்லது இந்து சமய எழுச்சி ...	112
5.	தக்காண வரலாறு ...	124
6.	இராசபுத்திரர்களின் காலம் ...	163
7.	சிந்துவில் அராபியர்கள் ...	201
8.	கஜ்னவைடுகளின் எழுச்சியும் வீழ்ச்சியும் ...	218
9.	கோரி மரபினர் ...	229
10.	அடிமை வம்சம் எனப்பட்ட துருக்கிய வம்சம் ...	249
11.	கில்ஜி வம்சம் ...	267
12.	துக்ளக்குகள் ...	289
13.	சையதுகளும் லோடிகளும் ...	320
14.	டெல்லிச் சுல்தானிய ஆட்சிமுறை ...	336
15.	டெல்லிச் சுல்தானியர்களின் காலத்திய சமூகப் பொருளாதார வாழ்க்கை, கலை, இலக்கியம் ...	350
16.	பக்தி நெறி இயக்கம் ...	362
17.	பாமினி அரசு ...	369
18.	விசயநகரப் பேரரசு ...	383
19.	பிறநாட்டார் கண்ட விசயநகரம் ...	416
20.	டெல்லிச் சுல்தானியம்—ஒரு மதிப்பீடு ...	425
	வம்சாவளி அட்டவணை ...	431
	மேற்கோள் நூற்பட்டியல் ...	452
	கலைச் சொற்கள் ...	456
	வரலாற்று முக்கிய நிகழ்வுகள் ...	466
	பல்கலைக்கழக வினாக்கள் ...	468

இந்திய வரலாறு

(இரண்டாம் பகுதி)

1. பல்லவர்களின் காலம்

[ஆதாரங்கள்: இலக்கிய ஆதாரங்கள் — பட்டயங்கள் — கல்வெட்டுக்கள் — தோற்றம்: காடவர் — பகலவர்களுடன் தொடர்பு — பார்ப்பனர் — பிரம்மாவின் வழித்தோன்றல்கள் — மணிபல்லவம் — குறும்பர் — தொண்டை மண்டலம் — வேடிக்கையான விவாதங்கள் — சாதவாகனர் தொடர்பு — தமிழர்கள் அல்லர் — அரசியல் வரலாறு: சங்க காலத்திற்கு முன் — மகேந்திரவர்மன் — இரண்டாம் புலிகேசியுடன் போர் — மற்றப் போர்கள் —சமயப்பணி — குடைவரைக் கோயில்கள் — சிறப்புப் பெயர்கள் — குடுமியாமலை — வாதாபி கொண்ட நரசிம்மன் — சிறப்புப் பெயர்கள் — வாதாபி கொண்டான் — இலங்கைத் தொடர்பு — போர்கள் — யுவாங் சுவாங் — கலைப்பணி — பின் தோன்றல்கள் — ஆட்சி முறை : சான்றுகள் — ஆட்சிப் பிரிவு — மைய அரசு — தேர்தல் முறை — விருதுப் பெயர்கள் — அமாத்தியர் — அமைச்சர் குழு — கடமைகள் — நீதித்துறை — நிலம் — படை — உள் ஆட்சிமுறை — ஊர் அவை — வாரியம் — பல்லவர்கள் கல்வி — இசை — ஓவியம் — சிற்பம் — கோயில்கள் — மாமல்லபுரம் — இலக்கியபணி.]

I. ஆதாரங்கள்

பல்லவர்களைப்பற்றி அறிந்துகொள்ளுவதற்கு உதவுகின்ற ஆதாரங்கள் பல உள்ளன. அவற்றில் முதலாவதாகக் குறிப்பிடத் தகுந்த ஆதாரங்கள் இலக்கிய ஆதாரங்களே. சங்கத் தமிழ் நூல்களில் பல்லவர்களைப்பற்றிய குறிப்பே காணமுடியாது. ஆனால் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர்தான் பல்லவர்களைப் பற்றிய செய்திகளை அறியக் குறிப்புகள் கிடைத்துள்ளன. இலக்கிய ஆதாரங்களில் பல்லவர் ஆட்சியில் காஞ்சிபுரம் சிறந்த தலைநகரமாக விளங்கிற்று என்று கூறப்பட்டுள்ளது.

லோக விபாகம்: இது திகம்பரசமண நூலாகும். இந்நூல் ஒழுங்காகச் செய்யப்பெற்ற காலம் காஞ்சி அரசர் சிம்மவர்மன் பட்டம் பெற்ற 22ஆம் ஆண்டு ஆகும்.

அவந்தி சுந்தரி கதை: இதுவும் வடமொழி நூலே. இந் நூலின் முகவுரையில் பாரவி என்னும் வடமொழிப் புலவர் விஷ்ணு வர்த்தனன், துர்வினீதன், சிம்மவிஷ்ணு ஆகியோரைக் கண்டு பரிசு பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது.

மத்தவிலாசப் பிரகசனம்: இந் நூல் பல்லவ மன்னனுகிய மகேந்திரவர்ம பல்லவனுல் இயற்றப்பட்ட நாடக நூலாகும். மகேந்திரவர்மன் காலத்திய புத்தர், கபாலிகர், சமணர் முதலிய சமய மக்களின் பழக்க வழக்கங்கள் அவர்களது வாழ்க்கை ஆகிய வற்றைப்பற்றி இதன் வாயிலாக அறிந்துகொள்கிறோம். மகேந்திர வர்மனின் காலம் கி.பி. 615 முதல் 630 வரை என இந் நூலினை அடிப்படையாகக் கொண்டு டாக்டர் வெங்கட்டரமணையா என்பவர் கணித்துள்ளார்.

சைவத் திருமுறைகள்: பல்லவர்களின் கால வரலாற்றினை நாம் அறிந்துகொள்வதற்குச் சைவத் தமிழ் இலக்கியங்களான திருமுறைகள் எனப்படும் தேவாரம் போன்ற நூல்கள் நமக்குப் பெரிதும் துணைபுரிகின்றன. சமணர்களைப்பற்றிய செய்திகள் திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற பதிகங்களில் காணக் கிடக் கின்றன. கி.பி. 9ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சுந்தரர் பல்லவர்களைப்பற்றித் தாம் பாடிய தேவாரத்தில் குறித்துள்ளார். அவர்தம் குறிப்பிலிருந்து பல்லவ அரசர் பேரரசராகத் திகழ்ந்தார் எனவும், அவரது ஆட்சியின் கீழ்ப் பல திறை செலுத்தும் அரசர் கள் இருந்தார்கள் எனவும் அறிகிறோம்.

நாலாயிரத் திவ்விய பிரபந்தம்: திருமங்கையாழ்வார் இன்று நாதங்கோயில் என வழங்கப்படும் கும்பகோணத்தை அடுத்த நந்திபுரம் என்னும் ஊரைப்பற்றிப் பாடி வைத்துள்ளார். திருமங்கையாழ்வார் நந்திவர்ம பல்லவன் நிகழ்த்திய தென்மலி என்னுமிடத்து நடந்த போரினைப்பற்றியும் கூறியுள்ளார். வயிர மோகன் எனப்படும் இராட்டிரகூட அரசன் காஞ்சியில் பல்லவ மல்லனோடு இருந்தான் என வேறொரு பாட்டில் கூறியுள்ளார். அதுமட்டுமன்றிப் பல்லவர் சாளுக்கியரோடு செய்த போரில் பயன்படுத்திய இசைக்கருவிகள், போர்க்கருவிகள் முதலிய வற்றின் பெயர்களையும் குறித்துள்ளமையால் நந்திவர்மன் காலத்தவர் என்று இவர் கருதப்படுகின்றார்.

நந்திக் கலம்பகம்: இந் நூல் மூன்றும் நந்திவர்மனைப் பற்றியது. மூன்றும் நந்திவர்மனின் போர்ச் செயல்களையும் சிறப்புக்களையும் விளக்கமாக எடுத்துரைக்கின்றது. இரண்டாம்

நந்திவர்மன் பல்லவர்கோன் மல்லை வேந்தன், மயிலைக் காவலன், காவிரி வளநாடன் எனப் பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப் பட்டதாக அறிகிறோம்.

பாரத வெண்பா : இந்நூல் சிறிதளவே நமக்குக் கிட்டிய போதிலும் இந்நூலின் முதற் பகுதியில் நந்திவர்ம பல்லவன் **தெள்ளாறு** என்னுமிடத்தில் பகைப்புலத்தைப் புறமுதுகிட்டு ஓடச்செய்த செய்தி காணப்படுகிறது.

பெரிய புராணம் : கி.பி. 12ஆம் நூற்றாண்டில் பாடப்பட்ட நூலாகும். பல்லவர் காலத்தில் வாழ்ந்த அரசர்களைப்பற்றியும் இதில் குறிப்புக்கள் காணப்படுகின்றன. அப்பர் காலத்தில் வாழ்ந்த பல்லவ மன்னன் அவருக்கு இழைத்த இன்னல்களும் அம்மன்னன் சமணம் நீங்கிச் சைவம் சேர்ந்த செய்திகளும் பெரிய புராணத்தில் காணப்படுகின்றன. தளபதியாகிய பரஞ்சோதியார் சாளுக்கியர்மீது படையெடுத்து வாதாபியை வென்ற செய்தியும் பெரிய புராணத்தில் காணப்படுகிறது. சேக்கிழாரின் பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ள இச் செய்திகள் கல்வெட்டுகளின் அடிப்படையில் வெளியிடப்பட்டவை.


சங்க நூல்களில் காணப்படாத புதிய ஊர்ப்பெயர்கள் சில வற்றை இதில் காண்கிறோம். அவற்றுள் பல்லவபுரம், பல்லவ நத்தம், நந்திபுரம், பரமேஸ்வரமங்கலம், கேந்திரமங்கலம், மகேந்திர வாடி, மாமல்லம் என்பன சில. இவைமட்டுமன்றிச் சாசனங்களும் கல்வெட்டுகளும் நமக்குப் பல்லவர் வரலாற்றினை விளக்குகின்ற ஆதாரங்கள் உள்ளன. பல்லவர்களின் கலைச்சிறப்புகளும் சான்றுகளே. பல்லவர்கள் தாங்கள் எழுப்பிய ஆலயங்களின் சுவர்களிலே வரலாறு குறித்த செய்திகளைப் பொறித்து வைத்துள்ளனர்.

II. தோற்றம் (Origin)

தொண்டை நாடு : பல்லவர்கள் தொண்டை நாட்டை ஆண்டு வந்தார்கள். தொண்டை நாடு இக்கால செங்கற் பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களையும், நெல்லூர், சித்தூர், தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களின் ஒவ்வொரு பகுதி யையும் கொண்டது. பொதுவாக, அதனைக் காவிரிப் பிரதேசத் துக்கு வடக்கே கிழக்குத் தொடர்ச்சி மலையின் கீழ்ப்புறச் சரிவை

யும், அதற்கப்பால் கடல்வரையில் பரவியிருக்கும் சமவெளியை யும் உள்ளிட்டு விளங்கும் பிரதேசமாகக் கொள்ளலாம்.

தொண்டை மண்டலத்தைப் பல்லவர்கள் எப்போது முதல் அரசாண்டு வந்தனர் என்பது தெரியவில்லை. சங்க இலக்கியங்



படம் 1

கள் ஒன்றிலும் பல்லவர்களைப்பற்றிய குறிப்பு ஏதும் காணப்பட வில்லை. எனவே, சங்க காலத்திற்குப் பிற்பட்டவர்களே பல்ல வர்கள் என்ற முடிவிற்கு வருகிறோம்.

காடவர் : பல்லவர்களுக்குக் காடவர் என்ற வேறொரு பெயரும் உண்டு. அது வடமொழியில் 'காடகர்' எனப்படும்.

தொண்டைநாடு ஒரு காலத்தில் காடுகள் நிரம்பிய பகுதியாக இருந்தது எனவும், அவற்றைத் திருத்தி அமைத்தபடியால் காடவர் எனப் பெயர் பெற்றனர் என்றும் கூறப்படுகிறது. காடவர் என்ற பெயர் பழைய பட்டயங்களில் இல்லை. பட்டயங்களில் பல்லவர் என்ற பெயரே காணப்படுகிறது.

இருவிதமான கருத்துகள்: பல்லவர் தோற்றத்தைப்பற்றியும் அவர் எந்நாட்டினர் என்பதுபற்றியும் இருவிதமான அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன. பல்லவரைச் சிலர் வெளிநாட்டினர் என உரைத்திடும்போது, சிலர் உள்நாட்டினர் என உரைக்கின்றனர். உள்நாட்டினர் என்று கூறுபவருள்ளும் வேற்றுமை காணப்படுகிறது. அவர் தமிழ் வேந்தரா அன்றி வட நாட்டினரா என்ற கேள்வி எழுகின்றது.

பஹ்லவர்களுடன் தொடர்பு: பல்லவர் வெளிநாட்டினர் என்று கூறுவோர்களில் பெரும்பாலோர் அவர்கள் பாரசீகத்தை அடுத்துள்ள சகஸ்தானத்திலிருந்து வந்தவர்கள் என்று கூறுவர். பல்லவர் என்ற சொல்லும் பார்த்தியரைக் குறிக்கும் சொல்லான பஹ்லவர் என்ற சொல்லும் ஒருவாறு ஒன்றுபட்டிருப்பதைக் கொண்டும் பல்லவர்கள் பாரசீகர் நாட்டின் வடபகுதியிலுள்ள பார்த்தியரே என்பர். ஆனால், **இராஜசேகரன்** என்னும் வட மொழிக் கவி இருவரையும் பிரித்துப் பேசுவதால் அவர்கள் ஒரே மக்கள் எனக்கூறமுடியாது. சாளுக்கியருக்கும் பல்லவருக்கும் ஓயாது நடந்தபோரை விளக்க வந்த அறிஞர் ஒருவர் அவ்விரு குலத்தினரும் வெளி நாட்டினர் எனவும் அவருள் சாளுக்கியர் **செலுபுக்கிட்** வமிசத்தினர் எனவும், பல்லவர் **பார்த்தியர்** எனவும் அவ்விருவரும் தம் நாட்டில் எவ்வாறு பகைத்து அடித்துக் கொண்டனரோ அதுபோலவே இந்தியாவிலும் பகைத்துக்கொண்டனர் என்பார். இதுவும் பொருந்தாத கூற்றே. டாக்டர் **வின்சென்ட்ஸ்மித்** பல்லவர்களுக்கும் பஹ்லவர்களுக்கும் தொடர்பு உண்டு என்று நம்பியவர்களில் ஒருவர்.

ஸ்மித்தின் கருத்து: ஆனால் தம்முடைய பழைய இந்திய வரலாறு' என்னும் நூலின் முதற்பதிப்பில் பல்லவர்களைப் பாரசீக மரபினர் என்று கூறிய அவர் அடுத்த பதிப்புகளில் பல்லவர் என்பவர் தென்னிந்தியரே என்று முடிவு கூறியுள்ளார்.

வெளி நாட்டுப் பார்ப்பனர்: பல்லவர்கள் தொடக்கந்தொட்டு எட்டாம் நூற்றாண்டுவரை தமிழையோ, தமிழ்ப் புலவர்

களையோ ஆதரித்ததாகத் தெரியவில்லை, அவர்களது அவைக் கள மொழியும் வடமொழியாகவே இருந்துள்ளது. எனவே, டாக்டர் **ஜெயஸ்வால்** என்னும் பேரறிஞர் பல்லவர்களை வட நாட்டுப் பார்ப்பனர் என்று கூறியதோடு, அவர்களுடைய பரத்வாஜ கோத்திரமும், தர்ம மகாராஜாதி ராஜா என்னும் பட்டமும் அதைக் காட்டும் என்றார். பேராசிரியை **மீனாட்சி** பல்லவர்களை வடநாட்டு க்ஷத்திரியர் என்பார்.

பிரம்மாவின் வழித்தோன்றல்கள் : பல்லவர்கள் குலத்தைத் தோற்றுவித்தவர் **பரத்வாஜ** முனிவர் என அவர்களது செப் பேடுகளும் கல்வெட்டுகளும் கூறும். பிற அரசர்களைப்போல் பல்லவர்கள் தங்களைச் சூரிய குலமென்றோ, சந்திர குலமென்றோ கூறாது பிரம்மா என்னும் கடவுளின் வழித்தோன்றல்கள் என்று கூறிக்கொண்டனர். துரோணரின் பிள்ளை அசுவத்தாமனுக்குப் பல்லவன் என்ற ஒரு மகன் பிறந்தான். அவன் வழி வந்தவர் களே பல்லவர் எனப் பெயர் பெற்றனர் என்பர் சிலர்.

சிம்மவர்மன் கல்வெட்டு : ஆந்திர தேசத்தில் நெல்லூர் மாவட்டத்தில் அமராவதி என்ற இடத்தில் பல்லவ மன்னன் சிம்மவர்மன் என்பானின் கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. அதில் வடமொழியில் பல்லவன் தோன்றிய வரலாறு பின்வரு மாறு குறிக்கப்பட்டுள்ளது :

'மதனி என்ற விண்ணுலக மங்கை பூவுலகின் அழகைக் கண்டு களிக்கத் தன் தோழியுடன் வந்தாள். காடும் மலையும் கடந்துவந்த அவள் பூங்காவில் தங்கினாள். அங்கிருந்த அசோக மர நிழலில் அமர்ந்த அவளை இயற்கைச் சூழ்நிலை பரவசப்படுத் தியது. ஆண் அன்னமும் பெண் அன்னமும் இணைந்து விளை யாடும் காட்சி அவள் மனத்தில் இன்ப உணர்ச்சிகளை எழுப்பிடத் தன்னை மறந்து அதில் இலயித்திருந்தபோது அசுவத்தாமா அங்கு வந்தார். ஒருவரை ஒருவர் கண்டனர்; உள்ளம் பறி கொடுத்தனர்; அன்பு வாழ்க்கை நடத்தினர்; அதன் விளைவு அன்பு மகவுக்குத் தாய் தந்தையர் ஆயினர்; குழந்தையைத் தளிர்களால் ஆன படுக்கையில் ஏந்தினர் (தளிர்களைப் பல்லவம் என்பர்). தளிர்ப் படுக்கையில் குழந்தை இருந்ததால் பல்லவன் என்று அசுவத்தாமா அழைக்க அதுமுதல் பல்லவ குலம் விளங்க லாயிற்று.'

வேலூர்ப் பாளையம் செப்பேடு : நந்திவர்மனது வேலூர்ப் பாளையம் செப்பேட்டில் பல்லவனின் தோற்றம் குறித்துப் பின்

வருமாறு கூறப்பட்டுள்ளது. துரோணரின் மகன் அசுவத் தாமர் சிறந்த தவம் செய்வதைக் கண்டு, எங்கே அவரின் தவத்தின் பெருமையால் தன் பதவி போய்விடுமோ என்று இந்திரன் பயந்து மேனகை என்ற பெண்ணை அனுப்பி அசுவத் தாமரின் தவத்தைக் கலைத்தான். அசுவத்தாமர் மேனகையின் அழகில் மயங்கினர். அவர்களுக்குப் பிறந்த பிள்ளை தளிர்ப் படுக்கையில் இருந்ததால் பல்லவன் எனவும் பெயர் பெற்றான் எனவும் அச் செப்பேடு கூறுகிறது.

இராசநாயகத்தின் கருத்து: இலங்கையிற் சிறந்த **இராச நாயகம்** என்பவர் இலங்கையை அடுத்துள்ள **மணிபல்லவம்** பல்லவர் பிறப்பிடமாகும் என்றும், மணிமேகலையில் கூறப்பட் டுள்ள சோழனை மணந்த **பீலிவளை** என்பவள் நாகர் மகள் ஆவாள் என்றும், அவள் பெற்ற மைந்தனை திரையால் (அலை களால்) கடத்தப்பட்டுக் கரைசேர்ந்த முதற்பல்லவன் எனவும், தொண்டைக் கொடியில் அவன் சுற்றப்பட்டு இருந்தமையால் **தொண்டைமான்** எனவும், திரைகளால் உந்தப்பட்டு இருந்தமை யால் **திரையன்** என்று வழங்கப்பெற்றான் எனவும் கூறு கின்றார். அவன் மரபினரே தம் தாயகப் பெயரை ஏற்று (மணி-பல்லவம்) பல்லவர் எனப்பட்டனர். பல்லவர் முதல் அரசன் பெரும்பாணாற்றுப்படையில் புகழப் பெற்றுள்ள தொண்டைமான் இளந்திரையன் எனவும் கூறுகிறார்.

மைசூர் கெஜட்டீர்: மைசூர் கெஜட்டீர் என்னும் பதிவி லிருந்து பல்லவத்திலிருந்து வந்தவர்கள் தம்மைப் பல்லவர் என்று கூறிக்கொண்டனர் என்னும் செய்தியை அறிகிறோம்.

குறும்பர்: எலியட் செவெல் முதலிய ஆராய்ச்சியாளர்கள் பல்லவர்கள் குறும்பர் மரபினர் என்று முடிவு கட்டுகின்றனர். குறும்பர் ஆடுமாடுகளை மேய்ப்பவர். இதனைக் கருத்தில் கொண்டு 'பால்-அவர்' என்பதே பல்லவர் எனத் திரிந்து இருக் கலாம் எனவும் சிலர் முடிவு செய்தனர்.

தொண்டை மண்டலத்தவர்: பல்லவர்கள் தொண்டை மண் டலத்தவர்களே என்பது பேராசிரியர் சத்தியநாதய்யரின் கருத்து. அவருடைய கருத்தின்படி "சாதவாகனருக்குப் பல்ல வர்கள் திறை செலுத்துவோராக இருந்து சாதவாகனரின் வீழ்ச் சிக்குப் பின்னர் மாநில ஆட்சியாளர் என்ற தம்முடைய

நிலையிலே அரசர்கள் என்ற நிலைக்கு உயர்த்திக்கொண்டனர் தொண்டை மண்டலக் கருத்து, வரலாற்று உண்மைகளை யொட்டிப் பல்லவர்களுடைய தோற்றத்தைச் சரியாக விளக்குகிறது. அவர்களுடைய முதல் ஆவணங்கள் தமிழில் இல்லாமல் பிராகிருத மொழியிலும் வடமொழியிலும் உள்ளன. அவர்களுடைய வழக்குகளும் ஆட்சிமுறையும் தொடக்க காலத்தில் தென்னிந்தியத் தமிழ்முறையாக அமைந்திருக்கவில்லை.

தமிழர்கள்: பல்லவர்களைத் தமிழர்கள் அல்லர் என்று கூறப்படும் கருத்துக்கு எதிராகப் பல்லவர்கள் தமிழ்நாட்டு மக்களே; சங்க காலத்தில் ஆண்ட திரையர் வழி வந்தவர்களே என்று சில வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். அதற்கு அவர்கள் பின்வரும் காரணங்களைக் குறிப்பர்.

தொண்டைமான்கள்: திரையர்களுக்குத் தொண்டைமான் என்ற பெயர் உண்டு. பல்லவர்களுக்கு உரியதாகக் கூறப்படும் தொண்டைமான் என்ற பெயர் கல்வெட்டுகளிலும், இலக்கியங்களிலும் எடுத்தாளப்படுவதைக் காண்கிறோம். தொண்டைமான் இளந்திரையனும் வேங்கடத்தை ஆண்ட **புல்லி** என்பவனும் நெருங்கிய உறவினர்கள். புல்லி என்பவன் கள்ளர்குலப் பெருமகன் என்று சங்க நூல்கள் குறிக்கும். இன்றும் கள்ளர் இனத்தவர் தங்களைத் **தொண்டைமான்கள்** என்று அழைத்துக் கொள்வதைக் காணலாம். பல்லவர்களுக்குக் காடுவெட்டி என்ற பட்டம் சிறப்பாகக் குறிக்கப்படும். கள்ளர்குலப் பெருமக்களுக்கும் **காடுவெட்டிகள்** என்ற பெயர் இன்றும் உள்ளதைக் காண்கிறோம். எனவே, பல்லவர்க்கும் கள்ளர் குலத்துக்கும் உள்ள தொடர்பு நன்கு புலனாகும். பிராகிருத மொழியையும், வடமொழியையும் பல்லவர்கள் பயன்படுத்தினர். எனினும் அன்றைய அரசச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அது அமைந்ததே.

கல்வெட்டுகளும் செப்பேடுகளும்: தமிழ் மன்னர்களாகிய சோழ மன்னர்கள் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் வடமொழியைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். தெலுங்கு மன்னர்களாகிய விசயநகரப் பேரரசர்கள் தமிழ்மொழியில் ஏராளமான கல்வெட்டுகளை விட்டுச் சென்றிருக்கிறார்கள். இவை அனைத்தும் அன்று நிலவிய சூழ்நிலைக்கு ஏற்ப அமைந்தவையே. எனவே, பல்லவர்கள் தங்களது கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் வடமொழியை உபயோகித்திருக்கின்றனர் என்ற காரணத்தால் அவர்கள் தமிழ் மன்னர்கள் அல்லர் என்று கூறுவது பொருத்தமன்று என்பர் சிலர்.

தமிழ் பெற்ற சிறப்பு: உண்மையில் பல்லவர்களது ஆட்சியில் தமிழ் மொழியே சிறந்த வளப்பம் பெற்றது என்பது கண்கூடு. சிறந்த சமணப் பௌத்த நூல்களும், தேவார திவ்வியப் பிரபந்தங்களும் அக் காலத்தில்தான் தோன்றின. அவர்களுடைய பல கல்வெட்டுகளில் தூய தமிழ்ப்பாக்கள் உள்ளதைக் காண்கிறோம். எனவே, தமிழகத்தில் ஆண்ட திரையர்களே பல்லவர்கள் ஆவர் என்றும் கூறுவர்.

வேடிக்கையான விவாதங்கள்: இதைப் போலவே பல்லவர்கள் தமிழர்கள்தாம் என்று கூறுவதற்குச் சிலர் சில வேடிக்கையான விவாதங்களை முன்வைப்பர். அவற்றில் ஒன்று 'பல்லவர் என்ற சொல் தமிழ்ச் சொல் அடிப்படையிலானது. இப்போதும் பல் நீண்டுள்ளவனைப் பல்லன், பல்லவன் என்று கேலி செய்வதில் லையா! அம்மன்னரில் மூலப் புருடனுக்கும் பல் நீண்டு இருக்கலாம், அச் சொல் அம் மரபினுக்கே வந்து இருக்கலாம் என்பர். மேற் கூறிய கருத்தை வலியுறுத்த நெடுமாறன், முடப்பாண்டியன், கூன்பாண்டியன் ஆகிய பெயர்களைச் சான்று காட்டுகின்றனர்.

போத்த ராஜா: மேலும், பல்லவர்களுக்கும் போத்தரையர் என்ற பெயரும் உண்டு. 'போது' என்பது மலருக்கும் எருமைக் கடாவிற்கும் கூறப்படும். போத்தராஜா கோவில்கள் தொண்டை நாட்டிலும் அதனைச் சுற்றிலும் உண்டு. எனவே, பல்லவர்கள் தமிழர்களே என்பது மற்றுமொரு வாதம்.

சாதவாகனர்களுக்கு உள்ள தொடர்பு: டாக்டர் எஸ். கே. அய்யங்கார் பல்லவர்கள் தமிழர்களாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று கருதுகின்றார். தொண்டன் என்ற தமிழ்ச்சொல் மற்றவர்களுக்குத் தொண்டு செய்பவன் என்ற கருத்தைப் புலப்படுத்தும். பல்லவர்கள் அரசர்கள் ஆவதற்கு முன்னர் சாதவாகன அரசர்களின் நம்பிக்கைக்குகந்த உயர் அலுவலர்களாக இருந்தனர். பல்லவர்கள் சாதவாகன அரசர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் தொண்டை மண்டலத்தை உருவாக்கினர். மேற்கூறிய இக் கருத்து ஏற்புடையதாய் இல்லை. பல்லவர்கள் வாகாடகர்களின் ஒரு கிளையே என ஒரு கருத்துக் கூறுகிறது.

எட்டாம் நூற்றாண்டுக்கு முன்னர்: என்னதான் பல்லவர் களைத் தமிழர்கள் என வாதிட்டாலும், பல்லவர்கள் தமிழர்கள் அல்லர் என்பது துல்லிதமாகத் தெரிகிறது. வடமொழியைப் பயன்படுத்தியது அக் கால அரசச் சூழ்நிலைகளுக்குட்பட்டது என்று கூறுவது பொருத்தமில்லை. எட்டாம் நூற்றாண்டுவரை

ஒரு பட்டயம் கூடத் தமிழில் வெளியிடப்படவில்லையே ஏன்? என்னதான் அக்கால அரசச்சூழ்நிலைகளுக்குட்பட்டதாயினும் ஒன்றிரண்டிலாவது தமிழைப் பயன்படுத்தியிருக்கலாமே, அவ்வாறு ஏன் செய்யவில்லை? சிலர் பல்லவர்காலத் தமிழ் வளர்ச்சிபற்றிக் குறிப்பிட்டனர். இது நடைபெற்றது எட்டாம் நூற்றாண்டுக்குப் பின்னரேயாம். அதுவரையில் எத்தனை இலக்கியங்களைத் தமிழில் உருவாக்கினர் என்று கேட்டால் பல்லவர் தமிழர்தாம் என்று வாதிடுவோர் வாய்மூடி மௌனியாகி விடுவார்கள்.

எனவே, பல்லவர்கள் தமிழர்கள் அல்லர் என்று நிச்சயமாகக் கூறிவிடலாம். டாக்டர் இராசமாணிக்கனாரும் பல்வேறு கருத்துக்களை ஆராய்ந்து தம்முடைய பல்லவர் வரலாறு என்னும் நூலில் பல்லவர் தமிழர்கள் அல்லர் என்பதை உரைக்கின்றார். இத்தனை கருத்துகளுக்கு மத்தியில் காலம்தான் ஒரு தெளிவான கருத்தை உருவாக்க உதவும் என்பதும் உண்மையே.

III. பல்லவர் அரசியல் வரலாறு

பல்லவ மரபினர் மூவகைப் பிரிவினராகப் பிரித்துப் பேசப்படுகின்றனர். பிராகிருத மொழியில் பட்டயங்களை வெளியிட்ட பல்லவர்களை முற்காலப் பல்லவர்கள் எனவும், வடமொழியில் பட்டயங்களை வெளியிட்டவர்களை இடைக்காலப் பல்லவர்கள் எனவும், கிரந்த, தமிழ்மொழியில் பட்டயங்களை வெளியிட்ட பல்லவர்களைப் பிற்காலப் பல்லவர்கள் எனவும் அழைக்கின்றனர்.

பல்லவ அரசர்களில் தலைசிறந்த மன்னன் **சிவஸ்கந்த வர்மனு**வான். கிருஷ்ணை நதியிலிருந்து தெற்கே பெண்ணாறு வரையில் பெல்லாரி மாவட்டம் உட்பட ஓரரசினை ஏற்படுத்திக் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தினன். இவன் இளவரசனாக இருந்தபோது இளம்பேரரசன் எனவும் பட்டம் பெற்ற பின்னர் மகாராசாதிராசன் எனவும் அழைத்துக் கொண்டு கி. பி. 300 முதல் 325 வரை ஆட்சி செலுத்தினன்.

சிவஸ்கந்த வர்மனுக்குப் பின் ஆண்ட மற்றொரு குறிப்பிடத் தகுந்த அரசன் **விஷ்ணுகோபன்** என்பவனுவான். சமுத்திரகுப்தரால் தோற்கடிக்கப்பட்ட 12 அரசர்களில் ஒருவன். இவன் கி. பி. 350-ல் இருந்து 375 வரை ஆட்சி செலுத்தினன். கி. பி. ஐந்தாம், ஆறும் நூற்றாண்டுகளில் பல்லவரின் அரசியல் வரலாறு தெளிவின்றிக் காணப்படுகிறது; ஆறும் நூற்றாண்டில்

சிம்மவிஷ்ணு என்பானின் காலம் முதலே ஓரளவிற்குத் தெளிவான வரலாற்றினை அறிகிறோம்.

கி. பி. 575-ல் சிம்மவிஷ்ணு பட்டத்திற்கு வந்தான். இவனுடைய காலத்தில்தான் பல்லவர்களின் அரசியல், கலைப் பணிகள் தொடங்கப்பட்டன. சோழமண்டலத்தைக் கைப்பற்றியவன் இவனே என்றும், களப்பிரர்களையும், மூன்று தமிழ் மன்னர்களையும், இலங்கை அரசனையும் தோற்கடித்தான் என்றும் கூறப்படுகின்றது

மகேந்திரவர்ம பல்லவன் (கி.பி. 615–630)

சிறப்பு : பல்லவ மரபினைப்பற்றி நினைக்குந்தோறும் அம் மரபிற் சிறந்த மன்னவர்களில் முதலாவது நம் மனக்கண்ணில் தோன்றுபவன் மகேந்திரவர்மனே ஆவான். மகேந்திரவர்மன் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரியணை ஏறினான். மகேந்திரவர்மனின் ஆட்சியின் முற்பகுதியில் சமணம் உயர்நிலை பெற்றுத் திகழ்ந்தது. பிற்பகுதியில் மகேந்திரவர்மன் சைவனாக மாறியமையால் சைவசமயம் சிறப்புப் பெற்றது. மகேந்திரவர்மனின் காலத்தில்தான் குகைக்கோயில்கள் பல உருவாயின. பல்லவர்களுக்கும், சாளுக்கியர்களுக்குமிடையே நடைபெற்ற போர் உச்சநிலையினை அடைந்தது. அப்பர் சுவாமிகள் மகேந்திரவர்மனின் காலத்தில் வாழ்ந்தவர்.

சமணத்திலிருந்து சைவம் : மகேந்திரவர்மன் சமணத்திலிருந்து பின்னர் சைவராக மாறிய செய்தியினைப் பெரிய புராணத்தின் வாயிலாக அறிகிறோம். அதுமட்டுமன்றித் திருச்சிராப்பள்ளி மலைக்கோயில் கல்வெட்டிலிருந்தும் அறிகிறோம்.

வல்லம், தளவானூர் சீயமங்கலம், பல்லாவரம், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் சிவன்கோவிலையும், மகேந்திரவாடியில் பெருமாள் கோவிலையும் அமைத்துள்ளான். கி. பி. 620-ல் மகேந்திரவர்மன் சமணம் நீங்கிச் சைவனாகியிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

சைவ சமய மணம் : சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறிய இவ் வரசன் திருப்பாதிரிப்புலியூரில் இருந்த சமண ஆலயத்தை இடித்து அதிலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்ட கற்களைக் கொண்டு திருவதிகையில் ஒரு சிவன் கோயிலைக் கட்டி அதற்கு

குணபர ஈச்சரம் என்று பெயரிட்டு வழங்கினன். மகேந்திரனின் ஆட்சி புதுக்கோட்டைவரை பரவியிருந்த போதிலும் பல்லவப் பேரரசு முழுமையும் சைவசமய மணம் பரவித் திகழ்ந்தது.

சிற்றரசர் : மேலைச் சாளுக்கியர், கடம்பர், சுங்கர், கீழைச் சாளுக்கியர், சோழர், களப்பிரர் போன்ற அரசர்கள் இவன் காலத்தில் சிற்றரசர்களாகச் சில ஊர்களை ஆண்டு வந்தார்கள்.

பல்லவ சாளுக்கியப் போர் : மகேந்திரவர்மனுக்கும் சாளுக்கியப் பேரரசன் இரண்டாம் புலிகேசிக்கும் இடையே நடைபெற்ற போரினைப்பற்றி **ஐகோலே** கல்வெட்டு விளக்கிக் கூறுகின்றது இரண்டாம் நந்திவர்மன் வெளியிட்ட **காசக்குடிப்** பட்டயம் 'மகேந்திரன் தன் பகைவரைப் புள்ளலூரில் அழித்தான்' என்று கூறுகிறது. காசக்குடிப் பட்டயம் சாளுக்கியரே அப்பகைவர் என்று கூறுவிடினும் வரலாற்றாசிரியர் அனைவரும் பகைவர் என்ற அச்சொல் சாளுக்கியரையே குறித்தல் வேண்டும் எனக் கருதுகின்றனர்.

மகேந்திரவர்மனுக்கும் இரண்டாம் புலிகேசிக்கும் இடையே காஞ்சிபுரத்திற்குப் பத்து மைல் தொலைவில் உள்ள **புள்ளலூரில்** போர் நடைபெற்றது. இப் போரில் மகேந்திரவர்மன் வெற்றி பெற்றதாக ஒரு சாராரும், இரண்டாம் புலிகேசி வெற்றி பெற்ற தாக மற்றொரு சாராரும் கருதுகின்றனர், இப் போரில் மகேந்திர வர்மன் தோல்வியடைந்தான் என்ற கூற்றினையே ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

கங்கர்களுடன் போர் : மகேந்திரவர்மன் புள்ளலூரில் மட்டு மன்றி ஆலந்தூர், பெருநகரம் முதலிய போர்களிலும்கூட வெற்றி பெற்றான் என்று கூறுவர். பல்லவப் பட்டயம் ஒன்று கங்கர்களுக்கும் பல்லவர்களுக்கும் நடைபெற்ற போரினையும், கங்க அரசன் துர்வினீதன் தோற்ற செய்தியையும் உணர்த்து கின்றது.

கோயில்கள் : மகேந்திர வர்மன் கட்டிய கோவில்கள் கால வெள்ளத்தைக் கடந்தும், அப் பெருமன்னனின் புகழைப் பேசு கின்றன. **பல்லாவரம், சீயமங்கலம், திருக்கழுக்குன்றம், மண்ட கப்பட்டு, மாமண்டூர், தளவானூர், சிங்கவரம், மகேந்திரவாடி, திருச்சிராப்பள்ளி,** முதலிய இடங்களில் மலைகளைக் குடைந்து கோயில்களை அமைத்தான். **மண்டகப்பட்டில்** திருமூர்த்தி மகாலும் சித்தண்ணவாசலில் சமணக் கோவிலும் கட்டப் பட்டன என்பர். இவனது கோயில்கள் அனைத்தும் மலைச்சரிவு களில் அமைக்கப்பட்டுள்ளன.

குடைவரைக் கோவில்கள்: மகேந்திரவர்மன் அமைத்த கோவில்களில் பல்லாவரத்தில் பல்லவபுரம்அமைத்துள்ள கோவில் ஏறக்குறைய 24 அடி நீளமும், 12 அடி அகலமும் உடையதாக உள்ளது. ஐந்து கல்தூண்களைக்கொண்ட இம் மண்டபத்திற்குள் ஐந்துஅறைகள் உள்ளன. அந்த அறைகளில் ஐந்து தெய்வங்கள் இருந்திருக்கக்கூடும் என்பதற்கான சான்றுக ஐந்து மேடைகள் உள்ளன. இக் குகைக் கோவில்களில் மேல்மட்டம் முழுவ திலும் கல்வெட்டுகளாகக் காணப்படுகின்றன. இக்கோவிலை பஞ்சபாண்டவர் கோவில் என்றே வழங்குகின்றனர். பல்லவ புரம் மகேந்திரவர்மன் காலத்தில் இயற்கை அரண் கொண்ட முதல்தர நகரமாகத் திகழ்ந்திருக்கவேண்டும் என்று எண்ணப் படுகிறது. செங்கற்பட்டுக்குக் கிழக்கே திருக்கழுக்குன்றம் செல்லும் வழியில் இரண்டு மைல் தொலைவில் உள்ள மூன்று குகைகள் கொண்ட கோவில்கள் மகேந்திரவர்மன் மகனது காலத்தைச் சேர்ந்தவை ஆகும்.

கோயில் பெருமை: காஞ்சிபுரத்திற்குத் தெற்கே மாமண் டூரில் உள்ள நான்கு கோயில்களும் இன்று சோளிங்கர் என வழங்கப்படும் சோழசிங்கபுரத்திற்கு மூன்று கல் தொலைவில் உள்ள மகேந்திரவாடி குகைக் கோவிலும், தளவானூர் குகைக் கோவிலும், மகேந்திரவர்மனின் கலைச் சிறப்பை எடுத்துகாட்டு கின்றன. திருச்சிராப்பள்ளிக் கலைக் கோவில், நாமக்கல் மலைக் கோவில், மாமல்லபுரத்து கோவில் ஆகிய மகேந்திரவர்மனின் திருப்பணிகள் இன்றும் அனைவரையும் ஈர்ப்பனவாகும். என்றும் அழியாமல் இருக்கத்தக்க நிலையில் கோவில்களைக் கற்களைக் கொண்டு பாறைகளைக் கொண்டு மலைகளைக் கொண்டு அமைத்த பெருமை மகேந்திரவர்மனுக்கு உரியது ஆகும்.

சிறப்புப் பெயர்கள்: மகேந்திரவர்மனுக்குச் சிறப்புப் பெயர்கள் பல இருந்தன. **குணபரன், அவனிபாஜனன் ललிதாங்குரன், புருடோத்தமன், சத்தியசந்தன், விசித்திர சித்தன், நரேந்திரன், சேத்தகாரி, கோத்தலையன், சத்ரு மல்லன் தயாபரன், விக்ரமன், கலகப்பிரியன், மகாப்பிடுகு, மத்த விலாசன், அநித்தியராகன், சங்கீர்ணசாதி, நரவாகனன், உதாரசித்தன் பிரகிருதிப் பிரியன், அவத்ததாமன், நிரபேஷன்** ஆகிய சிறப்புப் பெயர்களைக்கொண்டு ஆட்சி செலுத்தினன்.

சித்தண்ணவாசல் (சிற்றண்ணல்வாயில்): மகேந்திரவர்மன் இசை, நடனம், சிற்பம், ஓவியம், நாடகம் முதலியவற்றைப் பாங்குடன் வளர்த்தான். சித்தண்ணவாயில் குகை ஓவியங்கள்

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் எழில்மிகு ஓவியக் கலையினை உலகிற்கு உணர்த்துபவை. அக் கோயில் சமணக் கோவில் ஆதலால் தீர்த்தங்கரரின் உருவச்சிலைகள் காணப்படுகின்றன. சித்தண்ணவாசல் குகைக்கோயில், ஓவியம், சிற்பம், இசை முதலிய கலைகளைத் தெளிவாக உணர்த்தும் கலைக்கூடமாய்த் திகழ்கிறது.

நடுமியாமலைக் கல்வெட்டு : குடுமியா மலையிலிருக்கும் கல்வெட்டுகள் மகேந்திரவர்மனின் கட்டளைப்படி வெட்டப் பட்டவை. இக் கல்வெட்டுகள் இசைக்கலைபற்றிய செய்திகளை நமக்கு அளிக்கின்றன.

நூலாசிரியர் : மகேந்திரவர்மன் சிறந்த நூலாசிரியனாகவும் விளங்கினான் என அறிகிறோம். மத்தவிலாசப் பிரகசனம் என்ற நாடகத்தினை யாத்தவன் இம் மகேந்திரவர்ம பல்லவனே ஆவான். இசை, சிற்பம், ஓவியம் ஆகிய கலைகளைப் போற்றி வளர்த்ததோடு இலக்கியத் துறையிலும் இம் மன்னன் சிறந்து விளங்கியது பாராட்டிற்குரியதே.

மகேந்திரன் பெயர் : மகேந்திரவர்மன் காலத்தில் மாமல்ல புரம் மல்லை என்றும் பெயர்பெற்றிருந்தது. இவன் தன் பெயரினால் மகேந்திரமங்கலம் என்னும் ஊரை மாமண்டூரில் ஏற்படுத்தினான். மாமண்டூரில் ஓர் ஏரியை சித்ரமேகத் தடாகம் என்று தன் பெயரில் ஏற்படுத்தினான். இன்னோர் ஊராகிய மகேந்திரவாடியைத் தன் பெயரால் உண்டாக்கினான். அங்குச் சோழ நாட்டில் மகேந்திரப்பள்ளி என்னும் ஊரை அமைத்து மகேந்திரப்பள்ளி என்னும் சிவன் கோயிலை அமைத்தான்.

சமயநிலை : இக்காலத்தில் பக்தி இயக்கம் தோன்றியது. மகேந்திரவர்மன் காலத்தில் பௌத்த சமயத்தையும், சமண சமயத்தையும் எதிர்த்து, சைவத்தை ஆதரித்து, பக்தியைப் பரவச் செய்தவர் திருநாவுக்கரசர் ஆவார். மகேந்திரவர்மன் காலத்தில் சமயப் பூசல்கள் நிகழ்ந்தன. மகேந்திரவர்மனைச் சைவ சமயத்தில் சேர்த்தவர் நாவுக்கரசர் என்று தமிழ் இலக்கியங்கள் கூறும்.

மகேந்திரவர்மன் சிறந்த ஆட்சி முறையையும், நாட்டிற்கு அளித்து நற்பெயர் பெற்றான். மகேந்திரனின் வடமொழிப் புலமையை விளக்குவது மத்தவிலாசம் என்னும் நூல். மகேந்திரனின் சமயப்பற்றையும், கலையார்வத்தையும் விளக்குபவை

அவன் செதுக்கிவைத்த குகைக் கோவில்களேயாகும். இசைச் சிறப்பை எடுத்துக்காட்டுவது குடுமியாமலைக் கல்வெட்டு. ஓவியச் சிறப்பிற்கு எடுத்துக்காட்டு சித்தண்ணவாயில் ஓவியங்கள். சித்தண்ணவாயில் ஓவியங்கள் பாண்டியர் களுடையவை என்ற கருத்தும் உள்ளது. எனவேதான் சிறப்பு மிக்க பல்லவ மன்னர்களில் ஒருவனாக மகேந்திரவர்மன் வைத்து எண்ணப்படுகின்றான்.

வாதாபி கொண்ட நரசிம்மவர்ம பல்லவன் (கி.பி. 630–668)

பல்லவ மன்னர்கள் வரிசையில் சிறப்புரிமையுடையவனாகக் கருதத்தக்கவன் மாமல்லன் நரசிம்மவர்மன் என்னும் பெயர் பூண்ட அரசனுவான். மாமல்லன் மகேந்திரவர்மனுடைய மகன். இவனை முதலாம் நரசிம்மவர்மன் என்று கூறுவர். சாளுக்கியர்களின் தலைநகரமான வாதாபியை வென்றமையால் வாதாபிகொண்ட நரசிம்மன் எனவும் அழைப்பர். இம் மன்னனின் காலம் கி.பி. 630 முதல் 668 வரையில் எனலாம். காஞ்சியே இவன் காலத்திலும் தலைநகரமாயிற்று.

சிறப்புப் பெயர்கள்: தன் தந்தையைப் போன்றே சிறப்புப் பெயர்கள் பல பெற்றவன் இம் மன்னன். நரசிம்மவர்மனின் சிறப்புப் பெயர்களின் பட்டியல் ஒன்று மாமல்லபுரத்தில் 'தர்ம ராஜ ரதம்' எனப்படும் கற்கோயிலில் காணப்படுகிறது. **ஸ்ரீநரசிம்மன், பிருதிவிசாரன், ஸ்ரீபரன், புவனபாஜனன், ஸ்ரீமேகன், திரைலோக்கியவர்த்தனன், விதி, அநேகோபாயன், ஸ்திரபக்தி, மதனரிராமன், அப்ரதிஹதசாஸனன், காம லலிதன், அமேயமாயன், சகல கல்யாணன், நயன மனோகரன், வாமன், அதிமானன், பராபரன், நயாங்குரன், லலிதன், சர்வ தோபத்ரன், ஸ்ரீநிதி, நிருத்தரன், விப்ராந்தன், சத்தியபராக் கிரமன், இரணஜெயன், அத்யந்தகாமன்** ஆகிய பெயர்கள் காணப்படுகிறன.

வாதாபி கொண்டான்: மகேந்திரவர்மனிடம் தோல்வியுற்ற இரண்டாம் புலிகேசி மீண்டும் நரசிம்மவர்மன் காலத்தில் படை யெடுத்து வந்தான். இப் படையெடுப்புக் குறித்த செய்திகளைக் கூரம் பட்டயம், உதயச் சந்திரமங்கலப் பட்டயம், வேலூர்ப் பாளையப் பட்டயம் ஆகியவை விளக்குகின்றன. இப் பட்டயங் களில் போர் நடைபெற்ற இடங்களைப் பற்றிய செய்திகள் கிடைத்துள்ளன. **பரியலம், மணிமங்கலம், நூரமாரம்** ஆகிய

இடங்களில் போர் நடைபெற்றது. இப் போரில் நரசிம்ம வர்மனுக்கு இலங்கை அரசன் மானவர்மனின் உதவி கிட்டியது மானவர்மன் தன் பகைவரால் துரத்தப்பட்டு நரசிம்மவர்மனிடம் அடைக்கலம் புகுந்தான். இருவரும் நண்பர்களாயினர். மான வர்மன் தனக்கு அடைக்கலம் கொடுத்த பல்லவனுடன் போர்க் களம் சென்று உதவினான். இச் செய்தி இலங்கையைச் சேர்ந்த மகாவம்சம் என்னும் நூலில் காணப்படுகிறது.

நரசிம்மவர்மன் வெற்றி பெற்ற செய்தியைக் கூரம் பட்டயம் **''புலிகேசியின் முதுகாகிய தகட்டில் நரசிம்மவர்மன் 'வெற்றி' என்பதைப் பொறித்தான்''** என்று கூறுகிறது. பல்லவர்க்குப் புறமுதுகிட்டு ஓடிய சாளுக்கியனைப் பல்லவப்படை துரத்திச் சென்றது. இவ்வாறு சென்ற படை வாதாபியை முற்றுகை யிட்டது.

மாமல்லன் புலிகேசியைத் துரத்திச் சென்றபோது ஆட்சிப் பொறுப்பைக் கவனித்துக்கொண்டவன் இலங்கை அரசன் மானவர்மனே ஆவான் என்பர் சிலர். பிறகு புலிகேசியின் தலை நகரமான வாதாபியைக் கைப்பற்றியமையால் இவனுக்கு வாதாபிகொண்ட நரசிம்மவர்மன் என்னும் பெயரும் உண்டா யிற்று.

பல்லவன் சாளுக்கியன் மீதிருந்த சினத்தை வாதாபியின் மீது காட்டினான். தலைநகர் வாதாபி அழிக்கப்பட்டது. வாதாபி யைக் கைப்பற்றி ஏறத்தாழப் பதின்மூன்றாண்டுகள் தன்னாட்சி யின் கீழ் அவன் வைத்திருந்தான் என்றுடாக்டர் கிருட்டிணசாமி ஐயங்கார் கருதுகிறார். பல்லவன் வாதாபிகொண்ட காலம் கி.பி. 642 என்பர். வாதாபியில் உள்ள நரசிம்மவர்மனின் கல்வெட்டு ஒன்று 'நரசிம்மவர்மன், வாதாபி' என்ற பெயர்கள் கொண்டதாக உள்ளது. வாதாபிகொண்ட செய்தி பெரியபுராணம் என்னும் நூலில்,

'மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரைத் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்து
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனவெண் ணிலகவர்ந்தே யிகலரசன் முன்கொணர்ந் தார்'

எனச் சிறுத்தொண்டர் புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

நரசிம்மவர்ம பல்லவனின் வெற்றிக்கு உறுதுணையாக விளங்கியவர் பரஞ்சோதி எனப்பட்ட தளபதி ஆவார். இவரே

அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவரான சிறுத்தொண்டர் என்ற பரஞ்சோதியார் ஆவார். இவர் வாதாபியிலிருந்து விநாயகரைக் கொண்டுவந்து தமிழகத்தில் விநாயகர் வழிபாட்டிற்கு வித்திட்டார் என்பர். சாளுக்கியர் பட்டயம் 'சாளுக்கியர் மரபின் அழிவிற்கும் தாழ்விற்கும் பல்லவர்களே பொறுப்பானவர்கள்' என்று கூறுகின்றது. நரசிம்மவர்மனின் புலிகேசிக்கு எதிரான வெற்றி வரலாற்றுச் சிறப்பு மிக்கதாக அமைந்தது.

இலங்கை அரசனுக்கு உதவி: மகேந்திரவர்மன் புள்ளலூரில் போர் நிகழ்த்தினன் என்று கண்டோம். அப் போரில் நரசிம்மவர்மனும் தந்தைக்கு உதவியாகக் கலந்திருக்கக்கூடும். நரசிம்மவர்மன் காலத்தில் இலங்கையை ஆட்சி செலுத்தியவன் மானவர்மன் என்னும் அரசன் ஆவான். அவ் வரசன் அரசு இழந்து காஞ்சிபுரத்துக்கு வந்து அடைக்கலம் புகுந்தான். அட்டதத்தன் என்பவனே மானவர்மனைத் துரத்தியவன். மானவர்மனுக்குத் துணையாகப் பெரும்படை பல்லவனால் அனுப்பி வைக்கப்பட்டது, படை உதவி பெற்றுச் சென்ற மானவர்மன் முதல் போரில் வெற்றிபெற்ற போதிலும் அடுத்த போரில் தோல்வியடையவே, மீண்டும் காஞ்சி வந்தான்.

இம் முறை பல்லவப் பெருவேந்தன் தன் படைகள் அனைத்தையும் ஒன்று திரட்டி மானவர்மனிடம் ஒப்புவித்து மாமல்லபுரம் என்ற துறைமுகத்திற்கு வந்து தானும் கப்பலில் ஏறுவதாகத் தன் படைவீரரை நம்பச்செய்தான். இலங்கை அரசன் வெற்றி பெற்று அரியணை ஏறினன். இவ் வுதவியைப் பாராட்டிக் காசக்குடிப் பட்டயம் 'நரசிம்மன் இலங்கையில் பெற்ற வெற்றி இராமன் இலங்கையில் பெற்ற வெற்றி போன்றது' எனக் குறிப்பிட்டுள்ளது. இலங்கை அரசனுக்குப் பல்லவன் உதவியதன் காரணம், புலிகேசிக்கு எதிரான போர் நிகழ்த்தியபோது அவன் உதவியதன் பொருட்டே எனலாம்.

பாண்டியருடன் போர்: கி. பி. 640 முதல் 680 வரை பாண்டிய நாட்டை ஆண்டு வந்தவன் அரிகேசரி பராங்குசன் என்ற நெடுமாறன் என்னும் அரசனுவான். தென்புலத்தில் செல்வாக்குடன் திகழ்ந்து 'சேர சோழ பாண்டியர், களப்பிரர் தலைவன்' எனக் கூறத்தக்கச் சிறப்புப் பெற்றவன் இவ் வேந்தன், சின்னமனூர்ப் பட்டயம் 'சங்கரமங்கை என்ற இடத்தில் பல்லவனைப் புறங்கண்டான்' என்று கூறுவதிலிருந்தும், கூரம் பட்டயம் 'நரசிம்மவர்மன் சேர சோழ பாண்டிய களப்பிரருடன் போரிட்டான்' என்பதையும் உற்று நோக்குகிறோம். நரசிம்மவர்மனுக்கும்

பாண்டியனுக்கும் இடையே போர் நடைபெற்றிருக்கலாம் எனவும் பல்லவன் தோல்வியடைந்தான் எனவும் கருத வாய்ப்புள்ளது.

கங்கர்களுடன் போர்: சாளுக்கியன் புலிகேசியின் மக்கள் ஆதித்தவர்மனும், முதலாம் விக்கிரமாதித்தனும் புலிகேசியின் மறைவிற்குப் பின்னர் வாரிசுரிமைப் போரில் ஈடுபட்டனர். ஆதித்தவர்மன் நரசிம்மவர்மனின் துணையை நாடினான். விக்கிரமாதித்தனின் தன் தாய் வழிப் பாட்டனான கங்க அரசன் துர்விநீத கங்கன் என்பானின் துணையை நாடினான். (விக்கிரமாதித்தன் கங்க அரசிக்குப் பிறந்தவன்) துர்விநீதன் நரசிம்மவர்மனை வென்று தன் பெயரனான விக்கிரமாதித்தனைச் சாளுக்கிய அரசனாக்கினான்.

யுவாங் சுவாங்: நரசிம்மவர்மனின் காலத்தில் காஞ்சிக்கு ஏறக்குறைய கி. பி. 642-ல் வந்த யுவாங் சுவாங் என்ற சீனப் பயணி தான் அறிந்த செய்திகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். அதில் காஞ்சியைத் திராவிடம் என்று அவர் குறிப்பிட்டுவிட்டு, 'நிலம் செழிப்புள்ளது; நல்ல விளைவு தருவது; நாடு வெப்பமானது. மக்கள் அஞ்சா நெஞ்சினர்; உண்மைக்கு உறைவிடமானவர்; கற்றவரையும் உயர்ந்த கொள்கைகளையும் போற்றுபவர்; இந் நாட்டில் நூறு பௌத்த மடங்கள் உள்ளன; பதினாயிரம் பௌத்தர்கள் உள்ளனர்; சைவ, வைணவ, சமணக் கோவில்கள் ஏறத்தாழ 80 இருக்கின்றன. திராவிட நாட்டில் திகம்பர சமணர் பலர் இருக்கின்றனர். புத்தர் காஞ்சிக்கு வந்து பலரைப் பௌத்தராக்கியதாக இங்கு கூறப்படுகிறது. திராவிட நாட்டில் அசோகன் பல ஸ்தூபிகளை அமைத்தான். அவற்றுள் சில காஞ்சியைச் சுற்றிலும் பழுதுற்ற நிலையில் இருக்கின்றன. நாளந்தாப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்த தர்மபாலர் காஞ்சியைச் சேர்ந்தவர் என்னும் செய்தி இங்குக் கூறப்படுகிறது'. 'நான் பாண்டிய நாட்டையும் சென்று கண்டேன். அங்குச் சிலரே உண்மைப் பௌத்தராக இருக்கின்றனர். பலர் பொருள் ஈட்டுவதே குறியாயுள்ளனர். பௌத்தம் பாண்டிய மண்ணில் அழிவுநிலையில் உள்ளது. பல இடங்களில் பௌத்த மடங்கள் இருந்ததற்கான அறிகுறிகள் தென்படுகின்றன' என்று குறிப்பிட்டார்.'

யுவாங் சுவாங்கின் குறிப்பால் காஞ்சி ஆறு கல் சுற்றளவுடையது எனவும், காஞ்சிக்கும் கடற்கரைக்கும் இருபது கல் தொலைவு எனவும் அங்கிருந்து பல கப்பல்கள் இலங்கைக்குச் செல்கின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார். யுவாங் சுவாங்கின்

குறிப்புகள் நரசிம்மவர்மனின் காலத்திய காஞ்சியின் சிறப்பையும், கடல் வாணிபச் சிறப்பையும் விளக்குகின்றன.

நரசிம்மவர்மனின் கலைப்பணி: பல்லவப் பெருவேந்தர்கள் கலையார்வம் மிக்கவர்கள். அவர்களில் நரசிம்மவர்மன் எடுத்த கோவில் தூண்களின் போதிகைகள் உருண்டு காடிகள் வெட்டப் பட்டிருக்கும். போதிகைக்குக் கீழ்தூணின் மேற்புறம் உருண்டும் பூச்செண்டு செதுக்கப்பட்டும் இருக்கும். திறந்த வாயுடன் இருக்கும் சிங்கங்கள் தூண்களின் அடியில் ஏறக்குறைய இரண்டு முழ அகலமும் இரண்டு முழ உயரமும் கொண்டதாக அமைக்கப் பட்டுள்ளன. நாமக்கல் மலையடியில் உள்ள நரசிங்கப் பெருமாள் கோவில், திருச்சிராப்பள்ளி மலையடியில் தென்மேற்கு மூலையில் உள்ள குகைக்கோவில், திருவெள்ளறை என்னும் இடத்தில் உள்ள பெருமாள் கோவில், திருமயத்தில் உள்ள வைணவக் குகைக் கோவில் ஆகியவை நரசிம்மன் அமைத்தவை என்று கருதப்படுகின்றன.

நரசிம்மவர்மன் மகாபலிபுரத்தில் மூவகை வேலைப்பாடுகள் கொண்டவற்றை உருவாக்கினான். மகிடாசுர மண்டபம், வராக மண்டபம், திரிமூர்த்தி மண்டபம் ஆகியவை நரசிம்மன் அமைத்த குகைக்கோவில்கள். இது ஒருவகை வேலைப்பாடுள்ள குகைக் கோவில் சிற்பங்கள். வாதாபி குகைக்கோவிற் சுவர் சிற்பங் களின் அமைப்பில் உருவாக்கப்பட்டவை. இவை முதலாவது வகையானதாகும். நரசிம்மவர்மன் இரண்டாவது வகையில் ஒரே கல்லால் ஆன கோவில்களை அமைத்தான். இவைகளைப் பாண்டவர் இரதங்கள் என்று குறிப்பிட்டனர். இக் கற்கோவில் களின் முன்புறம் இறைவடிவங்களின் ஊர்திகளாகச் சொல்லப் படுபவைகளான நந்தி, சிங்கம், யானை முதலியன அமைக்கப்பட் டிருந்தன.

மூன்றாவது வகையின கற்சிற்பங்கள் ஆகும். கோவர்த்தன மலையைப் பிடித்துள்ள கண்ணன் வடிவம், கங்கைக்கரைக் காட்சி (அர்ச்சுனன் தவம் என்றும் கூறப்படுவது) முதலியன அடங்கும். நரசிம்மவர்மன் கோட்டைகள் பல கட்டிய கொற்றவன் என்று கூறப்படுகின்றான்.

மாமல்லபுரம், கரிகாற் சோழன், தொண்டைமான், இளந்திரையன் முதலிய சோழ மன்னர்கள் காலத்தில் சிறந்த கடற்கரைப் பட்டினமாக இருந்தது என்பதைப் பத்துப்பாட்டு எடுத்து இயம்புகிறது.

மாமல்லபுரத்து அழகுச் சிலைகள் அனைவரையும் கவருவன. காலம் உள்ளளவும் மக்கள் நெஞ்சை விட்டு நீங்காத வகையில் அவை வடிக்கப்பட்டுள்ளன. பல்லவப் பெருவேந்தர்களில் நரசிம்மன் மாமல்லபுரத்தில் தொடங்கிவைத்த பணி உலகக் கலை வரலாற்றில் குறிப்பிடத் தகுந்த ஒன்று ஆகும்.

கல்லிலே கலைவண்ணம் கண்ட நரசிம்ம வர்மனுக்குப் பின்னர் அத்தகைய சிறப்புப் பெற்றவர் யாரும் இல்லை என உறுதியாகக் கூறலாம்.

மற்றையப் பல்லவ வேந்தர்கள்

இரண்டாம் மகேந்திர வர்மன் 668-670 : மாமல்லன் நரசிம்மனின் மகனுவான் இவ் வேந்தன். இரண்டு ஆண்டுகளே ஆட்சி செலுத்திய இவன் கடிகையைச் சீர்திருத்தினுன். இவனுடைய காலத்து குறிப்பிடத்தகுந்த நிகழ்ச்சிகள் இல எனலாம்.

முதலாம் பரமேச்சுவர வர்மன் 670-700 : இரண்டாம் மகேந்திரனின் மகன். இவன் ஆட்சியில் சாளுக்கிய வேந்தனுன முதலாம் விக்கிரமாதித்தன் காஞ்சி வரை படை நடத்தி வந்து வெற்றி கண்டான். தெற்கே காவிரி வரை முன்னேறிய அவனைப் பரமேச்சுவரன் **பெருவளநல்லூர்** என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் தோற்கடித்து வாதாபி வரை துரத்திச் சென்றுன். இரணரசிகபுரத்தைக் கைப்பற்றியவன் எனப் பட்டம் கொண்டான். மாமல்லனுல் மாமல்லபுரத்தில் தொடங்கப்பட்ட கலைப் பணியினை முடித்து வைத்த பெருமை இவனுக்குண்டு.

இரண்டாம் நரசிம்ம வர்மன் 700-728 : பரமேச்சுவர வர்மனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த இவ்வேந்தன் **இராசசிம்மன், அத்தியந்தகாமன்** என்று பட்டம் பெற்றுக் கடல் கடந்த தீவுகளையும் ஆட்சி செலுத்தியவன். பல்லவ நாட்டில் பேரமைதியை நிலை நிறுத்தியவன். கலை இரசிகன். சிறந்த சிவபக்தன், **சிவசூடாமணி** என்று பட்டம் பெற்றவன். சீன மன்னனுக்கு நாகபட்டினத்தில் பௌத்தப் பள்ளியை எழுப்ப அனுமதி அளித்தவன். இந்த வேந்தனுக்கும் மாமல்லன் என்ற பட்டமிருந்தது. இவன் அரசவையில் வீற்றிருந்த முக்கிய புலவர் **தண்டி** என்ற வடமொழிப் புலவராவார். **அவந்தி தத்தர் கதை, அவந்தி சுந்தரி கதாசாரம்** ஆகிய நூல்கள் இவரால் எழுதப்பட்டன. இவர் வடமொழிக் காப்பியங்களுக்கு எழுதிய அலங்கார நூலே தமிழில் உள்ள **தண்டியலங்காரம் என்னும் நூலாகும்**

இரண்டாம் பரமேச்சுர வர்மன் 728-730 : சாளுக்கியர்களுடனும் கங்கர்களுடனும் போரிட்ட இம் மன்னன் திருவதிகை என்னுமிடத்தில் ஆலயம் ஒன்று கட்டுவித்தான். இவனுடன் சிம்ம விஷ்ணுவின் வம்சம் முடிவடைந்தது.

இரண்டாம் நந்திவர்மன் 730-795 : சிம்ம விஷ்ணுவின் உடன் பிறந்த பீமவர்மனின் வழியில் வந்தவன் ஆவான். இவனுடைய தந்தையின் பெயர் இரண்யவர்மன் என்பதாகும். பல்லவ மல்லன் என்ற பட்டம் பூண்ட இவன் தனது 12ஆம் ஆண்டில் அரசுக் கட்டில் ஏறினான். இவனது ஆட்சிக் காலத்தின் 65வது ஆண்டுக் கல்வெட்டு கிடைத்துள்ளது. சாளுக்கியர், பாண்டியர், கங்கர், இராட்டிரக்கூடர் முதலியோருடன் பல முறை போர் செய்தான். காஞ்சிபுரத்திலுள்ள வைகுந்தநாதர் ஆலயம் இவனால் கட்டப்பட்டதே. வைணவ ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கை ஆழ்வார் இம் மன்னனின் சமகாலத்தவரே. அவர் மாமல்லபுரத்துப் பெருமான்மீது இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். இவனைப் போல் நீண்ட காலம் ஆட்சி செய்த வேறு பல்லவர் எவரும் இல்லை. அசுவமேத வேள்வியும் நிகழ்த்திய வேந்தனிவன் என்று கூறப்படுகிறது.

நந்திவர்மன் 796-847 : இரண்டாம் நந்திவர்மனுக்குப் பின்னர் தந்தி வர்மன் அரசனாயினான். திருவெள்ளறையில் சுவத்திகக் கிணறு தோண்டப்பட்டது. இவனால் உத்திரமேரூரில் சுந்தர வரதபெருமாள் கோயில் கட்டப்பட்டது

மூன்றும் நந்திவர்மன் (846-869)

மூன்றும் நந்திவர்மன் காலத்துப் பட்டயங்களில் வேலூர் பாளையப் பட்டயங்கள் சிறந்தவையாகும். மூன்றும் நந்திவர்மனைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளை அறிய, திருநெய்த்தானம் கோவில்பட்டயம், திருவல்லம் கோவில் கல்வெட்டு, உலகளந்த பெருமாள் கோவில் கல்வெட்டு, திருப்பராய்த்துறை கல்வெட்டு ஆகியவையும் துணைபுரிகின்றன.

மூன்றும் நந்திவர்மன் **'கழற்சிங்கன்'** என்று சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பட்டவன் எனவும் பெரியபுராண நாயன்மாருள் ஒருவனான கழற்சிங்கன் இவ் வேந்தனே என்றும் மீனாட்சி அம்மையார் கருதுகிறார். நந்திவர்மன் நந்திக் கலம்பகத்தில் கழல் நந்தி" எனப்படுகிறார்.

இரட்டர்களுடன் போர் : நந்திவர்மனுக்கும், இரட்டர்களுக்குமிடையே நடைபெற்ற போரினை வேலூர் பாளையப் பட்டத்தின் வாயிலாக அறிகிறோம். மூன்றும் நந்திவர்மனின் போர்களில் தெள்ளாற்றுப் போர் ஒன்று மட்டுமே சிறப்பித்துப் பேசப்படுகிறது. நந்திவர்மன் **தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்** என அழைக்கப்படுகிறான். இவனது பத்தாம் ஆட்சிக்காலம்முதல் வெளியிடப்பட்ட எல்லா கல்வெட்டுக்களிலும், தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் என்று அழைக்கப்பட்டாலும், இவனது ஆறாம் ஆண்டில் வெளிவந்த வேலூர்ப் பாளைய பட்டயத்தில் அவ்வாறு காணப்படவில்லை. பட்டயக் குறிப்புகளாலும் இலக்கியக் குறிப்புகளாலும் தெள்ளாற்றுப் போர் கடுமையானது என விளங்குகிறது.

பாண்டியருடன் போர் : இப் போரில் கலந்து கொண்டவர்கள், தொடர்பு கொண்டவர்கள் யார்? இப் போரில் கலந்து கொண்டவன் மதுரையை ஆண்ட வரகுண பாண்டியன் என்னும் அரசனின் மைந்தனான **சீமாறன் சீவல்லபன்** என்னும் அரசனாவான். சீமாறன் சீவல்லபனின் பக்கம் சேரரும், சோழரும், துணைபுரிந்தனர். சீமாறன் பெண்ணையாற்றைத் தாண்டி வடஆற்காட்டினுள் நுழைந்தான்; நந்திவர்மன் தன் பகைவரைத் தெள்ளாற்றில் எதிர்த்துப் பெரும் போர் நிகழ்த்தி முற்றிலும் முறியடித்தான். **வெறியலூர், கடம்பூர், பழையாறு, குறுக்கோட்டை, வெள்ளாறு** முதலிய இடங்களில் நடைபெற்ற போரில் பாண்டியன் வெற்றி பெற்றான். அது மட்டுமின்றி மூன்றும் நந்திவர்மனின் வெற்றிப் படை பாண்டிய நாட்டு எல்லையை அடைந்து அங்கும் அவனை முறியடித்து மீண்டது என்று நந்திக் கலம்பகம் கூறுகின்றது.

போர்க் காரணம் : இப் போருக்கான காரணங்களை நந்திக் கலம்பகம் இருவகையாக உரைக்கின்றது. அவை : *(1)* சோழர்கள் பல்லவர்களுக்கு திறை செலுத்த மறுத்தனர். *(2)* இவ் வேந்தனின் தம்பி எதிரிகளுடன் சேர்ந்து கொண்டான் என்பது ஆகும். இவ்வாறு தமிழ் வேந்தர்களை முறியடித்த நந்திவர்மனை நந்திக்கலம்பகம் **காவிரி நாடன், காவிரிவள நாடன், காவிரி நன் நாடன், பொன்னி நன்நாட்டு மன்னன், காவிரி வளநாடு ஆள்வோன்** என்றெல்லாம் சிறப்பித்துக் கூறுகின்றது.

மூன்றும் நந்திவர்மன் வடக்கிலும், தெற்கிலும் அச்சமின்றி ஆட்சி செய்த பேரரசனாவான் என்பதனை மூவேந்தரும், வடபுலத்து அரசரும் திறை தந்தனர் என்பதன் மூலமாக அறி

கிறோம். அறம் பெருகும் தனிச் செங்கோல் மாயன், தண் செங் கோல் நந்தி, பகையின்றிப் பார் காக்கும் பல்லவர் கோன், என்று அழைப்பதினால் மூன்றும் நந்திவர்மன் செங்கோல் அரசன், அறம் வளர அரசாண்ட அரசன் எனவும், இவனது ஆட்சி, தன்மையானது எனவும் அறிகிறோம்.

சிறப்புகள் : 'கடல் கேழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெரு மான்' என்று சுந்தரரும், 'நாடு அறநெறியில் வைக நன்னெறி வளர்த்தான்' என்று சேக்கிழாரும் இவன் புகழ் பாடினர். நந்தி வர்மனின் தமிழ்ப்பணி தரணி போற்றும் சிறப்புப்பணி என்றும் 'பைந்தமிழை ஆய்கின்ற கோன் நந்திவர்மன்' என்றும் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

கடல் வாணிபம் : நந்திவர்மன் காலத்தில் கடல் வாணிபம் சிறந்திருந்தது. இவன் பெரிய கடற்படையினைக் கொண்டிருந்தான். காவிரிப் பூம்பட்டினம் இவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. மாமல்லபுரமும், மயிலையும் சிறந்த துறைமுகப் பட்டினங்களாக விளங்கின. **கடற்படை அவனி நாரணன்** எனப் பட்டம் பூண்டான். இவன் காலத்தில் பூம்புகாரிலிருந்து பல வணிகர்கள் சயாம் நாட்டில் தக்கோலம் என்னுமிடத்தில் குடியேறினர். அங்கு விஷ்ணு கோயில் ஒன்று எழுப்பி மன்னனின் பெயரால் 'அவனி நாரணன்' என்ற ஏரியைத் தோண்டி வைத்தனர்.

திருப்பணிகள் : பல திருப்பணிகள் நந்திவர்மனாலும் அவனுடைய துணைவியாலும் மேற்கொள்ளப்பட்டன. இவன் 'காவிரிவள நாடன்' என்று அழைக்கப்பட்டதிலிருந்து சோழ நாடு முழுவதும் இவன் ஆட்சியிலிருந்தது என உணர்கிறோம். இவன் காலத்திலும் மாமல்லபுரம் சிறப்புற்றிருந்தது. இவன் **கடல் மல்லைப் புரவலன், மல்லையர் கோன்,** என்று புகழப் படுவதே இதற்குச் சான்று.

சைவ சமயப் பற்று : நந்திவர்மன் சைவ சமய பற்றுக் கொண்டவன். சிவபெருமான்மீது கொண்டிருந்த பற்றை விளக்குமுகத்தான் 'சிவனை முழுதும் மறவாத சிந்தையன்' என்று நந்திக் கலம்பகம் போற்றுகின்றது. சுந்தரர் இவனை ஒரு நாயனாராகப் பாடிப் புகழ்ந்து **'கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்'** என்று கூறியுள்ளார். வேலூர்ப் பாளைய பட்டயத் தில் சிவனது திரு அடையாளம் நெற்றியில் கொண்ட நந்திவர்மன் எனவும் கைகளைக் குவித்து, எனக்குப் பின்வரும்

அரசர் இத் திருப்பணியினை பாதுகாப்பாராக எனவும் வேண்டுகிறார்.

நந்திக் கலம்பகம் : நந்திக் கலம்பகம் மூன்றும் நந்திவர்மன் மேல் பாடப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனைப் பாடியே இவ் வரசன் கொலை செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது. இச் செய்தியின் உண்மை நிலை ஆராய்ச்சிக்குரியது.

நந்திவர்மன் காலத்து அரசர்களில் குறிப்பிடத் தகுந்தோர் கங்க அரசனை முதலாம் பிரிதிவிபதி, இராஷ்டிர கூட அரசன் அமோகவர்ஷன், திருப்ப துங்கன், பாண்டிய அரசன் சீமாற வல்லபன் ஆகியோரே.

மறைவு : நந்திவர்மனின் மறைவு குறித்துப் பல்வேறு வகையில் கூறப்பட்ட போதிலும் வஞ்சகமாகக் கொலை செய்யப் பட்டான் என்பதே உண்மை என எடுத்துக்கொள்ள வேண்டி யுள்ளது. நந்திவர்மன் தமிழ் வளர்த்த பெரு மன்னன். நந்தி வர்மனின் தமிழ்ப்பணி நந்திக் கலம்பக வடிவில் இன்றும் காணுகின்றது.

நிருபதுங்கன் : (காலம் சரிவர அறியப்படவில்லை) இவ் வேந்தன் சிறந்த வீரனையினும் மூன்றும் நந்திவர்மன் பெற்ற அளவிற்கு சிறப்புப் பெறவில்லை. திருவத்தைக் கோவிலை புதுப்பித்தான் என அறிகிறோம்.

அபராஜிதன் : **885-903** திருப்புறம்பியம் என்ற இடத்தில் பாண்டியனை வென்றான். சோழ மன்னன் ஆதித்தன் கையில் மாண்டான். திருத்தணியில் உள்ள வீரட்டானேச்சுரர் கோவில் இவனால் கட்டப்பட்டது.

மூன்றும் நந்திவர்மனுக்குப் பின்னர் பல்லவர்கள் அரசு வீழ்ச்சியடையத் தொடங்கியது. பல்லவப் பேரரசர்கள், அரசர்கள் என்ற அளவிலாகிப் பின்னர், குறுநில மன்னரைப்போல் குறுகினர். 17ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் பல்லவர்களைப் பற்றிய அடையாளங்கள் மறையத் தொடங்கவே பல்லவர்களின் அரசியல் வரலாறும் முற்றுப் பெற்றது.

IV. பல்லவரின் ஆட்சிமுறை

சான்றுகள் : சங்க இலக்கியங்களில் பல்லவர்களைப்பற்றிய குறிப்பு ஏதும் காணப்படவில்லை. கி.பி. இரண்டாம் நூற்றாண்

டிற்குப் பிற்பட்ட நூல்களில் பல்லவர்களைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. லோகவிபாகம் என்னும் சமணநூல், அவந்தி சுந்தரி கதை என்னும் வடமொழி நூல், மத்த விலாசப் பிரகசனம் என்னும் நாடகம், சைவத்திருமுறைகள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், நந்திக்கலம்பகம், பாரதவெண்பா ஆகிய இலக்கிய சான்றுகளும் பல்லவர்களது ஆட்சி முறையினைப் பற்றிய செய்திகளையும் அறிவிக்கின்றன. இலக்கிய சான்றுகள் தவிர கல்வெட்டுகளும், பட்டயங்களும் நமக்குத் துணை புரிகின்றன.

ஆட்சிப் பிரிவு : பல்லவப் பெருநாடு பல **இராட்டிரங்களாகப்** பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வோர் இராட்டிரத்திலும் பல **விஷாயங்கள்** இருந்தன. பல்லவர்கள் ஆண்ட தமிழகத்தில் ஏற்கனவே கோட்டம், நாடு, ஊர் என்னும் பிரிவுகள் இருந்தன. பல்லவர்கள் நாட்டுப் பிரிவுகட்கு ஏற்கனவே இருந்த பெயர்களைத் தங்கள் ஆட்சியிலும் கையாண்டனர் என்பதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. தொண்டை நாடு, புழல் கோட்டம், ஈக்காட்டுக் கோட்டம், எயில் கோட்டம், தாமல் கோட்டம், ஊற்றுக் காட்டுக் கோட்டம், பலகுன்றுக் கோட்டம், ஆம்பூர்க் கோட்டம், களத்தூர்க் கோட்டம், செம்பூர்க் கோட்டம், வெண்குன்றக் கோட்டம், இலங்காட்டுக் கோட்டம், கலியூர்க் கோட்டம். செங்கைக் கோட்டம், படுவூர்க் கோட்டம், கடிக்கூர்க் கோட்டம், செந்திருக்கைக் கோட்டம், குறைவட்டான் கோட்டம், வேங்கடக் கோட்டம், வேலூர்க் கோட்டம், சேத்தூர்க் கோட்டம், புலியூர்க் கோட்டம் என இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இராட்டிரங்களாகிய மண்டலங்களை ஆண்டவர்கள் பெரிதளவு தம்மாட்சியே செய்து வந்தனர். இவர்கள் காளடைவில் வழி வழியாக இப் பதவிகளில் நிலைத்து விட்டனர். பல்லவர்கள் வடவர் ஆதாலாலும், இராட்டிரர், பாண்டியர் ஆகியோரால் துன்புறுத்தப் பட்டதாலும் தாமே நேரடியாக ஆட்சி நடத்திட இயலாது என்பதனாலும் தமிழ் குறுநில மன்னர்களை அதிக மாக்கினர். தமிழ் மக்களுக்கு ஆளும் பொறுப்பினைத் தந்தனர்.

மைய அரசு : மைய அரசின் தலைவர் அரசரே ஆவார் மரபு வழியே அரசுரிமை பெறுகின்ற முறையே பல்லவர் காலத் தில் வழக்கில் இருந்தது. அரசனுக்கு வாரிசு இல்லாவிடில் அரசனுடைய தம்பி மகன் பட்டத்தைப் பெற்றான். காசக்குடிச் செப்பேடுகளிலிருந்து சிம்ம விஷ்ணுவிற்குப் பின் அவர் தம்பி பீம வர்மன், என்பவர் மகேந்திரவர்மன் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரை பதவி வகித்தார். என அறிகிறோம். அரசர் வாரிசு ஏது

மின்றித் தற்செயலாக இறந்து விட்டால் அமைச்சர் முதலானோர் ஒன்றுகூடி அரசமரபில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து முடிசூட்டினர்.

தேர்தல் முறை: தேர்தல் முறையும் பல்லவர் காலத்தில் இருந்தது என அறிகிறோம். இரண்டாம் பரமேசுவரன் இறந்த பின்னர் பொது மக்கள் அரசனைத் தேர்ந்தெடுக்கக் கூடினர். இவ்விதம் மக்கள் அரசனைத் தேர்ந்தெடுத்தமை மக்களின் அரசியல் உணர்வை வெளிப்படுத்துகின்றது. காசக்குடி செப்பேட்டில் பல்லவர்கள் பிரம்மாவின் வழித் தோன்றல்கள் என்று கூறிக்கொண்டதற்கான குறிப்புக் காணப்படுகிறது. தெய்வீக மரபுக் கொள்கை (Divine Right theory) பல்லவரிடத்து இருந்தது என்பதற்குச் சான்றுகள் இல்லை. அரசர்கள் தர்ம மகா இராஜாதிராஜா, தர்ம மகா இராஜா, மகா இராஜா ஆகிய பட்டங்களைத் தத்தம் தகுதிக்கேற்றவாறு பெற்றிருந்தார்கள். பல்லவ வேந்தர்கள் தாம் செய்த வேள்விப் பெயர்களையும், தங்கள் பட்டப் பெயர்களாகக் கொண்டனர். பல்லவர்களுக்கு இடப்பட்ட பெயர் வேறு; முடி சூட்டப்பட்டவுடன் கொண்ட பெயர் வேறு. இராச சிம்மன் என்னும் இயற் பெயர் கொண்ட அரசன் முடி சூட்டப்பட்டவுடன் 'நரசிம்மவர்மன்' ஆயினன்.

விருதுப் பெயர்கள்: பல்லவ அரசர்கள் விருதுப் பெயர்கள் பலவற்றைப் பெற்றிருந்தனர். பல்லவ அரசர்கள் அனைவரும் வடமொழியில் புலவர்களாக விளங்கினர். சிறந்த இலக்கியங்களைப் படைத்தனர். முதலாம் மகேந்திரவர்மன் சிறந்த இசைக் கலைஞனாக விளங்கினான். பல்லவர்கள் சமயப் பற்று மிக்கவர்களாகவே விளங்கினர்கள். பல்லவ அரசன் இராசசிம்மன் சைவ சித்தாந்தத்தில் சிறந்தவன். அவன் சிறந்த அழகு மிக்க ஆலயங்களைக்கட்டி அவைகளில் வழிபாடுகள் முறையாக நடைபெற மானியங்களை வழங்கினான். பல்லவரிடத்துச் சமயக் கொலை காணப்படவில்லை. சமயக்கொலையினை யாராவது பல்லவ அரசர் நிகழ்த்தி இருப்பாரேயானால் எப்போதாவது நடந்த சம்பவமாகவே அது கருதப்படும். பல்லவர்கள் நந்தி இலச்சினையைக் கொண்டனர். சில இலச்சினைகளில் சிங்கம் காணப்படுவதைக் கொண்டு அறிஞர்கள் சிலர் சிங்கமே பல்லவர்கள் பயன்படுத்திய ஒன்று என உரைத்தனர். பிற்காலப் பல்லவர் அனைவருமே நந்தி இலச்சினையை நன்கு பயன்படுத்தினர். பல்லவர் கொடி நந்திக் கொடியே ஆகும். பல்லவர்களின் காசுகளில் நந்தி இருத்தலைக் காணலாம் பல்லவர் ஆட்சியில் தனிப்பட்ட ஓர் அரசன் எச் சமயத்தவன்

ஆயினும் சைவமே முக்கிய சமயமாக இருந்தது. சிவ ஸ்கந்தவர்மன் தன்னை **அக்நிஷ்டோம—வாஜபேய - அஸ்வமேதராஜ்** என அழைத்துக் கொண்டதாக அறிகிறோம். இதன் மூலம் பல்லவ வேந்தர்கள் தாம் செய்த வேள்விப் பெயர்களையும் தங்கள் பட்டப் பெயர்களாகக் கொண்டிருந்தனர் என்னும் உண்மை வெளிப்படுகிறது.

அமைச்சர்கள், அமாத்தியர்கள் வேறுபாடு: கத்வாங்கம் என்பது சிவனின் படைகளில் ஒன்றாகும். இதனால்தான் சிவ பெருமான் கத்வாங்கன், கத்வாங்கதரன் என்றெல்லாம் அழைக்கப்பட்டார். பிற்காலப் பல்லவர் இக்கத்வாங்கப் படையைத் தமது சமய அடையாளமாகக் கொண்டிருந்தனர். வைகுந்தப்பெருமாள் கோவில் கல்வெட்டுகள் கூறுகின்ற உண்மை இதுவாகும். ஹிரஹதகல்லிப் பட்டயங்களில் இருந்து அமாத்தியர்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பெரிய புராணத்தில் மகேந்திரவர்மன் திருநாவுக்கரசரை அழைத்துவரத் தன் அமைச்சரை அனுப்பியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அமாத்தியர்களுக்கும், அமைச்சர்களுக்கும் வேறுபாடு உண்டு. அமாத்தியர் ஆலோசனை கூறுபவர். அமைச்சர் அரச தந்திரம் உணர்ந்தவர். வைகுந்த பெருமாள் கோவில் கல்வெட்டுகளில் மாத்திரர்கள் என்னும் சொல் காணப்படுகிறது. மாத்திரர்கள் என்பதை அமைச்சர்கள் என்றே பொருள் கொள்ள வேண்டுமென திரு. பி. டி. சீனிவாசஅய்யங்காரும், டாக்டர் கிருஷ்ணசாமி அய்யங்காரும் கருத்துத் தெரிவித்தனர். சிறுத் தொண்டர் என அழைக்கப்பட்ட பரஞ்சோதி முனிவர் மகாமாத்திரர்கள் குடும்பத்தில் பிறந்தவர் என்று கூறப்படுகிறது.

அமைச்சர் குழு: இரண்டாம் நந்திவர்மன் காலத்திலும், பிற்காலத்திலும் பல்லவர் அரசியல் அமைப்பில் அமைச்சர் குழு இருந்தது என்பதற்குரிய சான்றுகளைக் கல்வெட்டுகளால் அறியலாம். இரண்டாம் நந்திவர்மனது தலைமை அமைச்சர் பிரம்ம ஸ்ரீராஜன் எனப்பட்டார். மூன்றாம் நந்திவர்மனின் அமைச்சர் கம்பன் இறையூர் உடையான் ஆவார். பிரம்ம ராஜன், பேரரையன் என்பன அமைச்சர்கள் பெற்ற சிறப்புப் பட்டங்கள். மாணிக்கவாசகர் தென்னவர் பிரம்மராயன் என அழைக்கப்பட்டார் என டாக்டர் இராசமாணிக்கனார் குறிப்பிடுகின்றார். பண்டைத் தமிழ் அரசர்கள் தம் அமைச்சர்களுக்குப் பிரமராயன், பேரரசன் என்பன போன்ற பட்டங்கள் வழங்கியதை ஒட்டியே பல்லவரும் நடந்து கொண்டனர் என்பதனை மீனாட்சி அம்மையார் எழுதியுள்ள நூலின் மூலம் அறிகிறோம். அரசன்

இடும் ஆணையை நடைமுறையில் கொண்டு வந்தவர் உத்தமசீலன் என்னும் அமைச்சர் எனவும், அமைச்சர் அரசர்க்கு ஆலோசனை யாளர் எனவும் வைகுந்த பெருமாள் கோவில் கல்வெட்டுகளால் அறிகிறோம்.

அமைச்சர்களின் கடமைகள்: அமைச்சர்களுடைய கடமை களைப் பற்றி ஆராயும் போது அரசர்க்குத் தங்கள் சேவையையும், உதவியையும் ஆட்சித்துறையில் நல்கியது மட்டும் இன்றி நாட்டின் அயல் நாட்டுக் கொள்கைகள் முக்கிய கொள்கைகள் ஆகியவற்றிலும் உருவாக்கும் பணியிலும் உதவினர். அமைச்சர்கள் படைத்தளபதிகளாகவும் பணியாற்றினர். அமைச்சர்கள் அர சனைத் தேர்ந்தெடுப்பதிலும், முடிசூட்டு விழாவிலும் முக்கிய பங்கு வகித்தனர். ஹிரஹத ஹல்லிப் பட்டயங்களின் வாயிலாக அரசருக்கு உதவிடத் தனி செயலாளர் போல ஒருவர் இருந்தார் என அறிகிறோம். காசக்குடிப் பட்டயங்களிலிருந்து வாயில் காப்பார், கீழ்வாயில் காப்பார் எனப்படும் அலுவலர்களும் இருந்தனர் என அறிகிறோம்.

நீதித்துறை: பல்லவர் காலத்து நீதித்துறையினை ஆராய் கின்ற போது மூன்று வகைப்பட்ட நீதிமன்றங்களைப் பற்றிய செய்திகளை நாம் அறிகிறோம். பல்லவப் பெரு நகரங்களிலிருந்த நீதிமன்றங்கள் **அதிகரணங்கள்** என்றும், சிற்றூர்களில் இருந்த நீதிமன்றங்கள் **கரணங்கள்** எனவும், இக்கால உயர் நீதிமன்றம் போல் விளங்கிய நீதிமன்றம் **தருமசாசனம்** எனவும் அழைக்கப் பட்டன. மகேந்திரன் எழுதிய மத்தவிலாசப் பிரகசனத்தால் அதிகரணங்கள் பெரு நகரங்களில் இருந்தவை என்னும் செய்தியையும் அறிகிறோம். சிற்றூரிலிருந்த கரணம் என்னும் நீதிமன்ற அலுவலாளர்கள் **அதிகாரிகள்** என அழைக்கப் பட்டனர். மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் திருவெண்ணெய் நல்லூரில் இருந்த **ஊர் அவை** வழக்கை விசாரித்து முடிவு கூறிய செய்தியினைப் பெரியபுராணம் அறிவிக்கின்றது.

அரசரே நீதித்துறையின் தலைவராக இருந்தார். மாவட்டங் களிலும், கிராமங்களிலும் இருந்த நீதிமன்றங்கள் அரசரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. நீதிபதிகள் **தர்மாதிகாரிகள்** என அழைக்கப்பட்டனர். **அதிகரணதண்டம்**, **கரணதண்டம்** என்னும் இருவகை அபராதம் விதிக்கப்பட்டது அதிகரண தண்டம் தலைமை நீதிமன்றத்தாலும், கரணதண்டம் மற்ற நீதி மன்றங்களினாலும் விதிக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது. அதிகரணவில் இலஞ்ச ஊழல் நிலவியதாகவும், காய்தல்,

உவத்தல் இன்றி நீதி வழங்கப்படவில்லை என்றும் மத்தவிலாசம் கூறும் செய்திகள் அறிவிக்கின்றன. அதிகரணம் என்பது குற்ற இயல் வழக்குகளை விசாரிக்கும் மன்றம் எனவும், தருமாசனம் என்பது உரிமையியல் வழக்குகளை விசாரிக்கும் மன்றம் என்றும் கருதலாம். தருமாசனம் பல்லவப் பேரரசின் பொது மன்றம் என்பது டாக்டர் இராசமாணிக்கனாரின் கருத்து ஆகும்.

நிலம்: பல்லவர் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டில் நிலம் முழுவதுமே செவ்வையாக அளவிடப்பட்டிருந்தது. பல்லவர் ஆட்சியில் நில அளவைக் கணக்கு உண்டு என்பதைப் 'படிப் பிரம்மதேயம் இருபத்து நான்கு வேலியும் நீக்கி' என்னும் பட்டயத் தொடர் மூலம் அறிகிறோம். சில பகுதி நிலங்கள் வரி செலுத்த வேண்டாத இறையிலி நிலங்களாக இருந்தன. நில அளவைக் கணக்குகளையும், வரி அளவை முதலிய கணக்கு களையும், சிற்றூர், பேரூர் அரசியல் அலுவலாளர் வைத்திருந் தனர். நிலத்தை அளந்து கள்ளியும், கல்லும் நட்டு எல்லை வகுத்தல் அக் காலப் பழக்கமாக இருந்தது. அரண்மனை அலுவலாளர்களில் பொற்கொல்லர், பட்டய எழுத்தாளர், புலவர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர். அரண்மனைப் பொற்கொல்லர் அரசிக்கு வேண்டிய அணிகலன்களைச் செய்ததோடு அரசரின் ஆணைகளைச் செப்புப் பட்டயங்களில் பொறித்தனர். அரசி யார்க்கு அணிகலன் செய்த பொற்கொல்லர் **மாதேவிப் பெருந் தட்டார்** எனப் பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார். பொற் கொல்லரைத் தவிரச் செப்புப் பட்டயங்களைத் தீட்டப் பட்டய எழுத்தாளர் என்பவரும் இருந்தார். அரசர் புகழை நாளும் பாடிட **காரணிகர்** எனப்படும் புலவர் பல்லவர் அரண்மனையில் இடம் பெற்றிருந்தார்.

படை: பல்லவர்கள் படையினை நான்கு பிரிவாகப் பிரித்திருக்கலாம் என்று தெரிகிறது. அவை: யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, தேர்ப்படை என்பனவாகும். தேர்ப்படை என்னும் பிரிவு பல்லவர் காலத்திலும் இருந்திருக் கலாம் என்று கருதப்படுகிறது. தேர்ப்படை பல்லவரிடம் இருந்தது என்பதை மெய்ப்பிக்கச் சான்றுகள் கிடைக்கவில்லை. வைகுந்த பெருமாள் கோவில் சிற்பங்கள் வாயிலாக போர்ப் பரிகள் பல இருந்தன என அறிகிறோம். படை அதிகாரிகள், சேனாதிபதிகள் என்று அழைக்கப்பட்டனர். பல்லவர்கள் சாளுக்கியர்களோடு போர் செய்தமையால் சிறந்த படையினை வைத்திருந்தனர் எனக் கருதலாம். பல்லவர்கள் சிறந்த கடற்

படையினையும் வைத்திருந்தனர். நரசிம்மவர்மன் மானவன் மனுக்கு உதவி புரியத் தன் கடற்படையை ஈழத்திற்கு அனுப்பி அப் படையும் வெற்றி கொண்டது என்பதை அறியும்போது பல்லவர் கடற்படையின் வலிமையினை அறிகிறோம்.

வரிகள்: உப்புத் தயாரித்தல் அரசின் ஏகபோக உரிமையாயிற்று. தென்னை மரங்களைப் பயிரிட விரும்பினோர் அவற்றின் விளைச்சலில் ஒரு பகுதியை அரசர்க்கு வரியாகச் செலுத்தி வந்தனர். கல்லால மரம் பயிரிட சிற்றூரார் அரசிடம் உரிமைப்பெற வேண்டியிருந்தது. அவ் வுரிமைக்குச் சிறுதொகை செலுத்த வேண்டியிருந்தது. அது **கல்லால் காணம்** எனப்பட்டது. நோய் தீர்க்கும் மருந்துச் செடிகளைப் பயிரிட அல்லது விற்கும் உரிமை பெறச் செலுத்தப்பட்ட தொகைக் **கண்ணிட்டுக் காணமாகும்.** குவளைச் செடிகளை நடவும், விற்கவும் உரிமை பெறச் செலுத்தப்பட்ட தொகை **குவளைக் காணமாகும்.** சிற்றூர்த் தலைவனுக்கு ஊரார் செலுத்தி வந்த வரி **வியவன் காணம்** என்று அழைக்கப்பட்டது. இவ்வாறு பல துறைகளிலும் வசூலிக்கப்பட்ட வரிகள் அரசுக் கருவூலத்தை அடைந்தன. கருவூலத்தின் தலைவன் **குமாரன்** என அழைக்கப்பட்டான். பொருள் கொடுக்கும்படி ஆணையிடும் அலுவலர் **கொடுக்கப் பிள்ளை** எனப் பட்டார்.

உள் ஆட்சி முறை (Local Administration) இனி உள் ஆட்சி முறை பற்றிக் காண்போம். **கோட்டம்** அளவில் பெரியது; **நாடு** என்பது கோட்டத்தைவிடச் சிறியது. ஆனால் சிற்றூரை விடப் பெரியது. **நாடு** என்னும் பிரிவினைச் சேர்ந்த அறிஞர்கள் **நாட்டார்** எனப்பட்டனர். **ஊரார்** என்பவர்கள் சிற்றூரைச் சேர்ந்த அறிஞர்கள். **ஆள்வார்** என்பவர்கள் ஊரை ஆண்ட அவையினர். ஒரு நாட்டிற்குட்பட்ட எந்த சிற்றூரைப் பற்றிய செய்தியிலும் நாட்டார், ஊரார், ஆள்வார் ஆகிய மூவருமே கலந்து முடிவு செய்தனர். அரசனால் இடப்பட்ட ஆணைகள் திருமுகம்எனப்பட்டன. நாட்டார் அவ் வாணைகளைநிறைவேற்றிப் பொதுமக்கட்கு அறிவித்தனர். அதனை அறை ஓலை என்றழைத்தனர் என்பதனைப் பின்வரும் பட்டயச் சான்று விளக்குகிறது. 'நாட்டார்க்கு விட்ட திருமுகம் நாட்டார் தொழுது தலைக்கு வைத்து எல்லை போய்க் கல்லும் கள்ளியும் நாட்டிப் பதாகை வலம் செய்து நாட்டார் விடுத்த அறை ஓலைப்படி.'

ஊர் அவை: ஊர் ஆட்சி எவ்வாறு இருந்தது என்பதனைத் தெளிவாக விளக்கும் சான்றுகள் கிடைக்கவில்லை, ஊரார்

சிற்றூரைச் சேர்ந்த அவையாருடன் கலந்து வேலை செய்தனர் என்பதைக் கல்வெட்டுகள் நமக்கு அறிவிக்கின்றன. ஊர் அவையினர் **பெருமக்கள்** என அழைக்கப்பட்டனர். இப் பெருமக்களுடைய பணிகள் உழவு, கோவிற்பணி, அறங்கூறல் முதலியவைகளாக இருந்தன. கோபாலன் என்பார் எழுதி வைத்துள்ள **'காஞ்சிப் பல்லவர்கள்' (Pallavas of Kanchi)** என்னும் நூலில் ஊர் அவை பல உட் பிரிவுகளாகப் பிரிந்து பல துறைகளிலும் நுழைந்து சிற்றூர் ஆட்சியைத் திறம்பட செய்தது என்று குறித்துள்ளார்.

வாரியம்: ஊர் அவைக்குள் பல பிரிவுகள் இருந்தன. ஒவ்வொரு பிரிவும் **வாரியம்** எனப்பட்டது. ஏரி வாரியப் பெருமக்கள், தோட்ட வாரியப் பெருமக்கள் எனப் பல வகுப்பு பெருமக்களைக் கொண்ட முழு அவையே ஊர் அவையாகும். பல்லவர் காலத்தில் ஏறக்குறைய இருபது ஊர் அவைகள் இருந்தன என்பதைப் பட்டயங்களாலும், கல்வெட்டுகளாலும் அறிகிறோம். மேலும் பல ஊர் அவைகள் இருந்திருத்தல் வேண்டும். ஆனால் அவை குறித்த செய்திகள் நமக்குக் கிடைக்கவில்லை. பெரிய புராணத்தின் மூலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் திருவெண்ணெய் நல்லூரிலும், சிதம்பரத்திலும் ஊர் அவைகள் இருந்தன என்பதை அறிகிறோம். சிற்றூரை நேரே பொறுப்பாக ஆட்சி செய்தவர்கள் **ஆளுங்கணத்தார்** என அழைக்கப்பட்டனர். இவர்களுக்கும் ஊர் அவைக்கும் இருந்த தொடர்பு வேறானது. ஊரவையாரை இன்றைய நகரவைகளைப் போலவும், ஆளுங்கணத்தாரை இன்றைய நிர்வாக அதிகாரி (ஆணையாளர்) போலவும் கருதலாம். இவர்களைத் தவிர ஆலயங்கள் சம்பந்தப்பட்ட பணிகளை கவனித்து வந்தவர்கள் **அமிர்த கணத்தார்** என அழைக்கப்பட்டனர். அமிர்த கணத்தார் கோவில் சம்பந்தமான செய்திகளில் ஊர் அவையாருக்குப் பொறுப்புள்ளவர் ஆவர். அது மட்டுமின்றி கோவிலுக்கு வரும் அறக் கொடைகளை வரவு வைத்தல் கோவில் கருவூலத்திலிருந்து பொருட்களைக் குறைந்த வட்டிக்குக் கடன் தருதல், அது தொடர்பான பதிவுகளைப் பாதுகாத்தல், கோவில் சம்பந்தப்பட்ட பிற வேலைகள், ஆகியவற்றைக் கவனித்து வந்தனர்.

சிற்றூர்கள்: இக் கால சிற்றூர்களே பெரும்பாலும் மாறுதலின்றி அக் காலத்திலும் இருந்தன. ஒவ்வொரு சிற்றூரும் நன்கு அளக்கப்பட்டு எல்லைகள் குறிக்கப்பட்டிருந்தன. மறையவர் பொருட்டு உண்டாக்கப்பட்டவை பிரம்மதேய சிற்றூர்கள் என அழைக்கப்பட்டன. **உதய சந்திர மங்கலம், தயாமுகமங்கலம்**

பட்டத்தாள் மங்கலம் முதலியன பிரம்மதேய சிற்றூர்களில் சிலவாகும். இச் சிற்றூர்கள் எத்தகைய வரியும் அரசுக்குச் செலுத்தவேண்டியதில்லை. சில சிற்றூர்கள் கோவிலுக்கென்று விடப்பட்டன. அவை **தேவதானச் சிற்றூர்கள்** எனப் பெயர் பெற்றன. அச் சிற்றூரின் வருவாய் முழுவதும் கோவில் பணிக்கே செலவிடப்பட்டது.

பல்லவர்கள் ஆட்சி முறையின் சிறப்பு சிறந்த நெறிப்படுத்தப் பட்ட ஆட்சி முறை அது என்பதுதான். பல்லவர்கள் ஏற்கனவே வழக்கில் இருந்த முறைகளைப் பின்பற்றியதால், அதில் மாற்றம் ஏதும் செய்தற்குரிய அனுபவம் பெற்றனர். பழைய முறைகளில் இருந்த குறைபாடுகளை நீக்கினார்கள் ஆயினும் பல்லவர் காலத்தில் இலஞ்ச ஊழலே ஒழிக்க இயலவில்லை என்பதை நமக்கு மத்த விலாசம் கூறும் செய்தி அறிவிக்கின்றது.

இதுகாறும் கண்ட செய்திகளிலிருந்து பல்லவர்கள் தென்னிந்திய வரலாற்றில் மட்டுமின்றி இந்திய வரலாற்றிலும் குறிப்பிடத் தகுந்த அளவிற்கு ஆட்சித் துறையில் தங்கள் பங்கினைச் செய்துள்ளனர் என்று அறிகின்றோம். இயன்ற அளவில் தமிழ்ப் பண்புகளைக் கையாண்டமையால் பல்லவர்கள் இடத்து வடவர் இயல்புகள் இருந்த போதிலும் அவர்கள் ஆட்சி தமிழர்கள் ஆட்சி முறையையே ஒத்திருந்தது.


V. பல்லவர்கள் போற்றி வளர்த்த கலைகள்

கட்டடக் கலையிலும், சிற்பக் கலையிலும், ஓவியக் கலையிலும் தொன்று தொட்டே தமிழகம் சிறந்து விளங்கியது. சிறந்த அரண்களையும், மாளிகைகளையும் எழுப்பும் திறம் பெற்றவர்கள் தமிழகத்தில் இருந்தனர். எல்லாக் கலையும் இம் மண்ணில் எழிலுறத் திகழ்ந்தன. தமிழகக் கலை பிறநாட்டவரையும் கவர்ந்தது. தமிழகச் சிற்பிகள் பலர் இந்தியாவின் வடபகுதிக்குச் சென்று அங்குத் தமிழகக் கலைமுறையை விட்டுச் சென்றிருக்கின்றனர் என்று திபெத்திய நூல்கள் குறிக்கின்றன. தமிழகக் கலை மலர்ந்திருந்த நிலையில் அதற்குப் பல்லவர்கள் மேலும் நீர் ஊற்றி எரு இட்டு கலைப் பயிராகக் காலமெல்லாம் புகழ் பெறச் செய்தனர்.

இனிப் பல்லவர்கள் வளர்த்த கலை ஒவ்வொன்றையும் காண்போம்.

கல்வி : பல்லவர்களின் கல்விப்பணி வியந்து போற்றுதற்கு உரியதாகும். இக் காலக்கல்வி முறையையும் இம் முறையிலான

கல்விக் கூடங்களும் இல்லை; எனினும் அக் கால மக்கள் அறம், பொருள், இன்பம் நுகரவும், வீடு பேற்றிற்குரிய நெறியில் பயிலவுமே கல்வி கற்றனர். பல்லவப் பெருநாட்டில் சிறந்த புலமை வாய்ந்த புலவர்கள் பலர் இருந்தனர். அவர்கள் அரசி



படம் 2

மாமல்லபுரச் சிற்பங்கள்

னுலும், பொதுமக்களாலும், உயர்வாக மதிக்கப்பட்டனர். 'கதம்ப குலம்' என்ற நூலினை எழுதிய மயூர சர்மன் கதம்ப மரபினைத் தோற்றுவித்த மயூர சர்மன் காஞ்சியில் இருந்த

வடமொழிக் கல்லூரியில் படித்து வந்ததாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இதன் வாயிலாக வடமொழிக் கல்லூரி அக் காலத்திலேயே இருந்தது எனவும், நூற்றுக்கணக்கான மாணவர்கள் வடமொழிச் சாத்திரங்கள் கற்றனர் எனவும் அறிகிறோம். இவ் வடமொழிக் கல்லூரி **கடிகை** என அழைக்கப்பட்டது. மதுரை தமிழ்ச் சங்கம் போல அனைவருக்கும் பொதுக் கடிகையாக இது விளங்கிற்று. இங்கு பேசுதல் அக் காலத்தில் சிறப்பளித்த செயல்களில் ஒன்றாகக் கருதப்பட்டது. **தர்மபாலர்** என்பவர் இங்கிருந்து நாளந்தா பல்கலைக் கழகத்திற்கு பேராசிரியராக பணி புரியச் சென்றார். **'கல்வியில் கரையிலாத காஞ்சிமாநகர்'** என்று அப்பர் பெருமானால் காஞ்சி பாராட்டப்பட்டது.

இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் சோளிங்கர் மலை மீதுள்ள கடிகைக்கு மானியம் அளிக்கப்பட்ட செய்தியினைத் திருவல்லம் கல்வெட்டு குறிக்கின்றது. தென்னாற்காட்டிற்கும், திருப்பாதிரிப் புலியூருக்குமிடைய உள்ள பாகூர் என்னுமிடத்தில் வடமொழிக் கல்லூரி ஒன்று இருந்தது எனவும், அக் கல்லூரியில் பயின்றவர்களனைவரும் பல்வகைக் கலைகளையும், பத்து வகை வித்தைகளையும் பயின்றனர் எனவும் அறிகிறோம்.

பல்லவப் பேரரசர்கள் தனிப்பட்டவர்களின் கல்விக்கு மதிப்பளித்தனர். பல்லவர் காலத்தில் கைலாசநாதர் கோவில் போன்றவை பல்கலை பயிற்றுவிக்கும் பள்ளிகளாக இருந்து வந்தன. அங்குச் சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், சமயக் கல்வி, சாத்திரக் கல்வி முதலியன கற்பிக்கப்பட்டன. சமய நூல்களான தேவார பதிகங்கள் கோவில்களில் பாதுகாக்கப்பட்டன.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் அப்பர், சம்பந்தர் போன்ற சமயக் குரவர்களின் காலத்தில் தமிழ்நாட்டில் பல மடங்கள் இருந்தன என்பதனைப் பெரிய புராணத்தின் வாயிலாக அறிகிறோம். அம் மடங்களில் இலக்கணம், சித்தாந்தம், யோகம், அறநூல்கள், புராணங்கள், செய்யுள், நாடகம், இசை, தருக்கம் முதலியவை கற்பிக்கப்பட்டன.

பௌத்தர்கள், சமணர்கள் ஆகியோர் சிறந்த கல்விப்பணி ஆற்றினர். 'லோகவிபாகம்' என்னும் சமண நூல் பாலி மொழியில் இருந்து வடமொழியில் மொழி பெயர்க்கப்பட்ட ஊர் பாதிரிப் புலியூரே ஆகும். பல்லவர் ஆட்சியில் மக்கள் கல்வி,

வாணிகம், சமயம், இசை, சிற்பம், ஓவியம், நாடகம், நடனம் முதலிய பல துறைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

இசை : பல்லாவரம் குகைக்கோவில் கல்வெட்டில் மகேந்திரவர்மப் பல்லவன் தன்னைச் **'சங்கீரண சாதி'** என்றே கூறியுள்ளான்.

தாளவகைகள் ஐந்தினுள் (**சதுஸ்ரம், திஸ்ரம், மிஸ்ரம், கண்டம், சங்கீரணம்**) கடைசியில் உள்ள சங்கீரணம் என்பதில் புதியவற்றைக் கண்டு அதன் வகைகளையும், ஒழுங்குகளையும் அமைத்தவன் மகேந்திரனே என்பது ஆராய்ச்சியாளர் கருத்து ஆகும். மாமண்டூர்க் கல்வெட்டில் மகேந்திரனின் இசைச் சிறப்பைக் குறித்துள்ளதைக் காண்கிறோம். மகேந்திரவர்மன் இயற்றியுள்ள மத்தவிலாசம் என்ற நூலில் இசை, நடனம் பற்றிய தமது விருப்பத்தைப் பிறர் வாயிலாக வெளிப்படுத்துதல் நோக்கத் தக்கது. அது மட்டுமின்றி **பரிவாதினி** என்னும் வீணை வாசிப்பில் வல்லவனாகவும் விளங்கினன். இராசசிம்ம பல்லவனின் விருதுப் பெயர்களில் **வாத்திய வித்தியாதரன், வீணாநாரதன்** என்பன அவனது இசைப் புலமையை நன்கு விளக்குகின்றன.

மகேந்திரவர்மனின் காலத்தில் இசையுடன் பாடக்கூடிய தேனினும் இனிய தேவாரப் பண்களை அப்பர் பெருமான் பாடினர். சம்பந்தரும் இசைப் புலமையில் சிறந்து விளங்கினர். அவர் அமைத்த பதிகங்களை யாழில் அமைத்து திருத்தலங்கள் தோறும் பாடிவந்தார், திருநீலகண்ட யாழ்பாணர் என்பவர். சைவத் திருத்தலங்களிலிருந்து கி. பி. ஏழாம் நூற்றாண்டில் சிறப்புடன் பல்லவர் நாட்டில் திகழ்ந்த நடனக் கலையினை நன்கு உணரலாம். திருநாவுக்கரசர் பதிகங்களின் வாயிலாகவும் அக்காலத்தில் சிறப்புற்றிருந்த நடனக் கலையினை நன்கு அறிகிறோம். இராசசிம்மப் பல்லவன் தான் அமைத்த கைலாசநாதர் ஆலயத்தில் சிவபெருமானின் பல்வகை நடனங்களைத் தமிழ் மக்கள் அறியும் வகையில் சிற்ப வடிவில் அமைத்துள்ளான்.

ஓவியம், சிற்பம் : ஓவியக் கலையின் உன்னத நிலையை உலகுக்கு இன்றும் எடுத்துக் காட்டுபவை சித்தண்ண வாசல் ஓவியங்களே. அவை மட்டுமின்றி மண்டகப்பட்டு, மாமண்டூர், மகேந்திரவாடி, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் காணப்படும் ஓவியங்களும் வியந்து போற்றப்படுகின்றன. காஞ்சிபுரத்திற்கு அருகில் சமணக்காஞ்சி என்று போற்றப்படும் இடத்தில் உள்ள சமணக் கோவில் ஒன்றினுள் பல்லவச் சித்திரங்கள் காணப் படுவதை இன்றும் காணலாம்.

சித்தண்ண வாசல் கோவிலில் காணத்தக்கவை நான்கு ஆகும் **(1) உருவச்சிலைகள், (2) நடனப் பெண்டிர் ஓவியங்கள், (3) அரசன் அரசி ஓவியங்கள் (4) கூரைகளிலும் தூண்களிலும்** உள்ள ஓவியங்கள் ஆகியவையே. இக் கோவில் தூண்கள் மீதும் மேற்கூரை மீதும் மகேந்திரன் ஓவியங்களைத் தீட்டச் செய்தான் என்று கூறுவது அறிஞர்களிடையே விவாதத்திற்குரியதாக உள்ளது. அவற்றுள் அழிந்தன போக இன்று இருப்பவை நேர்த்தியானவை. முன்மண்டபத் தூண்களில் இருவர் நடனமாடும் நிலையில் உருவங்கள் அழகாகத் தீட்டப்பட்டுள்ளன.

வலது தூணில் காணப்படும் பெண்ணின் தலை வேலைப்பாடு கொண்டது. கூந்தல் நடுவில் பிரிக்கப்பட்டு தலைமீது முடியப் பட்டுள்ளது. அம் முடிப்புச் சில அணிகளாலும், பல நிற மலர்க் கொத்துகளாலும், தாமரை இலைகளாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளது.


இடதுபக்கமுள்ள ஓவியப் பெண்ணின் முடி முன்னதைவிடச் சிறிதளவு வேலைப்பாடு கொண்டது. இந் நடனமாதர்க்கு மூக்கணி ஏதும் இல்லை. பெண்மணிகள் மூக்குத்தி அணியும் வழக்கம் பண்டைக் காலத்தில் இல்லை போலும். இப் பெண்களை அப்சரஸ் என அழைக்கின்றனர். இவ் ஓவியங்கள் எவ்வாறு தீட்டப் பட்டன?

மேடு பள்ளம் இல்லாத சுவரில் ஒரு நெல் அளவிற்கு சுண்ணும்புச் சாந்து பூசப்பெற்று அதன்மீது ஈரம் காயும் முன்பு ஓவியக்காரன் மஞ்சட் கிழங்கைக் கொண்டு கோடுகளை வரைந்து பின்னர் பச்சிலைகளால் தயாரிக்கப்பட்ட மஞ்சள், வெள்ளை, நீலம், பச்சை, கருப்பு ஆகிய வண்ணங்களைப் பயன்படுத்தினர்.

பல்லவப் பெருவேந்தர்கள் குடைவித்த கற்கோயில்களில் மாமல்லபுரம் ஒன்றே சிறந்த பல்லவர் சிற்பக்கூடம் ஆகும். மண்டகப்பட்டில் செங்கல், சுண்ணும்பு, மரம், உலோகம் இவை ஏதும் இல்லாமல் மும்மூர்த்திகளுக்கு மகேந்திரன், கற்கோவில்களை அமைத்திருந்தான்.

கோவில்கள் : மாமல்லபுரத்தில் பல இடங்களிலும் பல் வேறு நிலைகளில் சிற்பங்களையும், கோவில்களையும் காண்கின்றோம். குடைவரைக் கோவில்களில் ஊரில் வடபுறத்தே இருப்பது மும்மூர்த்தி குகை என்ற கோவிலாகும். மும்மூர்த்தி குகையிலிருந்து பாறைகளின் இடையே கிழக்கு நோக்கிச்

சென்ருல் அங்குப் பாறையின் பகுதியில் யானைச் சிற்பம் ஒன்றினைக் காணலாம். அதன் அடியில் குட்டி யானை ஒன்று துதிக்கையை நீட்டிக் கொண்டு படுக்கும் காட்சி ஒப்பற்ற காட்சியாகும். அதன்மேலே ஒரு குரங்கு அமைந்திருக்கின்றது. அதன் அருகில் மயில் நீண்ட தோகையோடு அமர்ந்துள்ளது.



படம்—3
மாமல்லபுரத்து இரதம்

மும்மூர்த்தி குகையிலிருந்து மேற்கு நோக்கிச் சிறிது தூரம் சென்ருல் கொற்றவைக்கு என அமைக்கப்பட்ட குகைக்கோவில் ஒன்று இருப்பதைக் காணலாம். இதனைக் கோடிக்கல் மண்டபம் என அழைப்பர். அர்ச்சுனன் தவத்திலிருந்து தெற்கு நோக்கிச் சென்ருல் கல்வெட்டில் **அத்யந்த காம பல்லவச் சுரகிருஹம்** என அழைக்கப்படும் தர்மராஜ மண்டபம் குறிப்பிடத்தகுந்ததே. கலங்கரை விளக்கம் இருக்கும் திசையில் உள்ள இராமாநுச மண்டபம் சிறப்பான அம்சமுடைய குகைக்கோவில் ஆகும். வராகப்பெருமானின் சிற்பம் உள்ள வராகமண்டபம் எழில் மிகும் நான்கு சிற்பங்களைக் கொண்டது. மகிஷாசுரமர்த்தினி குகை உலகப் புகழ்பெற்ற கொற்றவையின் ஒப்பற்ற சிற்பத்தை உடையது.

அர்ச்சுனன் தவம் என்ற புகழ்வாய்ந்த பாறைச் சிற்பத்தை அடுத்துள்ள குடைவரைக் கோவிலானது மாமல்லபுரத்தில் குடையப்பட்ட கோவில்களில் எல்லாம் மிகப்பெரிய அமைப்பை உடையது. அர்ச்சுனன் தவம் என்று கூறப்படுவதை இக் கால வரலாற்றறிஞர்கள் மறுத்துரைக்கின்றனர். சிலர் இதனைக் கங்கைக்கரைக் காட்சி என்பர். திரு மயிலை சீனிவேங்கடசாமி இஃது அர்ச்சுனன் தவத்தையோ, கங்கைக் கரைக்காட்சியையோ குறிப்பது அன்று. இது சமணர் தொடர்புடைய ஒரு காட்சியே என்பார். அதில் காணப்படுபவை என்ன? ஆறு—அதன் நடுவில் நாகர் நீராடல்—பார்ப்பனன் நீர்க்குட த்தைச் சுமந்து செல்லல்—மான் ஒன்று நீர் அருந்த வருதல்—இரண்டு அன்னப் பறவைகள் நீராடவுள்ளல் — முனிவர்கள் தவம்செய்தல்—பூனை ஒன்று தவமியற்றல் — எலிகள் அதைக் கண்டு அஞ்சாமை ஆகியவையே ஆகும்.

ஹீராஸ் பாதிரியார் இக் காட்சிகள் அனைத்தும் மகாபாரதத்தில் வரும் உத்தியோகப் பருவத்துக் காட்சிகளே என்பார். ஒரே கல்லில் அத்தனை அழகு மிக்கக் காட்சிகளையும் வடித்துத் தந்த சிற்பி பாராட்டுதற்குரியவர். சிற்பியின் கற்பனை வளத்தை எடுத்துக் காட்டுபவையே அவை என லாம். பல்லவப் பெருவேந்தர்களின் கலைப்பணிகள் நூல் வடிவத்தில் அமைத்திடத்தக்க அளவிற்கு ஏராளமாக உள்ளன. கோனேரிப் பள்ளம் என்ற ஏரியின் எதிரில் குன்றின் மேற்புறம் உள்ள இரண்டு குகைகளும் குகைக் கோவில்களே ஆகும். மற்றுமுள்ள குகைக் கோவில்கள் புலிப்புதர் மண்டபம், கோனேரி மண்டபத்தின் அருகிலுள்ள மண்டபம், மகிஷாசுரன் குகை ஆகியவையே.

குகைக் கோவில்கள் குறித்த நம் ஆய்வினை நிறுத்திக் கொண்டு குகைகள் அல்லாத வகையில் கட்டப்பட்டுள்ள கோவில்களை இனிக் காண்போம்.

பஞ்சபாண்டவர் இரதங்கள் எனப்படும் குன்றன்ன கோவில்கள் குறிப்பிடத் தகுந்தவை. இவை **மலைத்தளிகள்** என்றும் **ஒற்றைக் கல்கோவில்கள்** என்றும் குறிப்பர். காண்பதற்கு இரதம்போல் தோன்றுவதால் இவற்றை **இரதம்** என மக்கள் அழைத்தனர். இங்கு **தர்மராஜ இரதம், பீம இரதம், அர்ச்சுனன் இரதம், திரௌபதி இரதம், சகாதேவ இரதம்** என்ற ஐந்து கோவில்களும், யானை, சிங்கம், எருது ஆகிய மூன்று விலங்குகளின் சிற்பங்களும் உள்ளன.

பஞ்ச பாண்டவர் இரதங்கள் என்று பாமரரால் இன்றும் கூறப் பட்டு வருபவை உண்மையில் கல் இரதங்களே. அவை தேர்கள் அல்ல. அவை ஒற்றைக்கல் கோவில்களாகும்.

தருமராசன் கோவில் (தேர்) என்பது மூன்று தட்டுக்களைக் கொண்ட மேற்பாகத்தை உடைய சிவன் கோவிலாகும். இதன் அடியில் சோமாஸ்கந்தச்சிலை செதுக்கப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சியே தஞ்சைப் பெரிய கோவிலும், கைலாசநாதர் கோவிலும் ஆகும் என்பர்.

சமயக்கலை வளர்ச்சி தென்னாட்டில் பரவியிருந்ததை பீமசேனர் கோவில் மெய்ப்பிக்கிறது என்பர். இக் கோவிலின் அமைப்பின் சாயலைத் தில்லையில் உள்ள ஆயிரக்கால் மண்டபத்தின் அமைப்பில் காணலாம்.

அர்ச்சுனன் தேர் எனப்படுவதும் சிவன் கோவிலே என்ற போதிலும் அது புத்தப்பள்ளி அமைப்பைப் போன்றது.

திரௌபதி கோவில் எனப்படுவது துர்க்கையின் சிலை அமைந்துள்ள துர்க்கையின் கோவில் ஆகும். இக் கோவில் அமைப்பு பண்டைச் சிறு கோவிலின் அமைப்பை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது.

சகாதேவன் கோவில் ஐகொலே என்னும் இடத்தில் உள்ள துர்க்கையின் கோவிலை நினைவுறுத்துகிறது. திருத்தணிகையில் உள்ள விமானம் இதன் அமைப்பிலே உருவாக்கப்பட்டது. இது பௌத்தர் சைத்தியத்தை ஒத்துக்காணப்படுகிறது. இக் கோவில்களின் முன்புறம் உள்ள நந்தி, சிங்கம், யானை என்பன இறை வடிவங்களின் ஊர்திகள் என்று கூறப்படுகின்றன.

மாமல்லபுரத்தில் குடைவரைக் கோவில்களையும், ஒற்றைக்கண் கோவில்களையும் தவிர; திறந்த வெளியில் பாறைச் சிற்பங்கள் பல வடிக்கப்பட்டுள்ளன. அர்ச்சுனன் தவம் அல்லது பகீரதன் தவம், குன்றைத்தாங்கிய கண்ணன் முதலிய காட்சிகளைச் சித்திரிக்கும் சிற்பங்கள் ஈடிணையற்றவை.

மாமல்லபுரத்தின் கிழக்கே கடல் அலைகள் கரையை வருடிச் செல்லும் இடத்தில் கட்டப்பட்ட கோவிலையே கடற்கரைக் கோவில் என்று அழைக்கின்றனர். கடற்கரைக் கோவில் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் வண்ணம் அமைந்துள்ளது. இக் கோவிலின் அழகு, காலை, மாலை, இரவு ஆகிய எல்லாப் பொழுது

களிலும் இனியதொரு தோற்றத்தினை அளிக்கின்றது. கடற் கரைக் கோவிலுக்குத் தெற்கே சற்றுத்தொலைவில் உள்ள பாறை களில், படுத்த நிலைகளிலும் அமர்ந்த நிலையிலும் சிங்கங்களும், யானைக் குகை போன்ற சிற்பமும் செதுக்கப்பட்டுள்ளன.

முகலிப்பா முடையார் கோவில், உழக்கு எண்ணெய் ஈச்சுரர் கோவில், தலையனப் பெருமாள் கோவில் ஆகியவையும், ஊருக்கு உட்புறத்தே எடுக்கப்பட்ட நாய்மார் அறுவர் கோவிலும், கங்கை கொண்டார் மண்டபமும், பாறையில் செதுக்கப்பட்டுள்ள எழில்மிகு பிள்ளையாரும், சிம்மக்கல்பட்டிலும் குறிப்பிடத் தகுந்தவையே.

பல்லவர்கள் புகழ்க் கொடியினை இன்றளவும் பரப்பி நிற் கின்ற மாமல்லபுரத்துக் கலைத்தேவியின் வடிவங்களைப் பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் கூறலாம். அவை முழுமையும் பற்றிக் கூறிட நூல் ஒன்றே போதாது.

இலக்கியப் பணி : அடுத்துப் பல்லவர்கள் இலக்கியத் துறையில் ஆற்றிய பணிகளைக் காண்போம்.

சுமார் 700 ஆண்டுகள் பல்லவர்களின் ஆட்சி நடைபெற் றது. இக் காலத்தில் சங்கக்காலத் தமிழில் இல்லாத அளவு வடமொழிக் கலப்பு தமிழ்மொழியில் ஏற்பட்டுவிட்டது. சங்க நூல் களுக்கும் சோழர்கால நூல்களுக்கும் உண்டான மொழி வேறுபாடு பல்லவர்காலத்தில் தான் உண்டாயிற்று. பல்லவர்கால இலக்கியம் தமிழ் இலக்கிய வரலாற்றின் சிறப்பு மிக்க இலக்கியங் களில் ஒன்றாகும்.

பல்லவர்கள் வடமொழியில் பட்டயங்கள் பல எடுத்து வைத் தனர். முதலாம் பரமேஸ்வர வர்மன் வெளியிட்ட கூரம் பட்டயம் **பெருவள்ளூர்ப்** போர்பற்றி நன்கு எடுத்து கூறுகிறது. பல்லவர் வரலாற்றைக் காசக்குடிப் பட்டயம் சிறந்த முறையில் எடுத்துக் காட்டுகிறது. மாமல்லபுரம் கல்வெட்டில் சிலேடைப் பொருட் கொண்ட சொற்றொடர்கள் காணப்படுகின்றன.

லோக விபாகம், கிராட்டார் ஜனியம், அவந்தி சுந்தரி கதை, மத்தவிலாசப் பிரகசணம், காவ்யாதர்சம் போன்ற வடமொழி நூல்கள் பல்லவர் அவைக்களத்தில் சிறந்த வடமொழிப்புலவர்கள் இருந்தனர் என்பதனை மெய்ப்பிக்கின்றன.

மகேந்திரவர்மன், இரண்டாம் நந்திவர்மன், மூன்றாம் நந்தி வர்மன் ஆகியோர் தமிழறிவு பெற்றுத் திகழ்ந்தனர் என்பதனைத்

தளவானூர்க் கல்வெட்டு, திருமங்கையாழ்வார் பாடல்கள், நந்திக்கலம்பகம் ஆகியவற்றின் வாயிலாக அறிகிறோம். பல்லவப் பேரரசுக் காலத்தில் யாப்பெருங்கல விருத்தி என்னும் நூலும், அந்நூலுக்கு உரையும் அதே காலத்தில் ஆனது.

திருமூலர் பாடிய திருமந்திரம், திருத்தொண்டர்த் தொகை, சேரமான் பெருமான் பாடிய திருஅந்தாதி முதலியன பல்லவர் காலத்தவை. நந்திக்கலம்பகம், பாரத வெண்பா ஆகியவையும், பல்லவர்காலத்து நூல்களே. ஆழ்வார்களில் திருமங்கையும், தொண்டரடிப் பொடியும் வாழ்ந்தது இக்காலமே. பல்லவப் பேரரசர்கள் அவையில் தமிழ்ப்புலவர்கள் பலர் இருந்திருக்க வேண்டும்.

புலவர்களைப் போல் மன்னர்களும், இலக்கியம் உருவாக்கும் பணியில் சிறப்புப் பெற்றிருந்தனர் என்பதற்கு மகேந்திரவர்மனே சான்று. நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தனின் காலமல்லவா இப் பல்லவர்காலம்! இக் காலத்தில் தமிழ் வளர்ச்சியைச் சொல்லவா வேண்டும்!

2. சோழர் வரலாறு


[ஆதாரங்கள் — பட்டயங்கள் — நினைவுச்சின்னங்கள் — இலக்கிய ஆதாரங்கள்— வரலாற்றுக்கு முற்பட்ட காலம் — சங்ககாலம் — கரிகாலன் முதல் விசயாலயன் வரை. பிற்காலச்சோழர்கள் — முதல் ஆதித்த சோழன் — முதல் பராந்தகன் — கண்டராதித்தன் — சுந்தரன் —முதலாம் ராசராசன் — முதலாம் ராசேந்திரன் — முதலாம் ராச ராசன் — இரண்டாம் ராசேந்திரன் வீர ராசேந்திரன் — ஆதி ராசேந்திரன் — முதலாம் குலோத்துங்க சோழன் — விக்கிரமசோழன் — இரண்டாம் இராசராசன் — இரண்டாம் இராசாதிராசன்—மூன்றும் குலோத்துங்கன் சோழர்கள் காலத்துச் சமூக, சமயப் பொருளாதார கலை வாழ்க்கை. சோழர்களின் ஆட்சி முறை — முடியாட்சி — ஆட்சிப் பிரிவுகள் — அரசர் மண்டலத் தலைவர் — கிராம சபைகள்—வருவாய் — செலவினங்கள் — படை தேர்தல் முறை — கிராம நிர்வாகம் — நீதி நிர்வாகம் — தானம் — அவைகள் — பெரிய கோயில் — அதன் வரலாற்றுச் சிறப்பு.

1. ஆதாரங்கள்

பழம்பெரும் அரசு : இந்தியாவின் பழம் பெரும் பேரரசுகளில் குறிப்பிடத்தகுந்தவற்றில் சோழப் பேரரசும் ஒன்றாகும். மகாபாரதத்திலும், மெகஸ்தனிஸின் குறிப்புகளிலும், அசோகரின் பட்டயங்களிலும் காத்யாயனரின் குறிப்புகளிலும், சோழர்களைப் பற்றிய செய்திகள் காணப்படுவதிலிருந்தே சோழர்களின் தொன்மையைப் பற்றி அறியலாம். இலங்கையைச் சேர்ந்த மகாவம்சம் என்னும் நூல் சோழமன்னர்களுக்கும் இலங்கை அரசர்களுக்கும் இடையே நிலவிய உறவினை விளக்குகிறது. நீதியின் உறைவிடமாய் நின்று நிலவிய சோழமன்னர்களைப் பற்றிய குறிப்புகள் சங்கத் தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. பெரிபுளூஸ் மூலம் சோழர்களின் துறைமுகங்கள் பற்றிய செய்திகளை அறிகிறோம்.

பட்டயங்கள்: இனிச் சோழர்களின் வரலாற்றை விளக்கும் ஆதாரங்கள் யாவை என்பதனைக் காண்போம். முதலாவதாகக் குறிப்பிடத்தக்க ஆதாரங்கள் பட்டயங்களே ஆகும். இப்

பட்டயங்கள் பின்வரும் சந்ததியினருக்கு அவர்களுக்கு முன்னே வாழ்ந்தவர்களின் பெருமையை விளக்கும்வகையில் அமைக்கப் பட்டவை. இப் பட்டயங்கள் இன்றைக்கு நமக்கு வரலாற்றினை



படம்—4

விளக்கும் ஆதாரங்களாக விளங்குகின்றன. இப் பட்டயங்கள் வரலாற்றுக் கண்ணோட்டத்திற்குத் துணை புரிபவைகளா,

அல்லவா என்பது குறித்து விவாதம் எழுந்துள்ளது. பட்டயங்களில் பொதுவாகக் காணப்படும் செய்தி கொடைகள் பற்றியதே யாகும். கோவில்களுக்கு வழங்கப்பட்ட நன்கொடைகளில் கோவில்களில் விளக்குகள் எரிப்பதற்கு வழங்கப்பட்ட மான்யங்கள் குறிப்பிடத் தகுந்தவை.

சோழர்களின் காலத்தில் கட்டப்பட்ட எண்ணிறந்த கோவில் சுவர்களில், தூண்களில், பிரகாரங்களில் பட்டயங்கள் செதுக்கி வைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். கற்களில் மட்டுமின்றி சுட்ட செங்கற்களிலும் எழுதி வைத்துள்ளனர். சூரிய மரபிலிருந்து வந்தவர்கள் என்று சோழ மரபினர் கூறிக்கொண்டதை அன்பில், கரந்தை ஆகிய செப்புப் பட்டயங்கள் விளக்குகின்றன. இப் பட்டயங்களில் வானநூல் குறிப்புக்கள் சில காணப்படுவதைக் கொண்டு சோழர்களின் காலவரலாற்றை அறிகிறோம். சோழர் களின் ஆட்சிமுறையினைக் குறித்த ஆய்விற்கு மிகமிக உறு துணையாக இருப்பவை பட்டயங்களே ஆகும். சோழர்களின் பட்டயங்கள் மட்டுமின்றி, இவர்தம் காலத்தே வாழ்ந்த அண்டை நாட்டு அரசர்களின் பட்டயங்களும் நமக்குப் பெரிதும் உதவுகின்றன.

நினைவுச் சின்னங்கள்: பட்டயங்கள் மட்டுமின்றிச் சோழர் கால நினைவுச் சின்னங்களும் வரலாற்றிற்குத் துணைபுரிபவை ஆகும். சோழர்களின் ஆலயங்கள் மிகவும் சிறப்பான முறையில் அரசின் கண்காணிப்பின் கீழ் இருந்தன. ஆனால் இன்று அவை சீரழிந்து கிடக்கின்றன. இருப்பினும் நிற்கின்ற சில ஆலயங்கள் சோழர்களைப் பற்றிய நெஞ்சைவிட்டகலாத நினைவுகளைப் பறை சாற்றுகின்றன. சோழர்கள் வெளியிட்ட தங்கம், வெள்ளி, செப்பு நாணயங்களும் சான்றுகளாக உள்ளன.

இலக்கிய ஆதாரங்கள்: இலக்கிய ஆதாரங்களில் சங்க இலக்கியங்கள்,சேக்கிழார் பாடிய பெரிய புராணம், வைணவ சமய நூற்களான திவ்விய சூரிசரிதம், குரு பரம்பரை ஆகியவையும், புத்தமித்திரரின் வீரசோழியமும், ஜெயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணி, உலா நூல்கள், குலோத்துங்க பிள்ளைத் தமிழ் ஆகியவையும் துணைபுரிபவைகளே ஆகும்.

பெயர்க்காரணம்: சோழர் என்ற பெயர் எவ்வாறு வந்தது என்பதற்குக் காரணங்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. சீருடனும், சிறப்புடனும் தொன்று தொட்டுத் தமிழ் மண்ணின் ஒரு பகுதியை ஆண்ட மன்னர்குலத்தினைக் குறிக்கும் குடிப் பெயர் என்றே அறிஞர்கள் கருதுகின்றனர். சோழர் என்ற

பெயர் தவிர இவர்களுடைய குலத்தினைக் குறிக்கச் **செம்பியன்**, **வளவன்** முதலிய பெயர்களும் வழக்கில் இருந்து வருகின்றன.

குலமுறை : காவிரியை மையமாகக் கொண்டு விளங்கிய காரணத்தால் **'காவிரி வளநாடர்'** என்றும் இவர்களைக் கூறுவர். சோழர்களுடைய குல முறையை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கூறலாம்.

1. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள்.

2. சங்க காலத்தில் வாழ்ந்தவர்கள்.

3. பிற்கால சோழர்கள்—அதாவது விஜயாலயன் காலம் முதல் வாழ்ந்தவர்கள்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம்; 'இராஜ பாரம்பர்யம்' என்ற தலைப்பில் கலிங்கத்துப் பரணி சோழப் பேரரசர்களின் குல முறையைக் கூறுகிறது. அதுபோன்றே விக்கிரம சோழன் உலா, இராஜராஜன் உலா, குலோத்துங்க சோழன் உலா ஆகிய நூட்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது ஈண்டு குறிப்பிடத் தக்கது.

சோழர்கள் தம்மைத் திருமாலின் மரபினர் என்று கூறிக் கொண்டனர். திருமாலின் உந்திக் கமலத்து திசைமுகன் தோன்றி **மரீசி** என்பாளைத் தோற்றுவித்தார். அவளது மைந்தன் கதிரோனுகிய **ஆதித்தனைத்** தோற்றுவிக்கவே தொடர்ந்தது சோழர் குலம் என்பர். **ஆதித்தன்** மகனே **மனுநீதிச் சோழன்** என்பர். மனுநீதிச் சோழன் மகனை **இஷ்வாகு** என்பவனுக்குப் பின்னர் **மாந்தாதா** என்பவன் ஆட்சிக்கு வந்தான். இம் மன்ன வனுக்கு அடுத்து **இந்திர விமானம் ஊர்ந்த சோழன், முசுகுந்த சக்கரவர்த்தி, சிபிச்சக்கரவர்த்தி, காகுத்தர், தசரதன், இராமன், செம்பியன், சுரகுரு(நாபாகன்),தூங்கெயில்எறிந்த தொடிதோட் செம்பியன், சமுத்திரஜித், சிஹகன்** இப்படிப் பலர் ஆண்டனர் என்று கூறுகின்றனர். இவர்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் புராணக் கதைகளோடு பொருத்திப் பேசப்படுவ தால் எது கதை, எது வரலாறு என்று கூற இயலாதபடி ஒன்றோ டொன்று பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன.

சங்ககாலம்: சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சோழ மன்னர்களில் யார் முன் ஆண்டனர், யார் பின் ஆண்ட னர் என்பதிலே கருத்து வேறுபாடுகள் உண்டு. சங்க காலச் சோழர்களில் **கரிகாலன், பெருநற்கிள்ளி, கோச்செங்கணான், கோப்பெருஞ்சோழன், நலங்கிள்ளி** முதலியோர் சிறந்தவராவர்.

கரிகாலன்: சங்ககாலச் சோழர்களில் மிகவும் சிறந்த கரிகால் பெருவளத்தான் இளஞ்சேட் சென்னி என்பவரின் புதல்வர், கரிகாலன் என்று பெயர் பெற்றதற்குக் காரணங்கள் பல கூறுவர். அவற்றில் ஒன்று சிறுவனாக இருக்கும்போது பகைவர்களால் சிறையில் அடைக்கப்பட்டு அதிலிருந்து தப்பி வெளியேறும்போது கால்கள் கருகியதால் கரிகாலன் என்ற பெயரைப் பெற்றான் என்று கூறுவர்.

தஞ்சையிலிருந்து பதினைந்து கல் தொலைவிலிருக்கும் வெண்ணிப் பறந்தலை என்னுமிடத்தில் பாண்டியர்களையும் சேரனையும், அவருடன் வந்த பதினேரு வேளிர்களையும் தோற்கடித்துப் பெரும் வெற்றிகண்டதாகக் கூறப்படுகிறது. இப் போரில் தோற்ற சேரமன்னன் நெடுஞ்சேரலாதன் வடக்கிருந்து உயிர் துறந்ததாகக் கூறப்படுகிறது. ஒன்பது வேளிர்களைக் கரிகாலன் வாகைப்பறந்தலை என்னுமிடத்தில் தோற்கடித்ததாகப் பரணர் கூறுகிறார். கரிகாலனால் **ஒளியர், அருவாளர், வடவர், குடவர், பாண்டியர்** முதலியோர் அழிக்கப் பட்ட செய்தியைப் பட்டினப்பாலை உரைக்கின்றது.

காவிரிப்பூம்பட்டினம் சிறந்த துறைமுகமாகவும், உறையூர் தலைநகராகவும் விளங்கின. தமிழகத்திற்கும்மேலை நாடுகளுக்கும் இக் காலத்தே வாணிகத் தொடர்பு சிறந்திருந்தது. காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணை அமைத்து காவிரியாற்றுக்குக் கரை எழுப்பியமையால் **'பொன்னிக் கரைக்கண்ட பூபதி'** என்று கரிகாலன் புகழப்பட்டான் என்பர்.

நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, கோப்பெருஞ் சோழன் ஆகியோருக்குப் பின்னர் வந்தவர்களில் கோச் செங்கணான் சிறந்த சிவபக்தனாகவும், கல்வியைப் போற்றுவதில் ஈடு இணையற்றவனாகவும் திகழ்ந்தார். இவர் வெண்ணி, அழுந்தை முதலிய இடங்களில் பகைவரைப் புறமுதுகிட்டு ஓட வைத்தார். **'எண்தோள் ஈசர்க்கு எழில் மாடம் எழுபது செய்துலகம் ஆண்ட செங்கணான் கோச் சோழன்'** என்று புகழப்பெற்றார். அப்பர் பெருமானால் போற்றப்படும் பேறு பெற்றவர் இவர். **கணைக்காலிரும்பொறை** என்று சிறைப் பட்டுக் கிடந்த சேர மன்னனைப் **பொய்கையார்** என்ற புலவரின் புலமையைப் போற்றும் பொருட்டு விடுவித்தார். கோச்செங்கண்ணனுக்குப் பின்னர் ஆண்ட சோழ மன்னர்களைக் குறித்த விவரங்கள் கிடைக்க வில்லை.

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் இருந்தவராகக் கருதப்படும் குமாரங்குசன் சோழ மரபினனுயிருத்தல் வேண்டும் என்று கருதப்படுகிறது. பல்லாண்டுகளாகத் தாழ்ந்த நிலையில் புகழ் குன்றிக்கிடந்த சோழப்பேரரசை மீண்டும் நிறுவி அதனை உயர்நிலைக்குக் கொண்டு வந்த பெருமை விசயாலயச் சோழனுக்கே உரியதாகும். சோழமண்டலத்தில் முடி சூட்டி ஆட்சி புரிந்த சோழர்கள் எல்லோரும் **இராகேசரி, பரகேசரி** என்னும் பட்டங்களைச் சூடிக்கொண்டதற்கேற்ப விஜயாலயச் சோழனும் பரகேசரி என்ற பட்டத்தை சூடியதாக அறிகிறோம். இவர் முப்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்திருக்கக்கூடும்.

விஜயாலயன் தஞ்சை மராகரில் துர்க்கைக்கு கோவில் எடுத்த செய்தியினைத் திருவேலங்காட்டுச் செப்பேடுகள் உணர்த்து கின்றன. இவ் வேந்தன் நிகழ்த்திய போர்கள் பலவாகும். சோழர் தம் நிலையில் தாழ்ந்து குறுநில மன்னராயிருந்த காலத்தில் விழுப்புண் பலபெற்று வெற்றி எய்திய வேந்தன் முதல்ஆதித்த சோழனின் தந்தையும், பிற்காலச் சோழ அரசுக்கு அடிக்கல் நாட்டிய மன்னனும் விஜயாலயச் சோழனே.

கி. பி. 854 ஆம் ஆண்டில் பாண்டியர்களுக்கும் பல்லவர் களுக்கும் குடமூக்கில் (கும்பகோணம்) போர் ஒன்று நடைபெற்றச் செய்தியைச் சின்னமனூர்ச் செப்பேடுகள் வரைகின்றன. போரில் பல்லவரோடு சேர்ந்து சோழர் போரிட்டனர்.

சங்க காலத்திற்குப் பின்னர் சோழர்களின் முன்னேற்றச் சிறப்பில் தடங்கல் ஒன்று ஏற்பட்டது. சோழநாடு களப்பிரர் வசமாயிற்று என்று அறிகிறோம். காவிரிப்பூம் பட்டணத்தில் இருந்த **புத்தத்தர்** என்ற பௌத்த துறவி, எழுதிய **'விநய வினிச்சயம்' 'புத்தவம் சாத்தகதா'** முதலிய நூல்களில் சோழமண்டலத்தை அச்சுத விக்காந்தன் என்ற களப்பிர மன்னன் ஆண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மைசூர்ப் பிரதேசத்தில் இருந்து தம்புகத்தை கடந்த ஒரு குறு நில மன்னர் குடியைச் சேர்ந்தவர்களே களப்பிரர்கள் எனவும் சோழநாட்டைக் கைப்பற்றி அங்குத் தங்கள் ஆட்சியை அவர்கள் ஏற்படுத்தி யிருக்கவேண்டும் என்றும் கூறப்படுகிறது. விசயாலயச் சோழனின் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னர் இருநூறு ஆண்டுகள் தஞ்சைப் பகுதியை ஆண்டுவந்த முத்தரையர்களே களப்பிரர் எனக் கூறுவர். கி. பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டுவரை முத்தரையர்கள் தஞ்சையை ஆண்டனர். இவர்கள் பல்லவர்கட்கும் பாண்டியர்கட்கும் இடையே ஆட்சி நடத்தினர்.

3. பிற்காலச் சோழர்கள்

கி. பி. 850இல் ஒரு மாபெரும் பேரரசைத் தோற்றுவித்த பெருமைக்குரிய மாமன்னர் விசயாலயன் ஆவார். இவர்தம் தலைநகர் உறையூரே ஆகும். விசயாலயன் தஞ்சைத் தரணியுடன் தமர் செய்து முத்தரையர்களை ஆதிக்க மிழக்கச்செய்தமையால் முத்தரையர்களின் ஆதிக்கம் ஒடுங்கிற்று. விசயாலயனின் முதுமைக் காலத்தில் சோழர், பல்லவர், கங்கர் ஆகிய மூவேந்தரும் ஒன்று சேர்ந்து திரும்புறம்பயம் என்னுமிடத்தில் நடைபெற்ற பெரும்போரில் வென்றனர். பல்லவர் ஆட்சியும் பாண்டிய ஆட்சியும், ஒழிதற்கு இப்போர் வழி வகுத்துக் கொடுத்தது. புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள நார்த்தாமலை என்ற ஊருக்குத் தென்மேற்கேயுள்ள ஒரு குன்றின் மேல் உள்ள விசயாலய சோழீச்சுரம் என்ற கற்றளி (கோவில்) விசயாலயன் எடுப்பித்த கோயிலாக இருத்தல் வேண்டும். கி. பி. 881ஆம் ஆண்டு விசயாலயன் உயிர்துறக்கப் பத்து ஆண்டுகளுக்கு முன் இளவரசுப்பட்டம் கட்டப்பட்ட ஆதித்த சோழன் ஆட்சிக்கு வந்தான்.

முதல் ஆதித்த சோழன்—கி. பி. 871-907 முதல் ஆதித்த சோழன் இராசகேசரி என்ற பட்டம் கொண்டு அரசாண்டான். இவனுக்குக் கோதண்டராமன் என்ற மற்றொரு பெயரும் உண்டு. ஆதித்தன் தன்னுடைய படைவலிமையையும் துணைவலிமையையும் பெருக்கிக் கொண்டு பல்லவ அரசனுகிய அபராஜிதன் மீதே போர் தொடுத்து அவனைக் கொன்றமையால் இதுவரை சிற்றரசாகத்திகழ்ந்த சோழ அரசு இப்போது தனி அரசாகத் தலை தூக்கியது. ஆதித்தன் விரைவில் தொண்டை மண்டலத்தை வென்று சோழப் பேரரசை உண்டாக்கினான். கொங்கு மண்டலத்தையும் வென்று அதைச் சோழப் பேரரசுடன் சேர்த்தான். வடக்கே காளத்தியிலிருந்து வெள்ளாறு வரை கொங்கு மண்டலம் உட்பட ஒரு குடைக்கீழ் சோழப் பேரரசு தோற்றுவிக்கப் பட்டது. பல்லவ இளவரசி கூடு வெட்டிகள் (திரிபுவனமா தேவி) என்பவளை மணந்தான். இராஷ்டிரகூட மன்னன் இரண்டாம் கிருஷ்ணனுடைய மகள் இளங்கோ பிச்சி இவன் பட்டத்தரசியாக விளங்கினாள்.

–இளங்கோப் பிச்சி திருமழபாடியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு நந்தா விளக்கு வைத்தனள். திரிபுவனமாதேவி திருப்பூந்துருத்தி திருச் சோற்றுத்துறை என்ற ஊர்களிலுள்ள சிவன் கோவில்களில் நந்தா விளக்குகள் வைத்து அவற்றிற்கு நிவந்தனமாகப் பொன்னும் கொடுத்துள்ளனள்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஐயன்பேட்டைக்கு அருகிலுள்ள இராசகிரி என்ற ஊர் இவ் வேந்தன் பெயரால் இராசகேசரிச் சதுர்வேதி மங்கலம் என்று அக் காலத்தில் வழங்கப் பெற்று வந்தது.

சைவத் திருமுறைகளுள் முதல் ஏழும் தொகுத்த **நம்பி ஆண்டார் நம்பி** இம் மன்னனது ஆட்சியின் இறுதிக் காலத்தில் வாழ்ந்தவர் என்பது அவர் பாடிய திருத்தொண்டர் திரு அந்தாதியினுல் நன்கு விளங்கும். இவ் ஆதித்த சோழன் காவிரி ஆற்றின் இரு மருங்கும் பல சிவாலயங்களைக் கற்றளிகளாக எழுப்பித்தான் என்று அன்பில் செப்பேடுகள் புகழ்ந்து கூறுகின்றன. சித்தூர் மாவட்டத்தில் திருக்காளத்திக்கு அண்மையிலுள்ள தொண்டைமான் பேராற்றூரில் கி. பி. 907 ஆம் ஆண்டில் ஆதித்தன் இறந்தனன் என்று தெரிகிறது. இவனுடைய புதல்வனுகிய முதல் பராந்தக சோழன் தன் தந்தையை நினைவு கூர்தல் பொருட்டுப் பள்ளிப்படை எனப்படும் சமாதிக் கோயில் ஒன்றினைக் கட்டினன்.

முதல் பராந்தக சோழன் கி. பி. 907-953 ஆதித்தனுடைய திரு மனைவியருள் பராந்தகன் யாருடைய மகன் என்பது தெரியவில்லை. கி. பி. 907இல் திருக்காளத்தி வரையில் தொண்டை மண்டலம், கொங்கு நாடும் இவன் ஆளுகைக்கு உட்பட்டிருந்தன. இவனை **மதுரை கொண்ட கோப்பர கேசரிவர்மன்** என்று கூறுகின்றபடியால் இவன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்று மதுரையைக் கைப்பற்றியிருத்தல் வேண்டும். பராந்தக சோழன் காளடைவில் பாண்டிய நாடு முழுவதையும் தன் ஆட்சிக்கு உட்படுத்தினன். மதுரையில் முடி சூட்டுவிழா நிகழ்த்துவதற்கு முயன்ற போது பாண்டியர்க்குரிய முடியும், பிற அரசச் சின்னங்கள் முன்னர் ஆட்சி செய்த இராசசிம்மப் பாண்டியனுல் இலங்கைக்குக் கொண்டு போகப்பட்டன என்ற செய்தி அறிந்து அவற்றை வாங்கி வருமாறு சில தூதர்களை அங்கு அனுப்பினன். இலங்கை அரசன் அவற்றைக் கொடுக்க மறுக்கவே பராந்தகனுல் ஈழப் படையெடுப்பு மேற் கொள்ளப்பட்டது.

பராந்தகன் பாண்டி நாட்டையும் ஈழ நாட்டையும் வென்ற செய்தி கலிங்கத்துப்பரணியிலும் குலோத்துங்க சோழன் உலாவிலும், இராசராச சோழன் உலாவிலும் சொல்லப்பட்டுள்ளது. பல்லவர் ஆட்சியின் போது அவர்கட்குத் திறை செலுத்திக் கொண்டு குறுநில மன்னர்களாக இருந்த ஆதித்த சோழன் காலத்தில் தனியரசு செலுத்திய வாணர்குலவேந்தர்களாகிய இரண்டாம் விசயாதித்தனும் அவன் மகன் இரண்டாம் விக்கிர

மாதித்தனும் தோற்கடிக்கப்பட்டனர். சங்கிராமராகவன், இருமடி சோழன் என்பவை இவ் வேந்தனின் இரு வேறு பெயர்கள்.

பராந்தகனுக்கு தேவிமார் பலர் இருந்தனர். பராந்தகனுடைய பெயர் ஒவ்வொன்றிற்கும் ஒரு காரணம் கூறப்படுகிறது.

கண்டராதித்த சோழன் கி. பி. 950-757 பராந்தகன் இறந்த பின்னர் அவனது இரண்டாவது மகன் கண்டராதித்த சோழ தேவர் அரியணை ஏறினான். இக் காலத்தில் தெற்கே பாண்டியர்கள் தொல்லை கொடுத்து வந்தனர். செங்கற்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு ஆகிய பகுதிகள் இராட்டிர கூடரின் வசம் இருந்தன. இவற்றை மீட்க கண்டராதித்த சோழன் போர் முரசு கொட்டியும் எளிதில் இப் பகுதிகளை மீட்க முடியவில்லை. இவனுக்கு **மேற்கெழுந்திய தேவர்** என்ற பெயர் காணப்படுகிறது. மேற்குத் திசையிலே சோழப் பேரரசை மீட்கும் செயலில் இவர் இருந்திருக்கக் கூடும் என்பதனை இப் பெயர் செப்புகிறது. கண்டராதித்தன் சிறந்த வீரன். தில்லைப் பெருமானிடத்துப் பக்தி கொண்டவன். தில்லைப் பெருமான் மீது திருவிசைப்பா பாடியுள்ளான். இவனது சைவ நெறித் தொண்டு வீரத்துக்கும் மேம்பட்டது. இவன் இறக்கும் போது மதுராந்தகச் சோழன் என்ற இவன் மகன் சிறுவனாக இருந்தான். மதுராந்தகன் இளையோனாக இருந்தமையால் அரிஞ்சயன் அரியணை ஏறினான். இவனும் சோழ அரசின் வடபகுதியை மீட்கும் பணியில் ஆற்றூர் என்ற இடத்தில் இறந்தான். எனவே, 'ஆற்றூர்த் துஞ்சிய தேவன்' என்ற பெயர் இவருக்குக் காணப்படுகிறது.

சுந்தர சோழன் அரிஞ்சய தேவருக்கும் கல்யாணி என்ற மாதேவியாரிடத்துப் பிறந்த சுந்தர சோழன் அடுத்துப் பட்டத்திற்கு வந்தான். பராந்தகன் என்ற பெயரும் இவனுக்கு உண்டு. சுந்தர சோழ பராந்தகன் பட்டத்துக்கு வந்ததும் பாண்டியனை அடக்கத் தென்திசை நோக்கிப் படை எடுத்தபோது அவனது தலையகன் ஆதித்த கரிகாலன் என்பவன் உறுதுணையாக நின்றான். சேலூர் என்ற இடத்தில் நடந்தபோரில் பாண்டிய வேந்தன் வீரபாண்டியன் தோற்றான். மதுரை முதலில் கைப்பற்றப்பட்டதால் சுந்தர சோழன் **'மதுரை கொண்ட இராஜகேசரி'** என்ற பட்டம் பூண்டான். ஆதித்தன் **'வீரபாண்டியன் தலை கொண்டான்'** என்றபெயர் கொண்டான். இப்போரில் வீர பாண்டியனுக்கு உதவியாக வந்த சேரப்படையும் தோற்றது.

சுந்தர சோழன் வடாற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களை இராட்டிரகூடரிடமிருந்து மீட்டான் இவனுடைய முயற்சியால் சோழப் பேரரசு மீண்டும் விரிவடைந்தது. சுந்தர சோழனுடைய ஆட்சி மிகவும் சிறந்து திகழ்ந்தமையால் மனுச் சக்கரவர்த்தியே உலகில் மீண்டும் தோன்றியுள்ளார் என்று எல்லோரும் பாராட்டினர்.

சுந்தர சோழனின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் திடுக் கிடத்தக்க நிகழ்ச்சி ஒன்று நடந்தது. இவன் முதல் மகனும் பெருவீரனுமாகிய ஆதித்த கரிகாலன் கி. பி. 969 ஆம் ஆண்டில் சோழ நாட்டில் சில வஞ்சகர்களால் கொல்லப்பட்டான். கண்டராதித்த சோழன் புதல்வனுகிய உத்தம சோழன்தான் அரசு கட்டில் ஏறும் பொருட்டு சூழ்ச்சி ஒன்று செய்து அவனைக் கொல்வித்திருக்கக்கூடும் என்று சிலர் கருதுகின்றனர்.

இக் கருத்து ஏற்புடைத்தன்று. உட்பகை கொண்டிருந்த அரசாங்க அதிகாரிகள் வஞ்சகமாகக் கொன்றனரே தவிர உத்தம சோழனுக்கு இதில் சிறிதும் தொடர்பில்லை என்று திரு சதாசிவ பண்டாரத்தார் கருதுகின்றார். தன் மகன் இறந்த அதிர்ச்சியில் சுந்தர சோழன் இரண்டொரு தினங்களில் இறக்க நேரிட்டது. ஆதித்த கரிகாலனை இழந்தமையால் ஆற்றொணாத் துன்பத்தில் ஆழ்ந்து அவ் வாண்டிலேயே காஞ்சி மாநகரில் இருந்த பொன் மாளிகையில் உயிர் துறந்தமையால் பொன் மாளிகைத் துஞ்சின தேவன் என்று சில கல்வெட்டுக்கள் குறிக்கின்றன, திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் இருந்து அரசியும் உடன்கட்டை ஏறினாள் எனத் தெரிகிறது.

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள உலகபுரம் என்ற ஊரில் சுந்தர சோழப் பெரும்பள்ளி என்னும் புத்த கோயில் ஒன்றும் எண்ணாயிரம் என்ற ஊரில் சுந்தர சோழ விண்ணகர் என்ற திருமால் கோயில் ஒன்றும், பிரம்ம தேசம் என்ற ஊரில் உள்ள சுந்தர சோழபேரேரி என்னும் ஏரி ஒன்றும், சுந்தர சோழபுரம் என்னும் காடும் இவ் வேந்தன் ஆட்சிக் காலத்தில் அமைக்கப் பட்டன. மக்கட்குப் பல்வகை நலங்களும் புரிந்து புகழுடன் செங்கோல் செலுத்தி வந்த மன்னர் இவனே ஆவான்.

இம் மன்னர்மன்னன் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தான். இவன் சமயப் பொறையுடையவராகச் பலவகைச் சமயங்களையும் போற்றிவந்தான். பூண்ட பெருங்குல வேந்தரிடை வாழ்ந்து வந்தான்.

உத்தம சோழன் கி. பி. 970-985 : சுந்தர சோழனுக்குப் பின்னர் அவர் மகன் முதல் இராசராச சோழன் பட்டம் பெற்று அரசாள வேண்டுமென்று மக்கள் விரும்பினாலும் இராசராசன் தன் பெரிய பாட்டன் புதல்வனும் தனக்குச் சிறிய தந்தையுமாகிய உத்தம சோழனது உரிமையையும் விருப்பத்தையும் மதித்து இவனுக்குச் சோழ நாட்டின் ஆட்சியைக் கொடுத்தான். இவனைக் **கோப்பர கேசரிவர்மன் ஸ்ரீ உத்தம சோழ தேவர்** என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

உத்தம சோழனுக்குப் பல மனைவியர் இருந்தனர் என்பது செம்பியன் மாதேவி என்னும் ஊரில் காணப்படும் கல்வெட்டுக்களால் அறியப்படுகிறது. நாட்டில் அமைதி நிலவ நல்லாட்சி நடத்தி வந்த உத்தம சோழன் கி. பி. 985 ஆம் ஆண்டில் இறந்தான். உத்தம சோழனின் அன்னையாகிய செம்பியன் மாதேவியின் சமயத் தொண்டு குறிப்பிடத்தக்கது.

விருத்தாசலம், திருக்கோடிகா, தென் குரங்காடு துறை, செம்பியன் மாதேவி, திருவாரூர், அறகெறி, திருந்துருத்தி, ஆநாங்கூர், திருமணஞ்சேரி, திருவக்கரை என்னும் ஊர்களிலுள்ள சிவாலயங்கள் செம்பியன் மாதேவி கற்றளிகளாக அமைத்த ஆலயங்களாகும்.

4. முதலாம் இராசராச சோழன் கி. பி. 985-1015

சிறப்புப் பெயர்கள்: வடக்கே கர்மதைக் கரையிலிருந்து தெற்கே ஈழம் வரை ஒரு குடைக் கீழாண்ட தனிப்பெரும் தமிழ்ச் செல்வன் இராசராசன். இவன் தமிழ் இலக்கியத்துக்கும், சமயத்துக்கும் கலைக்கும் செய்துள்ள பணிக்கு ஈடு இணையே இல்லை என்று கூறலாம்.

அருண்மொழி, அபயகுலசேகரன், அரிதூர்க்கலங்கன், அழகிய சோழன், இரணமுகபீமன், இரவிகுல மாணிக்கன், இரவிவம்ச சிகாமணி, இராச சர்வஞ்ஞன், இராச கண்டிபன், இராச மார்த்தாண்டன், இராசேந்திர சிம்மன், உத்தம சோழன், கேரளாந்தகன், சத்ரு புஜங்கன், சண்ட பராக்கிரமன், சிங்களாந்தகன், சிவபக்த சோழன், சோழ மார்த்தாண்டன், சோழர்குல சுந்தரன், சோழேந்திர சிம்மன், திருமுறைகண்ட சோழன், தெலிங்க குல காவலன், நிகரிலி சோழன், நித்திய வினோதன், பண்டித சோழன், பாண்டிய குலாசனி, பெரிய பெருமாள், மும்முடிச் சோழன், மூர்த்த விக்ரமாபரணன்,

ஜனநாதன், செயங்கொண்ட சோழன், ஷத்திரிய சிகாமணி ஆகிய பெயர்கள் எல்லாம் இராசராசசோழனுக்கிருந்த மாற்றுப் பெயர்கள்.



படம் 4A
இராசராச சோழன்

மனைவிகள்: இராசராச சோழனுக்கு மனைவிமார் ஒன்பதின்மர். இவர்களில் லோகமாதேவி என்பவளே இராசராசனின் பட்டத்து அரசியாகத் திகழ்ந்தாள். இவ்வம்மையாருக்கு **தந்தி சக்தி விடங்கி** என்ற இயற்பெயரும் இருந்தது. **இராசேந்திர சோழன்** என்ற மகனும், **மாதேவடிகள், குந்தவை** என இரு பெண்களும் இருந்தனர்.

முடிசூட்டு விழா: மதுராந்தக சோழன் கி.பி. 985இல் இறந்தவுடன் அருண்மொழிவர்மன் அரியணை ஏறினான். அந்நாள் மாபெரும் விழாவாக மக்களால் கொண்டாடப்பட்டது. நாடும், ஊரும் ஒரே களிப்பில் மூழ்கி விழாக்கோலம் பூண்டிருந்தன. அருண்மொழிவர்மன் தன் முடிசூட்டு விழாவின் போது இராசராசன் என்றபெயரை ஏற்றிருக்க வேண்டும்.

சதயநாள் விழா: இவன் எடுப்பித்த தஞ்சை, இராசராசேச்சுரத்திலும் இவன் பட்டத்தரசி கட்டுவித்த உலோக மாதேவீச்சுரத்திலும் திங்கள் தோறும் சதய நாளில் சிறப்பாக விழா நடைபெறுவதற்கு நிவந்தங்கள் விடப்பட்டிருப்பதால் இவன் சதய நன்னாளில் பிறந்தவன் என்பது புலப்படுகிறது. கலிங்கத்துப் பரணி **'சதயநாள் விழா உதியர் மண்டலந்தன்னில் வைத்தவன்'** என்று புகழ்ந்து கூறுகிறது.

இவ் வேந்தன் கேரள நாட்டிலுள்ள முட்டம் என்னும் ஊருக்கு **மும்முடிச்சோழ நல்லூர்** எனப் பெயரிட்டு அங்குள்ள

கோவில் ஒன்றுக்கு இறையிலியாக அளித்துத் தான் பிறந்த ஐப்பசித் திங்கள் சதய நாளில் விழா நடத்துமாறு ஏற்பாடு செய்துள்ளமையாலும் இவன் ஐப்பசி மாதம் சதய நாளில் பிறந்தவன் என்பது அறியப்படுகிறது.

பெயர்க்காரணம் : இம் மன்னவனுக்கு இராசராசன் என்று பெயர் வழங்கப் பெற்றதற்குக் காரணங்கள் பல கூறுகின்றனர். சிதம்பரத்தில் திருப்பணிகள் பல செய்தமையால் அங்குள்ள அந்தணர் இராசராசன் என்று பட்டம் வழங்கினர் என்று சிலர் கூறுவர். இவ் வேந்தன் பெற்ற வெற்றிச் சிறப்புக்களினாலே தான் இராசராசன் என்னும் பெயரை எய்தினன் என்று திரு. சதாசிவ பண்டாரத்தார் கருதுகின்றார்.


இளமைக் காலம்: இராசராச சோழனை இளமையில் வளர்த்தவர்கள் பாட்டனாகிய முதல் கண்டராதித்த சோழனின் மனைவி செம்பியன் மாதேவியும், இவன் தமக்கையாகிய குந்தவைப் பிராட்டியும் ஆவர். சிவ பக்தியும், சமயப் பொறையும் முதலான உயர் குணங்களும் ஒருங்கே அமையப் பெற்றவர்களின் அன்பு கலந்த அறிவுரைகளைக் கேட்டு வளர்ந்தமையே சமயப் பொறை உடையவனாய் இராசராசன் வாழ்ந்து வந்தமைக்குக் காரணமாகும்.

மெய்க்கீர்த்தி: தன் ஆட்சியில் நிகழ்ந்த வரலாற்றுண்மைகளை நன்கு விளக்கும் மெய்க்கீர்த்தியை இனிய தமிழ் மொழியில் அகவற்பாவில் அமைத்துத் தன் கல்வெட்டுக்களின் தொடக்கத்தில் பொறிக்கும் வழக்கத்தை மேற்கொண்டவன் இராசராச சோழனே. இம் மெய்க் கீர்த்திகள் எல்லாம் ஆண்டு தோறும் அவை நிகழ்ந்த முறையில் நிரல் படவைத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. இனி இராசராச சோழனது மெய்க்கீர்த்தியின் துணை கொண்டு இவன் ஆட்சிக் காலத்தில் கிடைபெற்ற போர் நிகழ்ச்சிகளையும் இவனது வெற்றிச் சிறப்பையும் காண்போம்.

சாலைக் கலமறுத்தருளிய செயல் : இராசராசன் பெற்ற வெற்றிகளில் காந்தளூர்ச்சாலையில் பெற்ற வெற்றி சிறப்பித்துப் பேசப்படுகிறது. சாந்தளூர்ச்சாலை என்பது திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியாகும். இங்குச் சேரமன்னனுடைய பெரும் கப்பற் படை இருந்தது என்றும், அங்குள்ள மரக்கலங்களை அழித்துச் சேரமன்னனுடைய பலத்தை ஒடுக்கினன் என்றும் கூறுவர். காந்தளூர்ச்சாலை என்பது படைக்கருவூலமாக இருந்திருக்க வேண்டும். அரும்படைக் கலங்கள் பலப்பல நிரம்பிக் கிடந்த அச்சாலையில் உள்ள படைக்கலங்களை அழித்தான் எனக்

கொள்வதே பொருத்தமாக இருக்கும் எனவும் சொல்வர். சேர நாட்டில் அப்போது ஆட்சி புரிந்தவன் **பாற்கர ரவிவர்மன்** என்பவன், இப் போருக்கான காரணம் சேரநாட்டுக்கு அனுப்பப் பட்ட தூதன் அவமதிக்கப்பட்டதேயாகும். எனவே போர் செய்து வென்ற நாளில் தாம் பிறந்த நாள் வரவே சேர நாட்டி லேயே அதனைச் சிறப்புற நடத்தினான். சேர நாட்டை வெற்றி கண்டதற்கு அறிகுறியாக அவனுடைய கல்வெட்டுக்கள் அங்கு காணப்படுகின்றன.

வேங்கி நாட்டுப் போர்: வேங்கி நாடு கீழைச் சாளுக்கியர் களுடைய நாடாகும். இந் நாட்டை கி. பி. ஏழாம் நூற்றாண்டி லிருந்து கீழைச் சாளுக்கிய மன்னர்கள் ஆண்டு வந்தனர்.



படம் 5

இராசராசன் காசு

அப்பகுதியை இராசராசன் காலத்தே **தானுவர்மன்** என்ற மன்னர் ஆண்டுவந்தபோது, குறுநில மன்னன் ஒருவன் வேங்கியைக்

கைப்பற்றினான். தானுவர்மனின் மக்கள் சோழநாட்டில் தஞ்சம் புகுந்தனர்.

இராசராசன் அவர்களை வரவேற்று வேங்கி மீது படையெடுத்து கி.பி. 999இல் வெற்றிகொண்டு சக்திவர்மன் எனப்படும் தானுவர்மனின் மகனை அரசனாக முடிசூட்டினான். ஒரிரு ஆண்டுகளில் வேங்கி நாடு முழுவதும் சோழர் படை கைப்பற்றிச் சக்திவர்மனின் ஆட்சியை நிலைபெறச் செய்தன. வேங்கி நாட்டரசனின் இளைய மகன் விமலாதித்தனுக்குக் குந்தவையை மணமுடித்துக் கொடுத்தான். வேங்கி நாடு சுமார் நூறு ஆண்டுகளுக்குமேல் சோழ ஆட்சியின் நிழலில் விளங்கி வந்தது.

கங்கபாடிப் போர்: இராட்டிர கூடர்களின் சிற்றரசர்களாகத் திகழ்ந்த கங்கர்கள் மைசூர்ப் பகுதியை ஆட்சி செய்து வந்தனர். கங்கர்கள் சோழப் பேரரசின் வடபகுதியை ஆண்டு வந்தனர். எனவே கங்கர்களின் வலிமையை ஒடுக்குதற் பொருட்டு இராசராசன் கங்கபாடியின் மீது படை நடத்திச் சென்று கங்கபாடி முழுவதையும் சோழர் ஆட்சியில் இணைத்தான். சுமார் நூறு ஆண்டுகள் சோழர்களுடைய சிற்றரசர்களாகக் கங்கர்கள் வாழ்ந்தனர்.

பாண்டி நாட்டுப் போர்: பாண்டிய நாட்டில் ஆட்சி புரிந்து கொண்டிருந்த **அமரபுயங்கன்** என்பவன் முதலில் தாக்கப்பட்டான். அவன் போரில் தோல்வியுறவே அந்நாடு இவ் வேந்தனால் கைப்பற்றப்பட்டதென்று செப்பேடுகள் கூறுகின்றன. சுந்தர சோழன் காலத்தில் மதுரை கைப்பற்றப்பட்டது என்று கண்டோம். ஆனால் விரைவிலேயே அமரபுயங்கன் என்ற இப் பாண்டியன் முடிசூட்டிக் கொண்டான். 'செழியனர்த்தேசு கொள் கோவிராச கேசரி வர்மன்' என்று கல்வெட்டுக்கள் கூறுவதால் இவன் பாண்டியர்களை வென்ற செய்தியும், 'செழியர்' என்று பன்மையில் குறிப்பிடுவதால் ஒருவர்க்கு மேம்பட்ட பாண்டியரை வென்றிருக்க வேண்டும் என்பதும் அறியப்படுகிறது.

கொல்லப்போர்: இராசராச சோழன் திக்குவிசயத்தில் பாண்டிய நாட்டைக் கைப்பற்றிய பிறகு கொல்லத்திற்குச் சென்று அங்குப் போர் செய்து அதனைக் கைப்பற்றினான். கொல்லத்தைக் கைப்பற்றியது முதற்படையெடுப்பின்போதல்ல. இரண்டாம் முறை படையெடுத்தபோது நிகழ்ந்தது என்று வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர். முதலில் தோற்ற சேரநாட்டவர் மீண்டும் தலைதூக்கியிருக்கலாம். ஆதலால் இரண்டாம் முறையும் இராசராசன் போர் முரசு கொட்டவேண்டியதாயிற்று.

குடகுமலைப் போர்: இக் காலத்தில் குடகு என்றழைக்கப் படும் பகுதியே குடமலை நாடு என்ற பெயர் பூண்டிருந்தது. கொங்காள்வார் மரபில் வந்த ஒருவன் அதனை அரசாண்டு கொண்டிருந்தான். **'பணகோகே'** என்னுமிடத்தில் போர் நடை பெற்றது. **மகாதண்ட நாயகன் பஞ்சவன்மராயன்** என்பவன் சோழப் படைகட்குத் தலைமை வகித்து நடத்திச் சென்றான். இராசேந்திரசோழனே **பஞ்சவன்மராயன்** என்பது வரலாற்றறிஞர் களின் கருத்து. இப் போரில் வீரங்காட்டிப் போர்புரிந்த மனிஜா என்பவனின் செயல் திறத்தைப் பாராட்டி அவனுக்கு **'க்ஷத்திரிய சிகாமணி கொங்காள்வார்'** என்னும் பட்டம் இராசராசனால் வழங்கப்பட்டது.

நுளம்பாடி, தடிகைபாடியும் கொண்டமை: பெங்களூர், பெல்லாரி மாவட்டம், சேலம் மாவட்டத்தின் வடபகுதி, வடாற் காடு மாவட்டத்தின் ஒரு பகுதி ஆகிய நிலப்பரப்பை நுளம்பர்கள் அக்காலத்தில் ஆண்டு வந்தனர். அவர்கள் கங்க மன்னர்களின் சிற்றரசர்கள். இவர்களும் இராட்டிரகூடர்களுடன் தொடர்பு கொண்டிருந்ததால் அவர்களுடைய நாட்டையும் கைப்பற்ற வேண்டியது அவசியமாயிற்று. நுளம்பாடியும் கங்கபாடியும் கொண்டபொழுது **தடிகை வழி** என்ற **தடிகைப் பாடியையும்** இராசராசன் கைப்பற்றினான்.

கலிங்கப்போர்: வேங்கி மண்டலத்தைக் கைப்பற்றி அதில் சக்திவர்மன் முடிசூட்டியபொழுது கலிங்கத்தின் ஒரு பகுதி யையும் இராசராசன் கைப்பற்றியிருக்கவேண்டும். **கலிங்கமும்** சோழர் வசமாயிற்று.

ஈழப் போர் : இராசராசனால் வென்று கைக்கொள்ளப்பட்ட நாடுகளுள் ஈழமும் ஒன்று என்பது இவனது 'திருமகள் போல' என்று தொடங்கும் மெய்க் கீர்த்தியினால் அறியப்படுகிறது. ஈழநாட்டை அப்போது ஆண்டவன் ஐந்தாம் மகிந்தன் என்பவனேயாம். ஐந்தாம் மகிந்தன் இராசராச சோழனின் பகை வர்களுக்குத் துணை நின்றான். சோழப்படை இராசேந்திர சோழனின் தலைமையில் ஈழம் சென்று ஐந்தாம் மகிந்தனைத் தோற்கடித்து இலங்கைத் தலைநகரம் அநுராதபுரம் சோழரால் அழிக்கப்பட்டது. பொலன்னருவா என்னும் நகரம் சனநாத மங்கலம் என்று பெயரிடப்பட்டது. ஈழ மண்டலம் இராசராச சோழன் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்பதற்கு அந் நாட்டிலேயே பல சான்றுகள் உள்ளன.

மேலைச் சாளுக்கியருடன் மேற்கொண்ட போர் : மேலைச் சாளுக்கிய மன்னனுகிய இரண்டாம் தைலபன் இறந்தபின்னர் அவன் மகன் சத்தியாசிரயன் என்பவன் அரசனுனன். மேலைச் சாளுக்கிய மன்னன் சத்தியாசிரயனுக்கும் இராசராசனுக்கும் பெரும்போர் நிகழ்ந்திருக்க வேண்டும், ஆனுல் போர்க் காரணம் யாதெனத் தெரியவில்லை. மேலைச் சாளுக்கியப் போரில் இராசேந்திர சோழன் ஆணையின்படியே சத்தியாசிரயன் ஏறி யிருந்த யானையைக் குத்தி வீழ்த்த முயன்ற ஊர்த்தூர்ச் சுருதி மான் நக்கன் சந்திரனுன இராசமல்ல முத்தரையன் என்னும் வீரன் இறந்தான் என்று திருச்சிரரப்பள்ளி கல்வெட்டொன்று கூறுகிறது.

முந்நீர்ப் பழந்தீவு : இராசராச சோழனது போர்ச் செயல் களுள் இறுதியில் நிகழ்ந்தது இவன் முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும் கைப்பற்றும் பொருட்டுப் படை எடுத்தமையே யாகும். பழந்தீவு பன்னீராயிரம் என்பது அரபிக்கடலிலுள்ள பால் தீவுகளைக் குறிக்கும் பழைய பெயராகும். அத் தீவுகளி லிருந்த மக்களால் சேர நாட்டினருக்கு அடிக்கடி இன்னல் நேர்ந் திருக்கலாம், சேரநாடு இராசராச சோழன் ஆட்சிக்குட்பட்டிருந் தமையால் அந்நாட்டு மக்களின் துன்பங்களை ஒழிப்பதும் இவ் வேந்தனது கடமையாயிற்று. இராசராச சோழனிடத்தில் சிறந்த கப்பற்படை அந் நாளில் இருந்தது என்பதனையே ஈழப்போர், முந்நீர் பழந்தீவுப் போர் ஆகியவை விளக்குகின்றன.

சிறப்பியல்புகள் : இராசராசன் சிறந்த வெற்றியாளன் மட்டுமல்லன், தலைசிறந்த ஆட்சியாளனும் ஆவான். இராச ராசன் பெருமையை அவன் விட்டுச் சென்ற கலைச் செல்வங்கள் இன்றும் பறைசாற்றுகின்றன.

தன் பெயர் என்றென்றும் நிலைபெற வேண்டும் என்ற எண்ணமுடையவனுய்த் தலைநகராகிய தஞ்சாவூரில் மாபெருங் கோவில் ஒன்றைக் கட்டி அதற்கு இராசராசேச்சுரம் என்று பெயரிட்டு நாள் வழிபாட்டிற்கும் விழாக்களுக்கும் நிவந்தங்கள் வழங்கிச் சிறப்பித்தான். இராசராசேச்சுரம் என்னும் கோவில் 793அடி நீளமும் 397அடி அகலமும் உடையது. அதன் உச்சியில் போடப்பட்டிருப்பது ஒரே கருங்கல். அஃது ஏறக் குறைய என்பது டன் எடையுள்ளது என்றும் விமானத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ள செப்புக்குடம் 3083 பலம் நிறையுள்ளது என்றும் அக் குடத்தின் மேல் போடப்பட்டுள்ள பொன் தகடு 2926½ கழஞ்ச கொண்டது என்றும் அவற்றை ஆராய்ந்த அறிஞர் கள் கூறுகின்றனர். (பின்னிணைப்பு பார்க்க)

சமயப் பொறை : இராசராசன் சிவபெருமான் மீது சிறந்த பக்தி பூண்டவன். சமயப்பொறை உணர்வு கொண்டவன். நாகப்பட்டினத்தில் சூளாமணிவர்மனுல் தொடங்கப்பட்டு, அவன் மகன் மாற விஜயோத்துங்க வர்மனுல் முடிக்கப் பெற்ற புத்த விகாரத்திற்கு இராசராசப் பெரும்பள்ளி என்று தன் பெயரிடுவ தற்கு உடன்பட்டான். ஆனைமங்கலம் என்னும் ஊரைப் பள்ளிச் சந்தமாக வழங்கினுன். பேரரசராயிருப்போர்க்கு இன்றி யமையாத சிறந்த பண்புகளுள் ஒன்ருகிய சமயப் பொறை இராச ராச சோழன் பால் நன்கு நிலைபெற்றிருந்தது.

நில அளவு : இவனுடைய ஆட்சியில் நிகழ்ந்த குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகளுள் சோழப் பேரரசு முழுமையும் அளந்ததும் ஒன்ருகும். அவ்வேலை குரவரன் உலகளந்தான் இராசராச மாராயன் என்னும் அதிகாரியின் தலைமையில் நடைபெற்றது. நிலம் அளந்த கோல் பதினுறுசாண் நீளமுடையது. அதனை உலகளந்த கோல் என்று அந்நாளில் வழங்கினர்.

வளநாடு : நாடு முழுமையும் அளந்தபின் இம் மன்னன் செய்த மற்ருேர் செயல் சோழ மண்டலத்தையும் பல வளநாடு களாகப் பிரித்து யாண்டும் தன் ஆட்சி இனிது நடைபெறுமாறு செய்தமையாகும். அதற்கு முன் ஒவ்வொரு மண்டலமும் பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது, சில நாடுகளைத் தன்னகத் துக் கொண்ட வளநாடு என்னும் உட்பிரிவு அக் காலத்தில் இல்லை. நாட்டை இக் காலத் தாலூக்காவிற்குச் சமமாகவும், வள நாட்டை மாவட்டத்திற்குச் சமமாகவும் மண்டலத்தை மாநில மாகவும் கொள்ளலாம்.

முன்னேரிடத்து மதிப்பு : இராசராசன் தான் எடுப்பித்த தந்தைப் பெரிய கோவிலுக்குத் தானும் தன் தமக்கையும் கொடுத்தவற்றை நடுவிமானத்தில் கல்லில் வரையும்படி முதலில் குறிப்பிட்டிருப்பது இவன் தன் தமக்கையிடத்தில் வைத்திருந்த பேரன்பையும், பாட்டனுகிய அரிஞ்சயனையும் பெரிய பாட்டி யாகிய செம்பியன் மாதேவியையும் நினைவு கூர்தற்கு அரிகுறி யாக முறையே வடஆற்காடு மாவட்டத்திலுள்ள மேற்பாடி என்னும் ஊரில் கட்டுவித்த அரிஞ்சயேச்சுரம் என்னும் கோவிலும், திருமுக்கூடலில் செம்பியன் மாதேவிப் பெருமண்டபமும் இவன் தன் முன்னேர்களிடத்துக் கொண்டிருந்த அன்பையும் மரியாதை யையும் எடுத்துக் காட்டுகின்றன.

இலக்கியச் சிறப்பு : இராசராசனைத் திருமுறைச் செல்வன் என்று கூறலாம். சைவத் திருமுறைகளின் தத்துவச் செறி

வினும் இலக்கிய நயத்திலும் பக்திச் சுவையிலும் ஈடுபட்டு மகிழும் ஆர்வமும் கொண்டு வாழ்ந்தான். பல்லாயிரம் பாடல்களில் அநியாயமாக அழிந்தவை போக எஞ்சியுள்ள பாடல்களாவது பொன்றாது பொலிய வேண்டும் என்ற காதலால் இதற்கென ஒரு பெரும் அறக்கொடை நிறுவினான். நாள் முழுவதும் இடையீடின்றித் தேவாரத் திருப்பதிகங்களை ஓதிக்கொண்டே இருப்பதற்காக நாற்பத்தெட்டு ஓதுவார்களையும் இரண்டு உடுக்கை மத்தளக் கலைஞர்களையும் நியமித்தான். இராசஇராச சோழன் இல்லையென்றால் சைவத்திருமுறைகள் ஏது? இத் தொண்டு சைவத்திற்குச் செய்த தலையாய தொண்டு என்றுதான் கூற வேண்டும். சோழ மன்னர்களுக்குள்ளே பல்துறை அறிவும் நிரம்பியவன் என்பதை உணர்த்தவே அக் கால புலவர் பெருமக்கள் இவனைப் பண்டிதச் சோழன் என்று கூறி மகிழ்ந்தனர்.

ஓவியச் சிறப்பு : இராசராச சோழன் ஓவியக் கலைக்கு ஆற்றிய தொண்டு அரும்பெரும் கொண்டாகும். தஞ்சைப் பெருங் கோயிலில் வண்ணப்பட ஓவியங்கள் கலைப்பொலிவும், வரலாற்றுச் செய்திகளும் நிரம்பியதாக அமைக்கப்பட்டுள்ளன. சுந்தரமூர்த்தி நாயனார் அவரை தடுத்தாட்கொண்ட சிவபெருமானும் காட்சிதரும் உன்னத ஓவியம் பெரிதும் பாராட்டத் தக்கது. மற்றொரு ஓவியம் சுந்தரரும், சேரமானும் திருக்கயிலை செல்வதைச் சித்தரிப்பதாகும். திரிபுரம் எரித்த சடைக்கடவுள் திகழ்தரும் ஓவியம் தெய்வக்கலையோடு மிளிர்கிறது. உடலின் அமைப்பும் சினம் காணும் அமைப்பும் குறிப்பிடத் தகுந்தது.

இராசராசன் உலகப் புகழ்பெற்ற மன்னர்களில் ஒருவனாக வைத்து எண்ணப்படத் தக்கவன். அலெக்சாண்டர், நெப்போலியன் ஆகிய உலகச் சிறப்புடைய மன்னர்களை விடச் சிறப்பு மிக்க நிலையில் வைத்துக் கொள்ளத்தக்கவன். இராசராசன் பெரு நெறியிடித்து ஒழுகியவன். சிவனை மறவாச் சிந்தை கொண்டவன். பல்துறை அறிவும் நிரம்பிய நல் அறச் செல்வன். அருங்கலை விளைஞன். பொன்னும் புகழும் பெருக்கிய அவன் பொன்னை எல்லாம் திருப்பணிக்கும், அறப் பணிக்குமே அர்ப்பணித்தான். அவன் அமைத்த பெரிய கோவிலைப் போல் அவன் உள்ளமும் பரந்த உள்ளம். மன்னன் உள்ளத்தைப் போலவே மன்னுபலை அனைத்தும் பெரிதாக அமைந்தன. பெரியகோவில் பெருவுடையார் பெரிய நந்தி, பெருவிமானம், பெரும் சுற்று மொத்தத்தில் பெரிய கோவில் தோற்றத்தால் மட்டுமின்றி சூட்டிய பெயர்களும் பெரிது.


இன்று இந்தியாவில் இருக்கின்ற மக்களாட்சி முறையைவிட மிகச்சிறப்பான மக்களாட்சி முறை மூலம் செயல் படுத்தியவன். இன்றைக்கு இருக்கின்ற ஊராட்சி முறைகளுக்கு முன்னோடியாக சீராட்சி நடத்திக் காட்டியவன். வரி ஏய்ப்புச் செய்தவர்கள் எவ் வளவு பெரிய மனிதர்களாயிருந்தாலும் தண்டனையிலிருந்து தப்ப முடியாதபடி சட்டம் வகுத்தவன், இராசராசன், என்று தஞ்சை வசிட்டேச்சுவரர் கோவில் கல்வெட்டு கூறுகிறது. தஞ்சைப் பெருவுடையார்க் கோவிலில் கருவறைச் சுவரிலே இராசராசனது உருவத்தை இன்றும் காணலாம்.

5. முதல் இராசேந்திர சோழன் 1012 - 1044

முதல் இராசேந்திர சோழனுக்கு மதுராந்தகன் என்று இராசராசன் பெயரிட்டிருந்தான் என்ற செய்தியினை திருவேலங் காட்டுச் செப்பேடுகள் விளக்குகின்றன. பேரழகு வாய்ந்தவ னுகப் பாட்டனுகிய சுந்தர சோழனைப் போல் எழிலுடன் திகழ்ந்தார். திறமைமிக்கவனுக, தந்தைக் கேற்ற தனயனுகத் திகழ்ந்தான். கி. பி. 1012ஆம் ஆண்டில் இளவரசுப் பட்டமும் கட்டப்பட்ட இராசேந்திரன் கி. பி. 1014ஆம் ஆண்டில் இராச ராசன் இறந்தவுடன் முடிசூட்டப்பெற்று சோழப் பேரரசுக்கு சக்கரவர்த்தி ஆயினுன். இவன் பர கேசரி என்னும் பட்டம் பூனைந்து அரசாண்டான். தந்தையைப் போலவே இவனும் மெய்க்கீர்த்திகளைக் கல்லில் பொறித்து வைத்தான். இவன் ஆட்சிக் காலத்து மெய்க்கீர்த்திகள் முறைபடச் செப்புகின்றன. மேலைச் சாளுக்கியரது ஆட்சிக்குட்பட்ட இடி துறை நாடு, வான வர்சி, கொள்ளிப் பாக்கை என்பவற்றின் மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெற்ருன்.

ஈழப் படையெடுப்பு: இலங்கை வரலாறு கூறும் மகா வம்சம் என்னும் நூல் கி.பி. 1017இல் ஈழநாட்டிற்கும் இராசேந்திர சோழனுக்கும் இடையே நடைபெற்ற போர்களைப் பற்றிக் கூறு கின்றது. ஈழப் போரில் இவன் பெற்ற வெற்றியின் விளைவாகச் சிங்கள மன்னர்களுக்கு வழிவழி உரிமையுடையதாயிருந்த சிறந்த முடியினையும் அன்னேர் தேவியரது அழகிய முடியினை யும் கைப்பற்றிக்கொண்டு சோழ நாட்டிற்கு திரும்பிய செய்தி யினைக் கல்வெட்டுக்கள் உரைக்கின்றன. இலங்கை வேந்தனி டத்து அடைக்கலமாக வைத்துச் சென்ற பாண்டியர் முடியை யும் அவர்களுக்குரிய இந்திரன் ஆரத்தையும் கைப்பற்றிக் கொண்டான். இப்படையெழுச்சியின் பயனுக ஈழநாடு முழுவதும் இவன் ஆட்சிக்கு உட்பட்டது.

சேரநாடு : இராசேந்திர சோழன் சேரநாட்டின்மேல் படையெடுத்துச் சென்று அந் நாட்டு அரசர்க்கு உரிமையாய் இருந்த முடியையும், மாலையையும் கி.பி.1018இல் கைப்பற்றிக் கொண்டான். இவன் தந்தையின் ஆட்சிக் காலத்திலேயே சேரநாடும், பாண்டியநாடும் சோழரது ஆட்சிக்குள்ளாகிவிட்டன. எனினும் இவ் வேந்தன் மதுரை மாநகரில் மாளிகை எழுப்பித் தன் மகனைச் சோழ பாண்டியன் என்னும் பட்டத்துடன் பாண்டி நாட்டை ஆட்சி புரிந்து வருமாறு செய்தான். இராசேந்திர சோழன் நிகழ்த்திய படை நிகழ்ச்சிகளில் புதிய நாடுகள் ஒன்றும் கைப்பற்றப்படவில்லையெனினும் முன் கைப்பற்றிய நாடுகளில் தன்மகனை அரசப் பிரதிநிதியாக அமைத்து அவற்றைத் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான் எனப்படுகிறது.



இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்தி
படம் 6

மேலைச் சாளுக்கியர்: இராசேந்திரன் மேலைச் சாளுக்கிய ரோடு போர் செய்தான். இதற்குக் காரணம் கி.பி.1016-இல்

சயசிங்கன் எனப்படும் சாளுக்கியன் சோழர்கள்மீது படை யெடுத்துச் சென்று அப் போரில் வெற்றி பெற்றதாகக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. சயசிங்கன் எல்லைபுறத்திலிருந்த சில பகுதிகளைக் கைப்பற்றியிருக்கக்கூடும். இராசேந்திரன் சயசிங்களோடு முசங்கி என்னுமிடத்தில் போர் செய்துவென்றான்.

வடநாட்டுப் படையெடுப்பு : இவனது ஆட்சியின் 11ஆம் ஆண்டுக் கல்வெட்டில் இவனது வடநாட்டுப் படையெழுச்சி கூறப்பட்டுள்ளது. இராசேந்திரனின் வடநாட்டுப் படையெடுப் பிற்கான காரணம், இவன் கங்கை நீரைக் கொணர்ந்து தன் நாட்டைத் தூய்மையாக்கக் கருதியதே என்று திருவேலங் காட்டுச் செப்பேடு கூறுகிறது. வடதிசையிலிருந்து கங்கை நீரைக் கொண்டு வருகையில் அத் திசையிலுள்ள வேந்தர் களையும் வென்றான்.

வடநாட்டிற்குக் கங்கை கொண்டுவரச் சென்ற படை முதலில் கைப்பற்றியது வேங்கி நாட்டிற்கு வடக்கே உள்ள சக்கரக் கோட்டமே யாகும். இக் காலத்தில் சித்திரக் கோட்டம் என்று வழங்கப்படுகிறது.

பின்னர் ஒட்டரதேசம் (வங்கம்) கோசல நாடு ஆகியவையும் கைப்பற்றப்பட்டன. அதன் பின்னர் தர்மபாலனுடைய தண்ட புத்தியும் (பர்த்துவான்) இரணசூரனது தக்காணவாடமும் (ஹூக்ளி, ஹெராமாவட்டம்) கோவிந்தசந்தனுக்குரிய வங்க தேசமும், மகிபாலனது உத்திரலாடமும் (மூர்ஷிதாபாத்) கைப்பற்றப்பட்டன.

மகிபாலன் என்பான் கி. பி. பதினொன்றும் நூற்றாண்டில் வங்காள மாநிலத்தை ஆட்சி புரிந்த பாலமரபினன் வழியில் தோன்றிய வேந்தன். அவனது ஆட்சி காசிவரை பரவி யிருந்தது. சோழப்படைத்தலைவன் முதலில் குறுநில மன்னர் களை வென்று மகிபாலனையும் போரில் புறங்காட்டி ஓடச் செய்தான். வடநாட்டில் வெற்றித் திருவை மணந்து பெரும் பொருளும் கங்கை நீரும் கொண்டுவந்த படைத்தலைவனை இராசேந்திரன் கோதாவரி யாற்றங்கரையில் எதிர் கொண் டழைத்தான். வடவேந்தரை வென்று கங்கை நீரைத் தமிழ் நாட்டிற்குக் கொண்டுவந்த அருஞ்செயல் பற்றியும் இராசேந்திரன் கங்கைகொண்ட சோழன் என்னும் சிறப்புப் பெயர் பெற்றதையும் குறிப்பிட மறக்கலாமோ.

கடாரம் கொண்டான்: கல்வெட்டுக்கள் இவன் கப்பற் படையின் துணைகொண்டு கடாரங்கொண்ட செய்தியை விரிவாகக் கூறுகின்றன. இராசராச சோழனது ஆட்சியின் பிற்பகுதியிலும், இராசேந்திர சோழனது ஆட்சியின் பிற்பகுதி யிலும் சோழ நாடும், கடாரமும் நட்பும் கொண்டிருந்தன. ஆனால் சில ஆண்டுகளில் பகைமை மூண்டு ஒன்றின் மேல் மற்றொன்று போர் தொடுத்ததன் காரணம் புரியவில்லை.

இவ் வேந்தன் தன்னுடைய சிறப்பான கப்பற் படையின் வலிமையினால் கடல் நடுவிலுள்ள கடாரத்தரசனுகிய சங்கிராம விசயோத்துங்கவர்மனைப் போரில் புறங்காணச் செய்து அவனது பட்டத்து யானையையும் பெரும் பொருளையும் கவர்ந்து ஸ்ரீவிசயம், பண்ணை, மலையூர், மாயிருடங்கம், இலங்கா சோகம், தக்கோலம், தமாலிங்கம், இலாமுரி தேசம், நக்கவாரம், கடாரம் ஆகிய வற்றைக் கைப்பற்றினான். கடாரம் என்பது மலேயாவின் மேல்கரையில் தென்பக்கத்தில் கெடா என்னும் பெயருடைய நகரமாகும். ஸ்ரீவிசயம் என்பது இக் கால சுமத்ராவாகும். பண்ணை என்பது இக் கால சுமத்ரா தீவின் கீழ்க்கரையில் உள்ள பனி அல்லது பனேய் ஆகும். மற்ற பகுதிகளும் மலேயாவிலும், சுமத்ராவிலும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளே. தமிழகத்திலுள்ள தக்கோலம் வேறு. இராசேந்திரன் எத்தனையோ போர்கள் நிகழ்த்தியிருப்பினும் கங்கையும் கடாரமும் கொண்டதே சிறப்பித்துப் பேசப்படுகிறது.

சோழ பாண்டியன் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற சோழ இளவரசன் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பாண்டி நாட்டிலும் சேர நாட்டிலும் இருந்த குறுநில மன்னர்கள் சுயேச்சை பெறும் பொருட்டுச் சில காலங்கள் கலகம் செய்தனர்.

சாளுக்கிய போர்: இராசேந்திர சோழனின் ஆட்சியின் இறுதியில் சோழர்கட்கும், மேலைச்சாளுக்கியர்கட்கும் இடையே போர் ஏற்பட்டது. இளவரசனுகிய இராசாதிராசன் பெரும்படை யுடன் மேலைச் சாளுக்கிய நாட்டிற்குச் சென்று தன்னுடை என்ற ஊரில் சாளுக்கியரைத் தோற்கடித்தான் அங்குக் கிடைத்த யானை குதிரைகளோடு பெரும் பொருளையும் கைப்பற்றி மீண்டார். இப் போர் கி.பி.1044இல் நடைபெற்றது. இப் போரில் தோற்ற மேலைச் சாளுக்கிய மன்னன் பெயர் ஆகவல்ல சோமேசுரன் என்பதே.

சிறப்புப் பெயர்கள் : இராசேந்திர சோழனுக்கு உத்தம சோழன், சோழேந்திர சிம்மன், விக்கிரம சோழன், முடிகொண்ட சோழன், பண்டித சோழன், கடாரங்கொண்டான், கங்கை கொண்ட சோழன் ஆகிய சிறப்புப் பெயர்கள் இருந்தன.

பொதுப்பணிகள் : கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டப் பட்ட கங்கைகொண்ட சோழேச்சுரம் என்னும் பெயர்கொண்ட கோவில் சிற்பத் திறத்தில் உயர்ந்தது. அங்கு மிகப் பெரிய சிவலிங்க வடிவத்தில் எழுந்தருளியுள்ள இறைவனது பெயர் கங்கை கொண்ட சோழேச்சுரர் என்பது. அப் பெருமானது நாள் வழிபாட்டிற்கும் பிறவற்றிற்கும் இராசேந்திரன் நிவந்தமாக வழங்கியுள்ள ஊர்கள் பல. கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அண்மையில் பெரியதோர் ஏரியை வெட்டுவித்து மக்கட்குத் தண்ணீர்க்குறை இல்லாதவாறு செய்தான். அப் பேரேரிக்கு சோழகங்கம் என்னும் பெயரும் உண்டு.

இராசேந்திர சோழன் சிவபெருமானிடத்தில் ஒப்பற்ற பக்தி யுடையவன். சைவ சமயப் பற்றுக்கொண்டிருந்தபோதிலும் பிற சமயத்தவரை வெறுக்கவில்லை. புத்தப் பள்ளிகளுக்கும் நிவந்தம் அளித்தான்.

இவ் வேந்தனுக்கு மனைவியரும், மக்களும் பலராவர். அரச குமாரரை அதாவது தன் புதல்வர்களை வென்ற நாடுகளுக்குத் தலைவனாக அமர்த்தினான்.

தன் தந்தையிடமிருந்து பெற்ற சோழப் பேரரசின் பேரரசனாகி அதனை ஒப்புயர்வற்ற நிலையை அடையச் செய்து பெருவாழ்வு பெற்றுப் புகழுடன் விளங்கிய இராசேந்திரன் கி.பி.1044இல் இறந்தான்.

சோழ மன்னர்களில் மிகவும் குறிப்பிடத் தகுந்தவர்கள் இராசராசனும், இராசேந்திரனுமேயாவர். தந்தையைப் போல் தனயனும் சிறப்புமிக்க ஆட்சியினைச் செய்தான். தந்தையைப் போலவே கடல்கடந்து சென்றான், 'கடாரம் கொண்டான்' என்ற சிறப்புப் பெயர் பெற்றான். இராசேந்திர சோழனது சிறப்பை இன்றளவும் எடுத்தியம்புபவை சீரழிந்த நிலையில் வாழ்பட்டு நிற்கும் அவன் அமைத்த கங்கைகொண்ட சோழபுரமேயாகும்.

முதலாம் இராசாதிராசன் கி. பி. 1044-1052 முதலாம் இரா சேந்திரருக்குப் பின் அவருடைய மைந்தரான முதலாம் இராசாதி ராசன் அரியணை ஏறினான். பாண்டிய சேர அரசர்களை ஒடுக்

கினர். தன்னுடைய வெற்றிச் சிறப்பை எடுத்துக் காட்டுதற் பொருட்டு அசுவமேத வேள்வியைச் செய்தார். சாளுக்கியப் பகுதிகள் மும்முறை சூறையாடப்பட்டன.

கி.பி. 1052இல் மூன்றாவது படையெடுப்பின் போது துங்கபத்திரைக் கரையிலுள்ள கொப்பம் என்ற இடத்தில் கல்யாணி அரசரான முதலாம் சோமேசுவரனைத் தோற்கடித்தான். இப் போர் முதலாம் இராசாதிராசனின் உயிர் போவதற்குக் காரணமாய் அமைந்தது.

இரண்டாம் இராசேந்திரன் கி. பி. 1052—1064 முதலாம் இராசாதிராசனுக்குப்பின்னர் இரண்டாம் இராசேந்திரன் என்னும் மன்னன் பட்டத்திற்கு வந்தான். சாளுக்கியர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர் இவன் காலத்திலும் தொடர்ந்தது. கி. பி. 1062 இல் கூடல் சங்கமத்தில் முதலாம் சோமேசுவரனைத் தோற்கடித்தான். கி. பி. 1055இல் சோழப் பேரரசைக் கடுமையான பஞ்சம் ஒன்று வாட்டியது. இரண்டாம் இராசேந்திரன் இலங்கைமீது படையெடுத்து இலங்கை அரசனைத் தோற்கடித்து ஓடச் செய்தான்.

வீர இராசேந்திரன் கி. பி. 1064—1070 இரண்டாம் இராசேந்திரனைத் தொடர்ந்து இவனுடைய உடன் பிறப்பு வீர இராசேந்திரன் ஆட்சிக்கு வந்தான். கூடல் சங்கமம் என்னுமிடத்தில் சாளுக்கியரைத் தோற்கடித்தான். சாளுக்கியர்கள் மீண்டும் தாக்கினர். ஆனால் தாக்குதலைத் தொடர்ந்து நடத்தவில்லை. துங்கபத்திரைக் கரையில் வெற்றித் தூண் ஒன்றை நிறுவினான். சாளுக்கிய அரசனின் உருவம் ஒன்று செய்து அதற்கு அவமரியாதைகள் செய்வித்தான்.

பின்னர் வேங்கியைக் கைப்பற்றினான். கோதாவரியைத் தாண்டி கலிங்கத்தைக் கைப்பற்றினார். பாண்டியர்களையும் சேரர்களையும் ஒடுக்கினான். இலங்கை அரசன் விஜயபாகு சோழர்களை ஈழத்திலிருந்து துரத்த மேற்கொண்ட முயற்சிகளை முறியடித்தான். சுமத்ராவின் மீது படை எடுத்ததாகவும் கூறப்படுகிறது.

இரண்டாம் சோமேசுவரன் என்னும் சாளுக்கியன் காலத்தில் இரண்டு அரசுகளுக்குமிடையே நட்பு நிலவியது. சாளுக்கிய அரசன் விக்கிரமாதித்தனுக்குத் தன் மகளை மணமுடித்துத் தந்தான்.

கி. பி. 1070 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இறந்திருக்க வேண்டும். தான் இறப்பதற்கு மூன்றாண்டுகளுக்கு முன்னர் கி.பி.1067இல் தன் புதல்வர்களில் ஒருவனுக்கு அதிராசேந்திர சோழன் என்னும் அபிடேகப் பெயருடன் இளவரசுப் பட்டம் கட்டியிருந்தான் வீரராசேந்திரன் இறந்தவுடன் சோணாட்டில் முடிசூடும் உரிமை பற்றிக் கருத்து வேறுபாடு தோன்றக் கலகம் உண்டாகியது. சாளுக்கிய விக்கிரமாதித்தன் லிரைந்து வந்து கலகத்தையடக்கித் தன் மைத்துனனுகிய அதிராசேந்திரனுக்கு முடிசூட்டிச் சென்றான். என்று விக்கிரமாங்க தேவ சரிதம் கூறுகின்றது.

ஆதிராசேந்திரன் கி. பி. 1070 ஆதிராசேந்திரன் இராசகேசரி என்ற பட்டம் புனைந்து அரசாண்டான். முடிசூடிய சில தினங்களில் இவ் வாதிராசேந்திர சோழன் உயிர் துறந்தான். மேலைச் சாளுக்கிய வேந்தனுகிய ஆகவ விக்கிரமாதித்தனுடைய வரலாறு எழுதிய பில்ஹணர் சோழ நாட்டில் நிகழ்ந்த உள்நாட்டுக் கலகத்தில் ஆதிராசேந்திரன் கொல்லப்பட்டான் என்றும் கூறியுள்ளார். ஆனால் இச் செய்தி உண்மைச் செய்தி அன்று என்றே வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர்.

இம் மன்னன் குறுகிய காலமே ஆட்சி செய்த போதிலும் நிவந்தங்கள் பல அளித்துள்ளான். இவன் கல்வெட்டுக்கள் மிகுதியாகக் காணப்படவில்லை. அதற்குக் காரணம் இவன் சில தினங்கள் மட்டும் ஆட்சி புரிந்தமையே ஆகும். ஆதிராசேந்திரனுக்குப் புதல்வன் இல்லாமையாலும், சோழநாட்டில் முடிசூட்டுதற்கு வேறு சோழ இளவரசன் இல்லாமையாலும் புகழும் பெருமையும் சிறப்பும் வாய்ந்த விசயாலயச் சோழன் காலம் முதல் தொடர்ந்து ஆட்சி செய்த சோழ மன்னர் மரபு ஆதிராசேந்திரனோடு முடிவெய்தியது. முதலாம் குலோத்துங்கன் ஆதிராசேந்திரனுக்குப் பின்னர் பட்டத்திற்கு வந்தான்.

முதலாம் குலோத்துங்க சோழன் (கி. பி. 1070—1120) முதலாம் குலோத்துங்க சோழன் கீழைச் சாளுக்கிய மன்னனுகிய இராசராச நரேந்திரனின் புதல்வன். தாயார் பெயர் அம்மங்கைதேவியார். இவருடைய தாயார் சோழர் மரபினைச் சேர்ந்தவர். கல்வெட்டுக்களில் 'சுங்கந் தவிர்த்திருள் நீக்கி உலகாண்ட ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்' என்று புகழ் பெற்றுள்ளார்.

குலோத்துங்க சோழன் கீழைச்சாளுக்கிய மரபில் வந்த போதிலும் தாய்மரபினர் சோழர்களாய் விளங்கியமையால் தாய்

மொழியாகத் தமிழ் மொழியைக் கொண்டதோடு தமிழ் மக்களின் பழக்கவழக்கங்களை மேற்கொண்டு ஐம்பது ஆண்டுகள் ஆட்சி செய்தார்.

குலோத்துங்க சோழன் பூசநாளில் பிறந்தவன் என்பது பாபட்லாயிலுள்ள திருமால் கோயிலில் காணப்படும் கல்வெட்டு ஒன்றின் மூலம் அறிகிறோம். தான் பிறந்த நாளின் பொருட்டு தென்னற்காடு மாவட்டம் பெண்ணாடகத்திலுள்ள தூங்கானை மாடக் கோயிலில் திங்கள் தோறும் பூச நாளில் திருவிழா நடத்துவதற்கு நிவந்தம் அளிக்கப்பட்டிருப்பது இச் செய்தியை வலியுறுத்துகின்றது.

குலோத்துங்க சோழனின் இளமைக் காலப் பெயர் இராசேந்திரன் என்பதனைச் செல்லூர் செப்பேடுகள் அறிவிக்கின்றன. பாட்டன் பெயரையே குழந்தைகளுக்கு வைப்பது மரபாகையால் தாய்வழிப் பாட்டனார் கங்கை கொண்ட சோழன்து பெயர் வழங்கப்பெற்றது. இளமையில் வேங்கி நாட்டில் இளவரசுப் பட்டம் கட்டப்பெற்ற செய்தியும் விஷ்ணு வர்த்தனன் என்ற அபிடேகப் பெயர் பெற்றிருந்த செய்தியும் வேங்கி நாட்டில் காணப்படும் கல்வெட்டுக்களில் காணப்படுகிறது.

குலோத்துங்க சோழன் ஆட்சிக்கு வந்தது எங்ஙனம்? சோழ அரசனை வீரராசேந்திர சோழனுக்குப் பின்னர் சில திங்கள் வரையில் அரசாண்ட அவர் புதல்வன் மகப்பேறு ஏதுமின்றி நோய்வாய்ப்பட்டு இறந்தார். சோழ மரபில் அரச குமாரன் ஏதும் இல்லாது அந்நாடு அல்லுற்றுக் கொண்டிருந்த நேரம் அது.

இங்ஙனம் சோழநாடு அரசனின்றி நிலைகுலைந்திருந்த செய்தியை வடபுலத்தில் போர் புரிந்து கொண்டிருந்த இராசேந்திரன் அறிந்து கங்கை கொண்ட சோழனுடைய மகள் வயிற்றுப் பேரன் என்னும் உரிமையில் அச் சோழ நாட்டு ஆட்சியைத் தான் அடையலாம் என்றெண்ணித் தலைநகராகிய கங்கைகொண்ட சோழபுரத்திற்கு விரைந்து சென்றான். அங்கிருந்தவர் எல்லோரும், இவனது உரிமையை ஏற்று முடிசூட்டி ஆட்சியை இவனுக்கே அளிப்பது என்று முடிவு செய்து கி.பி. 1070ஆம் ஆண்டு சூன் திங்கள் 9 ஆம் நாளில் தலைநகரத்தில் முடிசூட்டினர். அந்நாளில் குலோத்துங்க சோழன் மன்னன் அபிடேகப் பெயரும் பெற்றான்.

முதலாம் குலோத்துங்க சோழன் நாட்டு மக்களுக்கு நலம் புரிவதையே தன் குறிகோளாகக் கொண்டு ஆட்சி புரிந்தார். அவசியம் ஏற்பட்டாலன்றி போர் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை. நாட்டுப் பரப்பை விரிவுபடுத்துவதைவிட குடிகளுக்கு நலம் புரிந்து அவர்கள் உள்ளத்தைக் கவர்வதுதான் சாலச் சிறந்தது என்பது இவர் கருத்து என அறிகிறோம். இவர் ஆட்சியில் சோழ அரசு மிக்க அமைதியான நிலையை அடைந்தது. தனக்குப் பின்னரும் அத்தகைய நிலை ஏற்பட்டச் செய்தவர் குலோத்துங்கரே.

இவ் வேந்தன் ஐம்பது ஆண்டுகட்கு மேல் ஆட்சி புரிந்துள்ளமையால் நம் தமிழ் நாட்டிலும், மைசூர்ப் பகுதிகளிலும், தெலுங்கு நாட்டிலும் இவர் கல்வெட்டுக்கள் பல கிடைத்துள்ளன. இவர் காலத்துப் போர் நிகழ்ச்சிகளையும், பிற செய்திகளையும் யெய்க் கீர்த்திகள் நன்கு விளக்குகின்றன.

இளமைப் பருவத்தில் இன்று பஸ்தார் மாநிலம் என அழைக்கப்படுகின்ற அன்றைய சக்கரக் கோட்ட மண்டலத்தில் ஆட்சிபுரிந்த தாரவர்ஷன் என்னும் வேந்தன் ஒருவனைப் போரில் வென்று வாகை சூடினான். அந் நாட்டிலிருந்த வயிராகாரம் என்ற ஊரிலிருந்த எண்ணிறந்த யானைகளைக் கைப்பற்றினான். இப் போருக்கான காரணம் யாதென அறிய முடியவில்லை. இளமைக் காலத்தில் 'திக்குவிஜயம்' செய்ததாகக் கலிங்கத்துப் பரணியின் ஆசிரியர் கூறியமையால் திக்கு விஜயத்தில் அப்போர்கள் நிகழ்ந்திருக்க வேண்டும்.

மேலைச் சாளுக்கியப் போர்: கி.பி.1076ஆம் ஆண்டில் மேலைச் சாளுக்கிய மன்னனுகிய ஆறும் விக்கிரமாதித்தனெடு போர் ஒன்றை நிகழ்த்தினர். விக்கிரமாதித்தன் குலோத்துங்க னுடைய படை வலிமையையும் வீரத்தையும் குலைத்திடப் பெரு முயற்சி செய்துகொண்டிருந்ததோடு பெரும்படை ஒன்றைச் சேர்த்துக்கொண்டும் இருந்தான். குலோத்துங்கனும் அவனை எதிர்த்துத் தமது படை பலத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தார். ஹொய்சால அரசன் எரியங்கன், கடம்பகுல மன்னன் கடேசி, திரிபுவனமல்ல பாண்டியன், தேவகிரி அரசன் சேவணன் ஆகியோர் விக்கிரமாதித்தனுக்கு உதவினர். விக்கிரமாதித்தனின் தமையன் சோமேசுவரன் குலோத்துங்கனுக்கு உதவிபுரிந்தான். கோலார் மாவட்டம் நங்கிலி என்னுமிடத்தில் நடைபெற்ற போர் மணலூர், அளத்தி முதலிய இடத்தில் நடைபெற்றபோர் ஆகிய வற்றில் விக்கிரமாதித்தன் தோல்வியுற்று ஓடி ஒளிந்தான்.

குலோத்துங்கன் போரில் தோல்வியுற்றான் என்று பில்ஹணர் தன் விக்ரமாங்க தேவ சரித்திரத்தில் கூறியிருப்பன உண்மைக்குப் புறம்பானவையாகும்.

பாண்டியருடன் போர்: முதல் பராந்தக சோழன் முதல் இராசராச சோழன் ஆகியோர் காலத்தே திறைசெலுத்தும் சிற்றரசராக வாழ்ந்த பாண்டியர் அடிக்கடி சோழர்களோடு முரண் பட்டுத் தாம் முடிமன்னராய் சுயேச்சையுடன் வாழ்வதற்கு முயன்றனர். ஆதிராசேந்திரன் காலத்தில் பாண்டியர்கள் நாட்டை ஐந்து பகுதிகளாக பிரித்து ஐந்து அரசர்களாக இருந்து ஆட்சி செய்தனர். இதனை 'மீனவர் ஐவரும்' என்ற கலிங்கத்துப் பரணியின் வாசகம் மெய்ப்பிக்கிறது. கி. பி. 1081 ஆம் ஆண்டில் குலோத்துங்கன் படை நடத்திச் சென்று, ஒன்று சேர்ந்து வந்த பாண்டியர் ஐவரையும் தோற்கடித்தான். வென்ற பகுதிகளைத் திரும்ப அளித்துத் தனக்குத் திறைப்பொருள் அனுப்பிவருமாறு ஏற்பாடு செய்தார்.

சேரருடன் நடத்திய போர்: இப் போரும் 1081இல் நடை பெற்றது. பாண்டியரைப் போல் சேரரும் சுயேச்சையாகத் தனியரசு புரிந்தனர்.

பாண்டியரை வென்று கப்பஞ் செலுத்திவருமாறு செய்த சோழ மன்னன், சேரரையும் வென்று அத்தகைய நிலைக்குக் கொண்டுவர எண்ணி அவர் தங்நாட்டின் மீது படையெடுத்துச் சென்றார். குமரி முனைக்கு வடக்கே பத்துக் கல் தொலைவில் உள்ள கோட்டாறு என்ற இடத்திலும், காந்தளூர்ச் சாலையிலும் நடைபெற்ற போர்களில் சேரமன்னன் தோல்வி யுற்றுக் கப்பஞ் செலுத்திவர ஒப்புக்கொண்டான்.

தென் கலிங்கப் போர்: தென் கலிங்கம் என்பது கோதாவரியாற்றுக்கும் மகேந்திர கிரிக்கும் நடுவில் வங்கக் கடலைச் சார்ந்திருந்த நாடாகும். அது வேங்கி நாட்டரசர்க்குட் பட்ட குறுநில மன்னர்களால் ஆட்சி புரியப்பட்டு வந்தது. தென் கலிங்க வேந்தன் வீமனை எதிர்த்து குலோத்துங்கன் தம் தந்தையின் காலத்தில் வென்றதைப் போல் கி. பி. 1112ஆம் ஆண்டில் வட கலிங்க அரசன் அனந்தவர்மன் என்பவனோடு நிகழ்த்திய போரினைப் பற்றிய செய்திகளையும் அறிகிறோம். செயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப் பரணி என்னும் நூல் இதனை உணர்த்துகிறது.

ஈழத் தொடர்பு: குலோத்துங்கன் தன் ஆட்சியின் தொடக்கத்திலேயே ஈழநாட்டை இழந்துவிட்டான் எனத் தெரிகிறது. ஈழநாட்டு நிகழ்ச்சிகள் குலோத்துங்களின் கல்வெட்டுக்களில் காணப்படவில்லை. குலோத்துங்கன் கல்வெட்டுக்கள் ஈழநாட்டில் காணப்படாமை ஒன்றே அந்நாடு இவன் ஆட்சிக்குட்படாமல் சியேச்சை பெற்ற தனியரசன் ஒருவன் ஆளுகையின் கீழ் இருந்து வந்தது என்பதை மெய்ப்பிக்கிறது.

கி. பி. 1115ஆம் ஆண்டிற்குப் பிறகு கங்கபாடி நாட்டில் குலோத்துங்கனின் கல்வெட்டுக்கள் ஏதும் காணப்படாமையால் தன் ஆட்சியின் இறுதிக் காலத்தில் கங்கபாடி நாட்டையும் இழந்திருக்கக் கூடும்.

அயல் நாட்டுத் தொடர்பு: சோழர்கட்கும் சீன தேசத்தவர்கட்கும் தொடர்பு இருந்து வந்தது என்பதனை சீன தேச வரலாறு வெளிப்படுத்துகின்றது. கி. பி. 1077ல் எழுபத்திரண்டு பேர் அடங்கிய ஒரு குழுவினர் சோணாட்டிருந்து சீன தேசத்திற்குத் தூது சென்றனர். பரக்குமோகக் கடாரமழித்தநாள் என்று களங்கத்துப் பரணியில் குறிப்பிட்டுள்ளமையால் கடாரதேசத்திற்குச் சென்று போர் புரிந்து வெற்றி பெற்றதினால் சீனர்க்கு புலனுகிறது. குலோத்துங்கன் காம்போச நாட்டு வேந்தனுக்குக் காட்சிப் பொருளாகக் காட்டியக் கட்டிலொன்றைப் பெற்றுவந்து தில்லைச் சிற்றம்பலத்தைச் சார்ந்துள்ள திருவெதிரம்பலத்தில் வைத்தனன் என்று சிதம்பரத்திலுள்ள கல்வெட்டொன்று உணர்த்துகிறது என பண்டாரத்தார் தம்து நூலில் குறித்துள்ளார்.

அரிய செயல்கள்: நாட்டில் சுங்கவரியை நீக்கி மக்கள் எல்லோரையும் மகிழ்வித்தமையால் சுங்கம் தவிர்த்த சோழன் என்று வழங்குவாராயினர். சோழநாடே 'சுங்கமில்லாச் சோழ நாடு' என அழைக்கப்பட்டது. சோழநாடு முழுவதும் அளக்கப்பட்டு நிலவரி ஒழுங்குபடுத்தப்பட்டது. விளை நிலங்களுக்கு மாத்திரம் அரசாங்கத்தினர் நிலவரி வாங்கிவந்தனரேயன்றி மற்ற நிலங்களுக்கு வரிவாங்கவில்லை.

சமயநிலை: சிவபெருமானிடத்தில் எல்லையற்ற பேரன்பு உடையவனாய்த் திகழ்ந்த இவர் சைவ நெறியைச் சிறப்பாகக் கொண்டாடுகிறார். சோழநாட்டிலுள்ள பல வைணவ சமண பௌத்தக் கோவில்களில் இவர் கல்வெட்டுக்களில் காணப்படு

கின்றன. தம் சமயமல்லாத பிற சமயங்களைத் துன்புறுத்தவோ வரி விதிக்கவோ செய்யாத பண்பாளர். எல்லாச் சமயங்களிடத்தும் பொது நோக்குடையவராய் விளங்கினர் என்பதனை புத்தக் கோவிலுக்கு அளித்த நிலங்கள் மெய்ப்பிக்கின்றன.

கல்விநிலை: இவ் வரசர் செயங்கொண்டாரால் 'பல்கலைத் துறை நாவிலுறைந்தவன்' 'அறிஞர் தம்பிரான் அபயன்' என்று குறிப்பிட்டுள்ளார். தமிழ்மொழிலும், வடமொழி, தெலுங்கு முதலான பிறமொழிகளிலும் புலமைபெற்றிருந்தான். இசைத் தமிழுக்கு இவன் ஆற்றிய சாதனை ஒன்றுளது. இசைத்தமிழ் நூல் இயற்றிய செய்தியினை சோழகுலசேகரன் வகுத்த இசை' என்று கலிங்கத்துப் பரணி பகர்கின்றது. புலவர்களிடத்தில் பெரு மதிப்பும், அன்பும் வைத்து அவர்களை ஆதரித்து வந்தார். கவிச்சக்கரவர்த்தியாகிய சயங்கொண்டார் கலிங்கத்துப் பரணி என்னும் ஓர் அரிய நூல் இயற்றியிருப்பதும் திருநாராயணபட்டர் குலோத்துங்க சோழ சரிதை இயற்றியிருப்பதும் குறிப்பிடத் தக்கவை. ஆனால் இந் நூல் கிடைக்கவில்லை.

கருணாகரத் தொண்டைமான் என்னும் படைத்தலைவர், அரையன் மதுராந்தகனை குலோத்துங்க சோழ கேரளராசன் என்னும் தளபதி, அரும்பாக்கிழான் மணவிற்கூத்தனை காலிங்கராயன், வாணகோவரையன் சுத்தமல்லர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

சோழப் பரம்பரையில் வந்த மன்னர்களில் முதலாம் இராசராசன், கங்கை கொண்ட சோழன் ஆகியோரைப் போலச் சிறப்புப் பெற்றவர் முதலாம் குலோத்துங்கன். எனினும் அவர்கள் ஆற்றிய அளவிற்குக் கோவில் பணிகள் ஏதும் எடுப்பிக்கவில்லை. சோழப் பேரரசை அமைதியான வழியில் ஆட்சிசெய்து சிறப்புச் சேர்த்த பெருமை இவருக்குரியதே.

விக்கிரம சோழன் கி. பி. 1118-1136: முதல் குலோத்துங்க சோழனின் மைந்தராவார். குலோத்துங்க சோழனது ஆட்சியின் இறுதியில் இழந்துவிட்ட கங்கபாடி நாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றினர். இவர் காலத்தில் கடும் பஞ்சம் ஏற்பட்டது எனவும் அரசர் தம் பெருங்கொடையால் மக்களைக் காத்தார் எனவும் அறிகிறோம். தில்லைச் சிற்றம்பலத்தைச் சூழ்ந்துள்ள திருச்சுற்று மாளிகை, கோபுரவாயில், கூடசாலை, பலிபீடம் என்ப வற்றிற்குப் பொன்வேய்ந்தார். இவரது தலைநகர் கங்கை

கொண்ட சோழபுரமே ஆகும். இவர் காலத்தில் அவைக் களப் புலவராக விளங்கியவர் ஒட்டக்கூத்தர் ஆவார். அவர் 'விக்கிரம சோழனுலா' என்னும் நூல் ஒன்று இயற்றியுள்ளார்.

இரண்டாம் குலோத்துங்க சோழன் கி. பி. 1133-1150 : கி.பி.1135இல் இரண்டாம் குலோத்துங்கச் சோழன் சக்கரவர்த்தியாக முடிசூட்டப்பட்டார். தில்லையில் தம் தந்தையைப் போலவே நாற்பெருந் தெருக்கள் அடைத்தும், பற்பல மண்ட பங்கள் கட்டுவித்தும் அந் நகரைச் சிறப்பித்தான். இவனை வைணவ சமயத்திற்கு எதிரி என்று கூறுகின்றனர். திருமாலின் வடிவத்தைக் கடலில் எறிந்தார் என்று கூறப்படுகிறது. ஆந்திர தேசத்தில் இவ் வேந்தனின் கல்வெட்டுக்கள் மிகுதியாகக் காணப் படுகின்றன. கலைகளில் வல்லவர் இவர். இச் சோழன்மீது குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ் 'குலோத்துங்க சோழன் உலா' முதலிய நூல்கள் யாத்துள்ளனர். பல புலவர்களை இவர் ஆதரித்தான் என்பதை 'கற்றவர் குடிபுடைசூழ் கற்பக இளவனமே' என்னுங் கூத்தர் வாக்கினுல் அறியலாம். இவரது தலைநகரமும் கங்கைகொண்ட சோழபுரமே.

இரண்டாம் இராசராச சோழன்: இவர் கி.பி.1150இல் பட்டத் திற்கு வந்தான். தாய்மொழியிலும், வடமொழியிலும் சிறந்த பயிற்சி பெற்றிருந்தான். இவனை முத்தமிழுக்குத் தலைவன் என்றும், இராச பண்புகள் உடையவன் என்றும் கூறப்படுகிறது. தந்தையாரைப்போல் தில்லைக் கூத்தனிடம் எல்லையற்ற அன்பு பூண்டிருந்தார். இவ் வேந்தன் ஆட்சிக்காலத்தில் மலையமலைப் பக்கத்தில் காவிரியாறு அடைபட்டிருந்தது. மலையமலையை நடுவில் வெட்டுவித்துக் காவிரியாற்றிற்கு வழிகண்டு சோழ நாட்டிற்கு என்றும் தண்ணீர் வந்துகொண்டிருக்கும்மாறு செய்தான் என்பதனை

> "மலைகொன்று பொன்னிக்கு வழிகண்ட கண்டன்
> வரராசராசன் கைவாளென்ன வந்தே"

என்ற தக்கயாகப் பரணிச் செய்யுட்கள் மெய்ப்பிக்கின்றன. சுந்தரசோழன், முதல் இராசேந்திர சோழன் ஆகிய அரசர்கள் செங்கோல் செலுத்திய பழையாறையைத் தலைநகரமாக வைத்துக் கொண்டான். ஒட்டக்கூத்தரே இவ் வரசன் காலத்திலும் அவைக் களப்புலவராய் விளங்கினர். அவர் இராசராசசோழன் உலா என்னும் நூலொன்றை இயற்றினர்.

இரண்டாம் இராசாதிராச சோழன்: (கி. பி. 1163-1178) இவன் இராசகேசரி என்னும் பட்டத்துடன் ஆட்சிசெய்தான்.

இவன் கல்வெட்டுக்கள் இவன் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற பாண்டிநாட்டுப்போர் நிகழ்ச்சிகளை நன்கு புலப்படுத்துகின்றன. பாண்டி நாட்டில் பராக்கிரம பாண்டியன் ஆட்சிசெய்துகொண்டிருந்தபோது குலசேகர பாண்டியன் ஆட்சியுரிமையைக் கைப்பற்ற வேண்டி மதுரைமாநகரை முற்றுகையிட்டான், பராக்கிரம பாண்டியன் சிங்கள வேந்தனுகிய பராக்கிரம பாகுவைத் தன்க்கு உதவிபுரியுமாறு வேண்டிக்கொண்டான். குலசேகரன் பன்முறை தோல்வியடைந்தான். கி.பி.1167இல் சோழநாட்டிற்கு வந்து தன் நாட்டைத் தான் பெறுமாறு தனக்குப் படையனுப்பியுதவிபுரிய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள அனுப்பப்பட்ட சோழப் படைக்கும் சிங்களப்படைக்கும் தொண்டி, பாசிப்பட்டணம் முதலிய இடங்களில் நடைபெற்ற போர்களில் சோழப்படை வெற்றிகண்டது. குலசேகரன் சில ஆண்டுகள் பாண்டி நாட்டை ஆண்டுவந்தான். ஈழநாட்டில் நடைபெற்ற போர்களிலும் வெற்றி பெற்றமையால் 'ஈழம் கொண்டவன்' என்று கூறப் பெற்றனன்.

மூன்றும் குலோத்துங்க சோழன் (கி. பி. 1178-1218)

கி.பி. 1178ஆம் ஆண்டில் முடிசூட்டப்பெற்ற இவனை இரண்டாம் இராசாதிராசனின் தம்பி என்றும் சிலர் கூறும் கூற்று ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. இவர் நாற்பது ஆண்டுகள் ஆட்சி செய்தான் பாண்டி நாட்டரசனுயிருந்த குலசேகரபாண்டியன் என்ற பாண்டின் குலோத்துங்கனிடத்துச் சரண் புகுந்தான். மூன்றும் குலோத்துங்கன் பாண்டிய நாட்டுப் போர் ஆகிய வற்றை நிகழ்த்தினுர்.

மன்னர் கொங்கு நாட்டைக் கைப்பற்றினுன் தெலுங்குச் சோடர் எனவும் பொத்தப்பிச் சோழாகள் எனவும் அழைக்கப் பட்டவர்கள் குலோத்துங்கனுக்குக் கீழ்ப்படிந்து சிற்றரசராக வாழ்ந்துகொண்டிருந்தனர்.

திருநெல்வேலி, மதுரை மாவட்டம் தேனூர் புதுக்கோட்டை, சேலம் மாவட்டம் தடாவூர், தகடூர், ஆறகவூர், கருவூர் ஹேமவதி, நெல்லூர், நெல்லிப் பாளையம், மல்லூர், கடப்பை முதலிய இடங்களில் கிடைத்துள்ள கல்வெட்டுக்கள் இவர் ஆட்சிப் பரப்பை அறிய உதவுகின்றன.

மூன்றுங் குலோத்துங்கனுக்குப் பின்னர் ஆட்சிக் கட்டில் ஏறியவர். மூன்றும் இராசராசசோழன் ஆவார். இவருடைய காலத்திலிருந்து தான் சோழ மரபின் பெருமை குன்றுகிறது.

பாண்டியர்கள் சோழர்களைத் தோற்கடித்து, அதனைக் கைப் பற்றிப் பிறகு திரும்ப அளித்தனர். கி.பி. 1219இல் நடைபெற்ற இப் போரில் தோல்வி யெய்திப் பாண்டியனுக்குத் திறைசெலுத்தி கொண்டிருந்த இராசராசன், சில ஆண்டுகளுக்குப் பின்னர் திறை செலுத்த மறுக்கவே, 1231இல் சோழநாட்டின் மேல் பாண்டியன் மாறவர்மன் மீண்டும் படையெடுத்து வந்தான். இராசராசன் தோல்வியடைந்தான். இம்மன்னனுக்கு ஹொய்சாளர்கள் பெரிதும் உதவினர். கி.பி.1256இல் இவ் வேந்தன் இறந்திருக்க வேண்டும்.

இவருக்குப் பின்னர் மூன்றும் இராசேந்திர சோழன் பட்டத் திற்கு வந்தார். இராசேந்திர சோழனுக்குப் பின்னர் பட்டம் பெற்றுச் சோழநாட்டை ஆண்ட சோழமன்னன் ஒருவனும் இல்லை. எனவே கி.பி. 1279இல் இவன் இறந்தபின்னர் சோழநாடு பாண்டிய அரசோடு சேர்க்கப்பட்டுப் பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்குள்ளாயிற்று.

சோழர்களின் சமூகப் பொருளியல் வாழ்க்கை மக்கட் தொகைக் கணக்கு: மக்கள் சமுதாய அமைப்பின் வளர்ச்சி இயற்கை சூழல், இனப்பண்பாடு, சமுக சமயச் சூழல், ஆகிய வற்றுல் பெரிதும் இயக்கப்படுகின்றது. எனவே சோழர்காலச் சமுதாய அமைப்பின் வளர்ச்சிக்கு மேற்கூறிய காரணங்கள் பொறுப்பாய் இருந்திருக்கக் கூடும். இன்றையச் சமுதாய வாழ்க் கையில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முக்கிய அங்கம் வகிக் கிறது. சோழமன்னர்களின் ஆட்சிக்காலத்தில் அரசின் விளை நிலங்களையும் பிற நிலங்களையும் கணக்கெடுத்தனரே தவிர மக்கட் தொகைக் கணக்கு ஏதும் எடுக்கவில்லை. 'இட்டப்பாடி ஏழரையிலக்கம்' 'கங்கபாடி தொண்ணூற்றுருயிரம்' என்றெல் லாம் நாட்டின் பெயரோடு வழங்கப்பட்ட எண்கள் அந்நாட்டில் வாழ்ந்துகொண்டிருந்த மக்களின் தொகை என்று தவறுதலாகச் சிலர் கருதுகின்றனர்,

சாதிப் பாகுபாடு: சோழர் ஆட்சியில் பல்வகைப்பட்ட வகுப் பினரும் மேல் வகுப்பினர், கீழ்வகுப்பினர், என்ற பாகுபாடுகளும் பூசலும் குழப்பமும் இன்றி வாழ்ந்து கொண்டிருந்தனர். ஒவ் வொருவரும் தம்தம் குலத்தொழிலைச் செய்து வந்தனர். கல்வி யறிவும், குடிப்பிறப்பும் உடையவர்களையே அரசியல் அலுவல் களுக்கு அரசன் தேர்ந்தெடுத்தான். பார்ப்பனர் வேதங்களிலும், சாத்திரங்களிலும் வல்லுநர்களாய் இருந்தனர். வடமொழியி லுள்ள, மகாபாரதம் பதினெண்புராணங்கள் முதலியவற்றைப்

பொதுமக்கள் உணர்ந்து கொள்ளுமாறு பொருள் விளக்கம் செய்தனர். அவர்களுக்கு ஊர்ப் பொதுநிலங்களுள் சிலவற்றை வேத விருத்தி, பட்ட விருத்தி, பாரதவிருத்தி, புராணவிருத்தி என்ற பெயர்களோடு இறையிலி நிலங்களாக வழங்கினர்.

நீதி வழங்கும் முறை: கிராம சபையினரும் அரசு அலுவலர்களும் வழக்குகளை விசாரித்து நீதி வழங்க நேரும்போது சில ஐயப்பாடுகளைச் சாத்திரங்களில் வல்லுநரான பட்டர் பெருமக்களிடம் கேட்டுத் தெரிந்து அவர்கள் கருத்துக்கு ஏற்ப முடிவு செய்தனர். ஒவ்வொரு வகுப்பினர்க்கும் அவர்கள் விரும்பிய நியாயமான உரிமைகளைச் சோழமன்னர்கள் வழங்கினர்.

ஒருவனுக்கு ஒருத்தி : ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கையினைப் பொதுவான விதியாக ஏற்றுக் கொண்டாலும் ஆண் மக்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணந்துகொள்ளும் வழக்கம் இருந்தது. சோழ மன்னர்கள் தம் நாட்டின் அரசியல் நிலை காரணமாகப் பெருவலி படைத்த பிற வேந்தர், குறுநில மன்னர் ஆகியோரின் தொடர்பினை நிலைபேறுடையதாகச் செய்து கொள்ளும் பொருட்டு அவர்களுடைய மகளிரை மணந்துகொண்டமையால் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரையுடைவராயிருந்தனர்.

உடன்கட்டை ஏறல்: கணவன் இறந்தவுடன் உயிர்துறத்தல் என்னும் வழக்கம் இருந்தது. வீரசோழ இளங்கோவன் என்ற கொடும்பாளூர்க் குறுநில மன்னன் மனைவி, இராசராசனின் அன்னை வானவள் மாதேவி, கங்கை கொண்ட சோழனுடைய மனைவி வீரமாதேவி ஆகியோர் உடன்கட்டை ஏறியமையைக் கல்வெட்டுகள் மெய்ப்பிக்கின்றன.

பெண்டிர் நிலை: பெண்கள் பரதத்திலும் இசையிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர். அவ்வாறு தேர்ச்சி பெற்ற பெண்கள் திருக்கோயில்களில் பணி புரிந்தனர். அவர்கள் தளிர்சேரிப் பெண்கள் எனவும், தேவரடியார் எனவும், கணிகையர் எனவும் வழங்கப் பெற்றுள்ளனர். இத்தகைய பெண்டிரை யாரும் இழிவாகக் கருதவில்லை. சமுதாய வாழ்வில் அவர்களுக்குப் புகழும், மதிப்பும் ஏற்பட்டிருந்தன. இசையிலும் நாட்டியத்திலும் வல்லவர்கள் 'தலைக்கோல்' என்னும் சிறப்புப் பட்டம் பெற்றனர்.

அடிமை முறை: சோழர்களின் காலத்தில் அடிமை முறை நாட்டில் இருந்தது. ஆண்மக்களும் பெண்மக்களும் செல்வர்

களிடத்தும் கோயில் மடங்களிலும் தம்மை விற்றுக் கொண்டு அடிமைகளாயிருந்து தொண்டாற்றினர். தஞ்சாவூர் மேலப் பெரும் பள்ளத்திலுள்ள திருக்கோவிலுக்கு ஒருவன் பதின்மூன்று காசுக்கு அறுவரை அடிமைகளாக விற்ற செய்தி காணப்படு கிறது. எதிரிலி சோழ கங்க நாடாள்வான் என்பவன் கி.பி. 1219இல் திருமறைக்காட்டுக் கோவிலுக்கு ஆடவர் ஐவரையும் பெண்டிர் ஐவரையும் அவர்கள் பரம்பரையினருடன் ஆயிரம் காசுக்கு விற்ற செய்தி அக் கோவிலுள்ள கல்வெட்டு ஒன்றால் புலப்படுகிறது.

கூலி : ஆண் மக்களும், பெண்மக்களும் நாட் கூலி பெற்றுப் பணிபுரிந்தனர். ஓர் ஆண் மகன் நாளொன்றுக்குப் பெற்று வந்த கூலியில் பாதியே ஒரு பெண் மகள் அக்காலத்தில் பெற்றுப் பணிபுரிந்து வந்தாள்.

வாணிபம் : தமிழகத்தில் வாணிகர் பலர் அந்நாளில் இருந் தனர். அவ் வணிகர்கள் உள்நாடுகளிலும் வெளிநாடுகளிலும் முறையே வண்டிகளிலும், மரக்கலங்களிலும் பண்டங்கள் ஏற்றிச் சென்று வாணிபம் நடத்தினர். வணிகத்துறையின் நன் மையைக் கருதி பெருவழிகள் அமைக்கப்பட்டன. சிறுவழிகள் 'வதிகள்' என வழங்கப்பட்டன. வணிகர்கள் பண்டங்களை ஏற் றிச் சென்று வாணிபம் நடத்தும்போது காப்புகள் செய்யப் பட்டன. வணிகர்கள் பிறநாடுகளுக்குக் கூட்டமாகச் சென்ற போது அக் கூட்டத்திற்கு வாணிகச் சாத்து என்று வழங்கியது. அக் குழுவின் தலைவன் சாத்தன் எனவும், மாசாத்துவன் எனவும் கூறப்பட்டான். வணிகருள் சிறந்தோர் சோழ மன்னர்களால் 'எட்டி' என்னும் பட்டம் அளிக்கப்பட்டனர். சோழ நாட்டில் ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்கள் பெருகின. அவ் வணி கத்தால் கிடைத்த சுங்கவரியினால் அரசுக்கு வருவாய் மிகுந்தது. வணிகர்களுள் பல குழுவினர் இருந்தனர்.

பிறநாட்டவருடன் தொடர்பு : சீன தேசத்தின் வரலாற்றின் துணை கொண்டு சோழர்கள் அந் நாட்டினரோடு கொண்டிருந்த தொடர்பினையும், தமிழ் நாட்டவர் நிகழ்த்திய வணிகத்தையும் உணரலாம். தமிழகத்திலிருந்து சீனதேசம், மலேயா, சுமத்ரா முதலான வற்றிற்கு முத்து, யானைத் தந்தம், பவழம், கண்ணாடிக் கல், பாக்கு, சந்தனக் கட்டை, ஏலம், பருத்தி, நூல் துணி ஆகிய பொருள்களும் பிறவும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன.

சுங்கம் : முதல் குலோத்துங்க சோழனுக்குப் பிறகு சோழ நாட்டில் ஆட்சி புரிந்த சோழ மன்னர்கள் சுங்கம் வதூலிக்கவில்லை.

சோழ நாடும் 'சுங்கமிலாச் சோழநாடு' என வழங்கப்பெற்று வந்தது. உள்நாட்டில் நடைபெற்ற வாணிகத்தில் பெரும்பகுதி பண்டமாற்று முறையிலேயே நடைபெற்றது.

வட்டி : வட்டி வாங்கும் முறையும் நாட்டில் இருந்தது. எவ்வளவு வட்டி வாங்கினர் என்பது தெரியவில்லை. ஒரு கழஞ்சு பொன்னுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஒரு கலம் முதல் மூன்று மான்கு கலம் வரையில் நெல் வட்டியாக வாங்கப்பட்டுள்ளது என்பது கல்வெட்டுக்களால் புலனாகிறது. வட்டியைப் பொலிசை எனவும் பலிசை யெனவும் அந் நாளில் வழங்கினர். சில கல் வெட்டுக்கள் அதனைத் தர்மப் பொலிசை என்று கூறுவது அறியத் தக்கதாகும்.

காசுகள் : சோழமன்னர்களின் காலங்களில் பொன்னாலும் வெள்ளியாலும், செம்பாலும் செய்யப்பெற்ற நாணயங்கள் வழங்கி வந்தன. கழக்காசு என்ற ஒருவகைப் பொற்காசு சோழர்களின் ஆட்சிக் காலத்தில் வழங்கியுள்ளமை கல்வெட்டுக்களில் அறியக் கிடக்கிறது.

சோழர்களின் ஆட்சிக்காலங்களில் வெளியிடப் பெற்ற நாணயங்களில் வெளியிட்டவரின் இயற்பெயராவது அல்லது சிறப்புப் பெயராவது காணப்பட்டது. மாடை, காசு, பழங்காசு ஆகிய நாணயங்கள் எல்லாம் பொதுவாகப் பொன் என்றே வழங்கப்பட்டன. பல்வேறுபட்ட நாணயங்களின் பெயர்களையும் அவற்றின் புழக்கத்தினையும் காணுகின்றபோது மக்களின் வாழ்க்கையில் நாணயங்கள் பெற்றிருந்த பங்கினை அறிகிறோம். பிறநாட்டு நாணயங்களின் சாயல்களைக் காணுகின்றபோது இக் கால மக்கள் பிறநாட்டவர்களோடு கொண்டிருந்த தொடர்பினை அறிகிறோம்.

சமயப் பொறை : சோழ மன்னர்கள் சமயப் பொறை உணர்வு மிக்கவர்கள். பாகுபாடின்றி அனைத்துச் சமயங்களையும் ஆதரித்தனர். 'மன்னன் எவ்வழியோ அவ்வழியே குடிமக்கள்' என்பது பண்டைய மரபு. எனவே மன்னனைப் போலவே மக்களும் சமயப்பொறை உணர்வு கொண்டு விளங்கினர். பிற்காலங் களிலே தான் சைவத்திற்கும் வைணவத்திற்கும் இடையே ஏற்பட்ட போட்டியினைக் காண்கிறோம். எனினும் இச் சமயப் போட்டியின் விளைவாகச் சமயக்கொலை எதனையும் மன்னர்கள் மிகழ்த்தினர்களென்பதற்கில்லை. மேலும் சமயமே பொறை

உணர்வினை நாம் நோக்குகின்றபோது அக் காலச் சமுதாய வாழ்வின் சிறப்பினை உணர முடிகிறது.

பொதுவாக நோக்குமிடத்துச் சோழர் காலச் சமுதாயம் செழிப்பான நிலையில், வளமான வாழ்க்கையினை அமைத்து அமைதியான முறையில் இருந்தது என்றே கருதவேண்டியுள்ளது.

சோழர்காலச் சமயமும் இலக்கியமும்

சோழர் சமயநிலை : தமிழகத்து முடியுடை மூவேந்தருள் சோழரது சமயப்பற்று இன்றும் உலகம் சிறப்புறக் கொண்டாடத் தக்கது. சேர சோழ பாண்டியருள் சைவத்தில் மிகவும் அழுத்தமான பற்றுடையவரும், நூற்றுக்கணக்கான கோவில்களை கட்டியவரும் சோழரே என்பர். சோழர்கள் ஆங்காங்கு எடுப்பித்த கற்றளிகளே இன்றும் அவர்தம் சமயப்பற்றை விளக்குவனவாகும். பிற்காலச் சோழப் பேரரசு விசயாலயனுடன் தோன்றியது. சோழப் பேரரசர்கள் இறைபக்தி மிக்கவர்கள். அவர்கள் ஊட்டிய சமய வளர்ச்சியால் கோவில்களும் மடங்களும் விளைந்தன. சோழ அரசைத் தஞ்சையில் நிலைநாட்டிய விசயாலயன் அங்கு **'நிசும்பசூதனி'** என்ற பெயரால் கோவில் அமைத்தான். விசயாலயச் சோழனின் இறைபணிக்கு எடுத்துக்காட்டாய் விளங்குபவை நார்த்தா மலையில் உளள விசயாலயச் சோழீச்சுரம் என்ற அழகிய கற்றளியும், சோழீச்சுரமிடையார் கோவிலும் காளியபட்டி மணங்குடி சிவன் கோவில்களும் ஆகும்.

விசயாலயனும் ஆதித்தனும் : விசயாலயனுக்குப் பின்னர் ஆதித்தன் பேரரசனுயினன். அக் காலத்தில் பாடல் பெற்ற தலங்களும் பாடல் பெறுத தலங்களும் இருந்தன. அக் கோவில்களைப் புதுப்பிக்க ஆதித்தன் மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டுக்கு உரியன. பாடல்பெற்ற கோவில்கள் அழியத்தக்க மரம், மண் ஆகியவற்றுல் ஆனமையால் அவை அழியாமல் இருக்க வேண்டி அவற்றைக் கற்றளிகளாக மாற்றினன். சமய வளர்ச்சிக்குத் தாயகமான கோவில்கள் அழியாமல் இருந்தாலே சமயம் வளர முடியும் என்பதை உணர்ந்திருந்தான்.

முதல் ஆதித்த சோழன் காவிரியாற்றின் இருமருங்கும் பல சிவாலயங்களைக் கற்றளிகளாக எடுப்பித்தான் என்று அன்பில் செப்பேடுகள் கூறுகின்றன. சைவத் திருமுறைகளுள் முதல் ஏழும் தொகுத்த 'நம்பியாண்டார் நம்பி'என்ற பெரியார் இவனது ஆட்சியின் இறுதிக் காலத்தில் வாழ்ந்தவர்.

முதல் பராந்தகச் சோழன் : முதல் பராந்தகச் சோழன் சிறந்த சிவபக்தன். தில்லையில் சிற்றம்பலத்திற்கு பொன்னூல் மேற்கூரை வேய்ந்தான். திருநாமநல்லூர் (திருநாவலூர்) திருவிடை மருதூர், திருவாடுதுறை, திருச்செந்தூர், உறையூர் ஆகிய ஊர் களிலுள்ள சிவன் கோயில்கள் கற்றளிகளாக ஆக்கப்பட்டன.

கண்டராதித்தன் : கண்டராதித்த சோழன் சிவபக்தி மிக்கவன். தில்லையில் நடம்புரியும் சிவபிரான் மீது இவன் பாடிய திருப்பதிகம் ஒன்று சைவத்திருமுறைகளுள் ஒன்றாகிய ஒன்பதாம் திருமுறையில் உள்ளது. சைவ சமயத்தில் இவன் பெரிதும் பற்றுடையவனாகயிருந்தாலும் வைணவம் சமணம் முதலான புறச் சமயங்களிடத்தில் சிறிதும் வெறுப்புக் காட்டியவனல்லன். இந்திய வரலாற்றில் வேறு எந்த அரசியும் செய்யாத சேயலை இவன் மனைவி செய்தார். பாடல் பெற்றக் கோவில்களைக் கற்றளிகளாக மாற்றினர். செம்பியன்மாதேவி என்ற அம்மையார் தம் பெயரால் ஊர் ஒன்றை நிறுவிச் சிவன் கோவிலைக் கட்டினான். கண்டராதித்தச் சதுர்வேதி மங்கலம் என்ற நகரில் திருமாலுக்கு ஆலயமும், தென்னற்காடு மாவட்டம் பள்ளிச் சந்தல் என்னும் ஊரில் சமணப்பள்ளி ஒன்றும் அமைத்ததும் இவன் புறச் சமயத் தினரையும் நன்கு மதித்தவன் என்பதை விளக்கும் சான்று களாகும்.

சுந்தர சோழன் : இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரச் சோழனும் புத்தக் கோவில் ஒன்றும், திருமால் கோவிலை ஒன்றும் எழுப்பினான், சுந்தரச்சோழன் ஆளுகையில் துன்பத்தால் ஒல மிடாது சிவனை வணங்குங்கால் 'அர' என்று ஒலித்த ஒலிதான் கேட்கப்பட்டது என்று திருவேலங்காட்டுச் சேப்பேடுகள் கூறுகின்றன.

உத்தமச்சோழன் என்னும் அடுத்த அரசன் காலத்து இவன் தாய் செம்பியன் மாதேவியார் ஆடுதுறையில் ஆபத்சகாயர் கோவிலையும் திருவாரூர் அறனெறி திருக்கோவிலையும் எடுப்பித்தார்.

முதலாம் இராசராசன் : அடுத்து ஆட்சிக்கு வந்த இராச ராசன் தனது வெற்றியும் புகழும் எங்கும் நிலவிட, நாடு முழுவதும் அமைதியாக இருந்தமையின் தன் எண்ணத்தைக் கடவுள் திருப்பணியில் செலுத்தி இராசராசேச்சுரம் என்னும் பெரிய கோவிலை எடுப்பித்தான். சோழர்களின் கோவில்களுள் சிறந்து விளங்குவது தஞ்சைத் தாழ் தேவந்தனின் பெரிய கோவிலே

யாகும். இராசராசனுடைய அளவுக் கடந்த சைவப்பற்றும் பரந்த சமயநோக்கும், இப் பெரிய கோவில் விமானங்களிலும், மற்றும்பல பாகங்களிலும் மலிந்து கிடக்கும் சைவ வைணவ புராண சம்பந்தமான சிலைகள் சிற்பங்கள் ஆகியவற்றால் அறிவுறுத்தப்படுகின்றன. (பெரிய கோவில் குறித்துப் பின்னிணைப்பில் காண்க.)

இராசேந்திர சோழன்: இராசேந்திர சோழன் தன் தந்தையைப் போல் சிவநெறியையே தனக்குரிய சமயமாகக் கொண்டு சிவபெருமானிடத்து ஒப்பற்ற பக்தி கொண்டு திகழ்ந்தான். சிவநெறியின் அறுவகைப் பிரிவுகளுள் ஒன்றாகிய காளாமுகத்தைச் சார்ந்த லகுளிச பண்டிதரும் இவனால் ஆதரிக்கப் பட்டனர். நாகப்பட்டிணத்தில் கடாரத்தரசனால் எடுப்பிக்கப் பட்ட புத்தக் கோவிலுக்குப் பள்ளிச் சந்தமாக இவன் தந்தை அளித்த ஆனைமங்கலம் என்ற ஊர் இவன் ஆட்சிக் காலத்தில் சாசனம் மூலமாக அதற்கு வழங்கப்பட்டது. இராசேந்திர சோழனின் சமயப் பொறை உணர்விற்கு இது எடுத்துக்காட்டு. முதல் இராசேந்திரசோழன், இரண்டாம் ராசேந்திர சோழன், வீரராசேந்திர சோழன், அதிராசேந்திர சோழன், ஆகியோரும் சிறந்த சிவ பக்தர்களாகவே விளங்கினர்.

முதற் குலோத்துங்கன்: முதற் குலோத்துங்கன் தன் முன்னோரைப் போலவே சைவநெறியைச் சிறப்பாகக் கைக்கொண்டு ஒழுகியவன். சிவபெருமானிடத்தில் எல்லையற்ற பேரன்பு உடையவனாய்த் திகழ்ந்தமையால் 'திருநீற்றுச் சோழன்' என அழைக்கப் பட்டான். இராசேந்திர சோழப் பெரும்பள்ளி என்னும் புத்த விகாரத்திற்குச் சிறந்த விளை நிலங்களைத் தம்பாற் கொண்ட சில ஊர்களை,

> இம்மன்னனும் எல்லாச் சமயங்களிடத்துப் பொது நோக்குடையவன்.

என்பதனை மெய்ப்பிக்கின்றது.

விக்கிரமச் சோழன்: விக்கிரம சோழன் என்னும் அடுத்த வேந்தனின் காலத்தில் தில்லையில் திருப்பணிகள் பல செய்யப் பட்டன. ஆனால் இரண்டாம் குலோத்துங்க சோழனின் காலத்தில் நடைபெற்றதாக கூறப்படும் செய்திகள் அம் மன்னன் பிறச் சமயத்தவரைச் சரியான முறையில் மதித்திடவில்லை என்பதனைக் கூறுகின்றன. தில்லையில் இருந்த திருமால் அலைகடலில் எறிந்தான் என்று ஒட்டக்கூத்தர் தம் நூல்களில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந் நிகழ்ச்சி திருமால் மீது அவன் கொண்ட வெறுப்பைக் காட்டுவதல்ல. அப்படித் தீவிர சைவனாய் இருந்த

தால் பிற இடங்களிலும் - இருந்த திருமால் மூர்த்தங்களையும் கடலில் எறிந்திருக்கக்கூடும், அவ்வாறு செய்யவில்லை என்பதை வரலாற்று அறிஞர்கள் எடுத்துக் காட்டுகின்றனர்.

இரண்டாம் இராசாதிராசன்: இராசாதிராசன் தில்லைக் கூத்தனிடத்துத் திடமான பற்றுக்கொண்டவன். தன் தந்தை திருமாலை அலைகடலில் கிடத்தியமை பற்றி வைணவர்கள் மனம் புண்பட்டிருந்தலை உணர்ந்து தன் ஆட்சியில் சான்றோர்க்கு ஆதரவளித்து அவர்கள் உளம் குளிரச் செய்தான்.

மூன்றும் குலோத்துங்கன்: சோழ மன்னர்கள் எல்லாருமே சைவ நெறியைக் கைகொண்டு ஒழுகியவர் எனலாம். மூன்றும் குலோத்துங்கனும, சைவ சமயத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தான். சிவாலயங்களுக்கு திருப் பணிகள் பலச் செய்வித்தான் என்பதனைச் சிவன் கோவில் கல்வெட்டொன்று உணர்த்துகிறது.

மூன்றும் இராசராசன்: மூன்றும் இராசராசன் சைவம், வைணவம், சைனம் முதலிய சமயங்களைத் தன் முன்னோர்களைப் போல ஆதரித்துள்ளான். இவன் காலத்தே சிவஞான போதம் என்ற ஒப்பற்ற நூல் எழுதப்பட்டது.

மூன்றும் இராசேந்திர சோழன்: மூன்றும் இராசேந்திர சோழனுக்குப் பின் பட்டம் பெற்று சோழ நாட்டை அரசாண்ட சோழ மன்னன் ஒருவனில்லை. இக் காலத்திற்குப் பின்னர் சோழ மண்டலத்தின் மீது அந்நியர்களின் படையெடுப்புத் தொடர்லாயிற்று. இதன் விளைவாகக் கோவில்கள் கவனிப்பாரற்றுப் போயின. இஸ்லாமியர்கள் கோவில்களைத் தகர்த்தும் செல்வங்களைக் கொள்ளைக் கொண்டும் போயினர்.

சமய இலக்கியம்: சோழர்களின் காலத்தில் சிறப்புமிக்கப் புலவர்களான புகழேந்தி, ஒட்டக்கூத்தர், செயங்கொண்டார் போன்ற புலவர் பெருமக்கள் வாழ்ந்தனர். சோழர்களின் காலத்தில் உருவான இலக்கியங்களில் திருத்தொண்டர் புராணம், திவ்விய சூரி சரிதம், குரு பரம்பரை, வீர சோழியம், கலிங்கத்துப் பரணி, உலாப் பாடல்கள், குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், கம்பராமாயணம் போன்றவை குறிப்பிடத் தக்கவை.

சைவ, வைணவ, சமண சமய இலக்கியங்கள் சோழர்களின் காலத்தில் ஏற்றம் பெற்றன. திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெரிய புராணம் சேக்கிழாரால் இயற்றப்பட்டது. இது

ஐந்தாவது வேதம் என அழைக்கப்படுகிறது. திருவிளையாடற் புராணம், திருமுறை கண்ட புராணம், இராமானுஜர் நூற்றந் தாதி ஆகியவையும் குறிப்பிடத் தகுந்தவையே சைவ சமயக் குரவர்களின் பாடல்களின் பாடல்களைத் தேடிக் கண்டுப்பிடித்துத் தொகுத்துத் தமிழுக்கும் சைவத்திற்கும் சோழர்கள் அரும்பணி புரிந்தனர். அமிருதசர்கரர் எனப்படும் சமண சமயப் புலவர் யாப் பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்னும் நூல்களையும், பவணந்தி முனிவர் நன்னூல் என்னும் இலக்கிய நூலையும் வெளி யிட்டது இக் காலமே ஆகும்.

சோழர்களின் காலத்தில் அனைத்துக் கலைகளும் ஓங்கி வளர்ந்தன. சைவ சமயத்தின்மீது கொண்ட பற்றின் விளைவாக எழுப்பப்பட்ட ஆலயங்கள் பெரியதும் அழகு மிக்கதுமாய் அமைந்தன. தஞ்சைப் பெரிய கோயில் 'பெரிய கோவில்' என்ற பெயருக்கு ஏற்பப் பெரியதாயும், அழகுமிக்கதாயும் விளங்கு கின்றது. இப் பெரியகோவில் திராவிடக் கலைக்கு ஓர் எடுத்துக் காட்டு என்று கூறவேண்டும்.



படம் 7

சோழர் கால செப்புத் திருமேனி

சமயத் தொடர்பான ஓவியங்கள் அக்கால ஓவியர்களது சமய அறிவையும், நுண்கலைத் திறனையும் நன்கு உணர்த்துவன. பெரிய கோவில் கருவறைச் சுவரில் ஓவியங்கள் தீட்டப் பெற்றுள்ளன. அங்குள்ள ஓவியங்களில் இராசராசனது ஓவியமும், கருவூர் தேவர் என்பாரது ஓவியமும் வரலாற்றிற்குத் துணை புரிபவை. ஆலயங்களை எழுப்பியதன் மூலமாக அனைத்துக் கலைகளும் வளர்ந்தன. ஆலயங்களில் ஆடல், பாடல் அத்தனையும் அரங்கேற்றப்பட்டன. இறைவனது பெருமையைக் கூறும் இன்னிசை முழக்கங்கள் கேட்டன. ஆடல் மட்டுமா அரங்கேறியது? அருமையான நூல்களுமல்லவா அங்கே அரங்கேறின. திருவரங்கத்தில் இராமாயணம் அரங்கேறிற்று. இதற்கெல்லாம் காரணம் சோழர்களின் சமயப் பற்றே. சமயப்பற்று கலைகளை வளர்த்தது. நாடெங்கும், நகரெங்கும் கோவில்களை அமைக்க வழிவகுத்தது. நம் தமிழரின் பெருமையை உலகறியச் செய்ய உதவியது.

சிற்றரசர் ஆற்றிய பணிகள்: சோழப் பேரரசர்கள் மட்டுமின்றி அவருக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்களும் தமிழகத்தில் பல கோவில்களில் பலவகைத் திருப்பணிகள் செய்துள்ளனர். அவர்கள் மட்டுமின்றி அரசு அலுவலாளர்களும் குடிகளும் கூடத் திருப்பணி செய்தனர். அரசர் முதல் சாதசரணக் குடிமக்கள் வரைக் கோவிலை தம் உயிராகக் கருதி அதில் திருநந்தா விளக்கு எரிக்கவும் வழிபாடு நிகழ்த்தவும் ஏராளமான நிலபுலன்களையும், பாத்திரங்களையும், கால் நடைகளையும் வழங்கினர்.

கோவில் நிர்வாகம்: கோவில் நிர்வாகத்தினைச் சிலகாலம் மகேசுவரர் என்ற சைவத் துறவிகள் செய்து வந்தனர். சில கோவில்கள் கோவிலைச் சார்ந்த மடத்துத் தலைவர்கள் ஆட்சியிலும், சில கோவில்கள் ஊரார் மேற்பார்வையிலும் சில கோவில்களின் ஆட்சி ஊரவை, கோவில் ஆட்சிக்குழு, உருத்திர மாதேசுவரர் ஆகியோரிடமும் இருந்தது. எல்லாக் கோவில்களின் வரவு செலவு கணக்குகளும் அரசு அலுவலர்களால் தணிக்கை செய்யப்பட்டன.

தில்லைக் கோவில்: கோச்சோழன் காலம் முதல் தில்லை சைவ சமயத்தின் உயிர்நாடித் தலமாக விளங்கிற்று. மற்றக் கோவில்களுக்குத் தில்லைக் கோவில் நடுநாயகமானது. மற்றக் கோவில்கள் தில்லையில் ஒடுக்கம், எனவே கோவில்களில் இரவு பத்து மணிக்குள் அர்த்தயாமப் பூஜை முடித்திடச் சரியாகப் பத்து மணிக்கே தில்லையில் அர்த்தயாமப் பூஜை தொடங்கப் பெற்றது.

கல்லூரிகள்: திருமுக்கூடல், எண்ணாயிரம், திரிபுவனை, திருவொற்றியூர், வேம்பற்றூர், திருவாடுதுறை முதலிய இடங்களில் கல்லூரிகளும், பலவகைச் சரித்திர நூல்நிலையங்களும் இருந்தன என உரைக்கப்படுகிறது. இரண்டாம் இராசராசன் தான் கட்டிய கோவிலிற் சுவாமியின் கருவறைப் புறச் சுவர்கள் மூன்றிலும் நாயன்மார் வரலாற்று நிகழ்ச்சிகளைச் சிற்பமாக செய்வித்து, கீழே பெரிய புராண விளக்கமும் வெட்டுவித்தனர்.

நாயன்மார்க்கு விழா: பல்லவர் காலத்தில் வாழ்ந்து மறைந்த நாயன்மார்களுக்கு உருவச் சிலைகளும், தனிச் சிறு கோவில்களும் அமைத்து விழா எடுத்தனர். சோழ அரசர்கள் ஆலயத் திருவிழாக்களை அதில் கலந்து நேரில் கண்டு களித்தனர். தமிழகத்துக் கோயில்களைக் காணவும், விழாக்களில் கலந்து கொள்ளவும் வடநாடுகளிலிருந்து பயணிகள் வந்தனர்.

கோயிற் பெண்டிர்: விழாக்களில் நாடகங்கள் நடிக்கப் பட்டன. தஞ்சைப் பெரியக் கோவிலில் இராசராசேசுவரர் நாடகம் நடித்துக் காட்டப்பட்டது. முதற் குலோத்துங்கன் காலத்தில் பூம்புலியூர் நாடகம் என்ற ஒன்று செய்யப்பட்டது. ஆலயங்களிலிருந்து சமயப் பணியாற்றிய மகளிர் 'தேவரடியார்' எனப்பட்டனர். இவர்கள் கோவில்களில் திருவலகிடல், திரு மெழுகிடல், படையல், அரிசியைத் தூய்மைப் படுத்துதல், திருப் பதக்கம் பாடல் ஆகிய பணிகளைச் செய்து வந்தனர். இறை படிவங்களுக்குக் கவரிவீச இருந்த பெண்கள் 'கவரிமிக' எனப் பட்டனர். தேவரடியார் சிலர் நடனமாடவும் அறிந்திருந்தனர். 'நளிர் சேரிப் பெண்கள்' என அழைக்கப்பட்டவர்கள் கோவி லுக்கு வெளியே குடும்பமாக வாழ்ந்தவர்கள். வைணக் கோவில் களில் இருந்தவர் 'ஸ்ரீவைணவ மாணிக்கம்' எனப் பெயர் பெற்றனர்.

நூல்கள் படிக்கப்படல்: மக்களுக்குச் சமயப்பற்றை உண்டாக்கவும், ஒழுக்க வாழ்க்கையை வளர்க்கவும், பாரதம், பிரபாகரம், இராசராசவிசயம், சிவதருமம், பாரதம், இராமாயணம், புராணங்கள், திருஞானம், சோமசித்தாந்தம், போன்ற நூல்கள் கோவில்களில் படித்து விளக்கப்பட்டன. இவை தவிர முதல் குலோத்துங்க சோழன் சரிதை, கன்னிவனப் புராணம், வல்லை அந்தாதி ஆகிய நூல்களும் படிக்கப்பட்டன. ஆளுடை நம்பி எனப்படும் ஸ்ரீ சுந்தரரின் புராணம் படிக்கப்பட்டதை இரண்டாம் இராசராசன் கேட்டான் என ஒற்றியூர்க் கல்வெட்டுக் கூறுகிறது

பொது இலக்கியங்கள்: சோழர் காலத்தில் செய்யப்பட்ட திருமுறைகள், பதினேராம் திருமுறைப் பாடல்களும், ஒன்பதாம் திருமுறையும், சேக்கிழார் இயற்றிய பெரிய புராணமான பன்னிரண்டாம் திருமுறையும் ஆகும். மூவருலாப் பாடிய ஒட்டக் கூத்தர் தக்கயாகப் பரணி பாடினர். சங்க காலத்திற்குப் பின்னர் தமிழராய சோழர் ஆட்சியில் தமிழ் நாட்டு நாயன்மாரைப் பற்றிய தமிழர் தமிழ்க் காவியம் பன்னிரண்டாம் திருமுறையேயாகும். இந் நூலிலிருந்து சேக்கிழாருடைய இல்க்கியப் புலமை, இலக்கணப் புலமை, திருமுறைப் புலமை, இசை, நடனம், மருத்துவம், வான நூல் முதலிய புலமை, சைவ சித்தாந்த அறிவு ஆகிய வற்றை அறியலாம். கல்லாடம் என்னும் நூலை இயற்றியவர் கல்லாடனர் ஆவார். இன்றுவரை அச்சேறாத நூல் ஒன்று உள்ளது. தில்லையிலுள்ள கூத்தபிரான் உலாவினை விளக்கிய நூல் தில்லை உலா ஆகும். திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், திருஞானப் போதம், சிவஞானச் சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போன்றிப்பஃறொடை, கொடிக் கவி, நெஞ்சுவிடு தூது, சப்கற்பநிராகரணம், உண்மை நெறி விளக்கம் ஆகியவை சைவ சித்தாந்த சாத்திரங்கள் ஆகும்.

சோழர்களின் ஆட்சிமுறை

முடியாட்சி: சோழர்கால ஆட்சி அமைப்பு முறை சங்க காலத்தைப் போன்று முடியாட்சி முறையாகவே இருந்தது. சோழர்கள் சிறந்ததொரு ஆட்சிமுறையினை நடத்தினர். தன்னுட்சிப் பெற்ற கிராமமே அரசின் பிரிவாக விளங்கிற்று. பல கிராமங்கள் ஒன்றாக இணைந்த பகுதிகள் கூற்றம், நாடு, கோட்டம் எனப் பலப் பெயர்களில்-பல இடங்களில் அழைக்கப் பட்டன. தனியூர் என அழைக்கப்பட்ட கிராமம், கூற்றம் என அழைக்கத்தக்கதாய் இருந்தது. தனியூர் இடைக்கால இங்கிலாந்தில் இருந்த பர்ரோ என்னும் அமைப்போடு ஒப்பிட்டுப் பேசப்படுகிறது. சோழர்களின் பேரரசு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

ஆட்சிப் பிரிவுகள்: அவ்வாறு பிரிக்கப்பட்ட மாநிலங்கள் மண்டலங்கள் என அழைக்கப்பட்டன. மாநிலங்களின் எண்ணிக்கை ஒவ்வோர் அரசர் காலத்தும் வேறுபட்டிருந்தது. சில அரசர்களின் காலத்தில் எண்ணிக்கை ஆறாகவும், சில அரசர்

களின் காலத்தில் எண்ணிக்கை எட்டாகவும் இருந்தது. இராச ராசசோழனின் காலத்தில் இலங்கைப் பகுதியைச் சேர்த்து எட்டு அல்லது ஒன்பதாக இருந்தது. ஒவ்வொரு மண்டலமும் பல கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கோட்டமும் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு நாடுகள் என அழைக்கப் பட்டன. நாட்டினுடைய கட்டுப்பாட்டினுள் கூற்றங்கள் என அழைக்கப்பட்ட கிராம ஒன்றியங்கள் இருந்தன. கீழ்நிலையில் இருந்த பிரிவுகள் அடிக்கடி பெயர் மாற்றம் செய்யப்பட்டன.

அரசர்: ஆட்சித்துறைத் தலைவராக விளங்கியவர் அரசரே யாவார். பேராசின் விரிந்த பரப்பும் அசன் நெல் வளமும் சோழப் பேரரசின் வலிமையையும் மதிப்பையும் அதிகப்படுத்தின. அரசு மிகவும் ஆடம்பரமாகவும் கவர்ச்சிக்க வகையிலும் அமைந் திருந்தது. அரசர், பேரரசர், சக்கரவர்த்தி என மன்னர் அழைக் கப்பட்டார். அரசர் அலுவல் குறிப்புகளில் உடையார் எனவே அழைக்கப்பட்டார். சோழ அரசர்கள் சிறப்புமிக்க பெயர்களைக் கொண்டு அதிகாரங்களும் நிரம்பப் பெற்றவர்களாக விளங்கி னர்கள். சோழ அரசர்களுக்கு ஆலோசனைக் கூறுவதற்கு இராஜகுரு என அழைக்கப்பட்டவர் இருந்தார். இராஜகுருக்கள் என ஈசான சிவாச்சாரியார், சர்வ சிவாச்சாரியார் ஆகியோரின் பெயர்களைக் கல்வெட்டுக்கள் எடுத்துரைக்கின்றன. விஜயாலய சோழனின் காலம் முதல் தஞ்சையே தலைநகராக விளங்கிற்று. இராசேந்திர சோழனின் காலத்தில் கங்கை கொண்ட சோழபுரம் தலைநகராகச் சிறிது காலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தாறை களின் தலைவர்கள் அரசரோடு நெருங்கிய தொடர்பு கொண்ட வர்களாய் இருந்தனர். அரசன் அடிக்கடி அவர்களுடன் ஆலோசனை கலப்பது வழக்கம். அரசு அலுவலர்களுக்கு நிலங்கள் மானியங்களாக வழங்கப்பட்டதோடு பல பட்டங்களை அளித்தும் அவர்கள் சிறப்பிக்கப்பட்டனர். உயர் அதிகாரிகள் பெருந்தரம் என்றும், சிறிய அதிகாரிகள் சிறுந்தரம் என்றும் அழைக்கப்பட்டனர்.

மண்டலத் தலைவர்: மண்டலங்களின் தலைவர்களாக இருந் தவர்கள் அரசர்களால் நியமிக்கப்பட்டவர்கள். அவர்கள் அரசருக்கு உறவினராகவோ அல்லது அரச வம்சத்தவர்க ளாகவோ இருந்தனர். மண்டலத் தலைவர் தொடர்ந்து மைய அரசரோடு தொடர்பு வைத்திருந்தார். அரசரிடமிருந்து வந்த ஆணைகளை ஏற்று நிறைவேற்றியதோடு தாம் மேற்கொண்டுள்ள பணிகளைப் பற்றியும் அரசர்க்குத் தகவல்கள் அறிவித்தார்.

எல்லாப் பதிவுகளும் இவரால் பாதுகாக்கப்பட்டன. இவரின் கீழ் எண்ணிறந்த அலுவலகர்கள் பணிபுரிந்தனர்.

பொது வருவாய்கள்: பொது வருவாய்கள் கிராமச் சபைகளிலுல் பணமாகவோ பண்டமாகவோ அல்லது இரண்டு மாகவோ வசூலிக்கப்பட்டன. நிலங்கள் தனிப்பட்டவர்களின் உரிமையாகவும், சமுதாயத்தின் உடமையாகவும் இருந்தன. குடியானவர்கள் நிலச் சொந்தக்காரர்களாக இருந்து விவசாயத்தை கவனித்து வந்தனர். அது மட்டுமின்றி வேறு வகைகளிலும் நில உரிமையாளர்கள் இல்லாத நிலையில் நிலங்களைக் கண் காணித்தனர் உள்ளூர் அரசும் மைய அரசும் விவசாயத்திற்குச் சிறப்பிடம் வழங்கின. விவசாயம் சிறந்திடச் சிறந்த நீர்பாசன முறை அவசியமாயிற்று. எனவே நீர்ப்பாசனத்தைக் கவனிக்கச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அரசின் பங்கு: கிராமச் சபைகளின் பணியில் மிக முக்கிய மான பணி கிராமக் குளத்தினை நல்ல நிலையில் பார்த்துக் கொள்வதாகும். முதலாம் இராசராச சோழன் காலத்தில் மொத்த வருவாயில் மூன்றில் ஒரு பங்கு அரசின் பங்காகப் பெறப்பட் டது. நிலத்தை நன்கு அளந்து அதன் பின்னரே அரசின்பங்கு நிர்ணயிக்கப்பட்டது. நிலத்தை அளக்கின்ற அத்தகைய முறை களைப் பின்பற்ற ஆணையிட்டவர்கள் முதலாம் இராசராச சோழனும், முதலாம் குலோத்துங்கனுமாவர். நிலங்களைப் பிரிக் கின்ற முறையில் அடிக்கடி மாறுதல்கள் செய்யப்பட்டதைட போலவே நில வருவாயை மதிப்பிடுவதிலும் அடிக்கடி மாறு தல்கள் செய்யப்பட்டன.

நில வருவாய்: நில வருவாய் தவிர அரசுக்கு சுங்கவரி, இறக்குமதிவரி, தொழில்வரி, அரங்கங்கள், காடுகள், உப்பளங்கள் ஆகியவற்றிலிருந்து கிடைத்த வரிகள் ஆகியவை சேர்ந்தன. இவ் வரிகள் விதிக்கப்பட்ட நோக்கம் நிலவரி நிலையாகப் பெறத்தக்கது அன்று என்பதால்தான் என அறி கிறோம். பஞ்சங்களும், வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டால் அதன் விளைவாக நிலவரி எதிர்பார்த்த அளவு கிட்டாது. சில சந்தர்ப் பங்களில் ஊதியம் இன்றி மக்கள் அரசில் பணியாற்ற நேரிட்டது, நிலமானியத் தலைவர்கள் இருந்தபடியால் மக்கள் மீது வரிச்சுமை அதிகரித்தது. நிலவரி செலுத்தப்படவில்லை என்றால் எந்த நிலத்திற்கான வரி செலுத்தப்படவில்லையோ அந்த நிலத்தை விற்கின்ற உரிமை அரசருக்கு இருந்தது. கோவிலைச் சார்ந்த நிலங்கள்கூட இதற்கு விதிவிலக்காக இல்லை.

செலவினங்கள்: இனி அரசுக்கு எவ்வகையில் செலவினங்கள் ஏற்பட்டன என்பதனைக் காண்போம். அரசனுக்கும் அரசவைக்கும் ஆன செலவுகள் அரசின் வருவாயிலிருந்தே பெறப்பட்டன. அதைத் தவிரப் படைகளுக்கான செலவும், சாலைகள், நீர்ப்பாசன வசதிகள், ஆறு, குளங்கள் மேற்பார்வையிடல் ஆகியவற்றிற்கான செலவுகளும், ஆலயங்களுக்கு அளிக்கப்பட்ட மானியங்களும் முக்கிய செலவினங்களாக இருந்தன.

பொதுப் பணி: சோழ அரசர்கள் பொதுப் பணிகளுக்காக அதிகம் பணத்தைச் செலவிட்டனர். சோழ அரசர்கள் சாலைகள், பாலங்கள், படகுத்துறைகள் ஆகியவற்றை நிர்வகித்தனர். தண்ணீரை, சேமித்துத் தேவைப்படும்போது சிறுசிறு கால்வாய்கள் மூலமாக நீர்ப்பாசனத்திற்குப் பயன்படச் செய்வதற்காக அணைகள் பல கட்டப்பட்டன.

படை: சோழ அரசர்கள் நிலையான பெரிய படையினையும், நிர்வகித்தனர். சோழர்களின் படை, யானைப்படை, குதிரைப் படை, காலாட்படையென்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இராணுவத்திற்குச் சிறந்த பயிற்சியும் ஒழுக்கமும் கட்டுப்பாடும் வலியுறுத்தப்பட்டன. மொத்தப் படையின் எண்ணிக்கை 1,50,000 என மதிப்பிடப்பட்டது. படையில் இருந்தவர்கள் **கைக்கோளர்கள்** அல்லது **செங்குந்தர்கள்** என அழைக்கப்பட்டனர். வேலைக்காரர்கள் என்று சொல்லப்படுபவர்கள் அரசனின் பாதுகாவலர்களாக விளங்கினர். தங்களுடைய உயிர் அழிந்தாலும் அரசருடைய உயிரைக் காப்பதாக அவர்கள் சபதம் எடுத்துக்கொண்டிருந்தனர். அது மட்டுமின்றி இறந்துவிட்ட அரசனின் சிதையில் பாய்ந்து உயிர்விடவும் சித்தமாயினர். குதிரைப் படைகளுக்குத் தேவையான குதிரைகள் அரேபியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன ஆனால் அவைகள் இந்தியாவின் தட்பவெப்ப நிலையை தாங்க மாட்டாது அதிக நாட்கள் வாழவில்லை. அரசர்களும் இளவரசர்களும் படைத்தலைமைத் தாங்கி நடத்தி சென்றனர் என்பதற்கு சான்றுகள் ஏராளமாக உள்ளன. இரண்டாம் இராஜாதித்தியனும் முதலாம் இராஜாதிராஜனும் முறையே தக்கோலம், குப்பை ஆகிய போர்க்களங்களில் இறந்தனர்.

படைத் தளபதி: படைத் தளபதிகளாக விளங்கியவர்கள் **நாயகர்கள், சேனாபதிகள், மகாதண்ட நாயகம்** என்றழைக்கப்பட்டனர். தளபதிகளில் வெள்ளாளர்களும், பிராமணர்களும் மற்றவர்களும் இருந்தனர். போரில் சிறந்து விளங்கியவர்கள்

க்ஷத்திரிய சிகாமணி என அழைக்கப்பட்டனர். சோழ அரசர்கள் எவ்விதமான நீதிநெறிகளையும் போர்க்களத்தில் பின்பற்றவில்லை. குழந்தைகளாய் இருந்தாலும் பெண்களாயிருந்தாலும் விதிவிலக்கு ஏதும் அளிக்கப்படவில்லை. சோழ அரசர்கள் சிறந்த கப்பற் படையினை வைத்திருந்தார்கள். தப்பற் படையின் வலிமையினால் கடல் கடந்து சென்று அயல்நாடுகளைக் கைப்பற்றினர். சோழ அரசர்கள் சோழ மண்டலக் கடற்கரையினையும் மலபார் கடற் கரையினையும் தங்கள் அதிகாரத்தில் வைத்திருந்தனர்.

கிராம அவை : சோழர் ஆட்சியில் குறிப்பிடத்தகுந்த அம்சம் கிராமச் சுய ஆட்சியாகும். கிராமங்களிலும், நகரங்களிலும் அவைகள் இருந்தன. கிராம ஆட்சிமுறையினைப் பற்றி அறிந்துகொள்ள உத்திரமேரூர்ச் சாசனங்கள் நமக்குத் துணை புரிகின்றன.

அவையும் ஊரும் : அநேகக் கிராமங்களில் ஊர் என அழைக்கப்பட்ட கிராம அவைகள் இருந்தன. ஆனால் அவைகளின் அமைப்பு முறை பற்றிய செய்திகள் ஏதும் தெளிவாகத் தெரிய வில்லை. சில சந்தர்ப்பங்களில் ஊர் எனும் அவை, மகாஅவை யோடு சேர்த்துப் பேசப்படுவதைக் காண்கிறோம். திருவேலங் காட்டுச் சாசனம் என்றில் மகா அவையும், ஊர் எனும் சபையும் பற்றிய குறிப்புகளைக் காண்கிறோம். சபை, ஊர் ஆகியவை ஆற்றிய பணிகளைப் போன்ற பணிகளை ஆற்றிய நகரத்தார் எனும் குழுவை பற்றிய செய்தியையும் நமக்கு வரலாறு அறிவிக்கிறது. பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி அவர்கள் நகரத்தார் எனும் குழுவினர், வாணிபக் குழுவினர் என்று கருது கின்றார். பின்னர் நாட்டார் எனப்படும் பிரிவு மண்டலத்தைவிட சிறியதாய்க் கிராமத்தைவிடப் பெரியதாய் விளங்கிற்று.

வாக்குச் சீட்டு : மக்களரசு என்பது இக் கால மக்கள் வாழ்க்கையில் தோன்றிய புதிய அரசியல் முறை. அதனைச் சோழர் காலத்திலும் இருந்தது எனத் தேர்தல், வாக்குச்சீட்டு என்னும் சொற்கள் கிடைத்ததைக் கொண்டு முடிவு கட்டிவிடக் கூடாது.

கிராம ஆட்சி : சோழர்கால கிராம ஆட்சி குறித்து அறிஞர் பெருமக்களிடையே கருத்தொற்றுமையின்மை காணப்படுகிறது. சாசனங்களின் பொருள் குறித்து டாக்டர் நீலகண்ட சாஸ்திரி யாரும், டாக்டர் வெங்கையாவும் மாறுபட உரைக்கின்றனர். நாம் புரிதுவாகக் காணப்படுகின்றவற்றை மட்டும் கொள்ளுதல் ஏற்புடையதாகும்.

மக்கள் ஆட்சி : கிராம அவைகள் மக்கள் ஆட்சியில் பெரும் பங்கு கொண்டன. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பெரும் அவையும், தனித்தனிப் பணிகளைக் கவனிக்கச் சிறு உள்அவை களும் இயங்கின. அவை வாரியங்கள் என அழைக்கப்பட்டன. ஊரில் விளையும் பொருள்களைப் பொதுவாக வாங்கவும், விற்கவும் சிலரை இச் சபையார் ஏற்பாடு செய்திருந்தனர். பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படாது தடுக்கவும், பொருள்களின் விலைகள் ஏறியும், இறங்கியும் மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகை செய்யவும் ஒரு நல்ல முறையினை ஏற்பாடு செய்திருந்தனர். இவ் வவையினர் தேர்வு முலமே தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ் வூர் அவைகளைத் தவிர்த்து ஆலய நிர்வாகத்திற்கெனவும், அறங்களைக் காப்பதற்கு எனவும் தனித்தனி அவைகள் இருந்தன.

தேர்தல் முறை : தேர்தல் முறையினை நோக்குகின்றபோது கலந்து கொள்ளுதல் கூடாது என சிலருக்குத் தடை விதிக்கப் பட்டிருந்தது. தேர்தலுக்கு முந்திய மூன்று ஆண்டுகளில் கலந்து கொள்ளுபவர்களோ, அவர்களுடைய உறவினர்களோ எந்த வாரியத்திலும் பணியாற்றி இருத்தல் கூடாது. கொலைக் குற்றங்கள், திருட்டுக் குற்றங்கள் செய்தவர்களும் அனுமதிக்கப் படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட **முப்பது பேர்களில் பன்னிருவர் பொது வாரியத்தையும், பன்னிருவர் கோட்டை வாரியத்தையும் அறுவர் ஆறு, குளம்** ஆகியவற்றை மேற்பார்வையிட்டனர். இவை தவிர இரண்டு தனி வாரியங்களும் இருந்தன.

வாரியங்கள் : எம்முறையில் தேர்தல் நடைபெற்றது என ஆராயும்போது யார் யார் தகுதி வாய்ந்தவர்களோ அவர்களின் பெயர்கள் பனை ஓலைகளில் எழுதப்பட்டு ஒரு குடத்தினுள் போடப் பட்டன. பின்னர் அவ் வோலைகள் யாராவது ஒரு சிறுவனைக் கொண்டு எடுக்கப்பட்டன. இம் முறையினைக் **குடவோலை முறை** என அழைத்தனர். வாரியங்கள், எண்ணிக்கையில் கிராமத் திற்குக் கிராமம் வேறுபட்டிருந்தன. உறுப்பினர்களுக்கு அவர்கள் ஆற்றும் பணிகளுக்காக ஊதியம் ஏதும் வழங்கப் படவில்லை. இவ் வாரியங்களின் உறுப்பினர்கள் வாரியப் பெருமக்கள் என அழைக்கப்பட்டனர். இவ் வுறுப்பினர்கள் பெரும்பாலும் கிராமக் கோவில்களிலேயே கூடினர். சிற்சில சமயங்களில் மரநிழலிலோ, குளக்கரையிலோ கூடினர்.

கிராம நிர்வாகம் : கிராம அவைகள் கிராமத்தினுடைய நிர்வாகப் பொறுப்பினை மேற்கொண்டன. அரசுக்குச் சேர

வேண்டிய வருவாயை வசூலித்ததோடல்லாமல் கிராமங்களின் நீதி நிர்வாகத்தையும் கவனித்துக் கொண்டன. அதுமட்டுமின்றி எல்லாவகையான பொது அறக்கட்டளைகளுக்கும் அறங்காவலர் களாகத் திகழ்ந்தன. சந்தைகளையும் கிராம அவையினரே நிர்வகித்து வந்தனர். பொதுக் காரியங்களை முன்னிட்டு அதிக வரி வசூலிக்கும் உரிமை பெற்றவைகளாகத் திகழ்ந்ததோடு கட்டாய உழைப்பைப் பெறும் அதிகாரமும் பெற்றிருந்தன. பொதுவாக வழக்கத்தில் வரும் வரிகளைத் தவிர்த்துப் புதுவரி விதித்தால் அவையோர் அவ் வரியால் பாதிக்கப்படுவோரை அழைத்து விசாரித்து நன்மை தீமை அறிந்தே வரி விதிப்பர். கிராமங்களில் பஞ்சம் ஏற்பட்டபோது கிராம சபைகள் கிராம மக்களுக்குத் தேவையானவற்றை வழங்கி உதவி செய்தன. அது போன்ற சந்தர்ப்பங்களில் ஆலயங்களில் நிறைந்து இருந்த வற்றை எடுத்து வழங்கினர். இச் சபைகளின் கடமை ஆலயங் களில் இறை வழிபாடும், அந் நிலையங்களில் அறம் வழங்குதலும் முறைப்படி நடத்திடுவதை மேற்பார்வையிடுவதுமாகும்.

அபராதம் : கிராம அவைகளே கிராமங்களின் மீது அதிக அதிகாரம் செலுத்தும் ஆற்றல் பெற்றவைகளாக விளங்கின. அரசுக்குச் சேரவேண்டிய வரிப்பணம் முறையாகச் சேர்ந்திடுவ தற்குப் பொறுப்பாளிகளாக விளங்கியவர்கள் கிராமச் சபை யினரே. அரசுக்கு சேரவேண்டிய தொகையை அனுப்பாமையால் கிராம அவை உறுப்பினர்கள் சிறை செய்யப்பட்டனர் எனக் கூறப்படும் குறிப்பு ஒன்று நமக்குக் கிடைத்துள்ளது. அதைப் போலவே கடமை தவறிய சந்தர்ப்பங்களில் கிராம அவை யினருக்கு அபராதம் விதிக்கப்பட்டது எனவும் அறிகிறோம். அரசனுக்கு அவ்வப்போது ஆலயங்களில் நடைபெறும் ஊழல் களைத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பும் கிராம அவை யினுடையதே ஆகும்.

தானம் : சோழர்கால நீதிமுறையினை பற்றிய கல்வெட்டுக்கள் ஏதும் இல்லை. ஆயினும் சில தானக் கல் வெட்டுக்களை நோக்கு மிடத்துப் பாவம் செய்வார் மிகக் கடுமையாகத் தண்டிக்கத் தக்கவர் எனத் தோன்றுகிறது. இலக்கியச் சான்றுகளில் சிறப்பாகப் பெரியபுராணம் ஒரளவிற்கு நீதிமுறை பற்றிய வரலாற்றினை நமக்கு அறிவிக்கின்றது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள மக்களின் ஊர் அவைகளே அவ்வூரின் பழக்க வழக்கங்களுக்கும், நியதிக்கும், முறைக்கும் ஏற்ப நீதி வழங்கின. ஆகையால் அப் பொறுப்பினை அரசன் ஏற்றுக்கொள்ள வில்லை.

நீதித்துறை: இக் காலத்தில் இருப்பதுபோல உரிமைச் சட்டம் குற்றச்சட்டம் என வேறுபாடு நீதியில் காணப்படவில்லை. தவறு செய்வோரைத் தண்டிக்கும்முறை ஊர் அவையிடமே இருந்தது. தவறுகளைக் காணப் பல வழிமுறைகள் இருந்தன. பெரியபுராணம் சுந்தரருக்கும், முதியவருக்கும் நடந்த வழக்கினை வேதியர் தீர்த்ததைக் காட்டுகிறது. உண்மை உணருவதற்காக 'ஆட்சியில், ஆவணத்தில், அன்றிமற்று அயலார் தங்கள் காட்சியில், மூன்றில் ஒன்று காட்டுவாய் ஊர் சபையார் கிழவரைக் கேட்டனர். அவர் ஆவணம் காட்டி வென்றார் திருடு, பொய்க் கையொப்பம் ஒழுக்கக்குறை முதலியன பெருங் குற்றங்களாகக் கருதப்பட்டன. அரசக் குடும்பத்தவர்கள் இக் குற்றங்களை செய்யின் அரசனே விசாரித்துத் தண்டிப்பான் அரசியல் அதிகாரிகளாயின் அமைச்சரும், மற்றவர்களாயின் ஊர் அவையினரும் தண்டித்தனர்.

நில அமைப்பு முறை: இனி, நில அமைப்புமுறை பற்றி காண்போம். பிற்காலச் சோழர் காலத்தில் மூன்று முறையில் நிலங்களை அளந்து நீர்ப்பாசனம், விளைவு, பிறவகைப் பாகு பாடுகள் ஆகியவற்றை ஒட்டி அவற்றிற்கு வரி விதித்தனர். பயிரிடும் நிலம் போகப் பொதுப் பயனுக்காக ஊர்மத்தம், அரசுக்குரிய புறம்போக்கு, பறைச்சேரி முதலிய இடங்களை வரியிலிருந்து விலக்கியிருந்தனர். விதித்த வரியை வசூலிக்கக் குடிகளைக் கொடுமைப் படுத்துவதில்லை. வரி வசூலிப்பதற்குக் கொடுமை செய்த அதிகாரி அதற்குக் கழுவாயாக கோவிலுக்கு விளக்கிட்டார் என்று அறிகின்றோம். எனினும் வரிகொடா எல்லைக்கடந்தால் உரிய நிலத்தை ஏலமிடுவதுண்டு. விளையா விடில் வரி தள்ளுபடி செய்யப்பட்டது. விளையும் பொருட்களை சேர்த்துவைத்ததோடு பொதுப்பணிக்கும் உதவினர்கள். நாட்டின் பல ஊர்களுக்கும் வாணிப தொடர்பு இருந்து வந்தது. வாணிகம் சிறந்து இருந்தமையால் நல்ல போக்குவரவு சாலைகளிருந்தன. அயலார் வாணிகத்தில் சில வரி விதிப்புகளை செய்திருந்தனர். கடனுக்காக அடமானப் பத்திரம் எழுதும் வழக்கம் இருந்தது. நூற்றுக்கு பன்னிரண்டரை சதவிகிதம் வட்டி வழங்கப்பட்டது. விற்கும் நிலத்திற்கு எல்லைகளைக் குறித்தனர். உள்நாட்டு வாணிகமேயன்றி கடல் வாணிகமும் இருந்தது.. வாணிகம் பெருகவே அதன் விளைவாக அதன் துணைக்காக அளவு, நாணயம் முதலியன ஒழுங்கு செய்யப் பட்டன.

அளவைகள்: கழஞ்சு, மஞ்சாடி, கச்சாணம், ஐம்பொன் ஆகிய நாணயங்கள் இருந்தன. நிறுத்தல், மூகத்தல் அளவை

களும் இருந்தன. பொன் நிறைக்கு ஆடவல்லான் எனும் தராசு இருந்ததோடு, ஆடவல்லான் என்னும் முகத்தல் அளவை ஒன்றும் இருந்தது. நிறுத்தல் அளவைக்குச் சாதாரண கற்கள் பயன்படுத்தப்பட்டன.


தமிழ்நாட்டு வரலாற்றில் பிற்கால சோழர்களின் காலமே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய காலமாக உரைக்கப்படுகிறது. சங்க காலமும், பல்லவர் காலமும் சிறந்தனவேயானாலும், உலகம் முழுவதும் தமிழ் நாகரிகம், தமிழ்ப் பண்பாடு ஆகியவை பரவப் பாடுபட்டவர்கள் பிற்கால சோழர்களேயாவர். பிற்காலப் பாண்டியர்களைப்பற்றிக் காண்கின்றபோது அவர்கள் எத்தகைய சிறந்த புதிய முறை யினையும் புகுத்தவில்லை எனத் தெரிகிறது.

சோழர்களின் ஆட்சிச் சிறப்பு அதில் மக்களுக்கும் பங்கு இருந்தமைதான். மக்களின் கருத்துகளுக்கு மன்னரிடம் மதிப்பு இருந்தது. அரசர்கள் ஆடம்பரமாக வாழ்க்கை நடத்திய போதும் மக்கள் அதனைத் தவருகக் கருதவில்லை. அதனைப் பெருமையாகவே கருதினர். ஆலய நிர்வாகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஆலய நிர்வாகத்திற்கு அரசன் அதிகமாகச் செலவழித்தான். ஆலயங்கள் செல்வச் சிறப்போடு விளங்கின.

பிற்காலப் படையெடுப்பாளருக்குச் செல்வத்தை வாரி வழங்கிய ஆலயங்கள் மக்கள் துயரடைந்த போது துணை புரிந்தன. பஞ்சம் ஏற்பட்டபோது மக்களைக் காத்தன. சோழர்கள் ஆட்சி முறைபாட்சியாக விளங்கிய போதிலும் மக்களுக்கும் போதிய சுதந்திரம் இருந்தது. தங்கள் குறைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளும் அளவிற்கு அவர்களுக்கு ஆட்சித்துறை நிறுவனங்கள் உதவின என்பதும் சோழர் ஆட்சிமுறையின் சிறப்பாகும்.

6. பெரிய கோவில்

பெரிய கோவில் என்றவுடனே, முதலாம் இராஜராஜனை நினையாதார் மிகச் சிலரே ஆவர். எதிலும் பரந்த மனப்பான்மை கொண்ட அவ் வேந்தனைப் பேன்றே அவன் கட்டுவித்த கோவிலும் பெரியதாய் அமைக்கது. சோழர் காலச் சிற்பக் கலைக்கும், கட்டிடக் கலைக்கும் எடுத்துக்காட்டாய் விளங்கும் இத் கோவிலினைக் காணுது தென்னகம் வந்த எந்தப் பயணியும் திரும்பிட விரும்புவது இல்லை. தன்னைக் காணவந்த எவரையும் கலைமெய் மிட்டிலிலை இத் திருக்கோவில்.




படம் 8
தஞ்சைப் பெருவுடையார் கோவில் (தெற்கிலிருந்துத் தோற்றம்)

இக் கோவில் முழுமையும் கட்டிவைத்த பெருமைக்கு
உரியவன் இராசராசனே ஆவான். தனி ஒருவனின் திட்டமிட்ட



படம் 9
தஞ்சைப் பெருவுடையார் கோவிலின் பழைய தோற்றம்

செயலின் விளைவே இத் திருக்கோவில். கி.பி. 1003இல் அதாவது இராசராசனின் . ஆட்சியின் ப ன் னி ர ண் டா ம் ஆண்டில்



படம் 9A

தஞ்சை பெரிய கோவிலின் இப்போதைய நிலை

தொடங்கப்பட்ட இத் திருப்பணி ஏழு ஆண்டுகளில் இராச ராசனின் காலத்திலேயே முடிக்கப்பட்டது. இக் கோவிலைக் கட்டி முடித்த இத் தருணத்திலேதான் சிதம்பரத்தைச் சேர்ந்த தீட்சிதர்கள் இப் பெருவேந்தனுக்கு ஸ்ரீ இராராசன், சிவபாத

சேகரன் என்னும் சிறப்புப் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தனர் போலும். முதன் முதலாக இராசராசன் என்ற பெயரைப் இவ் வேந்தனின் பத்தொன்பதாவது ஆட்சி ஆண்டுப் பட்டயத்தில் காண்கிறோம்.

இக் கோவிலுக்கே 'இராச இராசச்சுரம்' என்று பெயர். கீழ்த்திசைக் கோட்டை வாயினுள் நுழைவாயினுள் புகுந்து வந்தால் கோபுர வாயிலைக் காணலாம். இரண்டாவது கோபுர வாயிலைக் கடந்தால் கோவிலின் முக்கியப் பகுதி உள்ள பிரகாரத்தை அடையலாம். அப் பிரகாரம் ஐநூறுஅடி நீளமும் இருநூற்று ஐம்பது அடி அகலமும் கொண்டது. தரையில் கல்லும், செங்கல்லும் பாவப்பட்டுள்ளது.

பிரகதீசுவரர் கோவிலின் கர்ப்பக்கிருகம் உள்ள பகுதி பிரகாரத்தில் மேற்குப் பகுதியில் சிறிய கோவில்களும், மண்டபங்களும் சூழ அமைந்துள்ளது. இவை எல்லாவற்றிற்கும் மேலே பதினைந்து அடுக்குகளைக் கொண்ட 216 அடி உயரமுள்ள விமானம் (கோவில் மேற்கூரை) அமைந்துள்ளது. இக் கோபுரத்தின் அடித்தளம் 96 சதுர அடி அகலம் கொண்டது. இக் கோபுரத்தின் விமானத்தின் நிழல் கீழே விழுவதில்லை. எனவும், கோபுரத்தின் மேலேயே படியும் வண்ணம் அமைக்கப் பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது. இக் கோபுரத்தின் உச்சியில் 25 சதுர அடி கொண்ட எண்பது டன் எடையுள்ள. ஒரே கருங்கல் வைக்கப்பட்டுள்ளது. அவ்வளவு எடையை 'கிரேன்' என்பது போன்ற இக் கால நவீன எடை தூக்கும் கருவிகள் ஏதும் இல்லாத காலத்தில் அவ்வளவு உயரத்தில் கொண்டு சென்று வைத்ததும் வியப்பிற்குரியது.

தஞ்சாவூருக்கு நான்கு மைல் தொலைவில் உள்ள ஊரின் பெயர் சாரப்பள்ளம் என்பதாகும். சாரம் ஒன்று அங்கிருந்து அமைக்கப்பட்டு அதன் வழியாக மேலே ஏற்றப்பட்டது. இவ்வாறு சாரம் அமைத்துப் பள்ளமான படியால் அவ்வூர் சாரப்பள்ளம் எனப்பட்டது என்பர்.

கோவிலினுள் உள்ள சுப்பிரமணியரின் உருவச்சிலை, இறைவி விருகன் நாயகின் வடிவம், பெரிய கோபுரத்தின் முன் உள்ள பெரிய நந்தி ஆகியவை குறிப்பிடத் தகுந்தவை. சுப்பிரமணியரின் வடிவச்சிலை உள்ள மண்டபப் பகுதி கலைச் சிறப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. இக் கோவில் பட்டயங்களில் அவை பற்றிக் குறிப்பிடப்படாமையில் பிற்

காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது. அருணகிரிநாதர் தம் திருப்புகழில் இக் கோவில் முருகனைப் புகழ்ந்து நான்கு பாடல்கள் பாடியுள்ளார்.

பிருகன் நாயகி ஆலயமும் பிற்காலத்தில் எழுந்ததே என்று நம்பப்படுகிறது. கோவிலில் காணப்படும் மராத்தி மொழிப் பட்டயம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இரண்டாம் சரபோஜி என்ற மன்னரால் மேற்கொள்ளப்பட்ட திருப் பணிகளைப் பற்றிய செய்தியினை எடுத்துரைக்கின்றது.

நாயக மண்டபத்தினுள் வைக்கப்பட்டுள்ள பெரிய நந்தி பன்னிரண்டடிக்குமேல் உயரமும், பத்தொன்பதரை அடி நீளமும், எட்டேகால் அடி அகலமும் கொண்டது. மிகப் பெரும் தோற்றத்துடன் துலங்கும் இந் நந்தி காண்போரை வியக்கச் செய்வதும் ஆகும்.

இக் கோவிலின் முக்கியக் கோபுரத்தில் புதுமையான அம்சம் ஒன்றிருப்பதைக் காணலாம். கோவில் சிவன் கோவில் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் கோபுரத்தின்மேல் காணப்படும் அதை வடிவங்கள் வைணவ சமயக் கடவுளான திருமாலின் பல்வேறு தோற்றங்களைச் சித்தரிக்கின்றன. பெர்குசன் என்ற அறிஞர், இராசராசனின் சமயப் பொறை உணர்வினையே இங்கில் காட்டுகிறது என்று எடுத்துரைக்கின்றார். இராசராசன் நாகப் பட்டினத்திற்கு அருகிலுள்ள சூடாமணி விகாரத்திற்குக் கொடை வழங்கியது மற்றொரு சான்று ஆகும்.

மற்றுமொரு விந்தையான அம்சம் கோவில் விமானத்தின் வடக்குப் பகுதியில் நான்கு மனித வடிவங்கள் சில வடிவில் காணப்படுவதே. காஞ்சியைச் சேர்ந்த சோமவர்மன் என்னும் கட்டிடக் கலைஞன் சோழன், நாயக்கன், மராத்தியன், ஐரோப்பியன் ஆகிய நால்வரின் வடிவங்களை உருவாக்கினான் என்று மரபுவழிச் செய்தி கூறுகிறது. ஐரோப்பியர் யார் என்பது சரியாகத் தெரியவில்லை. ரோலண்டு கிரேப் என்னும் டச்சுக்காரர் உருவம் என்றும், மார்க்கோ போலோவின் உருவம் என்றும் பல்வகையில் அதனைக் கருதுகின்றனர்.

இக் கோவில் முழுதும் பட்டயங்கள் செதுக்கப்பட்டுள்ளன தாம் போரில் பெற்ற வெற்றியினால் கிடைத்த செல்வமனைத் தையுமே இக் கோவிலுக்கு இராசராசன் வழங்கினான் போலும். கோவில் பணிகள் ஒழுங்குடன் நடைபெற, யாண்டும் வழிபாட்டு

நிகழ்ச்சிகள் குறைவின்றி நடைபெற இராசராசன் ஏராளமான நிவந்தங்களை அளித்தான். ஒரு சிறு பொருள்கூடக் கிடைக்காமல் போய், அதனால் வழிபாடு தடைபெற்றுவிடக் கூடாது என்பதால் எல்லாம் எப்போதும் கிடைத்துள்ள ஏற்பாடு செய்துள்ளான் என்ற செய்திகளை அறிகிறோம். கோவிலுக்கென்று விடப்பட்ட நிலபுலன்கள் ஏராளம். கற்பூரம், ஏலக்காய் முதலியன வாங்கக்கூட நிவந்தம் அளித்துள்ளான்.

இப் பட்டயங்கள் வாயிலாக இராசராசனின் கலைத்திறன், இசைப்பற்று, நடனப்பற்று முதலியன குறித்தும் அறிகிறோம். நடனப் பள்ளி ஏற்படுத்தி 400 நடனமாதர்களை நடனக்கலையைத் தொடர்ந்து நடத்திடச் செய்தான். 48 பேர் தேவாரம் பாடிட நியமிக்கப்பட்டனர்.

இராசராசன் இக் கோவிலினுள் அவர்களில் அழகிய ஓவியங்கள் பலவற்றைத் தீட்டியுள்ளான். சிவனின் திருக்கைலாயத் தோற்றம், சேரமான், சுந்தரர் கயிலாயம் செல்லும் தோற்றம், சுந்தரர், சிவன் வடிவம், ஒரு குடும்பம் பற்றிய ஓவியம், நடராஜரும் அவருடைய பக்தர்களும் சிவன், திரிபுராந்தகன் வடிவம், இராஜராஜன், கருவூர்த்தேவர் ஆகியோரின் வடிவங்கள் ஆகியவை குறிப்பிடத் தகுந்த ஓவியங்கள். சோழர் கலைக்குச் சிறப்பு மிக்க எடுத்துக்காட்டு இப் பெரிய கோவில் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

3. பாண்டியர் வரலாறு

ஆதாரங்கள் — அரசியல் வரலாறு — முடத்திருமாறன் — மாற வர்மன் சுந்தர பாண்டியன் — பராந்தகன் — வீரபாண்டியன். மார்க்கோ போலோவின் குறிப்புகள் — ஆட்சிமுறை. சமயம், வாணிபம், கல்வி.

I. ஆதாரங்கள்

தொண்மையும் சிறப்பும் மிக்கவராய் வாழ்ந்து, தமிழ் மொழியின் வளர்ச்சியில் அரும் பணியாற்றிய பாண்டியர்களின் வரலாறு ஏனோ தெரியவில்லை. தொடர்ச்சியின்றிக் காணப் படுகின்றது. பல்வேறு படையெடுப்புக்களால் இவ் வரசு கடலில் தத்தளிக்கும் மரக்கலம் போல் சீரழிந்தது. பாண்டிய நாட்டின் பெருமை நம் இந்தியத் துணைக்கண்டத்தின் பழம் பெருமை. பாரத பெருமையைப் பாரறியச் செய்தது பாண்டிய நாடு. 'பாண்டியநாடு முத்துடைத்து' என்று கூறுவர். தமிழ் மண்ணிலேயே தோன்றி தமிழ் மண்ணிலேயே கடலில் கலந்திடும் வையையும், தாமிரபருணியும் வளம் கொழிக்கச் செய்த நாடு. இந்திய நதிகளின் சிறப்பை எல்லாம் கூறிக்கொண்டே வந்த பாரதியார் 'தமிழ் கண்டதோர் வையை' என்று மற்ற எந்த நதிக்கும் அளித்திடாத சிறப்பை வையைக்கு அளித்தார்.

பாண்டியநாடு பழம்பெரும்நாடு. இதனை மெய்ப்பிக்கச் சான்றுகள் ஏராளம், ஏராளம். பாண்டியர்கள் பண்டைக்காலந் தொட்டே ஆட்சி புரிந்தவர்கள். எக் காலத்தில் ஆட்சி உரிமையைப் பெற்றனர் என்று அறிய இயலவில்லை. வால்மீகி முனிவரது இராமாயணத்தில் பாண்டிய வேந்தரது தலைநகரம் பொன்னாலும், முத்துக்களாலும் அணி செய்யப்பட்ட கோட்டை வாயிலை உடையது. என்ற குறிப்புக் காணப்படுகிறது. வேத விசயரது நூலிலும் பாண்டியர்களைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. பாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனன்

பாண்டியக் குலப் பெண்ணை மணந்ததாகச் சொல்லப்படுகிறது. இலங்கையின் மகா வம்சம் என்னும் நூல் விஜயன் எனப்படும் இலங்கை அரசன் பாண்டிய இளவரசியை மணந்துக் கொண்டதாக கூறுகிறது. கௌடில்லியர் தமது அர்த்த சாஸ்திரத்தில் பாண்டிய நாட்டில் கிடைத்த சிறப்பான முத்துக்களைப் பற்றிக் குறித்துள்ளார்.

மெகஸ்தனிஸ் எழுதிய 'இண்டிகா' என்னும் நூலில் 'ஹெர்குளிஸிக்குப் பண்டேயா என்ற ஒரு பெண் பிறந்தாள். அப் பெண்ணிற்கு தெற்கில் கடலைச் சார்ந்து உள்ள நாட்டை அவன் அளித்தான். அவனது ஆட்சிக்குட்பட்டவர்களை 365 ஊர்களில் பகுத்து வைத்து ஒவ்வோர் ஊரினரும் ஒவ்வொரு நாளைக்கு அரசிக்குத் திறை செலுத்த வேண்டுமெனக் கட்டளையிட்டான்.' என்னும் செய்தி காணப்படுகிறது. கி. பி. 77இல் மிளினி என்னும் மற்றொரு வரலாற்று அறிஞன் கூறும் செய்தி இது.' இந்தியாவில் பண்டோ என்ற ஒரு சாதி பெண்ணரசுக் குட்பட்டது. ஹெர்கிளிஸிக்குப் ஒரு பெண் இருந்தமையால் அவன் மிக்க அன்புடன் ஒரு பெரிய நாட்டை அவளுக்கு அளித்ததாகச் சொல்லுகிறார்கள். அவள் வழியினர் முன்னூறு ஊர்களை ஆட்சி புரிந்தனர். அன்றேர் பெருஞ்சேனை உடைய வராகவும் இருந்தனர்.' ஸ்டிராபோ என்னும் வரலாற்றறிஞர் கி. மு. 25இல் ரோமானிய பேரரசர் அகஸ்டஸ் சீசர் பட்டத்திற்கு வந்தவுடன் அவருக்கு வாழ்த்து வழங்க தூதுக்குழு ஒன்றினைப் பாண்டிய மன்னன் அனுப்பி வைத்தான் எனவும், கிரேக்க மொழிக் கடிதம், பரிசு பொருள்கள் ஆகியவற்றுடன் புரோச்சியிலிருந்து புறப்பட்டு பாரசீக வளைகுடா வழியே சென்றது எனவும் நான்கு ஆண்டுகள் கழித்து ரோம் நகரை அடைந்தது எனவும் குறிப்பிட்டுள்ளார். கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த காட்யாயனர் பாண்டியர்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். கி. பி. 140இல் வாழ்ந்த டாலமியும் பாண்டியர்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். இதுகாறும் பார்த்தவற்றில் இருந்து பாண்டியர்களின் தொன்மை நன்கு விளங்கும்.

இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியைச் சார்ந்த தெற்குப் பகுதிகள் பாண்டியர்களால் ஆளப்பட்டன. அவற்றில் இன்றைய மாவட்டங்களான மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகியவை அடங்கியிருந்தன. மதுரை, கொற்கை ஆகியவை பாண்டியர்களின் தலைநகரங்களாக விளங்கின கொற்கை சிறந்த வாணிபத் துறைமுகமாக விளங்கிற்று. பின்னர் காயல் (கயல்) துறைமுகமாக விளங்கியது.

சங்க இலக்கியங்களிலிருந்தும் பாண்டியர்களைப் பற்றிய செய்திகளை அறிகிறோம். சங்க இலக்கியங்களிலிருந்து அறிகின்ற பாண்டிய வேந்தர்களில், வடிவம்பலம் நின்ற பாண்டியன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி ஆகியோர் குறிப்பிட தகுந்தவர்கள். வடிவம்பலம் நின்ற பாண்டியன் அவையிலேத் தான் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. பல்யாகசாலை முதுகுடுமி பெருவழுதி பஃருளி யாற்றை வெட்டி கடல் தெய்வத்திற்கு விழா எடுத்தச் செய்தி யினைப் புறநானூற்று ஒன்பதாம் பாடல் மூலம் அறிகிறோம். சின்னமனூர் செப்பேடு, வேள்விக் குடிச் செப்பேடு ஆகியவையும் காரிகிழார், செட்டினம்யார், நெடும் பல்லியத்தனூர் போன்ற புலவர்கள் பாடிய பாடல்கள் பல்யாகசாலை பற்றிய செய்திகளை அறிவிக்கின்றன.

2. அரசியல் வரலாறு

முடத்திருமாறன்: சிலப்பதிகாரம் உரைப்பாயிரம் மேற்கோள் ஆசிரியப் பாவாலும், இறையனூர் அகப்பொருள் உரையாலும் அறிகிறோம். பாண்டியன் முடத்திருமாறன் மிகப் பழமை வாய்ந்தவர். இம் மன்னரே மதுரை நகரை அமைத்தவர் என்றும், கடைச்சங்கம் நிறுவியர் என்றும் கருதப்படுவதோடு மதுரை திருக் கோவிலை அமைத்தவரென்றும் கருதப்படுகிறது. பராந்தக பாண்டியனது சூளவாய்புரம் செப்பேடுகள், 'தென் மதுராபுரம் செய்தும் அங்கதனில் அருந்தமிழ் நற்சங்கம் கீரி இத் தமிழ் வளர்த்தும்' என்று இவர் தம் பெருமையை எடுத்தியம்புகிறது.

மதிவாணன்: அடுத்து வந்த பாண்டிய மன்னர்களுள் மதிவாணன் என்ற மன்னன் ஆவார். இவர் இயற்றிய நூல் மதிவாணன் நாடகத்தமிழ் என்ற நூலாகும். அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுத மேற்கோளாக கொண்ட ஐந்து நாடக நூல்களுள் இதுவும் ஒன்றாகும். குறிப்பிடத்தக்க மற்றைய பாண்டிய மன்னர்கள் பொற்கை பாண்டியன், கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி, ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் அறியுடைநம்பி, ஆரியபடை கடந்த பாண்டிய நெடுஞ்செழியன், தலையாளங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் உக்கிரப் பெருவழுதி ஆகியோர் ஆவர். இவர்களைப் பற்றிக் கிடைத்துள்ள செய்திகள் வரலாற்றிற்குப் போதுமானவை ஆகா.

கடுங்கோன்: கி. பி. 3ஆம் நூற்றாண்டிலிருந்து 6ஆம் நூற் றாண்டு வரை உள்ள காலத்தினைத் தமிழகத்தின் இருண்டகாலம்

என்று கருதப்படுகிறது. ஏனென்றால் களப்பிரர்கள் எனப்படுவோரின் ஆட்சி நிறுவப்பட்டதே ஆகும். வேள்விக்குடிச் செப்பேட்டிலிருந்து கி. பி. 575 ஆம் ஆண்டில் பாண்டியன் கடுங்கோன் களப்பிரரை வென்றுப் பாண்டிய நாட்டில் மீண்டும் நிலவச் செய்தார். இக் கடுங்கோன் களப்பிரரை வென்ற செய்தியை தளவாய்புரச் செப்பேடுகளும் எடுத்து உரைக்கின்றன.

மாறவர்மன் சுந்தரபாண்டியன் : கடுங்கோனுக்குப் பின்னர் கி. பி. 600 முதல் 625 வரை மாறவர்மன் அவனி சூளாமணி என்பவரின் ஆட்சியும் அதன்பின்னர் செழியன், சேந்தன் என்பாரின் ஆட்சியும் நடைபெற்றது. கி. பி. 640 முதல் 670 வரை மாறவர்மன் அரிகேசரி என்னும் மன்னனின் ஆட்சி நடைபெற்றது. இம் மன்னவன் கூன் பாண்டியன் எனவும் அழைக்கப்பட்டான். இவருடைய காலத்தில் வாழ்ந்தவர் திருஞானசம்பந்தராவார். திருஞானசம்பந்தர் இவருடைய கூனை நிமிர்த்தியதால் சுந்தரபாண்டியன் என அழைக்கப்பட்டார். இவருடைய மனைவியின் பெயர் மங்கையர்க்கரசி என்பதாகும். மங்கையர்க்கரசி சோழ இளவரசியாவார். இவருடைய அமைச்சர் குலச்சிறை ஆவார். 63 நாயன்மார்களுள் இம் மூவரும் நின்ற சீர் நெடுமாற நாயனார், மங்கையர்க்கரசியார், குலச்சிறை நாயனார் என்று பேசப்படுகின்றனர். இம் மன்னவர் இரணியா கர்ப்ப தானம், துலாபார தானம் போன்றவற்றைச் செய்ததாக வேள்விக்குடிச் செப்பேடு உரைக்கின்றது. அரிகேசரி நல்லூர் இவர்தம் காலத்தே அமைக்கப்பட்டது. கழுகுமலை வெட்டுவான் கோவில் பிள்ளையார் பட்டிக் குகைக் கோயில் சிறப்பானவை. இவர் காலத்தில் யுவான் சுவாங் தமிழகத்திற்கு வருகைத் தந்தார்.


பராங்குச மாறவர்மன் : இவருடைய ஆட்சிக்காலம் கி. பி. 710 முதல் 765 வரை. இவருடைய ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சி கொங்கு நாட்டுப் படையெடுப்பு ஆகும். கொங்கு நாட்டின்மீது படையெடுத்துச் சென்ற இவர் கொடுமுடியில் சிவனை வழிப்பட்டார். இவருக்கு அடுத்து நெடுஞ்சடையன், பராந்தகன் என்பவர் ஆட்சிக்கு வந்து கி. பி. 765 முதல் 790 வரை ஆட்சி செலுத்தினர். வேள்விக்குடி, சீரமங்கலம், ஆகிய இடங்களில் கிடைத்துள்ள செப்புப் பட்டயங்களும், ஆனைமலை, திருப்பரங்குன்றம் ஆகிய கல்வெட்டுக்களும் இவர் பெருமையை விளக்குகின்றன. கி. பி. 767இல் ஆட்சிக்கு வந்ததாகவும் கூறுவர். களப்பிரர்களின் காலத்தில் இப் பாண்டியனின் முன்னோர்கள் காமக்காணி நற்சிங்கனின் முன்னோர்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட வேள்விக்குடி

என்ற அரசுஊர்டன் சேர்க்கப்பட்டது. காமக்காணி நற்சிங்கன் தமது முன்னோர்களிஞல் தானமாகப் பெறப்பட்ட அவ்வூரை தமக்கு அளித்திட வேண்டும் என்று பராந்தகஜன வேண்ட பராந்தகன் வேள்விக்குடி தான சாசனம் செய்து கொடுத்தான். இச் சாசனம் தமிழ்மொழியிலும், வடமொழியிலும் எழுதப் பட்டுள்ளது. இச் சாசனத்தைத் தமிழ்மொழியில் இயற்றியவர் ஏனுதித்தன் என்பவராவர். வடமொழியில் இயற்றியவர் வரோதயப்பட்டர் என்பவராவர்.

இம் மன்னவன் வைணவப் பற்று மிகுந்தவர். கொங்கு நாட்டின்மீது படையெடுத்துச் சென்று அதஜனக் கைப்பற்றினுர். பின்னர் கோவை மாவட்டத்தில் உள்ள பேரூரில் திருமாலுக்கு ஆலயம் ஒன்றுக் கட்டுவித்தார். வைணவப் பெரியார்களில் ஒருவரான பெரியாழ்வார் வாழ்ந்தது இந்தக் காலத்திலே தான். இவருடைய முதல் அமைச்சரின் பெயர் மாறன்காரி என்பதாகும். இவர் ஆணமலையில் நரசிங்கப் பெருமான் ஆலயத்தினைக் கட்டினுர். எல்லாப் படைகளுக்கும் மகாசாமந்தனுக விளங்கிய சாத்தன் கணபதி திருப்பரங்குன்றம் கோவிலைச் சீர்திருத்தம் செய்து குளம் ஒன்றை வெட்டுவித்தார்.

நெடுஞ்சடையன் பராந்தகனின் மைந்தன் இராசச்சிம்ம பாண்டியன் கி. பி. 790 முதல் 792 வரை இரண்டே ஆண்டுகள் ஆட்சிச் செலுத்தினுர். அவர் மகன் வரகுணமகாராசன் காலத் தில் சோழ மண்டலம் முழுவதும் பாண்டியராட்சிக்குட்பட் டிருந்தது என்பதஜன திருவியலூர், திருநெய்தானம், திருக் கோடிகா, திருச்சோற்றுத்துறை ஆகிய இடங்களில் கிடைத் துள்ள கல்வெட்டுக்கள் மெய்ப்பிக்கின்றன. சின்னமன்னூர்ச் செப்பேடும் 'கொற்றவர்கள் தொடு கழற்மால் கோவரகுண மகாராசன்' என்று கூறுகின்றது. மணிவாசகர் 'வரகுணஞர்த் தென்னவன்னத்து சிற்றம்பலத்தான்' என்று குறிப்பிட்டுள்ளார். இவர் காலத்துப் பல ஆலயத் திருப்பணிகள் நடைபெற்றன. திருச்சிராப்பள்ளி இறைவனுக்குத் திருவிளக்கு எரிக்க 125 கழஞ்சிப் பொன் கொடுத்தார். அம்பாசமுத்திரம் கோவிலுக்கு 290 பொற்காசுகள் வழங்கினுர். நாங்குனேரி இராதபுரத்திலுள்ள கல்வெட்டு அங்குள்ள சிவன் கோயிலை வரகுனீச்சுரம் என்றும் அவ்வூரை வரகுண பாண்டியபுரம் ஊர் என்றும் கூறப் பட்டுள்ளது. திருவிடைமருதூரில் செய்வித்தத் திருப்பணிகஜனத் திருவிளையாடற் புராணம் 'மேலை வாயிலாற் போவான் அன்ன திருமணிக் கோபுரந்தன் பெயரினுற் செய்து சின்னுள்,'

சீமாறன் சிவல்லபன் : இம் மன்னவன் கி. பி. 835 முதல் 862 வரை ஆட்சிச் செலுத்தினர். இலங்கைமீது படையெடுத்துச் சென்றார். இதன்மூலமாக தம் நாட்டின்மீது ஏற்பட்ட இலங்கைப் படையெடுப்பை முறியடித்தார். கும்பகோணத்திற்கு அருகே பெற்ற வெற்றி குறிப்பிடத் தகுந்தது ஆகும். பரச்சகரகோலாகலன் என்பது போன்ற சிறப்புப் பட்டங்களைச் சூட்டிக் கொண்டார். பல சிவாலயங்களைக் கட்டுவித்தார். சிற்றன வாயில் கோவில் முகப்பு மண்டபம் இவரால் கட்டுவிக்கப்பட்டது. அங்கு காணப்படும் அரசன் அரசி உருவங்கள் இம் மன்னனையும் தேவியையும் குறிப்பவை. தெள்ளாறு என்னுமிடத்தில் மூன்றும் நந்திவர்மப் பல்லவனையும் பின்னர் நிருபதுங்க வர்மனையும் தோற்கடிக்கப்பட்டார்.



படம்—10
சுந்தரபாண்டியன் காசு

வரகுணவர்மன் கி. பி. 862-880. இவர் திருச்செந்தூர் வாழ் செல்வக் குமரன்பால் பேரன்பு கொண்டவர். ஆண்டுதோறும் அவ் வாலயத்திற்கு 2800 கலம் நெல் அளந்துக் கொடுத்தார் என் பதனைக் கோவில் கருங்கல் பாறைக் கல்வெட்டு உரைக்கின்றது.

சடையவர்மன் பராந்தகன் கி. பி. 880-890. இவர் வரகுண வர்மனின் 2வது மகனுவார். இவருக்கு வீரநாராயணன் என்ற பெயரும் உண்டு. இவருடைய மனைவி பெயர் வானவன்மாதேவி. அவர் சேரநாட்டு இளவரசியாவார். தளவாய்ப்புரச் செப்பேடுகள் இச் செய்திகளைக் கூறுகிறது. இவ் வரசியின் பெயராலேதான் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஊர் ஒன்று சேரன்மாதேவி என்று அழைக்கப்படுகிறது.

சடையவர்மனின் மைந்தன் இராசசிம்மன் என்பவராவர். கி. பி. 919 இல் முதலாம் பராந்தகச் சோழன் வெள்ளூர்ப் போரில் தோற்கடித்திடவே இலங்கைக்கு ஓடி அங்கிருந்து சேரநாட்டை அடைந்தார்.

இவர் மைந்தன் வீரபாண்டியன் 946 முதல் 966 வரை ஆட்சிச் செய்தார். 13ஆம் நூற்றாண்டு தொடக்கம் வரை சிற்றரசர்களாகவே பாண்டியர்கள் ஆட்சி செலுத்தினர். கி. பி. 1054 ஆம் ஆண்டு சீவல்லபன் பாண்டியன் ஆட்சி நடத்தினன். இவர் தம் பட்டத்தரசி 1054இல் திருவியலூர்க் கோவிலுக்கு அணிகலன்கள்

அளித்தார். சீவல்லபனின் மைந்தன் சடையவர்மன் குலசேகர பாண்டியன் கி. பி. 1162 முதல் 1177 வரை ஆட்சி செலுத்தினன். பராக்கிரம பாண்டியனை வென்று மதுரையில் தன்னாட்சி நடத்தினர். மதுரைக் கோவில் மதில்கள் கட்டப்பட்டன. திருவிளையாடலில் குறிப்பிடப்பட்டுள்ள ஐயனர் கோவில், சப்த மாதர் கோவில், கரிய பெருமாள் கோவில் ஆகியவற்றைக் கட்டினர். சடையவர்மனின் மைந்தன் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் கி. பி. 1180 முதல் 1190 வரை ஆட்சி செலுத்தினர்.



படம்—11
பாண்டியர் காசு

1190 முதல் 1281 வரைமுதல் சடையவர்மனின் ஆட்சி நடைபெற்றது. இக் காலத்திலேகுறிப்பிடத்தக்க மற்றொரு பாண்டியன் முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன். இவர் காலத்தே சோழ நாடு அழிக்கப்பட்டது. பழையாறையில் விராபிடேகஞ் செய்து சிதம்பரத்தில் நடராசரைத்தரிசனம் செய்தார். இம்மையில் நன்மை தருவார் கோவில் என்னும் மதுரை கோவில் இவராலேக் கட்டப்பட்டதேயாகும். இவருக்குப் பின்னர் வந்த இரண்டாம் சடையவர்மனின் ஆட்சி சில திங்களே நடைபெற்றது. அடுத்து இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக்கு வந்தார் என்பதையும் மதுரைக் கோவில் கல்வெட்டுக் கற்பிக்கின்றது. 1251 இல் முதல் சடையவர்மன் ஆட்சிக்கு வந்து தில்லை, திருவரங்கம், சிதம்பரம் ஆகிய இடங்களில் ஆலயத் திருப்பணிகளைச் செய்வித்தார். சிதம்பரம் மேற்கோபுரம் சுந்தரபாண்டிய கோபுரம் எனப்படுகிறது. தில்லையிலும், திருவரங்கத்திலும் பொன் வேய்ந்தவர் என்பதனால் 'பொன்வேய்ந்த பெருமாள்' என வழங்கப்படுகிறார்.

முதல் மாறவர்மன் குலசேகரன் கி. பி. 1268இல் ஆட்சிக்கு வந்தார். இவருடைய காலத்தில் மார்கோபோலோ, 'வாசப்' ஆகிய பயணிகள் வருகை தந்தனர். சேரன், சோழன், போசனை வென்று நெல்லையப்பர் கோவிலுக்குச் சுற்று மாளிகை அமைத்து தந்த அவரது ஆட்சி 1311இல் முடிவுற்றது.

மிகச் சீரிய நிலையிலிருந்த பாண்டிய அரசு கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் சிதைவுற்றது. மாறவர்மன் குலசேகரனுக்கு

இரண்டு மக்கள். ஒருவன் சுந்தரபாண்டியன், மற்றொருவன் வீரபாண்டியன். சுந்தரபாண்டியன் தந்தையைக் கொன்று கி. பி. 1130இல் ஆட்சிக்கு வந்தபோது வீரபாண்டியனுல் சுந்தர பாண்டியன் மாலிக்காபூரை வேண்டினுன். மாலிக்காபூர், மதுரை, சிதம்பரம், திருவரங்கம் ஆகியவற்றின்மீது படை எடுத்து அவற்றைச் சீரழித்தான். கி. பி. 1330 முதல் 1378 வரை முகம்மதியராட்சி நடைபெற்றது என்றே கூறவேண்டும்.

மன்னன் மாறவர்மன் குலசேகர பாண்டியன், (1314-1346), சடையவர்மன், பராக்கிரம பாண்டியன் (1315-1347) மாறவர்மன் வீரபாண்டியன் (1334-1380) மாறவர்மன் விக்கிரபாண்டியன் ஆகியோர் இக் காலத்தே குறிப்பிடத்தக்கவர்கள். கி. பி. 14ஆம் நூற்றுண்டு முதல் 17ஆம் நூற்றுண்டு வரை ஆட்சி செய்தவர் களில்பராக்கிரமபாண்டியன் செந்தமிழ்ப் புலமை பெற்றவன். வட மொழிப் பயிற்சியும் இருந்தது. நெல்லைப்பர் கோவில் அர்த்தயாம வழிபாட்டுக்கு நிவந்தம் அளித்ததாகவும், தென்காசி ஆலயத் திருப்பணிக்கு உதவியதாகவும் அறிகிறோம். தென்காசி ஆலயத் திலேதான் பிற்கால பாண்டியருக்கு முடிசூட்டு விழா நடைப் பெற்றது. சடையவர்மன் அதிவீரராம பாண்டியன் என்னும் பாண்டியன் தென்காசியில் குலசேகர முடையார் ஆலயத்தைக் கட்டுவித்ததோடு நைனிடதம், கூர்மபுராணம், காசிகண்டம், நறுந்தொகை ஆகியவற்றை இயற்றினுர். இவர் பெயராலே அதிராம பட்டினம் என்ற ஊர் ஒன்று உள்ளது. பிற்கால பாண்டியர்கள் செல்வாக்கு இழந்து ஜமீன்தார்களைப் போல வாழ்ந்தனர்.

'தென்னுட்டுடைய சிவனே போற்றி' என்று கூறப்படும் கூற்று மெய்ப்பிக்கப்பட்டது பாண்டியர்களாலே என்று கூற லாம். தமிழகம் முழுவதும் பரவிக்கிடக்கின்ற ஆலயங்கள் இன் றும் பாண்டியர் தம் பெருமையைக் கலைச்சிறப்பை விளக்கு கின்றன. அரசியல் வானில் நிலவாக இல்லாது நட்சத்திரமாகவே வாழ்ந்து மறைந்தனர் பாண்டியர்கள் என்றுல் மிகையாகாது.


2. பாண்டியர் ஆட்சிமுறை: பாண்டியநாடு பல நாடு களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பிற்காலத்தில் சில நாடுகள் கூற்றங்கள் எனப்பட்டன. சில நாடுகளையும், கூற்றங்களையும் தன்னகத்துக் கொண்டு விளங்கிய பெருநிலப் பரப்புவளநாடு என்று வழங்கப்பட்டு வந்தது. நாடுகளும், கூற்றங்களும் இக் காலத்துத் தாலூக்காகளைப் போன்றவை, வளநாடுகள் மாவட்டங்களைப் போன்றவை.

அரசன்: பாண்டிமண்டலத்திற்குத் தலைமை வகித்து நீதி தவறாது செங்கோல் செலுத்தும் கடமை உடையவன் அரசனாவான். பாண்டிவேந்தர்கள் தம் வாரிசுகளுக்கு இளவரசுப் பட்டங்கட்டினர். இவ் விளவரசர்கள் துறைமுகப் பட்டினங்களில் தங்கினர். அரசனுக்கு உதவிட அமைச்சர், படைத் தலைவர், அரையர், நாடு வகைச்செய்வோர், வரியிலார், புரவு வரித்திணைக் களத்தார், திருமுகம் எழுதுவோர் முதலானோர் இருந்தனர். இவர்கள் குடிகளின் நலன்கள், அறநிலையங்கள், நியாயம் வழங்குமுறை முதலானவற்றைக் கண்காணித்துக் காத்து வந்தனர். காவிதி, ஏனாதி முதலானப் பட்டங்களைப் பெற்ற அதிகாரிகளுக்குப் பொற்பூவும், மோதிரமும் இறையிலி நிலமும் அரசால் அளிக்கப்படுவது வழக்கம்.

வரி: அரசுக்கு நிலவரி முக்கியவரிகளாக தறியிறை, செக்கிறை, தட்டார்ப்பாட்டம், இடைவரி சான்றுவரி, பாடிகாவல் மனையிறை, உல்கு முதலான வரிகளும் இருந்துள்ளன. பாண்டி மண்டலம் முழுமையும் அளக்கப்பட்டு நிலவரி வசூலிக்கப்பட்டது நிலம் அளந்த கோல் சுந்தரபாண்டியன் கோல் எனப்பட்டது. இதன் நீளம் இருபத்து நான்கு அடி என உரைக்கின்றனர். நில எல்லைகளைக் குறித்திட கற்கள் நடப்பட்டன. நிலங்கள் நீர் நிலம், புன்செய், நத்தம் தோட்டம் என்று பிரிக்கப்பட்டன. சிவன் கோவில்களுக்கு இறையிலியாக அளிக்கப்பட்ட நிலம் தேவதானம் எனவும் திருமால் கோவில்களுக்கு அளிக்கப் பெற்றவை திருவிடையாட்டம் எனவும், சமணப் பள்ளிகளுக்கு அளிக்கப்பட்டவை பள்ளிச்சந்தம் எனவும் அழைக்கப்பட்டன.

அளவைகள்: நெல், பால் போன்றவை செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி என்றும் முகக்குங் கருவிகளால் அளக்கப்பட்டன, எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் ஆகிய நான்கு வகைப்பட்ட அளவைகளும் அக் காலத்தில் இருந்தன.

கிராம சபை: பாண்டியரது ஆட்சிக்காலங்களில் ஊர் தோறும் கிராமச் சபையிருந்தது. கிராம ஆட்சியை இச் சபைக் கவனித்தது. நிலமும், சொந்த மனையும், கல்வியறிவும் உடைய வர்களாய் அறநெறி வழாது நடப்பவர்கள் சபையின் உறுப்பின ராதற்கு உரிமையுடையவர் ஆவர். மானூர்க் கல்வெட்டு, கிராமச் சபையில் உறுப்பினராதற்கு உரியவர்களின் மிகக்குறைந்த தகுதிகளை விளக்குகிறது.



படம்—12

மதுரைக் கோபுரம்

பதிவு அலுவலகங்கள்: பதிவுகள் ஆவணங்கள் எனப் பட்டன. பதிவு செய்யப்பட்ட இடம் ஆவணக் களம் அல்லது ஆவணக்களரி எனப்பட்டது. சில ஆவணங்களைக் கோவிற் சுவர்களில் பொரித்து வைத்தார்கள்.

படை: பாண்டியர்கள் ஆனை, குதிரை, தேர், காலாட்படை ஆகிய படைகளை வைத்து இருந்தனர். வாசப், மார்க்கோ போலோ போன்றோர் குதிரை வாங்கிட பாண்டியர் செலவிட்டப் பொருட்களைப் பற்றிக் குறித்து வைத்துள்ளனர். மதுரை நகரை உரோமப்புரிப்போர் வீரர்கள் காத்து வந்தனர்.

3. வாணிபம் கல்வி சமயம்

வாணிபம்: 'பாண்டிய நாடு முத்துடைத்து' அல்லவா? எனவே வாணிபத்தில் சிறந்து விளங்கியது. அதற்குப் பெரு வழிகள் பல நாட்டில் இருந்தன. வணிகர் பண்டங்களை ஏற்றிச் செல்ல கோவேறுக் கழுதைகளைப் பயன்படுத்தினர். முத்துக் களால் பாண்டி அரசர்கட்கு ஆண்டுதோறும் பெரும் பொருள் கிடைத்தது. முத்து சம்பந்தப்பட்ட தொழில்கள் சிறந்தன.

கல்வி: பாண்டி நாடு சங்கம் வளர்த்துத் தமிழ் வளர்த்த சான்றோர் நாடு. எனவே கல்வி மேம்பட்டு இருந்தது. 'பாண்டிய நாடு நின் நாட்டுடைத்து நல்லத்தமிழ்' என்பது ஔவை வாக்கு. சிறு பாணற்றுப்படை 'தமிழ் நிலை தாங்குரு மரபின் மகிழ் நனை மறுகின் மதுரை' என உரைக்கின்றது. பரிபாடல் 'தமிழ் வையைத் தன்னம் புனல்' என உரைக்கின்றது.

சமயம்: பாண்டிய நாட்டில் சைவ சமயம் தழைத்து ஓங்கியது. சிவாலயங்களிலும், விண்ணகரங்களிலும் திங்கள் தோறும் முழுமதி நாள்களில் திரு விழாக்கள் நடைப்பெற்றன. இசை, நடனம், கூத்து முதலான கலைகளின் வளர்ச்சிக்கும் கோவில்கள் துணை நின்றன. கோவில்கள் பாண்டியர்களின் கலைச்சிறப்புக்குச் சான்றாகும். ஆலயங்களில் அழகு ஓவியங்கள் சீரும் சிறப்பும் மிக்கவை.

4. தென்னிந்தியப் பக்தி இயக்கம் அல்லது இந்து சமய எழுச்சி

[சமய ஒற்றுமை · பக்தி நெறி தோன்றிடக் காரணம்—பிற சமயங்கள் பரவிய காரணம்—சமயப்பூசல்—நாயன்மார்கள் ஆழ்வார்கள் தோன்றியமை — சமணம் குன்றுதல்—பக்திப் பயணங்கள் — சமணர் அனுபவித்த கொடுமைகள் — திருநாவுக்கரசர் — திருஞானசம்பந்தர்—சுந்தரமூர்த்தி—மாணிக்கவாசகர் — திருமூலர் — ஆழ்வார்கள் — சங்கரர், இராமானுசர், மத்வர் — இந்து சமயம் காக்கப்பட்டமை.

தென்னிந்தியப் பக்தி இயக்கம்

சமய ஒற்றுமை : கி. பி. ஆரும் நூற்றாண்டு வரை இந்து சமயம், பௌத்த சமயம், சமணம் ஆகிய மூன்று சமயங்களும் அடுத்தடுத்துத் தழைத்தோங்கின.

இம் மூன்று சமயத்தவரிடையே எவ்விதப் பூசல்களும் இல்லாத நிலை காணப்பட்டு வந்தது. தென்புலத்து வேந்தர்களும் இச் சமயங்களை ஆதரித்து வந்தனர். ஆனால் ஆரும் நூற்றாண்டின் இறுதியில் இந்துச் சமயத்தவருக்கும், ஏனைய பிற சமயத்தவருக்கும் இடையே சமயப்பூசல் துளிர்விடத் தொடங்கியது. இதன் விளைவாகச் சமயங்கள் எந்தப் பணியினைச் செய்தற் பொருட்டு உருவாயினவோ அதைவிட்டு வேறு வழியில் கருத்தைச் செலுத்தத் தொடங்கின.

பக்தி நெறி : சமணர், பௌத்தர்கள் இந்துச் சமயத்தில் இருந்த குறைபாடுகளை எடுத்துக் காட்டினர். சடங்குகள், பலியிடுதல் போன்றவை ஒரு சிலரால் சமுதாயத்தைச் சுரண்டுவதற்கென ஏற்படுத்தப்பட்டவையே என்று கூறினர். இச்

குறைபாட்டைக் களைதல் இந்துச் சமுதாயத்தின் இருபிரிவினராகிய சைவர்கள் வைணவர்கள் கடமையாயிற்று. எனவே இச் சமயப் பெரியார்கள் நாடு முழுவதும் சுற்றி வந்தனர், உண்மையான பக்தியை வலியுறுத்தினர். இறைவனை வழிபடப் பாடல்கள் புனைந்தனர். பக்தி நெறியே பரமனைத் தேடும் அரிய முக்தி நெறி என உரைத்தனர். 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உய்விப்பது வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே' என்று எளிய வழியைக் காட்டினர். சமயச் சொற்போர்கள் நிகழ்ந்தன. சைவ, வைணவ சமயத்தின்பால் ஒரே நேரத்தில் பக்தி இயக்கம் தோன்றியது.

காரணம் : இவ்வாறு பக்தி இயக்கம் தோன்றியதன் காரணம் யாது? சில வரலாற்றறிஞர்கள் இஸ்லாமிய சமயக் கொள்கைகளும், கிறித்துவ சமயக் கருத்துகளும் காரணமாயிருக்கலாம் என்று கருத்தறிவித்தனர். பௌத்த சமயமும், சமண சமயமும் அற ஒழுக்கங்களையே அழுத்தமாக வலியுறுத்தியதன் பயனாக வெறுப்படைந்த மக்களிடையே ஒரு தனிப்பட்ட இறைவன்பால் பக்தி கொள்ளும் நிலை ஏற்பட்டது என்பதே பொருத்தமான கருத்து என்று டாக்டர் கே. கே. பிள்ளையவர்கள் கருதுகின்றார். பக்தி நெறி இயக்கத்தவர் பிற சமயங்கள் பரவியதற்கான காரணங்களைக் கண்டறிந்து அதன் வழியே சைவ, வைணவ சமயத்தை வளர்த்தனர்.

ஏன் பரவின? : சமண சமயத்தில் பிறப்பினால் உயர்வு தாழ்வு காணும் குறுகிய மனப்பான்மை இல்லை. சாதி பேதம் ஏதும் பாராட்டவில்லை. சமணர்களின் அருங்கலச் செப்பு என்னும் நூலிலே,

> 'பறையன் மகனெனினும் காட்சியுடையான்
> இறைவன் என உணரற் பாற்று'

என்று கூறப்பட்டுள்ளது. இக் கருத்தின் அடிப்படையில் எழுந்ததுதான்.

> 'ஆவுரித்துத் தின்றலையும் புலையரேனும்
> கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில்
> அவர் கண்டீர்யாம் வணங்கும் கடவுளாரே'

என்னும் கருத்து.

சமயப் பூசல் : இந்துச் சமயத்தவருக்கும் சமண, பௌத்த சமயத்தவருக்கும் இடையே மட்டும் தான் சமயப் பூசல் நிகழ்ந்தது என்பதில்லை. பௌத்தருக்கும் சமணருக்கும் இடையேயும் சமயப் பகை உணர்வு இருந்தது. சமண சமயத்தைக் கண்டிக்கக் குண்டலகேசி என்னும் நூலைப் பௌத்தர் இயற்றியதைப் போன்று, பௌத்த சமயத்தைக் கண்டிக்க நீலகேசி என்னும் நூலைச் சமணர் யாத்தனர்.

நாயன்மார்கள், ஆழ்வார்கள் : இந்துச் சமயத்தில் பக்தி இயக்கம் தோன்றி இந்துச் சமயத்திற்குப் புத்துயிரையும் புதிய ஆற்றலையும் பெருஞ்செல்வாக்கையும் தந்தது. இந்துச் சமயத்தை நிலைநாட்ட நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றினர்கள் சிவன், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளையும் அருளிச் செய்தார். நான்மறையின் பொருளாயிருக்கிறார் என்று நயன்மார்களும் ஆழ்வார்களும் பாடினர். இந்துச் சமயத்திற்குத் துணையாகக் காபாலிகம், காளமுகம், பாசுபதம், மாவிரதம் முதலிய சமயங்கள் தோன்றி வடபுலத்திலிருந்து வந்து சேர்ந்தன. இச் சமயங்களின் உதவியினாலும் பக்தி இயக்கத்தின் துணையினாலும் சமண சமயம் தாக்கப்பட்டது.

சமணம் குன்றுதல் : இனி இந்துச் சமயம் எவ்வாறு சமண சமயத்தைக் குன்றச் செய்தது என்பதனைக் காண்போம். சைவ வைணவராகிய இந்துக்களில் துறவிகளும் இல்லத்தாரும் பெண்களும் மோட்சம் அடைய பக்திமட்டும் போதும். துறவு வேண்டியதில்லை என மக்களுக்குப் போதித்தனர். இல்லறத்தார்க்குச் சுவர்க்க பதவி தவிர வீடு பேறு கிடையாது; துறவறத்தார்க்கே வீடுபேறு உண்டு என்னும் சமண சமயக் கொள்கையை மறுத்து இல்லறத்தார்க்கும் வீடு பேறு உண்டு என்று சம்பந்தர் போன்றோர் வலியுறுத்தினர்.

பக்திப் பயணங்கள் : சைவ வைணவப் பெரியார்கள் நாடெங்கும் சுற்றுப்பயணம் செய்து சைவ, வைணவ சமயத்துக்கு ஆக்கம் தேட முயன்றார்கள். சமயப்போர் முதிர்ந்து காய்ப்புக் கொண்டிருந்தது. சமண சமயம் பலவிதத்தில் தாக்கப்பட்டது. கி. பி. 7, 8, 9 ஆம் நூற்றாண்டுகளில் சமயப்போர் தமிழ்நாட்டில் மும்முரமாக நடைபெற்றது. சைவ, வைணவ நூல்களின் வாயிலாகக் கொடுமைப்படுத்தல், கழுவேற்றுதல், கொலை செய்தல், கலகம் விளைவித்தல் நிலபுலங்களைக் கவர்தல் முதலிய செயல்கள் நடைபெற்ற செய்தியை அறிகிறோம்.

சமணர் அனுபவித்த கொடுமைகள்: சைவ சமய நூலாகிய பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், தக்கயாகப் பரணி முதலிய நூல்கள் திருஞானசம்பந்தர் மதுரையிலே எட்டு ஆயிரம் சமணரைக் கழுவேற்றினர் என்று கூறுகின்றன. மதுரை மீனாட்சி கோயில் பொற்றாமரைக் குளத்து மண்டபத்தின் சுவரில் சமணரைக் கழுவேற்றுங்காட்சி ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது மதுரை கோவிலில் நடைபெற்று வரும் உற்சவங்களில் ஆண்டு தோறும் கழுவேற்று விழா ஐந்து நாட்கள் நடைபெறுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. காஞ்சியை அடுத்த திருவேத்தூர்ச் சிவன் கோவிலில் சமணரைக் கழுவேற்றுதல் போன்ற சிற்ப உருவங்கள் காணப்படுகின்றன. சோழநாட்டில் பழையாறையில் மற்றொரு கலகம் நடந்த செய்தியைச் சேக்கிழார் கூறுகின்றார். திருவாரூரிலும் இத்தகைய கலகம் ஏற்பட்டு சமணர் துன்புறுத்தப் பட்டனர். இப்போது திருவாரூரில் உள்ள திருக்குளத்தைப் பெரிதாக்கிய தண்டியடிகள் என்ற நாயனார் குளத்தைச்சுற்றி இருந்த சமண சமயத்தவருடைய நிலங்களையும் கட்டிடங்களையும் வீழ்ந்து படும் குளத்தைப் பெரிதாகத் தோண்டினார். இதனால் கலகம் விளைந்தது. சேக்கிழார் 'தண்டியடிகளால் சமணர் கலகம் விளைந்தது' என்கிறார். இவ்வாறு சமண சமயம் அழிக்கப்பட்டது. சமணர் பலர் இந்துக்களாக மாற்றம் பெற்றனர்.

திருநாவுக்கரசர்: நாயன்மார்களில் திருநாவுக்கரசர் எனப் பட்ட அப்பர் மகேந்திரவர்மன் காலத்திற்குப் பிறகு அவன் மகன் மாமல்லன் முதல் நரசிம்மவர்மனுடைய காலத்திலும் உயிர் வாழ்ந்திருந்தார். திருநாவுக்கரசர் திருமுனைப்பாடி நாட்டில் திரு வாமூர் என்றும் ஊரின் கண் வாழ்ந்திருந்த புகழனார், மாதினியார் என்பாருக்கு மகனாகப் பிறந்தவர். இவருடைய இயற்பெயர் மருள் நீக்கியார் என்பதாகும். சைவ சமயத்தில் பிறந்த இவர் இளமையில் கல்வியை நன்கு கற்றுத்தேர்ந்தார். இளமையில் சமணமடத்தில் சேர்ந்து சமண சமய நூல்களையெல்லாம் கற்றுத் தேர்ந்தார். சமணர்கள் இவர் தம் அறிவுத்திறத்தை வியந்து தமது குருவாக அமைத்துத் தருமசேனர் என அழைக்கத் தலைப் பட்டனர் பாடபுரத்துப் பள்ளியிலேயே நெடுங்காலம் சமண சமயத்தலைவராக விளங்கினர்.

சமணராக விளங்கிய இவரைச் சைவராக மாற்றியவர் இவர் தம் தமக்கையார் திலகவதியாரே. தருமசேனரான இவருக்குக் கொடிய சூலை நோய் ஏற்பட்டது எனக் கூறப்படுகிறது. அவரே அச் சூலை நோயின் கொடுமையை 'சுடுகின்றது சூலை பயந்தே என் வயிற்றின் அகம்படியே பறித்துப் புரட்டியறுத்து ஈர்த்திட

நான் அயர்ந்தேன்' என்றெல்லாம் கூறியுள்ளார். நோய் தீராத நிலையில் தமக்கையாரைச் சென்று கண்டபோது தமக்கையார், சிவனை வழிபட்டால் சூலை நோய் தீரும் என்று கூறச் சிவனை வழி பட்டது முதல் சூலை நோய் நீங்கிற்று என்பர். சமணராக விளங்கிய இவர் சைவரானதும் 'திருநாவுக்கரசர்' என அழைக்கப் பட்டார். 'வாகீசர்' என வடமொழியாளர் அழைத்தனர். சமண ரான இவர் முதுபெரும் பிராயத்திலேயே சைவரானார். சமணம் நீங்கிச் சைவரானபோது வயது ஐம்பத்தைந்து அல்லது அறுபது இருக்கலாம். ஞானசம்பந்தர் இவரை 'அப்பரே' என்றழைத்தார். 'அப்பர்' அதாவது தந்தை போன்ற பெரியவர் என்பது பொருள்

நாவுக்கரசர் பல்லவ வேந்தனைச் சமணத்திலிருந்து சைவத் திற்கு மாற்றினார். இவ் வேந்தன் மகேந்திரவர்மனே என்று கூறப்படுகிறது. திரு. வி. வெங்கையா என்பவர் மகேந்திர வர்மனையே அப்பர் சைவனாக மாற்றினார் என்றுரைக்கின்றார். தமிழ்நாடு முழுவதும் ஊர் ஊராகத் தம் முதிர்ந்த வயதில் தன்னந்தனியே பயணம் செய்து பக்தி இயக்கத்தையும், சைவ சமயத்தையும் வளர்த்துப் பரப்பிய முதல் சமயக் குரவர் திருநாவுக் கரசரே ஆவார். அப்பர் பாடிய திருமுறைகள் மூன்று ஆகும்.

அப்பர் சிவன் கோவில் தோறும் சென்று பதிகம் பாடி மக்களுக்குச் சிவநெறியின் சிறப்பை உபதேசித்தார். தொண்டை நாட்டில் சைவ சமயம் புத்துயிர் பெற்று வளரத் தொடங்கியது. அப்பர் பஷையாறையில் சமணர் கையிலிருந்த வடதளி பூசை யற்று இருந்ததைக் கேட்டு அங்கு உண்ணாவிரதம் இருந்தார். அப்பர் ஏறத்தாழ 126 கோவில்கட்குச் சென்று பதிகம்பாடினார்.

அப்பருடன் பிற்காலத்தில் சம்பந்தரும் சென்றார். இருவரும் சேர்ந்தே சென்று பல கோயில்களில் பதிகம் பாடினர். அக்காலத் தில் எல்லாத் தளங்களிலும் மடங்கள் இல்லை. அப்பரே திருப் பூந்துருத்தி என்னும் ஊரில் மடத்தைக்கட்டி அங்குப் பலநாள் தங்கிப் பதிகங்கள் பாடினார். சென்றவிட மெல்லாம் அடியார் திருக்கூட்டத்தினர் அரும் பெரும் உதவி செய்தனர். நேரே செல்லாமல் பதிகங்கள் சிலவற்றில் சில தரங்களைக் குறித்துள் ளார்.

திருநாவுக்கரசர் காலத்தில் இருந்த சைவ அடியார்கள் அப் பூதியடிகள், முருக நாயனார், சிறுத்தொண்டர், திருநீலநக்கர் நெடுமாற நாயனார், பாண்டிமாதேவியார், குலச்சிறையார் கழற்சிங்கர், கலயர், ஞானசம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப்பாணர்

முதலானோர். திருநாவுக்கரசர் சிவகதிபெற்றது அவரது 81 வது வயதில் என்று சைவ நூல்கள் கூறுகின்றன. ஆனால் எந்த ஆண்டில் என்பது தெரியவில்லை. கி. பி. 650 இல் இறைவனடி சேர்ந்திருக்கக் கூடும்என்பது சிலரது கருத்து. திருஞானசம்பந்தர் பிராமண குலத்தில் பிறந்தவராயிருந்தும் அப்பரைப் போற்றினார்.

திருஞானசம்பந்தர்: திருநாவுக்கரசருடன் இணைந்து பக்தி நெறியைப் பரப்பியவர்களில் திருஞானசம்பந்தரும் ஒருவராவார். சிவபாத இருதயர் என்பவருக்கும், பகவதி அம்மைக்கும் மகனாக சீகாழியிலே பிறந்தார். தம்முடைய மூன்றாவது வயதிலேயே திருவருள் பெற்றார் என்பர். இளமையிலேயே சிவபெருமானை இனிய பாடல்களினால் பாடித் துதிக்கும் ஆற்றல் பெற்றார். இவரை 'நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்' என்று அழைத்தனர். சென்ற விடமெல்லாம் சம்பந்தர் தேன் போலத் தித்திக்கும் தேவார பதிகங்கள் என்னும் தெய்வப்பாடல் களைப் பாடினார். தமிழகத்தில் சிவபெருமான் எழுந்தருளியுள்ள ஆலயங்களுக்கெல்லாம் சென்று பதிகங்கள் பாடினார். ஞான சம்பந்தர் பதினாயிரம் பாடல்கள் பாடினார் என்பர். இக் காலத்தில் நமக்குக்கிடைத்துள்ளவை மூன்நூற்று எண்பத்து நான்கே ஆகும்.

திருஞானசம்பந்தர் பௌத்த, சமண சமயங்களை அழித்துப் பக்தி இயக்கத்தையும், சைவ சமயத்தையும் நிலை நாட்டுவதில் தமது வாழ்நாளைக் கழித்தார். சிறுத்தொண்டர், திருநீலநக்கர், முருகநாயனார், குங்கிலியக் கலயர் முதலியவர்கள் நண்பராக இருந்தனர்.

பாண்டிய மன்னன் நெடுமாறனுக்குக் கூன் பாண்டியன் என்ற பெயரும் உண்டு. திருஞானசம்பந்தர் பாண்டிநாடு சென்று சமண சமயத்தவனாக இருந்த இந்தப் பாண்டியனைச் சைவனாக்கினார். ஞானசம்பந்தரை வெல்லுமாறு சமணர் நியமித்த மந்திரவாதம், அனல் வாதம், புனல்வாதம் முன்றிலும் சம்பந்தரே வென்றார். சமணர் தோற்றனர். சம்பந்தர் செய்வித்த புதுமை களை இக் கால உலகம் ஏற்றுக் கொள்ளாது.

ஞானசம்பந்தரின் பதினாறாவது வயதில் அவருக்குத் திருமணம் நிகழ்ந்தது. அத் திருமணத்தின் முடிவில் தோன்றிய ஒளியில் ஞானசம்பந்தருடன் முருகநாயனார், திருநீலநக்கர், திரு நீலகண்ட யாழ்ப்பாணர் ஆகியோர் கலந்தனர்.

சுந்தரமூர்த்தி : தென்னற்காடு மாவட்டத்தில் ஆதிசைவர் என்னும் அந்தணர் குடியில் தோன்றியவர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆவார். தமிழரான இவர் திருக்கோயில் அர்ச்சகராய் விளங்கினார். சுந்தரருடைய திருமணத்திற்கு ஒரு நாள் முன்பு சிவபெருமான் ஒரு முதிய மறையோர் கோலத்தில் காட்சியளித்து அவரை தடுத்தாட் கொண்டார் என்பது புராணச் செய்தி, அவரது மணவினை தடைப்பட்டது சுந்தரர் சிவபெருமானுக்குப் பாடல் தொண்டு செய்து வந்தார் சுந்தரருடைய நண்பர் சேரமான் பெருமாள் ஆவார். சுந்தரர் பதினெட்டு ஆண்டுகளே வாழ்ந்தார் என்பர். 'தம்பிரான் தோழர்' என்பது அவர் சிறப்புப் பெயர்களில் ஒன்று.

சுந்தரர் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில் 63 நாயன்மார்களைப் பற்றியும் 9 தொகை அடியார்களைப் பற்றியும் கூறியுள்ளார். சுந்தரர் சாதிவேறுபாடு பாராட்டாதவர். உருத்திர கணிகையரான பாவையாரையும், வேளாளப் பெண்ணாகிய சங்கிலியாரையும் மணந்து கொண்டார். சுந்தரர் பாடிய பதிகங்கள் யாவையும் கிடைத்தில. ஒரு சிலவே கிடைத்துள்ளன.

மாணிக்கவாசகர் : பக்தி இயக்கத்தைச் சைவ சமயத்தில் பெரும்பாலும் தோற்றுவித்தவர்களில் நான்காமர் மாணிக்கவாசகராவார். அவரது காலத்தைப் பற்றிப் பல கருத்துகள் உள்ளன. முடிந்த முடிவு ஒன்றும் கூறுவதற்கில்லை. சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டர் தொகையில் இவர் பெயரைப் பற்றிக் குறிப்பிடாமையாலும் இவர் 9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சி செலுத்திய வரகுண பாண்டியனை பற்றிக் கூறியுள்ளமையாலும் இவர் காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி எனக் கூறப்படுகிறது.

மாணிக்கவாசகர் அமைச்சராகப் பாண்டிய மன்னரிடம் புணி புரிந்தவர். இறைவன்பால் இவர் கொண்ட பற்றினால் காதலால் தம் பதவியைத் துறந்து இறைபணியை மேற் கொண்டார். மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடல்கள் அவருடைய நுண்ணறிவையும், அவர் நுணுகி நுகர்ந்த கருத்துக்களையும் நிழற்படம்போல் காட்டுகின்றன. 'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது மூத்தோர் மொழி. மாணிக்கவாசகரின் பாடல்கள் ஆண்டவனிடம் காட்ட வேண்டிய தன்னலமற்ற பேரன்பின் பெருமையையே உணர்த்துபவை. 'திருச்சிற்றம்பலக் கோவை' என்னும் நூலாசர் தம் சிறப்பை விளக்கும் நூல் இவர் இயற்றியதே. இலங்கையைச்

சேர்ந்த பௌத்த சமயத்தவருடன் சிதம்பரத்தில் மாணிக்கவாசகர் சொற்போர் நிகழ்த்தி வெற்றி பெற்றார் என்று கூறப்படுகிறது.

பிற அடியார்கள்: நாயன்மார்கள் பலர் தோன்றிய போதிலும் இந் நால்வரே பன்னூறு ஆண்டுகளாக மக்களின் உள்ளத்தில் நிலைபெற்றவர்கள். நாயன்மார்களைக் கடவுளர் களாகக் கருதி வழிபடும் முறை சோழர்கள் காலத்தில் ஏற்பட லாயிற்று. நாயன்மார் தம் வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இன்றும் திருவிழாக்களாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. நாயன்மார்கள் ஏற்றிவைத்த ஞான ஒளி தொடர்ந்து பரவியது. அவர் தம் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பலர் தோன்றினர். பத்தாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் தோன்றிய தாயுமானவர் பாடல்கள் மக்களது உள்ளத்தைக் கவர்ந்தன. பிற்காலத்தில் சைவநெறிப் பாடல்கள் பக்தி இயக்கத்தின் விளைவால் தோன்றியவையே.

திருமூலனார்: பக்தி இயக்கம் சைவ சமயக் கொள்கைகளில் சில மாற்றங்களைத் தோற்றுவித்தது. திருமூலர் சைவநெறியினை எடுத்தோதியவர்களில் குறிப்பிடத் தகுந்த மற்றொருவர் ஆவார். திருமூலர் நந்தியின் அருள் பெற்றவர்; பிராமணச் சிவயோகி; அணிமா முதலிய சித்திகளில் வல்லவர். பொதியமலையிலிருந்த அகத்தியரைக் காண விரும்பிக் கைலாயத்திலிருந்து புறப்பட்டார் என்றும், திருவதிகையைத் தரிசித்துத் தில்லையில் நடராசரது ஆனந்தக் கூத்தைக் கண்டார்.

திருவாடுதுறையில் மூலன் என்ற ஆட்டிடையன் இறந்து விடப் பசுக்களின் துயர்போக்க மூலனின் உடலில் புகுந்த இவரது சொந்த உடலை இறைவன் மறைத்துவிட்டார். 'ஆகமப் பொருளைத் தமிழ்ப் படுத்தவேண்டும் என்பதற்காகக் கடவுள் தம் உடலை மறைத்து விட்டார் என்பதை உணர்ந்தார். பின்னர் திருவாடுதுறை மகாலின் மரத்தடியில் யோகத்தில் இருந்து மூவாயிரம் பாடல்களைக் கொண்ட திருமந்திரத்தைச் செய்தார் என்ற செய்திகளெல்லாம் பெரியபுராணத்தின் வாயிலாக அறிகிறோம். லோகாயதம், சாங்கியம் முதலிய ஆறு புறச் சமயங்களும் பக்தி நெறியைப் பற்றிக் கவலைப்படாதவை. அவை நாம் என்பதை அறிய முடியாதவை. ஆதலால் அச் சமயங்கள் பயனற்றவை என்பது திருமூலர் கருத்து. திருமூலரின் சொற்களையும், தொடர்களையும் அப்பர் முதலியோர் எடுத் தாண்டனர் என்று கூறப்படுகிறது.

'வேவுறு தோளி பங்கன் விட முண்டகண்டன்' என்ற வரியையும் 'வேயன தோளிக்கு வேந்தொன்றுந்தானே' என்ற வரியையும் ஒப்பு நோக்கில் மேலே கூறப்பட்டுள்ள உண்மை தெற்றென விளங்கும். தமிழ் நாட்டில் அப்பர் முதலியோர் கையாண்ட சன்மார்க்க சைவம் பரவுவதற்குத் திருமூலமே ஆதார நூலாகவும், சைவசித்தாந்த சாத்திரங்கட்குத் தூண்டுகோலாகவும் இருந்தது எனலாம். தமிழகத்தின் சைவ சமய வரலாற்றை அறியத் திருமந்திரம் பெரிதும் துணைபுரிகிறது.

ஆதிசங்கரர்: தென்னிந்தியாவில் சங்கரர் கி. பி. 790இல் வட கேரளத்தில் காலடி என்னும் ஊரில் நம்பூதிரிக் குலத்தில் பிறந்தார். அத்வைதக் கருத்துகளைப் பரப்பியவர் இவரே யாவார். காஞ்சியில் இருந்த புத்தரை வாதில் வென்று அங்கொரு மடத்தை நிறுவினர். கும்பகோணத்திலும் ஒன்றை நிறுவினர். நாட்டின் முக்கிய இடங்களில் நான்கு மடங்களை நிறுவினர். அத்வைத வேதாந்தம் பற்றி உபநிடதம், பகவத்கீதை, பிரம சூத்திரங்கள் முதலியவற்றிற்குத் தாம் எழுதிய விளக்க உரை களில் குறிப்பிட்டுள்ளார். சிவன், திருமால் அம்பிகை வழி பாட்டை ஆதரித்த இவர் நரபலி, மிருகபலி முதலியவைகளைக் கண்டித்தார். அவரது சேவையால் 'ஸமார்த்த' சமயம் நாட்டில் பரவத்தொடங்கியது. இறைவன் எங்கும் நிறைந்திருக்கும் உயிர் பொருள் என்பதும் தனிமனிதனின் உயிர் அம்முதற் பொருளில் இரண்டறக் கலந்து விடுமென்பதும் இந் நிலையை யடைய அறி யாமை அகன்றொழிய வேண்டும் என்பதும் அவரது கருத்து களின் பிரிவாகும். தென்கோடியில் பிறந்த சங்கரன் இந்தியா முழுமைக்கும் சமய ஒற்றுமை ஏற்பட வகை செய்தார். இவர் கட்டிய மடங்கள் நாடு முழுவதிலும் பரவி உள்ளன. வடக்கை யும் தெற்கையும் சமயத்துறையில் இணைத்த பெருமை இவருடை யதே என்று கூறலாம்.

ஆழ்வார்கள்: சைவசமயத்தில் பக்தி இயக்கம் தோன்றியது போன்றே வைணவ சமயத்திலும் பக்தி இயக்கம் தோன்றியது இதே நேரத்தில்தான். வைணவ சமயப் பெரியார்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர். ஆழ்வார்கள் என்ற சொல்லுக்குத் திருமாலின் பக்தியில் ஆழ்பவர்கள் என்ற பொருளாகும். கி. பி. 500 முதல் 850 வரை ஆழ்வார்கள் வாழ்ந்த காலம் என்று கூறத்தக்க அள வில் பன்னிரண்டு ஆழ்வார்கள் வாழ்ந்தனர் அக்காலத்தே. அவர்களை மூன்று பிரிவினர்களாகப் பிரிக்கலாம் காஞ்சியில் பிறந்த பொய்கை ஆழ்வாரும், மாமல்லபுரத்தில் பிறந்த பூதத் தாழ்வாரும், மயிலையில் பிறந்த பேயாழ்வாரும், திருமழிசையில்

பிறந்த திருமழிசையாழ்வாரும் முதற் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர். நம்மாழ்வார், மதுரகவி ஆழ்வார், குலசேகர ஆழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகியோர் இரண்டாவது பிரிவினர் ஆவர். தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் என்பார் சேரநாட்டின் பெருங்குடியினர். இவர்கள் மூன்றாவது பிரிவினர்.

முதல் பிரிவைச் சேர்ந்த நான்கு ஆழ்வார்களும் ஏழாம் நூற்றாண்டில் முதற் பகுதிவரை வாழ்ந்தவர்கள். நம்மாழ்வார் ஆழ்வார் திருநகரி என்ற ஊரில் பிறந்தவர். பெரியாழ்வார் ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்தவர். மதுரகவி நம்மாழ்வரிடம் பணி புரிந்தவர். திருமாலுக்கு அடிமை பூண்ட மகளிர் பலரில் மிகச் சிறந்தவர் ஆண்டாள். 'சூடிக் கொடுத்த சுடர்கொடி' எனவும் அழைக்கப்படுகிறார். கேரள நாடு முழுவதையும் ஆண்ட அரசனுய் விளங்கியவர் குலசேகர ஆழ்வார் ஆவார்.

ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்கள் திருப்பாணாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருமங்கை ஆழ்வார் ஆகியோர் ஆவர். திருப்பாணாழ்வார் தாழ்ந்த குலத்தில் தோன்றிப் புகழ் பெற்றவர். தொண்டரடிப்பொடி விப்ரநாராயணர் எனப்பட்டார். திருமங்கையாழ்வார் சம்பந்தரைச் சந்தித்தவர் என்பர். கள்ளர் வகுப்பில் பிறந்த அவர், இறைவனின் அடியாராய் மாறித் திருமாலின் ஆலயங்களைத் திருப்பணி செய்யும் அரும்பணியைச் செய்தார். ஏறக்குறைய பிரபந்தத்தில் 1351 செய்யுட்கள் இவர் இயற்றியவையே.

இராமானுஜர்: ஆழ்வார்களுக்குப் பின் தோன்றியவர்களில் இராமானுஜர் குறிப்பிடத் தகுந்தவர் ஆவார். இவர் சென்னைக்கு அருகிலுள்ள ஸ்ரீபெரும்புதூரில் வாழ்ந்தவர் ஆவார். காஞ்சியில் வாழ்ந்த யாதவப் பிரகாசரிடம் முதலில் அத்துவதை நெறியைப் பயின்றார். ஆனால் தமது கருத்துக்கு எதிரானதாக அவர் கொள்கை தோன்றவே, திருவரங்கத்தில் வாழ்ந்த யாமுனாசாரியார் என்பவரை அணுகி அவரிடம் சமயக் கல்வி பெற விரும்பினர். யாமுனாசாரியாரும் இவரைச் சேர்த்துக் கொள்ள விரும்பினர். ஆயினும் இராமானுசர் அவரைச் சென்று காணுமுன்பே அவர் மறைந்துவிடவே, யாமுனாசாரியாரின் தொண்டரான பெரியநம்பியிடம் மாணவராக அமர்ந்து நாடுமுழுவதும் சுற்றித் திருப்பதிகளைத் தரிசித்தார்.

காச்மீரம் சென்று அங்குப் பிரம்ம சூத்திரங்களை விளக்கிக் கூறும் போதாயன விருத்தி என்ற நூலைப் பெற்றார். திருவரங்கம்

வந்து பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதினர். அவ் வுரைநூல் ஸ்ரீ பாஷ்யம் எனப்படுகிறது. இந் நிலையில் தாம் வாழ்ந்த சோழ நாட்டை விட்டகலவேண்டிய சூழ்நிலை இவருக்கு ஏற்பட்டது. சோழவேந்தரில் சைவப் பற்றுமிக்கச் சிலர் வைணவருக்கு இன்னல் விளைவித்தனர். இதன் விளைவால் ஹொய்சாள நாட்டை அடைந்தார். அங்குச் சென்ற அவர் ஹொய்சாள மன்னரான பிட்டிதேவர் என்பாரை வைணவராக்கியதோடு அவர் பெயரையும் விஷ்ணுவர்த்தனர் என மாற்றினர். சோழவேந்தன் இறந்துவிடவே மீண்டும் திருவரங்கம் வந்து தமது பெருநூலை எழுதிமுடித்தார்.

வேதாந்த சாரம், வேதாந்தசங்கிரகம், வேதாந்த தீபம் ஆகிய நூல்களை எழுதினர். பிரம்ம சூத்திரங்களுக்கு ஸ்ரீபாஷ்யமும் பகவத் கீதைக்கு விளக்க உரையும் எழுதினர். இவருடைய கொள்கை விசிட்டாத்துவைதக் கொள்கையாகும். சங்கரரின் அத்துவைதக் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஜீவாத்மாவும் பரமாத்மாவும் வேறு வேறு என்பது இவரது கருத்தாகும். நிம்பார்க்கர் ஆனந்த தீர்த்தர் போன்றவர்கள் இந்து சமய எழுச்சிக்குக் காரணமானவர்களில் சிலராவர்.

மத்துவர் : ஆனந்ததீர்த்தர், பூரண பிரச்சினர் என்ற பெயரைக் கொண்டவர் சங்கரரின் கொள்கைகளை எதிர்த்தவர் மத்துவரே ஆவார். உடுப்பி மாவட்டத்தில் கல்யாணபுரம் என்ற ஊரில் பார்ப்பன குலத்தில் பிறந்த இவர் இளம் வயதில் சங்கரரின் அத்துவைதக் கொள்கையினைப் பாடமாகப் போதித்துவந்தார். அத்துவைதக் கொள்கைகள் பால் வெறுப்புக்கொண்டிருந்தார் சங்கரரின் கருத்துகளை மறுத்து எங்கு எடுத்தோதிய இவர் கருத்து துவைதம் என்பதாம்.

துவைத நெறியில் திரிவிக்கிரம பண்டிதர் என்பவரைத் திருப்பித் தன்னது மாணவராக்கிக் கொண்டார். திரிவிக்கிரமர் அத்துவைதக் கொள்கையில் தீவிரப் பற்றுக் கொண்டிருந்தவர். பிரம்ம சூத்திரங்களை விளக்கிப் பாஷ்யம் என்ற உரைநூலை எழுதினர். தம் வாதத் திறமையினால் பலரை சமயச் சொற்போரில் வென்றார், மத்துவரின் கொள்கை இதுவே எனலாம். நாராயணனே தனிப்பெருங்கடவுள், உலகம் வெறும் தோற்றமோ இறைவனின் ஒரு பகுதியோ அல்ல. உண்மையிலேயே இருக்கும் ஒரு பொருள்; இறைவனின்று வேறுபட்டது. உயிர்களெல்லாம் தத்தம் ஈடேற்றத்திற்காகவே இறைவனைச் சார்ந்துள்ளன. தீயவை முடிவில் அழியும். உள்ளம் நிறைந்த பக்தியே ஈடேற்

றத்தை நல்கும். இறைவனை மறைநூல் வழியில் மட்டுமே காண இயலும்.. இராமானுசரின் காலத்திற்குப் பின்னர் வைணவத்தில் இருபிரிவுகள், வடகலை, தென்கலை யெனத் தோன்றின. மராட்டியத்தில் 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் பாடல் தொண்டினால் மக்கள் உள்ளத்தில் பக்தியை விதைத்தனர்.

காட்டுத் தீ : மராட்டிய மொழியில் ஞானச்சுவரர் முதல் துக்காராம் காலம் வரைப் பலப்பலர் தோன்றினர். கன்னட மொழியில் தேவர நாமங்கள் என்ற இசைப்பாடலைத் தாசகூர் என்பவர் இயற்றினர். புரந்தர விட்டலர் குறிப்பிடத்தகுந்தவரே தென்னாட்டில் பிறந்த வல்லபரைப் பற்றிய செய்திகளை வட இந்தியப் பக்தி இயக்கம் பற்றிய செய்திகளில் பரக்கக் காண்கிறோம். 'பக்தி இயக்கம்' இயக்கமாக இல்லாது காட்டுத் தீப் போலப் பரவியது. இவ் வியக்கம் மட்டும் தோன்றாது போயிருக்கு மேல் இஸ்லாமிய, கிறித்துவ சமய அலைகளினால் இந்துசமயம் அடித்துச் செல்லப்பட்டிருக்கக் கூடும். இந்து சமயத்தைக் காக்கும் அணையாக இப் பக்தி இயக்கம் விளங்கியது என்றால் மிகையாகாது.

5. தக்காண வரலாறு

இராட்டிர கூடர்கள் — சாளுக்கியர்கள் —கங்கர்கள் — கடம்பர்கள் — காகதீயர்கள்—யாதவர்கள் — ஹொய்சாலர்கள் அல்லது வல்லாளர்கள்.

1. இராட்டிரகூடர்கள்

தோற்றம்: தென்னிந்திய வரலாற்றில் சாளுக்கியர்களைப் போலவே இராட்டிர கூடர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஆவார். இராட்டிரகூடர்களின் பூர்விகம் குறித்துப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. இராட்டிரகூடர்களின் தோற்றம் குறித்துக் கூறப்படும் பல்வகைக் கருத்துகளைக் காண்போம்.

டாக்டர். பிளீட் இராட்டிரகூடர்கள் வட இந்தியாவைச் சேர்ந்த 'இராதோர்களின்' வழிவந்தவர்கள் என்று கூறினார். பர்னல் என்னும் அறிஞர் தெலுங்கு நாட்டு ரெட்டிகளைச்சேர்ந்தவர்களே இவர்கள் என்று கூறினார். இராட்டிரகூடர்கள் தங்களுடைய பிற்காலச் சான்றுகளில் காவிய நாயகனான கிருஷ்ண பிரானின் நெருங்கிய நண்பனாக விளங்கிய சாத்யகி என்பானின் வழிவந்தவர்கள் என்று தம்மைக் குறித்துள்ளனர். பல ஆவணங்களில் இராட்டிரங்கள் என வழங்கிய மாவட்டங்களின் தலைவர்களாக இராட்டிரகூடர்கள் என்ற அலுவலர்கள் இருந்தனர் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து அக் குறிப்பு இவர்களையே குறிப்பிடுகிறது என்று நம்புவர்களும் உள்ளனர்.

கீழைச் சாளுக்கியர்களின் குறிப்புகள் பலவற்றில் இராட்டிரகூடர்களை 'குடும்பன்கள்' அல்லது ஆந்திர விவசாயிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இராட்டிரகூடர்கள் திராவிடநாட்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் எனவும், சாளுக்கிய மன்னர்களிடமிருந்து மாநில ஆளுநர் பதவியைப் பரம்பரை உரிமையாகப் பெற்றப் பின்னர் பேரரசு ஒன்றினை நிறுவினர் என்றும் கூறப்படுகிறது.

இக் கருத்துகளில் முதலாவதாகக் கூறப்பட்ட ஃபிளீட்டின் கருத்தினை மறுத்து உரைக்க வாய்ப்பு உள்ளது. ஏனென்றால் இராதோர்கள் எனப்பட்டவர்களின் காலத்திற்கு முன்னரே இராட்டிரகூடர்கள் பற்றிய செய்திகள் கிடைத்துள்ளன. தெலுங்கு ரெட்டி என்ற சொல்லே மருவி இராட்டிரகூடர்கள் என்று ஆகியது என்பதும் மறுக்கத்தக்க ஒன்றாகும். ஏனென்றால் தெலுங்கு மொழியில் அத்தகைய சிதைவு ஏற்பட இடமில்லை என்று நம்பப்படுவதே. இரட்டிரகூடர்கள் மராத்தியப் பகுதியிலிருந்து வந்தவர்கள் என்பர் சிலர். இராட்டிரகூடர்கள் பற்றிய தனிநூலினை எழுதிய அல்டேகர் இவர்களின் தோற்றம் கர்னாடகத்திலிருந்தே ஏற்பட்டிருக்க வேண்டும் என்று அறிவிக்கிறார். பீடார் மாவட்டத்திலுள்ள லட்டூர் என்ற பகுதி கன்னட மொழி பேசப்பட்ட பகுதி எனவும், 'லட்டுலாரா, அழகிய நகரத்தின் தலைவர்கள்' என்று தம்மைக் குறிப்பிட்டுக்கொள்வதிலிருந்தும் இம் முடிவிற்கு அவர் வந்ததாக அறிகிறோம். இருப்பினும் இதையே முடிந்த முடிவாக அனைவரும் ஏற்றுக்கொள்வதில்லை.

குந்தி துர்க்கர்: இராட்டிரகூட அரசர்களில் முதன்மையானவர்கள் ஒருவர் என கருதப்படுகிறார். இவர் சாளுக்கிய மன்னரான இரண்டாம் விக்கிரமாதித்தருக்குத் திறை செலுத்தும் அரசராக விளங்கினார். அவருடைய போர்களில் பெரிதும் துணைபுரிந்தார். புலிகேசி மன்னருடன் இணைந்து கி.பி. 738இல் அராபியர்களைத் தோற்கடித்து குஜராத் முற்றுகையை மீண்டும் செய்திட அவர்கள் நினைத்திடகூட இயலாதவாறு தடுத்தார். எனவே சாளுக்கிய மன்னர் இவருக்கு பிருதிபிவல்லபன், கட்கவலோகன் ஆகிய பட்டங்களை அளித்துச் சிறப்பித்தார்.

இரண்டாம் விக்ரமாதித்தரின் மறைவிற்குப் பின்னர்தாமே தனியாகப் படையெடுப்புகளை நடத்தத் தலைப்பட்டார். நந்திபுரியைச் சேர்ந்த கூர்ஜரர்களைத் தோற்கடித்தார். கிழக்கு மத்தியப்பிரதேசம், மத்திய தெற்கு குஜராத், பிரார் ஆகிய பகுதிகளை வென்றார். காண்டேஷ் என்னுமிடத்தில் கீர்த்திவர்மன் என்ற சாளுக்கிய மன்னரின் படைகளும் தந்திதுர்க்கரின் படைகளும் போரிட்டன. கி பி. 753இல் தந்திதுர்க்கர் மகாராட்டிரம் முழுமையும் வென்றார்.

மகாராஜாதிராஜா, பரமேஸ்வரா, பரமபட்டாரகர ஆகிய பட்டங்களைச் சூட்டிக்கொண்ட தந்திதுர்க்கர் கி.பி. 758க்கு முன்னர் இறந்திருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது. மாகி, மகாநதி தீரங்களிலும் போர் நிகழ்த்தினார் எனவும், காஞ்சி

கோசலம், கலிங்கம், மாளவம் ஆகியவற்றை வெற்றிக்கொண்டார் எனவும் கூறப்படுகிறது.

முதலாம் கிருட்டினர் 758-773 தந்தி துர்க்கருக்குப் அவருடைய சிறிய தந்தையாரான முதலாம் கிருஷ்ணர் அரியணை ஏற்றார். சாளுக்கிய அரசரான கீர்த்திவர்மர் தோற்கடிக்கப் பட்டாரே தவிர முழுமையாக ஒடுக்கப்படவில்லை. எனவே கீர்த்திவர்மரை ஒடுக்கும் முயற்சியில் வெற்றிப் பெற்றார். மைசூரை ஆண்ட கங்கர்களைத் தோற்கடித்தார் வேங்கியைச் சேர்ந்த சாளுக்கிய மன்னரைத் தோல்வியடையச் செய்தார். சிவபிரானுக்கு எல்லோராவில் கற்கோவில் ஒன்று ஒரு குன்றைக் குடைந்து செய்வித்தார். சிறந்த கலைப் படைப்பை உருவாக்கிய முதலாம் கிருஷ்ணர் சுபதுங்கா, அகாலவர்ஷர் ஆகிய பட்டங்களைக் கொண்டார்.

இரண்டாம் கோவிந்தர் 773-780 இளமையிலேயே தந்தையுடன் சேர்ந்து போர்களம் புகுந்து பயிற்சி பெற்றிருந்த இரண்டாம் கோவிந்தர் பிரபுத வர்ஷ விக்கிரமலோகா என்னும் பட்டம் பெற்றிருந்தார். பதவியேற்றபின் இலாயக்கற்றவராக இன்ப வாழ்க்கையில் கருத்துச் செலுத்த ஆரம்பித்தார். ஆட்சிப் பொறுப்பை துருவன் என்ற தம்பி கவனித்து வந்தார். துருவனையும் அப் பொறுப்பிலிருந்து விடுவிக்க அண்ணன் தம்பியாரிடையே போர் மூண்டது. கோவிந்தர் தோற்றார், துருவர் வென்றார்.

துருவன் 780-793 துருவன் ஆட்சிக்கு வந்ததும் தன் உடன்பிறப்பிற்கு உதவி செய்தவர்களைத் தண்டிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். முத்தரசன், வேங்கி அரசன் ஆகியோர் அடிபணிந்தனர். இவ்வாறு தென்னிந்தியப் பகுதிகளில் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்திய பின் வடஇந்தியாவின் மீது கவனம் செலுத்தினர். வடஇந்தியாவின் மீது படையெடுத்து பிரதிகார ஆட்சியாளனாக வத்சராசன், கங்கை தோஆப் பகுதியை ஆண்ட இந்திராயுதன், தர்மபாலன் எனப்பட்ட பாலவம்ச அரசன் ஆகியோரைத் தோற்கடித்து கங்கை யமுனைப் பகுதியில் வெற்றிக் கொடி நாட்டித் திரும்பினர். இராட்டிரகூடர்களின் ஆதிக்கம் உச்சநிலையை அடைந்தது இவர்கள் காலத்தே தான். நிருபமா காளி வல்லபன், தரவர்ஷன், ஸ்ரீவல்லபன் ஆகிய பட்டங்களைச் சூட்டிக் கொண்டார்.

மூன்றும் கோவிந்தன் 793-814 துருவனுக்குப்பின் மூன்றும் கோவிந்தன் ஆட்சிக்கு வந்து ஆட்சி செலுத்திய ஸ்தம்பர்

என்ற தன் மூத்த சகோதரரின் தொல்லை ஏற்பட்டது. திறை அரசர்கள் பலரும் ஸ்தம்பரை ஆதரித்தனர். பன்னிருவர் அவ்வாறு எதிர்த்தவர்கள் ஸ்தம்பருடன் சிறைப்படுத்தப் பட்டனர். கங்கவாடி ஆளுநராகப் பெருந்தன்மையுடன் ஸ்தம்பரை ஆளுமாறு செய்தார்.

சிவமாறன் என்ற சுங்க இளவரசன் ஸ்தம்பருடன் சேர்ந்த மையால் சிறைபடுத்தப்பட்டான். தண்டிகர் என்ற பல்லவன், நான்காம் விஷ்ணுவர்த்தனர் எனப்படும் தாய்வழிப் பாட்டனர் கோவிந்தரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டனர்.

வட இந்திய அரசர்களான இரண்டாம் நாகபட்டர் எனப் படும் பிரதிகார அரசன், கன்னேசி அரசனை சக்ராயுதன், தர்மபாலன் ஆகியோர் அடிபணிந்தனர். இமயம் வரை சென்று வென்று வந்தார். வடஇந்தியப் படையெடுப்பை கோவிந்தர் மேற்கொண்டபொழுது கேரள பாண்டிய, பல்லவ ஆட்சி யாளர்கள் ஒருங்கிணைந்து எதிர்த்தனர். அவர்கள் அனைவரும் வீழ்ந்தனர். இலங்கை அரசனும் அடிபணிந்தார். கன்னேசியி லிருந்து குமரிமுனை வரை உள்ள பகுதியை வென்று அடக்கிய மூன்றும் கோவிந்தர் சிறந்த அரசர் என்பதில் ஐயமில்லை. மூன்றும் கோவிந்தர் காலத்தில் இராட்டிரகூட அரசு புகழ் பெற்ற அளவிற்கு வேறு யாருடைய காலத்திலும் புகழ் பெற வில்லை என்று கூறலாம். இத்தகையப் பெருமை நிலையை இவருக்கு முன்னரோ பின்னரோ ஆண்ட யாரும் அடையவில்லை. இராட்டிரகூட அரசர்களிலேயே தலை சிறந்தவர், புத்தி சாதுரிய மும், வீரமும் திறமையும் மிக்க மூன்றும் கோவிந்தரே ஆவர்.

அமோக வர்ஷர் 814-878 மூன்றும் கோவிந்தருக்குப் பின்னர் அவர் மைந்தர் சர்வா எனப்பட்ட அமோக வர்ஷர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அவருக்கு வயது பதிமூன்று அல்லது பதினான்கே ஆகியிருந்தமையால் கர்கர் என்பவர் ஆட்சியை நடத்தி வந்தார். அப்போது எங்கும் எதிர்ப்பு சக்திகள் தலைதூக்க ஆரம்பித்தன. கங்கவாடி சுயேச்சையாகச் செயல்பட ஆரம்பித்தது. வேங்கி ஆட்சியாளராக இரண்டாம் விஜயாதித்தர் இராட்டிரகூட அரசைத் தாக்கினர். இதன் விளைவாக அமோகவர்ஷர் பதவியிழந்து மீண்டும் கி.பி. 821இல் திரும்பப்பெற்றார்.

அமோகவர்ஷரின் இருபதாண்டு ஆட்சிகாலம் முழுமையும் அமோகவர்ஷருக்கும் நங்கர்களுக்கும் தொடர்ந்து நடைபெற்ற

போர் திருமண உறவினுலே முடிவிற்கு வந்தது. அமோகவர்ஷர் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப்பெற இயலாமையால் இலக்கியத் துறையிலும் சமயத்துறையிலும் கருத்துச் செலுத்தினர். சமண சமயப் பற்றுக்கொண்டு விளங்கினர். ஆயினும் இந்துக் கடவுள் களையும் வழிபட்டார்.

இவரால் புலவர்கள் ஆதரிக்கப்பட்டனர். ஜினசேனர் என் பவர் ஆதிபுராணம் என்ற நூலையும், மகாவீராச்சாரியர் என்பவர் கணிதசரசக் கிரகம் என்ற நூலையும் சாகாதயனர் என்பவர் அமோகவிருத்தி என்ற நூலையும் வெளியிட்டனர். கன்னட மொழி நூலான கவிராஜ மார்க்கம் என்பதனை எழுதியவர் அமோகவர்ஷரே ஆவார். மால் கெட் அல்லது மான்யகேதம் என்ற தலைநகர் சிறப்புப் பெறக் காரணமானவரும் இவரே. அமோகவர்ஷர் மக்கள் நலங்கருதி ஆட்சி புரிந்த அரசராவார். கிருபதுங்கன், மகாராஜா சந்தா, வீரநாராயணர், ஆதிசாயதவலர் ஆகியவை இவருடைய சிறப்புப் பட்டங்கள்

இரண்டாம் கிருட்டினர் 878-914 அகாலவர்ஷர், அபதுங்கர் என்ற சிறப்புப் பட்டங்களைப்பெற்ற இரண்டாம் கிருட்டினர் 36 ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர். இவரும் சமண சமயப்பற்றுக் கொண்டவரே. வாழ்வின் பெரும் பகுதியைப் போரில் கழித்த இவர் பிரதிகாரர்களையும், கீழைச் சாளுக்கியவர்களையும் வென்றது குறிப்பிடத்தக்கது ஆகும். கௌடர்கள், அங்கம், கலிங்கம், மகதம், கங்கப்பகுதி ஆகிய வற்றின் அரசர்களை அடிபணியச் செய்தார். வேங்கியைச் சேர்ந்த கீழைச் சாளுக்கிய அரசரான பீமன் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டார். பீமன் திறை செலுத்தும் அரச ராஞர். மீண்டும் ஒருமுறை போரிட்ட பீமன் மறுபடியும் தோற்கடிக்கப்பட்டார். முதலாம் ஆதித்தச் சோழனுக்குத் தம் மகளை மணம் செய்து கொடுத்தார் என்ற போதிலும் சோழ அரசின் மீது தம் பேரனை அரசனுக்கிடப் படை நடத்தினர். பெரும் பாலான போர்களில் இவருக்குத் தோல்வியே கிட்டியது. இவருக்கு கிருட்டினராசர் என்பவர் பெரிதும் துணைபுரிந்தார்.

மூன்றும் இந்திரன் 914-922 இரண்டாம் கிருட்டினரின் பேரனான மூன்றும் இந்திரன் நித்தியவர்ஷர், இரட்டகந்தர்பன், இருத்தநாராயணன், இராஜமார்த்தாண்டன் ஆகிய சிறப்புப் பெயர்களுடன் ஆட்சி செய்தார். பிரதிகாரர்கள், கன்னெசி ஆட்சியாளர்கள் ஆகியோருடன் தொடர்ந்து போர் நிகழ்த்தினர். இவருக்குப் பின்னர் இரண்டாம் அமோகவர்ஷர் ஆட்சிக்கு

வந்தார். இதன் பின்னர் நான்காம் கோவிந்தர், மூன்றும் அமோக வர்ஷர் ஆகியோர் கி.பி. 940 வரை ஆட்சி செலுத்தினர்.

மூன்றும் கிருட்டினர் (940-968) மூன்றும் கிருட்டினர் சோழர்கள் மீது படையெடுத்து, தொண்டை மண்டலப் பகுதியில் ஆதிக்கம் செலுத்தினர். இராமேசுவரம் வரை படையெடுத்துச் சென்றார். இராமேசுவரத்திற்கு அருகில் கிருட்டினேசுவர ஆலயம் எழுப்பினர். பின்னர் வடஇந்தியப் பகுதிகளில் கவனம் செலுத்தினர். மூன்றும் கிருட்டினர் ஒருவரே தென்னிந்தியாவின் பெரும் பகுதிகளை வென்ற அரசராவார். மூன்றும் கிருட்டினருக்குப்பின் அவர் இளவல் கோட்டிகர் என்பவர் ஆட்சி செய்தார். இவருடைய ஆட்சி கி.பி. 972 வரை நடைபெற்றது. இரண்டாம் கர்க்கர் என்ற புதிய ஆட்சியாளரின் ஆட்சியின் போது இராட்டிர கூடர்கள் மிகவும் பலவீனர்களாயினர். இரண்டாம் தைலரால் இராட்டிரகூட அரசு முடிவிற்குக்கொண்டு வரப்பட்டது.

2. இராட்டிரகூடர்களின் ஆட்சி முறை:

அரசர்: இராட்டிரகூட அரசில் அரசரே எல்லா அதிகாரங்களும் நிரம்பப் பெற்றவராய் மகாராஜாதிராஜா, பரமபட்டாரகர். தாவர்ஷர், அகாலவர்ஷர், சுவர்ணவர்ஷர், விக்கிரமபோலர், பாகாட்டுங்கர் ஆகிய பட்டங்களைக் கொண்டிருந்தார். அரசவை ஆடம்பரங்கள் நிரம்பப் பெற்றதாய் விளங்கிற்று. அரசர் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருந்தார். ஏராளமான அணிகலன்களை அணிந்திருந்தார். அரசருக்கு அருகில் எப்போதும் காவலர்கள் இருந்தனர். அரசரின் அவையில் தூதுவர்கள், திறை மன்னர்கள், உயர் இராணுவ அலுவலர்கள், கவிஞர்கள், மருத்துவர்கள், சோதிடர்கள் போன்றவர்கள் கலந்து கொண்டனர். அவைக் கூடத்தில் நடன நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

அரச பதவி; மரபு வழியே அரச பதவியைப் பெறும் முறையே பொதுவானதாக விளங்கிற்று. மூத்த மகனே அரசராக்கப்பட்டார். எனினும் இளைய மகனைக்கூட சிற்சில சந்தர்ப்பங்களில் அரசராக்கினர். அரசராவதற்கு முன்னர் யுவராஜா எனப்படும் இளவரசுப் பட்டம் சூட்டப்பட்டது. மூத்த மகனைத் துரத்திவிட்டு இளையமகன் அரச பதவியைக் கைப்பற்றுவதும் காணப்பட்டது. யுவராஜா பட்டம் சூட்டப்பெற்ற இளவரசன் அரசோச்சுவதில் மன்னர்க்குப் பெரிதும் உதவினர். தந்தையின் சார்பில் போர்களை நடத்தினர். பெண்களைக்கூட

அரசாங்கத்தில் உயர் பதவி வகித்தனர். முதலாம் அமோக வர்ஷரின் மகள் சந்திரபலப்பா ரெய்ச்சூர் தோஆப் பகுதியை ஆட்சி செலுத்த அனுமதிக்கப்பட்டார்.

அமைச்சர்கள்: அரசருக்கு ஆட்சித் துறையில் துணை புரிந்திட அமைச்சர்கள் பலர் இருந்தனர். அமைச்சர்களின் தகுதி பற்றியோ எவ்விதத் தகுதியின் அடிப்படையில் நியமிக்கப் பட்டனர் என்பது பற்றியோ ஏதும் அறிய இயலவில்லை. அமைச்சர்கள் அரசருக்கு வலது கையாக விளங்கினர். அமைச்சர்கள் பெரும்பாலும் இராணுவத் துறைத் தலைவர்களாக விளங்கினர்.

ஊரியல்துறை: மௌரியர்கள் காலத்தில் இருந்த அமாத்தி யர்கள் என்ற ஊரியல் துறைபோன்ற துறை ஏதும் இல்லை. மாநில அரசுகள், மாவட்டங்கள் ஆகியவற்றை எங்ஙனம் நிர்வகித்தனர் என்பது தெரியவில்லை. மைய அரசைச் சேர்ந்த அலுவலர்கள் நாடு முழுவதும் சுற்றிக் கண்காணித்தனர். திறை அரசர்கள், மாவட்ட அதிகாரிகள் அடிக்கடி தலைநகருக்கு அழைக்கப்பட்டு விளக்கம் கேட்கப்பட்டனர்.

திறை அரசுகள்: பேரரசின் ஒருபகுதி நேரடியாகப் பேரரசரால் ஆளப்பட்டது. மற்றொரு பகுதி திறை செலுத்தும் அரசுகளாலே பேரரசின் மேற்பார்வையில் ஆளப்பட்டது. சில திறை அரசுகள் முழுமையாக சுயேச்சை பெற்றவை போல ஆளத் தலைப்பட்டன. திறை அரசுகள் பேரரசின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியிருந்தன. திறை அரசர்கள் அரசவைக்கு வந்து செல்லவேண்டியிருந்தது. திறை அரசுகள் பேரரசுக்குத் திறை செலுத்த வேண்டியிருந்ததோடு தேவைப் பட்டபோது படைகளை அனுப்பி உதவ வேண்டியிருந்தது. மைய அரசின் பகர ஆள் ஒருவர் நிலையாகத் திறை அரசில் இருந்தார். அதைப் போலவே திறை அரசின் பிரதிநிதி மைய அரசில் இருப்பார். திறை அரசர்கள் அடிபணிந்து நடக்க மறுத்தால் அவர்களின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. திறை அரசுகளின் உள்ளாட்சி விவகாரங்களில் தலையிட வில்லை.

பேரரசு நாடுகளின் ஆட்சி அமைப்பு முறை: பேரரசு நாடுகள் இராட்டிரங்களாகவும் விஷாயங்களாகவும் பிரிக்கப் பட்டிருந்தன. விஷாயம் ஒன்றில் ஆயிரம் முதல் நாலாயிரம் வரை கிராமங்கள் அடங்கியிருந்தன. ஒவ்வொரு விஷாயமும் புக்திகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு புக்தியிலும்

சுமார் ஐம்பது முதல் எழுபது கிராமங்கள் வரை இருந்தன. கிராமமே ஆட்சியின் அடிப்படைப் பிரிவாக விளங்கிற்று.

இராட்டிரத்தின் தலைவர் இராட்டிரபதி என அழைக்கப் பட்டார். ஊரியல், இராணுவத்துறைப் பொறுப்பையும், அமைதி யையும், ஒழுங்கையும் நிலைநாட்டுதலையும், திறை அரசுகள் துறைத் தலைவர்களைக் கண்காணித்தலையும், கிளர்ச்சிகளை அடக்குவதையும் தம் பணியாகக் கொண்டிருந்தார். நிலவரி வசூலிப்பதும் தல உரிமைகளையும், கடமைகளையும் நிலைநாட்டு வ தை யும், பிராமணர்கள், ஆலயங்கள் ஆகியவற்றிற்கு அளிக்கப்பட்ட கொடைகள் பற்றிய பட்டியல் க ளை யும் வை த் தி ரு ந் த வ ரு ம் இவரே ஆவார். ஆனால் மாவட்ட அலுவலர்களை நியமிக்கும் பொறுப்பு இவர்களிடத்து இல்லை.

விஷாயாபதிகள்: இராட்டிரபதிகள் பரந்த பகுதிகளில் பணிகளை மேற்கொண்டது போன்று குறித்த சில பகுதிகளில் விஷாயாபதிகள், போகபதிகள் ஆகியோர் பணி புரிந்தனர். இப் பதவி இராணுவத் துறையில் சிறப்பு மிக்கப் பணி புரிந்த வர்களுக்கே வழங்கப்பட்டது. இருப்பினும் சிற்சில சந்தர்ப்பங் களில் இப் பதவி மரபு வழியாயிற்று. மரபுவழி அலுவலர்களான நட்கபுந்தர்கள் போன்றவர்களின் துணையுடன் வருவாய் வசூலித்தலை மேற்கொண்டனர். வரி விலக்குச் செய்யப்பட்ட நிலங்கள் இவ் வலுவலர்களுக்கு வழங்கப்பட்டன.

கிராம ஆட்சி: கிராமத் தலைவரும், கிராம கணக்கரும் கிராமத்தின் நிர்வாகத்தை மேற்கொண்டிருந்தனர். இப் பதவிகள் மரபு வழிப் பதவிகளே. கிராமத் தலைவர் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டினர். இராணுவத் தலைவர்களைப் போல் கிளர்ச்சிகளை ஒடுக்குதலையும் இவர்களே மேற்கொண்டனர். கிராம வருவாய் வசூலிப்பையும் கவனித்துக் கொண்டனர். கிராம கணக்கர் கிராமத் தலைவருக்கு உதவினர். கிராம நிர்வாகத்திற்கு கிராமச்சபை ஒன்று இருந்தது. கிராமப் பள்ளிகள், குளங்கள், கோவில்கள், சாலைகள் ஆகியவற்றை இச்சபை மேற்பார்வையிட்டது. உரிமையில் வழக்குகளும் இச் சபையினரால் தீர்த்து வைக்கப்பட்டன. மாவட்டத் தலைநகரங்களிலும், மாநிலத் தலைநகரங்களிலும் இருந்த விஷய மகாமாத்திரர்கள், இராட்டிர மகாமாத்திரர்கள் (மாவட்டங்களின் தலைவர்கள், மாநிலங்களின் தலைவர்கள்) என்னும் அமைப்புப் பற்றிய பெயர்கள் கிடைத்துள்ளனவே தவிர அவை என்ன என்பது குறித்தும், எப்படிச் செயல்பட்டன என்பது குறித்தும் ஏதும் அறிய இயலவில்லை.

இராணுவ அமைப்பு : இராட்டிரகூடப் பேரரசர்கள் போர் ஆர்வமும் நாடு பிடிக்கும் ஆர்வமும் மிக்கவர்களாய் விளங்கியமையால் பெரும் படை ஒன்றை நிர்வகித்தனர். பெரும்படை தலைநகரில் இருந்தது. தெற்குப் பிராந்தியப் படை, வடக்குப் பிராந்தியப் படை என்ற பிரிவும், தற்காப்பிற்கு நிலையான படையும் இருந்தன. மாநில ஆளுநர்களும், திறை அரசுகளும், தேவைப்பட்டபோது படைகளை அளித்து உதவின. எல்லா இனத்தவரும் படையில் பணி புரிந்தனர்.

வருவாய் : திறைப் பணம், சுரங்கங்கள், காடுகள் ஆகியவற்றிலிருந்து வருவாய் கிடைத்தது. நிலவரி உத்ரங்கா அல்லது போக்கரா எனப்பட்டது. நாலில் ஒரு பங்கு நில வருவாயாக வசூலிக்கப்பட்டது. தானியமாகவே வரி வசூலிக்கப் பட்டது. பிராமணர்களும் வரி செலுத்தினர். சுங்கத் தீர்வைகள் வசூலிக்கப்பட்டன. அரசு அலுவலர்களின் உணவு, உறைவிடம் ஆகியவற்றை கிராமத்தவரே அவர்கள்வருகையின் போது பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இராட்டிரகூடர் காலச் சமய நிலை : இராட்டிரகூட மன்னர்கள் சிலர் சைவர்களாகவும், சிலர் வைணவர்களாகவும், சிலர் சமண சமயப்பற்றுக் கொண்டும் விளங்கினர். பட்டயங்களில் இக் கடவுள்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இராட்டிரகூடர்களின் முத்திரைகளில் கருடவாகனம், சிவவடிவம் முதலியன காணப்படுகின்றன. மன்னர்கள் இந்துச் சமய வேள்விகள் பலவற்றை நிகழ்த்தினர். தந்திதுர்க்கர் இரண்யகர்ப்ப வேள்வியினை நிகழ்த்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. எல்லோராவில் சிவனுக்கு ஆலயம் அமைக்கப்பட்டு அங்கு வழிபாடுகளும் நிகழ்த்தப்பட்டன. இந்துக்களின் பழக்கமான மன்னர்களின் பிறந்த நாள்கள், மணநாட்கள் போன்றவற்றில் துலாதானம் எனப்படும் எடைக்கு எடை பரிசு வழங்கும் முறையும் காணப்பட்டது. இவர்களின் காலத்தில் பௌத்தம் பலவீனமடைந்த போதிலும் சமணம் மன்னவர்களால் பின்பற்றப்படும் நிலையில் இருந்தது. முதலாம் அமோக வர்ஷர், மூன்றாம் இந்திரன், இரண்டாம் கிருட்டினர், நான்காம் இந்திரன் போன்றவர்கள் சமண சமயத்தைப் பின்பற்றினர். மன்னர்கள் தாங்கள் விரும்பிய கடவுள்களை வழிபட்டதோடு, சமயப் பொறை உணர்வுடன் செயல்பட்டனர். பிறசமயத்தவரை ஒடுக்கவேண்டும் என்ற தீய எண்ணம் ஏதும் கொண்டு வாழவில்லை.

இராட்டிரகூடர்களின் கலைப் பணி: இராட்டிரகூடர்களின் கலைப் பணியின் சிறப்பை எடுத்தியம்பும் சான்றுகளாக விளங்குபவை எல்லோராவும், எலிபெண்டா குகைகளுமே ஆகும். திராவிடர் காலப்பாணியில் இராட்டிரகூடர்கள் இக் கலைச் செல்வங்களை அமைத்தனர். எல்லோராவில் அமைக்கப் பட்டுள்ள கைலாசநாதர் ஆலயம் ஒரே பாறையைக் குடைந்து அற்புதமாக உருவாக்கப்பட்ட அரிய கலைப் படைப்பு. அவற்றைக் காணும் பேறு பெற்றவர்களை புதிய உலகம் ஒன்றில் வாழும் மனிதர்களாகத் தம்மை எண்ணிக் கொண்டு கற்பனை உலகில் உலாவச் செய்துவிடும் திறன் வாய்ந்த சிற்பங்கள். மனிதனின் மனம், உடல், இதயம் ஆகியவை ஒருங்கிணைந்து அதிலேயே லயித்து இருந்தால்தான் இத்தகைய கலைப்படைப்பினை உருவாக்கிட இயலும். எல்லோராவின் எழில்மிகு கலை வண்ணத்தைப் புகழாதவர்களே இல்லை எனலாம். இந்தியா விலே உள்ள குகைகளிலே நீண்டவைகளாகக் கருதப்படுபவை எல்லோராக் குகைகள் என்பது மட்டும் அதன் சிறப்பல்ல. உலக அதிசயங்கள் ஒன்று என்ற சிறப்பும் அதற்கு உண்டு.

எல்லோராவில் மொத்தம் 34 குகைகள் காணப்படுகின்றன. அவற்றில் 12 புத்தக் குகைகள், 17 இந்துக் குகைகள், ஐந்து சமணக் குகைகள், இந்துக் குகைகளில் கைலாசநாதர் குகைக் கோவிலே குறிப்பிடத்தகுந்தது ஆகும். இக் கோவில் பட்டக் கல்லில் உள்ள லோகேசுவரர் ஆலயத்தை ஒத்துள்ளது. எல்லோராக் குகைக் கோவில் முழுமையும் மன்னர் ஒருவர் காலத்தே எழுப்பப்பட்டவை அல்ல. எட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இக் கலைப் பணியை முதலாம் கிருட்டினர் தொடங்கி வைத்தார்.

கைலாசநாதா குகைக கோவிலைப் போன்ற ஒரே பாறையைக் குடைந்து பெரும் அளவில் செய்விக்கப்பட்ட வேறு கோவில்களே இல்லை எனலாம். தசாவதார வடிவங்கள், கைலாயத்தை அசைக்கும் இராவணனின் வடிவம், நடனமாடும் சிவனின் வடிவம், திருமால், திருமகள் இசை கேட்கும் நயம் ஆகியவை எல்லாம் நேரில் பார்த்து இன்புறத்தக்கவை. இரண்யனை நரசிம்ம வடிவமும் அவ் வடிவம் அமைக்கப்பட்டுள்ள முறையும் காண்பவரை சிலைகளாக வைத்திடும். இந்த நரசிம்ம வடிவத்தின் அமைப்பினை வியந்து பாராட்டுகிறார் கலை விமர்சகர் குமாரசுவாமி.

ஐந்து சமண ஆலயங்களில் இந்திரசபை, ஜெகன்னாதசபை, சோட்டா கைலாசம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை ஆகும். இவ்

வாலயங்களின் தூண்கள் கலையழகு மிக்கவை. இந்திரசபை மாடியைக் கொண்டது. இதனுடைய மேல்மாடி அமைப்பைப் போன்று முழுமை பெற்றதாக எல்லோராவில் உள்ள எந்த ஆலயத்தினையும் கருதிட இயலாது என்று கூறத்தக்க அளவிற்குச் சிறப்புப் பெற்றது. ஜைகன்ஞ்த சபையில் மகாவீரரின் அமர்ந்த வடிவம் உள்ளது.

எலிபென்டா குகையில் உள்ள முக்கிய ஆலயம் எல்லோராவை விடச் சிறப்பு மிக்கது என்று கருதப்படுகிறது. எல்லோராவிலுள்ள பைரவர் வடிவங்களைவிட எலிபென்டாவிலுள்ள நடராசர், சதாசிவர் வடிவங்கள் கலைநுணுக்கம் மிக்கவை என்று கருதப்படுகின்றன. இறைவனின் முத்தொழிலைக் குறிக்கும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய குண இயல்புகளைக் கொண்ட திரிமூர்த்தி அல்லது மகேசுவரமூர்த்தியின் வடிவம் அழகு மிக்கது. இதனைக் கலை விமர்சகர்கள் பெரிதும் பாராட்டுகின்றனர்.

ஓவியக் கலைக்கும், இராட்டிர கூடர்கள் ஆதரவு அளித்தனர் என்பதனை எல்லோரா, எலிபென்டாவில் காணப்படும் பழைய ஓவியங்களின் சிலபகுதிகள் மெய்ப்பிக்கின்றன. தென்னிந்தியக் கலை வளர்ச்சியில் மட்டுமின்றி, இந்தியக் கலை வளர்ச்சியிலும் உயர் இடமொன்றை இராட்டிரகூடர்கள் வகித்தனர் என்பது உண்மையே.

2. சாளுக்கியர்கள்

தோற்றம் : தென் இந்தியாவின் வரலாற்றில் சாளுக்கியர்கள் மிகச் சிறப்பானதோர் இடத்தினை வகிக்கின்றனர். சாளுக்கியர்கள் யார்? எங்கிருந்து வந்தவர்கள்? எவ்வாறு தோன்றியவர்கள்? என்பது குறித்து அறிஞர்களால் எவ்வித முடிவிற்கும் வர இயலவில்லை. சாளுக்கியர்கள் கூர்ஜர இனத்தைச் சார்ந்த சர்பர்கள் என்னும் பிரிவினர் என்று டாக்டர் வின்சென்ட் ஸ்மித்தின் கருத்துகளை டாக்டர் டி. சி. சர்க்கார் போன்றவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. டாக்டர் சர்க்கார் சாளுக்கியர்களை கன்னட வம்சத்தைச் சார்ந்தவர்கள் என்றும், உத்திரபாலாவைச் சேர்ந்த 'சூலிக்கா' என்ற பெயருக்கும் 'சாளுக்கியா' என்ற பெயருக்கும் பொருத்தம் உள்ளதாகக் கூறினாலும் அதனை உறுதிப்படுத்துவதற்கு எவ்விதமான சான்றுகளையும் அவரால் காட்டிட இயலவில்லை; வாதாபியைச் சேர்ந்த சாளுக்கியர்கள் ஹரீதிபுத்திரர்கள் என்று கூறிக்கொண்டனர். மேலும் சாளுக்

கியர்களின் தோற்றம் குறித்து எண்ணிறந்த புராணச் செய்திகள் காணப்படுகின்றன. கல்யாணியைச் சேர்ந்த சாளுக்கியர்கள் தங்களுடைய தோற்றத்தினை சந்திரனிலிருந்து வழிவந்தோர் எனக் கூறியுள்ளனர். இவ்வாறுக எத்தனையோ கருத்துகள் கூறப்பட்டாலும் உண்மையினைக் கண்டறிய போதிய சான்றுகள் இல்லை. அச் சான்றுகள் கிடைக்கப்பெறும் காலம் வரையில் சாளுக்கியர்களைப் பற்றி எதுவும் நம்மால் கூற இயலாது. தென்னிந்தியாவில் 6ஆம் நூற்றாண்டிலிருந்து 8ஆம் நூற்றாண்டு வரையிலும் 10 ஆம் நூற்றாண்டிலிருந்து 12 ஆம் நூற்றாண்டு வரையிலும் சாளுக்கியர்கள் முதன்மை பெற்றவர்களாக விளங்கினர்கள். சாளுக்கியர்களைப்பற்றி நாம் தெரிந்து கொள்வதற்கு முன் அவர்களில் இருந்த மூன்று பெரும் பிரிவுகளைப் பற்றி அறிதல் அவசியமாகும். அவர்களை பாதாமியைச் சார்ந்த சாளுக்கியர்கள் என்றும், பிந்திய கல்யாணியைச் சார்ந்த மேலைச் சாளுக்கியர்கள் என்றும், வெங்கியைச் சார்ந்த கீழைச் சாளுக்கியர்கள் என்றும் அழைக்கிறோம். வாதாபியைச் சார்ந்த சாளுக்கியர்கள் 6ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்திலிருந்து 8ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலம் வரை ஆண்டனர். இவர்களுடைய ஆட்சி இராட்டிரகூடர்களால் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது. கீழைச் சாளுக்கியர்களும், பிந்திய மேலைச் சாளுக்கியர்களும் 10ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் இராட்டிரகூடர்களைத் துரத்திவிட்டு ஆட்சிக்கு வந்தனர். இவர்கள் 12ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி நடத்தினர். அதற்குப் பின்னர் சுல்தான்களின் ஆட்சிக்காலம் தொடங்கவே சாளுக்கியர்கள் செல்வாக்கு இழக்கத் தொடங்கினர்

1. வாதாபியைச் சேர்ந்த மேலைச்சாளுக்கியர்கள்

ஜெயசிம்மன் : சாளுக்கிய மரபினைத் தோற்றுவித்தவர் ஜெயசிம்மன் என்பவராவர். ஜெயசிம்மனிற்குப் பின்பு அவருடைய மகன் இரணராகர் ஆட்சிக்கு வந்தார். ஆனால் வாதாபியைச் சார்ந்த மேலைச் சாளுக்கியர்கள் சிறப்புப் பெறத் தொடங்கியது, முதலாம் புலிகேசி காலத்தில்தான். முதலாம் புலிகேசி கி.பி. 535இல் இருந்து 566 வரை ஆண்டார். இவரே சாளுக்கிய வம்சத்தின் முதல் பேரரசர் ஆவார். இவரையே சாளுக்கிய வம்சத்தைத் தோற்றுவித்தவர் என்று கூறலாம். இவர் ஸ்ரீபிரிதிவிவல்லபா ஸ்ரீவல்லபா, இரணவிக்ரமா போன்ற பட்டங்களைக் கொண்டிருந்தார். முதலாம் புலிகேசி இரணயகர்பவேள்வி, அசுவமேத வேள்வி, வாஜபேய வேள்வி, வகுசுவர்ண வேள்வி, அக்கிச் சாயண வேள்வி போன்ற வேள்விகளை நிகழ்த்தித் தன்னுடைய

வல்லமையை உலகிற்கு எடுத்துக்காட்டினர். புலிகேசியை இந்திய புராண இலக்கியங்களின் நாயகர்களான யாயாதி, குளிபன் போன்றவர்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. தர்ம சாத்திரங்களிலும், புராணங்களிலும் இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களிலும் தேர்ச்சி பெற்றவராகத் திகழ்கிறார். வாதாபி நகரத்தின் கோட்டையை உருவாவதற்கு அடிக்கல் நாட்டியவர் இவரே. புலிகேசியைப்பற்றி சிறப்பித்துக் கூறப் பட்டாலும் இவர் ஏதும் வெற்றிகள் பெற்றாரா என்பதற்குச் சான்றுகள் இல்லை. ஆயினும் தற்கால பீஜப்பூர் மாவட்டத்தை வாதாபியை தலைநகராகக் கொண்டு ஆண்டார் என்பது மட்டும் தெரிய வருகிறது.

முதலாம் கீர்த்தி வர்மன் : முதலாம் புலிகேசிக்குப் பிறகு இவரின் மைந்தர் முதலாம் கீர்த்திவர்மன் 567இல் ஆட்சிக்கு வந்ததாகக் கூறப்படுகிறது. இவரும் தன் தந்தையைப் போலப் பட்டங்கள் பலவற்றைக் கொண்டார். இவரே வாதாபி நகர் அழகுற அமையப் பெறக் காரணமானவர் என்று அறிகிறோம். வாதாபி நகரினை வனப்புமிக்க கட்டிடங்களாலும், ஆலயங்களாலும் அழகு படுத்தினர். இவர் உடன்பிறப்பான மங்களேசன் என்பார் திருமாலுக்குக் குகைக்கோவில் ஒன்றைக் கட்டுவித்தார். கீர்த்திவர்மனும் வேள்விகள் பல நிகழ்த்தினர் என அறிகிறோம். சாசனங்கள் மூலமாக கீர்த்தி வர்மன் வங்கம், அங்கம், கலிங்கம், மகரம், கேரளம், கங்கா முஷாக்கோ போன்ற பகுதிகளைக் கைப்பற்றியதாகச் சொல்லப் படுகிறது. நாளர்கள், மௌரியர்கள், கடம்பர்கள் ஆகியோரையும் வெற்றி கொண்டமையால் 'அழிப்பதில் வல்லவன்' என இவர் அழைக்கப்பட்டதாக அறிகிறோம். டாக்டர் சர்க்காரின் கூற்றுப்படி கீர்த்திவர்மன் சாளுக்கியரின் ஆட்சியைச் தமிழகம், மைசூர், மகாராட்டிரம் ஆகிய தென்பகுதிகளில் விரிவுபடுத்தியதாகச் சொல்லப்படுகிறது. மௌரியப் பகுதிகளும் கைப்பற்றப் பட்டது எனவும் தெரிய வருகிறது.

மங்களேசன் : கீர்த்திவர்மனைத் தொடர்ந்து அவருடைய இளைய சகோதரரான மங்களேசன் 497 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்ததாக வரலாற்றிலிருந்து அறிகிறோம். புதிய அரசரான மங்களேசன் பரம பாகவதன் அல்லது விஷ்ணுவின் பக்தன் என்று அழைக்கப்பட்டார். கால சூரிகளை வென்றவர் இவரேயாவர். கால சூரி அரசனை புத்தா என்பார் கி.பி. 602இல் தோற்கடிக்கப்பட்டார். கால சூரிகளுக்கும், சாளுக்கியர்களுக்கும் போர் நீண்ட நாட்கள் நடைபெற்றது. மங்களேசன் மத்திய, வடக்கு மராத்திய பகுதிகளை வென்றார்.

மங்களேசனுக்கும் 2ஆம் புலிகேசிக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடைபெற்றதாக அறிகிறோம். இப் போருக்கான காரணம் வெவ்வேறு வகைகளில் உரைக்கப்படுகிறது. மங்களேசன் பாதுகாவலனாக இருந்து ஆட்சி நடத்தியதாகவும் 2ஆம் புலிகேசிக்கு வயது வந்தபோதும் ஆட்சியை ஒப்படைக்காமையால் இப் போர் நடைபெற்றதாகவும் மங்களேசன் 2ஆம் புலிகேசிக்குப் பதிலாக தன் மகனை ஆட்சி பீடத்தில் அமர்த்த விரும்பியதாகவும் அதனாலேயே இப் போர் நடைபெற்றது எனவும் கூறப்படுகிறது. காரணம் எதுவாய் இருப்பினும் புலிகேசிக்கும், மங்களேசனுக்கும் இடையே நடைபெற்ற போர் புலிகேசி ஆட்சி நடத்துவதற்கு வழிகாட்டியது.

1. இரண்டாம் புலிகேசி (610 - 642)

சாளுக்கிய வம்சத்து அரசர்களில் இரண்டாம் புலிகேசி குறிப்பிடத்தக்கவராவார். இரண்டாம் புலிகேசி வல்லபன், பிருதிவி வல்லபன், பரமேஸ்வர பரம பாகவதன், ஸ்ரீ பிரிதிவிவல்லபன் எனப் பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறார். புலிகேசி அமைதியான முறையில் ஆட்சி நடத்துவதற்கான சூழ்நிலைகள் இல்லை. புலிகேசிக்கும் மங்களேசனுக்கும் இடையே ஏற்பட்ட உள்நாட்டுப் போரின் விளைவாகச் சாளுக்கியப் பேரரசின் அநேகப் பகுதிகள் பிரிந்து சுயேச்சையாக ஆளத் தலைப்பட்டன. இரண்டாம் புலிகேசியின் ஐகோலே (ஐகோல்) கல்வெட்டு மூலமாக இவர் பெற்ற வெற்றிகளைப் பற்றிய செய்திகளை அறிகிறோம். அப்பாயிகா, கோவிந்தன் என்னும் அரசர்கள் இவரை எதிர்த்தனர். இருவர் எதிரிகளாக இருப்பார்களேயானால் ஓர் எதிரியை நட்பாக்கிக் கொண்டு மற்றொரு எதிரியை வெல்லுவது சிறந்த போர்த் திறம் ஆகும். புலிகேசி கோவிந்தனை நண்பனாக ஆக்கிக் கொண்டு அப்பாயிகாவை வென்றார். ஐகோலே கல்வெட்டு மூலமாக கடம்பர்களின் தலைநகரமான வானவாசியையும் தெற்கு மைசூரைச் சார்ந்த கங்கர்களையும், ஆருபர்களையும் வென்றதாக அறிகிறோம். கங்க அரசன் துர்வினீதன், கொங்கணி விருதா புலிகேசியின் மகளை மணந்து கொண்டார். கொங்கணியைச் சார்ந்த மௌரியர்கள் இவருக்கு எதிராக படையெடுத்து வந்து தோல்வியைத் தழுவினர். லதர்கள், மாளவர்கள், கூர்ஜரர்கள் ஆகியோரும் தோற்கடிக்கப்பட்டனர்.

கி. பி. 636இல் கன்னோசியைச் சார்ந்த ஹர்ஷவர்த்தனர் கத்தியவார் பகுதியின்மீது படையெடுத்தார். அப்போது புலிகேசி வங்காளத்தைச் சார்ந்த சசாங்கர், கங்கோட அரசர்,

வல்லபி, புரோச் ஆகியவற்றின் அரசர்களோடு நட்புக் கொண்டு ஹர்ஷவர்த்தனரைத் தோற்கடித்தார். அறிஞர் பெரு மக்களிடையே ஹர்ஷவர்த்தனர் தோற்கடிக்கப்பட்ட ஆண்டு குறித்து விவாதம் எழுந்துள்ளது. ஹர்ஷரின் தோல்வி கி.பி. 630க்கு முன்னதாக இருக்க இயலாது. ஏனெனில் கி.பி. 630இல் வெளியிட்ட சாசனம் ஒன்றில் இவ் வெற்றியைக் குறித்து ஏதும் குறிப்புகள் இல்லை என்பதே இதற்குக் காரணம் ஆகும். ஐகோலே கல்வெட்டு மூலமாக சாளுக்கியப்படை கடற்கரை ஓரமாகச் சென்று பிஸ்தாபூர் என்னும் ஊரிலிருந்த கோட்டையைக் கைப்பற்றித் தன் தம்பி விஷ்ணுவர்த்தனனை ஆளச் செய்தார்.

இரண்டாம் புலிகேசி பல்லவ மன்னன் மகேந்திரவர்மனை வென்றதாகச் சொல்லப்படுகின்றது. புலிகேசியின் படை யெடுப்பைப் பற்றி ஐகோலே கல்வெட்டு 'அழுக்கற்ற வெண் சாமரங்களையும் நூற்றுக்கணக்கான கொடிகளையும், குடைகளை யும் பிடித்துக்கொண்டு புலிகேசியின் படைகள் சென்றன. அப்போது கிளம்பிய தூசியானது எதிர்த்து வந்த பல்லவ மன்னன் ஒளியை மங்கச் செய்தது. புலிகேசியின் பெரும் படையைக் கண்டு அஞ்சி, காஞ்சி மன்னன், காஞ்சிபுரம் கோட்டைக்குள் புகுந்து கொண்டான்' என்கிறது. 2ஆம் நந்தி வர்ம பல்லவன் வெளியிட்ட காசக்குடிப் பட்டயம் 'மகேந் திரன் தன் பகைவரை புள்ளலூரில் அழித்தான்' என்று குறிக் கிறது.

பல்லவர் வரலாறு பற்றிய தனிநூலினை எழுதிய தமிழ் புலவர் டாக்டர் இராசமாணிக்கனார் காசக்குடிப் பட்டயத்தில் கூறப்பட்டுள்ள பகைவர் என்ற சொல் சாளுக்கியரையே குறிப் பிடுகின்றது என்று கூறியுள்ளார். மேலும் அவர் 'புலிகேசியின் பட்டயத்தில் பல்லவ மன்னன் ஒளிந்து கொண்டான் என்று கூறப்பட்டுள்ளதே அன்றி அவன் தோற்றது அல்லது காஞ்சியை சாளுக்கியர் கைப்பற்றியது குறிப்பிடப்படவில்லை. மேலும் புலிகேசி ஆட்சியில் பல்லவ நாடு அவன் கைப்பற்றிய தாகவும் தெரியவில்லை' என்று கூறுகின்றார். சாளுக்கியன் கல்வெட்டு 'துள்ளி விழும் கயல் மீன்களை கண்களாகக் கொண்ட காவிரி, சாளுக்கியனது யானைகளின் மதநீர் விழுந்த தால் ஓட்டம் தடுப்பட்டு கடலில் கலக்க இயலாததாயிற்று. புலிகேசியும் பல்லவப் பணியைப் போக்கும் கடும் கதிரவனும், சேர சோழ பாண்டியரை களிப்புறச் செய்தான்' என்று கூறு கிறது. இதனால் மகேந்திரவர்மன் போர் புரிய முடியாமையால்

ஒளிந்துகொண்ட செய்தி அவனது பகைவருக்கு மகிழவைத்ததே தவிர, சாளுக்கியன் பல்லவனை தோற்கடித்தான் என்பது பொருளில்லை. பல்லவன் தனக்கு வசதியான இடத்தில் வந்து பகைவன் சேரும்வரை காஞ்சிக் கோட்டைக்குள் இருந்தான். பகைவன் காஞ்சிக்கு அருகில் வந்ததும், திடீரென அவனை வளைத்துக்கொண்டு பகைவரை அழித்தான் என்றும் டாக்டர் இராசமாணிக்கனார் கருதுகின்றார். இதுவே நடந்த செய்தி என்றும் அவர் கருதி. இரண்டாவது முறையாக புலிகேசி படையெடுத்து வந்ததைச் சுட்டிக் காட்டுகின்றார். மகேந்திரவர்மனை தோற்கடித்து வெற்றி கொண்டுவிட்டால் ஏன் நரசிம்மவர்ம பல்லவன் காலத்தில் 2ஆம் முறையாக காஞ்சியின்மீது படையெடுத்தான் என்றும் வினவுகிறார். ஆனால் இதற்கு நாம் தகுந்த ஒரு பதிலைக் கூறிட இயலும். பல்லவர்கள் தோற்கடிக்கப் பட்டார்களே தவிர, முழுவதும் அழிக்கப்படவில்லை. ஆகவே மீண்டும் படையெடுத்தான் என்று ஏன் கூற முடியாது? புலிகேசி படையெடுத்து வந்து சென்ற சில ஆண்டுகளுக்குள் மீண்டும் காஞ்சியின்மீது படை நடத்திச் சென்றான். காஞ்சிக்கு அருகில் உள்ள மணிமங்கலம் என்னும் இடத்தில் புலிகேசி பல்லவர்களால் தோற்கடிக்கப்பட்டதாகப் பட்டயங்கள் கூறுகின்றன. வேறு இடங்களிலும் போர் நடைபெற்றதாக குறிக்கப் பட்டுள்ளது. புலிகேசியின் சேனை நெடுந்தூரம் வந்ததால் களைப்புற்றிருந்த நிலையில் நரசிம்மவர்மனின் புதிய சேனை அவர்களை எதிர்த்து தோற்றோடச் செய்தது.

முதலாம் விக்கிரமாதித்தன் என்ற சாளுக்கிய அரசன் விடுத்த பட்டயங்களில் புலிகேசி மூவரால் தோற்கடிக்கப் பட்டான் என்று கூறப்பட்டுள்ளது. மூவருள் ஒருவன் நரசிம்ம வர்மன். மற்ற இருவரும் யார்? மானவன்மன் என்னும் இலங்கை அரசன் பல்லவ அரசனை இரண்யவர்மன் மரபினருள் ஒருவனைக் கொண்டு புலிகேசியைத் தோற்கடித்திருக்கக்கூடும். புலிகேசியின் முதுகாகிய தகட்டில் நரசிம்மவர்மன் வெற்றி என்பதைப் பொறித்தான் என்று கூரம் பட்டயங்கள் உரைக்கின்றன. இதனுடைய பொருள் பல்லவர் படைக்குமுன் நிற்க மாட்டாது, புலிகேசி புறமுதுகு காட்டி ஓடினான் என்பதே. புலிகேசிக்கும் நரசிம்மவர்மனுக்கும் இறுதிப் போர் சூரமாரத்தில் நடைபெற்றது. புலிகேசி தோற்று ஓடினான். பல்லவன் துரத்திச் சென்றான். சாளுக்கிய படை வாதாபிக் கோட்டைக்குள் நுழைந்து விட்டது. இரண்டாம் புலிகேசி போர்க்களத்தில் உயிர் துறந்தார் எனவும் புலிகேசி வாதாபிப் படையெடுப்பிற்குப் பின் என்ன ஆயினன் எனவும் கூறப்படுகிறது. போரில்

இறந்ததாகவே கருதவேண்டியுள்ளது. இதன் விளைவாக நரசிம்மவர்மன் தன்னை இதன் பின் 'வாதாபி கொண்டான்' என்று அழைத்துக் கொண்டான்.

எனினும் இரண்டாம் புலிகேசி பழங்கால இந்தியாவில் ஆண்ட மன்னர்களில் குறிப்பிடத் தகுந்த ஒருவன் ஆவான். இந்தியாவைத் தாண்டி கடல் கடந்த நாடுகளிலும் அவனது புகழும் செல்வாக்கும் பரவி இருந்தது. தபாரி என்ற முஸ்லீம் வரலாற்று ஆசிரியரின் கூற்றின்படி இரண்டாம் குசுரு என்ற பாரசீக நாட்டு அரசன் புலிகேசியிடம் இருந்து தூதுவர் ஒருவரை வரவேற்றதாகக் கூறியுள்ளார். அஜந்தாவில் உள்ள வண்ண ஓவியங்கள் ஒன்றின் வாயிலாக பாரசீக தேசத்தவரை புலிகேசி வரவேற்றதாக அறிகிறோம். யுவான்சுவாங் என்னும் சீன நாட்டு யாத்திரிகர் கி. பி. 641இல் தக்காணத்திற்கு வருகை புரிந்ததாக அறிகிறோம். அப்போது நாசிக் என்னும் இடத்தில் புலிகேசியின் அவை இருந்ததாகவும், யுவான்சுவாங் மிகவும் துயருற்று அதனை அடைந்ததாகவும், அவர் எழுதி வைத்துள்ள குறிப்புக்கள் மூலம் காணக் கிடைக்கிறது. யுவான்சுவாங் புலிகேசியின் காலத்தில் இருந்த மக்கள் நிலைமையினைப் பின் வருமாறு கூறியுள்ளார். 'மக்களின் பழக்க வழக்கங்கள் எளிமையாகவும், நேர்மையாகவும் இருந்தன. அவர்களுக்கு சேவை புரிந்தவர்களை மிகவும் நன்றி உணர்வுடன் நடத்தினர். ஆனால் சிறிதளவேனும் தீமை செய்தாலும், அவர்களை இகழ்ந்தாலும் பழிவாங்கிட தயங்க மாட்டார்கள். அவ்வாறு பழிவாங்குவதற்கு முன்னர் எதிரிகளுக்கு அதைப்பற்றிய செய்திகளை அறிவித்து விடுவார்கள். சரண் அடைகின்றவர்களைப் பழிவாங்குகின்ற நியமனம் இல்லை. போர்க்களத்தில் தோல்வியுற்ற தளபதியை கடுமையாகத் தண்டிப்பதற்குப் பதிலாக அவருக்கு பெண் உடையினை அணிவித்து அவமானப்படுத்துவர். போருக்குச் செல்லுகின்றபோது மது அருந்தியே செல்வர். அவர்கள் மட்டுமின்றி போர்க்களத்தில் பங்கு கொள்கின்ற யானைகளுக்கும் மதுவை ஊற்றி மதம் அடையச் செய்வார்கள். போருக்குச் செல்லுவதற்கு முன் முரசு முழுங்குகின்ற வழக்கம் இருந்தது.

யுவான்சுவாங் இரண்டாம் புலிகேசியை கூடித்திரிய வம்சத்து அரசர் என்று கருதுகின்றார். 836 மைல் சுற்றளவுள்ள பகுதிக்கு அரசர்களாக விளங்குகின்றனர் என்று சொல்லப்படுகின்றது. நலிநகரம் ஐந்து மைல் சுற்றளவிற்கு இருந்தது. மேற்குப் பகுதியில் ஆற்று நீர் அரணாக இருந்தது.

முதலாம் விக்கிரமாதித்தன்

இரண்டாம் புலிகேசியின் மறைவிற்குப் பின்னர் வாதாபியும், சில தென்னகத்து மாவட்டங்களும் பல்லவர்களின் கைகளில் இருந்தன. ஆனால் புலிகேசியினுடைய வாரிசுகள் பல்லவர்களைத் துரத்திவிட்டு தங்களுடைய ஆட்சியை நிலைப் படுத்த முயற்சிகள் பல செய்த போதிலும் அவர்களுக்கிடையே இருந்த வேற்றுமை உணர்வுகள் அம் முயற்சிகளுக்குத் தடையாக இருந்தன. கி. பி. 642லிருந்து 655 வரை சாளுக்கிய அரசுக்கு அரசர் யாரும் இல்லாத நிலைஇருந்தது. அவ் வரசை அடைந்திடப் பலர் போட்டியிட்டனர். இறுதியாக முதலாம் விக்கிரமாதித்தர் வாதாபியிலிருந்து பல்லவர்களை விரட்டிவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினர். கீழைச் சாளுக்கியர்களிடமிருந்து புலிகேசியின் மக்கள் எவ்வித உதவியும் பெறவில்லை எனத் தோன்றுகிறது. முதலாம் விக்கிரமாதித்தன் சத்தியஸ்ராயா,ரணரசிகா,சுனிவரிதா ராஜமல்லா, ஸ்ரீ பிரிதிவல்லபா, பட்டாரகா, பரம மஹேஸ்வர என்னும் சிறப்புப் பெயர்கள் பலவற்றைப் பெற்றிருந்தார். ஆலயங் களுக்கும், அந்தணர்களுக்கும் வழங்கப்பட்டுப் பிற்காலத்தில் அரசர்களால் கைப்பற்றியவற்றைத் திரும்பவும் அவர்கள் பெறுவதற்கு வழி செய்தார். பல்லவ மன்னனை முதலாம் பரமேஸ்வரவர்மன், முதலாம் விக்கிரமாதித்தருடைய படையினை பெருவளநல்லூர் என்னுமிடத்தில் தோற்கடித்ததாகக் கூறப் படுகிறது. பல்லவ மன்னரால் வாதாபி சிரழிக்கப்பட்டது என்றும் உரைக்கப்படுகிறது. விக்கிரமாதித்தர் கரஸ்ராயா ஜெயசிம்மவர்மன் என்னும் தன் இளவலைக் குஜராத் மாநிலத்திற்கு அரசப் பிரதிநிதியாக அனுப்பியதாக அறிகிறோம். ஜெயசிம்ம வர்மன் வஜ்ரா என்று சொல்லப்படும் மாஹி, நர்மதா ஆகிய பகுதிகளுக்குட்பட்ட இடத்தினை ஆண்ட அரசரை வெற்றி கொண்டார்.

முதலாம் விக்கிரமாதித்தரைத் தொடர்ந்து அவருடைய மகன் வினயாதித்தர் என்பவர் ஆட்சிக்கு வந்து கி. பி. 681—690 வரை ஆட்சி புரிந்தார். தன் தந்தையைப் போலவே ஸ்ரீ பிரிதிவி வல்லபா, சத்தியஸ்ராயா, ராஜராயா, யுத்தமல்லா ஆகிய சிறப்புப் பெயர்களையும் பெற்றார். இவரும் பல்லவர்கள், களப்பிரர்கள், கேரளர்கள், கைகேயர்கள், சோழர்கள், பாண்டி யர்கள், ஆளுபர்கள், காங்கர்கள் ஆகியோரை வெற்றி கொண்டார். மேலும் சில மன்னர்களிடமிருந்து திறை வசூலித்தார். உத்திரபாதர் அரசரைத் தோற்கடித்தார் என்பது மட்டும் அறிய முடிகிறதே தவிர யார் அந்த உத்திரபாத அரசன் என்பதை அறிய இயலவில்லை.

கி. பி. 696—733 வரை விஜயாதித்தரின் மகன் விஜயாதித்தர் என்பவர் பட்டத்திற்கு வந்து ஆட்சி புரிந்தார். இவர் தன் தந்தையாரிடமும், பாட்டனாரிடமும் இராணுவப் பயிற்சியும், ஆட்சித்துறைப் பயிற்சியும் பெற்றார். இவருடைய ஆட்சிக் காலம் அமைதியாக இருந்ததாகக் கருதப்பட்டது. ஆனால் உண்மையிலேயே இவருடைய ஆட்சிக் காலமும் சிக்கல் நிறைந்ததாகவே இருந்தது. பல்லவர்களோடு தொடர்ந்து பகை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். காஞ்சிபுரத்தை பரமேஸ்வரவர்மன் என்னும் மன்னனிடமிருந்து கைப்பற்றி அம் மன்னனிடமிருந்து திறைப் பணமும் இவரால் வசூலிக்கப்பட்டது. பட்டைக்கல் என்னும் பீஜப்பூர் மாவட்டத்திலுள்ள ஊர் ஒன்றில் சிவனுக்கு ஆலயம் ஒன்று அமைத்தார். இவருடைய சகோதரி லமேஷ்வா என்னுமிடத்தில் சமண ஆலயம் அமைத்தார் சமணர்களிடத்தில் சமயப் பொறையோடு நடந்து கொண்ட இவர் சமணர்களுக்கு கிராமங்களைத் தானமாக அளித்தார்.

விஜயாதித்தரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர் இரண்டாம் விக்கிரமாதித்தன் ஆவார். இவர் கி.பி. 733-745 வரை ஆண்டார். இவருடைய அரசிகளில் ஒருவர் பட்டகைக் கல்லில் சிவனுக்கு ஆலயம் அமைத்தார். பல்லவர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் இவர் காலத்திலும் தொடர்ந்து பகை இருந்துவந்தது. இரண்டாம் விக்கிரமாதித்தர் பல்லவ அரசனின் இசைக்கருவி, கொடி, யானைகள், விலையுயர்ந்த இரத்தினங்கள் ஆகியவற்றைக் கவர்ந்து சென்றதாகச் சொல்லப்படுகிறது. காஞ்சிபுரத்தின் மீது படை நடத்திச் சென்றாலும், நுழைந்தாலும் கூட அந் நகரத்தை அழித்திடவில்லை. விஜயாதித்தரைப் போலவே இரண்டாம் விக்கிரமாதித்தரும் சோழர்கள், கேரளர்கள், பாண்டியர்கள், களப்பிரர்கள் ஆகிய அரசர்களை வெற்றி கொண்டதாக அறிகிறோம். சாளுக்கியர்கள் பிரதேசங்களில் அரபியர்கள் நுழைந்தனர் எனவும், ஆனால் அவர்கள் சாளுக்கியப்படையினால் தோற்கடிக்கப்பட்டனர் எனவும் கூறப்படுகிறது. இரண்டாம் விக்கிரமாதித்தர் சிறந்த ஆக்கக் கலைஞர். அது மட்டும் இன்றி கலை வினைஞர்களை ஆதரித்த அரசகுமாரருமாவார். கி.பி. 740இல் இரண்டாம் கீர்த்திவர்மன் எனப்படும் இரண்டாம் விக்கிரமாதித்தரின் மைந்தர் பட்டத்திற்கு வந்தார். அவர் கி.பி. 757 வரையில் ஆட்சி புரிந்தார். இளமையிலேயே தன் தந்தை நடத்திய படையெடுப்புக்களிலெல்லாம் கலந்து கொண்டு போர்ப் பயிற்சி பெற்றார். சாளுக்கியப் பேரரசின் புகழ்பெற்ற அரசர்களில் இறுதி அரசர் இவரே. சாளுக்கிய அரசு மறைவதற்கு இராட்டிரகூடர்கள் காரணமாக இருந்தனர். தந்தி

துர்கன் என்னும் இராட்டிரகூட அரசன் இரண்டாம் கீர்த்தி வர்மனைத் தோற்கடித்து சாளுக்கிய அரசின் வன்மையைக் குறைத்தார். அவர் தென்பகுதியில் கர்னாடக சாளுக்கிய அரசையும் வீழ்த்தினர். தந்திதுர்கனின் மறைவிற்குப்பின் இரண்டாம் கீர்த்திவர்மன் இழந்த புகழை மீண்டும் நிலைநிறுத்த முயன்றார். ஆனால் முதலாம் கிருஷ்ணர் என்ற இராட்டிரகூட அரசரால் தோற்கடிக்கப்பட்டார். அதன் பின்னர் இராட்டிரகூடர்கள் 200 ஆண்டுகள் சிறப்புடையவர்களாகத் திகழ்ந்தனர். அதன் பின்னரே கல்யாணியைச் சார்ந்த மேலைச்சாளுக்கியர்கள் உயர்நிலை பெற்றனர். கல்யாணியைச் சார்ந்த மேலைச்சாளுக்கிய வம்சத்தை நிறுவியவர் தைலா அல்லது இரண்டாம் தைலபா ஆவார். தைலபா 24 ஆண்டுகள் கி.பி. 973 முதல் 997 வரை ஆட்சி புரிந்தார். முந்திய மேலைச்சாளுக்கியர்கள் எந்தெந்தப் பகுதிகளை இழந்தார்களோ அந்தப் பகுதிகளையெல்லாம் மீட்கின்ற பணியில் தங்களை ஈடுபடுத்தினர். அவர் மகாராஜாதிராஜா, பரமேஸ்வரர், சக்கரவர்த்தி ஆகிய சிறப்புப் பெயர்களைக் கொண்டு இருந்தார். தைலபர், சேதி, ஒரிஸ்ஸா, நேப்பாளம் குண்டலம் ஆகிய பகுதிகளை வெற்றிகொண்டார் தைலபருக்குப் பின் அவருடைய மகனான சத்தியஸ்ராயா என்பவர் பட்டத்திற்கு வந்தார். சத்தியஸ்ராயா, சோளினு என்றும் சோளிகா என்றும் அழைக்கப்பட்டார். சோழ அரசனை எதிர்த்து வெற்றி கொண்ட இவர் சோழப் பேரரசின் செல்வங்களைக் கொள்ளையிட்டார். சத்தியஸ்ராயாவைத் தொடர்ந்து தசவர்மன், ஐந்தாம் விக்கிரமாதித்தன், முதலாம் ஜெயசிம்மன், ஜெகதேக மல்லன் ஆகியோர் ஆட்சிக்கு வந்தனர். மாளவத்தை ஆண்ட போஜா என்ற அரசனை ஜகதேகமல்லன் தோல்வியுறச் செய்ததாக அறிகிறோம். மேலும் இராஜேந்திர சோழன் என்ற அரசனை ஜகதேகமல்லன் தோற்கடித்ததாகக் கூறப்பட்டாலும், அக் கூற்றினை சோழர்கள் பட்டயங்கள் மறுத்துரைக்கின்றன.

கல்யாணியைச் சேர்ந்த மேலைச்சாளுக்கியர்

முதலாம் சோமேஸ்வரன் கி.பி. 1042ஆம் ஆண்டில் ஜகதேக மல்லனுக்குப்பின் ஆட்சிக்கு வந்ததாக அறிகிறோம். அவர் கல்யாண புரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தார். சாளுக்கியர்களுக்கும் சோழர்களுக்கும் இடையே தொடர்ந்து இவர் காலத்திலும் போர் நடைபெற்றது. முதலாம் சோமேஸ்வரனுடைய பட்டயங்களில் இருந்து, இராஜேந்திர சோழனை சோமேஸ்வரன் கொன்று போரில் வெற்றி பெற்றுள்ளதாக உள்ளது. ஆனால் சோழர்கள் பட்டயங்களில் முதலாம்

சோமேஸ்வரனை இராஜேந்திர சோழன் குப்பம் என்னுமிடத்தில் 1053 இல் தோற்கடித்ததாகக் கூறப்பட்டுள்ளது. எது உண்மையோ? பில்ஹணர், சாளுக்கியர்கள் சோழநாடு வரையிலும் முன்னேறியதாகவும், சோழர்களின் தலைநகர் காஞ்சியில் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அவர் பரமாரா வம்சத்தின் மன்னரைத் தோற்கடித்து தாரா என்ற பரமாரர்களின் தலைநகரை பாழ் செய்தார் எனவும் குறிப்பிட்டுள்ளார். சோழர் காலச் சாசனம் ஒன்றில் கி.பி. 1061ஆம் ஆண்டில் முதலாம் சோமேஸ்வரவர்மன் இரண்டாம் இராஜேந்திரன் என்ற சோழ மன்னனிடம் தோல்வி அடைந்ததாகச் சொல்லப்படுகிறது. முதலாம் சோமேஸ்வரன் வீரராஜேந்திரன் என்னும் சோழ அரசருக்கு எதிராகப் போர்முழக்கியதாகவும், ஆனால் போர் செய்யவில்லை எனவும் கூறப்படுகிறது.

முதலாம் சோமேஸ்வரனுக்குப்பின் அவருடைய இரண்டாம் மகனான விக்கிரமாதித்தனே ஆட்சிக்கு வரவேண்டும் என்று விரும்பினர். ஆனால் விக்கிரமாதித்தன் அதனை விரும்பவில்லை. தன்னுடைய அண்ணனான 2ஆம் சோமேஸ்வரன் ஆட்சிக்கு வரவேண்டும் என விரும்பினர். விக்கிரமாதித்தன் படைத் தலைவராக நியமனம் செய்யப்பட்டார். படைத்தலைவரான விக்கிரமாதித்தன் சோழர்களுக்கு எதிராகவும், கேரளர்க்கு எதிராகவும் படை நடத்திச் சென்று இலங்கை, வங்காளம் ஆகிய பகுதிகளை வென்றார். அவர் கங்கை கொண்ட சோழபுரம் என்னும் பகுதியையும் கீழைச்சாளுக்கியர்களின் வெங்கியையும், பரமாரர்களின் சக்கரவர்த்தி கோட்டையையும் கைப்பற்றினர். விக்கிரமாதித்தன் திரும்பி வருகையில் தன் தந்தை நோயுற்று நீரில் வீழ்ந்து மூழ்கி இறந்துவிட்ட செய்தியை அறிந்தார்.

இந்தச் சூழ்நிலையில் இரண்டாம் சோமேஸ்வரன் 1068இல் மன்னரானார். சோமேஸ்வரன் தன்னுடைய ஒழுங்கீனமான, தவறான நடவடிக்கைகளின் விளைவாகத் தன் தம்பியின் நன்மதிப்பை இழந்தார். சோமேஸ்வரன் இந்த சூழ்நிலையின் விளைவாக தன் தம்பியான விக்கிரமாதித்தனை யுவராஜ் என ஏற்றுக்கொள்ள நேரிட்டது. பில்ஹணர் சோமேஸ்வரனுக்கு எதிராக விக்கிரமாதித்தன் புரட்சி செய்ததாக குறித்துள்ளார். வீரராஜேந்திரன் என்னும் சோழ மன்னனுக்கு எதிராக விக்கிரமாதித்தன் படை நடத்திச் சென்றபோது சோழன் சமாதான உடன்படிக்கைக்கு வந்தான். இவ் வுடன்படிக்கையின் விளைவாக விக்கிரமாதித்தன் வீர ராஜேந்திரனின் புதல்வியை மணக்க நேரிட்டது.

வீர ராஜேந்திரன் இறந்துவிட்டபோது சோழ அரசில் குழப்பம் நிலவியது. எனவே விக்கிரமாதித்தன் காஞ்சிபுரம் சென்றார். கலகத்தினை அடக்கித் தன் மைத்துனரான ஆதி ராஜேந்திரன் என்பவரை அரியணையில் அமரச் செய்தார். திரும்பி வந்த பிறகு கேள்வியுற்ற செய்தி விக்கிரமாதித்தனுக்குத் துயரை விளைவித்தது. அச் செய்தியாவது கீழைச் சாளுக்கியரால் ஆதி ராஜேந்திரன் கொல்லப்பட்டார் என்பதே ஆகும். விக்கிரமாதித்தனும் இரண்டாம் சோமேஸ்வரனும் இருபக்கங்களில் ஆளுக்கு ஒரு பக்கத்தவரை ஆதரித்தனர். விக்கிரமாதித்தன் போரில் தோற்றாலும் தன் சகோதரனை சிறைப்பிடித்தார். விக்கிரமாதித்தன் தன் சகோதரனையே முதலில் மன்னராக்க விரும்பினாலும் இறுதியில் தானே 6ஆம் விக்கிரமாதித்தன் என்று முடிசூட்டிக் கொண்டார்.

ஆரும் விக்கிரமாதித்தர் சாளுக்கிய வம்சத்தில் புதிய வரலாற்றினை தோற்றுவித்தவராவார். இவர் ஐம்பது ஆண்டு காலம் ஆட்சி செய்தார். தன்னுடைய தம்பியான ஜெயசிம்மன் என்பவரை பணவாசி என்னும் இடத்திற்கு வைசியராக நியமித்து இருந்தார். ஆனால் 1083இல் ஜெயசிம்மன் கிளர்ச்சி செய்தார். விக்கிரமாதித்தன் கீழைச்சாளுக்கிய அரசருக்கு எதிராகப் போர் செய்தார். அனந்தபாலர் என்னும் விக்கிரமாதித்தனின் தளபதி வெங்கியைக் கைப்பற்றினர். இரண்டு சிறந்த எழுத்தாளர்களான பில்ஹனர், விஜ்ஞனேஸ்வரர் ஆகிய இருவரும் இவருடைய அவையில் இருந்தனர். ஆரும் விக்கிரமாதித்தனுக்குப்பிறகு இவரது மைந்தன் மூன்றும் சோமேஸ்வரனுக்குப் பிறகு அவருடைய மகனான இரண்டாம் ஜெகதேகமல்லன் ஆட்சிக்கு வந்தார். இரண்டாம் ஜெகதேக மல்லனுக்குப் பின் 3ஆம் தைலபர் ஆட்சிக்கு வந்தார். மூன்றும் தைலபரே மேலைச்சாளுகிய வம்சத்தின் கடைசி அரசராகக் கருதப்படுகிறார் இவர் 1151 லிருந்து 1163வரை ஆட்சி செய்தார். காகத்திய அரசனான 2ஆம் புரோஸர் இவரை சிறைப் பிடித்தார். விடுதலை செய்யப்பட்டாலும் கூட உள்நாட்டு குழப்பங்களினாலே இவருடைய ஆட்சிக்கு எதிர்ப்பு தோன்றலாயிற்று. பிஜ்ஜலா என்ற இவருடைய படைத்தளபதி கிளர்ச்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றினர். ஆயினும் காந்தாயகா எனப்படும் தளபதியின் முயற்சியினால் சாளுக்கியர்கள் மீண்டும் அரசைக் கைப்பற்றினர் எனினும் நீண்டநாட்கள் அவர்களால் நிலைபெற இயலவில்லை, தேவகிரியைச் சார்ந்த யாதவர்களும், ஹொய்சாளர்களும், சாளுக்கியர்களுக்கு எதிராக முற்றுகையிட்டனர். இதன் விளை

வாக பிந்திய மேலைச்சாளுக்கிய அரசு கி.பி.1190 அளவில் முற்று பெற்றது.

3. வெங்கியைச்சார்ந்த கீழைச் சாளுக்கியர்கள்

வெங்கியைச் சார்ந்த கீழைச் சாளுக்கிய அரசைத் தோற்று வித்தவர் இரண்டாம் புலிகேசியின் சகோதரர் ஆன விஷ்ணு வர்த்தனர் என்பவராவார். 2ஆம் புலிகேசி ஆட்சி செய்துகொண் டிருந்தபோது கி.பி. 615இல் விஷ்ணுவர்த்தனன் வடக்கு மராத் தியம் தெற்கு மராட்டிய நாட்டின் வைசியராக இருந்துவந்தார். பின்னர் இவர் சுயேச்சையாக தன் உரிமையை நிலைநாட்டி ஆந்திரதேசத்தில் வெங்கியைத் தலைநகராகக் கொண்டு 18 ஆண் டுகள் ஆட்சி செய்தார். இவரது ஆட்சி 615-33 வரை நீடித்தது.

விஷ்ணுவர்த்தனனைத் தொடர்ந்து அவருடைய மகன் மகா ராஜா முதலாம் ஜெயசிம்மர் கி. பி. 633லிருந்து 663 வரை ஆட்சி செய்தார். இவருடைய ஆட்சிக் காலம் குறித்து வரலாற்று ஆசி ரியர்களிடையே கருத்து ஒற்றுமை நிலவுவதைக் காணுகிறோம். சிலர் இவர் 30 ஆண்டுகள் ஆட்சி செய்ததாகவும், சிலர் 33 ஆண் டுகள் ஆட்சி செய்ததாகவும் குறிப்பிடுகின்றார்கள். இவருடைய காலத்தில்தான் பல்லவர்கள் 2ஆம் புலிகேசியைத் தோற்கடித்த தோடு அல்லாமல் வாதாபியையும் கைப்பற்றினார்கள் என்று அறிகிறோம். ஆனால் இவர் புலிகேசிக்கோ (அல்லது) அவரு டைய படைவீரர்களுக்கோ எவ்வித உதவியும் செய்ததாகத் தெரியவில்லை.

ஜெயசிம்மனைத் தொடர்ந்து மகாராஜா, இந்திரவர்மன், கி. பி. 66ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தார் இந்திரவர்மன், இந்திரராஜா, இந்துராஜா, இந்திரபட்டாரகா என்றெல்லாம் அழைக்கப்பட்டார். இவ்வளவு சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தும்கூட இவர் ஆட்சி செய்த காலம் ஒரு வார காலமேயாகும். இவருக்குப் பின்னர் இரண்டாம் விஷ்ணுவர்த்தனர் ஆட்சிக்கு வந்தார். விஷ்ணு வர்த்தனைத் தொடர்ந்து அவருடைய மகன் மங்கியுவராஜா என் பவர் ஆட்சிக்கு வந்தார். மங்கியுவராஜாவிற்குப் பின் 2ஆம் ஜெய சிம்மர் ஆட்சிக்கு வந்தார். இவருடைய காலத்தில் தான் விஜயா தித்த வர்மன் ஜெயசிம்மனின் பிடியிலிருந்து விடுபட்டு மகாராஜா என்று அழைத்துக்கொண்டார்.

இரண்டாம் ஜெயசிம்மனைத் தொடர்ந்து கோகுளி விக்கிர மாதித்யா என்பவர் ஆட்சியைக் கைப்பற்றினர். இவர் ஆறு

மாத காலமே ஆட்சி செய்தார். மூன்ரும் விஷ்ணுவர்த்தனன் என்று அழைக்கப்பட்ட இவருடைய மூத்த சகோதரர் இவரைப் பதவியிலிருந்து துரத்திவிட்டு ஆட்சியைக் கைப்பற்றி 37 ஆண்டுகள் ஆட்சி நடத்தினர். இவர் மத்திய மாகளிங்கா எனப்படும் பகுதியைத் தன் ஆட்சியில் இணைத்தார். கீழைச் சாளுக்கியர்களின் தெற்குப் பகுதியாக நெல்லூர் மாவட்டத்தில் வடக்குப் பிரிவு இவர் வசமாயிற்று. மூன்ரும் விஷ்ணு வர்த்தனருக்குப்பின் அவருடைய மைந்தரான முதலாம் விஜயாதித்தியர் ஆட்சிக்கு வந்தார். இவர் 18 ஆண்டுகள் ஆட்சி செய்தார். இவருடைய காலத்திலேதான் இராட்டிரகூடர்களால் வாதாபியைச் சேர்ந்த மேலைச் சாளுக்கியர்கள் பதவியிலிருந்து விரட்டப்பட்டனர்.

அடுத்துக் குறிப்பிடத்தகுந்த அரசர் இரண்டாம் விஜயாதித்தியர் எல்லாப் பகுதிகளிலும் எதிரிகளால் சூழப்பட்டு இருந்தார். இவருடைய அரசுக்கு ஆபத்து, கங்கர்களிடமிருந்தும் இராட்டிரகூடர்களிடமிருந்தும் ஏற்பட்டது. இருப்பினும் இராட்டிரகூட மன்னனான மூன்ரும் கோவிந்தர், இவருடைய உதவியைப் பெற்று தன்னுடைய தலைநகரைக் காத்துக்கொண்டார் என்று கூறப்படுகிறது.

இரண்டாம் விஜயாதித்தியருக்குப்பின் மூன்ரும் விஜயாதித்தியர் ஆட்சிக்கு வந்தார். இவர் கி.பி. 844லிருந்து 888 வரை ஆட்சி செய்தார். இராட்டிரகூட அரசரான கிருஷ்ணர் என்பவர் இவரால் தோற்கடிக்கப்பட்டார். அத்துடன் அவரது தலைநகரான மால்கெட் சிதைக்கப்பட்டது. அதுமட்டும் இன்றி மைசூரை ஆண்ட கங்கர்கள் இவரால் தோற்கடிக்கப்பட்டார்கள். ஆனால் இராட்டிரகூட அரசரான அமோகவர்ஷர் திறை செலுத்தினர் என்றும் சிலர் திறையினை பெற்று கொண்டார் என்றும் கருதுகின்றனர். சோழ அரசர்களின் படைத்தளபதியாக மங்கி என்பவரால் மூன்ரும் விஜயாதித்தியர் கொல்லப்பட்டு இருக்கலாம் என்று கூறப்படுகிறது. பீமா என்பவர் இவருக்குப்பின் ஆட்சிக்கு வந்தார். அவர் கி.பி. 888லிருந்து 918 வரை ஆட்சி செய்தார். அவரைத் தொடர்ந்து அம்மா ஆரும் விஷ்ணுவர்த்தன் ஆட்சிக்கு வந்தபோது அவருடைய உறவினர்கள் இராட்டிரகூட அரசனான மூன்ரும் கிருஷ்ணரோடு சேர்ந்து தொல்லை அடைந்தனர். அதன்பின் பல சாளுக்கியர்கள் ஆட்சிக்கு வந்தனர். கடைசியாக குறிப்பிடத் தகுந்தவர் எட்டாம் விஷ்ணுவர்த்தனர். இவர் கி.பி. 1022லிருந்து 1063 வரை ஆட்சிபுரிந்தார். இவருக்குப்பின் குலோத்துங்க சோழதேவன் என்னும் அரசர் ஆட்சிக்கு வந்தார். பின் புதிய அரசரான இவர் சாளுக்கிய அரசர் ஆட்சி

புரிவதைவிட சோழ அரசை ஆட்சிப் புரிவதையே பெரிதும் விரும்பினர். இவர் உடலில் பெரும்பாலும் சோழ இரத்தமே ஓடியது என்று கருதப்படுகிறது. எனென்றால் இவர் காலத்திற்கு முன்னர் சாளுக்கியர்களுக்கும் சோழர்களுக்கும் இடையே திருமண உறவுகள் ஏற்பட்டு விட்டன. சோழ அரசராக விரும்பிய இவர் தன்னுடைய சிற்றப்பாவின் கையில் ஆட்சியை ஒப்படைத்துச் சென்றார். அதற்குப் பின்னர் சாளுக்கிய அரசுக்கு நேர்ந்த விளைவுகள் தெரியவில்லை.

4. சாளுக்கியர்களின் காலத்தில் தக்காணம்

சாளுக்கியர்கள் இந்து சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் இந்து சமயத்தையே சார்ந்தவர்களாக விளங்கியமையால் புத்த சமயம் நலிவடையத் தொடங்கியது. ஆயினும் கூடச் சாளுக்கியர்கள் சமயப்பொறை உணர்வு மிக்கவர்களாக எல்லா சமயங்களையும் சமமாக, ஒன்றுபோல் பாகுபாடு இன்றி நடத்தினர்கள். சாளுக்கியர்கள் எழுச்சி பெற்ற காலத்தில் தக்காணத்தில் ஜைன சமயம் சிறிது சிறப்புப் பெற்றது. ரவி கீர்த்தி என்னும் ஜைன சமயத்தை சேர்ந்த நூலாசிரியர் 2ஆம் புலிகேசியிடம் இருந்து சிறப்புக்கள் பெற்றதாக ஐகோலே கல்வெட்டுகள் உரைக்கின்றன, விஜயாதித்தியரும், விக்கிரமாதித்தியரும் நிலங்களை தானமாக கொடுத்தனர் என அறிகிறோம். ஆனால் சாளுக்கியர்கள் புத்த சமயத்திற்கு ஆதரவு அளித்தனரா? என்பது குறித்து ஏதும் அறிய இயலவில்லை. சாளுக்கியர்களின் காலத்தில் இந்துச் சமயம் சிறப்பு பெற்றது. வாதாபியிலும், பட்டாடக்கல்லிலும் பிரம்மா விஷ்ணு சிவன் ஆகிய தெய்வங்களுக்கு மிக உயரமான அமைப்புகள் எழுப்பப் பட்டன. வழிபாட்டிற்குரிய புதிய முறைகள் புகுத்தப்பட்டன. அளவற்ற வேள்விகளை செய்தார்கள், முதலாம் புலிகேசி மட்டும், அசுவமேதம், வாஜ்பேயம், பௌந்தாரிகம் போன்ற பல வேள்விகளைச் செய்தார் என அறிகிறோம்.

கலை: சாளுக்கியர்களுடைய ஆதரவினால் கலை மிகவும் உன்னத நிலையை அடைந்தது சாளுக்கியர்களின் கட்டடக்கலை என்று சொல்லத்தக்க அளவில் புதிய கட்டடக்கலை தோன்றலாயிற்று. இப் புதிய கலை வளர்ச்சி குப்தர் காலத்தில் இருந்ததைவிட மாறுபட்டதாக விளங்கியது. ஐகோலே என்னுமிடத்தில் மட்டும் 60 ஆலயங்கள் உள்ளன. இவைத் தவிர பாதாமி (அல்லது) வாதாபி, பட்டைக்கல் ஆகிய இடங்களிலும் ஆலயங்கள் பல உள்ளன. சாளுக்கியர்களின் கட்டிடக்

கலையினை 'இந்திய கோவில் கட்டிடக் கலையின் தொட்டில்' என அழைக்கிறார்கள் (The Cradle of Indian Temple, Architecture). ஐகோலேயில் உள்ள மூன்று ஆலயங்கள் புகழ் பெற்றவை. லட்கான் ஆலயம், துர்கை, குச்சிமல்லிகுடி ஆலயம் ஆகியவையே அவை. லட்கான் ஆலயத்தில் கல்லினால் செதுக்கப்பட்ட கூடங்கள் உள்ளன. இந்த கோவில் இரண்டு வகையில் சிறப்புப் பெற்றவை. முலலாவது திராவிடக் கட்டிடக் கலையை ஒத்தது ஆகும். இரண்டாவதாகக் கூரைகள் சாய்வாக கல்தகடுகளால் அமைக்கப்பட்டுள்ளன. அதைப் போலவே துர்கை ஆலயமும், குச்சிமல்லிகுடி ஆலயமும் குறிப்பிடத் தக்கவை. ஏழாம் நூற்றாண்டில்தான் குகைகளில் கூடங்கள் வெட்டப்படும் புதிய முறை புகுத்தப்பட்டது. பட்டாடக்கல்லில் ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த பத்து ஆலயங்கள் உள்ளன. அவற்றில் ஆறு திராவிட முறையில் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் விக்கிரமாதித்தருடைத் மனைவி லோக மகாதேவியால் கட்டப்பட்ட விருப்பாச்சரர் ஆலயம் குறிப்பிடத் தகுந்தது. பெர்ஷிபிராவுன் என்பார் விருப்பாக்ஷர் ஆலயத்தின் சிறப்பினை புகழ்ந்துள்ளார். இவ் வாலயத்தின் முக்கிய பகுதி 120 அடி நீளம் உள்ளது. ஆலயத்தின் புறப்பகுதியில் ஆள் உயரச் சிலைகள் வைக்கப் பட்டுள்ளன. சாளுக்கியர்களின் கட்டிடக்கலையில் சிறப்பு மிகுந்த அம்சமாக விளங்குவது அவர்களால் இந்து கடவுள் களுக்கு உருவாக்கப்பட்ட குகைக் கோவில்களே மங்களேசன் எனப்படும் சாளுக்கிய மன்னர் வாதாபியில் சிவனுக்குக் குகைக் கோவில் ஒன்றைக் கட்டுவித்தார். அஜந்தாவும் எல்லோராவும் இவருடைய ஆட்சிப் பிரதேசத்தில்தான் உள்ளன. அஜந்தாவில் உள்ள சித்திரம் ஒன்றில் 2ஆம் புலிகேசி, பாரசீக தூதுவர்களை வரவேற்பதுபோல் சித்தரிக்கப்பட்டுள்ளது. முந்திய மேலைச் சாளுக்கியர்களின் காலத்தில் அஜந்தா குகையில் சைத்திய கூடங்கள் பல உருவாக்கப்பட்டன. அதேக கூட்டிடங்கள் காரையினால் ஒன்று சேர்க்கப்பட்டு கற்களால் கட்டப்பட்டன. மேகுதி என்னும் இடத்தில் சிவனுக்கு எழுப்பப்பட்ட ஆலயம் கல்லின் உருவானக் கலைக்கு விளக்கமாக அமைந்துள்ளது. ஐகோலேயில் உள்ள விஷ்ணு ஆலயம் மிக நல்ல நிலையில் உள்ளது, விஜயாதித்தியர் சிவனுக்கு ஆலயம் ஒன்று எழுப்பினார். சிவனுடைய ஆலம் விஜயேஸ்வராய ஆலயம் என்றும் சங்கமேஸ்வரர் ஆலயம் என்றும் அழைகக்படுகிறது, அவருடைய சகோதரி லகஷ்மீஸ்வரத்தில் சமண ஆலயம் ஒன்றை கட்டி வைத்தார். 2ஆம் விக்கிரமாதித்தியரின் மனைவி கட்டி வைத்த விருப்பாக்ஷர் ஆலயத்தில் 50 சதுர அடி உள்ள தூண்களால் ஆன அழகிய மண்டபம் உள்ளது. அம்

மண்டபத்தின் மேற்கூரை ஒரே கல்லில் உருவான 16 தூண்களால் தாங்கப்பட்டுள்ளது. Havel ஹேவல் எனப்படும் கலை விமரிசகர் இக் கோவில் கோத்திய கலையையும், ஐரோப்பியக் கலையையும் இணைக்கிறது என்று உரைத்துள்ளனர். 2ஆம் விக்கிரமாதித்தியரின் மற்றொரு மனைவி திரிலோக்கியஸ்வரா எனப்படும் சிவாலயம் ஒன்றைக் கட்டினார். எனவே இதுகாறும் நாம் கண்டவற்றிலிருந்து சாளுக்கியர்கள் ஆலயங்கள் எழுப்புவதன் மூலமாக இந்திய கட்டிடக்கலை வளர்ச்சிக்கு அறியதொரு பணியை ஆற்றியுள்ளனர் என்ற முடிவிற்கு வரவுள்ளது. சாளுக்கியர்களின் கட்டிடக்கலை புதுமையான ஒன்றாக மாறுபட்ட ஒன்றாக காட்சி அளிக்கின்றது. இதனுடைய சிறப்பை கலை விமரிசகர் ஹேவல் என்பாரே பாராட்டி உள்ளபோது நாம் கூறுவதற்கு என்ன உள்ளது.

ஒரிஸ்ஸாவைச் சார்ந்த கீழைக் கங்கர்கள்

கீழைக் கங்கர்கள் எட்டாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் அதிகாரத்திற்கு வந்தனர். கலிங்க நகரைத் தலைநகரமாகக் கொண்டு கஞ்சம் பகுதியினை இவர்கள் ஆண்டு வந்தனர். இவ் வரசர்களின் முந்திய வரலாறு தெளிவின்றிக் காணப்படுகிறது. இந்து சமயத்தவர்களாக விளங்கிய இவ் வரசர்கள் மகேந்திர கிரிக்கோகர்ணேஸ்வரரை வழிபட்டு வந்தனர். கி. பி. பதினேராம் நூற்றாண்டிலிருந்து சுயேச்சை அரசர்களாக ஆளத் தலைப்பட்டனர். என்று கூறப்படுகிறது. முகலாம் இராசராச கங்கர் ஒரு சோழ இளவரசியாரை மணம் செய்துகொண்டார். இம் மரபின் தலைசிறந்த அரசர் அனந்தவர்ம சோடகங்கர் என்பவராவார். கல்வெட்டுகள் கங்கை நதிக் கரைக்கும் கோதாவிரிக் கரைக்கும் இடைப்பட்ட பகுதிகளில் தம் படையை இவர் வெற்றிகரமாகச் செலுத்தினர் என அறிவிக்கின்றன. கி. பி. 497லிருந்து கங்கசகாப்தம் தொடங்கிய போதிலும் மூன்று அல்லது நான்கு நூற்றாண்டுகள் குழப்ப நிலையிலேயே இவ் வரசு இருந்ததாகக் கூறப்படுகிறது.

முதலாம் இராசராச கங்கனின் மகன் அனந்தவர்ம கங்கன் இம் மரபின் மிகச் சிறப்பு மிக்க அரசராகக் கருதப்படுவது ஏன்? கி. பி. 1078லிருந்து 1150 வரை சுமார் எழுபது ஆண்டுகள் ஆட்சி செலுத்திய இம் மன்னன் கலிங்க தேசத்துக் கங்க அரசின் சிறப்பை உயர்த்தினான். நாடு பிடிக்கும் இம் மன்னனின் ஆசையைத் தடுத்து நிறுத்தியவன் முதலாம் குலோத்துங்கனே ஆவான். முதலாம் குலோத்துங்கன் மறைந்த பின்னர்,

அனந்தவர்மன் வேங்கி நாடுவரை தன்னரசை விரிவு படுத்தினான் பின்னர் வடபுலம் நோக்கிச் சென்று கேசரி மரபினரிடமிருந்து உட்கலைக் கைப்பற்றினான். இக் காலத்தில் பால மரபினரின் ஆதிக்கம் வீழ்ச்சியடைத் தொடங்கவே வங்கப் படையெடுப்பினை மேற்கொண்டு, அனந்தவர்மன் வங்கத்தை வென்று ஹூப்ளி வரை சென்று மீண்டான். இவன் காலத்தே கீழைக் கங்கர்களின் அரசு கோதாவரியிலிருந்து மிதுனபுரம் வரையிலும் கோசலத்திலிருந்து வங்காள விரிகுடா வரையிலும் பரவி நின்றது. அனந்தவர்மன் தன் தலைநகரைக் கலிங்க நகரிலிருந்து கட்டாக்கிற்கு மாற்றினான்.

இந்து அரச பதவிக் கொள்கையை மிகவும் கட்டுப்பாடுடன் கடைப்பிடித்து ஒழுகி வந்தான். துவக்க காலத்தில் சைவநெறித் திகழ்ந்த இவ் வேந்தன் பின்னாளில் வடநாட்டு வைணவத்தின் பால் பற்றுக்கொள்ளத் தலைப்பட்டான். பூரியில் உள்ள ஜெகன்னாதர் ஆலயத்தை உருவாக்கியவன் இவ் வேந்தனே எனப்படுகிறது. அது மட்டுமின்றிக் கலிங்க நாட்டில் வேறு பல ஆலயங்களையும் அமைத்தான். தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளைப் போற்றிக் காத்தான். வானநூல் அறிஞர் போற்றும் பாசவதி என்னும் நூலை இவன் காலத்தே சதானந்தர் என்பவர் இயற்றினார்.

அனந்தவர்மனின் பின் தோன்றல்கள் போதிய திறமையின்மையால் இலக்குமணசேனனிடம் தென்மேற்கு வங்கத்தை இழந்தனர். பூரி வரை வந்த அவ் வேந்தன் அங்கு தன் வெற்றிக் கம்பத்தை நட்டான். இக் காலத்திலே தான் இஸ்லாமியர்களின் படையெடுப்புக் குறித்த செய்திகளை அறிகிறோம். மூன்றாம் இராசராசன் என்ற அனந்தவர்மனின் பேரனின் காலத்தில் கி. பி. 1205இல் முதல் முஸ்லிம் படையெடுப்பு நடைபெற்றது. ஆனால் அப் படையெடுப்பு முறியடிக்கப்பட்டது. இம் மரபின் அரசனான அனங்கபீமன் காமருத்திய அரசனான கணபதி தேவனிடம் சில பகுதிகளை இழந்தான்.

லக்னௌதி வரை படையெடுத்துச் சென்ற முதலாம் நரசிம்மகங்கள் முஸ்லீம்களால் தோற்கடிக்கப்பட்டுக் கங்க அரசின் சில பகுதிகளை இழந்தான். கோனார்க்கில் கட்டப்பட்ட அழகுமிக்க சூரியனின் ஆலயத்தை அமைத்தவன் இவனே என்று கருதப்படுகிறது. இந்தியத் திருமண்ணில் காலடி எடுத்து வைக்கும் எவரும் காண விரும்பும் கலைக் களஞ்சியம் கோனார்க் என்றால் மிகையாகாது. இரண்டாம் நரசிம்மன் என்ற

மன்னன் முஸ்லிம்களின் படையெடுப்பை வெற்றிகரமாக முறியடித்தான். 1325இல் வாராங்கல்லைக்கைப்பற்றியஉலூக்கான் கங்க அரசின் மீது படையெடுத்தான். இரண்டாம் பானு தேவன் அப் படையெடுப்பை வெற்றிகரமாக முறியடித்தான். இவ்வாறு முஸ்லீம்களுடன் கங்கர்கள் போராடியபோது, மற்றொரு பேராபத்து விசயநகரப் பேரசினுல் வந்தது, மூன்ரும் பானு தேவனின் காலத்தில் டெல்லிப் பேரரசர் பிரோஸ் துக்ளக்கின் படையெடுப்பு நடைபெற்றது. மூன்ருண்டுகள் பிரோஸ் தங்கிவிட பானுதேவன் அடிபணிய வேண்டியதாயிற்று அதன் பின்னர் தன்னைச் சுயாட்சியாளனுக அறிவித்தான். நான்காம் நரசிம்மதேவனின் காலம் வரை ஓரிஸ்ஸா பாது காப்புடன் திகழ்ந்தது. அதன் பின்னர் கஜேந்திர கஜபதி பதவியைக் கைப்பற்றி புதிய மரபு ஒன்றினை உருவாக்கினர். சூரிய வம்சத்தவர் என்று அழைத்துக்கொண்ட கஜபதி மரபு கலிங்க தேசத்தை ஆளத் தலைப்பட்டது.

இன்றும் அனைவரையும் கவர்ந்திழுக்கக்கூடிய கலைப்படைப் புகளுள் ஒன்ருகக் கோனுர்க் கலைப் படைப்பு திகழ்கிறது. கல்லினுல் ஆன கோனுர்க் சூரியனின் கோவில் தேர் வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சூரியன் அத் தேரைச் செலுத்துவது போல் அமைக்கப்பட்டுள்ள இத் தேர்ச் சக்கரம் கலை அழகு மிக்கதாகத் திகழ்கிறது. இக் கோவிலின் சுற்றுப்புறத்தில் அழகிய சிலைகள் பல வடிக்கப்பட்டுள்ளன. அவை ஆண் பெண் உறவை நளினமாக வெளிப்படுத்தும் தன்மையில் அமைக்கப் பட்டுள்ளன. கோவிலில் ஏன் அத்தகைய சிலைகள் இருத்தல் வேண்டும் என்ற கேள்விக்கு அக் காலச் சமுதாயம் பிற சமயங் களின்பால் பற்றுகொண்டு இந்து சமயத்தைப் புறக்கணிக்கத் தலைப்பட்டது எனவும், அச் சமுதாயத்தவரைக் கவர்ந்து இழுத்தற் பொருட்டே இவ்வாறு அமைக்கப்பட்டது எனவும் கூறுகின்றனர். கலைக்கண் கொண்டு காண்போர்க்கு அவை கவின்மிகு கலைப்படைப்புகளே.

தலக்காடு பகுதியின் மேலைக் கங்கர்கள்

மைசூரின் பெரும் பகுதியை இரண்டாம் நூற்ருண்டிலிருந்து பதினென்ருவது நூற்ருண்டு வரையிலும் கங்கர் குலத்தவர் ஆண்டு வந்தனர். கங்கைச் சமவெளியைச் சேர்ந்த கங்கர் என்னும் இனத்தவரே இவர்கள் என்று அறிஞர்கள் சிலர் கருதுவர். இம் மரபினைத் தோற்றுவித்தவர் கொங்குனிவர்மன் எனப்படும் முதலாம் மாதவர் என்பவராவார். இவர் தம்

காலத்தே கோலார் தலைநகரமாக விளங்கிற்று. இவருக்கு அடுத்து இரண்டாம் மாதவர் என்பார் ஆட்சிக்கு வந்தார். இவர் 35 ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர். இவர் சிறந்த அரசர் என்ற சிறப்புப் பெற்றதுமின்றி அரசியல் நூல் தேர்ச்சி பெற்றவராகவும் உபநிடதக் கருத்துக்களை உணர்ந்தவராகவும் விளங்கினர். நூலுக்கு உரையெழுதும் அளவிற்கு ஆற்றல் பெற்றவராக விளங்கினர்.

அரிவர்மன் என்ற அரசன் தலைக்காட்டைத் தலைநகராக்கினர். பல்லவர்களுக்குத் திறை செலுத்தும் அரசனாக இவர் விளங்கியிருக்கக்கூடும். பெரும்பாலான கங்க அரசர்கள் சமண சமயத்தவர்களாகவே விளலீகினர். அரிவர்மனுக்குப் பின் அரியணையேறிய அவர் மைந்தர் விஷ்ணுகோபால் வைணவராகத் திகழ்ந்தார். கங்க அரசரான மூன்றும் மாதவர் சைவநெறியின்பால் பற்றுக்கொண்டவராக. கடம்ப அரசியை மணம் செய்து கொண்டு தம்முடைய நிலைமையினை வலுப்படுத்திக் கொண்டார். கி.பி. 500இல் அரியணையேறிய அவினீதருக்கு விஜயகீர்த்தி என்ற சமணப் புலவர் கல்வி கற்பித்தார். இவர் காலத்தே சமணர்கள், பிராமணர்கள் ஆகிய இருவருமே ஏராளமான பொருட் கொடை பெற்றனர்.

சாளுக்கியர்களின் வரலாற்றினையும் பல்லவர்களின் வரலாற்றினையும் பற்றி அறியும் நாம் துர்விநீத கங்கன் என்ற கங்க அரசனைப்பற்றிக் கேள்விப்படாமல் இருக்க முடியாது. இரண்டாம் புலிகேசிக்குத் தன் மகளை மணம் செய்து கொடுத்தார். நரசிம்மவர்ம பல்லவனின் காலத்தில் தம் மகள் வயிற்றுப் பேரனுக்கு ஆதரவாகப் பல்லவர்களைப் பகைத்துக் கொண்டார். வைணவராக விளங்கிய இவர் சமணர்களையும் போற்றினர். கன்னட மொழியிலும் வடமொழியிலும் நன்கு தேர்ச்சி பெற்ற வல்லுநராகத் திகழ்ந்தார்.

முஷ்கரர், ஸ்ரீவிக்கிரமர், பூவிக்கிரமர், முதலாம் சிவமாரர் ஆகியோருக்குப் பின்னர் ஆட்சிக்குவந்த ஸ்ரீ புருஷர் என்பவரின் காலமும் கங்க வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பல்லவரைப் புறங் காணச் செய்தார். செல்வச் செழிப்புடன் இவர் காலத்தே நாடு விளங்கியமையால் திருவுடைநாடு என்னும் பொருளில் ஸ்ரீ ராஜ்யம் என அழைத்தனர், இரண்டாம் சிவமாரர் எனப்பட்ட இவரின் மைந்தர் காலத்தே துருவன், மூன்றாம் கோவிந்தன் போன்ற இராட்டிரகூடர்களின் தாக்குதலுக்குக் கங்க அரசு ஆளாகி, அதன் விளைவாய்த் தன் தனியுரிமையினை இழந்தது.

மீண்டும் புத்துயிர் அளித்துச் சாய்ந்து கொண்டிருந்த அரசை நிலைநிறுத்த முதலாம் இராசமல்லர், முதலாம் நீதிமார்க்கர் போன்றோர் முயன்றனர். இரண்டாம் இராசமல்லர், முதலாம் புட்டுகர் போன்றவர்கள் இராட்டிரகூடர்களுடன் மணஉறவினை மேற்கொண்டனர். முதலாம் புட்டுகர் முதலாம் அமோகவர்ஷரின் மகளை மணம் செய்து கொண்டார். இவருடைய மகள் இரண்டாம் நீதிமார்க்கர் சுமார் 28 ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர். இரண்டாம் நீதிமார்க்கர் மறைந்த பின்னர், மூன்றும் இராசமல்லர், இரண்டாம் புட்டுகர் ஆகிய இரு மைந்தர்களில் மூன்றாம் இராச மல்லர் அரியணை ஏறினர். இவர் தம்பி இரண்டாம் புட்டுகர் இராட்டிரகூட அரசரான மூன்றாம் கிருஷ்ணனின் சகோதரி இரேவகாவைத் திருமணம் செய்து கொண்டார். இத் திருமணத்திற்குப் பின்னர் இரண்டாம் புட்டுகரை அரியணை ஏற்றவேண்டி, மூன்றாம் கிருஷ்ணன் மூன்றாம் இராசமல்லரைப் பதவியிலிருந்து இறக்கினர். இரண்டாம் புட்டுகர் தம் மைத்துனருடன் சோழப் போரில் கலந்துகொண்டார். தக்கோலப் போரில் இவர் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. சோழ அரசன் இராசாதித்தன் போர்க் களத்தே உயிர்துறந்தான். இரண்டாம் புட்டகர் சமண சமயத் தத்துவங்களில் தேர்ச்சி பெற்றிருந்தார்.

இராட்டிரகூடர்கள் பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் செல்வாக்கு இழக்கவே கங்கர்களும் செல்வாக்கு இழக்கத் தலைப் பட்டனர். நான்காம் இராசமல்லர் என்ற கங்க அரசனின் காலம் குறிப்பிடத்தகுந்தது ஆகும். இவருடைய அமைச்சராகப் பணி யாற்றிய சாமுண்டராயர் என்பவரால் சிரவணபெல்கோலாவில் 56½ அடி உயரமுள்ள கோமதீஸ்வரரின் உருவச்சிலையும், சமண ஆலயமும் உருவாயிற்று. இச் சிலை எகிப்து நாட்டிலுள்ள இராம் சேசின் சிலையைவிட உயரமானது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. கி. பி. 1004இல் தலக்காடு சோழர்களால் கைப்பற்றப் பட்டது. ஆனால் இத்துடன் கங்கர்களின் அரசியல் வாழ்வு முற்றுப் பெற்றுவிடவில்லை. துவாரசமுத்திரத்தைச் சேர்ந்த ஹொய்சாளர்களின் கீழ் கங்கர்கள் பணிபுரிந்தனர். கங்க இளவரசர் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் சோழர்கள் செல்வாக்கு இழக்கத் தலைப்பட்டவுடன் தலக்காட்டுப் பகுதியி லிருந்து சோழரை விரட்டினர். கங்கர்களின் கலைச்சிறப்பை விளக்குவது சிரவணபெல்கோலாவில் உள்ள சிற்பமே. இது போன்ற பிரமாண்டமான உருவங்களை அமைக்கும் முயற்சி இந்திய நாட்டில் எக் காலத்திலும் மேற்கொள்ளப்படவில்லை என்று டாக்டர் ஸ்மித் கருதுகிறார். கங்கர்களின் மற்றொரு கிளையினர் ஒரிஸ்ஸாவை ஆண்டு வந்தனர்.

வனவாசிக் கடம்பர்கள்

கி. பி, மூன்றும் நூற்றாண்டிலிருந்து ஆறும் நூற்றாண்டு வரை தற்போது வடக்கு, தெற்கு கானரா மாவட்டங்களாக உள்ள பகுதிகளிலும், மைசூரின் மேற்குப் பகுதியிலும் கடம்பர்கள் தன்னாட்சி பெற்றுச் சிறப்பாக அரசு செலுத்தி வந்தனர். இவர்களின் தலைநகரமாக விளங்கியது வனவாசி என்னும் பழமைச் சிறப்புடைய நகரமாகும். ஜயந்தி என்றும் வைஜயந்தி என்றும் மறுபெயர்கள் அதற்குண்டு. மூன்றாவது முறையாகப் பௌத்த அவை கூடிய பின் இந் நகரத்திற்குப் பௌத்த சமயத் தூதுவரை அசோகன் அனுப்பி வைத்ததாகச் சிங்கள நாட்டிலுள்ள புத்த சமய மரபுச் செய்திகள் வாயிலாக அறிகிறோம். பல்லவ ஆட்சியின் மைய அதிகாரம் குன்றியவுடன் கடம்பர்கள் குந்தலப் பகுதியில் தங்களுடைய செல்வாக்கை ஏற்படுத்தினர்.

கடம்பர்கள் பிராமண குலத்தவரே என்ற போதிலும் அவர்களை க்ஷத்திரியர்கள் என்றே அழைக்கின்றனர், இதற்குக் காரணம் அரசு செலுத்தும் தொழிலை இவர்கள் மேற்கொண்டதாலே தான் கடம்பர்கள் பிராமண குலத்தவர் என்ற செய்தியினையும், எவ்வாறு கடம்ப அதிகாரம் ஏற்பட்டது என்ற வரலாற்றினையும் தளகுண்டாக் கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம்.

இம் மரபினைத் தோற்றுவித்தவர் மயூரசன்மன் (கி.பி. 340-370) என்பவராவார். இவர் நான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்திருந்ததாக நம்பப்படுகிறது. பல்லவர்களுக்கெதிராகக் கிளர்ச்சி செய்த பிராமண மாணவன் என்று இவனைக் கருதுவர். பல்லவர்க்கெதிராக வெற்றி பெற்று தமக்கெனத் தனியரசினை உருவாக்கி வனவாசியைத் தலைநகராக்கினார். பல்லவர்கள் மயூரசன்மனை அடக்கிட இயலாது போகவே நட்புரிமை பூண்டனர். பிராமணர்கள் இவ் வேந்தரால் ஆதரிக்கப்பட்டனர்.

கங்கவர்மன், பகீரதன், இரகு ஆகியோர் இம் மரபின் மற்ற அரசர்கள் ஆவர். காகுஸ்தம்பர் என்ற அரசனின் காலத்தே தான் வாகாடகர்களுக்கும், கடம்பர்களுக்குமிடையே நல்லுறவு மலரத் தலைப்பட்டது. காகுஸ்தம்பர் தம்முடைய புதல்வியரைக் குப்த வாகாடக இளவல்கட்குத் திருமணம் செய்துவைத்தார். தளகுண்டாவிலுள்ள சிவாலயத்திற்குத் திருக்குளம் அமைக்கும் திருப்பணியை மேற்கொண்டார். சதகர்ணி போன்ற பல மன்னர்களும் இத் திருக்குளம் கவர்ந்தது.

இவருக்குப் பின்னர் கி.பி. 450லிருந்து 475 வரை சாந்திவர்மன் ஆட்சி செலுத்தினர். சாந்திவர்மனின் ஆட்சிக் காலத்தில் பேரரசின் எல்லை விரிவடைந்தது. மாநிலங்களாகப் பிரித்து ஆளும் அளவிற்கு விரிவடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இம் மரபின் மற்றோர் அரசர் மிருகேசவர்மன் பல்லவர்,கங்கர் ஆகியோரை வென்ற போதிலும் இறுதியில் பல்லவருக்கே அடிபணிந்து வர நேரிட்டது. அசுவமேத வேள்வியை நிகழ்த்தியவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. மந்தாத்திரிவர்மர் இரவிவரமர், அரிவர்மர். ஆகியோர் தங்களது அதிகாரத்தினை நிலைநிறுத்தப் பெரிதும் முயன்றனர். அரிவர்மரின் காலத்தில் தான் முதலாம் புலிகேசி சாளுக்கிய மரபினைத் தோற்றுவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அரிவர்மனுக்குப் பின்னர் இம் மரபினர் கிளைகளாகப் பிரிந்தனர். இரண்டாம் கிருஷ்ணவர்மன் என்பவர் கி.பி. 546இல் புதிய கிளையைத் தோற்றுவித்தார். இந் நிலையில் வடஇந்தியா, தென்னிந்தியா ஆகிய இருபிரிவுகளிலும் வலிமை மிக்கப் பேராசுகள் தோன்றவே இவ் வரசு குன்றத் தொடங்கியது. விசயநகரப் பேரரசைத் தோற்றுவித்த இராயர்களுக்கும் கடம்பர்களுக்குமிடையே தொடர்பு இருக்கக்கூடும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். விசயநகரப் பேரரசின் தோற்றத்துடன் கடம்பர்களின் வரலாறு முற்றுப் பெறுகிறது.

வாராங்கல்லின் காகத்தியர்கள்

சாளுக்கியர்களின் வீழ்ச்சியில் ஏற்றம் பெற்றவர்கள் காகத்தியர்கள் ஆவர். 'காகத்திபுரம்' என்ற பெயருடன் கொண்ட தொடர்பே இவர்களைக் காகத்தியர்கள் என அழைப்பதற்குப் பொருத்தமாயிற்று என்பர். காகத்திபுர வல்லபர்கள் என்றும் இவர்களைக் கூறுவர். வாராங்கல்லில் 'காகிதம்மா'விற்கு ஆலயம் ஒன்று உள்ளது. வாரங்கல்லிற்கு காகதிபுரம் என்று மற்றொரு பெயரும் இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

காகத்தியர்கள் கீதைச் சாளுக்கியர்களின் ஆட்சியின்போது கிராமத் தலைவர்களாக விளங்கினர். பின்னர் மேலைச் சாளுக்கியரின் கீழ்ப் பணிபுரிந்தனர். பேடராஜன், புரோலராஜன், இரண்டாம் புரோலராஜன் ஆட்சிக்கு வந்தார். இவர் சாளுக்கிய அரசரான மூன்றும் தலைவரை வெற்றி கொண்டார்.

புரோலருக்குப்பின் முதலாம் பிரதாபருத்திர தேவர் ஆட்சிக்கு வந்தார். இவர் கி.பி. 1158 முதல் 1185 வரை அரசோச்சினர். சாளுக்கியச் சிற்றரசர் பலரை வென்றார். அம்மகொண்டாப்

பட்டயத்திலிருந்து ஸ்ரீசைலம் முதல் திருப்பரங்குன்றம் வரையிலும் உள்ள பகுதிகள் இவருடைய ஆட்சியின்கீழ் இருந்தன. பிரதாப ருத்திரன் ஜெய்துகியால் கொல்லப்பட்டார். மகாதேவன் தன் அண்ணனின் மறைவிற்குக் கழுவாய் தேட முயன்றார். அவரும் போரில் இறந்துவிட கணபதிதேவன் யாதவர்களால் சிறைப் பிடிக்கப்பட்டுப் பின்னர் 1029இல் ஆட்சி செலுத்த அனுமதிக்கப் பட்ட செய்தியினைக் கண்டோம்.

கணபதிதேவன் காகத்திய மன்னர்களில் சிறந்தவர் ஆவார். காஞ்சிபுரம் வரையுள்ள சோழர்களின் பகுதிகளைக் கைப்பற்றினார் கணபதிக்குப் பின் அவருடைய மகள் உருத்திராம்பா 1201இல் அரியணை ஏறினாள். வடக்கில் யாதவ மகாதேவனையும், தெற்கில் சோழ பாண்டியனையும் வென்று வீர வனிதையாகத் திகழ்ந்தார். மார்க்கோபோலோ இக் காலத்தில் வருகை புரிந்தார் உருத்திராம்பாவையும், அவருடைய ஆட்சியின் சிறப்பையும் அவர் வெகுவாகப் புகழ்ந்து எழுதி வைத்துள்ளார். உருத்திராம் பாவிற்குப் பின் இரண்டாம் பிரதாபருத்திரன் ஆட்சிக்கு வந்தான். காகத்திய மரபின் கடைசி அரசன் இவனே ஆவான். 1309இல் அலாவுதீனின் படை இவரைத் தோற்கடித்தது. திறை செலுத்த ஒப்புக்கொண்டார்.

முஸ்லிம்களின் படையெடுப்பைத் தடுத்து நிறுத்திட இவர் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. கியாஸ்உத்தின் துக்ளக் கி.பி. 1323இல் வாராங்கல்லைக் கைப்பற்றத் தம் மைந்த ரான உலூக்கானை அனுப்பி வைத்தார். பிரதாபருத்திரன் உலூக் கானைத் தோற்கடித்து முஸ்லிம் படையினருக்குப் பெரும் சேதம் விளைவித்தார். இருப்பினும் முஸ்லிம்கள் தாங்கள் மேற்கொண்ட முயற்சிகளைக் கைவிடவில்லை. மீண்டும் படையெடுத்து வந்தனர். ஐந்துமாத கால முற்றுகைக்குப் பின்னர் வாராங்கல் வீழ்ந்தது. பிரதாபருத்திரர் சிறைப்பிடிக்கப்பட்டு டெல்லிக்கு அனுப்பப்பட்டார். ஆனால் டெல்லி செல்லும் வழியிலேயே தனக்கு நேரிட்ட அவமானத்தைப் பொறுத்திட இயலாத பிரதாபருத்திரர் தற்கொலை செய்துகொண்டு உயிர் துறந்தார். வாரங்கல்லுக்கு மாற்றுப் பெயர் இடப்பட்டது. பராணியின் கூற்றிலிருந்து வாராங்கல்லுக்குச் சுல்தான்பூர் என்று பெயரிடப்பட்டு முஸ்லிம் இராணுவ அதிகாரி வசம் ஒப்புவிக்கப்பட்டது என்ற செய்தியினை அறிகிறோம். காகத்திய அரசு முடிவிற்குக் கொண்டுவரப் பட்டது.

தேவகிரி யாதவர்கள்

யாதவர்கள் தங்களை ஆயர்பாடிக் கண்ணனின் மரபினர் என்று கூறிப்போந்தனர். யாதவர்களுடைய முன்னோர்கள் இராட்டிரகூடர்கள், சாளுக்கியர்கள் ஆகியோரின் கீழ்த் திறை யரசர்களாக அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினர். நாசிக்கிலி ருந்து தேவகிரிவரை சேவுண ன்றழைக்கப்பட்ட பகுதியை இவர்கள் ஆண்டுவந்ததால் சேவுனர்கள் எனவும் அழைக்கப்பட் டனர். சாந்தோர் அல்லது சந்திராதித்தபுரி தலைநகரமாக விளங் கியது. இம் மரபின் முதல் தலைசிறந்த அரசர் ஐந்தாம் பில்லாமர் ஆவார்.

ஐந்தாம் பில்லாமர் சாளுக்கிய மன்னரான நான்காம் சோமேஸ்வரரிடமிருந்து சாளுக்கியப் பேரரசின் வடக்கு மாவட் டங்களைக் கைப்பற்றினர். இவர் தம்முடைய தலைநகராகத் தேவ கிரியைக் கொண்டு ஆட்சி செலுத்தினர். இரண்டாம் பல்லால ருடன் அடிக்கடி போரிட்டார். 1190இல் வடாக் என்னுமிடத்தில் இரண்டாம் பல்லாலர் இவரைத் தோற்கடித்தார். 1191இல் சொரட் டூர், லக்குண்டி ஆகிய போர்களில் தோற்கடிக்கப்பட்டுப் பல்லா லரால் கொல்லப்பட்டார்.

ஜெய்ந்திரபாலன் அல்லது ஜெய்துகி 1191இல் ஆட்சிக்கு வந்து வாராங்கல்லின் காகத்தியர்களை வென்றார். உருத்திரன் என்னும் காகத்திய அரசன் கொல்லப்பட்டு கணபதி தேவன் என்னும் அவர் மகன் சிறைப்பட்டான். இவ் வெற்றி எவ்வித ஆட்சி பிரதேசங்களையும் அளிக்கவில்லை எனப்படுகிறது. பின் னர் விடுதலை செய்யப்பட்ட கணபதி வாராங்கல் அரியணையில் அமர்த்தப்பட்டான்.

ஜெய்துகியின் மகன் சிங்கணன் 1210 முதல் 1247 வரை ஆட்சி செய்த சிறந்த அரசன் என அழைக்கப்படுகிறான். சேதி, திரிபுரம் கோல்காபூர், மாளவம், கோவா ஆகியவற்றை வென்று காண் டேஷ்ஷிலிருந்து ஷிமோகாவரையிலும், மேலைக் கடற்கரையிலி ருந்து பீரார் தெலிங்கானம் வரையிலும் ஆட்சியை விரிவுபடுத் தினன். சிங்கணன் காலத்தில் சங்கீதரத்ன என்னும் இசைக்கலை பற்றிய அரியநூலை சாரங்க தேவரும், வானநூல், கணிதம் கற் பிக்கப் பள்ளிகளை சங்கதேவரும், உருவாக்கினர்.

கி. பி. 1247 முதல் 60 வரை இவருடைய பேரரான கிருஷ்ணர் ஆட்சிக்கு வந்து அரசைக் காத்தார். பல்வேறுபட்ட வேத

வேள்விகளை நிகழ்த்தினர். கிருஷ்ணருக்குப் பின்னர் மகாதேவன் என்ற அவருடைய உடன்பிறப்பு 1270 வரை பத்து ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர்.

மகாதேவருக்குப் பின்னர் 1270இல் ஆட்சிக்கு வந்தவர் இராமச்சந்திர தேவர். இவருடைய தளபதி சாளுவ திக்கர் என்பவர் ஆவார். அலாவுதீன் கில்ஜியுடன் இவர் நடத்திய போர்கள் தனியே விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன, 1307இல் கபூர் இவரைச் சிறைப்பிடித்துச் சென்று பின்னர் திறையரசாக ஆட்சி செலுத்த அனுமதித்தான். இராமச்சந்திரனின் மகன் 1309இல் ஆட்சிக்கு வந்தான். சங்கரன் 1312இல் மாலிக் கபூரினால் கொல்லப்பட, சங்கரனின் மருமகன் ஹரபாலன் 1318இல் யாதவ அரசை நிலைநிறுத்த முயன்று கொலை செய்யப்பட யாதவ அரசு வரலாற்றில் மறைந்தது.

யாதவ ஆட்சியின் சிறப்பு : தேவகிரியைச் சார்ந்த யாதவர்கள் சுமார் 125 ஆண்டுகள் அரசியல் வானில் நட்சத்திரமாக ஜொலித்தனர். யாதவர் இந்துக்கள் வைணவ சமயப்பற்றுக் கொண்டவர்களாகவே வாழ்ந்தனர். திருமாலின் ஊர்தியான கருடனைத் தங்கள் நாணயங்களில் பொறித்து வைத்தனர். வைணவர்களாக விளங்கிய போதிலும் சமயப் பொறையாளர்களாகத் திகழ்ந்தனர். கலை, கல்வி ஆகியவற்றைப் பேணிக் காத்துப் பெருமை பெற்றனர். கணிதம், வான்நூல், வடமொழி, மராத்தி ஆகியவை ஏற்றமும் சிறப்பும் பெற்றன. ஜெய்துகியின் ஆசிரியராக (வித்யாபதி) விளங்கியவர் பாஸ்கராச்சாரியார் என்ற கணிதநூல் வல்லுநரின் மைந்தர் லட்சுமிதாரா என்பது குறிப்பிடத்தக்கது. சித்தாந்த கௌமுதியைப் பரப்பிட வேண்டி, பாஸ்கராச்சாரியாரின் பேரன்கள் பாடலிபுத்திரத்தில் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தினர். சிங்கணர் என்ற அரசனின் அவையில் இருந்த சோதிட நூல் வல்லுநர் அனந்ததேவர் என்பவராவார். சுக்தி முக்தாவளி என்ற பாடலாசிரியர் ஜல்ஹனர் ஆவார். வேதாந்த கல்பதருவென்னும் நூலை யாத்தவர் அமலானந்தராவார். அமைச்சர்களும் புலவர்களாய் விளங்கினர். மகாதேவனின் அமைச்சர் ஹேமாத்திரி சதுர்வர்க்க சிந்தாமணி என்னும் நூலை இயற்றினர். விரதம், தீர்த்தம், தளம், மோட்சம் பற்றி விளக்கும் நூலாகும் இது. பண்டரிபுரத்து ஞானதேவா பக்தி இயக்கத்தவர் என்பதும், இம் மரபுடன் தொடர்புடையவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மராத்திய மொழியில் பகவத்கீதைக்கு உரை யெழுதினர். யாதவர்கள் ஏராளமான கோவில்களைக் கட்டி வைத்தனர். ஹேமாத்திரி பாணி எனப்படும் புதிய பாணியே உருவாயிற்று எனலாம்.

துவாரசமுத்திரம் ஹொய்சாளர்கள்

மைசூர்ப்பகுதியை ஆண்டுவந்த ஹொய்சாளர்கள் மேற்குத் தொடர்ச்சி மலையைச் சார்ந்த சிறுகுலத் தலைவனின் வழித்தோன்றல்கள் என்று டாக்டர் ஸ்மித் குறிப்பிட்டார். காப்பியங்களின் தலைவன் யாதுவின் வழித்தோன்றலான சாலா என்பானின் வழியினரே ஹொய்சாளர்கள் என்று பட்டயங்கள் பகர்கின்றன. கல்யாணியைச் சார்ந்த சாளுக்கியர்களுக்கும், சோழர்களுக்கு மிடையே நடைபெற்ற போராட்டத்தின்போது இம் மரபினர் எழுச்சி பெற்றனர். இருவரில் ஒருவருக்குச் சந்தர்ப்பத்திற் கேற்ற வகையில் விசுவாசமாக நடந்து எழுச்சி பெற்றனர். பேலூர் ஆட்சியின் கிழக்களனுயிற்று. மைசூர், சுற்றுப் பகுதிகள் ஆகியவற்றைச் சுமார் இருநூறு ஆண்டுகள் முஸ்லிம் களால் அழிவு பெறும் காலம்வரை ஆட்சி செலுத்தினர்.

ஹொய்சள மரபினை நிறுவியவர் பிட்டிதேவன் அல்லது பிட்டிகள் என்னும் அரசராவார். மைசூர் கடம்பர்கள், கல்யாணியைச்சேர்ந்த சாளுக்கியர்கள், மேலைக்கங்கர்கள், சோழ, பாண்டியர் ஆகியோரைத் தோற்கடித்து சேலம், தர்மபுரி, கோவை, பெல்லாரி, தார்வார் மாவட்டங்களைத் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தார். எனினும் மேலைச்சாளுக்கியரின் ஆதிக்கத் துக்குட்பட்டிருந்தார். கி.பி. 1141இல் பிட்டிதேவன் மறையவே இரண்டாம் பல்லாலன் (வல்லாளன்) மகாராஜாதிராஜ என்ற பட்டத்துடன் ஆட்சி நடத்தினன். சோழர்கள் ஹொய்சாளர் களுடன் மணஉறவு கொண்டு பாண்டியரை எதிர்த்தனர். மூன்றும் குலோத்துங்கனின் பொருட்டுச் சுந்தரபாண்டியனை எதிர்த்தனர்.

இரண்டாம் பல்லாலனின் மகன் இரண்டாம் நரசிம்மன் கி.பி. 1220 முதல் 1234 வரை ஆட்சி செலுத்தி இராமேசுவரம் வரை தன் செல்வாக்கினை நிலை நாட்டினன். விஷ்ணு வர்த்தனன் காலம் தொடர்ந்து துவார சமுத்திரமே தலைநகராக இருந்து வரலாயிற்று. இரண்டாம் நரசிம்மருக்குப் பின்னர் சோமேஸ்வரர் அரியணை ஏறி 1234 முதல் 1262 வரை ஆட்சி செலுத்தினர்.

சோழர்களுக்கு எதிராகப் பாண்டியர் மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக திருச்சிக்கு அருகில் கண்ணனூர் என்ற தலைநகரை ஏற்படுத்தினர். ஹொய்சாளர்கள் தெற்கில் தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் யாதவர்கள் துங்கபத்திரை வரை தங்கள் ஆதிக்கத்தை விரிவு படுத்தினர்.

சோமேசுவரரின் மறைவிற்குப் பின்னர் இவ் வரசு மூன்றும் நரசிம்மன், வீரராமநாதன் என்ற இரு மைந்தர்களால் பங்குபோடப் பட்டது. துவாரசமுத்திரம், கண்ணனூரும் இருதலைநகர்களாயின. மூன்றும் பல்லாலனின் காலத்தில் மீண்டும் அவை ஒன்றுக்கப் பட்டது.

மூன்றும் பல்லாலரே இம் மரபின் கடைசி அரசராவார். மாலிக்கபூரின் தாக்குதல் வரை அமைதியாக ஆட்சி செலுத்தினர். பல்லாலர் மதுரை முஸ்லீம்களிடம் கொலையுண்டார். தேவகிரியை முஸ்லீம்கள் இணைத்துக் கொள்ளவே, இராமதேவன் என்ற யாதவ அரசன் சிறிய அரசு ஒன்றை ஆனகுண்டியில் ஏற்படுத்தி கம்பிலி அரசு என அழைக்கச் செய்தான். மூன்றும் பல்லாலனின் மகன் நான்காம் பல்லாலனும் முஸ்லீம்களுடன் போரிட்டு இறந்துவிட விசயநகர அரசர்கள் அரிகரரும், புக்கரும் ஹொய்சாள அரசை வென்று தமது அரசுடன் இணைத்தனர்.

ஹொய்சாளர்களின் ஆட்சிச் சிறப்பு

ஹொய்சாளர்கள் தீபகற்ப இந்தியாவின் சமய வாழ்வில் முக்கியப்பங்கு வகித்தனர். அவர்களது ஆட்சியில் சட்டம், சிற்பம் ஆகிய துறைகளில் அருமையான முன்னேற்றம் ஏற்பட்டது. சோழ மன்னர்கள் சமண சமயம் சார்ந்த ஆலயங்களை அழித்தனர். ஹொய்சாள மரபின் முதல் அரசன் பிட்டிதன் தனது அமைச்சனான கங்கராஜனை அவ் வலாயங்களைச் சீர்ப் படுத்துமாறு பணித்தான். ஹொய்சாளர்கள் சமயக் கொள்கையில் நடுநிலைமை வகித்தனர். ஹொய்சாள அரசன் பிட்டிதன் இராமானுசரின் சீடனாயினன். ஈடிணையற்ற சிறப்பு வாய்ந்த ஆலயங்கள் பல கட்டுவித்தான். வைணவ சமயத்தை ஏற்ற பின்னரும் பிற சமயங்களை அரசன் பேணி வந்தான், அவனது மனைவியருள் ஒருத்தியும் சமண சமயத்தையே கடைப்பிடித்தனர்.

ஹொய்சாளர்கள் புதியதொரு கட்டிடக் கலையைத் தொடங்கினர். இவர்கள் கங்கரின் கலைப் பண்பை வழிமுறையாகப் பெற்றிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. பெருங்கோவில்களை இவர்கள் எழிப்பினர்கள். இவர்களால் கட்டப்பட்ட கோவில்கள் நட்சத்திர வடிவுடையாகவோ அல்லது பல கோணங்களைக் கொண்டவையாகவோ விளங்குகின்றன. அடித்தளத்தில் அருமையான பல சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. மேல்தளம் அதிக உயரமின்றி பிரமிட் போன்று அமைக்கப் பட்டுள்ளது. உச்சியில் பூங்கொட்டி போன்ற அலங்கார வேலைப்

பாடு காணப்படுகிறது. பல கட்டடங்களில் ஒன்று இரண்டு அல்லது நான்கு கோபுரங்கள் காணப்படுகின்றன. இதனால் ஒரே கட்டடத்தினுள் இரண்டு, மூன்று அல்லது நான்கு கோவில்கள் இருப்பது போன்ற தோற்ற மேற்படும். உயரக் குறைவான திராவிடக் கலை முறையென இதனைக் கருதுகின்றனர்.

ஹானேபிட் அல்லது துவாரசமுத்திரத்தில் கட்டப்பட்டிருக்கும் கோவில் புகழ்பெற்றது. ஹொய்சாளர் பாணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அது விளங்குகிறது. 'பேலூர் அழகை உள்ளே பார் ஹாளேபிட் அழகை வெளியே பார்' என்று சொல்லப்படுகிறது. ஹொய்சாளேசுவரர் கோவிலில் அமிர்தம் கடைந்த பாற்கடல் கதையை அழகான சிற்பத்தில் படைத்திருக்கிறார்கள். ஐந்தடி அல்லது ஆறடி உயரமுள்ள மேல் தட்டின் மேல் அமைந்திருக்கும் இக் கோவில் முழுவதும் கற்கள் பரப்பப் பட்டுள்ளது. கீழிருந்து உச்சி வரை யானைகள், புலிகள், சுருள் வடிவங்கள், குதிரைவீரர், பறவைகள், விலங்குகள் பொறிக்கப் பட்டுள்ளன. பட்டை ஒவ்வொன்றும் 700 அடி அல்லது மேற் பட்டிருந்தும் ஒவ்வொன்றும் முழுவதும் சிற்பங்களால் நிரப்பப் பட்டுள்ளன. குறைந்த பட்சம் ஒரு பட்டையில் கடிவாள மேந்திய பாகரோடு கூடிய இரண்டாயிரம் யானைச் சிற்பங்கள் மிக நுணுக்கமாகச் செதுக்கப்பட்டுள்ளன. மனித முயற்சியின் மிக உன்னதப் படைப்புக்களான இவைகளைப் போன்றவற்றைக் கீழ்த்தேயெங்கும் காணமுடியாது.

ஹொய்சாளர்களின் சிறப்பைப்பற்றி அறியும் நாம் இராமனுசரைப்பற்றிக் குறிப்பிடுவது அவசியம். பக்தி இயக்கத்தின் சுர்த்தாக்களின் ஒருவரான இராமனுசர் ஹொய்சாள மன்னனை வைணவ சமயத்திற்கு மாற்றினார். அவர் உலகிற்கு நல்கியுள்ள தத்துவம் விசிட்டாத்துவைத சித்தாந்தம். அவர் வாழ்ந்து இறை பணியினை மேற்கொண்டார். ஹொய்சாளர்களின் கலைப் பணிகளை அழிக்கும் பணியினை மேற்கொண்டவர்கள் முஸ்லீம் படையெடுப்பாளர்கள். அவர்கள் தாக்குதல்களையும் மீறி இன்று நாம் காணும் வண்ணம் உள்ள கலைப்படைப்புகள் சிலவேயாகும்.

6. இராசபுத்திரர்களின் காலம்

தோற்றம் — கூர்ஜரப் பிரதிஹாரர்கள்— பரமாரர்கள்—சாந்தலர்கள் — காஹட்வாலர்கள்—கால சூரிகள் — சாஹமானர்கள் — சோலங்கிகள்—வங்காளப் பாலர்கள் — வங்காளச் சேனர்கள் — காஷ்மீரத்து கார்க்கோடர்கள் இராசபுத்திரர்களின் ஆட்சியமைப்பு முறை—இராசபுத்திரர்களின் பண்பாடு

இராசபுத்திரர்கள்

தோற்றம்:

வட இந்தியாவின் அரசியல் மேடையில் ஹர்ஷருக்குப்பின் முஸ்லீம்கள் படையெடுத்து வருசின்ற காலம்வரை, சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தவர்கள் இராசபுத்திரர்களே ஆவர். வட இந்தியாவில் அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்துவதில் அவர்கள் வெற்றி பெருமல் போயினும் இந்து சமயத்தின் எண்ணங்களுக்குப் பாதுகாவலர்களாக விளங்கினர். படை எடுத்துவந்த அந்நியரை எதிர்த்துப் பாய்ந்து பிறந்த பொன்னுடையும், தர்மத்தையும் காத்திட உயிர் துறப்பதில் பெருமை கொண்டனர்.

ஏழாம் நூற்றுண்டின் இடைப்பகுதியிலிருந்து 12 ஆம் நூற்றுண்டின் இறுதிவரை உள்ள காலத்தினை இராசபுத்திரரின் காலம் என அழைக்கின்றனர். ஆனால் அவ்வாறு கூறுவது பொருத்தமில்லை. ஏனென்றால் இராசபுத்திரர்கள் இந்த நூற்றுண்டுக் காலத்தில் ஒன்றுக ஒரு தலைமையின் கீழ் ஒன்றுபட்டுச் செயலாற்றவில்லை. மேலும் இவர்கள் தனித்தனியாகப் பிரிந்து தங்களுக்கென்று ஆளுகைப் பிரதேசங்களைக் கொண்டிருந்தனர்

அராபியர்களின் வருகை அதன் பின்னர் துருக்கியர்களின் வருகை ஆகியவை இந்திய வரலாற்றில் மாறுதலைத் தோற்றுவித்தன. படை எடுத்து வந்த அந்நியருக்குத் தோற்றனர் வட இந்தியாவின் பெரும் பகுதிகளில், ஆதிக்கம் ஏற்பட்டிருந்த

போதிலும், இக் காலத்தை இராசபுத்திரர்களின் காலம் என்று கூறுவது பொருத்தமாயில்லை.

ஹர்ஷரின் மறைவிற்குப் பின்னர், இராசபுத்திரர்கள் புகழ் பெற்ற ஓர் உன்னத நிலைக்கு உயர்ந்தனர். இந்தியாவின் இடைக்கால வரலாற்றுச் சம்பவங்கள் இராசபுத்திரர்களின் செயல்களால் நிரப்பப்பட்டது. ஏழாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் இருந்து பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதிவரை, இராசபுத்திரர்களின் காலம் எனத் தகுதியுடன் கூறும் அள விற்கு, மேன்மையுற்று விளங்கினர் என்றும், அக் காலத்தில் அனேகமாக எல்லா நாடுகளுமே, இராசபுத்திர குடும்பங்களாலும், அவ் வினத்தவராலும் ஆளப்பட்டு வந்தன என்றும் **டாக்டர் ஸ்மித்** குறிப்பிடுகின்றார்.

சிவாஜி, கிருஷ்ண தேவராயர் போன்ற அரசர்களுக்கு முன்னுலே இந்துச் சமயத்தின் பண்பாடு, மரபுகள், வழக்கங்கள் ஆகியவற்றை இவர்கள் பாதுகாத்தனர். இராசபுத்திரர்கள் இஸ்லாமியர்களைத் தங்கள் எதிரிகளாகவே கருதினர். முஸ்லீம் களின் முன்னேற்றத்தையும், அதிகாரப் பெருக்கத்தையும் ஓரள விற்கு இராசபுத்திரர்கள் தடுத்து நிறுத்தினர்.

இராசபுத்திரர்களைப் பற்றியும், அவர்களுடைய தொன்மை யான வரலாற்றைப்பற்றியும், வாழ்க்கை முறைகளைப் பற்றியும் **கர்னல்** டாட் என்னும் மேலைநாட்டு ஆசிரியர் **'இராசபுத்திரர் களின் தொன்மையும் வரலாறும்'** என்ற நூலில் இராசபுத்திரர் களைப்பற்றிப் பெருமையுடன் எடுத்துரைக்கின்றார். பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளின் சோர்வூட்டும் ஆதிக்கத் திற்குப் பின்னரும் தம்முடைய நாகரிகத்தின் சாயலையும், தம் முடைய முன்னோரின் ஆர்வம் அல்லது சம்பிரதாயத்தைப் பற்றி யும் இராச புத்திரர்களை அன்றி உலகில் வேறு எந்த நாடு இன் றும் பாதுகாத்து வைத்திடமுடியும்? நாகரிகமற்ற தாக்குதலின் கேடுபயக்கக்கூடிய அளவு எது என்பதற்கும் அந்தக் கேட்டினை எந்த அளவிற்கு மனித இயல்பு தாங்க இயலும் என்பதற்கும், தரையோடு தரையாக வீழ்ச்சியுற்ற போதும், ஏற்பட்ட அழிவினை உள்ளம் உரம் பெறுவதற்கான சான்றாகக் கொண்டு எவ்வாறு எழுந்திட முடியும் என்பதற்கும், மனித வரலாற்றில் இராஜஸ் தானம் இணையற்ற சான்றாக விளங்குகிறது, என்று டாட் உரைக்கின்றார்.

இராசபுத்திரர்களின் பூர்வீகம் பற்றி அறிஞர் பெருமக்களி டையே ஒருமித்த கருத்து உருவாகவில்லை. இன்றுவரை பூர்

வீகம் பற்றிய பிரச்சினை முடிவிற்குக் காத்திருக்கின்ற பிரச்சினையாகவே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எங்குத் தோன்றியவர்கள் இந்த இராசபுத்திரர்கள் என்பதனைப் பலரும் பலவகையில் ஊகமாக எடுத்துரைக்கின்றனரே தவிர, முடிவான கருத்தை யாராலும் அறிவிக்க இயலவில்லை. மரபுவழிக் கருத்து, புறநாட்டுத் தோற்றக் கருத்து அக்கினி குலக்கருத்து, கலப்புத் தோற்றக் கருத்து எனப் பல்வேறு கருத்துகள் இராசபுத்திரர்களின் தோற்றம் குறித்துக் கூறப்படுகின்றன.

மரபு வழிக் கருத்து: வேதகாலத்தில் இருந்த நால்வகை வருணத்தவர்களின் க்ஷத்திரியர்களே ஆளும் வம்சத்தவர்களாய் இருந்தனர். அத்தகைய வேதகால க்ஷத்திரிய மரபு வழியில் இவர்கள் என்பதை எடுத்துரைப்பதே மரபு வழிக்கொள்கை. இராசபுத்திரர்கள் தங்கள் குலம் சூரியகுலம். சந்திரகுலம் என்றெல்லாம் கூறிக்கொண்டனர். இம் மரபுக் கருத்து உருவான தற்குக் காரணம் இம் மரபினர் தம் குடும்பங்களில் வைத்துள்ள புராணக் கருத்துகளே.

குகிலாத்துக்கள் எனப்படும் மீவார் இராணுக்களாகிய இராசபுத்திரர்கள் தங்களை இராமாயணக் காப்பியத் தலைவன் இராமனின் வழித் தோன்றல்கள் என்று கூறிக்கொண்டனர். இந்த மரபு வழிக் கொள்கையினைக் கல்வெட்டுக்கள் ஏதும் மெய்ப்பிக்கவில்லை. சிலர் இந்த இராசபுத்திரர்கள் இந்துச் சமயத்தின் மீது கொண்டுள்ள பற்றே அவர்கள் இந்திய நாட்டவர் தாம் என்பதை மெய்ப்பிக்கும் என்று சிலர் கூறியபோதும் டாக்டர் ஸ்மித் அக் கருத்தினை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் தம் கருத்துப்படி புதிதாகச் சமயத்தில் சேருகின்றவர்களே தீவிர சமய வாதிகளாய் இருப்பர். துருக்கியர்கள் அராபியர்களுக்கு அடுத்து இசுலாமிய சமயவாதிகளாக மாறிய போதிலும் தீவிர சமயப் பற்றுக் கொண்டிருந்தனர் என்பதை எடுத்துக்காட்டினார்.

இராசபுத்திரர் குலத்து மன்னர்களிடம் பரிசிலைப் பெறவேண்டிப் புலவர்கள் யாரும் இவர்களை க்ஷத்திரியர்களோடு இணைத்துப் பேசியிருக்கலாம். கூர்ஜரர்களிடமிருந்து தோன்றியவர்கள் பிரதிகாரர்கள், ஆனால் கூர்ஜாரர்கள் இன்றும் தாழ்த்தப்பட்டவர்களாகவே பஞ்சாப்பில் கருதப்படுகின்றனர். இராசபுத்தனத்தில் கூட 'இராசபுத்திரன்' என்ற சொல்லுக்கு 'க்ஷத்திரியர்களுக்குப் பிறந்த சட்டப்படி ஏற்றுக்கொள்ள இயலாதவர்கள் என்று பொருள் காணப்படுகிறது. எனவே இராசபுத்திரர்கள் இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள் என்ற கருத்து

பெரும்பாலோரால் ஏற்கப்படவில்லை. தங்கள் சொந்த ஆதாயம் கருதிப் புலவர்கள் மிகைப்பட உரைத்திருக்கக்கூடும்.

மேவாரைச் சேர்ந்த குகிலாத்துக்கள் என்னும் இராணுக்கள் தங்களை இராமாயணத்தின் கதைத் தலைவனான இராமனின் வழித் தோன்றல்கள் என உரிமை கொண்டாடினர். இராசபுத்திரர்களில் பிரதிகாரர்கள் என்ற பிரிவினர் இராமனுடைய இணைபிரியா இளவல் இலக்குவனின் வழித் தோன்றல்கள் என்று கூறுகின்றனர். ஆனால் கல்வெட்டுக்களோ, குகிலாத்துக்களும். பிரதிகாரர்களும் பிராமணர்கள் என்று உரைக்கின்றன. கல்வெட்டுச் சான்று தவிர வேறு சான்றுகள் கிடையாத நிலையில் இதனை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இராசபுத்திரர்களின் உருவ அமைப்பை ஆராய்ந்தால் அவர்களுக்கும், வேதகால க்ஷத்திரியர்களுக்கும் ஏதோ தொடர்பு இருப்பது போல் தோன்றுகிறது. ஆனால் இத்தகைய உடற்கூறு ஆராய்ச்சி இந்தியா போன்ற பல்வகை இன மக்கள் வாழ்ந்த நாட்டிற்குப் பொருந்தாது. அந்நியர் பலர் படையெடுத்து வந்து இந்தியர்களோடு ஒன்றிக்கலந்து விட்டனர். G.P. ஓஜா, C.V. வைத்தியா ஆகியோர் மரபுவழிக் கொள்கையினை ஆதரிப்பவர்கள். வேத கால ஆரியர்களின் தோன்றல்களே இராசபுத்திரர்கள் என்பது சி.வி. வைத்தியாவின் உறுதியான கருத்து. உடற்கூறு ஆராய்ச்சியை ஒத்துக்கொள்ளதவர்களில் குறிப்பிடத்தகுந்தவர் டாக்டர் வின்சென்ட் ஸ்மித் ஆவார்.

வெளிநாட்டவர் என்ற கொள்கை : இராசபுத்திரர்கள் இந்திய மண்ணைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள் அல்லர் என்ற கோட்பாட்டினை அறிவித்தவர் கர்னல் டாட் ஆவார். இவர் இராசபுத்திரர்களைச் சிதியர்கள் அல்லது சாகர்கள் என்றும் மரபுகளின் வழி வந்தவர்கள் என்று கூறியுள்ளார். வெளிமண்ணில் இருந்து வந்தவர்கள் இந்தியப் பெண்களை மணந்து மணஉறவின் விளைவாக நாளடைவில் இந்தியர்களாக மாறிவிட்டனர் என்பதே இவர் கருத்தாகும்.

இராசபுத்திரர்களுக்கும், பிறநாட்டவர்க்கும் இடையே சில சடங்குகளில் தொடர்பு காணப்படுகிறது. இவர்கள் நிகழ்த்திய அஸ்வமேத யாகம், பாடல்கள், சகுனங்களில் நம்பிக்கை, பெண் மக்களின் வாழ்க்கை முதலியவற்றை ஒப்பிட்டுப் பார்த்தால் இக் கூற்றுக்கு ஆதாரம் இருப்பதுபோல் தோன்றுகிறது. டாட் தன்னுடைய் இக் கருத்துக்கு ஆதரவாகக் கல்வெட்டு ஆராய்ச்சியையும் ஏற்றுக் கொண்டார். கல்வெட்டுக்களில் ஹூணர் என்ற

பிரிவினைக் கொண்ட இராசபுத்திரர்கள் இருப்பதைக் கண்டறிந்த அவர் இராசபுத்திரர்கள் அந்நிய மண்ணிலிருந்து தோன்றியவர்களே என்று கூறியதைப் பிற ஐரோப்பிய அறிஞர்களும் ஏற்றுக் கொண்டனர்.

அக்கினி குலக் கொள்கை : அக்கினி குலக் கொள்கை புராணக் கருத்துகளின் அடிப்படையில் எழுந்தது. திருமாலின் பத்து அவதாரங்களிலே பரசுராமன் அவதாரமும் ஒன்றாகும். பரசுராமன் தன்னுடைய அவதாரத்தில் எல்லா அரச குலத்தவர்களையும் அழித்தார். அவர்கள் நாட்டைக் காக்கின்ற பணியினை மேற்கொண்டிருந்தனர். அவ்வரசர்கள் அழிந்தபின் நாட்டைக் காக்கின்ற பணியினை மேற்கொள்ள ஆள் இல்லாமல் போயிற்று. எனவே அந்தணர்கள் நாட்டைக் காத்து நிருவகித்திட யாரும் இல்லையே என்று திருமாலிடம் முறையிட்டனர். அவர்களின் குறையினைக் கேட்ட இறைவன் இராசபுத்திரர்களைத் தோற்றுவித்தான் என்பது புராணக் கருத்து. அந்தணர்கள் 40 நாட்கள் வேள்வி நிகழ்த்தினர். இவ் வேள்வியின் பயனாக நான்கு வீரர்களும் பாமரர்கள் சௌஹான்கள், சோலங்கிகள், பிரதிகாரர்கள் என நான்கு இராசபுத்திரப் பிரிவுகளை உருவாக்கினர். விஞ்ஞான ஆராய்ச்சியின் சிறப்புப் பெருகி எதனையும் விஞ்ஞான ரீதியாக மனிதன் ஆராய்கின்ற இத்தகைய நாளில் இத்தகைய கொள்கைகள் செல்வாக்குப் பெறாது.

கலப்பு இனத்தவர் என்னும் கொள்கை : இராசபுத்திரர்கள் கலப்பு இனத்தவர் என்ற கொள்கையினை உறுதியாக நம்பியவர் டாக்டர் வின்சென்ட் ஸ்மித் ஆவார் இராசபுத்திரர்கள் என்பது ஒரு சமுதாயப் பிரிவைக் குறிக்குமே தவிர, இனத்தையோ, மரபையோ குறிக்காது அல்லது எவ்விதக் குருதிக் கலப்பையும் விளக்காது என்று கூறினார் அவர்.

இராசபுத்திரர்கள் இந்துக்களே ஆவர். இவர்கள் அரசு அலுவலில் ஈடுபட்டபோது இராசபுத்திரர்கள் என அழைக்கப் பட்டனர். அரசுப் பணி புரிந்தவர்களில் சிலர் வெளிநாட்டிலிருந்து வந்திருக்கக்கூடும். சிலர் இங்கேயே தங்கி பணி புரிந்திருக்கக்கூடும். இவ் விரண்டு வகையினரும் ஒன்றாகச் சேர்ந்த போது இராசபுத்திரர்கள் என அழைக்கப்பட்டனர்.

சௌஹான்கள் போன்ற இராசபுத்திரர்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து வந்தவர் என்றும், பண்டேல் கண்டுப் பகுதி சந்தேலர்கள், அயோத்திப் பகுதியார்கள், இந் நாட்டு இராசபுத்திரர்கள் என்றும்

சொல்லப்படுகிறது. இராசபுத்திரர்களில் ஒரு பிரிவினர் அக்கினி குலச் சத்திரியர் என்று அழைக்கப்படுகின்றனர். இதற்குக் காரணம் அவர்கள் தீயிலிருந்து தோன்றியவர்கள் என்று கருதப் படுவதே.

அதுபோல ஸ்மித்தின் கருத்துப்படி சாந்தேலர்கள் இந்துக் களாக மாறிய கோண்டு இனத்தவராவர். பஞ்சாப்பில் வாழ்ந்த சில இராசபுத்திரர்கள் ஆதிகாலத்தில் பிராமணர்களாகவும், பின்னர் க்ஷத்திரியர்கள் அல்லது இராசபுத்திரர்களாகவும் மாறி யிருக்கக்கூடும்.

செஹன்கள், பிரதிகாரர்கள், பாமரர்கள், சாளுக்கியர்கள் ஆகியோர் அயல்நாட்டிலிருந்து வந்தவர்கள் எனவும், சாந்தேலர்கள், கஹடவாளர்கள், இராட்டிரகூடர்கள், கால சூரிகள் ஆகியோர் உள்நாட்டினர் எனவும் கருதப்படுகிறது.

இராசபுத்திரர்களின் தோற்றம், பூர்வீகம் குறித்து இவ்வாறு பலவகைக் கருத்துகள் கூறப்பட்டபோதிலும் பெரும் பாலானோரால் வெளிநாட்டவர் என்ற கருத்தே ஏற்றுக்கொள்ளப் படுகிறது. அந்நியர்களை உயர் இனத்தவரின் பிரிவில் சேர்த்துக் கொள்ளும் முறை இந்திய வரலாற்றிற்குப் புதியதன்று. அபு மலையில் வேள்வித்தீ ஒன்று வார்க்கப்பட்டு, அதனுள் புகுந்து வந்தவர்கள், புனிதமடைந்தவர்களாகக் கருதப்பட்டனர். இவ் வாறு புனிதமடைந்தவர்கள் உயர்வகுப்பினர் ஆயினர். இரா புத்திரர்களும் இத்தகைய நிலையினை அடைந்திருக்கக்கூடும்.

2. கூர்ஜரப் பிரதிகாரர்கள்

இராசபுத்திர அரசர்களில் பழமையானவர்களாகக் கருதப் படுபவர்கள் கூர்ஜரப் பிரதிகாரர்களே ஆவார்கள். ஐந்தாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் மத்திய ஆசியாவிலிருந்து படையெடுத்து வந்த ஹூணர்களோடு இந்தியாவிற்கு வந்த வர்கள் இவர்கள் என்று கருதப்படுகிறது. தானேஸ்வரத்தைச் சேர்ந்த பிரபாகர வர்த்தனர் இவர்களின் வருகையைத் தடுத்து நிறுத்த முயன்றார். ஆனால் அம் முயற்சியில் அவரால் வெற்றி பெற இயலாமல் போயிற்று. மாளவம், புரோச் ஆகிய பகுதி களில் கூர்ஜரர்கள் தங்கினர். நாளடைவில் இந்துக்களாக மாறிய அவர்கள், இராமனின் தம்பி இலக்குவனின் வழித் தோன்றல்கள் என்று கூறத்தக்க அளவில் இந்துச் சமயத்தில் ஒன்றரக் கலந்தனர். எனினும், மற்றொரு மரபு ஒன்றின் படி

கூர்ஜாரர்கள் அரிச்சந்திரன் என்னும் பிராமணனின் வழித் தோன்றல்கள் என்றும் கருதப்படுகின்றனர் என்பது குறிப்பிடப் படுகிறது.

பிரதிகாரன் என்ற சொல்லுக்கு வாயிற்காப்போன் என்று பொருள் எனவும், இராட்டிரகூடரின் வாயிற்காப்போராக விளங்கியமையால் பிரதிகாரர் என்றே இம் மரபினர் அழைக்கப் பட்டனர் எனவும் கூறப்படுகிறது. ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகளில் பிரதிகாரர்கள் வலிமை மிக்கவர்களாக மாறிப் பின் மால் என்னும் பகுதியைத் தலைநகரமாகக் கொண்டு கன்னோசியை நோக்கி முன்னேறினர். அவ்வாறு முன்னேறிய அவர்கள் வங்கத்தைச் சேர்ந்த பாலர்கள், மால்கெட்டைச் சேர்ந்த இராட்டிரகூடர்கள் ஆகியோருடன் மோத நேர்ந்தது. வடஇந்தியாவின் பெரும்பகுதிகளைச் செல்வாக்கோடு பிரதி காரர்கள் ஆட்சி செய்தனர்.

எட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் நாகபட்டர் என்பவரால் இவ் வம்சம் உருவாக்கப்பட்டது என்று கூறப் படுகிறது. முதலாம் நாகப்பட்டர் கி. பி. 730 ஆண்டிற்கு பிறகு கி.பி. 756 ஆம் ஆண்டுவரை ஆட்சி செலுத்தியதாகச் சொல்லப் படுகிறது. இவர் ஆட்சி செலுத்திய காலத்தைச் சரிவர தெரிந்து கொள்ள முடியாவிடினும், அவர் மேற்கொண்ட போர்களைப் பற்றிய செய்திகள் மூலம் அனுமானிக்க முடிகிறது.

முதலாம் நாகபட்டர் இராட்டிரகூட அரசனான தந்தி துர்க்கனிடம் தோற்றதாகவும், தோற்ற இவனைத் தந்தி துருக்கன் பிரத்காரனாக நடத்தியதாகவும், அதனால் இவர் வம்சத்தைச் சார்ந்தவர்கள் கூர்ஜாரப் பிரதிகாரர்கள் என அழைக்கப்பட்டனர் எனவும் ஒரு கருத்து நிலவுகிறது. இக் கூற்றினை நிரூபித்திடச் சான்றுகள் இல்லை என்றும், தந்தி துர்க்கன் பிரதிகார அரசனைத் தோற்கடித்தான் என்பதனை மறுப் பதற்கு இல்லை.

இவருக்குப்பின் வந்த இரு அரசர்கள் பெயர் சொல்லத்தக்க அளவில் சாதனைகள் ஏதும் நிகழ்ந்திடவில்லை. கி.பி. 778ஆம் ஆண்டு வத்ச இராஜர் என்பவர் அரியணை ஏறினர். இவருடைய காலத்திலேதான் பிரதிகாரர்கள், இராட்டிரகூடர்கள் பாலர்கள் ஆகியோரிடையே மும்முனைப் போட்டி ஏற்பட்டது. கன்னோசி அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. தர்மபாலன் என்ற பாலர் வம்சத்து அரசன் வத்சராஜனால் தோற்கடிக்கப்பட்டான். ஆனால் இராட்டிரகூட அரசன் துருவன் வத்சராஜனையும், தர்மபாலரையும் தோற்கடித்தான்.

வத்சராஜனின் மகன் இரண்டாம் நாகபட்டர் கி.பி. 805இல் ஆட்சிக்கு வந்தான். கி.பி. 810 ஆம் ஆண்டில் யசோவர்மனின் வழியில் வந்த இந்திராயுதர் தர்மபாலரால் தோற்கடிக்கப் பட்டான். அவன் தன் ஆதரவில் இருந்த சக்கராயுதர் என்பவனை அரசனுக்கினான். ஆனால் சக்கராயுதர் இரண்டாம் நாகபட்டரால் அரியணையில் இருந்து இறக்கப்படவே கன்னௌசி பிரதிகாரர்கள் வசமாயிற்று. இரண்டாம் நாகபட்டர் இராட்டிரகூட அரசனை மூன்றாம் கோவிந்தனால் தோற்கடிக்கப்படவே நாகப்பட்டரின் மைந்தன் இராமபுத்திரன் அரசனானான். அவனுக்குப் பின் அவன் மைந்தன் மிகிரபுத்திரன் ஆட்சிக்கு வந்தான்.

மிகிரபுத்திரனின் ஆட்சிக்காலம் பிரதிகாரின் வரலாற்றில் சிறப்பு மிக்கப் புகழ்பெற்ற காலமாகும். இவருடைய பாட்டனார் காலத்திற்கு முன்னர் எவ்வாறு இராட்டிரகூடர்கள், பாலர்கள், பிரதிகாரர்களிடையே ஆதிக்கப்போட்டி நிலவியதோ அவ்வாறே மிகிரபுத்திரனின் காலத்திலும் அத்தகைய போட்டி ஏற்பட்டது. இப் போட்டியில் மிகிரபுத்திரனுக்குத்தோல்வி ஏற்பட்டது. சிறிது காலம் கழித்து மிகிரபுத்திரன் தன் செல்வாக்கினை நிலைநிறுத்திக் கொண்டான். சாந்தேலர்களும், காலசூரிகளும், இவனது ஆதிக் கத்தை ஏற்றுக்கொள்ள மாளவம் கத்தியவார், குஜராத், அயோத்தி ஆகியவை பேரரசின் பகுதிகளாக விளங்கின.

மிகிரபுத்திரனின் மைந்தன் மகேந்திரபாலன் தெற்கு பீகார், வடக்கு வங்காளம் ஆகியவற்றை வென்றான். சிறந்த புலவனாகவும், நாடகநூல் ஆசிரியனாகவும் திகழ்ந்தான்.

மகேந்திரபாலனின் மறைவிற்குப் பின்னர் இவ் வம்சம் வீழ்ச்சியடையத் தொடங்கியது. மகேந்திரபாலனின் மைந்தர்கள், இரண்டாம் போஜர், மகிபாலன் ஆகியோர் தம்மிடையே வாரி சுரிமைப் போரில் ஈடுபடப் பல அரசுகள் இவ் வாட்சியின் கீழ் இருந்தவை சுயேச்சையாகின. நாளடைவில் கன்னௌசியைச் சுற்றிய பகுதிகளே மட்டும் ஆளக்கூடிய அளவிற்கு இவர்களின் அரசு குறுகியது. கஜினி முகம்மதுவினால் மேலும் சிதைக்கப் பட்டது. இவ் வரசு பிரயாகைப் பகுதியில் சிறிது உயிருடன் கி.பி. 1027 வரை ஊசலசடியது.

3. பரமாரர்கள்

மாளவப் பரமாரர்கள் கூர்ஜரர்களின் வீழ்ச்சியில் ஏற்றம் பெற்றவர்களாவர். இம் மரபினைத் துவக்கியவர் கிருஷ்ணராஜர்

அல்லது உபேந்திரர் என்னும் அரசராவார். பரமாரர்கள் இராட்டிரகூடர்களின் ஒருபிரிவினர் என்றும் கூறுவர். மாளவத்தை இராட்டிரகூடர்களின் அரசப்பிரதிநிதியாக உபேந்திரர் ஆட்சி செலுத்தியதே அதற்கு காரணமாகும்.

பரமாரர்கள் சுயேச்சையாக ஆட்சி செலுத்திட வழிவகுத்தவர் சியாகா என்பவராவார். இவருடைய வெற்றிகளில் குறிப்பிடத் தகுந்த வெற்றி கோட்டிகா என்பவனுக்கு எதிராக நர்மதை நதிக்கரையில் போரிட்டு அவனுடைய மன்யகேதா என்ற தலை நகரைக் கைப்பற்றியதே. சியாகாவின் அரசின் தெற்கு எல்லையில் தப்தியும், வடக்கில் ஜலாவரும், கிழக்கில் பில்சாவும் மேற்கு எல்லையில் சபர்மதியும் இருந்தன.

சியாகாவிற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த முஞ்சா அல்லது வக்பதிராஜா என்பவரே இக் குடும்பத்தின் ஆற்றல் மிக்க அரசராவார். அருகில் இருந்த காலசூரிகள். குகிலாத்துக்கள் சாமானர்கள் ஆகியோருடன் போரிட்டு அபுமலையினைத் தன் அரசில் இணைத்தான். முஞ்சாவின் முக்கிய எதிரி இரண்டாம் தைலபனே ஆவான். இரண்டாம் தைலபன் ஆறுமுறை மாளவத்தின்மீது படை எடுப்பினை நிகழ்த்தினான். வஞ்சம் தீர்த்துக்கொள்ளக் கோதாவரியைத் தாண்டிப் படை எடுத்துச் சென்ற முஞ்சா, தைலபனால் சிறைப்பிடிக்கப்பட்டு கொல்லப் பட்டான். முஞ்சா சிறந்த போர் வீரனாகவும், நல்லாட்சியாளனாகவும் விளங்கினான். புலவர்களைப் போற்றி வளர்த்த புரவலன் தனஞ்சயம், ஹாலாயுதம், தானிகா. பத்மகுப்தா, ஆகியோர் இவன் அவையை அலங்கரித்தனர். தார் என்னுமிடத்தில் கோவில்கள் பலவற்றைக் கட்டுவித்துக் குளம் ஒன்றையும் வெட்டி வைத்தான்.

முஞ்சாவிற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த சிந்துராஜா நீண்ட காலம் அமைதியான முறையில் ஆட்சி செலுத்தினான். இவனுடைய அவையில் பத்மகுப்தர் என்ற புலவர் 'நவசாகசங்க சரிதா' என்னும் நூலை இயற்றினார்.

சிந்து ராஜாவின் மைந்தன் இந்திய வரலாற்றில் குறிப்பிடப் படும் சிறப்புமிக்க அரசர்களில் ஒருவனாக எண்ணப்படுகிறான். முதலாம் போஜர் ஒரு மாபெரும் வெற்றியாளன். கல்யாணியைச் சேர்ந்த சாளுக்கிய அரசன் இரண்டாம் ஜெயசிம்மனும், ஆதிநகர அரசனும், கொங்கண மன்னரும், இம் மன்னனிடம் தோற்றனர். ஆனால் 'பண்டேல் கண்டின் மீது' அதிகாரத்தை நிலைநிறுத்த

இயலவில்லை. குவாலியர் கோட்டையைக் கைப்பற்ற மேற் கொண்ட முயற்சியும் தோல்வியடைந்தது. சாகம்பரிக்காக பானர்கள் போஜரிடம் தோற்றனர். சாளுக்கியர்களும், கால சூரிகளும் இணைந்து மாளவத்தைப் படையெடுத்து வந்து போஜரைத் தோற்கடித்துக் கொன்றனர்.

கலைகளும், கல்வியும் போற்றி வளர்க்கப்பட்டது. தானே ஒரு அருஞ்சிறப்புப் பெற்ற அறிஞனாகப் போஜர் விளங்கினன். தனபாலர், உவதர் போன்ற அறிஞர்கள் இவ் வேந்தனால் ஆதரிக்கப்பட்டனர். போஜபுரம் எனப்பெற்ற புது நகரொன்றை எழுப்பியதுடன் சிவபிரானுக்கு ஆலயங்கள் பலவும் எழுப்பினன். பல்வேறுபட்ட தலைப்புகளில் இருபது நூல்களை யாத்த பெருமை இவ் வேந்தனுக்கு உண்டு. போஜன் உருவாக்கிய பல்கலைக் கழகம் போஜசாலை என்று அழைக்கப்பட்டது.

போஜருக்குப் பின்னர் வீழ்ச்சியடைந்த மரபின் புகழை உயர்த்தப் பலரும் முயன்றனர். ஆனால் அம் முயற்சிகள் வெற்றி பெறவில்லை குஜராத்தைச் சேர்ந்த சோளங்கிகளுக்கு அடங்கிப் போக வேண்டியவர்களாகப் பரமாரர்கள் மாறினர்.

தேவபாலர் என்ற அரசர்களின் காலத்தில் முஸ்லீம்களின் படையெடுப்பு நடைபெற்றது. குஜராத்தை முஸ்லீம்கள் கொள்ளையடித்தனர். இல்துத்மிஸ் பில்காவை 1223 இல் கைப்பற்றினன். 1250இல் பால்பன் மாளவத்தைக் கைப் பற்றினன். மஹ்லக் தேவ் என்ற பரமார அரசர் மாண்டுவில் அலாவுதீன் கில்ஜியினால் கொல்லப்பட்ட பின்னர் மாளவம் டெல்லிச் சுல்தானியத்தில் கி.பி. 1305 இல் இணைந்தது.

4. சாந்தேலர்கள்

சாந்தேலர்கள் பண்டேல் கண்டினைச் சார்ந்தவர்கள் சாந்தேலர்கள் இந்துக்களாக மாறிய கோண்டு இனத்தவர்கள் ஆவார். சாந்தேலர்களின் தலைநகரம் கஜுராஹோ ஆகும். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் முதல் பகுதியில் நான்னுகா என்பவ ரால் இம் மரபு தோற்றுவிக்கப்பட்டது, இம் மரபின் முதல் அரசர்கள் கூர்ஜரப் பிரதிகாரர்களிடத்துச் சிற்றரசர்களாக விளங்கி வந்தது.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாக்பகுதி என்னும் அரசர் தோன்றினர். வாக் பகுதியின் மூத்த மகன் 'ஜெக' எனப்படும்

ஜெகசக்தியினுல் பண்டேல்கண்டு ஆளப்பட்டமையால் பண்டேல் கண்ட் ஜெகபுக்தி என அழைக்கப்பட்டு வந்தது.

ஜெகசக்தியின் மகனுன நட்டாவை காலஞரி அரசனுன முதலாம் கொக்கல்லர் மணம் செய்து கொண்டான். ஜெய சக்திக்குப் பின்னர் அவருடைய தம்பி விஜயசக்தி அரியணை ஏறினுன். விஜயசக்திக்குப் பின்னர் ராகிலாவும், ராகிலாவுக்குப் பின்னர் ஹர்ஷரும் அரசோச்சினர். ஹர்ஷருக்குப்பின்னர் முதலாம் யசோவர்மன் பட்டத்திற்கு வந்தான். இக் குடும்பத்தின் முதல் சுயேச்சை அரசன் இவனே ஆவான். யசோவர்மனுக்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற டங்கா மகாராஜாதிராஜா என்ற பட்டத்தினைச் சூடிக் கொண்டான். சபுக்டஜினுக்கு எதிராக உருவாக்கப்பட்ட அணியில் டங்கா சேர்ந்து கொண்டான்.

டங்காவின் பேரன் வித்தியாதரன் கஜினி மாமூதுவுடன் பகை கொண்டான். வித்யாதரனின் திறை அரசன் மாமூதுவிடம் சரணடைந்தான் என்பதற்காக கன்னேசியைச் சார்ந்த இராஜ்ய பாலனைக் கொலை செய்தான் இதற்குப் பழிவாங்கிய மாமூது சாந்தேலர்களை எதிர்த்து 1019, 1022 ஆம் ஆண்டுகளில் போர் முரசு கொட்டினுன். ஆனுல் மாமூதுவிற்குத் தோல்வியே கிட்டியது. வித்யாதரனேடு மாமூது நட்புக் கொண்டான். மாமூதுவின் படையெடுப்பிலிருந்து தன்னுடைய நாட்டைக் காத்துப் பெருமை பெற்ற ஒரே அரசன் வித்தியாதரனே ஆவான்.

வித்யாதரனின் வழித்தோன்றல்கள் அண்டை நாடு களுடனும் முஸ்லீம் படை எடுப்பாளர்களுடனும் போரிட்டனர். காலஞரி அரசன் கர்ணன் கீர்த்திவர்மன் என்னும் இவ் வம்சத்து அரசனைத் தோற்கடித்தான். ஆனுல் கீர்த்திவர்மனின் சிற்றரசன் கர்ணனைத் தோற்கடித்தான். இவ் வழியின் அரசனுன பரமார்த்தி தேவனை பிருதிவிராசன் வெற்றி கொண்டான். 1202இல் குத்புதீன் கலிஞ்சார் முற்றுகையை மேற்கொள்ள பரமார்த்தி தேவன் நட்புப் பூண்டான். எனினும் கலிஞ்சார் குத்புதீனுல் கைப்பற்றப்பட்டது. சிறிது காலத்திற்குப் பின்னர் பரமார்த்தி தேவனின் மைந்தன் திரிலோக்ய மல்லன் முஸ்லீம்களைச் சாந்தேல நாட்டிலிருந்து துரத்தினுன். கி.பி. 1308 வரை திரிலோக்கிய மல்லனின் வழித்தோன்றல்கள் இஸ்லாமியர்களின் படை எடுப்பு என்னும் சூறுவளியை எதிர்த்து நின்றனர் ஆனுல் கி.பி. 1309இல் அலாவுதீன் சாந்தேல அரசை வெற்றி கொண்டு தனது அரசுடன் இணைத்தான்.

6. கஹடவாலர்கள்

கஹடவாலர்கள் பதினொரும் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சிக்கு வந்தனர். பல்வேறுபட்ட படையெடுப்புக்களால் கன்னௌசி சீரழிக்கப்பட்டது. இவ்வாறு ஏற்படும் சீரழிப்பைத் தடுக்க முன் வந்தான் சந்திரதேவன் என்பான். கஹடவாலர்கள் திடீரென்று அரசியல் வானில் பிரகாசித்தமையால், அவர்களின் தோற்றம் குறித்து அறிவது கடினமாக உள்ளது. இராட்டிரகூடர்களின் பிரிவைச் சார்ந்தவர்களாக இவ் வழியினர் இருக்கக்கூடும் என்று சிலர் குறிப்பிட்ட போதிலும். யாரும் தங்களைச் சூரிய வழிவந்தவர்கள் என்றோ, சந்திரன் வழிவந்தவர்கள் என்றோ குறிப்பிட்டுக் கொள்ளவில்லை. புராணக் கதை நாயகர்கள் யாரோடும் இணைத்து இவர்களைப்பற்றிய வரலாறு பேசவில்லை. எனவே கஹடவாலர்களைக் குறித்த பூர்வீகம் பற்றிய செய்தி ஏதும் அறிய இயலவில்லை

இராட்டிரகூட அரசனான கோபாலனைத் தோற்கடித்துச் சந்திரதேவன் கன்னௌசி அரியணையைக் கைப்பற்றினான். சந்திர தேவன் தன்னைப் புனிதத்தலங்களின் காப்பாளன் என்று அழைத்துக்கொண்டான். இக் கால உத்திரபிரதேசம் முழுமையும் சந்திரதேவனின் ஆட்சியின்கீழ் இருந்தது எனலாம். வங்கத்தில் ஆட்சிசெய்த விஜயசேனன் சந்திரதேவனால் தோற்கடிக்கப்பட்டான். கன்னௌசி கஹடவாலர்களின் முதல் தலைநகரமாகத் திகழ காசி இரண்டாவது தலைநகரமாக்கப்பட்டது.

சந்திர தேவனின் மகன் மதனபாலனைப் பற்றிய செய்திகள் அறிய இயலவில்லை. மதனபாலனைத் தொடர்ந்து கோவிந்த சந்திரன் ஆட்சிக்கு வந்தான். தன்னுடைய தந்தையின் காலத்திலேயே தன் செல்வாக்கினைப் பெருக்கி வைத்திருந்தான் மூன்றும் மஸூது எனப்படும் கஜ்னவைடு அரசனின் படையெடுப்பினை முறியடித்தான்.

மகதத்தின் பகுதிகளைக் கைப்பற்றினான். கி.பி. 1127இல் முதலாவது கொடைக் கல்வெட்டும், கி.பி. 1146இல் இரண்டாவது கொடைக் கல்வெட்டு மகதப்பகுதியில் வெட்டிவைத்துள்ளது. மகதமும் ஆட்சிப் பகுதியாக விளங்கிற்று என்பதனை மெய்ப்பிக்கிறது. தென்னிந்தியாவின் சோழர்கள், காஷ்மீர் அரசன் ஜெயசிம்மன், குஜராத்தரசன் சித்தராஜ ஜெயசிம்மன் ஆகியோருடன் நட்புப் பூண்டிருந்தான். கோவிந்த சந்திரனின் அமைச்சர் படைத்த 'கல்பதருமா' என்னும் நூல் சட்டம், முறை பற்றிய செய்திகளை விளக்குகின்றது.

கோவிந்த சந்திரனைத் தொடர்ந்து கி. பி. 1154 இல் விஜய சந்திரன் என்ற இவன் மைந்தன் ஆட்சிக்கு வந்தான். பிருதிவி ராஜரசம் என்னும் நூல் பல்வேறு வெற்றிபெற்ற வேந்தன் என்று இவனைப் பற்றிக் குறிப்பிட்டபோதிலும், ஐயத்திற் குரியதே ஆகும். முஸ்லீம்களின் படையெடுப்பினை ஓரளவிற்குத் தடுத்து நிறுத்திய பெருமையும் இம் மன்னனுக்கு உண்டு.

விஜயசந்திராவிற்குப் பின்னர் ஜெயசந்திரன் என்ற இவன் மகன் கி. பி. 1170இல் ஆட்சிக்கு வந்தது 23 ஆண்டுகள் ஆட்சி செலுத்தினான். அன்ஹில்வாட்டைச் சேர்ந்த சித்தராஜா, தேவ கிரியைச் சேர்ந்த யாதவராஜா, கஹிகாபுத்திரன் ஆகியோர் பன் முறை இவனிடம் தோற்றனர் என்று நாடோடி இலக்கியங்களை முழுமையாக உண்மை என ஏற்பது கடினமே. ஜெயசந்திரன் இந்திய வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற அரசனுவான், ஜெய சந்திரனுக்கும், பிருதிவிராஜனுக்குமிடையே பகை உணர்வு இருந்தது. பிருதிவிராசன் ஜெயச்சந்திரன் மகளைத் தூக்கிச் சென்றது எல்லாம் கதைகளாக இன்றும் மக்கள் மத்தியில் உலவு கின்றன.

ஹிகாபுத்தின் கோரிக்கும் ஜெயசந்திரனுக்கும் இடையே நடைபெற்ற போர் குறிப்பிடத்தகுந்ததாகும். சாந்தாவார், எடாவா, ஆகிய இடங்களில் நடைபெற்ற போர் குறிப்பிடத் தகுந்ததாகும். சந்தாவார், எடாவா ஆகிய இடங்களில் நடை பெற்ற போரில் ஜெயச்சந்திரன் தோற்கடிக்கப்பட்டான். ஜெயச் சந்திரன் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்ட பின் அரிச்சந்திரன் என்ற இவன் மகன் தொடர்ந்து ஆட்சி செலுத்த அனுமதிக்கப் பட்டான். வடமொழி இலக்கிய வரலாற்றில் ஜெயச்சந்திரன் புகழ் என்றும் நிலைத்து நிலவுகிறது.

காலசூரிகள்

காலசூரிகள் ஹைகலர்கள் எனப்பட்டனர். இவர்கள் சேடி அல்லது திரிபுரி அல்லது தகாலாவைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படுகின்றனர்.

சேதி அரச மரபினைத் தோற்றுவித்தவர் முதலாம் கோக்கல்லர் (கி.பி. 845—880) ஆவார். அக் கால இராணுவத் தலைவர்களில் சிறந்தவராக எண்ணப்படும் இவர் திரிபுரியைத் தலைநகராகக் கொண்டிருந்தார். மாளவம், சிந்து கொங்கணம் ஆகியவற்றை வெற்றி கண்டார். சர்ந்தேலர்களுடனும், இராட்டிரகூடர்களுட னும், திருமண உறவு வைத்திருந்தார்.

இம் மரபில் அடுத்துவந்தவர்கள் முதலாம் சங்கரகணர், பால ஹர்ஷர் ஆகியோர் ஆவர். முதலாம் யுவராஜர் என்ற சங்கரரின் மகன் குடும்பப் பெருமையை காத்தார். சிவன் மீது பற்று கொண்ட யுவராஜர் சிவனுக்கு ஆலயங்கள் எழுப்பினர். இராஜ சேகரன் என்ற புலவரை ஆதரித்தார். இவருக்கு அடுத்து அரியணை ஏறிய இலட்சுமணராஜர் கிழக்கு வங்கம், கோசலம், குஜராத் இவற்றையாண்ட அரசர்களை வெற்றி கொண்டார் அடுத்து ஆட்சிக்கு வந்த இரண்டாம் சங்கரர் சிலகாலமே ஆட்சி செய்தார். அவருடைய உடன் பிறப்பு இரண்டாம் யுவராஜர் முஞ்சப்பரமாரரால் தோற்கடிக்கப்பட்டார். அவருக்குப் பின்னர் இரண்டாம் கோக்கல்லர் அரசரானார்.

இம் மரபின் புகழ் கங்கேய தேவர் அரசராகும்வரை மிகவும் தாழ்ந்த நிலையிலேயே இருந்தது. சிறந்த இராணுவ வீரரான காங்கேயதேவர் விக்கிரமாதித்தர் என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டு பல போர்களில் ஈடுபட்டார். கங்கரா பள்ளத்தாக்கி லுள்ள கீராவையும், கோசலை, உத்தலை ஆகிய நாடுகளையும் படை யெடுத்து வெற்றிகொண்டார். இவருடைய சிறப்புப்பட்டம் திரி கலிங்காதிபதி என்பதாகும். பிரதிகாரர்களிடமிருந்து அலகாபாத் தையும், பாலர்களிடமிருந்து காசியையும் கைப்பற்றிய இவர் பரமார அரசரான முதலாம் போஜரிடத்தில் தோற்றார்.

இவருடைய மகன் இலட்சுமிகர்ணர் சிறந்த படைத்தலைவ ராவார். முதலாம் பரமாரப்போஜர் இவரிடத்துத் தோற்றார். இதற்குக் காரணம் சாளுக்கியர்கள் கோலங்கிகள் இவருக்கு உதவியதேயாகும். வங்கத்தைக் கைப்பற்றினார். கீர்த்திவர்மன் எனப்படும் சான்தேல அரசனைத் தோற்கடித்தார். இவ்வாறு வெற்றிகள் பல பெற்ற இவர் தமது ஆட்சி இறுதிக் காலத்தில் பாலர்கள், சான்தேலர்கள், பரமாரர்கள், சோலங்கிகள், சாளுக் கியர்கள் ஆகிய அனைவருக்கும் தோற்றார்.

பின்னர் தன்னுடைய மைந்தன் யசகர்ணனுக்காக முடி துறந்தார். யசகர்ணர் அலகாபாத்தையும், காசியையும் கஹட வாளர்களிடம் பறிகொடுத்தார். அது மட்டுமின்றி பரமாரர் களிடமும், சான்தேலர்களிடமும் தோற்றார். இவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த கயகர்ணரும் சான்தேலர்களிடத்து தோற்றார். இம் மரபின் பிற அரசர்கள் நரசிம்மர்கள், ஜெயசிம்மர், விஜய சிம்மர், அஜய சிம்மர் ஆகியோர் ஆவர்.

விஜயசிம்மர் சான்தேல அரசரான திரிலோக்கிய மன்னனால் பதவியிலிருந்து விரட்டப்பட்டார். இவர்களின் ஆட்சிப்

பகுதிகள் மெல்ல மெல்ல டெல்லி சுல்தானியத்துடன் இணைக்கப் பட்டன. பதினைந்தாம் நூற்றாண்டின் துவக்கத்தில் தோமரர் இனத்தவரால் இம் மரபு முழுமையாக அழிக்கப்பட்டு விட்டது.

7. சாஹம்பரியைச் சேர்ந்த சாஹமானர்கள்

சூரியனுக்குப் பிறந்த சாஹயினன் என்பவனின் வழித் தோன்றல்களே சாஹமானர்கள் எனப்படும் சௌஹான்கள் என்று கூறப்படுகிறது. அக்கினி குலக் கொள்கையில் கூறப்பட்ட வேள்வித் தீயினின்றும் வெளிப்பட்ட நான்கு இராசபுத்திர வீரர்களில் ஒருவரின் மரபில் தோன்றியவர்கள் என்றும் கருதப் படுகிறது. சாஹம்பரிப் பகுதியைத் தங்கள் பூர்வீகமாகக் கொண்டிருந்தனர். சௌஹான்களில் சாகம்பரிப் பிரிவினைத் தோற்றுவித்தவன் வாசுதேவன் என்பவனுவான். பல நூற்றாண்டுகள் இந்திய அரசியலில் சாஹமானிகள் சிறப்பிடம் வகித்தனர். இம் மரபினைத் தோற்றுவித்தவன் வாசுதேவன் என்று நம்பப்படுகிறது. இவர்களும் மற்ற இராசபுத்திரர்களைப் போல துவக்க காலத்தில் திறை செலுத்தும் அரசர்களாக விளங்கினர்.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் அஜயராஜர் என்பவர் அஜயமேடு என அழைக்கப்பட்ட இன்றைய அஜ்மீரை உருவாக்கினன். இம் மரபின் மற்றொரு புகழ்மிக்க அரசன் நான்காம் விக்கிரகராஜன் ஆவான். தோமரர்களிடமிருந்து இம் மன்னன் டில்லியைக் கைப்பற்றினன். கஜினிமாமூதுவின் வழித்தோன்றல்கள் பல போர்களில் தோற்கடிக்கப்பட்டனர். இம் மரபின் மற்ற அரசர்கள் அபரகங்கேயர், இரண்டாம் பிருதிவி ராஜன், கோமேஸ்வரன், மூன்றும் பிருதிவிராஜன் முதலியோர் ஆவர். பிருதிவிராஜ ராவம். பிருதிவிராஜ விஜடம் ஆகிய நூல்கள் மூன்றும் பிருதிவிராஜனைப் பற்றிய வரலாற்றினை நமக்கு அளிக்கின்றன. மூன்றும் பிருதிவிராஜனே ஜெயச் சந்திரன் மகள் சம்யுக்தையைக் கவர்ந்து சென்றவன். மூன்றும் பிருதிவிராஜன் சாந்தேல அரசனுன பரமார்டியைத் தோற்கடித்து, மகோவா, கலிஞ்சார் ஆகிய பகுதிகளைச் சூறையாடினன்.

கோரி முகம்மது இந்தியாவின் மீது படையெடுத்த நேரத்தில் பிருதிவிராஜனின் நிலையில் சிக்கல் தோன்றியது. கி.பி. 1191இல் தரையின் சண்டையில் முதலில் கோரி முகம்மதை வென்ற பிருதிவிராஜன் கி.பி. 1192இல் இரண்டாம் தரையின் சண்டையில் கோரி முகம்மதுவினால் தோற்கடிக்கப்பட்டான். இதன் பின்னர் இவ் வழியினரின் சிறப்பு முற்றுப் பெற்றது.

8. அன்ஹில்வாட்டைச் சேர்ந்த சோலங்கிகள்

வேள்வித் தீயினின்றும் வெளிப்பட்ட நான்கு வீரர்களில் ஒரு வருடைய மரபினரே சோலங்கிகள் என்று அக்கினி குலக் கொள்கை எடுத்துரைக்கின்றது. இவர்களைச் சில வரலாற்றறிஞர்கள் தக்காணத்தைச் சேர்ந்த சாளுக்கியர்களின் பிரிவினர் என்று கூறுகின்றனர். ஆனால் சோலங்கிகள் என்றே இவர்கள் அழைக்கப்படுகின்றனர். அன்ஹில்வாட் (குஜராத்) இவர்களின் தலைநகரமாக விளங்கிற்று.

இம் மரபினைத் தோற்றுவித்தவர் மூலராஜா என்பவராவார். இவர் சௌராட்டிரத்தையும், சட்ச் பகுதியையும் கைப்பற்றினார். சாகமானர்களுடனும் மேலைச்சாளுகியர்களுடன் பரமாரர் களுடன் தொடர்ந்து போரிட்டுத் தம்மால் உருவாக்கப் பட்ட அரசைக் காத்தார். சிவன்மேல் பக்திகொண்ட இவ் வரசன் இரு அழகிய சிவாலயங்களைத் தமது தலைநகரில் உருவாக்கினார்.

தம்முடைய மகன் சாமுண்டராஜன் அரியணை ஏறும் பொருட்டு முடிதுறந்தார். அடுத்துச் சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் துர்லபராஜன் என்பானின் ஆட்சி நடைபெற்றது. முதலாம் பீமதேவருடைய காலத்தில் கஜினி மாமூதுவினால் சோம நாதபுரத்துச் சோமநாதர் ஆலயம் சூறையாடப்பட்டது. கஜினி மாமுதுவிற்குப் பின்னர் பீமர் அடிமலை, பின்மால், மாளவம் ஆகிய வற்றைக் கைப்பற்றினார். பீமரின் மைந்தன் முதலாம் கர்ண தேவன் பில்ஹணர் என்ற புலவரை ஆதரித்துப் போற்றினான். பல ஆலயங்களைக் கட்டி வைத்தான்.

இவரையடுத்து ஆட்சி புரிந்த ஜெயசிம்மராஜர் பரமார அரசர் யசோவர்மரைத் தோற்கடித்து மாளவத்தைக் கைப்பற்றினார். கஹடவால்களுடனும், காலசூரிகளுடனும், நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். ஆனால் சாந்தேலர்களுடன் பகை உணர்வு கொண்டிருந்தார். இவர் 'சிம்ஹ சம்வத்சரம்' புதிய காலக் கணக்கை உருவாக்கினார். கத்தியவார் பகுதியில் 250 ஆண்டுகள் அது புழக்கத்தில் இருந்தது. பெரும் மாளிகைகளைக் கட்டிய தோடு, கல்வியிற் சிறந்த பெரியவர்களைப் போற்றி ஆதரித்தார். ஜெயசிம்மருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த குமாரபாலன் சமண சமயத்தைப் போற்றி வளர்த்த மன்னனுவார். நாடு முழுவதும் விலங்கினங்கள் கொல்லப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டது. சமண சமயத்தவராயினும் சகமானருடனும், பரமாரர்களுடனும் காலசூரிகளுடனும் போர் புரிந்தார்.

குமாரபாலருக்குப் பின்னர் அரசுகட்டில் ஏறிய ஜைபாலர் சமண சமயத்தின்பால் பற்றுக் கொண்டிருக்கவில்லை. மாறுகச் சமணர்களைத் துன்புறுத்திச் சமணப் பள்ளிகளை இடித்துத் தள்ளும் பணியினை மேற்கொண்டார்.

கி.பி. 1196இல் குத்புதின் ஐபக் அன்ஹில்வாட்டைச் சூறையாடினார். கி.பி. 1230இல் இல்துத்மிஷ் மீண்டும் அன்ஹில்வாட்டைத் தாக்கினார். எனினும் சோலங்கிகளின் சிற்றரசர்களின் ஒற்றுமை உணர்வினால் சிறிதுகாலம் பாதுகாக்கப்பட்டது.

வாகேலர்கள் என்ற சிற்றரசர்கள் சோலங்கிகளை அரசியல் அரங்கில் இருந்து அப்புறப்படுத்திவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினர். வாகேலர்களில் வலிவுமிக்க அரசனாக விளங்கியவர் அர்ஜுனர் என்பவராவார்.

அர்ஜுனரின் மகன் கர்ணதேவன் அலாவுதீன் கில்ஜியினால் கி.பி. 1297இல் தோற்கடிக்கப்படக் கர்ணதேவனின் துணைவி கமலாதேவி அலாவுதீன் கில்ஜியின் காமக்கிழத்தியருள் ஒருத்தியாக ஆக்கப்பட்டு குஜராத் டெல்லி சுல்தானியத்துடன் இணைந்தது.

9. வங்காள பாலர்கள்

வங்காளத்தைச் சேர்ந்த பாலர்கள் கூர்ஜரப் பிரதிகாரர்களைப் போலவே ஏற்றம் பெற்றவர்கள் என்ற போதிலும் இவர்கள் இராசபுத்திரர்கள் அல்லர். இவர்கள் வங்கத்தையே தாயகமாகக் கொண்டவர்கள். இங்கு புத்த சமயத்தைப் பின்பற்றியவர்கள். வங்கத்தை இணைத்துப் புகழ்மிக்க அரசாக உருவாக்கினர்

கி.பி. ஆறும் நூற்றாண்டில் குப்தர்களின் ஆட்சியின்போது வங்காளம் சுயேச்சை நாடாயிற்று. ஹர்ஷவர்த்தனருக்குப் போட்டியாளராக விளங்கிய சசாங்கர் வங்காளம், பீகார், ஒரிஸ்ஸாவின் பகுதிகள் இணைந்த அரசை உருவாக்கினர். காமரூப அரசனான பாஸ்கரவர்மனும், ஹர்ஷரும் கொண்ட நட்பின் பயனாக சசாங்கரின் முயற்சி தடைப்பட்டது. சசாங்கரின் மறைவிற்குப் பின்னர் வங்காளம் குழப்பத்தில் ஆழ்ந்தது. கன்னோசியைச் சேர்ந்த யசோவர்மன், காஷ்மீரைச் சேர்ந்த லலிதாத்தியா முக்த பீடர், குஜராத்தைச் சேர்ந்த வத்சராஜர் முதலானவர்கள் வங்காளத்தைத் தம் ஆளுகையில் கொண்டு வர முயன்றனர். இம் முயற்சிகளின் போதெல்லாம் மக்கள் துயருற்றனர். கடைசியில் மக்கள் அமைதியை நிலை

நிறுத்த, நிலையான ஆட்சி ஏற்படக் கோபாலன் என்பவரைத் தேர்ந்தெடுத்தனர். இந்தக் கோபாலனே பாலர் மரபினைத் தோற்றுவித்தவர் ஆவார்.

கோபாலன் சிறந்த இராணுவத் தலைவராக விளங்கினார். வங்காளத்தில் சிற்றரசர்களை ஒருங்கிணைத்துத் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தார். இவருடைய ஆட்சிக் காலத்திலிருந்து வங்காளத்தில் நிலவிய குழப்பம் முற்றுப் பெற்றது.

கோபாலருக்குப் பின் அவர் மகன் தர்மபாலன் ஆட்சிக்கு வந்தான். இவருடைய காலத்தில்தான் வடஇந்தியாவில் பிரதிகாரர்கள், இராட்டிரகூடர்களிடையே மும்முனைப் போராட்டம் ஏற்பட்டது. மூன்று மரபினரும் கன்னோசியைக் கைப்பற்ற எண்ணம் கொண்டிருந்தனர். பிரதிகார அரசரான வத்சராஜர் தர்மபாலரைத் தோற்கடித்தார். ஆனால் வத்சராஜன், தர்மபாலர் இருவரும் இராட்டிரகூட அரசனான துருவனிடம் தோற்றனர். யசோவர்மனுக்குப் பின்னர் கன்னோசியை அரசுசெலுத்திய இந்திராயுதர் தர்மபாலரால் தோற்கடிக்கப்பட்டார். இந்திராயுதரைக் தோற்கடித்துத் தர்மபாலர் சக்ராயுதரைக் கன்னோசி அரசராக்கினார். ஆனால் சக்ராயுதர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இராட்டிரகூட அரசன் மூன்றாம் கோவிந்தர் இரண்டாம் நாகபட்டரையும், தர்மபாலரையும் வென்றார்.

நூறு போர்களில் வெற்றி பெற்ற தர்மபாலர் சிறந்த புகழ் பெற்று விளங்கினார். தம்முடைய மரபிற்குச் சிறப்பைத் தேடித் தந்தார். தர்மபாலர், பரமபட்டாரகர், மகாராஜாதிராஜர், பரமேஸ்வரர் போன்ற சிறப்புப் பட்டங்களைப் பூண்டிருந்தார். பௌத்த சமயம் இவரால் போற்றி வளர்க்கப்பட்டது. பகார்க்கடம் என்னுமிடத்தில் விக்கிரம சீல மடாலயம் இவரால் தோற்றுவிக்கப் பட்டது. பகல்பூருக்கு அருகில் உள்ள இவ்விடம் பௌத்த சமயத்தத்துவங்களையும் கற்பிக்கும் சிறப்புடன் விளங்கிற்று.

தர்மபாலரின் மகன் தேவபாலன் தன்னுடைய தந்தையின் பேரரசுக் கொள்கையினைத் தொடர்ந்து கடைப்பிடித்தார். காம்போஜர்கள் என்பவர்களின் படை எடுப்பை முறியடித்த தேவபாலன் பௌத்த சமயத்தவனே. நாளந்தாவில் பல புத்த விகாரங்களைச் சீர்திருத்தி அமைத்தான். சைலேந்திர அரசன் ஏலபுத்திரதேவன் தூதுக்குழு ஒன்றினை அனுப்பி நாளந்தாவில் புத்தவிகாரம் ஒன்று அமைத்திட அனுமதி பெற்றான். அப் புத்த விகாரத்தின் பராமரிப்பிற்காக ஐந்து கிராமங்களைத் தானமாக அளித்தான்.

தேவபாலரின் மறைவிற்குப் பின்னர் பாலர் மரபினரின் செல்வாக்கு மங்கத் தொடங்கியது. இராசபுத்திரர்கள் அடிக்கடி வங்கத்தின்மீது படை எடுப்பு நிகழ்த்திப் பாலர்களின் ஆட்சிப் பகுதிகளைக் கவர்ந்து சென்றனர். இழந்த பேரரசின் பெருமையைக் காத்து நிறுத்தியவர் மகிபாலன் என்னும் அரசராவார்.

சோழர்கள், காலசூரிகள் ஆகியோரின் தாக்குதலிலிருந்து நாட்டைக் காத்ததோடு அல்லாமல் மகதம், திரபுக்தி, தெற்கு வங்காளம் ஆகியவற்றைக் கைப்பற்றியதன் விளைவாக மீண்டும் பாலர் அரசு காசிவரை விரிந்தது. மகிபாலரின் மைந்தன் நியாய பாலன் நீண்ட நாட்கள் காலசூரிகளுடன் போரிட்டு இறுதியில் காசியை இழந்தான். நியாயபாலனின் மகன் விக்கிரகபாலன் காலசூரி அரசன் காங்கேயதேவனின் மகளை மணந்ததன் விளைவாக இரு மரபிற்குமிடையே நீண்ட நாட்கள் நடைபெற்ற போர் முடிவிற்கு வந்தது.

கைவர்த்தர்கள் என்ற படை எடுப்பாளர்களாலும் அரசுரிமைப் போரினாலும் மூன்றாம் விக்கிரகபாலனுக்குப் பின் பால வம்சம் விரைவாக அழிவைநோக்கி நடைபோட்டது. எனினும் இராமபாலன் என்ற விக்கிரகபாலனின் மூன்றாம் மைந்தன் அழிவுச் சக்திகளை ஓரளவிற்குத் தடுத்துக் காமரூபத்தை வெற்றி கொண்டான்.

இராமபாலனின் மகன் காலத்தில் காமரூபம் பாலர் அமைச்சர் ஒருவரின் கீழ் சுயேச்சை பெற்றது. அனந்தவர்ம கோடகங்கர் மகதத்தைக் கைப்பற்றினார். மதனபாலர் குலப்பெருமையைக் காக்க மேற்கொண்ட முயற்சிகள் பலனளியாது போயின. சேனர் மரபினரின் எழுச்சியும் இம் மரபிற்கு ஆபத்தை விளைவித்தது. விஜயசேனர் என்ற சேன அரசன் கி.பி. 1138இல் மதனபாலரைத் துரத்தி வங்கம் முழுமையும் தன் ஆட்சியின்கீழ் கொண்டு வந்தார்.

சுமார் 400 ஆண்டுகள் வங்காளத்தையும் பீகாரையும் பாலர்கள் ஆட்சி செலுத்தினர். ஆட்சியின் உச்ச கட்டத்தில் வட இந்தியாவின் சிறப்பு மிக்க அரசராகத் திகழ்ந்தனர். இவர்கள் புத்த சமயத்தவர்கள். புத்த சமயத்திற்குப் புத்துயிர் அளித்தவர்கள் என்று பாலர்கள் போற்றப்படுகின்றனர். 'தந்திரிக்' புத்தசமயம் என்னும் புதுமுறையிலான புத்த சமயம் இவர்கள் காலத்தில் உருவாயிற்று. விக்கிரமசீலம், உத்தண்ட புரம் புத்த விகாரங்களைக் கட்டுவித்து அதற்கு மானியம் வழங்

கினர். நேபாளம், திபெத் ஆகிய பகுதிகளிலிருந்த புத்த சமய நூல்கள் மீட்கப் பெற்றன. புதிய கட்டடக் கலை உருவாயிற்று. இந்தியச் சிற்பக்கலை, கட்டடக் கலை வளர்ச்சியில் குறிப்பிடத் தகுந்த பங்கு பாலர்களுக்கு உண்டு.

9. வங்கச் சேனர்கள்

பாலர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் வங்கத்தில் தனியாட்சி ஏற்படுத்தியவர்கள் சேனர்களே ஆவார்கள். தங்களைக் கர்னாடக க்ஷத்திரியர்கள் என்று அழைத்துக் கொண்டனர். வங்காளம், பீகார் ஆகியவற்றை ஆரும் விக்கிரமாதித்தர் படையெடுத்த போது அவருடன் வங்காளத்திற்கு வந்து அங்கேயே தங்கியிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. இம் மரபின் முதல் அரசர் விஜயசேனர் ஆவார். சூரா குடும்பத்தைச் சேர்ந்த விசாலதேவி என்பவளை மணந்து தம் நிலையைப் பலப்படுத்திக் கொண்டார். பாலர்களின் தாழ்வுற்ற நிலையைத் தமது செல்வாக்கைப் பலப்படுத்தப் பயன்படுத்திக் கொண்டார். மதனபாலரைத் துரத்தி விட்டு வங்காளத்தின் தலைவரானார்.

விஜயசேனருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த பல்லால சேனர் மிதிலையைக் கைப்பற்றினார் இவர் தலைசிறந்த அறிஞராவார். தானசாகரா, அற்புதசாகரா ஆகிய நூல்களின் ஆசிரியர் இவரே. சாதிமுறைகளை வழிமுறையின்படி வகைப்படுத்தினர். சிவன் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர் இவரே.

சேனமரபின் அரசர்களில் தனிசிறந்தவர் இலட்சுமண சேனரே ஆவார். ஒரிஸ்ஸா, மகதம் ஆகியவற்றைக் கைப்பற்றி, பூரி, காசி, அலகாபாத் ஆகிய இடங்களில் வெற்றிக் கம்பங்களை நட்டார். தந்தையைப் போலவே சிறந்த அறிஞராக லட்சுமண சேனர் விளங்கினர். ஐந்து இரத்தினங்கள் எனப்படும் வடமொழிப் புலவர்கள் இவர் அவையை அலங்கரித்தனர். இவரும் பதிய கால மரபினை உருவாக்கினர். அக் கால மரபு இலட்சுமண சேன சம்வத்சாரம் என அழைக்கப்பட்டு இன்றும் மிதிலையில் பயன்படுத்தப்படுகிறது.

பக்தியாருத்தீன் கில்ஜி இலட்சுமண சேனர் தங்கியிருந்த நாதியா நகரத்தைத் தாக்கிச் சேனர்கள் ஆட்சியினை முடிவிற்குக் கொண்டு வந்தார்.

காஷ்மீரத்தின் வரலாறு

மௌரியப் பேரரசின் காலத்திற்கு முன்னர் காஷ்மீரைப் பற்றிய தெளிவான வரலாற்றுச் செய்திகள் ஏதும் கிடைக்கப் பெறவில்லை. அசோகரின் காலத்தில் காஷ்மீரம் மௌரியப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கிற்று. அசோகருக்குப் பின் ஜலூகன் சுயாட்சி அரசு ஒன்றை நிறுவினான். சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் குஷானப் பேரரசர்களான கனிஷ்கரும், குவிஷ்கரும் காஷ்மீரத்தைத் தங்கள் பேரரசின் கீழ் வைத்திருந்தனர் மாளவ யசோதர்மன் என்னும் அரசன் கூண அரசன் மிகிரகுலனைத் தோற்கடித்தபோது காஷ்மீரத்தில் கூணன் தன் அரசை ஏற்படுத்தினான் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து காஷ்மீரத்தின் தொடர்ச்சியான வரலாறு கல்கணர் என்பவரின் இராஜதரங்கிணியின் வாயிலாக அறிகிறோம். அந் நூலிலிருந்து கார்க்கோடக குடும்பத்தைச் சேர்ந்த அரசன் கோனந்த வம்சத்து அரசனைத் தோற்கடித்து கார்க்கோடக மரபின் ஆட்சியைத் தொடங்கி வைத்த செய்தியினை அறிகிறோம்.

கார்க்கோடக வம்சத்தினைத் தோற்றுவித்த துர்லாபவர்த்தனன் ஹர்ஷவர்த்தனர்க்கு மிகவும் வேண்டியவனுவான். இம் மரபின் சிறப்புமிக்க அரசன் லலிகாத்திய முக்தபீடன். கன்னோசியைச் சார்ந்த யசோவர்மன் என்னும் அரசனை கி.பி. 733இல் சோற்கடித்தான். பின்னர் வங்கத்தின்மீது படையெடுத்துச் சென்று அவ் வரசனைக் கொன்றான். பின்னர் திபெத், துர்க்கஸ்தான் ஆகியவற்றின்மீது படை நடத்திச் சென்றான். சீன தேசத்திற்குத் தூதுக்குழு ஒன்றினை அனுப்பி வைத்தான். புஷ்கபுரத்தில் புத்தவிகாரங்களைக் கட்டியதோடு காஷ்மீரத்தின் மற்ற பகுதிகளில் சிவனுக்கும், திருமாலுக்கும் ஆலயங்கள் எழுப்பினான். மார்த்தாண்டர் ஆலயம் என்னும் மன்னனின் ஆலயம் மிகவும் சிறப்புப் பெற்றதாகும்.

கார்க்கோடக வம்சத்தின் மற்றொரு சிறப்புமிக்க அரசன் ஜெயபீட வினயாதித்தயன் கன்னோசி, வங்காளம் ஆகியவற்றின் அரசர்கள் ஜெயபீடனால் தோற்கடிக்கப்பட்டவர்கள் ஆவர். ஜெயபீடனின் அவையை உத்பாதர், வாமனர், தாமோதர குப்தர், சிரசுவாமி போன்ற புலவர்கள் அலங்கரித்தனர். கி.பி. 756இல் கார்க்கோடக வம்சம் உத்பாலர்களால் ஆட்சியில் இருந்து இறக்கப்பட்டது.

உத்பால வம்சத்தினை ஏற்படுத்தியவர் அவந்திவர்மனுவான். இவருக்குச் சுய்யா என்னும் அமைச்சர் மிகவும் துணைபுரிந்தார்.

அவருடைய உதவியைக் கொண்டு ஏராளமான வாய்க்கால்களை அமைத்தார். ஜீலம் நதிப் பெருக்கினால் ஏற்படும் பயிர்ச்சேதத்தினைத் தடுத்து நிறுத்திட நதியின் போக்கை மாற்றி அமைத்தார். ஏராளமான பகுதிகளில் வேளாண்மை செய்வித்து காஷ்மீரை வளம் கொழிக்கச் செய்தார். ஏராளமான கோவில்களைக் கட்டி அவற்றிற்கு நிவந்தமும் வழங்கினார். தாவண்யலோகா என்னும் நூலின் ஆசிரியர் ஆனந்தவர்த்தனர் குறிப்பிடத்தகுந்த இவரது அவைக்களப் புலவர் ஆவார்.

அவந்திவர்மனுக்குப் பின்னர் அவருடைய மகன் சங்கரவர்மன் ஆட்சிக்கு வந்தான். போர்க் கொள்கையை மேற்கொண்ட இவ் வேந்தன் கன்னௌசியின் முதலாம் மகேந்திரபாலன், கூர்ஜர அரசன் அலேகானு ஆகியோரைத் தோற்கடித்தான். இவன் மேற்கொண்ட போர்களின் விளைவால் அரசுக் கருவூலம் காலியாயிற்று. இச் செலவுகளைச் சரிக்கட்ட ஆலயங்களின் செல்வத்தைக் கொள்ளையிட்டான். சமயச் சடங்குகளுக்கு வரி விதிப்புச் செய்தான். கல்விப் பணியில் போதிய ஆர்வம் காட்டவில்லை. கி.பி. 902 முதல் 939 வரை காஷ்மீரை ஆட்சி செய்தவர்கள் மக்களால் வெறுக்கப்பட்டனர்.

உத்பால வமிச அரசன் அரவர்மன் கி.பி. 939இல் இறந்துவிடவே பிராமணர்கள் யசஹாரன் என்பானைப் பதவியில் அமர்த்தினர். உத்பால அரசன் கோபாலவர்மனின் அமைச்சரான பிரபாகர தேவனின் மகனே இப் புதிய அரசன். தன்னுடைய சிறந்த ஆட்சியினால் காஷ்மீரத்தை மீண்டும் சிறப்படையச் செய்தான். பின்வந்த அரசர்கள் பலவீனர்கள் ஆவர். க்ஷேமகுப்தர் என்பானின் ஆட்சியின்போது தீய இயல்புள்ள அவன் மனைவி திட்டா காஷ்மீர அரசில் தலையிட ஆரம்பித்தாள். 958இல் க்ஷேமகுப்தன் இறந்துவிடத் தன் மகனுக்குக் காப்பாளராக இருந்து ஆட்சி செலுத்தினாள். காஷ்மீரம் பலவீனமான நாடாயிற்று. 1339 வரை காஷ்மீர் இந்துக்களின் ஆட்சியில் இருந்தது. 1339இல் ஷாமிர் என்பான் முஸ்லீம் ஆட்சியை ஏற்படுத்தினான்.

XI. இராசபுத்திரர்களின் ஆட்சி அமைப்பு முறை

ஹர்ஷருக்குப் பின் : ஹர்ஷவர்த்தனரின் மறைவுக்குப் பின் இந்தியாவின் அரசியல் நிலைமையையும், அரசு அமைக்கப்பட்டிருந்த விதம், செயல்பட்ட முறை பற்றியும் நாம் அறிந்துகொள்ளுதல் மூலமாக இஸ்லாமியரின் வருகைக்குப்பின் ஏற்பட்ட விளைவுகளை அறிய முடிகிறது. எப்படிப்பட்ட அமைப்பு முறை

ஹர்ஷருக்குப் பின் இருந்தது? அது எவ்வகையில் இந்திய மண்ணில் இஸ்லாமிய ஆட்சியை ஏற்படுத்துவதிலும், இஸ்லாமிய ஆட்சி வெற்றி பெறுவதிலும் துணையாக இருந்தது என்பதை அறிந்துகொள்ள இந்தப் பகுதி உதவியாக இருக்கின்றது.

ஹர்ஷருக்குப்பின் வட இந்தியா குழப்பத்தில் ஆழ்ந்துவிட வில்லை. அதற்கு மாறுகக் குறுநில மன்னர்கள் விடுதலைபெற்று அதற்கு முன் ஆண்டதுபோல் தம் நாட்டை ஆண்டனர். ஆனலும் சிறிய அரசுகளுக்கிடையே ஏற்பட்ட போட்டியின் காரணமாக உள் நாட்டுப் போர் போன்ற குழப்பம் நிலவியது. ஹர்ஷப் பேரரசு சிதைந்து போனது பொதுவாக அதிகாரப் போராட்டத்தைத் தூண்டியது எனலாம். இப் போராட்டமானது காஷ்மீரத்திலிருந்து மகாராட்டிரம் வரைக்கும், சிந்துவிலிருந்து இமயமலை வரைக்கும் நடைபெற்ற தனி முதன்மை நிலைக்கான போராட்டமே ஆகும்.

மரபுரிமை: இந்த நூற்றாண்டுகளில் இந்தியாவில் நிலவிய ஆட்சி அமைப்பு முறை முடியாட்சி முறையே ஆகும். இறக்கின்ற தருவாயில் அரசர் தமக்குப் பின் வருபவரை நியமிக்கும் மரபு முறை பெரும்பாலும் காணப்பட்டாலும் பொதுமக்களோ அல்லது அமைச்சரவையோ தெரிவு செய்தல் முற்றிலும் மறைந்துவிட வில்லை. மரபுரிமைச் சட்டம் ஏதும் இருக்கவில்லை. வலிந்தோர், மெலிந்தோரை அடக்கி வாழ்தல் அல்லது மச்ச நியாயம் எனப் படும் கொள்கை பெரிதும் வெறுக்கப்பட்டது. இத்தகைய இயற்கை நிலையிலிருந்து மக்கள் விடுதலை பெற நினைத்தனர். இதற்குச் சான்று வங்காளத்தின் முதலரசராகக் கோபாலர் தேர்ந்தெடுக்கப்பட்டதைக் காலிம்பூர் பட்டயத்தின் மூலம் அறி கிறோம். நிலமானியத் தலைவர்களும், அமைச்சர்களும் சில சமயங் களில் அரசரைத் தேர்ந்து எடுத்தனர். இராட்டிரகூட அரசர் அமோகவர்ஷர் பதவியில் அமர்த்தப்பட நிலமானியதாரர்களும் அமைச்சர்களும் பெரும் பங்கு கொண்டனர். மூத்த மகன் அரி யணையில் அமர்த்தப்பட வேண்டும் என லலிதாத்திய முக்தபிடர் என்பவர் விதித்தார். இரண்டாம் கோவிந்தர் தம் இளைய மகனைத் தமக்குப் பின்னர் ஆட்சிபுரியத் தெரிவு செய்தார். நாம் இதுவரை மேலே கண்ட சான்றுகளின் வாயிலாக எத்தகைய மரபு உரிமைச் சட்டமும் இல்லை என்பதை அறிகிறோம். மூத்தவர்கள், தகுதி பெற்றவர்கள், திறமை பெற்றவர்கள், மரபுரிமைக்கு உரியவர்கள் ஆகிய தகுதிகளைப் பொதுவாகக் கவனித்தனர். அரசரின் அதிகா ரங்களை அமைச்சர்கள் அடிக்கடி பறித்துக்கொண்டனர். சிந்து நாட்டின் அரசரான ஷாஸியின் பிராமண அமைச்சர், காஷ்மீர்

அரசர் சக்கரவர்மனின் அமைச்சர் ஆகியோர் இவ்வாறே செய்தனர்.

அமைச்சர்கள்: அரசருக்கு அடுத்தபடியாக நாட்டில் செல்வாக்குப் பெற்றவர்களாக விளங்கியவர்கள் அமைச்சர்களும் நிலமானியதாரர்களும் ஆவர். நாட்டின் வலிமையையும், பரப்பையும் பொறுத்தே அமைச்சர்களின் எண்ணிக்கை இருந்தது. வலிமை இல்லாத நாடாயின் குறைந்த எண்ணிக்கை உடைய அமைச்சர்களும் வலிமை மிக்க நாடாயின் அதிக எண்ணிக்கை உடைய அமைச்சர்களும் இருந்தனர்.

அரசரின் பிரதிநிதியாக விளங்கியவர் தலைமை அமைச்சராவார். அரசன் இளைஞனாயின், ஆட்சி புரியத்தக்க பருவம் அடையும்வரை அவ் வரசனுக்குப் பாதுகாவலனாகத் தலைமை அமைச்சர் விளங்கினர். தலையை அமைச்சருக்கு அடுத்தபடியாகக் குறிப்பிடத் தகுந்தவர் மகா சந்தி விக்கிரகர் என அழைக்கப்பட்ட முதன்மை வெளி உறவு அமைச்சர் ஆவார். இவர் தம் கட்டுப்பாட்டின் கீழ்ப் பல சந்திவிக்கிரகர்களை வைத்திருந்தார். முதலாம் அமோகவர்ஷரின் செப்பேடுகள் மூலம் தலைமை நீதிபதி ஒருவர் இருந்தார் என அறிகிறோம். அரசவையில் புரோகிதர் மிக முக்கியமான உறுப்பினராக விளங்கினர். தென்னிந்தியாவிலும், வட இந்தியாவிலும் கிடைத்துள்ள சான்றுகள் மூலமாக அமாத்தியர் என அழைக்கப்பட்ட வருவாய்த் துறைப் பொறுப்பிலிருந்தவரைப் பற்றியும், கருவூலப் பொறுப்பிலிருந்த பண்டாரகர் என்பவரைப் பற்றியும் அறிகிறோம்.

காஷ்மீரிலும் இதேபோல அமைச்சர்கள் இருந்தனர். அமைச்சர்கள் பெயர் வேறுபட்டிருந்தாலும் வடக்கிலும் தெற்கிலும் எண்ணிக்கை ஒன்றாகவே இருந்தது. அமைச்சர்களுடைய கடமை அரசருக்கு நல்ல அறிவுரை வழங்குவது ஆகும். அரசர் தவறி ழைத்தால் அத் தவறுகளுக்கு அமைச்சர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

நிலமானியதாரர்கள்: நாட்டின் அரசியலில் அமைச்சர்களுக்கு அடுத்தபடியாய் பெரும் பங்கு ஆற்றியவர்கள் நிலமானியதாரர்கள் (feudatories) ஆவார்கள். நிலமானியதாரர்களிலிருந்தும் அரசரின் உறவினர்களிலிருந்தும் அமைச்சர்கள் அமர்த்தப்பட்டனர். போரில் தோற்ற அரசனை வென்ற அரசன் அரசனைப் போலவே நடத்தவேண்டும் என்பது அரசியல் ஒழுக்கமாகும். முதல் தரத்தவர், இரண்டாம் தரத்தவர், மூன்றாம் தரத்தவர் என மூன்று பிரிவினராக நிலமானியத்தவர் இருந்தனர்.

முதல் பிரிவினர் ஆளுனர்களாக அமர்த்தப்பட்டனர். இவர்கள் பெரும் அதிகாரங்களைச் செயல்படுத்திய போர்க்காலத்தில் மேல்நிலை அரசர்க்குப் படைகளை அளித்தனர்.

முதல் தரத்தவர்கள் சாமந்தசாகரசூடாமணி, மகாமண்டலேச்சுவரர் அல்லது மகாசாமந்தாதிபதி என்று பெயர் பெற்றனர்.

இரண்டாம்தர நிலமானியத்தவர்கள் குறைந்த அதிகாரத்தையும், தன்னுட்சியையும் பெற்றிருந்தனர். மேலாட்சி அரசரின் ஒப்புதலின்றி இவர்கள் ஒரு கிராமத்தைக்கூட மானியம் கொடுக்க முடியாது. இங்கிலை இந்தியா முழுமைக்கும் பொதுவான நிலையாகும். இராட்டிரகூட அரசரின் நிலமானியத்தவரில் ஒருவராகிய சங்கரக்கணவும், சோழ மன்னர்களின் நிலமானியதாரர்களாகிய வீரசோழரும், இரண்டாம் பிருதிவிபதியும் இத்தகைய ஒப்புதல் பெறவேண்டியிருந்தது.

இரண்டாம், மூன்றும் தரத்தவர்கள் மகாசாமந்தர் அல்லது சாமந்தர் என்று பெயர் பெற்றனர். மூன்றும் தரத்தவராகிய சாமந்தர்கள் பெரும்பாலும் அரசர்க்கும், இரண்டாம் தர நிலமானியதாரர்க்கும் அலுவலர்களாகப் பணியாற்றினர். நிலமானியத்தவர்கள் அரசர் அரியணை ஏறிட உதவிபுரிந்தனர். துருவர், முதலாம் அமோகவர்ஷர், மூன்றாம் அமோகவர்ஷர் ஆகிய இராட்டிரகூட அரசர்களும், அந்திவர்மன், சங்கரவர்மன் ஆகிய காஷ்மீர் அரசர்களும், வங்காளத்தின் இராமபாலரும் நிலமானியத்தலைவரின் உதவியினால்தான் அரியணை ஏறினர்கள்.

போரசின் பரப்பு: இப் போரரசுகளின் பரப்பை நாம் அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். இராட்டிரகூடப் போரரசு தென் குஜராத்திலும் மத்திய மாகாணத்தின் மராத்தி மொழி பேசும் மாவட்டங்களிலும் ஐதராபாத் முழுவதிலும், கர்நாடகத்திலும், மைசூரின் சில பகுதிகளிலும் பரவியிருந்தது. பாலப் போரரசு வங்காளம், பீஹார் முழுவதையும் கொண்டிருந்தது. மத்திய, மத்ரா, குரு, யது, யவன, அவந்தி, காந்தார அரசர்கள் மரியாதையோடு பாலரின் ஆட்சியை ஏற்றுக் கொண்டனர். கூர்ஜரப் பிரதிகாரர்களின் இரண்டு சிறந்த பிரதிநிதிகளாகிய போஜர், மகேந்திரபாலர் ஆகியவர்களின் அரசு வடக்கில் பஞ்சாப்பின் கர்னூல் மாவட்டத்திலிருந்து பீகார் வரையிலும், கத்தியவார் தீபகற்பத்திலிருந்து வடக்கு வங்காளம் வரையிலும் பரவி இருந்தது. காஷ்மீரம் சைனவுடனும் பூட்டானுடனும் இராஜதந்திரத் தொடர்புகொண்டு கன்னோஜையும் ஆக்ஸஸ் பள்ளத்தாக்கில் துருக்காரிஸ்தானையும், மேல்கிஷண் கங்கா பள்ளத்தாக்கில் தார்த்

தெஸாவையும் கைப்பற்றியதாகத் தெரிகிறது. ஷாகிகள் பஞ்சாப்பில் நிலைபெற்றிருந்தனர்.

வருவாய் அலுவலர்: மக்களைத் துன்புறுத்தாமல் ஆண்டிற்கு ஒரு லட்சத்திலிருந்து மூன்று லட்சம் கர்ஷம்வரை பெறும் முடியரசின் அரசா சாமந்தராவார். மூன்று லட்சத்திலிருந்து பத்து லட்சம் கர்ஷத்திற்கு அதிகரிக்கும் ஆண்டு வருமானமுடைய அரசின் மன்னர் மண்டலிகர் எனப் பெயர் பெற்றார். பத்து இலட்சம் முதல் இருபது லட்சம் வரை செல்லும் வருமானமுடையவர் காசராவர். இருபது இலட்சத்திலிருந்து ஒரு கோடிக்கும் அதிகமான வருமானம் உள்ளவர் மகாராஜா. ஒரு கோடியிலிருந்து பத்துகோடிக்கும் அதிகமான வருமானம் உடையவா சாம்ராட். பத்துகோடி முதல் ஐம்பது கோடிவரை விராட். இவருக்கு மேலானவர் சர்வபூமர். இந்த அரசர்களின் படிநிலை அமைப்போடு அரசின் அலுவலர்கள் பற்றிய மற்றொன்றும் இருக்கிறது. பத்து கிராமங்களின் ஆளுநர் நாயகர் எனவும் நூறு கிராமங்களின் ஆளுநர் சாமந்தர் எனவும், பத்தாயிரம் கிராமங்களின் ஆளுநர் சுவராத் எனவும் அழைக்கப்பட்டனர். கோ என்னும் சொல்லைக் கொண்ட பட்டங்களைப் பெற்றவர்கள் அரசரின் அலுவலர்களில் மிக உயர்ந்தவர்களாவர். அவர்கள் அரசரின் அலுவலர்களாக இருந்ததுடன் நிலமானியதாரர்களாகவும் இருந்தனர். சுக்கிர நீதியில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கும் அரசு அலுவலர்களின் படிநிலை அமைப்பு இது. கீழ்மட்ட அலுவலர் மகாநாயக் என்பவராவார். பத்து கிராமங்களுக்கு அமர்த்தப்பட்ட அரசு அலுவலர் நாயக் ஆவார். இவருக்குமேல் மகாசாமந்தரும், அவருக்கு மேல் மகாமண்டலிகரும் மகாமண்டலிகருக்கு மேல் மகாராஜாவும், மகாராஜாதிராஜனும் இருந்தனர்.

ஆட்சிப் பிரிவு : இனி ஆட்சிப் பிரிவுகளைப் பற்றிக் காண்போம். நாராயணபாலரின் கல்வெட்டிலிருந்து ஆட்சிப் பிரிவுகள் புக்தி, விஷயம், மண்டலம் என்று இறங்கு வரிசையில் இருந்ததாகத் தோன்றுகிறது. ஒரிசா நாட்டுக் கல்வெட்டு ஒன்றில் விஷயத்திற்குப் பதிலாக மண்டலம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இராட்டிரகூடப் பதிவுகளிலிருந்து இராட்டிரம், விஷயம், புக்தி என்று பிரிக்கப்பட்டு இருந்ததாக அறிகிறோம். சில சமயங்களில் இராட்டிரம் சிறியதாகவும் விஷயம் பெரிய பிரிவாகவும் செய்யப்பட்டிருந்தன. கூர்ஜரப் பிரதிகாரப் பேரரசு அமைப்பில் மண்டலத்தைக் காட்டிலும் புக்தி பெரிய ஆட்சிப் பிரிவாகத் தோன்றுகிறது. சோழப் பேரரசில் மண்டலம் என்பது மாநிலமாக

இருந்தது. இராட்டிரத்தின் ஆளுநர் இராட்டிரபதியாகவும், விஷயத்தின் ஆளுநர் விஷயபதியாகவும், புக்தியின் ஆளுநர் போகபதி அல்லது போககராகவும் இருந்தனர். கிராமத் தொகுதியின் ஆளுநர் யாரென்று உறுதிசெய்வது கடினமானதாகும். விஷயத்திற்கு அடுத்த பிரிவு கிராமம் என்று ஒரிசா நாட்டுக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. கிராமங்கள் பெருமளவு தம்மாட்சி பெற்றிருக்கையில், நகரங்கள் தனிப்பட்ட அலுவலர்களால் ஆளப்பட்டன. பெரும்பாலும் அரசின் உயர்பதவிகள் மரபுவழிப் பதவிகளாகிக் கொண்டிருந்தன.

அலுவலர்களின் நிலை வரிசைகள் : நிலமானியத்தவர்க்குள்ளிருந்து ஆளுநர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் நிலமானியத் தலைவர்களைக் கட்டுப்படுத்திச் செயலாட்சி செய்திருக்கலாம். இராட்டிரபதி, விஷயபதி, நகரபதி, கிராமபதி நியுப்தர், இராஜபுருஷர் என அலுவலர்களின் படிநிலை வரிசையைக் கி.பி. 1026ஆம் ஆண்டு பதிவு குறித்துள்ளது. இராட்டிர கூட ஆட்சியில் மகாமண்டலேசுவரர் அல்லது மகாசாமந்தாதிபதி என்னும் பட்டத்தை மாநில ஆளுநர்கள் பெற்றிருந்தனர். நிலமானியதாரர்களைத் தவிர அரசருடைய உறவினர்களும், யுவ இராஜாக்களும் பெரும்பாலும் மாநில ஆளுநர்கள் வருவாய் ஆட்சியின் தலைவர்களாக இருந்தனர், கிராமங்கள், நிலங்கள் ஆகியவற்றின் வருவாய் அறுதியிடு, தல நிறுவனங்களின் ஒத்துழைப்போடு நிறைவேற்றப்பட்டது. மாநில அரசாங்கம் ஹர்ஷர் அல்லது குப்தர் காலத்தில் எப்படி இருந்ததோ அப்படியேதானிருந்தது என்று சொல்லப்படுகிறது.

மாநில ஆட்சி : இந் நூற்றாண்டுகளில் முன்னிருந்ததைப் போல மாநில ஆட்சி, அதிகரணங்கள் என்று சொல்லப்பட்ட சில துறைகளைக் கொண்டிருந்தது. இவை ஒவ்வொன்றிலும் லேக்கர்கள், காரியஸ்தர்கள் அல்லது எழுத்தர்கள் அமர்த்தப் பட்டிருந்தனர். நாராயணபாலரின் பாலிப்பூர்ச் செப்பேடுகள் களங்களின் காவலர், எல்லைப் பாதுகாவலர், காவற்படையினர், மாநில ஆட்சியைச் சேர்ந்த படை அலுவலர்கள் போன்றோர்களைப் பற்றிக் குறித்துள்ளது. மாவட்டத் தலைவர்கள் விஷயபதிகள் என்று அழைக்கப்பட்டனர். மாவட்டங்கள் சில வேளைகளில் மிகப் பெரியனவாகவும், வேறு சில வேளைகளில் மிகச் சிறியனவாகவும் இருந்திருக்கின்றன. நாட்டுப்புறப் பகுதிக்கு மிக முக்கியமானவையாகவும் இணைந்திருக்கின்றன. நாட்டுப்புறப் பகுதிக்கு மிக முக்கியமான கடமைகளைச் செய்கின்ற அலுவலர்கள் காவல் துறை அலுவலர்களாகிய தெனாத சாதங்கர்களும், சௌரோ

தானிகர்களும், நீதித்துறையைச் சேர்ந்தவர்களாகிய தண்ட சக்திகளும், தண்ட நாயகர்களும், சுங்கவரி வசூலிப்பவராகிய சௌலகிகர்களும், காடுகளின் மேற்பார்வையாளர்களாகிய கௌல்மிகர்களும் ஆவார்கள். விஷயபதிகளும், போகர்களும், மரபுவழிவந்த வருவாய்த்துறை அதிகாரிகளின் உதவியோடு ஆட்சி செய்தனர்.

கிராமம் : பொது ஆட்சியில் மிகச்சிறந்த இனம் கிராமத்தின் ஆட்சியாக இருந்தது. இயல்பாக ஒவ்வொரு கிராமமும், ஒவ்வொரு கிராமத் தலைவரைப் பெற்றிருந்தது. கிராமத் தலைவருடைய பதவி பெரும்பாலும் மரபு வழிக்குரியதாக இருந்தது. கிராமத்தலைவர் மைய அரசாங்கத்தின் பணியாள் என்பதைவிடப் பெரிதும் மக்களின் பிரதிநிதியாகவே கருதப்பட்டார். கிராமம் மிகப் பழைய காலத்திலிருந்தே ஓரளவு தன்னுட்சி பெற்றிருந்தது. இது மரபாகி எல்லா அரசியல் அமைப்பிற்கும் உறுதிநிலைக்கும் அடித்தளமாக அமைந்தது. அரசின் நிதிப்பிரிவுகளில் ஒன்றுகவும் கிராமம் இருந்தது. அரசின் வருவாயோடு கிராமத் தலைவரை அடிக்கடி குறிப்பிடுவதால் இவர் அரசருக்குரிய வருவாய்களை திரட்டிச் செலுத்தும் பொறுப்பில் இருந்திருக்கலாமென்று கூறப்படுகிறது. கிராம அவைக் கூட்டத்தில் இவர் பெரும்பங்கு ஆற்றியதோடு, சிறிய குற்றவியல் வழக்குகளில் நடுவராகவும் பணியாற்றினர். சில கிராமங்களில் கிராமத் தலைவர்கள் பலர் இருந்தனர். கிராமப் பஞ்சாயத்தை உருவாக்கிய பெருமக்களாக இவர்கள் இருந்திருக்க வேண்டும் எனச் சின்ஹா கருதுகிறார்.

கிராம அவை : கிராமத்தின் மிக முக்கியமான நிறுவனம் கிராம அவையாகும். கிராம அவைக்குரிய வாக்காளர்கள், வேட்பாளர்களின் தகுதிபற்றி விதிகள் இருந்தன. குற்றம் இல்லாக் குண இயல்போடு இருத்தல் வேண்டும் என்பதோடு வேட்பாளர்கள் குறிப்பிட்ட சொத்துடைமை, கல்வித் தகுதிகளும் பெற்றிருத்தல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டனர். ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மூன்றாண்டிற்கு மறுபடியும் தேர்தலில் கலந்துகொள்ளக் கூடாது. ஆண்டுதோறும் தேர்தல் நடந்தது. அவையினர் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். கிராமத்தின் குளம், கோவில், சாலைகள், நன்செய், புன்செய் ஆகிய வற்றைத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வோர் உட்குழுவும் ஏற்றுக் கொண்டது. தமிழ்நாட்டில் இருந்த இதேபோன்ற நிறுவனங்கள் மற்றவற்றிலிருந்து மாறுபட்டவைகள் என்பதைத் தனியாகக் காணலாம். எப்படி, எப்பொழுது வரிவசூலிக்கவேண்டும் என்பது குறித்து விதிகள் இருந்தன. எல்லாக் கிராமங்களும் முழுமை

யான அதிகாரம் பெற்றிருந்தன. வரி செலுத்தத் தவறியவர் களின் நிலத்தை விற்கும் அதிகாரம் கிராம அவைகளிடம் இருந்தது. இராட்டிரகூட ஆட்சியில் இவ் வதிகாரங்கள் மைய அரசிடமே இருந்தன. பிரதிநிதிகளின் மூலம் இவைகள் செயல் படுத்தப்பட்டன. இருப்பினும் கிராம அவைகள் பொதுப் பணிகள், பள்ளிக்கூடங்கள், அறச்சாலைகள் ஆகியவற்றை ஏற்று நடத்தின. காஷ்மீரில் கிராமத்தின் அரசுப் பிரதிநிதி, கிராம காயஸ்தர் எனப் பெயர் பெற்றிருந்தார். பல கிராமங்களில் அரசரின் அலுவலர்கள் பொறுப்பேற்றிருந்தனர். பத்து கிராமங் களில் பொறுப்பேற்றிருந்த அலுவலர்கள் தசகிராமிகள் எனப் பட்டனர்

நாம் இதுவரையில் அறிந்துகொண்ட செய்திகள் எல்லாம் கல்வெட்டுக்களிலிருந்து அறிந்துகொண்டவையே. இக் கல் வெட்டுக்கள் மூலமாக நாம் அரசின் நீதி, சட்டம் ஆகியவைபற்றி ஏதும் அறிய இயலவில்லை. சுக்கிர நீதி என்னும் நூலின்மூலம் அவற்றை அறிகிறோம். சுக்கிர நீதியின் காலம் பற்றிக் கருத்து வேறுபாடு உள்ளது. சுக்கிரநீதி எட்டாம் நூற்றாண்டிற்கும், ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதாகவே பொதுவாகக் கருதப்படுகிறது.

வரிகள்: அரசர் அல்லது பேரரசின் அரசாங்கத் திட்டம் மிக விரிவானதாகவும், திறமையானதாகவும் இருந்திருக்க வேண்டும். அரசரின் முக்கியமான பணிகளில் ஒன்று வருவாய் திரட்டுதலாகும். அரசின் தலையாய அலுவலர்கள் புரோகிதர், பிரதிநிதி, பிரதானி, சச்சிவ மந்திரி, பண்டிதர், அமாத்திய, சுமந்தா, தூதர் ஆகியோர் ஆவர். இவர்களுடன் பூங்கா, கட்டிடங்கள், அரண்மனை ஆகியவற்றின் கண்காணிப்பாளர் களும் இருந்தனர். நிலவரித் தீர்வைகள், தண்டங்கள், காடு களிலிருந்து பெறப்படும் வருமானங்கள், சுரங்கங்கள், கேட்பாரற்ற சொத்திலிருந்து கிடைக்கும் வருமானங்கள் ஆகியவை வருவாய் மூலவாங்களில் அடங்கும்.

உள் ஆட்சி: இனி உள் ஆட்சி பற்றிக் காண்போம். ஒவ் வொரு கிராமத்திற்கும் ஆறு அலுவலர்கள் இருந்தனர். அவர்கள் காவல்துறை அலுவலர், கிராமத் தலைவர், வரிவசூலிப்பவர்கள், நிலவரி வசூலிப்பவர்கள், எழுத்தர், செய்தி கொண்டு செல் வோர்கள் என இருந்தனர். தலைமை நீதிபதியின் கீழ்ச் சட்டமும் நீதியும் இருந்தன. பகுத்தறிவு, நேர்க்காட்சி ஆய்வுத் தீர்வு, ஒப்பு நோக்கு, ஊர் வழக்கம் ஆகியவற்றினைப் பயன்படுத்தி

அரசருக்கு அறிவுரை வழங்குகின்ற பணியினை மேற்கொண்டனர். ஒரு நீதிபதியால் இயலாதவற்றைப் பல நீதிபதிகள் கூடிய அவை முடிவு செய்தது. சாட்சிகளை ஆய்தலும், ஆவணங்களும் ஒரு முடிவிற்கு வருவதற்கு இன்றியமையாத கூறுகளாகும். ஊர் வழக்கம் போதிய இடம் பெற்றது.

குற்றங்கள்: குற்றங்கள் மூன்று தலைப்பின், கீழ் பிரிக்கப் பட்டு இருக்கின்றன: அவை சிறு குற்றங்கள், அடாப் பழிகள் அரசுக்கெதிரான குற்றங்கள் ஆகும். சாத்திரத்தில் சொல்லப் பட்டிருப்பவைகளின் குறைகளை ஊர்ப் பழக்கங்கள் நிறைவு செய்கின்றன. சாட்சிகள் கவனமாக விசாரிக்கப்படுதல், வரக்கு முலங்கள், சரியானபடி பதிவு செய்யப்படுதல் ஆகியவை வலியுறுத்தப்பட்டன. கேள்வி கேட்டுப் பகுப்பாய்வு செய்திட அரசு வழக்குரைஞர்களைப் போன்றவர்கள் இருந்தனர். வழக்கு முழுவதும் விசாரிக்கப்பட்ட பின்னரே தீர்ப்பு அளிக்கப் பட்டது. கருத்து வேற்றுமை ஏற்பட்டபோது பெரும்பான்மை யோரின் தீர்ப்பே ஏற்றுக்கொள்ளப்பட்டது. உண்மையைப் பெற மூன்று முறைகள் பயன்படுத்தப்பட்டன. அதில் கடுஞ் சோதனை முறையும் ஒன்றாகும். வழக்குத் தொடுப்பவர் வழக்கு களைச் சாட்சியாலும், ஆவணத்தாலும், உடைமையாலும் மெய்ப் பிக்க வேண்டும். உரிமை இயல் வழக்குகளில் (சிவில்) பிரா மணங்கள், காரணங்கள், வழக்காறுகள், உறுதிமொழிகள் அரச ரின் தனிப்பட்ட ஆணைகள், வாதிகளின் ஏற்பு ஆகியவைகளின் படி முடிவுகள் செய்யப்பட்டன. தண்டனைகளை நால்வகையாகப் பிரித்தனர். திக்தண்டம் (ஒழுக்கமுறை மறுப்பு) வாக்குத் தண்டம் (வாக்குத் தண்டனை), அர்த்த தண்டம் (தண்டங்கள்) உடல் சார்ந்த தண்டனைகள் — இதனை அரசர் மட்டுமே விதிக்கலாம்.

சட்டம், நீதி: இதுவரையில் சட்டமும், தண்டனையும் தெய் வத்திற்கு உரிய இயலுலகு கடந்த குறிப்புகளிலிருந்து விடுதலை பெற்றிருக்கின்றன சட்டம், நீதி பற்றியவைகளில் அரசரின் அதிகாரம் இறுதியாகக் கருதப்பட்டது குறிப்பிடத்தக்க கருத்து ஆகும். உரிமை இயல், குற்ற இயல் என இரு பிரிவுகள் இதற்கு முன் இல்லை. தண்டனையில் படிநிலை வரிசை இக் காலத்தில் ஏற் பட்டுள்ளது என்பதையும் கவனிக்கவேண்டும். சட்டங்களை உருவாக்கியவராக அரசர் விளங்கினர். முரசறைந்து இச் சட் டங்களை அரசர் அறிவித்தார். எழுதப்பெற்ற அறிவிப்புகளாக அவற்றை வைத்தார். எனவே அரசரைச் சிறந்த வழிகாட்டி எனவும், காலத்தைப் படைத்தவர் எனவும் சுக்கிரநீதி கருது

கிறது. கோட்பாட்டளவிலாவது சட்டம் இதுவரை இருந்து வந்த சமயச் சார்பிலிருந்து விடுவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இறைமை: அரசு உயிருள்ள பொருளோடு ஒப்பு நோக்கப் பட்டு அதன் உறுப்புகளாக இறை, அமைச்சு, நட்பு, பொருள், நிலம், அரண்கள் படை ஆகியவை கருதப்பட்டன. சட்டத்தைப் பரப்புபவராகவும், சமயத்தைப் பாதுகாப்பவராகவும், நீதியின் தலைவராகவும், தலையாய வழிகாட்டியாகவும், காலத்தைப் படைப்பவராகவும் இருக்கும் இவருடைய அதிகாரத்தில் தன் அரசரின் இறைமை (Sovereignty) இருந்தது. மக்களுக்கு அமைதியை அளிக்கும் கருவியாகவும், செல்வத்தைப் பெறுவதற்கான கருவியாகவும் அரச அதிகாரத்தைக் கருதுவது ஒரு பழமையான குறிக்கோளேயாகும். இத்தகைய சூழ்நிலையில் முஸ்லீம்கள் இந்திய மண்ணில் காலடி வைத்தனர். சமய வெறியோடும், நன்கமைந்த ஒற்றுமையோடும் முஸ்லீம்கள் போரிட்டனர். மற்றொரு சாரார் (இந்தியர்கள்) குறுகிய தலைநோக்கோடு அமைதியற்றும் ஒற்றுமையற்றும் போரிட்டனர்.

இராசபுத்திரர்களின் ஆட்சி முறையினால் ஏற்பட்ட நன்மை தீமைகளை ஆராய்கின்றபோது, இவ் வாட்சி முறையின் விளைவாகத் தன்னாட்சி உணர்வுகள் தலைதூக்கப்பட்டு தனித்தனிச் சிற்றரசுகள் தோன்றின எனத் தெரிகிறது. இச் சிற்றரசுகளின் தோற்றம், படை எடுத்து வருகின்ற அந்நியருக்கு அவர்கள் மேற் கொண்ட படையெடுப்பில் வெற்றியைத் தேடித் தந்தது. ஒவ்வோர் அரசரும் தனித்தனியாக தங்கள் விருப்பம்போல் ஆட்சி நடத்தினர். அதன் விளைவு இந்தியா முழுமைக்கும் பொதுவான ஆட்சி அமைப்பு முறை உருவாக்கப்பட இடமில்லாமல் போனதே ஆகும். சிறிது சிறிது மாறுபட்ட ஆட்சிமுறைகளை நாம் இஸ்லாமியரின் படையெடுப்பின்போது காணுவதே. இக் காரணத்தினால்தான் இந்தியாவை ஒரே குடையின்கீழ்க் கொண்டுவர இயலாதுபோயிற்று.

இராசபுத்திரர்களின் பண்பாடு

சுமார் ஐந்து நூற்றாண்டுகள் இராசபுத்திரர்களின் ஆட்சி இந்தியாவில் நடைபெற்றது. அக் காலத்தில் பல்வேறுபட்ட மாறுதல்கள் இந்திய வரலாற்றில் மக்களின் சமூக பொருளாதார சமய வாழ்க்கையில் ஏற்பட்டன. குப்தர்களின், வர்த்தனர்களின் பண்பாட்டுச் சிறப்புகளோடு இராசபுத்திரர்கள் ஆட்சியைத் தொடங்கினர்.

சமுதாய நிலை: ஐந்து நூற்றாண்டுகள் இந்து சமுதாயம் பல மாறுதல்களுக்கு உள்ளானது. ஏழாம் நூற்றாண்டில் இருந்த சமுதாயச் சூழ்நிலை பன்னிரண்டாம் நூற்றாண்டில் மாறுபட்டு இருந்தது. இம் மாறுதல்களை மேதாதிவிஜ்ஞானேஸ்வரர் ஆகியோரின் உரைகளில் காணலாம். துருக்கியப் படையெடுப்பின் விளைவாகச் சமுதாயம் மிகவும் உறுதியானதாக மாறத் தலைப்பட்டது. அப் படையெடுப்புகளிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ள என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ அந்த நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு உறுதி பெற்றது.

இராசபுத்திரர்கள் பெண்மையைப் போற்றும் பெருமதியாளர்களாக விளங்கினர். சமுதாயத்தில் உயர்வான நிலையும், மதிப்பான நிலையும், இராசபுத்திரர்களின் காலத் துவக்கத்தில் இருந்தது. எண்ணிறந்த பெண்டிர் சமயத்துறை, இலக்கியத்துறை ஆகியவற்றில் போற்றத்தகுந்த புலமை பெற்றுத் திகழ்ந்தார்கள். பெண்டிர், கல்வி மேம்பாட்டில் சிறந்திருந்தார்கள் என்றால் அச் சமுதாயத்தின் சிறப்பிற்கு சான்று ஏதும் வேண்டியதில்லை. பெண்கள் கல்வியில் மட்டும் சிறப்புப்பெற்றுத் திகழவில்லை, கலைகளிலும் சிறந்து விளங்கினர். அதுவும் போர்க் கலையிலும் ஆடசிக் கலையிலும் ஆற்றல் பெற்றுத் திகழ்ந்தனர். காஷ்மீரைச் சார்ந்த சுகந்தா, டிட்டா ஆகிய இருவரும் பரந்த அரசுகளை ஆட்சி செலுத்தினர். உதய பாரதி என்ற பெண்மணி, மந்தன மிஸ்ரு என்று அழைக்கப்பட்ட அவள் கணவனுக்கும், சங்கர ஆச்சாரியாருக்கும் இடையே நடைபெற்ற விவாதங்களின்போது நடுவர் ஆகத் திகழ்ந்தார், என்றால் அவர்தம் புலமை எத்தன்மைத்தாய் இருக்கக்கூடும்! இராஜசேகரன் என்ற கவிஞனின் மனைவி அவந்திசுந்தரி கணவனைப்போலவே சிறப்புடன் திகழ்ந்தவர் ஆவார்.

இராசபுத்திரப் பெண்டிர் மானம் ஒன்றே பெரிதெனக் கொண்டு வாழ்ந்தவர்கள். உற்ற கணவனுக்கு உறுதுணையாகவும் பெற்ற பிள்ளைகளைப் பேணிக் காக்கும் அன்னையாகவும் பெருமைப்பட வாழ்ந்தனர். போர்ப்பயிற்சி பெற்றிருந்த அக்காலப் பெண்டிர் கணவனுடன் போர்க்களம் செல்லவும் ஆயத்தமாக இருந்தனர். உயிரினும் மேலானதாகச் சுயமரியாதையைக் கருதினர். மானம் அழிந்து மதிகெட்டு வாழ்வதைவிட மண்ணுலகை விட்டுத் தீயினுள் புகுந்து உயிரைப் போக்குதல் பெருமைக்குரிய செயல் என்று கருதினர். அடிக்கடி நடைபெற்ற இந்தத் தற்கொலை முயற்சிகளுக்கு 'ஜவ்கார்' என்று பெயர். அடிக்கடி இராசபுத்திர வரலாற்றில் நாம் காணும் இந்த ஜவ்கார், அவர்

களின் சுயமரியாதைக்கும், வீரத்திற்கும், தன்மானத்திற்கும் எடுத்துக்காட்டாகும்.

இருப்பினும் பெண்களின் பொதுவான நிலை மோசமான தாகவே இருந்தது. பெண்களின் திருமணத்திற்கு கட்டுப்பாடுகள் பல விதிக்கப்பட்டிருந்தன. 'பிரதிலோமா' திருமணங்கள் தடை செய்யப்பட்டிருந்தன. வரதட்சணை முறையும் மணப் பெண்ணை விலைகொடுத்து வாங்கும் வழக்கமும் காணப்பட்டன. விதவைகள் சமுதாயத்தின் கொடுமைக்கு ஆளானார்கள். எனவே சமுதாயத்தின் கொடுமைகளிலிருந்து தப்பித்திட உடன் கட்டை ஏறுதலையே வழியாகக் கொண்டனர். பர்தா முறை எனப்படும் முகத்தைத் துணியிட்டு மறைத்துவைக்கும் முறை பெண்களின் உரிமையைப் பறித்தது. இஸ்லாமியர்களின் படையெடுப்பு இம் முறை எங்கும் பரவிட வழிவகுத்தது. இஸ்லாமியர்களின் படை யெடுப்பின் விளைவால் பெண்களை வீட்டில் வைத்திருப்பதே சமை என்றுயிற்று பெண் பிறந்தாலே ஏதோ தீங்கு நேரிட்டு விட்டதைப் போல் எண்ணத் தலைப்பட்டனர். விஜ்ஞானேஸ்வரர் ஸ்ரீதனம் என்னும் முறையினைப் புகுத்தியதன் விளைவாக ஓர் அளவிற்குப் பெண்களுக்கு நிம்மதி கிட்டியது.

சமுதாயக் கொடுமைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல இக் காலச் சமுதாயத்தில் சாதி வேற்றுமை மிகவும் கடுமை யானதாகவும் குழப்பமானதாகவும் இருந்தது. அரசனுடைய தலையாய கடமை சாதிக் கட்டுக்கோப்பைக் கலையவிடாமல் பார்த்துக் கொள்வதாயிற்று. இக் காலத்திலும் பிராமணர்களின் நிலை உயர்வானதாகவே இருந்தது. பிராமணர்கள் சமயம் மன யியல் பண்பாட்டின் காவலர்களாக விளங்கினர். நம்மிடையே ஓர் ஐயம் எழலாம் இராசபுத்திரச் சமுதாயம் க்ஷத்திரியச்சமுதாயம் ஆயிற்றே. அச் சமுதாயத்தில் பிராமணர்கள் எப்படி சிறப் பானவர்களாகத் திகழமுடியும்? இக் கேள்விக்கு ஆர். ஸி மஜும்தார் மூலமாக விடை கிடைக்கிறது. இராசபுத்திரர்கள் க்ஷத்திரியர்களாக விளங்கிய போதிலும் மிகச் சமீபகாலத்தில் தோன்றிய அவர்கள் தங்களுக்குப் பின்னுலேயே எத்தகைய பாரம்பரியமோ, அந்தஸ்தோ கொண்டிருக்கவில்லை. எனவே சமுதாய அந்தஸ்து, சமுதாய உயர்நிலை பெறவேண்டிப் பிராமணர்களை மற்றவர்களைப் போல உயர்வான நிலையிலேயே கருதத் தலைப்பட்டனர். பிராமணர்கள் இராசபுத்திரர்களைத் தங்களுடைய நிலையைப் படன்டுத்த உதவியது போலவே பிற சமயத்தவரையும் தாழ்வாக எண்ணினர். சமுதாயத்தில் சாதிப் பிரிவினுள்ளே பல துணைச் சாதிகள் தோன்றின. இதன்

விளைவாக இராசபுத்திரர்களுக்குள்ளேயே ஏற்றத் தாழ்வுகள் காணப்பட்டன. இவ்வாறு ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டதின் விளைவாக சமுதாயத்தில் பிளவு நிலை காணப்பட்டது. தேசிய உணர்வு தோன்றிட வழி ஏற்படாமல் போயிற்று. மாற்றாரிடம் தன் இரத்தவுறவைக் காட்டிக் கொடுப்பதைக் கேவலமாய் எண்ணுவதை விட்டு ஏதோ பழிவாங்கிக் கொண்டதாக எண்ணத் தலைப்பட்டனர். பிற்காலத்தில் இராசபுத்திரர்களில் சிலர் இஸ்லாமியர்களோடு திருமண உறவு கொள்ள ஆரம்பித்தனர்.

இலக்கியம்: இலக்கியத் துறையில் இராசபுத்திரர்கள் ஆற்றிய பணி அரும்பணியே ஆகும். இராசபுத்திரர்களின் காலத்திலும் நாளந்தா உலகப் புகழ் பெற்றதாக விளங்கியதோடு அலலாமல், தூர கிழக்கு நாடுகளைச் சார்ந்த மாணவர்களின் ஆதரவு பெற்றுத் திகழ்ந்தது. விக்கிரம சீலம், உத்தண்டபுரி ஜகதலம் ஆகிய இடங்களிலே வங்காள அரசர்கள் பெரும்பொருள் செலவு செய்து கல்விக்காகப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தனர். போஜா எனப்பட்ட பரமார அரசன் தாரா எனப்பட்ட தன் தலைநகரில் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தினர். நாட்டில் சாத்திர பரிசத்துக்கள் என்னும் அமைப்புகள் இருந்த செய்தி மங்கா எனப்படும் காஷ்மீரத்துப் புலவனின் ஸ்ரீகண்ட சரிதம் என்னும் நூலின் வாயிலாக அறிகிறோம்.

மன்னர்கள் குடிகலம் பேணுவோராக விளங்கியதோடு அல்லாமல் புலவர்களையும் அறிஞர்களையும் ஆதரித்தனர். அது மட்டும் இன்றி அரசர்களே அருமையான நூல்கள் இயற்றும் ஆற்றல் பெற்ற அறிஞர்களாகத் திகழ்ந்தனர். காஷ்மீரத்து லோகாரா அரசர்கள், பரமார முஞ்சர்; அன்கில் வாட்டைச் சார்ந்த மகிபாலன், வங்காளத்தைச் சார்ந்த லட்சுமணசேனர், தாராவின் போஜன் போன்றோர் அத்தகைய அறிஞர்களாவர். லட்சுமணசேனன் அவையில் வடமொழி இலக்கியத்தின் ஐந்து இரத்தினங்கள் எனப்பட்ட ஐவர் அலங்கரித்தனர். புலவர்களின் இளவரசன் என்று போஜன் பாராட்டப்பட்டான். உரைநடையும், மணியும், முத்தும் போல் கலந்து எழுதிய அம்மன்னனின் இராமாயணம் பாராட்டுக்குரியதாகும். பல காவியங்களுக்கு உரைநடை இம் மன்னனால் எழுதப்பட்டது. சரஸ்வதி காந்தாபரணம், சிருங்காரப் பிரகாசம், யுத்திகல்பதரு, சமரங்க நயூத்திர தாரு, தந்துவ பிரகாசா, இராஜமார்த்தாண்டா, ஆகியவற்றிற்கு உரை எழுதினர். இவை கவிதை

அரசியல், கட்டிடக்கலை. சிவதத்துவம், யோக சூத்திரம் போன்றவை பற்றிய நூல்களாகும்.

இத்தகைய பெருமைகள் வாய்ந்த பல்வேறுபட்ட அரசர்களின் ஆதரவினால் ஏராளமான இலக்கியச் செல்வம் இக் காலத்தில் குவிந்தது என்றால் அது மிகையாகாது சிசுபாலவதம், நைஷத சரிதம் ஆகியவை இக் காலச் சிறப்புமிக்கக் காவியங்களாகும். கிருஷ்ண கருணாமிருதம், பிருதிவிராஜ விஜயம் ஆகியவை சிறந்த இலக்கிய நூல்கள் ஆகும். கீதகோவிந்தம் என்னும் நூலை ஜெயதேவர் வெளியிட்டார் இது கண்ணன் மீது இராதை கொண்ட காதலைப் பற்றிக் கூறுவதாகும், சோமதேவ சூரி என்பவர் யஸஸ் திலகம் என்னும் நூலை இயற்றினார். இவர் சமணர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாடகம் என்னும் இலக்கியம் சிறப்புப் பெற்றது இக் காலத்திலேதான் என்றுகூட கூறலாம். பாவபூதி என்ற நாடக நூல் ஆசிரியர் காளிதாசருக்கும் அடுத்தபடியாக வைத்து நாணுகின்றனர். மாலதிமாதவம், மகாவீரசரிதம் உத்தரராமசரிதம் ஆகியவை இவரால் எழுதப்பட்டவையே. முத்ராராக்ஷம் எழுதிய விசாகதத்தரைக்கூட இவருக்கு அடுத்தடியாகச் சிலர் கருதுகின்றனர் கிருஷ்ணமிஸ்ரர் எழுதிய 'பிரபோதச் சந்திரோதயம்' என்னும் நூல் வைணவ சமயத்தின் அத்வைத கொள்கைகளை விளக்கும் நூலாகும். மகிபாலன் என்னும் அரசனின் அவையில் இருந்த மற்றொரு நாடக ஆசிரியர் இராஜசேகரன்.

இலக்கணம், கவிதை, கவிதை விமர்சனம் ஆகிய இலக்கியச் சிந்தனைகள் ஏற்றம் பெற்று இருந்தன. ஆனந்தவர்த்தனரின் தாவன்னிய லோகம் என்னும் நூலுக்கு அபிநவகுப்தர் இலகிய விமர்சனம் எழுதினார். கேமச்சந்திரர் எனப்பட்ட சமணக் கவிஞர் வடமொழி பிராகிருத மொழி ஆகியவற்றின் கட்டுதிட்டங்களை விளக்கி குமார பாலசரிதம் என்னும் நூலை விளக்கி எழுதினார். அவருடைய அபிதான சிந்தாமணி குறிப்பிடத்தகுந்தது. 'மம்மடர்' என்பாரின் 'காவிப்ப பிரகாசமும்' இக் காலத்தைச் சார்ந்ததே. இவ் விலக்கியப் படைப்புகள் பொழுது போக்கு இலக்கியங்களாக மட்டும் திகழ்ந்தன என்று கூறினால் தவறு செய்தவர்களாகுவோம்.

வரலாற்றிற்குத் துணைபுரிகின்ற இலக்கியப் படைப்புகள் பல இக் காலத்தே உருவாயின வரலாற்று இலக்கியங்களில் முதலாவதாகக் குறிப்பிடத்தகுந்தது காஷ்மீரத்து ஹேமசந்திரரின் நிருபாவழி என்பதாகும். பரமார சிந்து இராஜன் என்ற

அரசனைப்பற்றி அறிந்து கொள்ளப் பத்மகுப்தரின் நவசாங்க சரிதம் என்னும் நூல் உதவுகின்றது. பில்கணர் என்பவர் இக் கால வரலாற்றுக் கவிஞர் ஆவார். அவருடைய கர்ண சுந்தரி, விக்ரமங்கைச் சரிதம் இக் காலத்து நூற்களாகும். வடமொழி இலக்கியத்தின் உண்மைச் சிறப்புமிக்க வரலாற்று அறிஞன் எனப்பட்ட இராஜ தரங்கிணி என்ற நூலின் ஆசிரியன் கல்கணன் வாழ்ந்ததும் இக் காலமே.

இராசபுத்திரர்களின் காலத்தில் அறிவியல் மிகவும் விரும்பிக் கற்கப்பட்டதோடு அறிவியல் இலக்கியங்களும் தோன்றின வராக மிகிரரின் படைப்புகளுக்குப் 'பட்டோற்பலர்' உரை எழுதினார். இந்தியர்கள் கணிதம், வானநூல் ஆகியவற்றில் பெற்றிருந்த உயர் வெற்றியை எடுத்துக்காட்டுவது பாஸ்கராச்சாரியார் என்பவரின் சித்தாந்த சிரோமணி ஆகும். குதிரை வளர்த்தல், மருத்துவம், கட்டடக்கலை ஆகியவை பற்றிய குறிப்புக்களைப் போஜர் எழுதிவைத்துள்ளார். சக்கரபாணி தத்தர் என்பவர் சரகர், சுஸ்ருதர் ஆகியோரின் சமிதைகளுக்கு விளக்கம் எழுதியதோடு 'சிகிட்ச சரசங்கிரக' என்னும் நூலையும் எழுதினார்.

சமணர்களிடையே பிராகிருதமொழி பிரபலமடைந்து இருந்தது. பிராகிருத மொழியில் தேர்ந்தவர் என்று கருதப்படும் அரிபத்திரர் 1444 நூல்களை எழுதியதாகக் கூறப்படுகிறது தனபாலர் பத்மா கீர்த்தி, புஷ்பதந்தர் ஆகியோர் இக் கால பிராகிருத மொழிப் புலவர்கள் ஆவார்கள்.

இக்கால இலக்கியப் படைப்புக்கள் இக் காலத்துத் தோன்றி இருந்தபோதிலும் குப்தர்களின் இலக்கியப் பொற்காலத்தோடு இதனை ஒப்பிட்டுப் பேசுதல் தவறு என்று அறிஞர்கள் கருதுகின்றனர். வடமொழி நாடக இலக்கியத்தின் தரம் குறைந்ததும் இலக்கியமாகவேப் பாவிக்கப்பட்டதும் நடிப்பதற்குப் பயன்படாமல் போனதும் இவ் விலக்கியங்களின் தரக்குறைவிற்குக் காரணம் என்பர். இக் காலம் மொழிவளர்ச்சிக்குத் துணைபுரிந்தது என்று கூறலாம். இந்தி மொழியில் சாந்து என்பவர் எழுதிய பிரிதிவி ராஜ் ரசோ என்னும் நூலே குறிப்பிடத்தகுந்தது என்பர்.

சமயநிலை: இராசபுத்திரர்கள் இந்து சமயத்தைத் தீவிரமாகப் பின்பற்றியதோடு அதற்குப் புதிய எழுச்சி ஊட்டினர். சமய இயக்கங்களின் தலைவராக விளங்கிய குமாரிலபட்டரும், சங்கராச்சாரியாரும் குறிப்பிடத்தகுந்தவர் ஆவார். குமாரிலர்,

சங்கரர் ஆகிய இருவருமே தென்னிந்தியாவைச் சார்ந்தவர்கள், இமயம் முதல் குமரி வரை பயணம் செய்து பக்தி என்னும் விதையை ஊன்றினர். சங்கரர் சிருங்கேரி, காஞ்சி, துவாரகா, பத்ரி ஆகிய இடங்களில் ஐந்து மடங்களை நிறுவினர் என்பது நாம் அறிந்ததே. இராமானுஜரும், நிம்பாரகரும் இக் காலத் தவர்களே.

இவ் வறிஞர்கள் ஏற்றிவைத்த பக்திச் சுடர் எங்கும் பரவித் தழைத்து மக்களை ஞான வெள்ளத்தில், சமய நெறியில் மூழ்கச் செய்தது. புராணங்கள் சமய நூல்களாகத் திகழத் தலைப் பட்டன. புராணங்கள் மக்களை விரதங்களை மேற்கொள்ளவும், புனிதத் தலங்களுக்கு யாத்திரை செல்லவும் வழி காட்டின. இராச புத்திரர்கள் சைவர்களாக விளங்கியபோதிலும் திருமால், ஆதித்தன், கணபதி ஆகிய கடவுளர்களை வழிபட்டனர். ஏராள மான ஆலயங்களைக் கட்டிவைத்தனர். மடங்கள் பல தோன்றி இறை அறிவை மக்களுக்கு ஊட்டின. புராண மறுமலர்ச்சி தர்ம சாஸ்திரங்களுக்குப் புனிதத் தன்மையை ஊட்டின. இத்தகைய நிலையில் இந்து சமயத்தை ஆக்கியமையாலேயேதான் பிற்காலத் தில் ஏற்பட்ட இஸ்லாமியத் தாக்குதல்களைச் சமாளிக்கமுடிந்தது. இந்து சமயப் புத்துயிர்ப்பு பௌத்த சமய அழிவிற்கு வழிவகுத்தது. ஆயினும் வங்காளத்தைச் சார்ந்த பால அரசர்கள் பௌத்த சமயத்தை ஆதரித்து மீகார் மாநிலத்தை மீண்டும் பௌத்த சமயம் உயிர்பெற்ற இடமாக ஆக்கினர். கி. பி. 1065இல் க்ஷேமேந்திரர் தம்முடைய 'தசாவதார சரிதம்' என்னும் நூலில் திருமாலின் அவதாரமாகப் புத்தரைக் குறிப்பிட்டார். சோலங்கிகள் சமண சமயத்தை ஆதரித்தனர்.

கட்டிடக்கலையும், சிற்பமும்: கலிஞ்சார், அஜ்மீர், குவாலி யர், சித்தூர் ஆகிய இடங்களில் ஏராளமான பெரிய கோட்டை களை உருவாக்கினர். ஆனால் அவைகள் அழிக்கப்பட்டுவிட்டன. ஆயினும் இராசபுத்திரர்கள் கட்டிவைத்த கோவில்கள் அவர் களின் கட்டிடக்கலையின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன. அந்நியப் படையெடுப்பாளர்களான இஸ்லாமியர் இராஜஸ்தானி லும், மத்திய இந்தியாவிலும் கோவில்களைச் சிதைத்தனர். டில்லியில் உள்ள குதுப் மசூதி 23 கோவில்களை இடித்து எடுக்கப் பட்ட பொருட்களால் கட்டப்பட்டது.

வட இந்தியக் கோவில் கோபுரங்களுக்கும், தென்னிந்தியத் திராவிட கோவில் கோபுரங்களுக்கும் வேறுபாடு உண்டு. தென் னிந்தியக் கோபுரங்கள் அடுக்கடுக்காக கட்டப்பட்டவை. உச்சிப்

பகுதி கூர்மையாக இராது. ஆனால் வட இந்தியக் கோபுரங்களின் முனை கூர்மையாக இருக்கும். புவனேஸ்வரத்திலுள்ள லிங்கராஜ ஆலயம் வட இந்தியக் கலையும், தென்னிந்தியக் கலையும் இணைந்த ஒன்றாகும். இராஜராணி, முக்தேஸ்வரர், லிங்கராஜர் ஜகந்நாதர் ஆலயங்கள் 'ஒகராப்பாணி' எனக் கூறப்படும் வட இந்தியக் கலைக்கு எடுத்துக் காட்டு. ஒரிஸாவின் சிற்பக்கலைக்கு எடுத்துக் காட்டு 'கோனார்க்' என்பதாகும். மற்றொரு பாணி கஜுராகோ பாணியாகும். குஜராத்திகளின் பாணிக்கு எடுத்துக் காட்டு வஸ்துபாலன், தேஜபாலன் ஆகியஇரு சகோதரர்களாலும் கட்டப்பட்ட வெள்ளைச் சலவைக் கல் சமண ஆலயம் ஆகும்.

இராசபுத்திரர்கள் சிறந்த வீரர்கள். ஆனால் அவர்கள் அரசியல் ஒற்றுமை உணர்வுகொண்டு செயல்படவில்லை. உண்மையில் இராஜபுத்திரர்கள் ஒற்றுமை உணர்வோடு செயல்பட்டு இருப்பார்களேயானால் இந்திய வரலாறே மாறி இருக்கக்கூடும். இலக்கியச் சிறப்பாலும் பண்பாட்டுச் சிறப்பாலும் உயர்வாக மதிக்கப்பட வேண்டிய இராசபுத்திரர்களின் காலம் அரசியல் ஒற்றுமையின்மையால், தாழ்வான நிலையை அடைந்தது. ஐந்து நூற்றாண்டுகளில் வட இந்தியா முழுவதும் ஓர் இராசபுத்திர மன்னனின் குடைக்கீழ்க் கொண்டுவரப்படவில்லைஎன்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு இராசபுத்திர வீரனும் போராடி அழிந்தான். குறுகிய மனப்பான்மைகொண்டு வாழ்ந்தனர். அரசியல் சிதைவு, சமுதாயச் சிதைவிற்கு வழிகாட்டியது. அரசியல் சிதைவும், சமுதாயச் சிதைவும் இரண்டுமாகச் சேர்ந்து படையெடுப்பாளர்களுக்கு வாசல் கதவை அகலமாகத் திறந்து வைத்தது என்றால் அது மிகையன்று.

7. சிந்துவில் அராபியர்கள்

1. அராபியர்களின் படையெடுப்பிற்குமுன் இந்தியாவின் நிலை : சுயேச்சை அரசுகள் — அரசு முறை — சமய நிலை — சமூகநிலை.
2. அராபி யர்களின் படையெடுப்புகள் :
   உபயதுல்லா — முகமது பின் காஸிம் — தேபால் — நிரூன்—சீவன்— தாஹிர் — ஜெய்சிங் — அரோர் — முல்தானம் — காஸிமின் முடிவு — ஜஸியா — விளைவுகள் — நிலைபெருமையின் காரணங்கள்.
3. அராபியர்களின் ஆட்சிமுறையமைப்பு :
   இந்தியரின் பங்கு — நகரங்களும் அரண்களும் — வருவாய் — ஜாஹீர் முறை — நீதிமுறை — ஆளுநர்கள் — சாதனைகள்.

சுயேச்சை அரசுகள்: அராபியர்கள் சிந்துவைக் கைப்பற்ற மூயன்றபோது இந்தியாவின் அரசியல், சமூக, சட்ட. நிலை எவ் வாறு இருந்தது என்பதனைப் பற்றி அறிந்து கொள்ளுதல் சிறப் புடையதாகும். இந்தியா முழுமைக்கும் தன்னுடைய குடையின் கீழ்க் கொண்டு பேரரசர் என்று சொல்லிக்கொள்ளத்தக்க அளவில் ஆட்சி செலுத்தத் தக்க வல்லமை பெற்ற அரசுகள் யாதும் இல்லை. துண்டு துண்டாகத் தனித்தனி சிற்றரசுகளாக இந்தியப் பகுதிகள் சுயேச்சை அரசர்களால் சுயேச்சையாக ஆளப்பட்டன.

பிராமண வம்சம் : ஆப்கானிஸ்தானம் சந்திரகுப்த மௌரி யரின் காலம் முதல் இந்தியாவைச் சேர்ந்த பகுதியாகவே விளங் கியது. யுவாங் சுவாங் என்னும் சீனப் பயணி இப் பகுதி க்ஷத் திரிய வம்சத்தினரால் ஆளப்பட்டு வந்தது என்று குறிப்பிட் டுள்ளார். கி. பி. 9ஆம் நூற்றாண்டுவரை இதே நிலை நீடித்தது. இதன் பின்னர் க்ஷத்திரிய வம்சத்தில் இருந்து பிராமண வம்சத் திற்கு ஆட்சி மாறியது. இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர்கள் பிராமண வம்சத்தினை இந்து சாஹி வம்சம் அல்லது **காபூல் அரசு** என்று குறிப்பிட்டுள்ளனர். அராபியர்களின் வருகைபின்போது ஆட்சி செலுத்திய அரசன் யார் என்பது தெரியவில்லை.

காஷ்மீர்: காஷ்மீரம் ஹர்ஷரின் பேரரசில் இணையாத பகுதியாகவே விளங்கிற்று. காஷ்மீரத்தில் ஏழாம் நூற்றாண்டில் வலிமை மிக்க அரசை உருவாக்கியவர் **துர்லாப வர்த்தனன்** என்னும் அரசனுவான். இவ் வரசனின் ஆட்சிக்காலத்தில் யுவாங் சுவாங் காஷ்மீரத்திற்கு வருகை புரிந்ததாகக் கூறப்படுகிறது. இவருக்குப் பின் பிரதாப சூதித்தியன் என்பவர் ஆட்சிக்கு வந்து பிரதாபபுரி என்னும் நகரினை உருவாக்கினர். இல்லி தாத்தியர் என்பவரின் காலத்தில் காஷ்மீரம் வலிமை மிக்க நாடாயிற்று. யசோவர்மன் என்னும் கன்னேசி அரசன் இவரால் தோற்கடிக்கப் பட்டான்.

நேப்பாளம்: கி. பி. ஏழாம் நூற்றாண்டில் நேப்பாளம் திபெத்திற்கும் கன்னேசிக்கும் இடையில் இடுக்கிடை நாடாக (Buffer State) விளங்கிற்று. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நேப்பாளம் திபெத்தைச் சார்ந்தே இருந்தது.

அஸ்ஸாம்: ஹர்ஷரின் காலத்தில் அஸ்ஸாமை ஆண்டு வந்தவர் பாஸ்கரவர்மன் என்பவர் ஆவார். ஹர்ஷரின் மறைவிற்குப் பின்னுல் நேப்பாளம் விடுதலை பெற்று சுயேச்சை நாடாயிற்று. பாஸ்கரவர்மன் சிலஸ்தம்பன் எனப்படும் காட்டுக் குடியினரின் தலைவனுல் தோற்கடிக்கப்பட அஸ்ஸாம் சிலஸ்தம்பனின் மரபினரால் ஆளப்பட்டு வந்தது.

கன்னேசி: கன்னேசி அர்ச்சுனர் என்பவரால் கைப்பற்றப் பட்டது. இவர் சீனர்களோடு போரிட்டார். சீனர்கள் அர்ச்சுனரைத் தோற்கடித்துச் சீன தேசத்திற்குக் கைதியாகக் கொண்டு சென்றனர். பின்னர் கன்னேசியை யார் ஆள்வது என்பது குறித்த போராட்டம் ஒன்று எழுந்தது. சிலகாலம் பிரதிகாரர் களும், சில காலம் பாலர்களும் ஆட்சி செலுத்தினர். எட்டாம் நூற்றாண்டில் கன்னேசி யசோவர்மனுல் ஆளப்பட்டது. தனது திறமை மிக்க ஆட்சியால் கன்னேசியின் பழம் பெருமையை நிலை நாட்டினர்.

சிந்து: சிந்துவை சூத்திர அரசர் ஆண்டு வந்ததாக யுவாங் சுவாங் குறிப்பிட்டுள்ளார். ஹர்ஷரால் சிந்து கைப்பற்றப் பட்டது. ஹர்ஷரின் மறைவிற்குப் பின்னர் சிந்துவும் சுயேச்சை நாடாயிற்று. சிந்துவில் அராபியர்கள் காலடி வைத்தபோது அதனை ஆட்சி செலுத்திய அரசன் தகீர் ஆவார்.

வங்கம்: ஹர்ஷரின் காலத்தில் வங்கத்தை ஆண்ட மன்னர் சாசங்கர் ஆவார். அவர் மறைவிற்குப் பின்னர் அங்கு குழப்பம்

நிலவியது. கி. பி. 750இல் கோபாலன் என்பவரை மக்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். எனவே 12ஆம் நூற்றாண்டுவரை கோபாலனின் சந்ததியார் ஆட்சி செலுத்தினர்.

இராசபுதனம்: மத்திய ராசபுதனத்தில் பிரிதிகாரர்கள் ஆட்சி செலுத்தினர். தந்தி துர்க்கன் என்னும் இராட்டிரகூட அரசன் கூர்ஜரத்தினை அடிமைப் படுத்தியதாகக் கூறப் படுகிறது.

விசயாதித்தன்: ஹர்ஷரின் காலத்தில் சாளுக்கிய மரபின் ஆட்சியாளராக விளங்கிய வர் இரண்டாம் புலிகேசியாவார். அவருக்குப் பின்னர் சாளுக்கிய மரபினர் வலுவிழந்து போயினர். அராபியர்களின் வருகையின் போது ஆட்சி செலுத்திய சாளுக்கிய மன்னன் விசயாதித்தன் என்பவராவார்.

தந்திதுர்க்கன்: அராபியர்களின் வருகையின்போது ஆட்சி செலுத்திய இராட்டிரகூட மன்னன் தந்திதுர்க்கன் என்பவராவார் என்று கண்டோம். இரண்டாம் நரசிம்ம வர்மன் பல்லவ அரசர் களிலே சிந்துவை அராபியர்கள் கைப்பற்றியபோது ஆண்ட அரசராவார்.

ஒற்றுமையின்மை: இதுவரை நாம் பார்த்த குறிப்புகளில் இருந்து இந்திய அரசர்களிடையே ஒற்றுமை ஏதும் காணப்பட வில்லை என்பதோடு மக்கள் தேசிய மனப்பான்மையின்றி வாழ்ந்தனர் என்பதையும் காண்கிறோம். தேசிய உணர்வு ஏதும் இல்லாதபோது ஆளப்படுகின்ற மக்கள் ஆளுகின்றவர் யாராக இருந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் வாழ்க்கை நெறியினை மேற்கொண்டனர். இத்தகைய போக்கு அங்கியரின் வருகைக்கு வழிவகுத்தது.

மரபுவழிச் சட்டம்: இனி இந்தியாவின் பொதுவான ஆட்சி முறை எவ்வாறு இருந்தது என்று காண்போம். முடியாட்சி முறையே பொதுவான ஆட்சி முறையாக இருந்தது. மரபுவழிச் சட்டம் பின்பற்றப்பட்டு வந்தது. சிற்சில சமயங்களில் முடி மன்னர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

வல்லமை: அரசர்கள் எல்லா வல்லமையும் பெற்றவர்களாக விளங்கினர். ஆட்சித் துறையின் தலைவராக அரசரே விளங் கினர். அரசர்கள் தெய்வீக உரிமைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டனர். படைத்தலைவராகவும், நீதியின் ஊற்றாகவும் அரசர் விளங்கினர்.

அமைச்சர்கள்: அரசர் ஒருவர் மட்டும் தனியாக ஆட்சி செலுத்த இயலாது. எனவே அவருக்கு உதவ அமைச்சர்கள் பலர் இருந்தனர். அவர்களின் எண்ணிக்கை தேவையைப் பொருத்தும் சூழ்நிலையைப் பொருத்தும் மாறுபட்டது. மந்திரிகள், சச்சிவர்கள் என்ற இருவகைப்பட்ட அமைச்சர்களோடு சந்தி விக்ரிதிகா, சுயந்த், மகாதண்ட நாயகா, மகாபாலாத்கிருத, சுமாத்யாயா, அக்ஷபட்டாரிக் கிருத என அழைக்கப்பட்ட அமைச்சர்களும் இருந்தனர்.

புரோகிதர்: இவ் வமைச்சர்களோடு புரோகிதர் அல்லது அரச குழுவும் சமயத் துறைத் தலைவராகப் பணியாற்றினர். அமைச்சர்களின் தகுதிகளை அரசர்கள் அவர்கள் மீது வைத் திருந்த நம்பிக்கையையும் திறமையையும் பொருத்திருந்தது. சில நேரங்களில் அமைச்சர் பதவி மரபு வழியாயிற்று.

மாநிலங்கள்: ஒவ்வொரு அரசும் பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தன. வடநாட்டில் இருந்த மாநிலங்கள் புக்தி எனவும், தென் நாட்டில் இருந்த மாநிலங்கள் மண்டலங்கள் எனவும் அழைக்கப்பட்டன. இவை தவிர இராட்டிரம், தேசம் போன்ற பொற்களும் மாநிலங்களைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டன.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் உபாரிகர் என்னும் அதிகாரி தலைமை அலுவலராய் இருந்தார். மாநிலங்கள் விஷயங்கள் எனப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு விஷயமும் விஷயபதி என் பவரின் கீழ் இருந்தது. விஷயங்கள் பல கிராமங்களைக்கொண்ட அமைப்புக்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தன. ஆட்சித்துறையின் அடிப்படைப் பிரிவு கிராமமேயாகும்.

கிராமம்: ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கிராமத் தலைவரும் வயதில் மூத்தோர் அடங்கிய கிராம சபையும் இருந்தன. கிராம சபை பஞ்சாயத்து என அழைக்கப்பட்டது. ஒவ்வொரு பஞ்சாயத்தும் பல கிளைகளாகப் பிரிக்கப்பட்டு கிராமத்தின் பணிகள் நிறைவேற்றப்பட்டன. கிராமத் தலைவர் அதிகாரி அல்லது அதிகாரின் என்று அழைக்கப்பட்டார். நகரங்களுக்குத் தலைவராக விளங்கியவர் நகரபதி ஆவார்.

வரி: வரிகளில் நிலவரி, சுங்கவரி, நீர்ப்பாசனவரி, சாலைவரி, படகுத்துறை வரி ஆகியவை முக்கிய வரிகளாக விளங்கின. அரசின் பங்கு விளை பொருளில் 1/16 பங்கு ஆயிற்று.

சமயநிலை: புத்த சமயம் அராபியர்களின் வருகையின் போது அழிவுக் கட்டத்தில் இருந்தது. ஆயினும் பீகார், வங்காளம் ஆகிய பகுதிகளில் பின்பற்றப்பட்டது. விக்கிரமசீலா புத்த கலைக் கழகம் தர்மபாலர் என்பவரால் உருவாக்கப்பட்டது. சமணசமயம் தென் இந்தியாவில் சில அரசர்களால பாதுகாக்கப் பட்டது. இராட்டிர கூடர்களுடைய ஆட்சி பகுதிகளிலும், சாளுக்கியர்கள், சங்கர்கர் ஹொய்சானர்கள் ஆகியோர் பகுதி களிலும் சைவமும் வைணவமும் தழைத்தோங்கும் காலம்வரை சமணம் நிலைபெற்றிருந்தது. சமய ஆச்சாரியார்களான சங்கரர், இராமானுசர், மத்துவர் போன்றவர்கள் இந்துச் சமூகத்தின் போக்கில் மாறுதல்களைத் தோற்றுவித்தனர். பெரும்பாலான அரசர்கள் இந்துக்களாயிருந்த போதிலும் அவர்கள் சமயப் பொறை உணர்வுடன் செயல்பட்டனர்.

சமூகநிலை: இக் காலத்தில் சாதிக் கட்டுப்பாடுகள் நிலவின. கலப்பு மண முறைக்குத் தடை ஏற்பட்டிருந்தது. பிராமணர்கள் போர்த்தொழிலையும், கூத்திரியர்கள் வணிகர்களாகவும் விளங் கியதற்கான சான்றுகள் உள்ளன. பெரும்பான்மையான மக்கள் சைவ உணவுக்காரர்களாக விளங்கியதோடு வெங்காயம், பூண்டு ஆகியவைகளை உண்பதை வெறுத்தனர். தீண்டாமை நாட்டில் நிலவியது. இருதார மணங்கள் சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. எனினும் விதவை மணம் வெறுக்கப்பட்டது. 'சதி' என்னும் உடன்கட்டை ஏறும் பழக்கமும் சமுதாயத்தில் இருந்தது. பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும், கல்விப் பணியாற்றின. மக்கள் மூடப் பழக்க வழக்கங்களில் நம்பிக்கை கொண்டு வாழ்ந்தனர்.

இத்தகைய சூழ்நிலையில் தான் அராபியர்களின் சிந்துப் படையெடுப்பு நடைபெற்றது. இப் படை எடுப்பினால் இந்திய வரலாற்றின் போக்கில் ஏதும் மாறுதல் தோன்றியதா என்ப தனைப் பின்னர் ஆராய்வோம்.

2. அராபியர்களின் படையெடுப்பு

அராபியர்கள்: கி.பி. 712ஆம் ஆண்டில் சிந்து அராபியர் களால் இறுதியில் வெற்றி கொள்ளப்பட்டது. இதுவே அராபியர்களின் முதற்படை எடுப்பா என்றால் இல்லை என்றே கூற வேண்டும். இதற்கு முன்னரும் சில படையெடுப்புக்கள் நிகழ்ந்துள்ளன; ஓமார் என்னும் கலீபாவின் காலத்தில் அராபி யர்கள் கடற்படை ஒன்றுடன் வந்து டம்பாய்க்கு அருகிலுள்ள

தானு என்னுமிடத்தைக் கைப்பற்ற முயன்று தோல்வி கண்டார்கள்.

இரண்டாவது படையெடுப்பு: கி.பி. 644 ஆம் ஆண்டில் அப்துல்லாபின் அமார் என்பவரின் தலைமையின் கீழ் மற்றொரு படையெடுப்பு நிகழ்ந்தது. மக்ரான், சிந்து ஆகிய பகுதிகள் கைப்பற்றப்பட்டன, ஆனால் அவற்றை நிலையாக வைத்திட இயலவில்லை. எனவே கைப்பற்றிய பகுதிகளை இழந்தனர். கி.பி. 664ல் மற்றொரு முயற்சி மேற்கொள்ளப் பட்டது. இம் முயற்சியின் விளைவால் மக்ரான் அல்லது பலுசிஸ் தானத்தைக் கைப்பற்றினர். இவ் வெற்றி மற்ற படை எடுப்பு களுக்கு வழி கோலியது.

காரணங்கள்: அராபியர்கள் சிந்துவைக் கைப்பற்ற முயற் சிகள் செய்ததற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

இலங்கை அரசன் தன் நாட்டில் இறந்த முஸ்லீம் வணிகர் களின் மனைவி, மக்களையும், கலீபாவிடம் அனுப்பிவைத்ததாகவும், அப்படி வந்தவர்களின் சொத்துக்களை சிந்துவிற்கு அருகில் கடற் பகுதியில் வாழ்ந்த கொள்ளைக்காரர்கள் கைப்பற்றினர் என்றும் இக் காரணம் பற்றியே படையெடுப்பு நிகழ்ந்தது என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர்.

இரண்டாவது காரணம், இலங்கை அரசன் இஸ்லாமிய சமயத்திற்கு மாறியதாகவும் அதன் பின்னர் கலீபாவிற்கு மரியாதை தெரிவிக்கும் பொருட்டு படையையும் சொத்துக்களை யும் அனுப்பியதாகவும் அவற்றை வழியில் சிந்துவில் இருந்த கடற்கொள்ளைக்காரர்கள் கைப்பற்றவே அவர்களுக்கு எதிராகப் படை எடுப்பினை மேற்கொள்ள வேண்டியதாயிற்று என்பர்.

இந்தியாவிலிருந்து கலீபாவினுல் வாங்கிச் செல்லப்பட்ட அடிமைகளைத் தேபாலில் கடற்கொள்ளைக்காரர்கள் பறித்திட அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படை எடுப்பே யாகும் இச் சிந்து படையெடுப்பு என்று மூன்றாவது காரணம் ஒன்றும் கூறப்படுகிறது.

மேற்கூறப்பட்ட காரணங்கள் உண்மையாக இருப்பினுங் கூட அதன் பொருட்டுப் படைஎடுப்பினை நிகழ்த்தியிருப்பார்கள் என்பதனை நம்பி மனது ஏற்க மறுக்கிறது. இக் காரணங்கள் எல்லாவற்றையும் விட வேறு ஒரு காரணம் இருக்க வேண்டும் என்று வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

தங்களுக்குச் செல்வங்களைத் திரட்டவும் இஸ்லாமிய சமயத்தைப் பரப்பவும் வேண்டியே இந்தியாவின் மீது படை எடுப்பு நிகழ்த்தினர் என்பதே பெரும்பான்மையோரின் கருத்து.

உபயதுல்லா : கி.பி. 711 ஆம் ஆண்டில் உபயதுல்லா என்பவரின் தலைமையின் கீழ் சிந்துவை நோக்கிப் படை ஒன்று அனுப்பப்பட்டது. ஆனால் உபயதுல்லா தோற்கடிக்கப்பட்டு போர்க்களத்தில் கொல்லப்பட்டார். புத்தாய் அல்லது புட்டாய் என்பவரின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு படை யெடுப்பும் தோல்வியைத் தழுவியது. இத்தகைய சூழ்நிலையில் கி.பி. 712இல் முகமது பின் காசிம் சிந்துவின் மீது படை நடத்திட அனுப்பி வைக்கப்பட்டார்.

முகமது பின் காசிம் : முகமது பின் காசிம் 6000 குதிரைப் படையையும், 6000 காலாட்படையையும் 3000 விலங்குகள் கொண்ட படையையும் தலைமை வகித்து நடத்தி வந்தார். முகமது மெக்ரானை அடைந்தபோது அதன் ஆளுநர் முகமது ஆருன் என்பவர் வேண்டிய படையையும் ஐந்து கவண்களையும் அளித்தார். ஒவ்வொரு கவணும் 500 பயிற்சி பெற்றவர்களால் இயக்கப்பட்டது.

தேபால் : கி. பி. 712இல் தேபாலை அடைந்தார். இங்குப் போதிய படைகளைச் சேர்த்துக் கொண்டார். இங்கு கடைபெற்ற போரில் இந்துக்கள் தோற்றனர். இப் பகுதியைத் தாகீரின் உறவினர் ஆண்டுவந்தார். இங்கு வெற்றி பெற்றவுடன் இந்துக் களையும் பௌத்தர்களையும் இஸ்லாமிய சமயத்தில் வற்புறுத்திச் சேர்த்தனர். 17 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் வாளுக்கு இரையாக்கப்பட்டனர், எண்ணிறைந்த செல்வங்கள் அராபியர் களின் கைவசம் சேர்ந்தன. 7000 பெண் துறவிகள் அடிமை களாக்கப்பட்டனர். கோயில்களைத் தரை மட்டமாக்கி ஆங் காங்கே ஆலங்களை நிர்மாணித்தனர்.

நிரூண் : தேப்பாலை வெற்றி கொண்டபின் நிரூண் என்னு மிடத்தை நோக்கிப் படையை நடத்திச் சென்றார் காசிம். நிரூணில் புத்தத் துறவிகளும், சமணத் துறவிகளும் நிறைந்து இருந்தனர். துறவிகள் ஆனமையால் போர் ஏதும் செய்யாது சரணடைந்தனர்.

சீவன் : நிரூணைக் கைப்பற்றிய பின்னர் அராபியர்கள் சீவன் என்ற பகுதியை நோக்கிச் சென்றனர். அதனைத் தாகீரின் உறவினன் ஆண்டுவந்தான். சிறிது போரிட்டுப் பின்னர் வேறு வழியின்றிச் சரண் புகுந்தான்.

தாகீர் : சிந்து நதியைக் கடக்க மாமூது படகுப் பாலம் ஒன்று அமைக்க ஆணையிட்டான். தாகீர் இதனை எதிர்பார்க்கவில்லை. ரேவுருக்குச் சென்றான் அவன். ரேவாரில் தாகீரின் யானைப் படையை எதிர்த்து அராபியர்கள் போரிட்டனர். தாகீர் அமர்ந்திருந்த யானை போர்க்களத்தை நீங்கிச் செல்ல, தாகீர் குதிரை மீது அமர்ந்து போர் செய்ய முயன்றும் இயலாமல் போய்விட தாகீர் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். தாகீர் இறந்தவுடன் அரண்மனைப் பெண்டிரும் கெருப்பை வளர்த்து உயிர் துறந்தனர்.

ஜெய் சிங் : பிராமணுபாத் என்னும் இடத்தினைத் தாகீரின் மகன் ஜெய்சிங் ஆட்சி செய்தான். அவனுக்கு எதிராகக் காசிம் போரிட்டான். போரில் வெற்றி பெற இயலாது என்றவுடன் ஜெய்சிங் பின்வாங்கினான். பிராமணுபாத் இஸ்லாமியரின் வசமாயிற்று. பிராமணுபாத்தைக் கைப்பற்றியதோடு இறந்த தாகீரின் இரண்டாவது மனைவி லதி என்பவளையும் சூரியதேவி, பரிமளதேவி என்ற இரு பெண்களையும் காசிம் சிறைப்பிடித்தான்.

அரோர் : முகமது பின் காசிம் தாகீரைத் தோற்கடித்தாலும் சிந்துவின் தலைநகரம் அரோரைக் கைப்பற்ற வேண்டியிருந்தது. அதனைக் காத்து வந்தவன் தாகீரின் மற்றொரு மகனான். அரோரின் வீழ்ச்சிக்குப் பின்னர் சிந்து முழுமையும் அராபியரின் வசமாயிற்று.

முல்தானம் : மேல் சிந்துவின் சிறப்புமிக்க நகரமாக முல்தானம் விளங்கியது. மிகவும் பாதுகாப்பான நிலையில் முல்தானம் இருந்தமையால் அதனைக் கைப்பற்றுவது காசிமிற்கு எளிதான செயலாக இருக்கவில்லை. எனவே நயவஞ்சகமான வழி ஏதும் கடைப்பிடிக்கப்பட்டால் ஒழிய முல்தானம் வீழாது என்பதை காசிம் உணர்ந்தான். அந்நிலையில் முல்தானைச் சேர்ந்த துரோகி, அம் மக்களுக்குக் குடிநீர் செல்லும் வழியைக் காட்டிவிட வே, முல்தானுக்குள் தண்ணீர் செல்வதைத் தடை செய்து அதன் மூலமாக முல்தானத்தைக் கைப்பற்றினான்.

முல்தானம் என்ருல் தங்க நகரம் என்று பொருள். இந்த நிறையத் தங்கம் கிடைத்தமையால் அராபியர்கள் அதனை அவ்வாறு அழைத்தனர். இதன் பின்னர் காசிம் இந்தியாவின் மற்ற பகுதிகளை வெல்லுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டான். அபுஹக்கீம் என்பாரின் தலைமையில் 10,000 பேர் கொண்ட படை ஒன்று கன்னோசியை நோக்கி அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் அவர் எடுத்துச்கொண்ட முயற்சி வெற்றி பெறுவதற்கு முன்னர் சார்லை வலியத் தழுவவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

காசிமின் முடிவு : காசிமிற்கு எத்தகைய முடிவு ஏற்பட்டது என்பது குறித்து இருவேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன.

காசிமின் முடிவிற்கு தாகீரின் பெண்களே காரணம் என்று சிலர் கூறுகின்றனர். சூரியதேவியையும், பரிமளதேவியையும் கலீபாவிற்கு அனுப்பிவைத்தபோது அப்பெண்கள் தங்களின் கற்பு ஏற்கனவே காசிமினால் பறிக்கப்பட்டுவிட்டது எனவும், தாங்கள் எச்சிற்கனிகள் என்றும் கூறியதைக் கேட்ட கலீபா கோபம் கொண்டு, காசிமை ஈரத்தோலால் போர்த்திக் கொல்லச் செய்தார் என்றும் கூறுகின்றனர்.

மற்றொரு கருத்தின்படி அரண்மனையில் இரண்டு பிரிவினர் இருந்ததாகவும், ஒரு பிரிவினர் காசிமின்மீது வெறுப்புக் கொண்டு கலீபாவிடம் காசிமைப்பற்றி அவதூறு கூறி உயிர் துறக்கச் செய்ததாகவும் கூறப்படுகிறது.

காசிமினால் தொடங்கி வைக்கப்பட்ட சிந்துப் படையெடுப்பு காசிமின் மரணத்தோடு முடிவுற்றது. சிந்துவின் மீது கலீபா கொண்டிருந்த கட்டுப்பாடு தளர்ந்ததின் விளைவாகச் சிந்துவின் மீது அராபியர்கள் கொண்ட கட்டுப்பாடும் குறைந்தது.

ஜிஸியா : அராபியர்கள் சிந்துவிலிருந்து ஏராளமான பொருட்களைக் கொண்டு சென்றனர். இந்திய மக்கள் வரலாற்றில் முதன் முதலாகப் புதிய வரி ஒன்றினைச் செலுத்தவேண்டிய கட்டத்திற்கு வந்தனர். ஜிஸியா என்பதே அவ் வரியாகும். இவ் வரி முஸ்லீம் அல்லாதோர் செலுத்திய வரியாகும். முஸ்லீம் களானவர்கள் இவ் வரியைச் செலுத்தவேண்டியதில்லை. ஜிஸியாவைத் தவிர உற்பத்திப் பொருள்களின் தரத்திற்கேற்ப வரி விதிக்கப்பட்டு அவ் வரியும் கருவூலத்தில் சேர்ந்தது.

சிந்து முல்தானம் ஆகிய இரண்டு பகுதிகளிலிருந்து மட்டும் அரசுக்கு சுமார் இரண்டு லட்சத்து எழுபதாயிரம் பவுன் கிடைத்தது. தோட்டப் பயிர்களான திராட்சை, பேரீச்சை போன்ற வற்றில் இருந்து அரசின் பங்கு $\frac{1}{5}$ பங்கு என்று வரி விதிப்பு இருந்தது. இத்தகைய முறைகளின்மூலம் அரசுக் கருவூலத்தில் பொருள் குவிந்தது.

விளைவுகள் : ஸ்டான்லி லேன்புல் என்னும் வரலாற்று ஆசிரியர் இந்தியாவின் வரலாற்றிலும் இஸ்லாமின் வரலாற்றிலும் அராபியர்கள் சிந்துவைக் கைப்பற்றிய வெற்றியானது பின்விளைவில்லா வெற்றியான ஒரு நிகழ்ச்சியே என்று

குறித்துள்ளார். மேற்கூறப்பட்டுள்ள லேன்பூலின் கருத்துகள் ஏற்றுக்கொள்ளத் தக்கதா? என்பதனை ஆராய்தல் அவசியமாகும். இந்தியாவின் வரலாற்றிலும் இஸ்லாமின் வரலாற்றிலும் எந்த வித மாறுதலையும் ஏற்படுத்தாத சாதாரண நிகழ்ச்சிதானு அராபியர்களின் வெற்றி என்பதனைக் காண்போம்.

கற்றுக் கொள்ளுதல்: சிந்துவை அராபியர்கள் கைப் பற்றியபோது இந்தியர்களின் திறமையினைக் கண்டு ஆச்சரியப் பட்டனர். இந்திய மக்களை இவர்கள் கவர்வதற்குப் பதிலாக, இந்திய மக்கள் இவர்களைக் கவர்ந்தனர். பிராமணர்கள், பௌத்தர்கள் ஆகியவர்களிடமிருந்து அராபியர்கள் தத்துவநூல், வானநூல், கணக்கு, வானிலை, அறிவு, மருத்துவம், வேதியல் ஆகியவற்றைக் கற்றுக் கொண்டனர். அதுமட்டுமின்றி எட்டாம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து பாக்தாத்திற்குச் சென்ற அராபிய அறிஞர்கள் பிரம்ம சித்தாந்தம் போன்றவற்றையும் கற்றுச் சென்றனர்.

பாக்தாத்: இந்து அறிஞர்கள் பாக்தாத்திற்கு அழைக்கப் பட்டனர். இந்தியாவில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட அவர்களுக்கு இந்திய மருத்துவம், தத்துவம் போன்றவற்றை அராபிய மொழியில் மொழி பெயர்த்திடும் பணி இடப்பட்டது. அராபிய மருத்துவமனைகளில் இந்தியர்கள் பணிபுரிந்தனர்.

ஐரோப்பியர்கள் அராபியர்களிடமிருந்து கற்றுக்கொண்ட எண்ணிக்கை முறை இந்தியாவிலிருந்து அராபியாவிற்குச் சென்று அங்கிருந்து ஐரோப்பாவிற்குச் சென்றது என்று கூறப் படுகிறது.

பண்பாடு: பண்பாட்டுத் துறையைப் பொறுத்த மட்டில் இஸ்லாம் ஏற்படுத்திய சாதனைகளைப் போன்று அரசியல் துறையில் அராபியர்களின் வருகை குறிப்பிடத்தகுந்த எதனையும் சாதிக்கவில்லை. இந்தியாவிலேதான் அராபியர்கள் அரசியல், பொருளியல் ஆகியவற்றில் சிறப்புப் பெற்றனர். இந்துக் கோவில்களின் மண்டபத்து முகப்புக்கள் முஸ்லீம்களின் மசூதி முகப்புக்களாக மாறின.

அராபியர்களின் வருகை இந்தியாவில் எவ்வித மாறுதலையும் ஏற்படுத்தவில்லை என்பது தவருகும். அராபியர்களின் வருகையே இஸ்லாமிய சமயம் இந்தியாவில் பரப்புவதற்கு வித்தாயிற்று. சிந்துவில் வாழ்ந்த எண்ணிறந்த மக்கள் முஸ்லீம்களாக மாற்றப்

பட்டனர். அராபியர்களின் வெற்றிக்கான காரணங்கள் என்ன என்பதனை ஆராய்வோம்.

ஒற்றுமையின்மை : சிந்துவில் வாழ்ந்த மக்களின் ஒற்றுமையின்மை முதல் காரணமாகும். அவர்கள் அனைவரும் ஒன்றுகூடிப் பொதுப் பகைவரை எதிர்த்திட வேண்டும் என்ற எண்ணம் கொள்ளவில்லை. தாகீர் இஸ்லாமியர்களை எதிர்த்துப் போரிட்ட போது புத்தர்கள், சமணர்கள் ஆகியோர் தாகீருக்கு எதிராகச் சேர்ந்தனரே தவிர, ஆதரவாகத் திகழவில்லை. இவர்கள் மட்டுமின்றி ஜாட்டுக்கள் போன்ற பிற இனத்தவரும் தாகீரின் பால் குறை கண்டு தாகீருக்கு எதிராக அணிவகுத்தனர்.

தாகீருக்கு மதிப்பில்லை : மக்கள் மத்தியில் தாகீருக்குச் செல்வாக்கு இல்லை. ஏனென்றால் தாகீர் முறைப்படி ஆட்சிக்கு வந்தவர் அல்லர். தாகீருடைய ஆட்சி அவருடைய முன்னோர்களால் கொலை ஒன்றினைச் செய்து அதன் மூலமாக நிறுவப்பட்ட ஆட்சி கொலைகார வம்சம் என்று அவ் வம்சத்தினையே மக்கள் வெறுத்தனர்.

மிகச் சிறிய பகுதி : சிந்து மிகச்சிறிய பகுதியாகவும், செல்வச் செழிப்பும் சிறப்பும் குறைவான பகுதியாகவும் விளங்கிற்று. அந்நியரை எதிர்த்துப் போரிடுவதற்கு ஏற்ற பொருள் வளம் நிரம்பப் பெற்றிராமையால் போதிய நிலையான படை ஒன்றினைப் பெற்றிருக்க முடியவில்லை. ஆனால் அராபியப் படையோ நிலையான வசதிகள் பல நிரம்பப் பெற்ற படையாகத் திகழ்ந்தது. சிந்து நாடு மற்றப் பகுதிகளோடு தொடர்பின்றித் தனித்து இருந்தமையாலும் அராபியர்களால் அதனை எளிதில் கைப்பற்ற முடிந்தது.

திறமைக் குறைவு : அராபியப் படை வீரர்கள் திறமை மிக்கப் படை வீரர்கள். ஆனால் இந்தியப் படைவீரர்களும் அந்த அளவிற்கு திறமை மிக்கவர்களாக விளங்கினாலும் வஞ்சகர்களான அந்நியர்க்குத் தங்கள் நாட்டவரைக் காட்டிக் கொடுக்கும் செயல்திறம் மிக்கவர்களாக விளங்கினர்.

ஏன் நிலை பெறவில்லை ? : இருப்பினும் சிறப்பு மிக்க வெற்றிகளைப் பெற்ற அராபியர்கள் ஏன் இந்தியாவில் நிலை பெற்றுத் தங்கிட இயலாமல் போயிற்று. யார் அராபியர்களின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தாரோ அவரே அவர்கள் நிலை பெறாமல் போனதற்கும் காரணமாக அமைந்தார். முகமது பின் காசிம்

இளம் வயதில் இறந்துவிடவே அவருடைய இடத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பொருத்தமான ஆள் இல்லாமல் போயிற்று.

கி.பி. 750இல் உமையத்துக்கள் அப்பாசிட்டுக்களால் துரத்தப் பட்டனர். உமையத்துக்கள் சிந்துவைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். அப்பாசிட்டுகள் சிந்துவைக் கைப்பற்றும் முயற் சியில் ஈடுபட்ட உமையத்துக்களைத் துரத்துமாறு தமது ஆளுநர் களுக்கு உத்தரவு அனுப்பினர். அராபியர்கள் தங்களுக் குள்ளேயே அடித்துக் கொண்டது அவர்கள் பெருமையைச் சிறுமைப்படுத்தியது.

அராபியர்கள் இந்தியாவில் தங்கள் செல்வாக்கு நிலைபெறச் செய்ய சரியான இடத்தைத் தேர்ந்தெடுக்கவில்லை. சிந்துவின் வழியாக அவர்கள் இந்தியாவினுள் நுழைந்தது அவர்களுக்கு எவ்விதப் பயனையும் விளைவிக்கவில்லை. இந்தியாவில் அராபி யர்களை எதிர்க்கத்தக்க முதன்மை வாய்ந்த அரசன் யாரும் இல்லை என்பது போல் அராபியர்களிடத்தும் ஆட்சியை நிலை பெற்றிடச் செய்யத்தக்க முதன்மைமிக்க அரசன் யாருமில்லை. இந்தியாவில் எண்ணிறந்த அரசுகள் இருந்தமையால் அராபியர் களால் அவைகள் அனைத்தையும் வெற்றி கொள்வது எளிதான செயலாயில்லை.

இந்தியப் பெண்களை மணந்துகொண்ட அராபியர்களிடையே ஆரம்பத்தில் இருந்த தீவிர சமயப்பற்று மறைந்தது. நாளடை வில் உறுதியான மனப் பக்குவத்தை இழந்தனர். இதன் விளை வாகப் பின்னல் வந்த தூருக்கியர்களிடத்து அராபியர்கள் வீழ்ச்சி யடைய வேண்டியதாயிற்று.

3. சிந்துவில் அராபியரின் ஆட்சி

இந்தியரின் பங்கு: அராபியர் நிறுவிய அரசு மற்ற நாடு களில் இருந்தைகளை ஒட்டியே சிந்துவிலும் அமைந்து இருந் தது. இதுவரையில் அராபியர்களிடம் இருந்துவந்த முறை இப் போது இங்கு மாறிவிட்டது. பிற இடங்களில் இஸ்லாமிய சம யத்தைத் தழுவாதவர்களை ஆட்சிப் பொறுப்பில் அனுமதிக்க வில்லை. ஆனால் சிந்துவில் வாழ்ந்தவர்களை ஆட்சியில் தாராள மாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

முகம்மது பின் காசிமிடம் இந்திய அரசர் தாகீர் தோற்று விடவே அவரது அமைச்சர் காசிமினால் பதவியில் ஏற்றுக் கொள்ளப்பட்டார். அவரை மிக்க அன்போடு நடத்தி வாசீர்

பதவியும் அவருக்கு அளிக்கப்பட்டது. கிராம மக்களிடமிருந்து அரசு அலுவலர்கள் வரி வசூலித்தனர். இதனால் மக்களுக்கு வலிமை உணர்வும் காப்புணர்வும் ஏற்பட்டன.

உரிமைகள்: ஆட்சித்துறையில் மட்டுமின்றிச் சமயத் துறையிலும் அராபியர்கள் மாறுதல்களை அடைந்தது இந்தியா விலேதான். சமயத்துறையில் இருந்த கட்டுப்பாடு உணர்வு இங்கு அவர்களிடம் இல்லை. மக்களுக்குப் போதிய உரிமைகள் வழங்கப் பட்டன. உருவ வழிபாடு செய்யவும் சிந்துவின் மக்கள் அனுமதிக்கப்பட்டனர். பணிந்துவிட்டவர்கள், தலைவரிசை செலுத்த ஒப்புக் கொண்டவர்கள் ஆகியவர்களின் உயிரின்மீதும் எந்த வகையிலும் கைவைக்கல் கூடாது என்னும் கட்டளையினை கலீஃபா விதித்திருந்தார். எவரும் தத்தம் சமயத்தைப் பின்பற்று வதிலிருந்து தடை செய்யப்படவில்லை. வழிபாடு நிகழ்வதற்கு அனுமதி அளித்தது மட்டுமின்றிக் கோவில்களைக் கட்டித் தங்கள் விருப்பம் போல வழிபாடு நிகழ்த்தவும் அனுமதி அளிக்கப் பட்டது குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். ஏழ்மையான பிராமணர் களை அன்போடும், சலுகையோடும் பேணவும், அவர்களுடைய சடங்கு முறைகளையும், பழக்கங்களையும் பின்பற்றவும், முன்னாள் பழக்கத்தை ஒட்டிப் பிராமணர்களுக்குப் பலியுணவு, நன்கொடை கொடுக்கவும் முகம்மது பின் காசிம் கட்டளையிட்டார். இவ் வளவு தாராள மனப்பான்மையுடன் அராபியர்களுக்கு ஆதர வான கருத்தை உண்டாக்கியது பல இந்தியர்களை இஸ்லாமைத் தழுவத் தூண்டியது. முகமது கஜினியின் படையெடுப்புவரை இஸ்லாமிய ஆட்சியின் சிறப்பு ஒளியைக் காத்தது.

எதிரிகளை நடத்திய முறை: ஆயினும் அராபியர்கள் தேவை யான இடங்களில் மாறுதல்களைப் புகுத்தி வைத்துக் கொண் டார்கள். எனினும் அவர்கள் இராணுவ அதிகாரத்தையே முழு வதும் நம்பியிருந்தார்கள். விருப்பத்தோடு எதிர்க்கமாட்டாது கீழ்ப்பணிந்தவர்கள் அல்லது தோற்ற தலைவர்களும், ஆளுநர் களும் அவர்கள் குறிப்பிட்ட திறைப்பொருள்களைச் செலுத்த உடன்பட்ட பின்னர் ஏற்கனவே இருந்துவந்த பதவியில் அமர்த் தப் பெற்றனர், தாகீரின் ஆட்சியில் தலைவர்கள் -ஆளுநர் ஆகிய கீழ்நிலை அலுவலர்கள் சக்கூர் ரவாட்கள். ராணுக்கள் என்று பலவாறு பெயர் பெற்றிருந்தனர். தாகீரின் வலிமைமிக்க, உறுதி யான தலைவர்களில் ஒருவர் தாம் குடும்பத்தாருடனும், இருபது புகழ்பெற்ற தக்கூர்களோடும் பிடிக்கப்பட்டு முகமது பின் காசிமின் முன் கொண்டு வரப்பட்ட பொழுது அவரிட மிருந்த நாட்டைத் திருப்பிக் கொடுத்ததோடு, நன்மதிப்பு விருதினையும்

நூறுயிரம் திராம்களைக் கொண்ட ஒரு நாற்காலியையும் அளித்து அன்போடும், மதிப்போடும் நடத்தினர். காகீரின் தக்கூர்கள், சேணம் பூட்டப் பெற்ற குதிரைகளையும், நீண்ட மேலங்கியையும் முகம்மது பின் காசிமுக்கு அளித்தார்கள், கக்கா எனப் பெயர் பெற்ற வைதியா நாட்டின் தலைவரையும், நூபா என்பவரையும் இவ்வாறே நடத்தினர். இருப்பினும் பொதுவாகத் தலத் தலைவர்களுக்கு மேலாக ஓர் அராபிய ஆளுநரே அமர்த்தப்பட்டுத் திறைகளைத் திரட்டும் பொறுப்பையும், தலத் தலைவர்களைக் கட்டுப்படுத்திச் செயலாட்சி செய்யும் பொறுப்பையும் கொடுத்தார். சிவிஸ்தானும், பைதியாவும் கைப்பற்றப்பட்ட பொழுது நாட்டின் உரியல் கடமைகளை நிறைவேற்றச் சாசிம் தம் அலுவலர்களை அமர்த்தினர். ராலாட்டுகள் என்னும் அலுவலர்களும் அமர்த்தப்பட்டனர். ராலாட்டுகள் கிராமத் தலைவர்கள் அல்லது முக்கதாம் போன்ற சிறு தலைவர்களாக இருந்ததாகத் தோன்றுகிறது.

நகரங்களும் அரண்களும்: முக்கியமான நகரங்களும், அரண்களும் திறமையான அலுவலர் அல்லது படைத்தலைவர்களின் கீழ் விடப்பட்டன. முல்தான் அலோர், காரூர் போன்ற இடங்களுக்குத் தனிப்பட்ட அலுவலர்களும் அமர்த்தப்பட்டனர். படைத்தலைவர்களோடு தனிப்படைகளை அனுப்பி நாட்டின் கீழ்க் கொண்டுவரப்படாத பகுதிகளை அராபியரின் கீழ்க் கொண்டு வரச் செய்தார். படைத்தலைவர்கள் தாங்கள் படைபெடுத்த பகுதிகளைக் கைப்பற்றியவுடன் சிறு படையோடு அப்பகுதிகளிலேயே தங்கி வாழ்ந்தனர். முக்கியமான நகரங்கள் அக்கறையோடு கவனிக்கப்பட்டன. தலமக்களுடைய உதவியைப் பெறுவதில் முகம்மது பின் காசிம் கவனம் செலுத்தினர். சான்றாகப் பிராமணாபாத் நகரின் மேலாண்மைக்காக ஹாடியுதின் நாஸ்தி என்பவரின் மகனான விதா என்பவரை அமர்த்தி அவருக்கு உதவியாளர்களையும், மேற்பார்வையாளர்களையும் தந்து உதவியதோடு சொத்து பற்றிய எல்லாவற்றையும் கவனிக்கும் பொறுப்பை நான்கு வணிகர்களிடம் ஒப்படைத்தார். அவர்கள் விதாவைக் கலந்து கொள்ளாமல் எதையும் முடிவு செய்யக் கூடாது என கண்டிப்பாகக் கட்டளையிடப்பட்டனர். பிராமணர்களுக்குப் பிச்சை இடுவதற்குரிய பழக்கத்தை ஒழுங்குபடுத்தினர், நூறு திராம் வருவாய் இருந்தால் மூன்று திராம் தனியே எடுத்துவைக்க வேண்டும் என விதி செய்யப்பட்டது. அராபியர்கள் நாங்கள் கைப்பற்றிய நாட்டிலிருந்த தலப் பழக்கங்களையே இன்றவரைப் பயன்படுத்தினர்.

வருவாய்: நகராட்சிகளில் மட்டுமின்றி நாட்டின் புறப் பகுதிகளின் ஆட்சியிலும் தலப்பழக்கங்கள் பின்பற்றப்பட்டன

சமானிஸ் நாட்டுத் தலைவர்களும், வணிகர்களும் முகமது பின் காசிமிடம் பணிந்தபோது அவர்கள் மீது வரிவிதித்து ஒவ்வோர் இனத்திலிருந்தும் ஒவ்வொன்றிற்கும் தலைவரென ஒருவரை அமர்த்தினர் இஸ்லாமை ஏற்றுக் கொண்டவர்களிடமிருந்து சொத்திலும், விளைபொருளிலும் பத்தில் ஒரு பகுதி வரி வசூலிக்கப்பட்டது. வணிகர்களும், கைவினைஞர்களும் கடுமையான வரி விதிப்பிற்குட்படவில்லை. முகமது பின் காசிம் சிந்துவில் உள்நாட்டு அலுவலர்களை வைத்துக் கொண்டதோடு சிந்துவின் மக்களைத் துணைப் படையினராகச் சேர்த்துக் கொண்டார். நிலவரி, தலவரி, சுங்க தீர்வைகள் மற்றைய வரிகள் எல்லாம் சேர்த்து 11,500,000 திராமைக் கொண்ட ஒரு தொகையையும், நூற்று எண்பது பவுண்டு அகில் கட்டையையும் சிந்துவிலிருந்து பெற்றார் விளைபொருள்களில் ஐந்தில் இரண்டு பங்கு நிலவரியாக விதிக்கப்பட்டது. பொதுவாகக் கால்வாய்கள் மூலம் விவசாயம் செய்யப்பட்டதால் அத்தகைய வரி வசூலிக்கப்பட்டது. செயற்கை முறைகளால் நீர்ப்பாசன வசதிப் பெற்றவைகளுக்கு பத்தில் மூன்று பங்கும் நிலவரியாக வசூலிக்கப்பட்டது. வரிகளைப் பணமாகவும் பண்டமாற்றாகவும் செலுத்த அனுமதிக்கப்பட்டது. பயிர்த்தொழிலிலிருந்து பெறப்படாதவைகளைப் பண்டமாகக் கொடுக்க வேண்டும். இஸ்லாமிய சமயத்தில் நம்பிக்கை வைக்காதவர்களிடமிருந்து சுங்க வரி இரண்டு பங்காக வசூலிக்கப்பட்டது. சிந்துவில் உழவர்கள் பாஜ், உஷரி போன்ற மற்ற வரிகளையும் செலுத்த வேண்டியிருந்தது.

ஜாஹீர் முறை : ஒவ்வொரு முஸ்லீம் பயணிக்கும் மூன்று நாட்களும், இரவுகளும் உமரின் பழைய சட்டத்தின்படி அரசு உணவளிக்க வேண்டி இருந்தது. இந்தியாவில் முஸ்லீம்களின் ஆட்சியின் தொடக்கத்திலேயே ஜாஹீர் முறை தோன்றியது. ஆனால் ஜாஹீர்தார்கள் வேளாண்மையில் ஈடுபட அனுமதிக்கப்படவில்லை. ஜாஹீர்தார்களுக்காக நாட்டு மக்கள் வேளாண்மை செய்தனர்.

நீதிமுறை : அராபியர் காலத்து நீதிமுறையைப் பொறுத்த வரையில் உறுதியாக எதுவும் சொல்வது கடினம். வரிவசூலுக்கும், நீதிமுறைக்கும் எவ்விதத் தொடர்பும் இருக்கவில்லை. அமீர்கள் எனப்பட்டோர் மரண தண்டனை அளிக்கும் அதிகாரத்தைச் செயல்படுத்தினர். அமீர்கள் சட்ட வரன்முறைகளை நேர்மையாகப் பின்பற்ற விரும்பவில்லை. நீதி வழங்குவதில் பாரபட்சநிலை இருந்தது. முஸ்லீம்களுக்கு இடையேயான தகராறுகளில் நீதி வழங்குவதற்கு அமர்த்தப்பட்ட காஜி (Qazi) குர்

ஆனின் நீதி வரனங்களை ஒட்டியே தீர்ப்பு வழங்கியதாகக் கருதப்பட்டது. இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே ஏற்பட்ட வழக்குகளிலும் அவ்வாறே நடந்து கொண்டதாகக் கூறினாலும் இந்துக்கள் சிறிதளவே நீதியைப் பெற்றனர். அரசியல் குற்றங்களும் பொதுவான குற்றங்களும் யார் செய்தாலும் ஒரே மாதிரியான முறையைப் பின்பற்றப்பட்டது. இந்துக்கள் மேல் முறையீடு செய்வதற்கான (appeal) அமைப்பு எதுவுமில்லை. பஞ்சாயத்துக்கள் நடுவர்கள் ஆகியோர் தீர்ப்புகளையே இந்துக்கள் பெற்றனர். இந்த நிறுவனங்கள் தொடர்ந்து இருந்து வந்தன. தாடி வைத்திருந்தாலும் முஸ்லீம்களின் உடையை அணிந்தாலும் கட்டாயமாக்கப்பட்டன. நீதி முறையை அரசாங்க நிறுவனத்திலிருந்து பிரிக்க முடியாததாகும். ஆனால் நீதிமுறையில் தூய்மைமுறை ஏதும் பின்பற்றப்படவில்லை.

ஆளுநர்கள்: ஆளுநர்கள் அடிக்கடி மாற்றப்பட்டனர். கீழ்நிலை நோக்கிய போக்குத் தோன்றியது. அராபியர்கள் தங்கள் இனக் குழுக்களுக்குள்ளே தம் இனப் பகையைத் தொடங்கினர். யாமானியர்களுக்கும், மெஜாரியர்களுக்கும் வெளிப்பகை மூண்டது. இந்திய வரலாற்றில் நாம் காணும் சிந்துவில் ஏற்பட்ட அராபியர்களின் ஆட்சி உட்கதைதான் இந்திய ஆட்சி அமைப்பு முறை வளர்ச்சிக்கு அராபியர்களின் அரசு ஒன்றும் செய்யவில்லை என்றும் பெரிய உண்மையினை இதுவரை பார்த்தவற்றிலிருந்து தெரிந்து கொள்கிறோம். அராபியர்கள் புதிதாக ஏதும் செய்யவில்லை என்பதோடு சிந்துவில் அராபியரின் ஆட்சி எவ்வித விளைவுகளையும் உண்டாக்கவில்லை. சிந்துவில் ஏற்கனவே இருந்த இந்து முறைகளுக்குப் பல சந்தர்ப்பங்களில் அராபியர்கள் விட்டுக் கொடுத்தனர். ஆட்சித் துறையில் எவ்வித விளைவும் ஏற்படுத்தவில்லையென்பதோடு, சமூகத் துறையிலும் அவர்கள் முத்திரை பதிக்கப்படவில்லை. அராபியர்கள் தலைத் தலைவர்கள் அல்லது ஆளுநர்களுக்கு உதவினர்கள் என்று கண்டோம். அராபியர்களிடம் உதவி பெற்ற தலைத் தலைவர்களான ஆளுநர்கள் அராபியர்களையே எதிர்த்து நின்றனர். எனவேதான் வரலாற்று ஆசிரியர்கள் அராபியர்களை சிந்துவை கைப்பற்றி ஆண்ட வரலாற்றினை உரைக்கின்றபோது அதனை உட்கதையே (Episode) என்றும், எவ்விதமான முடிவையும் தராத, விளைவையும் ஏற்படுத்தாத வெற்றி என்றும் குறிப்பிட்டார்கள்.

இந்திய ஆட்சி அமைப்பு முறை வளர்ச்சியில் அராபியர்களின் பங்கு மிகச் சிறியது என்றாலும் கூட, அராபியர்கள்

ஆட்சி அமைப்பு முறையினைப் பற்றி நாம் அறிந்து கொள்ளுவது அவசியமாகிறது. அராபியர்கள் சிந்துவில் ஏற்படுத்திய ஆட்சி மிகச் சில ஆண்டுகளே இருந்தது என்ருலும் பின்னல் அராபியர் களைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அங்கியர்களுக்கு அராபியர்கள் ஆட்சித்துறையில் கற்றுக்கொண்ட பாடம் பயனளித்தது.

அராபியர்களைப் பொறுத்த வரையில் ஆட்சித் துறையில் குறிப்பிடத்தகுந்த சாதனைகள் ஏதுமில்லை என்னும் காரணத்தால் தான் வரலாற்று அறிஞர்கள் எவ்விதமான முடிவையும்,விளைவை யும் ஏற்படுத்தாத வெற்றி என்று அவர்கள் வருகையினைக் குறிப் பிட்டார்கள் போலும். இதுவரையில் முஸ்லீம்களை மட்டும் ஆண்டு வந்த அராபியர்கள் இந்துக்களையும் ஆளவேண்டியவர் களாக மாறிய போது புதிய அனுபவங்கள் பெற்றனர். ஏறக் குறைய நூற்றைம்பது ஆண்டுக்காலம் ஆட்சி செய்த அராபி யர்களின் ஆட்சி அமைப்பு முறையினை, இந்திய ஆட்சி அமைப்பு முறையின் வளர்ச்சியினைப் பற்றி ஆராயுங்கால், அதனை ஒதுக்கி வைத்தால்நாம் தெரிந்தே தவறு செய்தவர்களாவோம். புதிதாக ஆட்சிக்கு வந்த எவரும் தலப்பழக்கங்களைக் (Local customs) கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. அதனையும் செய்து அராபி யர்கள் இந்திய வரலாற்றில் தங்கள் பெயரை நிலைக்கச் செய்து குறிப்பிடத்தகுந்தவர் ஆயினர்.

8. கஜ்னவைடுகளின் எழுச்சியும் - வீழ்ச்சியும்


துருக்கியர்கள் — அலப்டிஜின் — சபுக்டிஜின் — மகமது கஜினி — படையெடுப்புகள் — மதிப்பீடு.

துருக்கியர்கள்

வட இந்தியாவின் மீது படையெடுத்துவந்த அராபியர்கள் ஒரு நிலையான அரசை அமைத்திடாது, சிந்துப் பகுதி, முல்தான் ஆகியவற்றை இணைத்ததோடு தங்கள் ஆட்சிக்கு முடிவு கண்டனர். அராபியர்களுக்குப் பின்னர் இந்திய வெற்றிக்குப் போதிய முயற்சிகளை மேற்கொண்டவர்கள் கஜினியைச் சேர்ந்த அரசர்களே யாவர். அவர்கள் துருக்கிய வம்சத்தைச் சார்ந்தவர்கள். 8, 9ஆம் நூற்றாண்டில் துருக்கியர்கள் கலிஃபாவை விடச் செல்வாக்குப் பெற்றனர். துருக்கியர்கள் அராபியர்களை விடப் பல்வேறு வகைகளில் திறமை, ஆற்றல் ஆகியவற்றில் மாறுபட்டவர்கள். மேலும் எதிலும் ஆர்வம் கொண்டவர்களாக விளங்கினர்.

அலப்டிஜின்: கஜினியை ஆண்ட சுயேச்சையான மன்னர்களில் முதல் இடம் வகிப்பவர் அலப்டிஜின் என்பவராவர். வீரமும் திறமையும் மிக்க அவர் புகாராவை சார்ந்த அப்துல் மாலிக் என்பவரிடம் அடிமையாக இருந்தார் தன் திறமையினால் உயர்ந்த அவர் கஜினியை சுயேச்சையாக ஆளக்கூடிய அளவிற்குத் திறமை பெற்றார்.

அலப்டிஜின் 8 ஆண்டுகள் ஆட்சி செய்த பின்னர் உயிர் துறந்தார். அவர் மறைவுக்குப் பின் சுபக்திஜின் என்ற அவரது அடிமை, அரசரானார். அவர் அலப்டிஜினின் மகளை மணந்து



படம் 12

கொண்டார். பின்னர் அனேக வெற்றிகளைப் பெற்றார். இந்திய மன்னர் ஜெயபாலரை அவர் தோற்கடித்தார். கி.பி. 997இல் சுபக்திஜின் தன்னுடைய மகன் கஜினி மகமது விடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து விட்டு இறந்தார். இவருடைய

இருபது ஆண்டு கால ஆட்சியில் கஜினிப் பேரரசில் ஆப்கானிஸ்தானம், கொராசான் பாங்க் இந்தியாவின் வடமேற்குப் பகுதி ஆகியவை அடங்கியிருந்தன.

மகமது கஜினி கி.பி. 971இல் பிறந்தவர். சில சமயங்களில் மகமது கஜினி மகமது ஜபூலி (Zabuli) என்றும் அழைக்கப்பட்டார். மகமதுவிற்கு அவருடைய தந்தையான சபுக்தஜின் போர்த்திறன்களில் போதிய பயிற்சி அளித்தார். அது மட்டும் இன்றி ஆட்சித்துறையிலும் நல்ல பயிற்சி அளிக்கப்பட்டது. சபுக்தஜின் இறக்கும் பொழுது அருகிலும் மகமதுவிற்கும் இடையே நல்லுறவு இருக்கவில்லை. எனவே இஸ்மாயில் என்ற தன் இளைய மகனை அவர் பதவியில் அமர்த்தினர். இதன் விளைவாக மகமது அரசை இரு பிரிவாகப் பிரித்து பால்க் (Balk) பகுதியை இஸ்மாயிலும், கஜினியை தானும் வைத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ள இஸ்மாயில் மறுக்க அதன் விளைவாக இஸ்மாயில் சிறையில் அடைக்கப்பட்டார்.

படையெடுப்புகள்: கலிஃபா மகமதுவை நியமித்தபோது ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவின்மீது படையெடுக்குமாறு கேட்டுக்கொண்டதாகக் கூறப்படுகிறது. தன்னிச்சையாகவே அத்தகைய சபதத்தை அவர் முடிசூட்டு விழாவின்போது எடுத்துக்கொண்டார் எனவும் சொல்லப்படுகிறது. எனவே இந்தியாவின்மீது மகமது கஜினி பலமுறை படையெடுத்தார். சர். ஹென்றி எலியட் என்பார் மகமது இந்தியாவின் மீது 17 முறை படையெடுத்ததாகக் கூறியுள்ளார். ஆனால் சில வரலாற்று ஆசிரியர்கள் 12 முறை தான் படையெடுத்தார் என்று கூறுகின்றனர். ஆயினும் 17 முறை படையெடுத்தார். என்பதே பொருத்தமானது என்று கருத இடம் உள்ளது.

எல்லைப்புற நாடுகள்: இனி கஜினி மாமுதுவின் (மகமது) படையெடுப்புகளைப் பற்றிக் காண்போம். கஜினி மாமுதுவின் முதல் படையெடுப்பு கி.பி. 1000த்தில் ஏற்பட்டது. முதன் முதலில் எல்லைப்புற நாடுகளின் மேல் படையெடுத்துச்சென்று அநேக மாவட்டங்களையும் கோட்டைகளையும் அவர் கைப்பற்றினார். ஜெயபாலர் என்ற இந்திய அரசர் அதைத் தடுக்க முயன்றார். ஆனால் தோல்வியடைந்தார்.

இரண்டாவது படையெடுப்பு

கஜினி மகமதுவின் இரண்டாவது படையெடுப்பு அதே ஆண்டு ஏற்பட்டது. இம் முறை 10,000 குதிரை வீரர்களோடு படை கூட்டி வந்த அவர் சமயத்தின் நிலையை நிலை நிறுத்தவும்

உண்மையை ஓங்கச் செய்யவும், நீதியை நிலைக்கச் செய்யவும் அதனை மேற் கொண்டார் என்று கூறப்படுகிறது. இப் படை யெடுப்பின்போதும் இவரை எதிர்த்தவர் ஜெயபாலர் என்னும் அரசரேயாவார். டெஷாவர் என்னும் இடத்தில் நடைபெற்ற சண்டையில் இந்துக்கள் 15,000 பேர் கொல்லப்பட்டார்கள். அவர்களுடைய உடல் போர்க்களம் எங்கும் விரிப்பு போல பரப்பி வைக்கப்பட்டு விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் உணவாக்கப் பட்டது. ஜெயபாலர் கைது செய்யப்பட்டு அதன் விளைவாக 2½ இலட்சம் தீனார்களையும், 50 யானைகளையும் பணயமாகக் கொடுத்ததோடு தன் மக்கள் இஸ்லாமியர்களிடம் பிணையாக ஒப்புவித்தார். கஜினிக்கு வெற்றி பரிசுகளையும், கொள்ளைப் பொருட்களையும் கொண்டுவந்து சேர்த்தார். ஜெயபாலரோ தமக்கு நேர்ந்த அவமானத்தைப் பொறுக்க மாட்டாது, கெருப்பில் குதித்து உயிர் துறக்க அவர் மகன் அனந்தபாலன் ஆட்சிக்கு வந்தார்.

பீரார்: பீரார் அரசனுக்கு எதிராக கஜினி முகமதுவின் மூன்றுவது படையெடுப்பு நிகழ்ந்தது. இதன் காரணம் பீரார் அரசன் கஜினி முகமதுவிற்குப் போரில் உதவி செய்யாததே ஆகும். போர்க்களத்தில் கடுமையாக எதிர்த்து நின்ற அவ் வரசன் இறுதியில் ஓட நேர்ந்தது. அவரைக் கஜினி முகமதுவின் படை துரத்திச் சென்றது. ஆனால் கத்தியால் குத்திக் கொண்டு அவர் தற்கொலை செய்து கொண்டார். எண்ணற்ற இந்துக்கள் படுகொலை செய்யப்பட்டனர். உயிர் பிழைத்த ஒரு சிலரும் இஸ்லாமியர்களாக்கப்பட்டனர்.

முல்தான்: முகமதுவின் நான்காவது படையெடுப்பு அப்துல்லா-பதா-தாவூத் எனப்படும். முல்தான் அரசருக்கு எதிராக ஏற்பட்டது. தாவூது இஸ்லாமிய சமயத்தின் மரபுகளுக்குப் புறம்பாகச் சென்றார். கி.பி. 930 மெக்காவின் மீது படை யெடுத்து புனித சின்னங்களை எடுத்து வந்து விட்டார். முகமதுவின் கண்களுக்கு தாவூது ஒரு காபீர் ஆகத் தோற்றமளித்தார். (இஸ்லாமியக் கொள்கைகளுக்கு எதிரானவர்) 1006ல் முல்தானுக்கு எதிராக படை நடத்திவந்த அவர் பஞ்சாபில் அனந்தபாலுடன் போரிட்டு வென்றார். பின்னர் ஏழு நாட்கள் போர் செய்து முல்தானையும் கைப்பற்றினார் - பின்னர் பஞ்சாப் முல்தான் ஆகிய வற்றில், இஸ்லாமிய சமயத்திற்குப் புதிதாக மாறிய சுக்பால் அல்லது நவாஸ் ஷாவை (ஜெயபாலனின் பேரன்) ஆளுமாறு ஏற்பாடு செய்தார்.

அனந்தபால்: சில காலத்திற்குப் பின்னர் சுக்பால் விடுதலை பெற்றவராகத் தன்னை அறிவித்துக்கொண்டார்.

இஸ்லாமிய சமயப்பற்றையும் விட்டுவிட்டார். இதைக் கேள்விப்பட்டு முகமது மீண்டும் படையெடுத்து வந்து சுக்பாலைத் தோற்கடித்து கைது செய்து சிறையில் அடைத்தார். கி.பி. 1008இல் ஆனந்தபாலுக்கு எதிராக ஆறுவது படை யெடுப்பு நிகழ்த்தப்பட்டது. ∴பெரிஸ்டா என்னும் வரலாற்று அறிஞர் ஆனந்தபால் உஜ்ஜயினி, குவாலியர், கலிஞ்சார், கன்னோசி, டெல்லி, ஆஜ்மீர் ஆகியவற்றின் அரசர்களை ஒன்றாக இணைத்து ஒரு கூட்டிணைவை ஏற்படுத்தினார் என்று கூறியுள்ளார். இந்துப் பெண்கள் தங்கள் அணிகலன்களை விற்றும், தங்கத்தை உருக்கியும், போரில் கலந்து கொண்ட தங்கள் துணைவர்களுக்கு உதவி செய்தார்கள். எளியோர் தங்களால் இயன்ற பொருள் உதவி செய்தும் உடல் உழைப்பை ஈந்தும் உதவி புரிந்தனர் கோக்கர்கள் முல்தான் பகுதியி லிருந்து இந்துக்களோடு சேர்ந்து கொண்டார்கள். மிகவும் கடுமையான போர் நடைபெற்றது. 30,000 கோக்கர்கள் காலில் (கால்களில்) எவ்வித அணியும் இன்றி முஸ்லீம்களை எதிர்த்து 3000 அல்லது 4000 முஸ்லீம்களைக் கொன்றார்கள். எனவே முகமது அமைதியை நாடினார். அச் சமயத்தில் அனந்தபால் அமர்ந்திருந்த யானை திடீரென்று வெருண்டு ஓடவே குழப்பம் நேரிட, தலைவன் இல்லாப் படை வீரர்கள் போர்க்களம் விட்டு ஓடினார்கள். எண்ணிறந்த இந்துக்கள் சிறை பிடிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். முஸ்லீம்களின் கையில் செல்வம் சேர்ந்தது.

நாகர்கோட்: கி.பி. 1009இல் நாகர் கோட்டிற்கு எதிராக அடுத்த படையெடுப்பினை மேற்கொண்டார். அக் கோட்டை கங்கராமலை உச்சியில் நிறைய செல்வங்களோடு விளங்கியது முஸ்லீம்கள் சாரிசாரியாக வருவதைக் கண்ட அவர்கள் கோட்டைக் கதவுகளைத் திறந்து மன்மீது மின்னலுக்கு முன்னர் விழுகின்ற மழைத் துளிபோல் விழுந்தார்கள். ∴பெரிஸ்டாலின் கணக்கின்படி 7 லட்சம் தங்க தீனர்களும் 700 பவுண்டு வெள்ளி, தங்கத்தகடுகளும் 200 பவுண் கனித் தங்கமும் 2000 பவுன் தூய்மைப்படுத்தப்படாத வெள்ளியும் 20 பவுண்ட் நகைகள் முத்துக்கள் விலை மதிப்பில்லா கற்கள் ஆகியவற்றையும் கொண்டு சென்றனர். மகமது கி.பி. 1010இல் மூல்தானத்திற்கு எதிராகப் படை நடத்திச் சென்று அதன் அரசரான் தாவூதைத் தோற்கடித்தார்.

காஷ்மீர் உதவி: ஆனந்தபால் தோல்வி அடைந்திருந் தாலும் துணிந்து விடவில்லை. இறுதி மூச்சு உள்ளவரை

போராட எண்ணி நந்தனு என்னுமிடத்தில் சிறிய படை ஒன்றை திரட்டித் தன் நிலையை விருத்தி செய்து கொண்டார். கி.பி. 1014இல் நந்தனுவை மகமது கைப்பற்றிக் கொள்ள அவருடைய மகன் திரிலோச்சனப்பால் காஷ்மீரத்திற்குச் சென்று அடைக்கலம் புகுந்தார். ஆனால் காஷ்மீர அரசரும் இவரும் ஒன்றிணைந்த அப் படை மகமதுவினால் தோற்கடிக்கப் பட்டது திரிலோச்சனபால் பண்டல் கண்டைச் சார்ந்த அப்போது ஆற்றல் மிக்கவராய் விளங்கிய வித்தியாதரன் என்பவரோடு உடன்படிக்கை செய்து கொண்டார். மகமது இந்தியாவிற்கு வந்து ராம் கங்கை என்னுமிடத்தில் நடை பெற்ற போரில் அவரை தோற்கடித்தார். திரிலோச்சனப்பால் இறந்துவிட அதன் விளைவாக இந்துசாஹி வம்சம் அழிந்தது. இஸ்லாமியரின் வருகையைத் தடுக்க நிறுத்திக்கொண்டிருந்த அந்த வம்சமும் அழிந்தது குறிப்பிடத்தகுந்ததாகும்.

தானேஸ்வரம் : 1014இல் தானேஸ்வரத்திற்கு எதிரான படையெடுப்பை அவர் நிகழ்த்தினார். இந்துக்கள் வீரமாகப் போரிட்டார்கள். ஆயினும் தோல்வியுற்றார்கள். தானேஸ்வரம், கோட்டையும், ஏராளமான சொத்துக்களும் மகமதுவை அடைந்தன. தானேஸ்வரத்தில் இருந்த சக்கரசுவாமி ஆலய இறைவடிவம் கஜினிக்கு எடுத்துச் செல்லப்பட்டுப் பொதுமக்கள் பழகும் இடத்தில் எறியப்பட்டது.

1015, 1021ஆம் ஆண்டுகளின் மகமது 2 முயற்சிகளை காஷ்மீரத்திற்கு எதிராக மேற்கொண்டு தோல்வி கண்டார். எனவே காஷ்மீரத்தைப் பிடிக்கும் எண்ணத்தைக் கைவிட்டார்.

கன்னோசி : அடுத்து இந்துஸ்தானத்தின் புகழ்பெற்ற தலைவராக விளங்கிய கன்னோசி அரசருக்கு எதிராக ஓர் படை யெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. கஜினியிலிருந்து புறப்பட்ட அவர் ஏராளமான கோட்டைகளை வழியில் கைப்பற்றிய பிறகு புலந்து சாஹர் என்னும் இடத்தை அடைந்தார். ஹரதத்தர் என்னும் அதன் அரசர் சரண் அடைந்தார். தன்னுடைய 10,000 ஆட்களுடன் இஸ்லாமிய சமயத்திற்கு மாறினார். அதன் பின்னர் மகமது மதுராவை நோக்கிப் படையெடுத்தார். கோவில் விக்கிரகங்களை உடைத்த பின் எண்ணிறந்த இந்துக்களை கொன்று யமுனையில் மூழ்கடித்தார். மிக அதிகமான பொருட் களும் 185 யானைகளும் இவரை அடைந்தன.

மதுரா : மதுரா ஆலயங்கள் நிரம்பப்பெற்ற இந்துக்களின் புனித நகரமாகும். ஆலயங்களில் நல்ல தங்கத்தினால் உரு

வாக்கப்பட்ட விக்கிரகங்கள் இருந்தன. மதுரா நகரம் முழுவதும் அழிக்கப்பட்டது. ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிவரை அதனை கஜினி கொள்ளையிட்டார்.

இதே நிலைதான் பிருந்தாவனத்திற்கும் ஏற்பட்டது. பிருந்தாவனம் எண்ணிறந்த கோட்டைகளைக் கொண்டிருந்தது. அங்கினைக் கண்ட அதன் அரசர் கோட்டையை விட்டு ஓடினர். வழக்கம்போல மகமது கொள்ளை அடித்துக் கோவில் களைச் சிலைதத்தார். 1019இல் சன்ஜெசிக் கோட்டையின் வாயிலை அடைந்தார். கன்ஜெசியில் 7 கோட்டையும் 10,000 ஆலயங்களும் இருந்தன என்று சொல்லப்படுகிறது கன்ஜெசியை ஆண்ட பிரிதகார ஆட்சி ஆளரான இராஜ்ய பாலர் சண்டையிடாமலே சரண் அடைந்தார். ஒரே நாளில் 7 கோட்டைகளும் சரண் அடைந்தன. 10,000 ஆலயங்களும் நொருக்கப்பட்டன. அங்குள்ள மக்கள் உயிரைப் பற கொடுத்தனர். கஜினிக்குத் திரும்பும் வழியில், மூஞ்ச், அஸ்னி, ஷர்வர் ஆகிய கோட்டைகளையும் பிடித்தார், இப் படையெடுப்பின் இறுதியில் 30 லட்சம் தினர்களும் 56000 அடிமைகளும் 250 யானைகளும் கஜினிக்குச் சிக்கின.

கலிஞ்சார்: கோழைத்தனமாகச் சரண் புகுந்த இராஜ்ய பாலரை மற்ற இராஜபுத்திரர்கள் வெறுத்தார்கள். குறிப்பாக கலிஞ்சாரை ஆண்ட சாந்தல அரசர் கோண்டா என்பார் குவாலியர் அரசரோடு உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டு இராஜ்யபாலரைக் கொலை செய்தார். தன் கீழ் ஆட்சி புரிந்து வந்த ஒருவரைக் கொலை செய்த செய்தியினைக் கேள்விப்பட்ட கஜினி முகமது சாந்தல அரசனைக் கண்டிக்கும் பொருட்டுக் கஜினியை விட்டுப் புறப்பட்டார். ஃபெரிஷ்டாவின் கணக்குப் படி 36,000 குதிரை வீரர்களும் 640 யானைகளும் சாந்தல அரசனிடம் மகமதுவை எதிர்க்கத் தயாராக இருந்தன. படை வலிமையினைக் கண்ட மகமது பயந்து அவசரத்தில் எடுத்த முடிவிற்கு வருந்தினர். வருந்தியதோடு தனக்கு வெற்றியைத் தருமாறு இறைவனை வேண்டினர். துரதிஷ்டவசமாக கோண்டா என்ற அரசன் தன் நம்பிக்கையை விட்டு ஓடிவிட்டான். மகமது விற்கு இதன் விளைவாக வெற்றி கிட்டியது.

குவாலியர்: குவாலியர் மீது 1021—22இல் மகமது முற்று கையை மேற்கொண்டார். மகமது கோண்டாவின் புகழ் பெற்ற கலிஞ்சார் கோட்டையை நோக்கிப் படையெடுத்தார். கோண்டா மகமது மிகவும் ஆற்றல் மிகுந்தவர் என்றெண்ணி அமைதி உடன்படிக்கை செய்துகொண்டு, நிறையப் பொருட்களைக் கொடுத்தனுப்பினர்.

சோமநாதபுரம் படையெடுப்பு

கஜினி முகமதுவின் படையெடுப்புகளிலே குறிப்பிடத் தகுந்தது சோமநாதபுரத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பே ஆகும். இப் படையெடுப்பு 1024இல் மேற்கொள்ளப் பட்டது. மகமது இராஜபுதன பாலைவனத்தைக் கடப்பதற்கு வேண்டிய முயற்சிகளில் ஈடுபட்டார். ஒவ்வொரு படை வீரனும் தன்னுடன் ஒரு வாரத்திற்குத் தேவையான தண்ணீர், உணவு, கால் நடைக்குத் தேவையான உணவு ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டி இருந்தது. தளவாடப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு 30,000 ஒட்டகங்கள் அமர்த்தப்பட்டன. 1025 ஜனவரியில் அன்ஹில்வாரை மகமதுவின் படை அடைந்த போது அதன் அரசரான ராஜா பீமதேவர் தன் தலைநகரை விட்டு ஓட்டம் பிடித்தார். கோட்டையில் தங்கியவர்கள் போரில் தோற்று கோட்டையை விட்டனர். அதன் பின்னர் மகமது சோமநாதபுரத்தை நோக்கிச் சென்றார்.

இபின்—இல்—அத்தீர் என்பார் கூறுகின்ற செய்திகள் பெரிக்கையாக உள்ளன. மகமதுவின் படை சோமநாத புரத்தை அடைந்த போது அங்கு வாழ்ந்த மக்கள், அதன் கோட்டையின் மதில்மீது அமர்ந்து கொண்டு படையெடுத்து வந்த முஸ்லீம்களிடம் அவர்களை சோமநாதபுரம் இறைவன் சும்மா விடமாட்டார். என்றும் கூறிக் கொண்டு இருந்தனராம். முஸ்லீம்கள் கோட்டை மதின் மேல் ஏணிகளை சாய்த்து 'அல்லாகு அக்பர்' என்ற உரத்த ஒலியோடு உள்ளே புகுந்து தாக்க ஆரம்பித்தார்கள். அப்போதும் மக்கள் சோமநாதரைத் தங்களுக்கு வெற்றியை தருமாறு வேண்டிக் கொண்டு இருந்தனர். இரவு வரவே போர் நிறுத்தப்பட்டது. மறு நாள் காலை போர் தொடங்கப் பட்டது. இஸ்லாமியர்கள் கோட்டையினுள் நுழைந்தார்கள்.

சோமநாதபுர வீழ்ச்சிக்குப் பிறகு பின்னர் இறை வழிபாட்டை நொறுக்கமகமது முயன்றபோது அங்கிருந்த பிராமணர் எவ்வளவு பொருள் வேண்டுமாலும் தருகிறேன்என்றும், அவர் எண்ணிய செயலை செய்யாது விட்டு விடுமாறு வேண்டிக் கொள்ள அதற்கு மகமதுதான் ஒரு சிலை விற்பனையாளன் அல்லன் என்றும், சிலை உடைப்பாளன் என்றும்மறுமொழி பகர்ந்தார் என்றும் பெரிஷ்டா கூறி உள்ளதை பேராசிரியர் அபிப் டாக்டர் நசீம் போன்ற ஆராய்ச்சியாளர்கள் மறுத்துள்ளனர். அன்ஹில்வாராபின் அரசன் கொண்ட கோட்டையினுள் புகுந்து கொண்டார். படையெடுப்பாளர்கள் ஒருகையினை அறிந்து அவர் ஓடி விட ஆண்கள் கொலை செய்யப்பட்டு பெண்கள் அடிமைகளாக்கப் பட்டனர்.

குஜராத்: குஜராத்தின் தட்ப வெப்பநிலை மகமதுவிற்கு மிகவும் பிடித்து இருந்தது. தன் தலைநகரை அன்ஹில்வாரா விற்கு மாற்ற எண்ணினார் ஆனால் உடன் வந்தவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. எனவே குஜராத்தை பீமதேவரிடம் ஒப்படைத்து விட்டு சிந்து வழியாகக் கஜினிக்குப் பயணமானார். மகமதுவின் கடைசி படையெடுப்பு ஜாட் குலத்தவருக்கு எதிராக மேற் கொள்ளப்பட்டது. சோமநாதபுரத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த மகமதுவின் படையை அவர்கள் காக்கினார்கள். எனவே அவர்களுக்கு எதிராக படை நடத்திச் சென்று அதில் வெற்றி பெற்றார். கி.பி. 1030இல் கஜினி மகமது இறந்தார்.

மகமது பற்றிய மதிப்பீடு: மகமது போதிய உயரமும் உடல் வலிமையும் பெற்று விளங்கினார். ஆனால் அரசரைப் போன்ற கம்பீரமான தோற்றம் கொண்டிருக்கவில்லை. அவருடைய ஆளுமை (Personel) சுவரத்தக்கதல்ல. ஆயினும் போராற்றல் மிக்கவர். மிகவும் அறிவுக் கூர்மையும் சுறுசுறுப்பும் ஆகியவையும் நிரம்பப் பெற்றதோடு ஆட்சித்துறை அறிவும் பெற்று விளங்கினார். பேராசிரியர் அபீப் "மகமது சமய வேறுபாடு இன்றி ஆட்சி நடத்தினார் என்றும், உலேமாக்களை (சமயத் தலைவர்கள்) கண் மூடித்தனமாகப் பின்பற்றவில்லை எனவும் சமய வெறியாளர் இல்லை எனவும் கூறுகின்ற கூற்றுகளை ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஏனென்றால் உட்பீ என்னும் அரண்மனையைச் சேர்ந்த வரலாற்றறிஞர் மகமதுவின் இந்தியப் படையெடுப்புகளை ஜிகாத் அல்லது புனிதப் போர் என்று குறிப்பிடுகின்றார். டாக்டர் ஈஸ்வரி பிரசாத், 'முஸ்லீம்களுக்கு அவர் காஜியாக அதாவது சமயக் காப்பாளராக விளங்கினாலும் கூட இந்துக்களுக்குச் சொல்லவொண்ணாக் கொடுமைகளை விளைவித்த ஹூணர்களைப் போன்ற கொடியவரே ஆவார்' என்று கூறுகின்றார்.

சிறந்த படைவீரர் என்றும் அளவிட இயலாத வீரமும் குறைவிலா ஆற்றலும் நிரம்பப் பெற்றவர் என்றும் மகமதுவை டாக்டர் லேன்பூல் குறிப்பிடுவதோடு, எதிர்காலத்தை உணர்ந்து செயல்படுபவர் என்றும், ஆக்கம் திறன் வாய்ந்தவர் என்றும் கருத முடியாது என்றும் கூறுகின்றார்.

இஸ்லாமிய வரலாற்றில் குறிப்பிடத்தகுந்த மிகச் சிலரில் மகமதுவும் ஒருவர் என்று குறிப்பிடுகிறார், சர்-உல்ஸ்லி ஹெய்க் என்னும் வரலாற்றறிஞர். ஹேவல் என்பார் மகமதுவைச் சிறந்த படைத்தலைவர் என்று அவரைக் கூறுவதோடு, அவருக்குச் சமம் என்று கூறத்தக்கவர் என்றும் எவரும் இல்லாது

குதிரைப் படையின் தலைவர் என்றும் கருதுகிறார். மகமது இந்தியக் கலைச் செல்வங்களையும், விற்பன்னர்களையும் கொண்டு சென்றதன் வாயிலாகக் கஜினியில் சிறந்த கட்டிடங்களை உருவாக்கினார்.

ஆர். ஸி. மஜும்தார் மகமதுவை இந்திய வரலாற்று அறிஞர்கள் திருப்தியடையாத படையெடுப்பாளராகத் தோற்றமளிக்கிறார் என்றும், இஸ்லாமிய சமயப் பரப்பாளர் அல்லர் எனவும், இஸ்லாமியரின் ஆட்சி முறையின் சிருஷ்டிகர்த்தா அல்லர் எனவும் கருதுகின்றார்.

மகமது கலைகளைப் போற்றி வளர்த்த, கலை ஆர்வம் மிக்கவராகத் திகழ்ந்தார். கட்டிடக் கலைஞர்கள், கவிஞர்கள், ஓவியம் தீட்டுவோர் அவரிடம் நிறைந்து இருந்தனர். எண்ணிறந்த இஸ்லாமிய வழிபாட்டுக் கூடங்கள், மதூதிகள், பள்ளிகள் இவரால் எழுப்பப்பட்டன. மகமதுவின் அரசவையில் பிர்தாவுசி என்னும் புலவர் இருந்தார். அவர் எழுதிய ஷாநாமா என்னும் நூல் இலக்கியப் படைப்புக்களில் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. பிர்தாவுசி பாடிய இரங்கற் பாடல் ஒன்றினை அதன் சிறப்பினை உணர்ந்து 'இராபர்ட் பிரவ்னிங்' என்னும் ஆங்கில நாட்டு அறிஞர் அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

நீதி வழங்குவதில் மகமது மிகவும் கண்டிப்பாக இருந்தார். அவருடைய நீதி வழங்கும் தன்மைக்கு எடுத்துக் காட்டாகச் சம்பவங்கள் பல கூறப்படுகின்றன. அவற்றில் ஒன்று இது. மன்னரிடம் ஒருவன் வந்து தன்னுடைய மனைவியிடம் மன்னனின் உறவினன் ஒருவன் தகாத உறவு கொண்டிருப்பதாகக் கூறி முறையிட்டான். மகமது அவனிடம் அவ் உறவினன் மீண்டும் வருகின்றபோது தமக்குச் சேதி அனுப்புமாறு கூறினார். அதன்படி அவன் வந்து சொன்ன போது சுல்தான் தாமே கோரில் சென்று அவ் உறவினன் தலையைத் தம் கையாலேயே துண்டித்தார் என்று கூறப்படும் செய்தி மன்னனின் நீதி வழங்கும் தன்மையை மட்டுமின்றி அக் காலத் தண்டனை முறையை எடுத்துக் காட்டுவதாயும் அமைந்துள்ளது.

முகமதுவிடம் காணப்பட்ட குறைபாடு அவன் பெற்ற வெற்றிகளை நிலை பெற்றிருந்திடச் செய்யாததுதான். மகமதுவின் மறைவிற்குப் பின்னர் தாமே அரசர் என்று அறிவித்த முகமது மதூது எனப்படும். அவர் தம் இளைய மைந்தரால் விரட்டப்பட்டார். மதூதுக்குப் பின்னர் அவர் மகன் மௌதூத் ஆட்சிக்கு வந்தார். மௌதூத்திற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த

அரசர்கள் அனைவரும் ஆற்றல் அற்றவர்களாகப் பலவீனர்களாக விளங்கினர். மகமதுவின் பின் தோன்றல்களின் ஆட்சி கி.பி. 1030லிருந்து 1186வரை நடைபெற்றது. மொத்தம் பதினைந்து பேர் ஆட்சி செலுத்தினர். அவர்கள் யாருமே கூறிப் பிடத்தக்க சாதனைகளை நிகழ்த்தவில்லை. கஜினியில் எப்போதாகிலும் ஏதேனும் குழப்பங்கள் ஏற்பட்டால் அவர்கள் சரண் புகும் இடம் இந்தியாவாகத்தானிருந்தது. கஜினி அரசர்களில் கடைசி அரசர் குஸ்ருமாலிக் என்பவராவார்.

இஸ்லாமியரின் அரசியல் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடத் தகுந்த இடத்தில் மாமூது வைத்து எண்ணப்படுகின்றார். அவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர்களுள் சிறந்த இராணுவ வீரர் அவரேயாவார். சிறந்த மன உறுதியைப் பெற்றிருந்தார். படைவீரர்கள் எப்போதும் அவர் முயற்சிகளுக்கு ஆதரவளித்து உடன்பட்டனரே தவிர எதிர்த்திடவில்லை. போராறு ஆயினும், பெரும் பாலைவனமாயினும் கலங்காது எதிர்நடை போட்டவர். பண்பாட்டுத் துறையில் அவர் ஆற்றிய பணியும் குறிப்பிடத் தக்கதே.

கஜினி மாமூதுவின் படையெடுப்புக்கள் இந்திய வரலாற்று ஆசிரியர்களின் கவனத்துக்கு இலக்காயின. மாமூது என்ற மனிதனின் படையெடுப்பு என்று பாராது மாமூது என்ற இஸ்லாமியச் சமயப் படையெடுப்பாளன் என்ற கண்ணோட்டத்தில் பார்த்தால் மாமூதுவின் செயல்கள் அவ்வளவு சரியெனப்படும் என்று சிலர் வாதிப்பர். திருடன்கூடத் தான் செய்கின்ற செயலுக்கு அவனளவில் சரி என்பதாக நியாயம் கற்பிப்பான். மதவெறியும் இந்துக்களிடம் பகைமையும் கொண்டவரே தவிரக் கொடியவரோ அல்லது மனிதத்தன்மை அற்றவரோ அல்லர் என்று சிலர் கூறுகின்றனர்.

9. கோரி மரபினர்

1. முகமது கோரி

கோரி படையெடுக்கக் காரணங்கள் — முல்தானம் — இந்தியப் படை யெடுப்பு; லாகூர் — குஸ்ரூமாலிக் — இராசபுத்திரர்கள் — தரைன் சண்டைகள் — விளைவுகள் — கன்னோசி — குத்புத்தீன் — வங்கம் — திபெத் — கோக்கர்கள் — லாகூர் — மதிப்பீடு.

2. துருக்கியர்களின் வெற்றிக்குக் காரணங்கள்

பொதுக் காரணங்கள் — குறிப்பிடத்தக்கக் காரணங்கள்.

3. கஜினவைடுகள், கோரிகள் ஆட்சிமுறை

சுல்தான் — வல்லரசு — அரசு நிறுவனம் — நியமனவழி — உயர் குடியினர் — பேரரசின் பிரிவுகள் — அமைச்சரவை — வசீர் — கடமைகள் — தனிப்பிரதிநிதி — சேனாதிபதி — நீதிபதி — கொத்தவால் — டில்லி சுல்தானியத்தின் முன்னோடி.

1. முகமது கோரி
(1173—1206)

இந்தியாவில முஸ்லீம் பேரரசு வேருன்றுவதற்குக் காரண மாக விளங்கியவர் மொய்ஸ் அல்லது முய்ஸ் உத்தீன் முகமது பின்—சாம் எனப்பட்டவர். கோர் என்ற நாட்டின் தலைவராதலால் ஷிகாப்புத்தீன் முகமது கோரி என்றும் அவர் அழைக்கப்படுவ துண்டு. முதல் அராபியப் படையெடுப்பாளரான முகமது பின் காஸிம் என்பவர் முஸ்லிம் பேரரசை உருவாக்கவில்லை அவருக்குப் பின்னுலே மகமது கஜினியும் அவருடைய படை யெடுப்புகளும் நிலையான மாறுதல்களை ஏற்படுத்தவில்லை. எனவே முகமது கோரிக்கே அதனை உருவாக்கும் பொறுப்பு ஏற்பட்டது.

கோர்: கஜினிக்கும் ஹீரத்திற்கும் இடையில் மலைப் பகுதியில் அமைந்துள்ள சுயேச்சையான நாட்டிற்குக் கோர் என்று பெயர். முகமது பின் சூரி என்பாரே அதனைத் தோற்று வித்தவராவர். கஜினி மகமதுவினால் தோற்கடிக்கப்பட்ட பின் கோர் பகுதி கஜினி வம்சத்தாருக்கு அடங்கி இருந்தது, கஜினி வம்சத்தாரிடமிருந்து அதனை விடுதலை பெறச் செய்தவர் கியாஸ் உத்தீன் என்பவராவார். கியாஸ் உத்தீன் தன்னுடைய உடன் பிறப்பான முகமது கோரியிடம் 1173இல் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தார்.

கோரியின் படையெடுப்புக்கான காரணங்கள்: முகமது கோரி இந்தியாவின் மீது படையெடுத்து வந்ததற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

பிற நாடுகளின் மீது அவர் கொண்டிருந்த பேராசையே படையெடுப்புக்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. மற்றும் தன்னுடைய முன்னோர்கள் கைப்பற்றிய பகுதி என்பதாலும் அவர் அதன் மீது உரிமைகொண்டாடினார். படையெடுப்பதும் வீரச் செயல்கள் புரிவதும் பெருமை என்று எண்ணப்பட்ட காலம் அது. எனவே கோரி தன்னுடைய இந்தியப் படையெடுப்பின் மூலம், அந்நிய நாடு ஒன்றில் இஸ்லாமிய ஆதிக்கத்தை நிலைநாட்டிய பெருமையைப் பெற்று வரலாற்றில் அழியா இடம்பெற விரும்பினார். மற்றும் லாகூரிலும், முல்தானிலும் ஆண்டு வந்த கஜினிகளையும், ஷியாக்களையும் முறியடிக்க இந்தியப் படையெடுப்பு இன்றியமையாதது என்பதையும் அவர் நன்கு உணர்ந்தார்.

முல்தானம்: முகமது கோரியின் முதல் படையெடுப்பு 1175இல் முல்தானத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது. முல்தானைக் கைப்பற்றிய பின்னர் மேல் சிந்துவில் உட்பகுதியை அவர் கைப்பற்றினார். 1176இல் கீழ் சிந்து பகுதியைச் சரண் அடையச் செய்தார். அடுத்து இரண்டாம் பீமர் எனப்படும் வாஹில குலத்தைச் சார்ந்த குஜராத் அரசரின் தலைநகரமான அன்ஹில்வாராவின் மீது படையெடுத்து வெற்றிகொண்டார் என்று கூறப்படுகிறது. சர் உல்ஸிலி ஹேக், பாண்டே போன்ற ஆசிரியர்கள் முகமது கோரி இப் போரில் படுதோல்வி அடைந்தார் என்று கூறியுள்ளனர்.

இந்தியப் படையெடுப்பு லாகூர், குஸ்ருமாலிக்: சிந்துவையும் முல்தானத்தையும் கைப்பற்றுவதால் மட்டும் இந்தியாவை வெல்லவிட இயலாது என்று அறிந்த முகமது கோரி

பஞ்சாப் முழுவதையும் இந்தியாவின் மீது படையெடுத்தார். கி.பி. 1179இல் பெஷாவரைக் கைப்பற்றினார். கி.பி 1181இல் குஸ்ரு மாலிக்கிற்கு எதிராக லாகூர் மீது படையெடுத்தார். அவரது படையெடுப்பை சமாளிக்க இயலாத குஸ்ருமாலிக் தன்னுடைய மகனைப் பிணையாக வைத்து ஏராளமான செல்வத்தை அவருக்கு அளித்தார். இருப்பினும் முகமது கோரி குஸ்ருமாலிக்கை ஆட்சியிலிருந்து எப்படியாவது விரட்டிவிட வேண்டும் என்று எண்ணினார். இதை அறிந்த குஸ்ருமாலிக், 'சியால் கோட்டை' முற்றுகையிட்டார். ஆனால் முகமது கோரி சியால் கோட்டை இறுதியில் கைப்பற்றி அங்கே ஓர் கோட்டையையும் கட்டிக் கொண்டார். 1184இல் அவர் லாகூர்மீது மீண்டும் படையெடுத்தார். ஆனால் அதை அவரால் கைப்பற்ற இயலவில்லை. 1186இல் முகமது பஞ்சாப்மீது மீண்டும் படையெடுத்து லாகூரை முற்றுகையிட்டார். ஜம்முவை ஆண்ட ராஜா சக்கரதேவர் என்பாரோடு முகமது கோரி ஓர் நட்புறவு ஏற்படுத்திக் கொண்டு குஸ்ருமாலிக்கிடமிருந்து அவரைப் பிரித்தார்.

நேரடி சண்டையில் குஸ்ருமாலிக்கைத் தோற்கடிக்க இயலாது என அறிந்த கோரி தந்திரத்தினைக் கையாண்டு அவரை வெற்றி கொள்ள முயன்றார். குஸ்ருமாலிக்கைத் தன்னை வந்து சந்திக்குமாறு அழைப்பு விடுத்து அவரைச் சிறையில் அடைத்து 1192இல் கொலை செய்தார்.

இராசபுத்திரர்கள்: முகமது கோரி பஞ்சாப், முல்தானம், சிந்து ஆகிய பகுதிகளுக்கு மட்டுமே அரசராயிருந்தாரேயன்றி இந்துஸ்தானத்தின் அரசராக அவரால் விளங்க முடியவில்லை. இந்தியாவின் இதய பாகத்தில் எண்ணிறந்த ராசபுத்திரப் பேரரசுகள் இருந்தன. போரிடுதலைத் தங்கள் பொழுது போக்காகக் கொண்டிருந்த அவர்கள் முகமது கோரியின் படையெடுப்புகளைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்படவில்லை எனினும் டெல்லி, ஆஜ்மீர் ஆகியவற்றின் அரசராக விளங்கிய முகமது கோரி பிருதிவிராஜ்சௌஹான் என்பார். முகமது கோரி படையெடுத்து வருவதைத் தடுத்திட எண்ணம் கொண்டார். கோரிக்கு எதிராக 2 இலட்சம் குதிரைகள், 3000 யானைகளுடன் மற்ற இராசபுத்திரர்கள் புடைசூழ அவர் புறப்பட்டார். ஆனால் கன்னோசியைச் சேர்ந்த ஜெயச்சந்திரர் மட்டும் அவரோடு சேரவில்லை. ஏனெனில் அவ் விருவர்களுக்கிடையே பகைமை இருந்து வந்தது.

முதல் தரைன்சண்டை: 1191இல் பிருதிவிராஜரின் படையும் முகமதுவின் படையும் தானேசுவரத்திற்குப் பதினான்கு மைல்

தொலைவில் உள்ள தரைன் என்னுமிடத்தில் சந்தித்தனர். முகமது தன்னுடைய படையை மூன்று பிரிவாகப் பிரித்துப் போரிட்டார். பிருதிவியின் சகோதரரான கோவிந்தராஜ் என்பார் முகமது கோரியின் காங்கேளத் தாக்கிக் காயப்படுத்தினர். எனவே முகமது கோரி பின்வாங்க நேரிட்டது. முஸ்லீம் படைவீரர்கள் எல்லாத் திசையிலும் ஓட ஆரம்பித்தனர். முகமது மிகவும் துயரப்பட்டுக் கஜினியைச் சேர்ந்தார். இதன்பின் இராச புத்திரர்கள் சர்ஹிந்தைக் கைப்பற்ற முயற்சித்தனர். ஆனால் அவர்கள் முயற்சி பலன் அளிக்கவில்லை.

இரண்டாவது சண்டை : முகமது கோரி கஜினியை அடைந்ததும் இந்தியப் போர்க்களத்தை விட்டு ஓடிய அதிகாரிகள், படை வீரர்கள் ஆகியோரைத் தண்டித்து, நகரைச் சுற்றி வருமாறு செய்து அவமானம் செய்வித்தார். 1192ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து இருபதாயிரம் படை வீரர்களைக் கொண்ட பெரும் படையுடன் மீண்டும் போருக்குச் சென்றார். அப்போதும் தரைன் என்னும் இடத்திலேயே இரண்டாவது போர் நடந்தது. சுமார் நூற்றைம்பது இராச புத்திர இளவரசர்கள் பிருதிவிராஜருடன் தோளோடு தோள்சேர்த்து போரிட்டனர் இந்தியப் படை முகமதியரின் படையை ஆரம்பத்தில் தடுத்து நிறுத்தியது. காலை முதல் சூரியன் மறையும் வரை போர் நடை பெற்றது. முகமது கோரி 12000 குதிரைப் படையினருடன் தீவிரமாகத் தாக்க ஆரம்பித்தார். இராச புத்திரர்கள் அந்தத் தாக்குதலைச் சமாளிக்க இயலாது தோற்றனர். பிருதிவிராஜன் துயர் அடைந்து மனம் வெதும்பி யானையிலிருந்து கீழே குதித்துத் தப்பிக்க முயன்று முகமதியர்களிடம் பிடிபட்டார். பிருதிவிராஜனுடைய மறைவு குறித்துப் பலவிதமான கருத்துகள் நிலவுகின்றன. பிருதிவிராஜன் கைப்பற்றப்பட்டுக் கொல்லப்பட்டதாகவும், கஜினிக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்குக் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

விளைவுகள் : இரண்டாவது தரைன் போர் இந்திய வரலாற்றில் குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்திய நாடுகளுக்கு எதிராக முகமது கோரி பெற்ற வெற்றியை அது உறுதிப்படுத்தியது என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். பிருதிவிராஜின் தோல்வியின் விளைவாக சர்சுதி, சமானு, பூரம், ஹான்சி, ஆஜ்மீர் ஆகியவை கைப்பற்றப்பட்டு ஆயிரக் கணக்கான இந்துக்கள் வாளுக்கு இரையாக்கப்பட்டனர். ஆஜ்மீரத்தைக் குத்புதீன் ஐபெக்கின் பொறுப்பில் விட்டு விட்டு முகமது கோரி கஜினி திரும்பினார்.

குத்புதீன் மீரட் டெல்லி ஆகியவைகளைக் கைப்பற்றினார். டெல்லியை அரசின் நிலைக்களம் ஆகினர்.

கன்னோசிப் போர்: பிருதிவிராஜன் தோற்கடிக்கப்பட்ட போது மற்றொரு இராசபுத்திர அரசனை கன்னோசியை ஆண்ட ஜெயச்சந்திரர், பிருதிவிராஜனுக்கு ஏற்பட்ட விளைவுகள் தனக்கும் ஏற்படக்கூடும் என்பதை எண்ணிப் பார்க்கவில்லை. 1194இல் முகமதுகோரி கன்னோசிக்கு எதிராகப் படை நடத்திச் சென்று ஜெயச்சந்திரனைத் தோற்கடித்தார். இந்த வெற்றியினால் முகமது அரசியல், சமயம் ஆகிய இரு துறைகளிலும் சிறப்பிடம் பெற்றிருந்த ஆஸ்னி, வாரணாசி ஆகிய இரு நகரங்களும் வேறு சில சிறிய நகரங்களும் கோரியின் ஆளுகைக்கு உட்பட்டன. கன்னோசி மட்டும் 1199 வரை சுயேச்சையாகவே இருந்து வந்தது. 1195—96இல் மீண்டும் அவர் படையெடுத்து வந்து பயானா, வோலியர் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிச் சென்றார். அதன் பின்னும் தொடர்ந்து போர் நடவடிக்கை எதனையும் அவரால் மேற்கொள்ள இயலவில்லை. ஏனெனில் துருக்கியர்களுடன் அவர் போரிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஏனைய இந்தியப் படையெடுப்புக்கள் யாவும் குத்புத்தீன் ஐபெக் எனும் அவரது தளகர்த்தரால் மேற்கொள்ளப்பட்டன.

1196—97இல் ராஜபுத்திரர்கள் குஜராத் அரசரின் உதவி கொண்டு அய்பெக்கைத் தோற்கடித்தனர். இதனால் வெகுண்ட ஐபெக் குஜராத்தைப் படையெடுத்து அன்ஹில்வாரா நகரைச் சூறையாடினார்.

குத்புத்தீன்: 1197—98இல், குத்புத்தீன் பதாவுன் பகுதியை இராஜ்டிரகூட அரசனிடமிருந்து கைப்பற்றினார். 1202—3இல் பரமார்தின் எனப்படும் பண்டல் கண்டின் அரசனுடைய தலை நகரான கலஞ்சரைக் கைப்பற்றினார். காஜனராஹோ, மஹோபா ஆகிய இடங்களையும் அவர் வென்றார். குத்புத்தீன் ஐபெக்கின் போர் நடவடிக்கைகளுக்குப் பக்க பலமாக விளங்கியவர் இக்தியார் உத்தீன்—முகம்மது-பின்-பக்தியார்-கில்ஜி என்பவராவார்

வங்கம்: வங்கம் இலட்சுமணசேனன் என்று அழைக்கப்பட்ட சேன வம்சத்து அரசனின் ஆட்சியின்கீழ் இருந்தது. வங்க நாட்டிற்கு எதிராகப் பக்தியார் கில்ஜியின் தலைமையில் படை ஒன்று அனுப்பப்பட்டது. பக்தியார் கில்ஜி இலட்சுமண சேனனைத் தோற்கடித்தார். இலட்சுமண சேனன் கிழக்கு வங்கத்துக்கு ஓடிப் போனார். வங்கத்தின் சிறு பகுதி மட்டுமே இக்தியாருதீன் கைவசப்பட்டது.

திபெத் : வங்கத்தை வெற்றி கொண்ட பின்னர் பக்தியார் கில்ஜி திபெத்தை நோக்கிப் படையெடுத்துச் சென்றார். திபெத்தியப் படையெடுப்பு இவருக்கு வெற்றியைத் தேடித்தர வில்லை. இந் நிலையில் 10,000 படைவீரர்களில் 100 பேரே எஞ்சினர். கவலையால் கில்ஜி நோய்வாய்ப்பட்டார். நோயா யிருக்கும்போது அவரது படைவீரர் ஒருவரால் அவர் கொல்லப் பட்டார். 1204இல் முகம்மது கோரி துருக்கியர்களால் கொல்லப் பட்டார் என்ற வதந்தி இந்தியாவில் பரவ ஆரம்பித்தது.

கோக்கர்கள் : இதன் விளைவாகக் கோக்கர்கள் இந்தியா வில் இருந்த முஸ்லீம் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சிகள் செய்யத் தலைப்பட்டனர். எனவே முகம்மதுகோரி தாமே மீண்டும் இந்தியாவிற்கு வந்து கோக்கர்களை அடக்க வேண்டியதாயிற்று. 1206இல் கோக்கர்களை முகம்மதும் ஜபெக்கும் ஒன்று சேர்ந்து தோற்கடித்தனர்.

லாகூர் : லாகூரை அடைந்த முகம்மது கஜினியை நோக்கிப் புறப்பட்டார். ஆனால் வழியில் சிந்து நதிக் கரையில் மார்ச் 15ம் நாள் 1206ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்டார். இவருடைய உடல் கஜினிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டது. கோரி வம்சத்தவர்களுடைய ஆட்சி 1215 வரை நீடித்தது.

மதிப்பீடு : வரலாற்றறிஞர்கள் முகம்மது கோரியையும் மகமது கஜினியையும் ஒப்பிட்டு இருவருக்குமிடையே காணப் படும் ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துரைக்கின்றனர். முகம்மது கோரி மகமது கஜினியைப் போலச் சிறந்த தளபதி என்றோ போர் ஆற்றல் மிக்கவர் என்றோ கூற முடியாது. இதற்குக் காரணம் அவர் பல போர்களில் பெற்ற தோல்விகளே. ஆனால் போரில் தோல்வியுற்ற போதிலும் அவரிடம் ஒரு நாட்டினை உருவாக்கும் ஆற்றல் நிறைந்து காணப்பட்டது. கஜினி முகம்மதுவின் வெற்றிக்குப் பின்னர் குறிப்பிடத் தக்கது ஒன்றும் இல்லை. ஆனால் கோரி முகம்மதுவின் வெற்றிக்குப் பின்னர் டெல்லிச் சுல்தானியத்தின் அடிப்படைக் கல் ஒன்று நாட்டப்பட்டது. அவர் வைத்துச் சென்ற அரசு என்ற பயிர் நாட்டில் வேரூன்றித் தழைத்து ஓர் பெருமரமாகப் பின்னர் வளர்ந்தது.

முகமது கஜினியின் சாதனைகள் முழுமையற்றவை, அரை குறையாக அவை அப்படியே நின்றுவிட்டன. தமக்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்திடத் தகுந்தவர் யாரையும்

உருவாக்கிச் செல்லாதது அவரது பெருங்குறைபாடாகும். ஆனால் முகமதுகோரி குத்புத்தீன் ஐபெக் என்ற வழித்தோன்ற லொருவரை உருவாக்கி விட்டுச் சென்றார் என்பது குறிப்பிடத் தக்கது ஒன்று ஆகும்.

மகமது கஜினியின் அடிப்படை நோக்கம் கொள்ளை அடித் தலும், தம் சமயத்திற்கு எதிரானவர்களைப் பழி வாங்குவது மாகவே இருந்தது. மகமதுகோரி புத்திக் கூர்மை வாய்ந்தவர். எதிரியையும் நண்பனையும் எப்படி நடத்த வேண்டும் என்பதனை நன்குணர்ந்தவர். எதிரியின் பலவீனம் என்ன என்பதை முதலில் அறிந்து கொண்டு அதனைத் தமது வெற்றிக்குச் சாதக மாகப் படன்படுத்தி அதன் வாயிலாக வெற்றி கண்டவர்.

இஸ்லாமிய சமயத்தில் பற்றுக் கொண்டவராயினும், மகமது கஜினியைப் போலத் தீவிரவாதி அல்லர். மகமது கஜினியின் அடிப்படை நோக்கம் இருடைய அடிப்படை நோக்கத்தி னின்றும் வேறுபட்டது. தமது ஆட்சி, இந்தியாவில் நிலைபெற வேண்டும் என்ற எண்ணம் திடமாக அவரிடம் குடிகொண் டிருந்தது. ஆனால் மகமது கஜினியிடம் அத்தகைய திடம் இருந்ததாகத் தெரியவில்லை. இவரது படையெடுப்புக்கள் இந்தியாவிலிருந்த ஆலயங்களைக் குறிவைக்கவில்லை. நாடு களைச் சுற்றியே அவரது நாட்டமெல்லாம் வட்டமிட்டது. அராபியர்களும் கஜினவைடுகளும் செய்யத்தவறிய ஓர் காரியத்தை அதாவது இந்தியாவில் நிலையான ஓர் பேரரசைத் தோற்றுவித்தவர் என்ற பெருமை அவருக்கே உரியதென்றாகும்.

2. துருக்கியரின் வெற்றியும் இராசபுத்திரர்களின் தோல்வியும்

இந்திய வரலாற்றில் வீரமும், ஆற்றலும் மிக்கவர்கள் என்று நீண்ட காலமாகக் கருதப்பட்டு வந்த இராசபுத்திரர்கள் துருக்கி யர்களுக்கு எதிராக நின்று வென்றிட இயலவில்லை. இதற்கான காரணத்தை ஆராய்வது அவசியமாகும்.

எல்பின்ஸ்டன், லேன்பூல், வின்சன்ட் ஸ்மித் போன்றவர்கள் இந்தியப்படை வீரர்கள் வெப்பமிக்க நாட்டில் வாழ்ந்ததால் ஆற்றல் குறைந்தவர்களாயிருந்தனர் எனவும், துருக்கியர்கள் குளிர்ப்பிரதேசங்களில் இருந்து வந்தமையால் உடல் உரம் மிக்க வர்களாயிருந்தனர் எனவும், அதனாலேயே எளிதில் இந்தியர்களை வென்றனர் எனவும் கூறுவர். மற்றும் துருக்கியர்கள் புலால்

உண்ணுபவர்களாக இருந்ததால் போர்க்குணம் மிகுந்திருந்தனர் என்றும் மரக்கறி உணவே பெரும்பாலும் உட்கொண்ட இந்திய வீரர்களை அவர்கள் எளிதில் வெல்ல முடிந்தது என்றும் கூறுவர். அவர்களின் இக் கூற்று அத்துணைப் பொருத்தமுடையதன்று. இந்தியப்படை வீரர்கள் தம் ஆற்றலைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் நன்கு நிரூபித்துள்ளனர். அறிவியலின் அடிப்படையில் ஆராய்கின்றபோது, குளிர்ப்பிரதேசங்களில் இருந்து வந்தவர்கள் என்பதாலேயே யாருக்கும் சிறப்பான ஆற்றல்கள் எவையும் ஏற்பட்டுவிடாது என்பது நன்கு பெறப்படும் மற்றும். அக்கால இந்தியப் படைவீரர்கள் அனைவருமே புலால் உண்ணுதவர்கள் என்று தீர்மானிப்பது அடிப்படையிலேயே தவருன தொன்றாகும். புலால் உண்ணும் வீரர்களும் படைகளில் நிறைய இருந்தனர். இந்தியப்படை வீரர்களின் ஆற்றல் எதிரிகளாலேயே கூடப் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே உண்மையான காரணங்கள் யாவை என ஆராய்தல் வேண்டும். இக் காரணங்களை பொதுக்காரணங்கள் என்றும் குறிப்பிட்டுக் காட்டத்தக்க காரணங்கள் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம்.

பொதுக்காரணங்கள் : இந்தியர்களிடையே அரசியல் ஒற்றுமை என்பது மருந்துக்குமில்லை. இந்தியா முழுமையும் ஆளத்தக்க ஆற்றல் வாய்ந்த பெருந்தலைவராக எந்த அரசரும் விளங்கவில்லை. இந்தியா சிறு சிறு பகுதிகளாய் தனித்தனி அரசர்களால் சுயேச்சையாக ஆளப்பட்டது. அப்படி ஆட்சி செலுத்தியவர்கள் ஒற்றுமை உணர்வின்றி ஒருவர்க்கொருவர் பகை உணர்வு மிகுந்தவர்களாய்ப் பொருமை உணர்வுடன் வாழ்ந்தனர். தேசீயச் சிந்தனைகளோ தேசீய உணர்வுகளோ அவர்களிடத்துக் காணப்படாமல் குறுகிய பிரதேசப் பற்றே அவர்களிடம் தலைதூக்கி நின்றது. தங்கள் நலன் காக்கப்பட வேண்டும் என்பதிலேயே அவர்கள் குறியாய் இருந்தனரேயன்றி இந்தியாவின் பொது நன்மையைப் பற்றி எண்ணிப் பார்ப்பார் எவரும் இல்லாது போயினர்.

இந்தியர்களின் இராணுவ அமைப்பு முறையும் தோல்விக்கு ஒரு காரணமாக அமைந்தது எனலாம். போதிய ஆயுதங்கள் இன்றி, முறையான பயிற்சி இன்றிப்படை வீரர்கள் விளங்கினர். அண்டை நாடுகளில் இராணுவத் துறையில் ஏற்பட்டு வந்த புதிய மாற்றங்களைப் பற்றிய அறிவே அவர்களிடம் காணப்படவில்லை. நடந்த பாதையிலேயே நடந்தார்களே தவிரப் புதிய பாதை வழிச் செல்ல அவர்கள் எண்ணவில்லை. படையைப் பிரித்த முறை கூடப் பழைமையானதே. உற்றுழி உதவும்

இருப்புப் படை (Reserve forces) ஏதும் வைத்துக் கொள்ளாமலே அவர்கள் போரில் இறங்கினர். மற்றும் பாஜனப்படைகளை அன்னூர் முழுமையாக நம்பி ஏமாந்தார். பாஜனர்கள் நடுக்கமுறச் செய்யப்பட்டபோது அவை எதிரியை மாய்த்திடுவதற்குப் பதிலாகத் தமது படையினரையே தாக்க ஆரம்பித்தன. எனவே தான் பிற்காலத்தில் பாபர் கூட 'இந்தியர்களுக்குப் போரிடத் தெரியாது. போர்க்களத்தில் உயிரை மாய்த்துக் கொள்வது மட்டும் தெரியும்' என்று கேலியாகக் குறிப்பிட்டார். இராசபுத்திரர்கள் போர்க்களங்களைத் தங்கள் ஆற்றலையும் வீரத்தையும் வெளிப்படுத்துமிடங்களாகக் கருதினரே தவிரப் போரில் வெற்றிபெற வேண்டும் என்பதை முக்கியக் குறிக்கோளாகக் கொள்ளவில்லை. ஆனால் துருக்கியர்களோ வெற்றியே கண்ணுமாயிருந்தனர். நல்வழியிலோ அல்வழியிலோ வெற்றி பெறுவதே அவர்களது ஒரு பெருங் குறிக்கோளாயிருந்தது. பொதுமக்களின் மனப் போக்கும் இந்தியரின் தோல்விக்கு ஒரு காரணம் என்று கருதப்படுகிறது. இப் போர்களில் மக்கள் போதிய அக்கறை செலுத்தவில்லை. மக்களின் மனதில் தவருன எண்ணம் ஒன்று குடிகொண்டிருந்தது. யார் தோற்றாலும், யார் வென்றாலும் தங்கள் நிலையில் மாறுதல் ஏதும் ஏற்படப் போவதில்லை என்று அவர்கள் எண்ணினர். போர் வீரர்களுக்கு மக்கள் தங்கள் ஒத்துழைப்பை நல்கியிருப்பார்களேயானால், அது படையின் இரண்டாவது அணியாகப் பயன் பட்டிருக்கக்கூடும்.

கஜினி முகமதுவும், கோரி முகமதுவும் இந்திய மக்கள் அச்சம் கொண்டு நம்பிக்கையை இழக்கத்தக்க கொடுமையான செயல்களைச் செய்தனர். 'திடீர்' என மின்னல் வேகத்தில் தாக்குதல்களை நிகழ்த்தி உயிருக்கும் உடைமைக்கும் சேதம் விளைவித்தது போல உள்ளத்திலும் பீதியை ஏற்படுத்தினர். இதன் விளைவாகத் துருக்கியர்களை எதிர்ப்பதே வீண் முயற்சி என்ற எண்ணம் எங்கும் பரவத்தொடங்கியது. இந்த எண்ணம் சமுதாய வளர்ச்சிக்குத் தடையாக விளங்கியது.

இந்துச் சமுதாயத்தில் காணப்பட்ட வருணப் பாகுபாடும் இந்தியரின் தோல்விக்கு ஓர் காரணம் எனலாம். அவர்கள் பல்வேறு சாதியினராகப் பிரிந்து தமக்குள்ளே வேற்றுமை பாராட்டிக் கொண்டிருந்தனர். படையெடுப்பாளர்களை எதிர்ப்பது போர்த் தொழிலை மேற்கொண்ட, க்ஷத்திரிய குலத்தவரின் கடமையே தவிரத் தம்முடைய பணி அன்று என்று பிராமணர், வைசியர், சூத்திரர் ஆகிய பிற குலத்தவர் எண்ணினர். மக்கட் பிரிவினருள் ஒரு சாரார் மட்டும் போரிட மற்றையோர்

பிரிவினர் வாளாவிருப்பது எங்ஙனம் வெற்றிக்கு வழி வகுத்திடும்? ஆனால் இஸ்லாமியர்களோவெனின் சகோதர மனப்பான்மையுடன் ஒன்றுபட்டுச் செயலாற்றினர். இந்துக்களுக்கு எதிராக நடத்தப்பெறும் போர்களைப் புனிதப் போர்களாக அன்னர் கருதினர். சிலை வணக்கம் செய்வோரைச் சீரழிப்பது தம் கடமை என்று எண்ணினர். போரில் வென்றோர், 'காஜி' எனப்பட்ட புனிதமானவர்களாகக் கருதப்பட்டனர். தோற்றுப் படைக்களத்தில் மாண்டவர்கள் சொர்க்கத்தை அடைந்து அண்ணல்கள் ஆவதாக நம்பினர். அல்லாஹு அக்பர் என்ற குரல் அவர்கள் உணர்வுகளைத் தட்டி எழுப்பியது. 'அரகர மகாதேவா' என்ற ஒலி 'அல்லாஹு அக்பர்' என்ற ஒலியில் அடங்கிப் போகும்படி ஆயிற்று. டாக்டர் ஈஸ்வரி பிரசாத் எனும் வரலாற்றாசிரியர் முஸ்லீம்களுக்கும், இந்துக்களுக்குமிடையே நடைபெற்ற போரானது, மாறுபட்ட இரண்டு சமுதாய அமைப்புகளுக்கிடையே நடைபெற்ற தொன்றாகும். எனவே, பழைய ஆற்றல் ஒன்றில் இந்துக்களின் அமைப்பு, வேகம் பொருந்திய இளமைத் துடிப்புள்ள இஸ்லாமிய அமைப்புக்கு ஈடு கொடுக்க முடியாமல் போயிற்று என்றும் கூறுகின்றார்.

இந்துக்களின் தோல்விக்கு முஸ்லீம்களைப் பற்றி அவர்கள் கொண்டிருந்த தப்பபிப்பிராயமும் ஒரு காரணம் எனலாம். துருக்கியர்களைச் சாகர்கள், குஷானர்கள், ஹூணர்களைப் போன்று அவர்கள் எண்ணினர். பஞ்சாப் பகுதியுடனே அவர்கள் நின்று விடுவர். பிற பகுதிகளில் ஆட்சி பரவிடச் செய்யமாட்டார்கள் என்று எண்ணினர். இதன் விளைவாக முஸ்லீம் படையெடுப்பைக் குறித்துத் தீவிரமாகச் செயல்பட வில்லை. அதனுடைய அபாயத்தைக் குறித்துச் சிந்தித்துப் பார்க்கவில்லை.

இந்திய மக்களிடம் காணப்பட்ட தற்பெருமை உணர்வுகளும் அவர் தம் தோல்விக்கு ஓர் காரணமாக அமைந்தன. தம்மைப் பற்றி உயர்வாக எண்ணிக்கொண்ட அவர்கள் எதிரியைக் குறைத்து மதிப்பிட்டனர். தாங்கள் உயர்ந்தவர்கள், தங்களைப் போல் சிறந்தவர் எவருமிலர். தங்கள் பண்பாடு, கலை ஆகியவை தான் சிறந்தவை என்று எண்ணி இறுமாந்த அவர்கள் இஸ்லாமியரைப் பற்றித் தாழ்வாக எண்ணினர். ஆனால் இஸ்லாமியர்கள் சமயப்பற்று, பொருள் சேர்க்கும் ஆர்வம் இரண்டும் ஒருங்கே கொண்டு தீவிரமாகச் செயல்பட்டனர்.

இஸ்லாமியர்களிடத்துக் காணப்பட்ட அடிமை முறையும் அவர்களின் வெற்றிக்கு ஒரு காரணம் என்று லேன்பூல் குறிப்

பிடுகின்றார். அடிமைகள் எனப்பட்டோர் அரசில் உயர்பதவி வகித்தனர். மாபெரும் வெற்றிகளுக்கு இவ் வடிமைகளே காரணமாயினர். குத்புத்தீன் ஐபெக் என்ற அடிமையே கோரி முகம்மதுவின் இந்தியப் படையெடுப்புகளில் பெரிதும் துணை புரிந்தார். கோரி முகம்மது இல்லாத நிலையில் தாமே படையெடுப்புகளை முன்னின்று நிகழ்த்தினர். இத்தியார் உத்தீன் முகம்மது பின் பக்தியார் கில்ஜி என்ற அடிமை வங்கப் படையெடுப்பை மேற்கொண்டார்.

குறிப்பிடத்தக்க காரணங்கள்: மேற் சொல்லப்பட்ட பொதுவான அடிப்படைக் காரணங்கள் தவிரச் சில தனிப்பட்ட காரணங்களும் இருந்தன. ஜெயபாலன் என்ற மன்னர் சபுக்டஜின், மகமது ஆகியோரால் முதலில் தோற்கடிக்கப்பட்டார். மீண்டும் தன் படை பலத்தைப் பெருக்கி எதிர்த்துப் போரிட முயன்றிருந்தால் அம் மன்னர் இறுதியில் வெற்றி பெற்றிருக்கக்கூடும். ஆனால் அவ்வாறு செய்யாது தீயை வளர்த்து அதில் குதித்து அவர் உயிர் துறந்தார். இதைப் போலவே சிந்து அரசனான தகீர் என்பானும் அராபியர்களை எதிர்த்து இறுதிவரை போராடாமல் தற்கொலை செய்து கொண்டார் என்று அறிகின்றோம்.

படையினரை நடத்திச் செல்பவன் சாதாரண படை வீரனைப் போல் நடந்து கொள்ளாது படைக்குத் தலைமை வகித்து ஆணைகளிட்டு வெற்றியடைய வழி செய்ய வேண்டும் என்பதைத் தகீர் உணரவில்லை. எனவே தகீர் எதிரிகளின் படைக்குள் புகுந்து அதன் நேரடித் தாக்குதலுக்கு இலக்காயினர்.

இங்ஙனம் அவ்வப்போது போர்க்களங்களில் இந்துப் படைத்தலைவர்கள் செய்த தவறுகளும் அவர்தம் தோல்விக்குக் காரணமாயின.

கஜ்னவைடுகள், கோரிகள் ஆட்சிமுறை

சுல்தானின் பதவி : இந்தியாவில் சுல்தானின் பதவியானது ஓரளவு அடிமை நிலைமையில் இருப்பதைப் போல் புதிய சுல்தான்கள் உணர்ந்தனர். முஸ்லீம்கள் பெரும்பான்மையாக இருந்து கொண்டு மன்னரை நெருங்கிய போது முஸ்லீம் அதிகாரிகளும் மன்னரது ஆணையை மதிக்காது செயல் பட்டனர். மன்னரையே மதிக்காது கலகமனப் பான்மையோடு இருந்த அதிகாரிகளைத் துண்டிப்பது அவசியம் என்றாலும் கூட அது இஸ்லாமிய சட்டத்திற்கு ஒவ்வாததாக இருந்தது. மேலும் கொலையும், கொள்ளையும் எங்கும் தாண்டவம் ஆடி நாட்டின் சுதந்திரத்

திற்கும், அமைதிக்கும், பாதுகாப்பிற்கும் ஊறுவிளைவித்த போது இக் குறைகளை எல்லாம் களைவதற்கான புதிய சட்டங்களை அதாவது சமயச் சட்ட அறிஞர்களால் ஒத்துக்கொள்ளப் பட இயலாத சில சட்டங்களை நாட்டுக்கு நலன் விளைவித்தால் போதும் என்னும் எண்ணத்தில் ஆச்க அரசர்கள் முன் வந்தனர். எனவே யாவராலும் ஒப்புக் கொள்ளப் பட்டதும், முஸ்லீம் சமய அடிப்படையில் அமைந்ததுமான அரசுக் கொள்கையை விதித்து அதற்கு மாறுன அரசாங்கக் கொள்கையை வகுக்க வேண்டுவது அவசியமாயிற்று. அதனோடு இந்தியாவில் இஸ்லாமிய சமயத்துக்கும், இஸ்லாமிய அரசுக்கும் இருந்த அடிப்படையான வேறுபாடுகளை ஒப்புக் கொள்ள வேண்டுவதும் அவசியமாயிற்று. சமயச் சட்ட அறிஞர்களும், சமயக் கொள்கை நிபுணர்களும் அரசுக்கு அல்லது அரசுப் பொறுப்பை மேற்கொள்பவர்க்கு அவர்கள் என்னென்ன செய்ய வேண்டுமென்பதை அதிகாரத்தோடு எடுத்துக்கூற உரிமையுள்ளவர்களா ? இல்லையா ? என்னும் கேள்வி எழுப்பப்பட்டது.டில்லிச் சுல்தானிய ஆட்சியின் போது இஸ்லாமிய அரசு இஸ்லாமிய சமயம் என்னும் இரண்டின் அதிகார வரம்புகள் தனித்தனியே பிரிக்கப் படுவதற்கான முயற்சிகள் நடைபெற்றன. முஜ்தாகீதுகள், உலேமாக்கள் முதலியோர் அரசு பற்றிய காரியங்களில் தலையிடுவதை மன்னர் தடுத்தார்.

அரசு நிறுவனம் :

முஸ்லிம் அரசர்களிடையே புதிய கருத்து மாற்றம் ஏற்பட்டது. இந்தியாவைப் பொறுத்தவரையில் இந்துக்களை முற்றிலும் ஆட்சித் துறையிலிருந்தும் இராணுவ ஊழியத்திலிருந்தும் விலக்கி விடுதல் என்னும் கொள்கை மூலம் அரசாங்கத்தைத் திறம்பட நடத்த முடியாது என்பதை டெல்லிச் சுல்தான்கள் பலர் உணர்ந்தனர். ஏற்கெனவே இருந்த அரசாங்க நிறுவனங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதனை உணர்ந்தனர். ஏனென்றால் அவைகளுக்குப் பதிலாக ஏற்படுத்தப்படக்கூடிய புதிய நிறுவனம் ஏதும் அவர்களிடம் இல்லை. இந்தியத் தளபதிகளான தெவந்த்ராய், ஜெய்ரென் விஜய்ராய் முதலியவர்களையும் வேறு பலரையும் முஸ்லிம் மன்னர்கள் நியமிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. டில்லிச் சுல்தானிய அரசர்களின் காலத்தில் இந்திய அதிகாரிகள் பலரும் அவரவர் பதவிகளில் தொடர்ந்து நீடிக்குமாறு விடப்பட்டனர். பெரும் இந்தியத் தலைவர்கள் முதல் கிராம அதிகாரிகள் வரை எல்லா இந்திய அதிகாரிகளும் தங்கள்

தங்களது அதிகார வட்டத்துக்குள் மைய அரசின் உறுப்பினர் களாக இருந்து பணியாற்றினர். குத்புதீன் டில்லி அரியணை யைக் கைப்பற்ற ரந்தோல் போன்ற இந்தியத் தளபதிகளும் இந்தியப் போர் வீரர்களும் பக்கபலமாய்த் துணை நின்றனர். இத்தகைய சூழ்நிலை இருந்தமையால் டில்லிச் சுல்தானிய அரசை இந்திய இஸ்லாமிய அரசு என வரலாற்று ஆசிரியர்கள் அழைக் கின்றனர்.

சுல்தான்: நாட்டின் மன்னராகத் திகழ்ந்தவர் சுல்தான் என்று அழைக்கப்பட்டார். ஆரம்பத்தில் அப் பட்டத்தை அளித்தவர் கலீஃபா ஆவார். சுல்தான் என்னும் சொல்லானது அராபிய மொழிச் சொல்லாகும். சுல்தான் என்னும் பட்டம் வழங்கப்பட்டபோது சில சடங்குகள் செய்யப்பட்டன. அச் சடங்குகள் நாட்டின் ஊரியல் இராணுவ அதிகாரங்கள் இரண்டும் ஒரே மனிதரிடம் இணைந்து இருந்தன என்பதைக் காட்டின. ஒரு தடவை வழங்கப்பட்ட பின் அது பரம்பரைப் பட்டமாக மாறியது. ஒருவர் இறந்து மற்றொருவர் அப் பட்டத் திற்கு வரும்போது முதலாமவர்க்குச் செய்யப்பட்டது போல் பின் வந்தவர்க்கும் அரச பட்டத்திற்குரிய சடங்குகள் செய்யப் பட்டன. ஒவ்வொரு முறையும் பட்டத்திற்குரியவர் இப் பட்டம் வழங்கப்படுவதற்கு முன் அதற்கான விண்ணப்பஞ் செய்ய வேண்டும். மகம்மது கஜினியின் வழித்தோன்றல்கள் அனை வரும் சுல்தான் என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொண்டனர். மகம்மது கோரியின் மறைவிற்குப் பின்னர் ஆளுநர்களாயிருந்த தாஜ் உத்தீன், எல்டோஸ், குத்புதீன் அய்பெக் ஆகியோரும் அய்பெக்கிற்குப் பின் அரியணையில் அமர்ந்த ஒவ்வொரு அரசரும் டெல்லிச் சுல்தான் என்று பட்டம் சூட்டிக்கொண்டனர். இல்டுமிஷ் பெரோஸ்ஷா போன்ற மன்னர்கள் தங்களது பட்டங்களை உறுதி செய்து தரும்படி கலீஃபாவிடம் விண்ணப்பம் செய்து கொண்டனர்.

வல்லரசு: சுல்தான் வல்லரசாக எல்லையற்ற அதிகாரத் தைச் செலுத்துவோராகத் திகழ்ந்தாலும் அரசரின் அதிகாரம் உலேமாக்களாலும், முஜ்தாகீதுகளாலும் ஓரளவு கட்டுப் படுத்தப்பட்டது. சமயத்துறை சம்பந்தமானவற்றைச் சுல்தான் கள் அவர்களிடமே விட்டிருந்தனர். பிற்காலத்தில் அல்லாவுதீன் கில்ஜி, மகம்மது பின் துக்ளக்கைத் தவிர வேறு எந்தச் சுல்தா னுக்கும் சமயச் சட்டங்களால் வரையறுக்கப்பட்ட, விதி முறை களுக்கு மாறாக நடக்கத் துணிவு ஏற்பட இல்லை. ஈத் விடுமுறை நாட்களிலோ பொதுத் தொழுகை நடைபெற்ற வேளைகளிலோ

சுல்தான்கள் அவற்றில் அரசியல் காரணங்களுக்காகவே கலந்து கொண்டனரேயன்றிச் சமயக் காரணங்களின் பொருட்டு அன்று என்று சின்ஹா எனும் ஆசிரியர் உரைக்கின்றார். வழிபாடுகளை நடத்தியவர்கள் அந்தக்கென்றே தனிப்பட்ட முறையில் நியமிக்கப்பட்டு இருந்த இமாம் என்னும் அதிகாரிகளே ஆவர். இமாம் பதவி நாட்டின் மிக முக்கியமான பதவிகளில் ஒன்று என்றும் கருதப்பட்டது. மன்னர் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும் என்னும் கொள்கையே முன்பு நிலவியது. பில்குதீஜன் என்பாரின் மரணத்திற்குப் பின் அமீர்பாரி என்பவர் பட்டத்திற்கு வந்தார். ஆனால் அவருடைய தீய நடத்தையின் விளைவாக மக்கள் சபுக்டிஜின் என்பாரைக் கஜினியின் தலைவ ராகத் தேர்ந்தெடுத்ததையும் புஹராம்ஷாவிற்குப் பின்னர் அலாவுதீனைத் தேர்ந்தெடுத்ததையும் இதற்குச் சான்றுகக் காட்டலாம் ஆனால் சுல்தானிய பதவியை அடைவதற்குரிய வழி பொதுவாக நியமன வழியே அன்றித் தேர்தல் வழி அன்று என்று உறுதியாகக் கூறலாம். மன்னர் ஒருவரது மரணத் திற்குப் பின் யார் பட்டத்திற்கு வருவது என்பதை டில்லியில் இருந்த பெருமக்கள் தீர்மானித்தனர். நாற்பதின்மர் என்னும் துருக்கிய அடிமைகள் பட்ட உரிமையைத் தீர்மானிப்பதில் செலுத்திய செல்வாக்கே இதற்குச் சிறந்த சான்றாகும்.

உயர் குடியினர் (Aristocracy): மன்னருக்கு அடுத்த படியாகச் சுல்தானியத்தில் சிறப்பிடம் பெற்றவர்கள் உயர் குடியினர் (பிரபுக்கள்). அவர்கள் அரசரிடமிருந்து பரப்பு மிக்க ஜாகீர்களையும், சிறப்பு மிக்க பட்டங்களையும், பெருஞ்சேனை களின் தலைமைப் பதவிகளையும், ஆளுநர் பதவிகளையும் பெற்றி ருந்தனர். பட்டத்திற்கு வரும் போதோ அல்லது வெற்றிகளைப் பெறும் போதோ சுல்தான் பல பதவி உயர்வுகளையும் பட்டங் களையும் வழங்குவது வழக்கம். முக்கிய நண்பர்கள் ஆதர வாளர்கள் ஆகியோரை அமீர்களாக நியமிப்பதும் வழக்கம் எனத் தெரிகிறது. உயர் குடியினரில் மூன்று பிரிவினர் இருந்தனர் அவர்கள் அமீர்கள், மாலிக்குகள், கான்கள் என அழைக்கப்பட்டனர். இவ்வுயர் குடியினர் பெரும் ஜாகீர்களின் உரிமையாளர்களாகப் பெருஞ்சேனைகளை வைத்திருந்தனர் உண்மையிலேயே உயர் குடியினருக்கு ஜாகீர் வழங்கும் வழக்க மானது, டில்லிச் சுல்தானியர்களின் ஆட்சியின் போது தான் பெருவாரியாகக் கைக்கொள்ளப்பட்டது. சுல்தானுக்குத் துரோகம் இழைத்த உயர் குடியினருக்குக் கூடக் கிராமங்கள் தானமாக வழங்கப்பட்டன. ஜாகீர் முறையின் விளைவுகள் கஜ்னவைடு அரசுக்குப் பாதகமாக அமைந்தன. ஜாகீர்

முறையால் பரம்பரையாகப் பதவி வகிப்போரின் எண்ணிக்கை பெருகி, ஊழலும் திறமைக் குறைவும் அரசில் தோன்றின.

தனி உரிமையாளர் : சுல்தான் எல்லா உடைமைகளுக்கும் சொந்தமானவராயும், நிலம் நீர் ஆகியவற்றிற்கு சொந்தத் தலைவராயும், கொள்கை அளவில் மட்டுமின்றி நடைமுறையிலும் திகழ்ந்தவர். தாமே விரும்பி அளித்தவற்றை வேண்டிய போது திரும்பப் பெற்றுக் கொண்டார். உயர் குடியினர் இறந்தவுடன் அவர்களின் உடைமைகள் யாவும் அரசருக்குச் சொந்தமாயின.

ஆட்சிப் பிரிவுகள் : போரசின் பரப்பு, காலத்திற்குக் காலம் மாறுபட்டு வந்தது. அப் பேரரசில் இரண்டு தனிப்பட்ட ஆட்சித் துறைப் பகுதிகள் இருந்தன. ஒன்று சுல்தானின் நேரடி ஆட்சியிலும், மற்றொன்று அவரது மறைமுகமான ஆட்சியின் கீழும் கட்டுப்பட்டிருந்தன. தோற்ற சிற்றரசர்களிடம் அவர்களது நாட்டைத் திரும்ப அளித்துக் கப்பம் கட்டி வருமாறு செய்யும் வழக்கம் சுல்தான்களின் நிலையான கொள்கையாக இருந்து வந்துள்ளது. அச் சிற்றரசர்களை மிகவும் விழிப்போடு கண்காணித்து வந்தனர். அவர்களில் பலர் அடிக்கடி அரசவைக்கு வந்து போகும்படி பணிக்கப்பட்டனர். நன்கு வரையறுக்கப்பட்ட பெரும் மாநிலங்கள் பல பேரரசில் இருந்ததாகத் தெரிகிறது. ஒரு மாநிலமானது பொதுவாகப் பல மாவட்டங்களாக அல்லது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவும் ஷிக் என அழைக்கப்பட்டது. ஒவ்வொரு ஷிக்கும் பல இக்தாத்துகளாகப் பிரிக்கப்பட்டது.

அமைச்சர்கள் அவை : மகமது கஜினியின் காலத்திலிருந்து அமைச்சர்கள் அவை போன்ற தொரு நிறுவனம் சுல்தானின் அரண்மனையில் இருந்துவந்ததாகத் தெரிகிறது. சுல்தான் அடிக்கடி அதைக் கலந்தாலோசித்தே காரியங்கள் செய்வது வழக்கம். சுல்தானுக்கு உடனடியாகக் கீழே இருந்த இவர்கள் ஆட்சித்துறைப் பகுதிகள் அனைத்திலும் பரவலாக நியமிக்கப்பட்டிருந்த அதிகாரிகளுக்கும், சுல்தானுக்கும் இடையே இருந்தனர். அவர்கள் சுல்தானுக்கு நேரடியாகப் பொறுப்பு வாய்ந்தவர்கள். தலைமை அமைச்சராக விளங்கியவர் வசீர் என அழைக்கப்பட்டார். அவர் சுல்தானின் நம்பிக்கைக்கு உகந்தவராகவும், மிகவும் வல்லமை வாய்ந்தவராகவும் விளங்கினர். சுல்தானின் மிக முக்கிய அதிகாரிகளாக வசீர், சேனாதிபதி, அரிஜ், ஹஜீப், திவான் ஆகியோர் விளங்கினர். முஷ்ரீப், முஸ்தபி என்னும் அதிகாரிகள் இருவரைப்பற்றியும் கேள்விப்படுகிறோம்.

வசீர் (Wazir) : அமைச்சரவையில் தலைசிறந்த பதவியை வகித்தவர் வசீர் என்னும் அதிகாரியே. இராணுவக் காரியங்களைத் தவிர மற்றைய காரியங்கள் யாவற்றையும் வசீரே தலைமை தாங்கி நடத்தினர். எனவே மிகவும் கவனத்தோடு ஆராய்ந்து சிறந்தவரையே வசீராகச் சுல்தான் நியமிப்பது வழக்கம். வசீரின் பதவி கொள்கை அளவில் எவ்வளவு முக்கியமானதாக இருந்த போதிலும் நடைமுறையில் சுல்தானின் செயலாளர் போன்றே அவர் தம்மைக் கருதிக் கொண்டார். மன்னர்கள் யதேச்சாதிகாரிகள். மன்னரின் பெறுப்புக்கு ஆளான வசீர்களின் பதவி பறிபோனது மில்லாமல் உயிரும் பறிக்கப்பட்டது. டாக்டர் திரிபாதி என்பவர் வசீருக்கென்று தனியே ஒரு மதிப்போ, அதிகாரமோ இருந்ததாகத் தெரியவில்லை; பிரபுக்கள் ஒன்று சேர்ந்து எதிர்த்தால் சுல்தானால் கூட அவரைக் காப்பாற்ற இயலாது போகும் என்று குறிப்பிடுகின்றார். உயர் குடியினரின் ஆதரவு இருந்தாலே வசீர்கள் உண்மையான அதிகாரத்தைச் செலுத்தும் வாய்ப்புப் பெறமுடியும். தந்திரமும், திறமையும் கொண்ட அமைச்சர்களே செல்வாக்குடன் விளங்கினர். நாட்டின் நிர்வாகப் பொறுப்பை உண்மையில் மேற்கொண்டவர்கள் அமைச்சர்களேயாதலால் அமைச்சரவையின் உறுப்பினர்கள் என்னும் முறையில் அவர்கள் அனைவருமே அதிகாரமும் முக்கியத்துவமும் பெற்றிருந்தார்கள். மன்னர் வசீருடன் மட்டுமின்றி வேறு அமைச்சர்களுடனும் இரகசிய ஆலோசனை நடத்தினர். பல சமயங்களில் வசீர்கள் தம் பதவியினின்றும் நீக்கப்பட்டு வேறு பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். வசீரும் ஏனைய அமைச்சர்களைப் போலவே, யதேச்சாதிகார அரசர்களின் பலத்துக்கும், மனப்போக்குக்கு ஏற்பவும், இராணுவ பலம் கொண்ட உயர் குடியினரின் மனப்பான்மைக்கேற்பவுமே அதிகாரத்தையும், சிறப்புரிமையையும் நிலையாகப் பெற முடிந்தது.

வசீரின் கடமைகள் : வசீரின் கடமைகள் யாவை? அவர் நீதிபரிபாலனம் செய்வது, பொது ஆட்சித்துறை விவகாரங்களைக் கவனித்தல், அரசின் வெவ்வேறு துறைகளை ஒருங்கிணைத்து ஒரு முகமாக இயங்கச் செய்தல், மேற்பார்வையிடுதல், நெறிப்படுத்துதல், கட்டுப்படுத்துதல் என்னும் அதிகாரங்களைச் செலுத்தி வந்தார். சுல்தானின் ஆணைகளுக்குக் கீழ்படிவதற்கு மட்டுமே ஏனைய அமைச்சர்கள் தகுதியுள்ளவர்களாக இருந்தபோது, வசீர் ஒருவர் மட்டுமே அவசியமான அறிவுரையும், ஆலோசனையும் சுல்தானுக்கு வழங்குகின்ற ஓர் அதிகாரத்தைக் கொண்டாடக் கூடியவராக விளங்கினர். வசீருக்கென்று தனி மரியாதையும், செய

ளாளரும், இன்னும் அவரது பதவிக்கேற்ற ஆடம்பரங்களும் அவரிடம் தரப்பட்டிருந்தன.

அரசனின் தனிப் பிரதிநிதி: கொள்கையளவில் ஆட்சித் துறைகள் எல்லாவற்றினுடைய தலைவர்களும் வசீருக்குக் கட்டுப்பட்டவர்கள். வசீர் நல்ல திறமையும் சுறுசுறுப்பும், சமயோசித அறிவும் வாய்க்கப்பெற்றிருந்ததால் அத் தலைவர்கள் மீது ஏராளமான செல்வாக்கையும், கட்டுப்பாட்டையும் செலுத்த முடிந்தது. உண்மையிலேயே வசீரின் ஆணைகளுக்காக அவர்கள் காத்திருந்தனர். வசீரின் சொந்த ஆற்றலைப் பொறுத்தே அவரது வெற்றி தோல்வி அமைந்தன. வசீரை ஏளனம் செய்தவர்களைச் சுல்தான்கள் கண்டும் கண்டு கொள்ளாமல் விட்டதும் உண்டு. அதே போன்று சிறிது வசீரை அவமதித்தாலும் மரண தண்டனையே விதிக்கப்பட்ட காலங்களும் உண்டு. வசீரைச் சுல்தானின் தனிப் பிரதிநிதியாகக் (Personal Representative) கருதினர். அரசர் யதேச்சாதிகாரியாய் இருந்தமையால் சுல்தானின் பிரதிநிதி நாட்டிற்குத் தேவைப்பட்டார். சுல்தானே எதையும் சுயமாகத் தொடங்கக்கூடிய அதிகாரத்தைப் பெற்றிருந்ததால் வசீர் அவர் காட்டிய வழி நடக்க வேண்டியதாயிற்று. நிர்வாக சம்பந்தமான சிறு நடவடிக்கைகளில் அரசர் தலையிடும் வழக்கம் இல்லை. சுல்தான் மறுப்புக் கூறுதவரை சுயமாகவே வசீர் தம் பணிகளைச் செய்தார். எதைச் செய்தாலும் சுல்தானின் இசைவுபெற வேண்டியது வசீரின் கடமையாகும்.

ஒவ்வொரு துறைக்கும் தலைவர்களாகப் பல அமைச்சர்கள் இருந்தனர். வசீர் நியமிக்கப்பட்டது போலவே அவர்களும் சுல்தானுல் வேலையில் அமர்த்தப்பட்டனர்.

சேனுதிபதிகள்: கஜினி முகம்மது போன்ற பெரிய வேந்தர்களின் ஆட்சிகளில் தவிர, மற்ற ஆட்சிகளிலெல்லாம் சேனுதிபதிகள் மிகவும் செல்வாக்குப் பெற்றவர்களாகவே விளங்கினர். ஆளுநர்களாக இருப்பவர்கள் ஆட்சி செய்யும் மன்னர்க்கு எதிராகக் கிளர்ச்சி செய்தால் சேனுதிபதியை மன்னர் கலந்து ஆலோசிப்பது வழக்கமாக இருந்தது. போர்க் கால ஆலோசனைச் சபைகள் கூட்டப்பட்டுச் சேனுதிபதியும், பெருந்தளபதிகளும் மட்டுமே அதற்கு அழைக்கப்பட்டனர். படையானது வசீரின் அதிகார வரம்பிற்குட்படாதிருந்த காரணத்தால் அவர் அச் சபைக்கு அழைக்கப்படவில்லை. எவ்வளவு முக்கியமான அதிகாரியாக வசீர் விளங்கினரோ அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்தவராகச் சேனுதிபதியும் விளங்கினர்.

அமீர்-இ-ஹாஜிப் : அரசனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அதிகாரிகளில் குறிப்பிடத்தகுந்தவர் அமீர்-இ-ஹாஜிப் என்னும் அதிகாரி ஆவார். எப்போதும் சுல்தானின் அருகில் இருந்த அவர் மூலமாகவே இரகசியமான பல முக்கியமான செய்திகள், முறையீடுகள் யாவும் அனுப்பப்பட்டன. எல்லாவிதமான இரகசியக் கடிதப் போக்குவரத்துக்களையும் செய்தவர் இவரே. அரண்மனைக் காவலர்கள் இவருடைய கட்டுப்பாட்டின் கீழ் இருந்தனர். அரசரின் மெய்க்காப்புப்படையும் இவரது கண் காணிப்பிற்கும், கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டிருந்தது. இவர் பொதுவாக நாட்டின் மிக முக்கிய அதிகாரியாகவும், அரசருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவராதலால் செல்வாக்குப் பெற்ற வராகவும் விளங்கினர். வசீர் உட்பட அரசவையிலிருந்த எல்லா அதிகாரிகளும், அவரிடம் சற்று அச்சத்துடனும், மரியாதை யுடனும் நடந்துகொண்டனர். நாட்டில் பல ஹாஜிப்புகள் இருந் தனர். அத்தனை ஹாஜிப்புகளுக்கும் தலைவர் ஒருவர் இருந்தார். ஹாஜிப்பாக நியமிக்கப்பட்டவர் ஆளுநர் பதவியில் அமர்த்தப் படுவதும் உண்டு. ஹாஜிப்பின் பதவியினை நாம் ஆராய்கின்ற போது அவரது பணிகள் இக்கால முதல் அமைச்சரின் தனிச் செயலாளருடைய அலுவல்களை ஒத்திருப்பதைக் காணலாம்.

திவான் : திவான் அல்லது அரசின் செயலாளர் எனப் பட்டவர், அரசவையில் சீரும் செல்வாக்கும் பெற்று ஹாஜிப்பைப் போன்று விளங்கினர். அவரது அலுவலகம் தாவித்கானு என அறைக்கப்பட்டது. அரச கட்டளைகளையும், செய்திக் கடிதங்களையும் வேறு முக்கியமான ஆவணங்களையும் எழுதி அமைப்பதே அவரது கடமையாகும். தாமாகவே அவற்றை அவர் எழுத வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. அவரது அலுவலகத்தில் ஆவணங்கள், நியமனக் கடிதங்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகின்ற கணக்குப் பதிவேடுகள் முதலியவை பாதுகாக்கப்பட்டன. சுல்தான், வசீர் ஆகிய இருவருக்கும் நம்பகமான அதிகாரியாக அவர் விளங்கினர். வசீருக்கும், சுல்தானுக்கும் இடையே நடைபெற்ற நம்பகமான செய்திப் போக்குவரத்துக்களைக் கவனித்துக் கொண்டவரும் அவரே.

அரிஜ் : அரிஜ் அல்லது படை ஊதியத் தலைவர் என்பவர் திவானுக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் பெற்று விளங்கி யவர். ஒற்றுத் துறையை நன்கு அமைத்துக் கண்காணித்தலும் படையில் ஒழுங்கும், கட்டுப்பாடும் நிலைநாட்டுதலாகிய கடமையும் இவர் நிறைவேற்றிய இரண்டு முக்கியமான கடமைகள் எனத்

தெரிய வருகின்றன. வசீர் இப் பணியில் எல்லாவிதமான துணை யையும், அறிவுரையையும் நல்கினர். மாநிலங்களில் பல ஒற்றர் களையும் செய்தி அனுப்புபவர்களையும் நியமித்தவரும் இவரே.

நீதித்துறை : ஹாஜி-உல்-குசாத் என்பார் நீதித்துறையின் தலைவராக இருந்தார். தலைநகரிலும், மாநிலங்களிலும் ஏராள மான நீதிபதிகள் அவரின் கீழ் பணிபுரிந்தனர் நீதித்துறையுடன் வரி திரட்டல், சிவில் நிர்வாகக் காரியங்கள் என்னும் இரு முக்கிய பணிகளும் சேர்க்கப்பட்டிருந்தன. நீதிபதியின் கடமைகளும், ஆளுநரின் கடமைகளும் ஒன்றுக்கொன்று மோதிடா வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வரிவசூல் செய்தல் பணியை ஹாஜிக்கள் கவனித்துக்கொள்ள போர் செய்தல் பணியை ஆளுநர் கவனித்து வந்தார். பெயரளவிலேதான் ஹாஜி-உல்-குஸாத் நீதித்துறையின் தலைவராக விளங்கினர். மிக முக்கிய மான வழக்குகள் விசாரிக்கப்பட்ட வேளைகளில் வசீரே தலைமை வகித்தார். முக்கிய நீதிபதியும், மற்ற நீதிபதிகளும், வரி நிர்ண யிப்பாளர்களும், நீதி மன்ற உறுப்பினர்களாக அமர்ந்திருந்தனர்.

கொத்தவால்: கொத்தவால் என்னும் இராணுவ அதிகாரி பெரும் கலகங்களை அடக்கவும் வெளிநாட்டுப் படையெடுப்புகளை முறியடிக்கவும் நியமிக்கப்பட்டிருந்தார். தலைநகரில் அமைதியை யும் ஒழுங்கையும் பாதுகாக்கின்ற பணியோடு சுல்தானும் வசீரும் தலைநகரில் இல்லாத வேளைகளில் அரச குடும்பத்தைப் பாதுகாக் கின்ற தனிப்பொறுப்பும் கொத்தவாலைச் சார்ந்ததாக இருந்தது. தனிப்பட்ட முறையில் கவனித்துக் கொள்ளப்பட வேண்டிய கண்ணியமிக்க உயர் சிறைவாசிகள் இவருடைய பொறுப்பிலே தான் இருந்தனர்.

முஷ்ரிஃப்-முஸ்தாபின் : நாட்டின் பொது சிறைக்கூடம் இராணுவ அதிகாரியாகவும், எப்போதும் ஒரு சிறு படையினை வைத்திருந்தவருமாகிய ஓர் சிறைக்கூட ஆளுநரின் பொறுப்பில் இருந்தது. அரசாங்கத்தின்பால் கொண்டுவரப்பட்ட சிறியனவும், பெரியனவும் ஆகிய எல்லாப் பொருள்களுக்கும் கணக்கு வைத்துக்கொள்வதே முஷ்ரிஃபின் கடமையாகும். அலுவலகங் களை அவ்வப்போது பரிசோதித்து உள்ள நிலைமையை விவரமாக அரசருக்கு அறிவித்து வந்த பொதுக் கண்காணிப்பாளராக அவர் விளங்கினர். முஸ்தாஃபின் என்னும் அதிகாரி வரிவசூல் தொகையைத் திரட்டல், இருப்புத் தொகையைப் பாதுகாத்தல் என்னும் இரு பணிகளையும் பொக்கக் கணக்கை மேற்பார்வை யிடுதல் என்னும் பணியையும் மேற்கொண்டிருந்தார்,

மாநில ஆட்சி (Provincial administration): மாநில அரசு மைய அரசின் பிரதிபலிப்பாகவே இருந்தது. மாநில ஆட்சித் துறையில், ஆளுநர், காஜி, ஜஷிராஜி என்னும் செய்திகளை மேற் பார்வையிடும் அதிகாரி, ஆகிய சம அந்தஸ்துள்ள மூன்று அதி காரிகள் தலைவர்களாக விளங்கினர். ஆளுநர் படைகளை நடத்திச் சென்று கப்பப் பணம் வசூலித்தார். சிவில் விவகாரங்களைக் கவ னித்துக்கொள்வதும் வரி வசூல் செய்வதும் காஜியின் கடமைக ளாகும். சிவில் விவகாரங்களுக்குக் காஜியும், இராணுவக் காரி யங்களுக்கு ஆளுநரும் தலைவர்களாக விளங்கினர். காஜிக்கு உதவியாக அமீர் அல்லது வரிவசூல் செய்பவரும் முஷ்ரிஃப் அல்லது கணக்குத் தணிக்கைத் தலைவர்களும் இருந்தனர். காஜியோடு கூட அரசரிடமிருந்தவர் செய்தி எடுத்துச் செல் வோரின் மேற்பார்வையாளராவார். இவர் மாநில அரசில் நடப்ப வற்றை ஆளுநரின் உதவியோடு மைய அரசிற்கு அனுப்பி வைப்பார். ஆளுநர் அல்லது அமீரின் கீழ் ஹஜிப், முஸ் தஃபி, முஷ்ரிஃப் ஆகியோர் அவரது அலுவலகத்தில் பணி புரிந்தனர். மாநில ஆளுநர் மைய அரசு பலவீனமாக இருந்த சம யங்களிலெல்லாம் தம் விருப்பப்படி நடந்துகொண்டார்.

இங்ஙனம் கஜினி முகமதுவும் கோரி முகமதுவும் டில்லி சுல்தானிய ஆட்சித்துறை அமைப்புக்கோர் அடிக்கல்லை நாட்டி விட்டுச் சென்றனர். பின்னர் வந்த கில்ஜிகளும் துக்ளக்குகளும் அவ் வடிப்படையின் மீதேயே தங்களது ஆட்சித்துறை எனும் அழகிய மாளிகையை எழுப்பினர்.

10. அடிமை வம்சம் எனப்பட்ட துருக்கிய வம்சம்

குத்புத்தீன் ஐபெக்: அடிமை வம்சம் — பெயர்ப் பொருத்தம் — கோரிக்கு உதவி — வாரிசுரிமை — பொருமை — அலிமர்த்தன்—மதிப்பீடு. இல்துத்மிஷ்: பதவி உயர்வு—டெல்லிக்கிளர்ச்சி—தாஜ்உத்தீன் எல்டோஸ் — குபாச்சா — கியாசுத்தீன் — இராசபுத்திரர்கள் — மங்கோலியர்கள் — ஆட்சி அமைப்புமுறை — உருக்நுத்தீன். இரஸியா பேகம்: ஜுனைதி—எதிர்ப்புகள் — பதவி நியமனம் — சதிவேலைகள் — ஐடிஜின்—பகரம்ஷா—மதிப்பீடு — அலாவுத்தீன் மதுத்ஷா — நசீருத்தீன் முகம்து — கியாஸ் உத்தீன் பால்பன்: இடையூறுகள்—கொள்கையர்—வங்கம்—கிளர்ச்சிகள்—உள்நாட்டுக் கொள்கை — மதிப்பீடு — கைக்குசுரு.

1. குத்புத்தீன் ஐபெக்

அடிமை வம்சம், பெயர்ப் பொருத்தம்: குத்புத்தீன் ஐபெக்கினுல் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட வம்சம் அடிமை வம்சம் என்று பொதுவாக அழைக்கப்படுகிறது. ஆனுல் அவ் வம்சத்தை அவ்வாறு அழைப்பது பொருத்தமில்லை. ஏன் எனில் குத்புத்தீன் ஐபெக், இல்துத்மிஷ், பால்பன் போன்றவர்கள் அரசர்கள் ஆவதற்கு முன் அடிமைகளாக இருந்தாலும் தங்க ளுடைய தலைவர்களால் விடுதலை செய்யப்பட்டவர்களாவர். எனவே மேற்கூறியவாறு அடிமை வம்சம் என்று அழைப்பது

பொருந்தாது. அவர்களை ஆப்கானியர் என்று அழைப்பதும் பொருந்தாது. ஏன் எனில் அவர்கள் துருக்கியர்கள் ஆப்கானியரோ அல்லது பத்தானியரோ அல்லர்.

கோரிக்கு உதவியமை : குத்புத்தீன் ஐபெக் தான் இந்தியாவில் துருக்கிய அரசை உண்மையில் நிறுவியவர் எனச் சிலர் கருதுகின்றனர். துருக்கியத் தாய் தந்தையருக்கு துருக்கிஸ்தானத்தில் பிறந்த இவர் சிறுவனாக இருக்கையில் நிஜாபூருக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கே அடிமையாக விற்கப்பட்டார். இவரை வாங்கிய காஜி இறந்து விடவே மீண்டும் அடிமைச் சந்தைக்குக் கொண்டு வரப்பட்ட இவரை முகம்மது கோரி விலைக்கு வாங்கினார். தன் திறமையினால் தன் தலைவனின் அன்பைப் பெற்ற இவர் முதலில் படையின் ஒரு பகுதிக்குத் தலைவரானார். பின்னர் குதிரைப் படைகளுக்குத் தலைவரானார். இந்தியப் படையெடுப்புகளில் முகம்மது கோரிக்கு இவர் மிகவும் உதவி செய்தார். முகம்மது கோரியின் இந்தியப் படையெடுப்புகள் பெரும்பாலும் இவரால் நிகழ்த்தப்பட்டவையே யாகும். 1192 இல் நடைபெற்ற தரைன் சண்டையில் வெற்றி தேடித் தந்தவர் இவரே. நசீருத்தீன் போன்ற சில உயர் குடியினருடன் திருமண உறவு கொண்டு குத்புதீன் தன் நிலையைப் பலப்படுத்திக் கொண்டார். தாஜ் உத்தீன் எல்டோஸ் என்னும் பிரபுவின் மகளை மணந்தார். நசீர் உத்தீன் குபாச்சாவிற்குத் தன் சகோதரியை மணம் செய்வித்தும், தன் மகளை இல்துத்மிஷ்விற்கு அளித்தும் உறவுகளைப் பலப்படுத்திக் கொண்டார்.

வாரிசுரிமை : 1206 இல் முகம்மது கோரி இறந்தார். ஆண் மகவு தனக்கு இல்லாத காரணத்தால் அவர் குத்புத்தீனைத் தன்னுடைய வாரிசாக நியமித்து இருந்தார். தாஜ் உத்தீன் எல்டோஸ் கஜினிக்கு அரசரானார். கோரி இறந்த பின்னர் லாகூர் மக்கள் குத்புத்தீனையே ஆட்சி செய்யும்படிக் கேட்டுக் கொண்டனர். அதற்கு இணங்கி லாகூர் சென்ற இவர் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டார்.

பொருமை : குத்புத்தீன் ஐபெக்கின் எழுச்சி தாஜ் உத்தீன் போன்றவர்களின் உள்ளத்தில் பொறுமையை உண்டாக்கியது. எனவே அவர் கஜினியை நோக்கி 1208இல் படையெடுத்துச் சென்று தாஜ் உத்தீனை வென்றார். ஆயினும் எல்டோஸ், ஐபெக்கை விரட்டியடித்தார். ஐபெக் லாகூருக்குத் திரும்பினார்.

அலிமர்த்தன் : வங்காளம், பீஹார் ஆகிய வற்றின் பொறுப்பினை நிருவகித்து வந்த இக்தியாருதின் இறந்து விடவே அவருக்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்ற அலிமர்த்தன்கான் தன்னை விடுதலை பெற்ற அரசன் எனக் கூறிக்கொண்டார். ஆனால் அங்கு இருந்த கில்ஜித் தலைவர்கள் அலிமர்த்தன்கானைச் சிறையில் அடைத்தார்கள். அலிமர்த்தன் சிறையிலிருந்து தப்பி குச்புதீனிடம் வந்து உதவி கேட்டார். கில்ஜிகள் ஐபெக்கைத் தங்கள் தலைவனாக ஏற்றுக்கொண்டு கப்பம் கட்ட ஒப்புக் கொண்டனர். ஐபெக் இராஜபுத்திரர்களுக்கு எதிராகப் படை யெடுத்துச் செல்ல இயலவில்லை. 1210இல் போலோ விளையாடிக் கொண்டிருந்தபோது ஐபெக் குதிரையிலிருந்து வீழ்ந்து உயிர் துறந்தார். சில வரலாற்று ஆசிரியர்கள் ஐபெக்கை விடுதலை பெற்ற அரசன் எனக் கருதுவதில்லை. இபின் பதூதா குறித்துள்ள பட்டியலில் அவர் காலத்திய முஸ்லீம் அரசர்களின் பெயர்களில் இவர் பெயர் காணப்படவில்லை.

இஸ்லாமிய சமயத்திற்கு உதவி : இந்தியாவில் இஸ்லாமிய சமயம் பரவ ஐபெக் அரும்பணியாற்றி உள்ளார். முஸ்லீம் இந்தியாவைப் பெருமளவிற்கு விரிவாக்கியதில் ஐபெக்கிற்குப் பெரும் பங்கு உண்டு. ஐபெக் சிறந்த வீரர். போர்க்களத்தில் பல வெற்றிகளைப் பெற்றவர். பெரும்பாலும் அவர் கலந்து கொண்ட போர்களில் தோல்வியுற்றதில்லை.

மதிப்பீடு : ஐபெக் போர்க்களத்தில் வெற்றி பெற்றாலும் கூட ஆட்சி அமைப்பில் சாதனைகள் ஏதும் நிகழ்த்தவில்லை. ஆட்சித் துறையில் புதிய முறையினை ஏதும் இவர் ஏற்படுத்த வில்லை. அவருடைய ஆட்சி அமைப்பு இராணுவ அடிப் படையில் அமைந்தது. படை வீரர்களைத் தலைநகரிலும் நகர்ப் புறங்களிலும் நிறுத்தி வைத்திருந்தார். ஊர் ஆட்சி ஆங்காங்கு இருந்த மக்களாலேயே மேற்கொள்ளப்பட்டது. இந்துக்களுக்கு ஆதரவாக அவர் விளங்கினார் என்று சொல்ல முடியாது. அன்ஹில்வாரா, கலிஞ்ஜார் போர்களில் இந்துக்களைச் சிறை பிடித்து அடிமையாக்கியதோடு இந்துக் கோயில்களின் அழிவின் மேல் மசூதிகளைக் கட்டினார். ஆனால் அமைதிக் காலங்களில் சகிப்புத் தன்மை உடையவராகவே விளங்கினார்.

டாக்டர் ஸ்ரீவஸ்தவா, டெல்லி சுல்தானியம் இந்தியாவில் நிலை பெறுவதற்கு ஐபெக் தான் காரணம் என்று கூறுகின்றார். ஆனால் டெல்லி அரசின் உருவிற்கு இவரே காரணம் என்று டாக்டர் அபிபுல்லா கூறுவதை ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

குத்புத்தீன் ஐபெக் இறந்த பின்னர் அமீர்களும் மாலிக்குகளும் சேர்ந்து அராம் ஷா என்பவரை டெல்லிச் சுல்தானியத்திற்கு அரசராக்கினர். அராம் ஷாவிற்கும் குத்புத்தீனுக்கும் இடையே உள்ள உறவு என்னவென்று திட்டமாகத் தெரியவில்லை. அராம்ஷா குத்புத்தீனுடையமகன் என்று கூறப்படுவதை மின்-ஹாஜ்-உஸ்சிராஜ் ஏற்றுக் கொள்ளாது குத்புத்தீனுக்குப் பெண் மகவு மட்டுமே உண்டு என்றும், ஆண் மகவு இல்லை எனவும் கூறியுள்ளார். அபுல் பாசல் அராம் ஷா குத்புத்தீன் சகோதரன் எனக் கூறுகின்றார். எக் கருத்து உண்மையெனத் தெரியவில்லை. அராம் ஷா பலவீனமாக இருந்ததால் ஆளுநர்கள் அவரை ஏற்க மறுத்து பதாவுனின் ஆளுனனுன ஷம்சுத்தீன் இல்துத் மிஷ் அல்லது அல்துமிஷ்ஷை ஆட்சிப் பொறுப்பை ஏற்குமாறு அழைப்பு அனுப்பினர்.

II. இல்துத் மிஷ்

அடிமை வம்சம் என்றழைக்கப்பட்ட வம்சத்து அரசர்களில் இல்துத் மிஷ் சிறந்தவராகக் கருதப்படுகின்றார். அடிமையாகத் தன்னுடைய வாழ்க்கையைத் தொடங்கிய அவர் திறமையினால் படிப்படியே உயர்ந்து உயர் பதவிகளைப் பெற்றார். துருக்கிஸ்தானத்தைச் சேர்ந்த இல்பாரி பிரிவின் குடிமகனுக விளங்கிய அவர் உயர் குடும்பத்தைச் சார்ந்தவர். இளமைக் காலத்தில் காண்பதற்கு அழகிய கட்டான தோற்றமும் அறிவுத் திறனும் ஒருங்கே பெற்று விளங்கினர். இவருடைய அறிவுக் கூர்மை, ஆளுமை ஆகியவைகளைக் கண்டு பொருமை கொண்ட இவரது உடன் பிறப்பாளர்கள் புக்காராவைச் சார்ந்த வணிகரிடம் இவரைவிற்று விட்டனர். அவ் வணிகர் இல்துத்மிஷை மறுபடியும் குத்புத்தீன் ஐபெக்கிடம் விற்றுவிட்டார். ஐபெக்கிடம் அடிமையாக இருந்த இவர் கடுமையான உழைப்பின் பயனுகப் பதாவுன் பகுதிக்கு ஆளுநராக அமர்த்தப்பட்டார். அது மட்டும் இன்றிக் குத்புத்தீன் ஐபெக் தன் மகளை மணம் செய்து கொடுத்து இவரைச் சிறப்பித்தார்.

அமீர் உல் உமாரா: கோக்கர்களுக்கு எதிராக நடந்த போரில் இல்துத் மிஷ் தனது ஆற்றலைப் பயன்படுத்தி அரிய பல வெற்றிகளைத் தேடித் தந்தார். இவ் வெற்றிகளின் சிறப்பை உணர்ந்த முகமது கோரி அடிமை நிலையிலிருந்து இவரை விடுவித்து அமீர்-உல்-உமாரா பதவிக்கு உயர்த்தினர். 1210இல் குத்புத்தீன் ஐபெக் இறந்தபின்பு அவருக்குப் பின் பதவியேற்ற அராம் ஷா தகுதியற்றவராய் விளங்கினர். உயர் குடியினர் இவரை

அழைத்து அரசராக்கினர். ஆயினும் குத்புத்தீனின் படைத் தளபதியினர் இதனை எதிர்த்தனர். ஆனால் முடிவில் தோல்வி யுற்றனர். அதைப் போலவே வஜிப்-உத்-தீன் எனப்படும் காஜி இல்துத் மிஷ் சுதந்திரமானவர் அல்லர் என்ற காரணம் காட்டி எதிர்த்தனர். ஆனால் தான் விடுதலைபெற்றதற்கான சான்றினை இவர் காட்டிய உடன் அவரும் அமைதியுற்றார்.

டெல்லிக் கிளர்ச்சி: 1211இல் இல்துத் மிஷ் அரசரான போது எண்ணற்ற இடையூறுகளைச் சந்திக்க வேண்டியவராக இருந்தார். இந்த இடையூறுகளைக் கண்டு மனம் சோர்ந்து விடா மல் அவற்றை எதிர்கொள்ளும் வழிகளைப் பற்றித் தம் கருத்தைச் செலுத்தினர். டெல்லிக்கு அருகில் கிளர்ச்சி செய்த குத்பி, மாலிக் குகள் ஆகியோரைத் தோற்கடித்து டெல்லிப் பகுதியில் தம் செல் வாக்கை நிலைநாட்டினர்.

எல்டோஸ்: தாஜ்-உத்தீன் எல்டோஸ் என்பவர் இவருக்கு எதிரான மற்றொரு எதிர்ப்புச் சக்தியாக விளங்கினர். முகமது கோரியினுடைய வாரீசாகத் தம்மைக் கருதிக் கொண்ட எல் டோஸ் லாகூரைக் கைப்பற்றினர். இது இல்துத் மிஷ்ஷின் கௌரவத்திற்கு விடப்பட்ட சவாலாய் அமைந்தது. எனவே எல்டோஸிற்கு எதிராகப் படை நடத்திச் சென்று தனேஸ்வரத் திற்கு அருகில் நடைபெற்ற தரைன் சண்டையில் அவரைத் தோற் கடித்தார். எல்டோஸ் கைதியாகப் பிடிக்கப் பட்டு பதாவுன் கோட்டைக்கு அனுப்பப்பட்டு அங்கே கொலை செய்யப்பட்டார். இவ்வாறுகத் தன்னுடைய பலம் பொருந்திய எதிரிகளில் ஒருவ ரான எல்டோஸின் எதிர்ப்பை இல்துத் மிஷ் முறியடித்தார்.

குபாச்சா: இதைப் போலவே குத்புதீன் மறைவுக்குப்பின்னர் நஸீர் உத்தீன் குபாச்சா இவரை எதிர்த்தார். 1217இல் இல்துத் மிஷ் குபாச்சாவிற்கு எதிராகப் படையெடுத்துச் சென்று அவரைப் பஞ்சாபில் இருந்து துரத்தினர். ஆனால் முழுமையாக குபாச்சா நசுக்கப் படவில்லை. 1227இல் மீண்டும் படை நடத்திச் சென்று உச் பகுதியை எதிர்ப்பின்றி குபாச்சாவிடம் இருந்து கைப்பற் றினர். குபாச்சா உக்கிலிருந்து தப்பி பக்கர் என்னும் இடத்தை அடைந்தார். பக்கரைச் சுற்றி வளைத்துக் கொண்டபோது குபாச்சா அமைதி உடன்பாட்டிற்காகத் தன் மகன் மசூத் பஹ ராம் என்பவரை அனுப்பி வைத்தார். ஆனால் அவரும் கைது செய்யப்படவே மனவிரக்தி அடைந்த குபாச்சா பக்கரிலிருந்து தப்பிச் செல்ல முயலுகையில் சிந்து நதியில் மூழ்கி இறந்தார். குபாச்சா தற்செயலாக இறந்ததாகவும் தற்கொலை செய்து கொண்ட

டார் என்றும் கொலை செய்யப்பட்டார் என்றும் வெவ்வேறு வகையில் அவர் மறைவு குறித்துப் பேசப்படுகிறது.

கியாசுதீன்: வங்காளத்தை ஆண்ட அலிமர்த்தன், குத்புத்தீன் ஐபெக்கின் மறைவிற்குப் பின்னர் அலாவுதீன் என்ற சிறப்புப்பெயரைச் சூட்டிக்கொண்டு ஆட்சிக்கு வந்தார் ஆயினும் இரண்டு ஆண்டுக்குப் பின்னர் அவர் இறந்து விட நிசாம்உத்தீன் இவாஸ் எனப்படும் அவர் மகன் கியாசுதீன் என்ற பெயரைச் சூட்டிக் கொண்டு தன் பெயரில் நாணயங்கள் அச்சடித்து குத்பா ஓதப்படுமாறு செய்தார். இதைக் கேள்வியுற்ற இல்துத் மிஷ் 1225 இல் படை ஒன்றினை வங்கத்துக்கு அனுப்பி வைத்தார். இல்துத் மிஷ்ஷின் படையின் வருகையினை கேள்வியுற்ற கியாசுதீன் சரணடைந்து திறை செலுத்த ஒப்புக் கொண்டார். ஆனால் சில காலத்திற்குப் பின்னர் மீண்டும் எதிர்ப்பு உணர்ச்சியை வெளிப்படுத்தவே இல்துத்மிஷ் மீண்டும் படை ஒன்றை அனுப்பி கியாசுதீனைத் தோற்கடித்தார்.

இராசபுத்திரர்கள் : ஐபெக் இறந்தபின்னர் இராசபுத்திரர்கள் துருக்கியர்களை விரட்டிடத் தங்களாலான முயற்சிகளையெல்லாம் செய்தனர். இராசபுதுதிர அரசர்கள் பலர் விடுதலை பெற்றனர். 1226இல் இல்துத் மிஷ் இராந்தாம்பூரைக் கைப்பற்றினார். பரமார இராசபுத்திரர்களின் தலைநகரம் கைப்பற்றப் பட்டது. உதயசிங் என்னும் ஜேலர் அரசர் தோற்கடிக்கப்பட்டுத் திறை செலுத்த ஒப்புக் கொண்டார். இவ்வாறுக இராசபுத்திர அரசுகள் பல வீழ்ந்தன.

பதாவுன், கன்னௌசி, பனாரஸ், கடேக்கர் போன்றவை இல்துத்மிஷின் காலத்தில் தங்களுடைய விடுதலையை உறுதிப் படுத்தின. எனவே ஒன்றன் பின் ஒன்றாக அவை கைப்பற்றப் பட்டன. பக்கர்த், அவுத் ஆகியவை துருக்கியர்களை எதிர்த்தன. இப் படையெடுப்புகளில் துருக்கியர்களுக்குச் சிறிது தோல்வி ஏற் பட்டது.

மங்கோலியர் : மங்கோலியர்கள், செங்கிஸ்கானின் தலைமையின்கீழ் மின்னல் வேகத்தில் மத்திய மேற்கு ஆசியப் பகுதிகளை எல்லாம் வென்று, அதன் பின்னர் சிந்து நதிக் கரையை 1221இல் அடைந்தனர். ஜலால் உத்தீன் மங்பரணி என்பவரை மங்கோலியர்கள் தாக்கினர். அதைச் சமாளிக்க இயலாத மங்பரணி பஞ்சாபிற்கு ஓடி இல்துத் மிஷ்ஷிடம் மங்கோலியருக்கு எதிராகத் தனக்கு உதவி செய்யுமாறு வேண்டினார். ஆனால் இல்துத் மிஷ் அவருக்கு உதவி செய்ய மறுத்துவிட்டார். இதற்

குக் காரணம் இருந்தது. இல்துத் மிஷ், ஜலால் உத்தீனுக்கு உதவி செய்தால் மங்கோலியர்கள் தன்மீது படையெடுப்பார்கள் என்று அவர் பயந்தார். அவர் வாளாவிருந்து விட்டதாலேயே மங்கோலியர்கள் திரும்பிச் சென்றுவிட்டனர் கடைசியாக பணியன் என்னும் நாட்டின்மீது படை நடத்திச் சென்ற அவர், வழியில் கொடிய காய்ச்சலால் பீடிக்கப்பட்டு 1236இல் இறந்தார். 1231-32இல் குதூப்மினார் இவரால் கட்டி முடிக்கப்பட்டது. அதனைக் கட்டும் பணி குத்புத்தீனின் காலத்தில் தொடங்கப் பட்டதாகும். குதூப்மினார் என்ற பெயர் குத்புத்தீன் ஐபெக்கின் நினைவாகச் சூட்டப்படவில்லை என்றும், குவாஜா குத்புத்தீன் என்னும் பாக்தாத்திலிருந்து இந்தியாவிற்கு வந்து வாழ்ந்த வரும் இல்துத் மிஷ் போன்றவர்களால் போற்றப்பட்டவரின் நினைவாக எழுப்பப்பட்டது என்றும் ஓர் கருத்து நிலவுகிறது. இல்துத் மிஷ்ஷின் காலத்தில் லாகூரின் சிறப்பு குறைந்து டெல்லியின் சிறப்பு அதிகரித்தது. டெல்லி படிப்படியாகக் கீழை நாட்டின் கல்வி கலாச்சாரத்தின் இருப்பிடமாக மாறியது.

ஆட்சி அமைப்பு முறை : டெல்லி சுல்தானியர்கள் தங்களுடைய ஆட்சித் துறை நிறுவனங்களுக்கான அடிப்படையினை இல்துத் மிஷ்ஷிடம் இருந்து பெற்றார்கள். வருவாய்த் துறை நீதித் துறை ஆகியவை இவரால் உருவாக்கப்பட்டன. இந்த முயற்சியை இந்தியாவில் வேறு எந்த முஸ்லீம் அரசரும் மேற்கொள்ளவில்லை. தன்னுடைய பேரரசைப் பல இக்தாக்களாகப் (Igtas) பிரித்து உயர் குடியினரின் பொறுப்பில் அவற்றை விட்டிருந்தார். ஒவ்வொரு இக்தாதாரும் சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்ட வேண்டியவராக இருந்தார்.

நாணயங்கள் : இல்துத் மிஷ் நாணயங்களில் தன்னைப் பற்றி சிறப்பாகப் பொறித்து வைத்துள்ளார். முழுவதும் அராபி மொழி எழுத்துக்கள் பொறிக்கப்பெற்ற நாணயங்கள் இவர் காலத்தில்தான் வெளியிடப்பட்டன.

மதிப்பீடு : இல்துத் மிஷ் சமயப்பற்று மிக்கவராய் வாழ்ந்தார். தினமும் ஐந்து முறை தொழுகை நடத்தினார். ஷியாக்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டார். இந் நடவடிக்கைகளின் விளைவாக ஷியாக்குகள் எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். எனினும் தமது ஆற்றலால் புதியதாக உருவாகி இருந்த முஸ்லீம் அரசைக் காத்தார்.

சர் உல்ஸ்லி ஹேக் என்பவர் அடிமை வம்சத்து அரசர்களில் இல்துத் மிஷ் தலை சிறந்தவர் என்று உரைக்கின்றார் டாக்டர்

அபிபுல்லாவும் இல்துத் மிஷ்ஷின் ஆட்சியை மிகச் சிறந்த தொன்று என்று கூறுகின்ருர்.

உருக்நுத்தீன்

இல்துத் மிஷ் இறக்கும் தருவாயில் தன்னைச் சுற்றியிருந்த உயர் குடியினரிடத்தில் தனக்குப் பின்னர் தன்னுடைய மகள் ரஸியாவை வாரிசாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறி அதற்கான உறுதிமொழியையும் பெற்ருர். உயர் குடியினர் அவரிடத்தில் அதற்குச் சம்மதித்து ஒப்புச்கொண்டனர். ஆயினும் அவர் இறந்த பின்னர் தங்களைப்பற்றி உயர்வாக எண்ணிக்கொண்டிருந்த உயர் குடியினர் ஒரு பெண்ணிடம் அடி பணிய விரும்பவில்லை. எனவே இல்துத் மிஷ்ஷின் மூத்த மகனை உருக்நுத்தீன்-பெரோஸ் ஷா என்பவரைப் பதவியில் அமர்த்தினர் அரசனுவதற்கு முன்னர் உருக்நுத்தீன் பதாவுன், லாகூர் ஆகியவற்றின் பொறுப்பினை மேற்கொண்டு இருந்தார். உருக்நுத்தீன் ஒன்றுக்கும் பயன் இல்லாதவராக விளங்கினர். ஆட்சிப் பொறுப்பைக் கவனிப்பதில் தன் எண்ணத்தை செலுத்தாது உடல் உணர்ச்சிகளுக்கு வசப்பட்டு இன்ப வாழ்க்கையில் ஈடுபட்டார். யானையின் மீது அமர்ந்து டெல்லி நகரத்தை வலம் வருவதிலும் மக்களுக்கு வெள்ளிக் காசுகளை அள்ளி வீசுவதிலும், வேடிக்கையாகப் பேசுபவர்கள் நடிப்பவர்கள் ஆகியோரின் துணையைக் கொள்வதிலும் தன் பொழுதைக் கழித்தார். ஆட்சிப் பொறுப்பினைச் சரிவரக் கவனிக்காது அதனைத் தன் அன்னையான ஷா துர்க்கான் என்பவரிடம் அவர் விட்டுவிட்டார். 'ஷா துர்க்கான்' இளமையில் அரண்மனைப் பணிப்பெண்ணுகப் பணி புரிந்தவர். எனவே தன்னுடைய இளமைக் காலத்தில் ஏற்பட்ட துன்பங்களுக்குப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு தன் விரோதிகளாகச் சிலரைப் பதவியிலிருந்து இறக்கியும், சிலருக்கு மரண தண்டனை வழங்கியும் தன் அதிகாரத்தை நிலை நிறுத்தினர். முல்தானம், அன்சி, பதாவுன், லாகூர் ஆகிய பகுதிகளைச் சார்ந்த ஆளுநர்கள் உருக்நுத்தீனின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளவில்லை எனவே உருக்நுத்தீன் அவர்களுக்கு எதிராகப் படை நடத்திச் சென்ருர். அதில் அவருக்கு வெற்றிகிட்டவில்லை. ஏன் எனில் முகமது ஜானித் என்ற இவருடைய வசீர் போரில் கலந்து கொள்ளவில்லை. முஸ்லீம் உயர் குடியினர் அனைவரும் ஷா துர்க்கானைக் கொல்லுவதற்கு முயன்றனர். தன் அன்னையைக் காப்பதற்காக விரைந்து வந்த உருக்நுத்தீன் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப் பட்டார். உருக்நுத்தீனின் ஆட்சி 6 மாதம் 7 நாட்களே நீடித்தது.

III. இரஸியா பேகம்

மக்கள் முன்: உருக்துத்தீனுக்குப் பிறகு இரஸியா பேகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். வெள்ளிக் கிழமை மதியம் நமாஸ் செய்வதற்காகக் கூடியிருந்த மக்கள் கூட்டத்தின் முன்னுல் சிவப்பு உடை அணிந்து இரஸியா பேகம் தோன்றினுர். மக்கள் முன்னுல் மிக அருமையாகத் தன் தந்தையின் விருப்பப் படித் தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டியதையும் அது இயலாமல் போனதையும் எடுத்து உரைத்தார். அது மட்டும் இன்றி ஷா துர்க்கான் இழைத்த கொடுமைகளையும் மக்கள் மனத்தில் பதியும் படி எடுத்து உரைத்தார். அது மட்டும் இன்றி 'நான், அரசியாக ஆனுல் திறமையான தொரு சிறந்த ஆட்சியை நடத்துவேன், இல்லையெனில் தண்டனையாகச் சாவையும் ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருக்கிறேன்' என்று கூறினுர். மக்கள் உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கினுர்கள். அரண்மனையைத் தாக்கி ஷாதுர்க்கானைச் சிறையில் அடைத்து ரஸியாவைப் பதவியில் அமர்த்தினுர்கள்.

ஜுனைதி: இரஸியா பேகம் ஆட்சிக்கு வந்த உடன் அரசுடைமை என்பது மலர் தூவியமஞ்சம் அல்ல என்பதை விரைவில் உணர்ந்தாள். டெல்லி மக்கள் சிலரும் ஒரு சில ராணுவத் தலைவர்களுமே அவருக்கு ஆதரவாக இருந்தனர். ஜுனைதி போன்ற தலைவர்கள் உருக்துத்தீன் இடத்தை நிரப்புவதற்குத் தகுந்த ஆண் ஒருவரைத் தேடிக் கொண்டு இருந்தனர். இரண்டாவதாக இல்துத்மிஷின் ஆண் மக்கள் சிலர் உயிரோடு இருந்தனர். அவர்களும் ஆட்சியைக் கைப்பற்ற முயன்று கொண்டு இருந்தனர். ஒரு பெண்ணினுல் ஆளப்படுவதை விரும்பாத உயர்குடியினர் சிலரும் இருந்தனர். இத்தகைய எதிர்ப்புகளையெல்லாம் சமாளித்து வெற்றிகொள்ள வேண்டிய பொறுப்பு இரஸியாவுக்கு ஏற்பட்டது.

எதிர்ப்புகள்: முல்தானம், அன்சி, லாகூர், பதாவுன் ஆகிய வற்றின் ஆளுநர்கள் ஜுனைதி என்னும் வசீரின் தலைமையில் தங்கள் படையைத் திரட்டிக் கொண்டு டெல்லி அருகில் அணிவகுத்து நின்றனர். அப் பெரும் படையைச் சந்திப்பதற்குப்போது மான படை இரஸியாவிடம் இல்லை. தன் அரச தந்திரத்தின் மூலமாகப் போர் நடத்துவதற்குப் பதிலாக வெற்றிபெறவேண்டும் என்று எண்ணி எதிர்த்து நின்றவர்களிடையே உட்பூசலை உருவாக்கி இஸ் உத்தீன் சலாரி, கபிர்கான் ஆகிய தலைவர்களைத் தன் பக்கம் சேர்த்துக் கொண்டார். அது மட்டும் இன்றிப் பல தலை

வர்கள் தன் பக்கம் சேர்ந்து விட்டார்கள் என்றும் விளம்பரப் படுத்தினர். சேர்ந்ததோடு யார், யார் சலாரி, கபிர்கான் ஆகிய வர்களோடு அவர் சேருவதற்கு முன்னர் சேர்ந்து இருந்தார்களோ அவர்களுடைய தலைவாங்கப்பட்டது. ஜுனைதி தப்பித்து மறை வாக வாழ்ந்து சீர்முர் குன்றுகளில் இறந்தார். திடீர் என்று இரஸியாவின் பெருமை உயர்ந்தது. எல்லா மாநில ஆளுநர்களும் அவருடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்கு ஒப்புக் கொண்டதோடு திறை செலுத்தவும் முன் வந்தனர்.

பதவி நியமனம்: இரஸியா பேகம் தனது இறைமையின் மதிப்பை உயர்த்த வேண்டும் என்பதற்காக எண்ணிறந்த செயல் களைச் செய்தார். முகாச-புத்தீன் என்பவர் வஸாரத்தாக நியமிக் கப்பட்டார். கபீர்கான் சலாரி ஆகியோரின் ஜாகீர்கள் அபகரிக் கப்பட்டன. துருக்கியர்கள் உயர் பதவியில் இருந்தபடியால் சிறிது கர்வம் கொண்டு இருந்தனர். அவர்களுடைய ஆண வத்தை அடக்க வேண்டும் என்பதற்காக முஸ்லீம் அல்லாதவரை யும் உயர் பதவியில் நியமித்தார். ஜமால்-உத்தீன்-யாகுத் என்ற அபிசீனியன் அமீர்-அக்கு என்னும் பதவியில் நியமிக்கப்பட்டார். இரான்தாம்பூர் கோட்டையைக் கைப்பற்றியவுடன் அதனை அழித்து ஒழித்தார். மீண்டும் இராசபுத்திரர்கள் அதனைக் கைப் பற்றுதவாறு செய்தார். கான், பர்தா அணிவதை நிறுத்திக் கொண்டு சிறந்த அவையை ஏற்படுத்தி, மக்களின் குறைகளைக் கேட்டறிந்து ஒவ்வொரு துறையையும் தன் நேரடிப் பொறுப்பில் வைத்துக் கொண்டார். ஒவ்வொருவரையும் தன் திறமையாலும் நன் நீதியால் தம் திறமையை மதிப்பதின் மூலமும் கவனத்தைக் கவர்ந்தார்.

சதிவேலைகள்: ஆயினும் கூட அவர் தம் ஆட்சியின் கீழ் இருந்த சிலருக்கு ஒரு பெண் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்துவது பிடிக்கவில்லை. இரஸியா பேகத்திற்கு எதிராக சதி வேலைகளில் பலர் ஈடுபடத் தொடங்கினர். ஜமால் உத்தீன் யாகூத் என்ற அபீசீனியருக்கும் இரஸியா பேகத்திற்கும் இடையே இருந்த உறவு முறைகளைப் பற்றிப் பரவலாகப் பேசத் தொடங்கினர்கள். அவர்கள் இருவரும் மணம் செய்து கொள்ளப் போகின்றனர் என்ற செய்திகளைப் பரப்பினர். 1238இல் ஜியா உத்தீன் ஜுனைதி என்னும் குவாலியர் ஆளுநர், அரசுக்கு எதி ராகச் சதிசெய்வதாக அறிந்து அது குறித்து விசாரித்திட அரண் மனைக்கு அழைக்கப்பட்டார். அரண்மனைக்குச் சென்ற அவர் மீண்டும் திரும்பவேயில்லை. இதன் விளைவாக அரசியார் அவரைக் கொன்றுவிட்டார் என்ற வதந்தி வெளியே பரவலாயிற்று. இவ்

வாரூக அரசியல் கொலைகள் நிகழ்த்துவதாக இரஸியா பேகத்தின் மீது இருந்த சந்தேகங்கள் வலுப்பெறவே அரசியினுல் சந்தேகிக் கப்படுவதாக எண்ணப்பட்ட அனைவரும் தங்களுடைய நிலையை எண்ணிப் பயந்ததோடு அல்லாமல் சிலர் எதிர்ப்பாளர்களாகவும் மாறினர். 1239 இல் முல்தானம், லாகூர் ஆகியவற்றின் ஆளுந ராக இருந்த ஆயாஸ் என்பவர் அரசியை எதிர்த்துக் கலகம் செய் தார். யாகூத் அவருக்கு எதிராகச் சென்று கலகத்தை அடக் கினுர். ஆயாஸ் முல்தானம் ஒன்றுக்கு மட்டுமே ஆளுநராக மீண்டும் நியமிக்கப்பட்டார். ஆனுல் கஜினியால் இருந்து வந்த ஸைப்புத்தீன் என்பார் முல்தானத்தில் இருந்தும் அவரை விரட்டி விட ஆயாஸ் இரண்டையுமே பறி கொடுத்தார். உயர் குடியினர் அரசியின் மீது வெறுப்புக் கொள்ள இதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

ஐடிஜின்: எனவே உயர் குடியினர், அரசியை எதிர்ப்பதற்கு ஐடிஜின் என்பாரின் தலைமையில் திட்டம் தீட்டினர். அரசி டெல்லியில் இருக்கின்றவரை பெரிய அளவிலான கிளர்ச்சி ஏதும் செய்ய இயலாது என்பதை நன்கு உணர்ந்து கொண்ட அவர்கள் மிகவும் கவனத்தோடு சதித் திட்டங்களைத் தீட்டினர். பட்டின் டாவை ஆளுநராக ஆட்சி செய்த அல்துானியா என்பவர் முதலில் கிளர்ச்சியைத் துவக்கினுர். ஐடிஜினும் அவருடன் சேர்ந்த மற்ற சதிகாரர்களும் யாகூத்தைக் கைப்பற்றிக் கொலை செய்தனர். இரஸியா பேகத்தை அல்துானியாவின் பொறுப்பில் விட்டு விட்டுத் தலைநகருக்குத் திரும்பினர்கள். இரஸியா பேகம் கைது செய்யப்பட்டவுடன் பகரம் ஷா எனப்படும் இல்துத்மிஷ்ஷின் மூன்றுவது மகன் அரியணையில் அமர்த்தப்பட்டார். டெல்லி மக்கள் இரஸியா பேகத்திற்கு ஆதரவாக இருந்தாலும் கூட, அவர்களுக்குத் தலைமை வகித்து நடத்திச் செல்லத் தலைவன் ஒருவன் இல்லாமையால் அவர்களால் ஒன்றும் செய்ய முடிய வில்லை பட்டின்டாவிலிருந்து வந்த உயர் குடியினர் பகரம் ஷாவைச் சுல்தானுக ஏற்றுக் கொண்டனர். முயிசுத்தீன் என் னும் சிறப்புப் பெயரோடு அவர் 1240 முதல் 1242 வரை ஆட்சி செய்தார்.

பகரம் ஷா: பகரம் ஷா சுல்தான் என்னும் பதவிக் கனியைப் பெற்றாலும் கூட அதனை ருசிக்க இயலாத நிலையிலிருந்தார். ஏனெனில் உயர் குடியினரின் கட்டுப்பாட்டின் கீழ் அவர் இருக்க நேரிட்டது. உயர் குடியினரின் கைப்பாவையாக அவர் ஆக்கப் பட்டார். உயர் குடியினரின் தொல்லை மட்டும் இன்றி இரஸியா பேகத்தின் தொல்லையும் அவருக்கு இருந்தது. அந் நிலையில்

இருந்து அவர் விடுபட விரும்பினர். ஆனல் அதற்கு முயற்சி செய்தால் சுல்தான் என்ற பதவி போய்விடும் எனப் பயந்தார். பதவியை விட்டு விடவும் மனம் இல்லாமல் இருக்கவும் மனமில் லாமல் இருதலைக் கொள்ளி எறும்பாக அவர் வாழ்ந்தார். இந் நிலையில் இரஸியா பேகத்தின் அழகில் மயங்கிய அல்தூனியா இரஸியாவைத் திருமணம் செய்து கொண்டார் தன் மனைவியும் அரசியாக இருந்தவளுமான இரஸியா பேகத்தின் விருப்பப்படி டெல்லியின் மீது படையெடுத்துச் சென்ருர். ஆனல் அவர் தோற்கடிக்கப்பட்டார். தன் மனைவியோடு தப்பிச் செல்ல முயலு கையில் இந்துக்களால் அவர் கொல்லப்பட்டார்.

மதிப்பீடு : ரஸியா பேகம் 13ஆம் நூற்ருண்டில் டெல்லியை ஆண்ட துருக்கிய ஆட்சியாளர்களில் குறிப்பிடத் தகுந்தவ ராவர். இல்துத் மிஷ்ஷின் வாரிசுகளில் இரஸியா பேகமே திறமையும் ஆற்றலும் கொண்டு விளங்கினர். அவருடைய தோல்விக்குக் காரணங்கள் பல. இடைக்கால வரலாற்று ஆசிரியர்கள் அவருடைய பெண்மையே அவரது தோல்விக்குக் காரணம் என்று கூறுகின்றனர். பால்பன் ஆட்சிக்கு வருகின்ற வரை குழப்பமான நிலையே நிலவியது.

முயிஸ் உத்தீன் பகரம் ஷா : ரஸியா பேகம் சிறைப்படுத் தப்பட்டபின் முயிஸ் உத்தீன் பகரம்ஷா என்பாரை கி.பி. 1240இல் உயர் குடியினர் பதவியில் அமர்த்தினர். இவருடைய காலத் தில் 'நை-பி-மம் லக்காத்'எனப்படும் காப்பாளர் பதவி ஒன்று உரு வாக்கப்பட்டு அதில் மாலிக் இக்த்தியார் உத்தீன் ஐடிஜின் என் பவர் அமர்த்தப்பட்டார். முயிஸ் உத்தீன் பகரம் ஷா சில போற் றத்தக்க பண்புகளைப் பெற்று விளங்கினர் என மின்ஹாஜ் எனும் வரலாற்றறிஞர் குறிப்பிடுகின்ருர். தனக்கு முன்னர் ஆண்டவர் களைப்போல ஆடம்பரமாக ஆடை உடுத்தவோ அல்லது வாழ்க்கை நடத்தவோ அவர் விரும்பவில்லை. பகரம் ஷா 2 ஆண்டு கள் ஆட்சி செய்தார். ஐடிஜின் எல்லா அதிகாரங்களையும் தன் கைகளுக்குள் வைத்துக்கொண்டு இருந்தார். அதனல் பகரம் ஷா அவரைக் கொலை செய்யத் திட்டமிட்டு அங்ஙனமே செய்தார். அவ்வாறு ஐடிஜின் கொல்லப்பட்டபின் பத்குத்தீன் என்பவர் காப்பாளராக நியமிக்கப்பட்டார். உயர் குடியினர் அரசருக்கு எதிராகச் சதி புரியத் தொடங்கினர். எனவே அரசர் அவர்கள் அனைவரையும் தீர்த்துக்கட்ட எண்ணம் கொண்டார். ஏதாவது ஓர் காரணம் காட்டி ஒவ்வொருவராக அவர் கொன்ருர் 1241இல் மங்கோலியர்கள் லாகூரைக் கைப்பற்றி ஆயிரக் கணக்கான முஸ்லீம்களைக் கொன்றனர். டெல்லிச் சுல்தானியமே மங்கோலியர்களால் அழிந்துவிடும் என்ற நிலை

ஏற்பட்டது. எனவே உயர் குடியினர் தங்களின் சுயநலம் கருதி அரசருக்கு ஆதரவாகத் துணை புரிந்தனர். வஸீராக விளங்கியவர் உயர் குடியினரின் ராஜ விசுவாசத்தை அரசரிடம் திரித்துக் கூற அரசர் அவர்கள் அனைவருமே கொல்லப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார். எல்லா உயர் குடியினரையும் வரவழைத்து அவர்கள் மத்தியில் இவ் வாணையை வாசிக்கவே உயர்குடியினர் எல்லோரும் பகரம் ஷாவை ஆட்சியிலிருந்து அகற்றுவது என முடிவெடுத்தனர். அது மட்டும் இன்றிக் கிளர்ச்சி செய்து பகரம் ஷாவைச் சிறையில் அடைத்துக் கொலை செய்தனர்.

அலாஉத்தீன் மஸூத் ஷா : பகரம் ஷாவிற்குப் பிறகு உருக்நுதீனின் மகனான மஸூத் ஷாவை அரியணையில் உயர் குடியினர் அமர்த்தினர். இல்துத் மிஷ்ஷின் நஸீர் உத்தீன், ஜலால் உத்தீன் ஆகிய இரு மக்களையும் கொன்றனர். எல்லா அதிகாரத்தையும் தமக்குள்ளே பகிர்ந்து கொண்டு அரசனை அதிகாரமற்றவராக்கினர். மஸூத்தின் காலத்தில் வஸீர் பதவி சிறப்புப் பெற்றது. வஸீர் மற்ற உயர் குடியினரை அடக்கித் தன் அதிகாரத்தை நிலை நிறுத்தினர்.

டெல்லியிலும் அதன் சுற்றுப்புறத்திலும் மஸூத் ஓரளவிற்கு தன் அதிகாரத்தைச் செலுத்தினர். ஆயினும் தன் எதிர்ப்புச் சக்திகளை அடக்கிட அவரால் இயலவில்லை. கிஸ்லூக்கான் என்ற அவருடைய நண்பருக்குப் பதிலாக பால்பன் என்பார் அமீர் அஜீப்பாக நியமிக்கப்பட்டார். மஸூத்தின் ஆட்சியில் பால்பன் அவருக்கு எதிராகச் சதி புரியத்தொடங்கினர். பால்பன் நஸீர் உத்தீன் முகமது என்பவரை ஆட்சியில் அமர்த்த எண்ணி மஸூத் ஷாவைக் கொலை செய்தார்.

நஸீர் உத்தீன் முகமது : நஸீர் உத்தீன் முகமது பெயரளவில்தான் ஆட்சியாளராக விளங்கினர். அவர் ஆட்சி செய்த 20 ஆண்டுகளில் அதிகாரம் பால்பனிடமே இருந்தது. அரசர் எளிய வாழ்க்கையே வாழ்ந்தார். தன் வாழ்நாளைக் குர் ஆனைப் பிரதி எடுப்பதிலேயே கழித்தார். சிறு செயல்களுக்குக் கூட அவர் அரசுப் பணத்தைச் செலவிடுவதை விரும்பவில்லை என்று கூறப்படுகின்றது. நஸீர் உத்தீன் காலத்தில் மங்கோலியர்கள் தொல்லை தர ஆரம்பித்தனர். முல்தானம், லாகூர் ஆகியவற்றைக் கைப்பற்றி மக்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்தனர். பால்பன் மங்கோலியருக்கு எதிராகப் படை திரட்டியவுடன் மங்கோலியர்கள் பின் வாங்கினர். மகமதுவின் ஆட்சி எவ்வாறு முடிவுற்றது என்பது குறித்து நம்மால் ஏதும் அறிய இயல

வில்லை. ஏனெனில் இதுவரை வரலாற்றுச் செய்திகளை அளித்த மின்ஹாஜ் அப்போது இறந்து விட்டார். பரணி என்னும் மற்றொரு வரலாற்று ஆசிரியர் பால்பனின் காலம் முதல் உள்ள வரலாற்றையே விளக்குகின்றார்.

IV. கியாஸ் உத்தீன் பால்பன்

அடிமை வம்சம் என்று அழைக்கப்படும் வம்சத்து அரசர்களில் பால்பனே சிறந்தவராகக் கருதப்படுகிறார். இல்பாரி துருக்கிய மரபைச் சார்ந்த பால்பனின் இயற் பெயர் பகா உத்தீன் என்பதாகும். இவருடைய இளமைக் காலம் சோதனைகள் நிரம்பியது. இளம் வயதில் மங்கோலியர்களால் தூக்கிச் செல்லப்பட்டுப் பஸ்ராவைச் சேர்ந்த குவாஜா ஜமால் உத்தீன் என்பவரிடம் விற்கப்பட்டார். ஜமால் உத்தீன் இவருக்குக் கல்வி போதித்துப் பண்புடைய ஒருவனாக உருவாக்கினார். பின்னர் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்ட பால்பன் இல்துத்மிஷ்ஷினால் விலைக்கு வாங்கப்பட்டார். ஆரம்ப காலத்தில் மிகச் சிறிய பதவிகளில் அமர்த்தப்பட்ட அவர் நாளடைவில் படிப்படியாக உயர் நிலையை அடைந்தார். இரஸியா பேகம் ஆட்சி செலுத்தியபோது அமீரி-ஷிகார் அல்லது வேட்டைக்காரர்களின் தலைவன் என்னும் பதவியில் அமர்த்தப்பட்டார். பகரம் ஷாவின் காலத்தில் அமீரி அக்குர் அல்லது அரண்மனை குழுவின் தலைவர் என்னும் பதவியில் அமர்த்தப்பட்டார். 1244இல் மசூத்ஷா இவரை அமிரி அஜீத் அல்லது காப்பாளராக நியமித்தார்.

1246இல் மசூத்திற்கு எதிராக நடைபெற்ற சதியில் சிறப்பிடம் வகித்தார். புது அரசரான நஸீர் உத்தீன் இவரை நை-பீ-மம் லிகாத் என்னும் பதவியில் அமர்த்தினார், 1246-1266 வரை அடிக்கடி பால்பன் மீது பொறுமை கொண்ட உயர் குடியினர் கிளர்ச்சி செய்தனர். நாட்டில் உயர் பதவியை வகிக்கவேண்டும் என்ற பேரவா இவருக்கு இருந்து வந்தது. 1249இல் தன்னுடைய மகளைச் சுல்தானுக்கு மணம் முடித்துக் கொடுத்து சுல்தானின் மகளைத் தன் மகனுக்கு மணம் முடித்து வைத்தார். 1266இல் கியாஸ் உத்தீன் என்னும் பெயரோடு பால்பன் அரியணை ஏறினார்.

இடையூறுகள் : பால்பன் சுல்தானாகப் பதவி ஏற்றதும் அளவற்ற இடையூறுகளைச் சந்திக்க நேர்ந்தது. இல்துத்மிஷ்ஷிற்குப் பிறகு ஆட்சி செலுத்தியவர்கள் தகுதி அற்றவர்களாக விளங்கியதால் நாடு முழுவதும் குழப்பம் நிலவியது. கருவூலத்

தில் பொருள் இல்லை. துருக்கிய உயர் குடியினர் கொடுங்கோலராக இருந்தனர். இதைத் தவிர மங்கோலியர்கள் படையெடுப்பும் அடிக்கடி எழுந்தது. இத்தகைய இடையூறுகளை யெல்லாம் சமாளிக்க வேண்டிய பொறுப்பு பால்பனுக்கு ஏற்பட்டது.

கொள்ளையர்: சிறந்த படை ஒன்றை நிறுவிய பால்பன் டெல்லிக்கு அருகில் உள்ள தோ ஆப் பகுதியில் அமைதியை நிலை நாட்ட விரும்பினர். ஏனெனில் அப் பகுதியில் இராசபுத்திரர் படையெடுப்பு அடிக்கடி நிகழ்ந்தது. இதன் விளைவால் வருவாய்த் துறை அதிகாரிகளால் வரி வசூலித்திட முடியவில்லை. காடுகளில் ஒளிந்து வாழ்ந்த கொள்ளைக் கூட்டத்தினர் தொல்லையும் இருந்தது. பால்பன் அவர்களை அடக்கிட ஆவன செய்தார். டெல்லியைச் சுற்றி இருந்த காடுகளை அழித்தார். தாமே நேரில் சென்று தோ ஆப், அயோத்தி ஆகிய பகுதிகளில் எதிர்ப்பவர்களைத் தண்டித்தார். போஜ்பூர், கம்பில், ஜலாலி ஆகிய இடங்களில் இராணுவ நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. எண்ணிறந்த மக்கள் ரோஹில் கண்டு பகுதியில் கொல்லப்பட்டு மக்கள் மனத்தில் அச்சம் ஏற்படுத்தப் பட்டது.

வங்கம் : வங்காளத்தில் பால்பனுடைய உதவியாளராகத் துக்ரில்கான் என்பவர் ஆட்சி செலுத்தி வந்தார். பால்பனுடைய வயது முதிர்ந்த நிலை, மங்கோலியர்களின் படையெடுப்பு ஆகிய வற்றின் விளைவாகத் துக்ரில்கான் தம்மைச் சுய ஆட்சியாளராக அறிவித்துக் கொண்டார். இச் செய்தியினைக் கேள்விப்பட்ட பால்பன் வங்காளத்திற்கு அமீர்கான் என்பவரின் தலைமையில் படை ஒன்றினை அனுப்பினர். ஆனால் அமீர்கான் தோற்கடிக்கப் பட்டு அனுப்பப்பட்ட படை துக்ரில் வசமாயிற்று. எனவே பால்பன் தம் மகனை பக்ராத் கானை அழைத்துக் கொண்டு தாமே வங்காளம் நோக்கிச் சென்றார். பால்பனின் வருகையைப் பற்றிக் கேள்விப்பட்ட துக்ரில் காடுகளில் சென்று ஒளிந்து கொண்டார். பால்பனின் வீரர்களில் ஒருவரான ஷெர் அண்டார்ஸ் என்பவரால் அவர் சிறை பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். துக்ரில்கானின் தலை துண்டிக்கப் பட்டு ஆற்றில் எறியப்பட்டது. அவரது உறவினரும் தண்டிக்கப்பட்டனர். தன்னுடைய மகன் பக்ரான்கானை வங்காள ஆளுநராக நியமித்தார். மங்கோலியர்கள் பால்பனின் ஆட்சிக்குத் தொல்லை தந்தனர். அவர்களுடைய படையெடுப்பு அடிக்கடி ஏற்பட்டது. மங்கோலியரின் வருகையைத் தடைசெய்வதற்குக் கோக்கர்கள் போன்ற இனவழி மக்களைத் தோற்கடித்து அவ்விடங்களில் தம்முடைய அதிகாரத்தை நிலை நாட்டினர். ஹெர்கான் ஷங்கர் என்பவரை எல்லைப் பாதுகாப்பின் நிமித்தம்

பட்டிண்டா, ஜீனம், சமானு ஆகிய பகுதிகளுக்கு ஆளுநராக நிய மித்தார். மங்கோலியர்களும், கோக்கர்களும் ஹெர்கான் ஷங்க ருக்குப் பயந்தனர். ஹெர்கானின் புகழைக் கண்டு பொருமை கொண்ட பால்பன் அவரை நஞ்சு இட்டுக் கொன்றார்.

ஹெர்கான் இறந்ததன் விளைவாக மங்கோலியர் கோக்கர் மற்ற இனத்தவர் ஆகியோர் மீண்டும் 1271இல் கிளர்ச்சி செய்தனர். தெற்கு எல்லைக்குத் தன் மகன் முகமதுவை நியமித்தார். 1279, 1285 ஆகிய ஆண்டுகளில் மங்கோலியர்கள் மீண்டும் படையெடுத்தனர். மங்கோலியர்கள் தோற்கடிக்கப் பட்டுத் துரத்தப்பட்டனர். 1286இல் மீண்டும் மங்கோலியர் படையெடுத்து வந்தபோது இளவரசன் முகமது அவர்களால் கொல்லப்பட்டார்.

உள்நாட்டில்: இனி உள்நாட்டில் தம் முடைய அதிகாரத்தினை நிலைபெறச் செய்யப் பால்பன் மேற்கொண்ட செயல்களை ஆராய்வோம். நாற்பதின்மர் என அழைக்கப்பட்ட உயர் குடியினருள் ஒருவராக இருந்த பால்பன் தான் அரசராக ஆனவுடன் நாற்பதின்மரின் ஆக்கிரமிப்பை ஒடுக்கிட எண்ணங் கொண்டார். பால்பனுக்கு முன்னர் ஆட்சி செலுத்திய சுல்தானின் வீழ்ச்சிக்குத் தாமும் ஒருவராய் இருந்த நாற்ப தின்மரே காரணம் என்பதை நன்கு உணர்ந்திருந்தார். நாற்ப தின்மரில் எவராவது சிறு தவறு செய்தாலும் அவர்கள் கடுமை யாகத் தண்டிக்கப்பட்டனர். ஒவ்வொருவராக நாற்பதின்மர் சுல்தானுக்கு அடங்கினர்கள். சிலர் கொலைசெய்யப்பட்டனர்.

பால்பன் சிறந்ததொரு உளவறியும் துறையை நிர்வகித்து வந்தார். உளவு அறிபவர்கள் ஒவ்வொரு துறையிலும் அமர்த் தப்பட்டனர். அதைப் போலவே ஒவ்வொரு மாநிலத்திலும் ரகசியமாகச் செய்திகளை அறிபவரும், உளவு பார்ப்பவரும், இரகசியமாகச் செய்தி அனுப்புபவரும் ஆளுநரின் கட்டுப்பாட்டில் இராது சுதந்திரமாகச் செயல்பட்டனர். உளவு அறிபவர்கள் தவறான செய்தி அறிவித்தால் தண்டிக்கப்பட்டனர். அது மட்டும் இன்றி அவர்கள் கடமை தவறினாலும் தண்டிக்கப் பட்டனர்.

பால்பன் படையைச் சீர்திருத்தி அமைத்தார். படை வீரர் களுக்கு இல்துத் மிஷ்ஷின் காலத்தில் நிலம் வழங்கப்பட்டு இருந்தது. வயது முதிர்ந்த படை வீரரும், மறைந்த படை வீரர்களின் குடும்பத்தினரும் அந் நிலங்களை ஆண்டு அனு

பவித்து வந்தனர். அவர்களால் அரசுக்கு எவ்வித பயனும் இல்லை என்பதை உணர்ந்த சுல்தான் தகுதியற்றவர்களின் உரிமையைப் பறித்துக் கொண்டார்.

இமாத்-உல்-முல்க் என்பவரை திவானி வரீஸ் அல்லது படைத்துறை அமைச்சராக நியமித்தார். வருவாய்த்துறையில் இருந்து இவருக்கு எவ்விதக் கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை.

பால்பன் பண்டைக்கால இந்தியாவில் இருந்த அரச பதவி குறித்த கொள்கைகளையே கொண்டு இருந்தார். அரச பதவி தெய்வீகத் தன்மை பொருந்தியது என்றும் உலகில் வாழ்கின்ற மற்ற எல்லோரையும்விட அரசர் உயர்ந்தவர் என்றும் எண்ணினார். அவ்வாறு எண்ணிய அவர் ஜில்லி-இல்லா (Zilli illah) அல்லது இறைவனின் நிழல் எனப்படும் சிறப்புப் பெயரைச் சூட்டிக்கொண்டார். பால்பன், வல்லாட்சியில் நம்பிக்கை கொண்டு இருந்தார். வல்லாட்சியாளரே மக்களிடம் இருந்து பணிவைப்பெற முடியும் எனவும் நாட்டைப் பாதுகாக்க முடியும் எனவும் நம்பினார். அரசராகப் பதவி ஏற்ற உடனேயே மது அருந்துவதையும், பொழுதை உல்லாசமாகக் கழிப்பதையும் விடுத்தார். அரசனை வணங்குவதற்குக் காலில் விழுந்து வணங்கும் முறையைப் புகுத்தினார். பல வழிகளில் அரச பதவிக்கு உயர்வைத் தேடிட அவர் முயற்சி செய்தார். எவரிடமும் அதிகம் பேசமாட்டார். ராஜரீகமான உடையிலேயே வேலைக்காரர்கள் முன்பு கூடத் தோன்றுவார் எனக் கூறப் படுகிறது.

கி.பி. 1286இல் பால்பனின் அன்புக்குரிய மகன் முகமது மங்கோலியர்களால் கொல்லப்பட்டார். அந்த அதிர்ச்சியில் இருந்து சுல்தான் மீளவில்லை. வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தை அடைந்து கொண்டு வருவதை உணர்ந்த பக்ராக்கானை தன்னோடு இருக்குமாறு வேண்டினார். ஆனால் பக்ராக்கான் தன் தந்தையின் கண்டிப்பான போக்கிற்கு அஞ்சி வங்காளத்திற்கு ஓடிவிட்டார். எனவே முகமதுவின் மகன் கைக்கு சுருவை பால்பன் சுல்தானாக அறிவித்தார். 1286இல் பால்பன் இறந்தார்.

டாக்டர் லேன்பூல் 'அடிமை, நீர் சுமப்பவன், வேட்டைக் காரன், தளபதி, அரச தந்திரம் மிக்கவன், சுல்தான் என்றெல்லாம் அழைக்கப்பட்ட பால்பன் டெல்லியை ஆண்ட அரசர்களில் குறிப்பிடத் தகுந்தவர்களில் ஒருவராக விளங்கினார்' என்று கூறு

கின்றார். டாக்டர் ஈஸ்வரி பிரசாத் பால்பனைப் பற்றிக் கூறும் போது சிறந்த போர் வீரர்; சிறந்த ஆட்சியாளர். சிறந்த அரசியல் தந்திரம் மிக்கவர். அவரே ஆரம்ப நிலையில் இருந்த முஸ்லீம் அரசை தக்க தருணத்தில் அழிவில் இருந்து காத்தார் என்றும், இடைக்கால இந்திய வரலாற்றில் ஒரு பெரும் புள்ளியாக விளங்குகின்றார் என்றும் கூறியுள்ளார். பால்பன் கல்வித்துறைக்கு அரும்பணியாற்றியுள்ளார். மத்திய ஆசியா விலிருந்து எண்ணிறந்த கல்விமான்களை இந்தியாவிற்கு வர வழைத்து அவர்களுக்குத் தனி இடம் கொடுத்துப் போதிய ஊதியமும் வழங்கினார். அமீர் குசுரு எனப்படும் சிறந்த பாரசீகக் கவிஞர் இவர் காலத்தவரே. டெல்லி சுல்தானியத்தின் பெருமையை உயர்த்தி மக்களுக்கு அமைதியை வழங்கியவர் இவரே.

கைகுசுரு: பால்பனுக்குப் பின் ஆட்சிக்கு வர கைக்குசுரு நியமிக்கப்பட்டாலும் பக்குருத்தீன் எனப்பட்ட டெல்லியின் கொத்தவால் பக்ராக்கானின் மகன் கைக்குபாத் அரசராக்கினர். புது அரசன் முயிஸ் உத்தீன் கைக்குபாத் என்ற பெயரோடு ஆட்சி செலுத்தி வந்தபோது அவருக்கு வயது 17. இளமைக் காலத்தில் பால்பனின் கட்டுப்பாட்டினுள் இருந்தமையால் அரசனுடன் கட்டுப்பாடு ஏதும் இன்றி மதுமங்கை போன்ற உலகியல் இன்பங்களில் மூழ்கித் திளைக்கத் தொடங்கினர். அதன் விளைவாக ஆட்சித்துறை கவனிப்பார் அற்றுப் போயிற்று. அரசர் பிறரின் கைப்பாவையாகும் நிலை உருவாயிற்று. மங்கோலியர்கள் கைக்குபாத்தின் காலத்தில் படையெடுத்து வந்தாலும் பால்பன் ஏற்படுத்திய முறைகளின் விளைவாக அவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். தன் மகனை ஆட்சியில் இருந்து விரட்டிவிட்டு தான் ஆட்சிக்கு வர கைக்குபாத்தின் தந்தை பக்ராக்கான் முயற்சி செய்தார். எனினும் இருவருக்குமிடையே இறுதியில் உடன்பாடு ஏற்பட்டது. மகனுக்கு அறிவுரை வழங்கிவிட்டு பக்ராக்கான் திரும்பி விட்டதாகச் சொல்லப்படுகிறது.

11. கில்ஜி வம்சம்

ஜலாலுதீன் கில்ஜி : கில்ஜிகள் யார்?—முதல் அரசர்—இடையூறுகள்—நியமனங்கள்—வல்லாட்சி — கிளர்ச்சி — தக்கர்கள்—போர்கள் — கொலை செய்யப்படுதல்—மதிப்பீடு. அலாவுதீன் கில்ஜி : அரியணை ஏறியவிதம்—மங்கோலியப் படையெடுப்புகள்—போர் நடவடிக்கைகள் — தென்னிந்தியப் படையெடுப்புகள்—அரச பதவி குறித்து அலாவுதீனின் கருத்து—உள் நாட்டுக் கொள்கை —இராணுவம், நில வருவாய்த்துறை — பொருளாதாரச் சீர்திருத்தங்கள்—இந்துக்களை நடத்திய முறை—உயர்குடியினர்—மதிப்பீடு. அலாவுதீனுக்குப் பின்னர்: குத்புத்தீன் முபாரக்ஷா — நசீருத்தீன்குஸ்ருஷா.

1. ஜலாலுதீன் கில்ஜி

கில்ஜிகள் யார் ? அடிமை வம்சம் என்றழைக்கப்பட்ட வம்சத்தின் ஆட்சிக்குப் பின்னர் கில்ஜி வம்சத்தினரின் ஆட்சி தொடர்ந்தது. கில்ஜிகள் என்போர் யார் என்பது குறித்து அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை நிலவுகிறது. 'தபகத்தி அக்பாரி' என்ற நூலின் ஆசிரியர் கில்ஜிகளை செங்கிஸ்கானின் வழி வந்தவர்கள் என்று கருதுகின்றார். செங்கிஸ்கானின் மருமகன் கலீஜ்கான் என்பவரின் வழிவந்தவர்கள் எனவும், 'கலீஜ்' என்பதே 'கில்ஜி' அல்லது 'கல்ஜி' என்றாயிற்று என்பதும் ஒரு கருத்து. பெரிஷ்டாவும் இக் கருத்துச் சரியானது என்று கருதுகின்றார். 'ஜியாவுதீன் பரணி' என்பவர் கில்ஜிகள் துருக்கிய இனத்தைச் சார்ந்தவர்கள் அல்லர் என்று கருதுகின்றார். டாக்டர் வின்சென்ட் ஸ்மித் எனும் வரலாற்றாசிரியர் கில்ஜிகளை ஆப்கானியர்கள் என்று கருதினாலும் அதற்கான காரணங்கள் எதனையும் எடுத்துக் கூறவில்லை. ஆப்கானிய நாட்டில் தங்கியிருந்த துருக்கிய மரபினரே கில்ஜிகள் என்றும் கருதப்படுகிறது. இக்

கருத்தின்படி கில்ஜிகளும் துருக்கியர்தாம் என அறிகிறோம். 64 துருக்கிய குலங்களில் கில்ஜிகளும் ஒருவர் என தரிஷி ஃபக்ருடின் (Tarikh-i-Fakruddin) கூறுகிறது. இக் கருத்தே பெரும்பாலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது.

முதல் அரசர்: இம் மரபின் முதல் அரசர் ஜலாலுதீன் கில்ஜி யாவார். கில்ஜி மரபினைத் தோற்றுவித்தவரும் அவரேயாவார். துருக்கியர்களைத் தூக்கி எறிந்துவிட்டுக் கில்ஜி மரபினர் ஆட்சிக்கு வந்த செயலைக் **'கில்ஜிப் புரட்சி'** என்று டாக்டர் திரிபாதி கருதுகின்றார். இப் புரட்சி புதிய வம்சத்தின் ஆட்சியை மட்டும் தோற்றுவிக்கவில்லை. தொடர்ந்து போர்களையும், ஆட்சி அமைப்புத் துறையில் மாறுதல்களையும் இலக்கியத் துறையில் மாற்றங்களையும் ஏற்படுத்தியது. 'கில்ஜிப் புரட்சி இந்திய முஸ்லீம்களால் துருக்கியர்களுக்கு எதிராக நடத்தப்பட்டது' என்று லால் எனும் ஆசிரியர் கூறுகின்றார்.

ஜலாலுதீன் கில்ஜி ஆட்சியைக் கைப்பற்றியபோது அவருக்கு வயது எழுபது. அவர் பதவி ஏற்றதை எல்லோரும் ஒருமுகமாக ஆதரிக்கவில்லை. துருக்கிய அமீர்கள் கில்ஜிகளைத் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த ஆப்கானியர்களாகக் கருதினர் உண்மையில் ஜலாலுதீன் பரம்பரையினர் உயர்குடிப் பிரபுக்கள் அல்லர். வழி வழியாக சாதாரண பதவி வகித்து வந்த கூட்டத்தினர். ஜலாலுதீனும் மிகச் சாதாரண பதவியிலிருந்தவரே. எனவே அவரை விட உயர் பதவியிலிருந்த பலர் அவரைச் சுல்தானாக ஏற்றுக் கொள்ளத் தயங்கினர்.

இடையூறுகள்: ஜலாலுதீன் ஆட்சியைக் கைப்பற்று முன்னர் எண்ணிறந்த போர்களில் கலந்துகொண்டு அனுபவம் பெற்றவராக இருந்தபோதிலும் எண்ணிறந்த இடையூறுகளைச் சந்திக்கவேண்டியவராக இருந்தார். பால்பனின் உறவினர்களில் மாலிக் சஜ்ஜு போன்றவர்கள் இன்னும் உயிருடன் இருந்தனர். அவர்கள் ஜலாலுதீனை விரட்டிட எண்ணங்கொண்டிருந்தனர்.

நியமனங்கள்: ஜலாலுதீன் உடனேயே டெல்லிக்கு வந்து அரசோச்சத் தொடங்கவில்லை. இதற்குக் காரணம் டெல்லி மக்களும், அதனை விரும்பாததே. எனவே கிலூகரி (Khilughari) என்னும் இடத்தில் ஓராண்டு காலம் இருந்து, டெல்லி மக்களின் மனதில் மாறுதல் ஏற்பட்ட பின்னரே டெல்லிக்குத் திரும்பினர். மாலிக்சஜ்ஜுவை காரா மணிக்பூரின் ஆளுநராக நியமித்தார். மாலிக்பக்ருதீனை டெல்லியின் கொத்தவாலாக நியமித்தார். ஏற்

கெனவே வகித்துவந்த பதவியைத் தொட ர்ந்து வகித்திட உயர் குடியினர் அனுமதிக்கப்பட்டனர். மாலிக் அகமதுவை அமீரி ஹஜீப்பாக நியமித்தார். கில்ஜிகளுக்கும். கில்ஜிகளல்லாதவ ருக்கும் ஒருங்கே பதவிகளை வழங்கியதன் மூலம் பாரபட்ச மற்றவர் எனத் தம்மைக் காட்டிக்கொண்டார்.

வல்லாட்சி : இதுவரையில் ஆட்சி செலுத்திய சுல்தான் களுக்கும் ஜலாலுதீனுக்குமிடையில் மாறுதல் ஒன்றினைக் காண் கிறோம். இதுவரையில் ஆட்சி செலுத்திய துருக்கியர் அனைவரும் மக்களை அடக்கியாளும் வல்லாட்சியாளர்களாகவே விளங்கினர். ஆனால் இவரோ மக்களுக்கு நன்மை செய்யும் வல்லாட்சியாளராக விளங்கினர். அமைதிக் கொள்கையை விரும்பிய இவர், எந்த முஸ்லீமின் உடலிலிருந்தும், ஒரு சொட்டுக் குருதியும் கீழே சிந்தக் கூடாது என்ற கோட்பாட்டினைக் கொண்டிருந்தார். போர்க்கோலம் பூண்டு புறியாள வேண்டிய நேரத்தில் அவர் அமைதி வழியைக் கடைப்பிடிக்க எண்ணினார். மக்களின் அமைதி வழியைக் கடைப்பிடிக்க எண்ணினார். மக்களின் ஆதரவு, நல்லெண்ணம் என்ற அடிப்படையின் மீது அவர் தமது ஆட்சியை நிறுவ விரும்பினார்.

மாலிக் சஜ்ஜாவின் கிளர்ச்சி: மாலிக் சஜ்ஜா பால்பனின் உற வினர். பால்பனுக்குப் பின்னர் ஆட்சியைக் கைப்பற்ற முயன்று இயலாமல் போனவுடன் பணிந்ததுபோல் பாவனை காட்டி காரா வின் ஆளுநராக விளங்கியவர். ஹத்தீம் எனப்பட்ட அயோத்தி அரசரு ன் இணைந்து கிளர்ச்சி செய்தார். ஆனால் தோற்கடிக் கப்பட்டார். தோற்கடிக்கப்பட்ட அவரை சுல்தான் மன்னித்து முல்தானுக்கு அனுப்பி வைத்தார். இளையவர்களான கில்ஜிகள் சுல்தானை எச்சரித்தனர். ஆனால் கருணையினால் மக்களின் இத யங்களைக் கவர அவர் விரும்பினார். காராவை அலாவுதீன் கில்ஜி எனப்படும் தன் மருமகனின் பொறுப்பில் விட்டார்.

தக்கர்களின் செயல்கள் : சுல்தானின் ஆட்சியின்போது தக்கர்கள் என்னும் கொள்ளைக்காரர்கள் தொல்லைதந்தனர். அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டபோது சுல்தான் அவர் களைத் தண்டித்திடாது, திருடுவதின் தீமை பற்றி உரை நிகழ்த் தினார். இதுபோலவே தக்கர்களின் இன்னொரு பகுதியினர் டெல்லி மக்களுக்குத் தீங்கிழைத்தபோது அவர்களைத் தண்டித் திடாது கங்கைக் அப்பால் வங்கத்திற்கு அவர்களை அனுப்பி வைத்தார். இதைப்போலவே சில அமீர்கள் சுல்தானுக்கு எதி ராகச் சதி செய்தபோது, அவர் தம் உடைவாளை உருவி அவர்கள் முன் வீட்டெறிந்து அவர்கள் விரும்பியதைச் செய்துகொள்ள

லாம் என்றவுடன் அவர்கள் அடிபணிந்தனர். இருப்பினும் சிதி மௌலா (Sidi Maula) என்பவர்க்கு எதிராகச் சுல்தான் நடந்து கொண்ட நடத்தையை மட்டும் புரிந்து கொள்ள இயலவில்லை சிதிமௌலாவைத் தம்முடைய இடத்தில் அமர்த்தப் புரிந்த சதி தெரிந்ததன் விளைவாக சுல்தான் அவரைக் கொலை செய்யச் செய்தார். அவர் குற்றமற்றவர் என்றும் துறவியாகிய அவரைக் கொலை செய்தது சுல்தான்செய்த மாபெரும் தவறு என்றும் பரணி எனும் ஆசிரியர் கூறுகின்றார். ஆனால் அவர் குற்றவாளி என்றே பெரும்பாலும் நம்பப்படுகிறது,

போர்கள்: கி.பி. 1291இல் சுல்தான் இராந்தாம்பூருக்கு எதிராகப் படை திரட்டிச்சென்று முற்றுகையிட்டார். ஆனால் இவருடைய முற்றுகை பயனளிக்கவில்லை எனவே தொடர்ந்து முற்றுகையை நடத்திடாது திரும்பிய அவர், ஒரு முஸ்லீமின் தலை முடியின் மதிப்பு அப்படிப்பட்ட பத்துகோட்டைகளின் மதிப்புக்குச் சமம் என்று கூறினார் இக் கொள்கை கோழைத்தனமானது என்று பலர் கூறியும் சுல்தான் அதை ஏற்கவில்லை.

இவருடைய படையெடுப்புகளில் துணை நின்றவர் அலாவுதீன் கில்ஜி எனப்பட்ட அவரது மருமகனே ஆவார். 1292ல் **மந்தாவார்** கோட்டை கைப்பற்றப்பட்டது. **மாளவத்தின்** மீது படையெடுத்த அதே ஆண்டில் பில்சா நகரைக் கைப்பற்றினார். தேவகிரி அரசரான இராமச்சந்திர தேவனைத் தோற்கடித்து ஏராளமான செல்வத்துடன் அலாவுதீன் மீண்டார்(1296)

மங்கோலியர்கள் 1292இல் தாக்குதல்களை நிகழ்த்தினர். வயதான போதிலும் சுல்தான் தாமே நேரில் சென்று மங்கோலியர்களைத் தோற்கடித்து மீண்டார். எனினும் மங்கோலியர்கள் இந்தியாவில் தங்கிட அனுமதிக்கப்பட்டனர். அவ்வாறு தங்கியவர்கள் புதிய முஸ்லீம்கள் என அழைக்கப்பட்டனர்.

தக்காணத்தின் செல்வ வனப்பைப் பற்றிக் கேள்விப்பட்ட அலாவுதீன் தெற்கு நோக்கிப் புறப்பட்டபோது தேவகிரி அரசனான இராஜாராம் சந்திரதேவர் அலாவுதீனை எதிர்த்துத் தோல்வி கண்டார். அலாவுதீனுக்கு திறை செலுத்த மறுத்த இராஜாராம் சந்திரனின் மகன் சில காலம் போர்செய்து தோல்வி அடைந்தார். எண்ணிறந்த பொருட்களுடன் அலாவுதீன் காராவிற்கு மீண்டார்.

ஜலாலுதீன் கொலை செய்யப்படுதல்: ஜலாலுதீன் கில்ஜியின் முடிவு இயற்கை தந்த முடிவாக அமையவில்லை அலாவுதீன் கில்ஜியினால் கொலை செய்யப்பட்டார். அலாவுதீன்


தாம் தேவகிரியிலிருந்து பெற்று வந்த செல்வத்தை மாமனுரிடம் நேரில் அளிக்க விரும்புவதாகத் தம் தம்பி உலுக்கானிடம் சொல்லி அனுப்பினர். இதில் சூது இருக்கிறது செல்ல வேண்டாமென்று பலர் தடுத்தும் கேளாமல் சென்ற சுல்தானை அலாவுதீனின் உதவியாள் முகம்மது சலீம் வாளால் வெட்டிச் சாய்த்தான். சுல்தானின் துண்டிக்கப்பட்ட தலை ஈட்டி முனையில் சொருகப்பட்டு காரா, மாணிக்பூர், அயோத்தி ஆகிய நகரங்கள் சுற்றி வருமாறு செய்யப்பட்டது.

மதிப்பீடு : ஜலாலுதீன் பிரோஸ்ஷா அரச பதவியைத் திறம்பட வகிக்க இயலாமல் போனதற்குக் காரணம் அவர் கடைப்பிடித்த கொள்கைகளே. அரசராவதற்கு முன்னர் போர் செய்யும் ஆர்வம் மிகுந்தவராக, எவ்வாறு விளங்கினாரோ அவ்வாறே இறுதிவரை வாழ்ந்திடாதது அவரிடத்தில் காணப்பட்ட ஓர் குறைபாடு. அலாவுதீன எந்த அளவிற்கு நடத்த வேண்டுமோ அந்த அளவிற்கு அவரை நடத்தாததும் இவரிடத்துக் காணப்பட்ட குறைபாடேயாகும். யாரைத் தண்டிக்க வேண்டும்? யாரை மன்னிக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளாததும் அவரிடத்தில் காணப்பட்ட இன்னொரு குறைபாடு. இதன் விளைவால் இவரது நிலை பெரிதும் பலவீனப்பட்டது. மங்கோலியரை வெற்றிகரமாக முறியடித்த பெருமை அவரைச் சார்ந்ததே. ஜலாலுதீன் மிகக் குறுகிய காலமே ஆட்சி செலுத்திய போதிலும் மக்களின் ஆதரவைப் பெற்ற மன்னராக விளங்கினார். மக்கள் இவரை அரசர் என்று எண்ணியதைவிடக் குடிநலம் பேணிய தந்தையைப் போலவே எண்ணத் தலைப்பட்டனர். எல்லோரிடமும் நண்பரைப் போலவே நல்லிணக்கமாகச் செயல்பட்ட அவர், நயவஞ்சகமாகக் கொல்லப்பட்டார். இவருடைய கொலை, அலாவுதீனின் செய்நன்றி மறக்கும் தன்மையை எடுத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

2. அலாவுதீன் கில்ஜி

டெல்லிச் சுல்தானிய வரலாற்றில் குறிப்பிடத்தகுந்த அரசாகள் சிலரில் அலாவுதீன் கில்ஜியும் ஒருவராவர். அலாவுதீன் இளமையிலேயே தந்தையை இழந்தமையால் ஜலாலுதீன் கில்ஜியினுல் வளர்க்கப்பட்டார். பின்னர் ஜலாலுதீன் இவரைத் தம் முடைய மருமகனுக்கிக் கொண்டதோடு காரா மணிக்பூரின் ஆளுநராகவும் நியமித்தார். ஆனுல் எந்த அளவிற்கு ஜலாலுதீன் தம்முடைய அன்பையும் ஆதரவையும் காட்டினாரோ அந்த அளவிற்குத் துரோகியாக மாறினர். அலாவுதீன், ஜலாலுதீனைக் கொலை செய்தார். ஆனால் உண்ட வீட்டிற்கு

இரண்டகம் நினைத்த பாதகத்துக்கு அவர் ஆளானார். உடனடியாக அலாவுதீனுல் ஆட்சிக்கு வர இயலவில்லை.



படம் 13

அலாவுதீன் உடனடியாக ஆட்சியைக் கைப்பற்றத் தடையாக விளங்கியவர்கள், இறந்த சுல்தானின் மனைவி மாலிகா-இ-ஜஹான் அம்மையாரும், மைந்தர்களுமே ஆவர். சுல்தான் இறந்த

போது மூத்த மகன் அர்கலிகான் மூல்தானத்தில் இருந்தார். எனவே மாலிகாயிஜஹான் (Malika-i-Jahan) தன்னுடைய கணவரின் மரணச் செய்தியைப் பற்றிக் கேள்விப்பட்டதும் இளைய மகன் காதிர்கானை ருக்னுதீன் எனும் பட்டத்துடன் அரசுக்கட்டில் ஏறச் செய்து அர்கலிகானுக்குச் செய்தி அனுப்பி வைத்தார். இந் நிலையில் அலாவுதீன் காராவிலிருந்து டெல்லி நோக்கிப் பயணமானார். மக்களுடைய ஆதரவு இருந்தால்தான் இடையூறுகளை வெற்றி கண்டு அரசோச்ச முடியும் என்பதை உணர்ந்து வழியெங்கும் தங்கம், வெள்ளி நாணயங்களை வாரி யிறைத்தார். தங்கமும், வெள்ளியும் தாமாகவே மக்கள் மனதில் மாறுதல்களை ஏற்படுத்தின. பெரிய தலைவர்கள் கூட இவருக்கு ஆதரவு அளித்தனர். அது மட்டுமின்றிப் படையில் ஒரு பகுதியையும் தமக்கு ஆதரவாகச் செய்தார். அலாவுதீனை எதிர்த்து வெற்றி பெறுதல் இயலாது என்பதனை உணர்ந்த ருக்னுதீன் தாயுடன் முல்தானத்திற்கு ஓடிவிட்டார். நிலைமை மிகச் சாதகமாக அமைந்துவிடவே அக்டோபர் 3, 1296இல் இவர் டெல்லிச் சுல்தானைத் தம்மை அறிவித்துக்கொண்டு ஆட்சி செலுத்தத் தொடங்கிய போதிலும் இடையூறுகள் அனைத்தும் முழுமையாக வெற்றி கொள்ளப்படவில்லை. தன் தம்பியைத் தப்பி ஓடிவிட்ட ஆட்சி உரிமையாளர்களுக்கு எதிராக அனுப்பி வைத்தார். ருக்னுதீன், அர்கலிகான் ஆகியோர் குருடாக்கப் பட்டனர். மாலிக்காயிஜஹான் சிறைப்படுத்தப்பட்டார்.

ஜலாலி உயர் குடியினர்: தனக்கு விசுவாசமில்லாத ஜலாலி உயர் குடியினரைத் தண்டிக்க எண்ணம் கொண்ட அலாவுதீன் நஸ்ரத்கான் என்பவரை, அவர்களைத் தண்டிக்க அனுப்பி வைத்தார். மாலிகாயிஜஹானுக்கு ஆதரவாய் இருந்து, பின்னர் தனக்கு ஆதரவாய் பணத்தினால் விலைக்கு வாங்கப்பட்டவர் களையும் தண்டித்தார். எவ்வாறு, அவர்கள் தம்முடைய பணத் திற்கு ஆசைப்பட்டு மாலிகாயிஜஹானுக்குத் துரோக மிழைத் தார்களோ அவ்வாறே தமக்கும் துரோக மிழைக்கக் கூடும் என்று எண்ணினார். அவர்களுடைய ஜாகீர்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அது மட்டுமின்றி அவர்களுடைய சொத்துக் களையும் பறித்துச் சிலரைச் சிறையிலடைத்தும் சிலரைக் குருடாக்கியும், சிலரைக் கொலை செய்தும் தண்டித்தார்.

மங்கோலியப் படையெடுப்புக்கள்: மங்கோலியர்கள் எல்லைப்புறங்களில் தொல்லை தந்து கொண்டிருந்தனர். எனவே அலாவுதீன் பால்பனுடைய எல்லைப் பாதுகாப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தார். மிகவும் நம்பிக்கைக்குரியவர்களையே எல்லைப்

புறங்களில் பதவியிலமர்த்தினார். அது மட்டுமின்றி நிலையான படை ஒன்றையும் எல்லைப்பகுதியில் நிறுத்தினார்.

மங்கோலியர்களைத் தடுத்து நிறுத்திப் பேரரசைக் காப்பது தம்முடைய கடமை என்று அலாவுதீன் கருதினார். எனவே தம் முடைய முழுச் சக்தியையும் பயன்படுத்தி மங்கோலியரை முறி யடித்து விரட்டினார். மங்கோலியர்களை வெற்றி கொள்ளப் பல மாறுதல்களைச் செய்தார். தனி ஆளுநர்கள், தனிப்படை ஆகியவை ஏற்படுத்தப் பட்டன. பஞ்சாப், முல்தானம், சிந்துப் பகுதிகளில் பழைய கோட்டைகள் செப்பனிடப்பட்டன. புதிய கோட்டைகள் எழுப்பப்பட்டன.

அலாவுதீன் சுமார் 12 மங்கோலியப் படையெடுப்புகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. மங்கோலியப் படையெடுப் புக்கள் (invasions) என்று அவற்றை யழைப்பதைவிட, மங்கோ லியத் 'தாக்குதல்கள்' (raids) என்பதுதான் பொருந்தும். 1296லிருந்து 1308 வரை இத் தாக்குதல்கள் நடைபெற்றன.

மங்கோலியர்களின் தொல்லைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்த செயல் இவருக்குப் பெருமை தருவதாக அமைந்தது. இது வரை மங்கோலியர்கள் படையெடுத்து வந்து தொல்லை அளித் தனர். ஆனால் அவர்கள் மீது இவரே படை எடுப்புகளை நிகழ்த்தி அவர்கள் மீண்டும் படையெடுத்திடாதவாறு செய்தார். இது பெருமைக்குரிய செய்தியாகக் கருதப்படுகிறது.

அலாவுதீனின் போர் நடவடிக்கைகள்

குஜராத் படையெடுப்பு (1299) : இரண்டாம் கர்ண தேவ ராயர் 1299 இல் குஜராத்தை ஆட்சி செய்துவந்தார். குஜராத் பல முறை வெற்றிகொள்ளப்பட்ட போதிலும் அடிபணியாது இருந்து வரவே அதனை அடிபணியச் செய்யும் நோக்கில் உலுகான், நஸ்ரத்கான் ஆகிய இருவரையும் அனுப்பி வைத்தார். குஜராத் தின் தலைநகர் பிடிக்கப்பட்டது மட்டுமின்றி, கர்ணதேவரின் அரசி கமலா தேவியும் சிறைப்பிடிக்கப்பட்டு, அலாவுதீனின் அந்தப்புரத்திற்கு அனுப்பப்பட்டார். கர்ண தேவரும், அவர் மகள் தேவல தேவியும் தேவகிரி அரசர், இராமச்சந்திர தேவரிடம் சரண் புகுந்தனர். இப் படையெடுப்பின் பயனாக ஏராளமான செல்வம் அலாவுதீனுக்குக் கிடைத்ததோடு, கபூர் என்ற அழகியும் கிடைத்தார்.

முதல் மூன்றாண்டுகளில் பெற்ற வெற்றிகள் அலாவுதீனைப் பேரரசக்காரர் ஆக்கின. அலெக்சாந்தரைப் போன்று அகிலத்

தையும் வெற்றி கொண்டு ஆளவேண்டுமென்ற பேரவா அவர்பால் துளிர்விட்டது. அது மட்டுமின்றிப் புதிய சமயம் ஒன்றை நிறுவவேண்டும் என்றும் ஆசைப்பட்டார். ஆனால் பராணியின் மாமனுன மாலிக்அலா உல் முல்க் என்பவர் மக்களை ஆள்வதே மன்னனின் கடமை என்றும், மதத்தை உருவாக்குவது ஞானிகளின் வேலை என்றும் அறிவுறுத்தினர். எனவேதான் உலகை வெல்லும் ஆசையை விட்டுவிட்டு இந்தியப் படையெடுப்பு களில் அக்கறை செலுத்த ஆரம்பித்தார்.

இராந்தாம்பூர் படையெடுப்பு (1301): இராந்தாம்பூர் எனும் கோட்டையை ஆண்டுவந்த இராபுத்திர அரசனுன ஹமீர் தேவன் என்பானுக்கு எதிராக அலாவுதீன் படையெடுத்தார். பால்பன், இல்துத்மிஷ் ஆகியோரின் காலத்தில் இராந்தாம்பூர் அடிபணிந்து இருந்த போதிலும் அலாவுதீனின் காலத்தில் சுயேச்சையாயிற்று. அலாவுதீன் இராந்தாம்பூரின் மேல் படை யெடுத்ததற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. முதலா வது காரணம் அலாவுதீனை எதிர்த்தவருக்கு ஹமீர்தேவன் புகலிடம் கொடுத்ததே. இரண்டாவது காரணம் தன்னுடைய முன்னோர்களின் உரிமை தம்முடைய உரிமை என்ற எண்ணமே ஆகும். நஸ்ரத்கான், உலூகான் ஆகிய இருவரும் ஹமீர் தேவ னுக்கு எதிராக அனுப்பப்பட்டனர். நஸ்ரத்கான் கொல்லப்பட் டார் என்ற செய்தியினைக் கேள்விப்பட்ட சுல்தான் தாமே நேரில் சென்று முற்றுகையிட்டார். ஆனால் அம் முற்றுகை பயனளிக் காது போகவே, இரான்மால் என்ற அமைச்சரைத் தன்பால் சேர்த்து அதன் மூலமாக ஹமீர் தேவரைத் தோற்கடித்தார். ஹமீர் தேவரும் அவரைச் சார்ந்தவர்களும் எதிர்த்துப் போரிடாது தற்கொலை செய்து கொண்டனர். **'ஹமீர் மகா காவியம்'** என்ற நூலில் இரதிபால், கிருஷ்ணபால் என்ற இருவரும் அலாவுதீன் பக்கம் சேர்ந்ததால் தோல்வியைத் தழுவநேரிட்ட ஹமீர் படுகாய மடைந்தார் எனவும் தாமே உடைவாளால் தம் தலையைச் சீவிக் கொண்டார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஹமீருக்குத் துரோகம் செய்து, தம் பக்கம் சேர்ந்த இரான்மால் தமக்கும் அது போல் துரோகம் செய்யக்கூடும் எனக்கருதி அலாவுதீன் அவரைக் கொலை செய்தார்.

மீவார் (1302-1303): இந்திய வரலாற்றில் மீவாருக்கு ஒரு தனி இடம் உண்டு. மீவாரை ஆண்டுவந்தவர் ராணு ரத்தன்சிங் என்பவர் ஆவார். மீவாரைச் சேர்ந்த வலிவுமிக்க, குன்றின் மேலிருந்த சித்தூர்க் கோட்டையைக் கைப்பற்ற அலாவுதீன் முற்றுகையிட்டார். இதற்குக் காரணம் அலாவுதீனின் போர்

ஆர்வமும், காடு பிடிக்கும் ஆசையுமே ஆகும். ஐந்துமாத காலம் முற்றுகை நடைபெற்றது. அதன் பின்னர் தாக்குப் பிடிக்க இயலாமல் சித்தூர்க் கோட்டை வீழ்ந்தது. போருக்குப் பின்னர் இரத்தன்சிங் என்ன ஆனார் என்பதே தெரியவில்லை. இராசபுத்திரர்கள் எண்ணிறந்தோர் வாளுக்கிரையாயினர். பெண்கள் தீக்குளித்தனர். அலாவுதீன் தம்முடைய மகன் கிஸிர்கானின் பொறுப்பில் சித்தூரை ஒப்படைத்தார். அதன் பின்னர் கிஸ்ராபாத் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

அல்லாவுதீனின் சித்தூர்ப் படையெடுப்பிற்குக் காரணமாக மரபு வழிச் செய்தி ஒன்று கூறப்பட்டு வருகிறது. சித்தூர் ராணி பத்மினியின் அழகைப் பற்றிக் கேள்விப்பட்ட அலாவுதீன் அவ்வழகிய முகத்தை நேரில் பார்க்க விரும்பியதாகவும், அதற்கு ஒப்பாத இரத்தன் கண்ணாடியில் பார்த்துச் செல்ல ஏற்பாடு செய்ததாகவும் கண்ணாடியில் பார்த்தபோதே அவ்வளவு அழகாயிருப்பவள் நேரில் எவ்வளவு அழகாயிருப்பாள் என்று எண்ணிய அலாவுதீன் பத்மினியின்மீது மோக வெறி கொண்டு அவளை அடையக் கருதியே சித்தூர்மீது படையெடுத்ததாகவும் கூறப்படுகிறது.

இச் செய்தியை கர்னல் டாடு எடுத்துக் காட்டியுள்ளார். இதனை உண்மைச் செய்தி என்று எண்ணக் கூடிய வரலாற்று அறிஞர்களும் உள்ளனர். ஆனால் கே. எஸ். லால் போன்றவர்கள் இச் செய்திகளின் உண்மைத் தன்மையைக் குறித்து ஐயம் கொள்கின்றனர். பெரும்பாலான வரலாற்று அறிஞர்கள் இக் கதை கற்பனையில் எழுந்ததே என்று கூறுகின்றனர்.

தம்முடைய மகன் கிஸிர்கானிடம் சித்தூரை ஒப்படைத்து விட்டு டெல்லி திரும்பினார் அலாவுதீன். இராசபுத்திரர்கள் தமது நாட்டுப் பற்றின் விளைவாகக் கிஸிர் கானுக்கு எதிராக அணி திரண்டுவிடவே அவர் பதவியைக் கைவிட வேண்டியதாயிற்று. அலாவுதீன் இதன்பின்னர் மால்தேவ் என்ற இராசபுத்திரத் தலைவரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து, அவரைத் திறை செலுத்துமாறு செய்தார். ஆனால் கி.பி. 1325இல் ராணுஹமீர், மால் தேவரின் மகனிடமிருந்து அதனைக் கைப்பற்றினார்.

மாளவம் (1305-1306) : அலாவுதீன் 1305இல் அய்ன்உல்-முல்க் முல்டானி என்பவரின் தலைமையில் 10,000 குதிரை வீரர்களடங்கிய படை ஒன்றை மாளவத்திற்கு அனுப்பி வைத்தார். அப் பகுதியை ஆண்ட அரசனான இராய் மாலக் தேவர் தோற்கடிக்கப்பட்டார். இவ் வெற்றியின் விளைவாக உஜ்ஜயினி,

மாண்டு, சாந்தேரி, தார் ஆகியவற்றை முஸ்லீம்கள் பிடித்தனர். மாளவத்தில் ஆளுநராக அய்ன் உல் முல்க் நியமிக்கப்பட்டார். 1308இல் அலாவுதீன் தாமே படை நடத்திச் சென்று வலிமை மிக்க ராஜா சிதல் தேவரை வென்று ஷிவாணு நாட்டைக் கைப் பற்றினார். ஜேலர் அரசரான இராஜா கன்னர தேவர், அலாவு தீனின் தலைமைக்கு அடிபணிந்திருந்தபோதிலும் அவரைப் போர்க்களத்தில் சந்திக்கும் ஆற்றலும் தமக்கு உண்டு என்று வீரம் பேசியதாகக் கேள்விப்பட்ட அலாவுதீன் படை ஒன்றை அனுப்பி அவரை வென்று ஜேலரைத் தம் நாட்டோடு இணைத் தார் (1311).

தென்னிந்தியப் படையெடுப்புகள் : அலாவுதீன் காலத்தே தென்னிந்தியாவிலிருந்த நான்கு முக்கிய அரசுகள் 1) தேவகிரி யாதவ அரசு 2) வாராங்கல் காகத்திய அரசு 3) துவார சமுத்திர ஹொய்சாள அரசு 4) மதுரைப் பாண்டிய அரசு ஆகியவை. இவற்றின்மீது அலாவுதீன் மேற்கொண்ட படை யெடுப்புகளுக்கு அரசியல் பொருளாதார முக்கியத்துவம் உண்டு. தென்னிந்தியாவை வெற்றி கொண்ட முதல் முஸ்லீம் அரசர் இவரேயாவார். மேற் கூறப்பட்ட நான்கு முக்கிய அரசுகள் மட்டுமின்றி மன்மசித்தர், இரவிவர்மர் பானுதேவர் போன்றவர் களின் சிறிய அரசுகளும் இருந்தன. இந்துக்கள் ஒற்றுமை யுணர்வின்றித் தமக்குள்ளேயே ஒருவருக்கொருவர் பகைமை கொண்டு செயல்பட்டநிலை அலாவுதீனுக்கு அனுகூலத்தைத் தேடித் தந்தது. இனி அவற்றை எவ்வாறு வெற்றி கொண்டார் என்பதனைக் காண்போம்.

தேவகிரி : 1307இல் மாலிக் காபூரின் தலைமையில் படை யொன்று தேவகிரி அரசனுன இராமச்சந்திர தேவனுக்கு எதிராக அனுப்பப்பட்டது. இதற்குக் காரணம் இருந்தது. மூன்றாண்டு களாக இராமச்சந்திரதேவர் திறை செலுத்தாததோடு கர்ண தேவனுக்கு அடைக்கலம் அளித்ததும் அலாவுதீனின் கோபத்தை அதிகரிக்கச் செய்தது. குஜராத்தை ஆண்ட கர்ண தேவனும், அவரது மகள் தேவால தேவியும், ராமச்சந்திர தேவரிடம் சரண் புகுந்திருந்தனர் என்று கண்டோம். கர்ண தேவன் தன் மகளை இராமச்சந்திர தேவன் மகன் சங்கர் என்பவனுக்கு மணமுடிக்க ஏற்பாடுகள் செய்திருந்தார். ஆனால் தேவால தேவி குஜராத் ஆளுநரான ஆலப்கான் (Alapkhan) என்பவரின் கையில் சிக்கினாள். அவளை டெல்லிக்கு ஆலப்கான் அனுப்பிவைக்க அங்கு அலாவுதீனின் மகன் கிஸிர்கான் தேவால தேவியை மணந்துகொண்டார். மாலிக்காபூர் இராமச்சந்திர தேவனைத்

தோற்கடித்து டெல்லிக்கு அனுப்ப, அலாவுதீன் பெருந்தன்மை யுடன் மீண்டும் அவரைத் தேவகிரிக்கே அனுப்பித் தன்னுடைய திறையரசனாக அங்கு ஆட்சி செலுத்திவர அநுமதி வழங்கினார்.

வாரங்கல்: வாரங்கல்லைக் கைப்பற்ற அலாவுதீன் 1307இல் முயன்றார். ஆனால் அவரால் அதைக் கைப்பற்ற இயலவில்லை. 1307இல் மீண்டும் வெற்றி பெற்றிட முயன்ற போதிலும் தம் ஆட்சிப் பகுதியோடு இணைத்திட விரும்பவில்லை. மாலிக்காபூர் தலைமையில் படை ஒன்றினை அனுப்பிய அவர், தம் தலைமையை வாரங்கல்லின் அரசன் ஏற்றுக் கொண்டால் திறைப் பணத்துடன் வருமாறும், அவ்வாறு திறை செலுத்த மறுத்தால் போர் செய்யுமாறும் சொல்லி அனுப்பினார். இப் படையெடுப்பில் தேவகிரி அரசன், மாலிக்காபூருக்கு உதவினார். வாரங்கல் முற்றுகையிடப்பட்டது. பல மாதங்கள் முற்றுகை நீடித்தது. இறுதியில் அமைதி உடன்பாட்டிற்கு பிரதாபருத்திர தேவன் எனப்பட்ட வாரங்கல் அரசன் ஒத்துக் கொண்டார். மாலிக் 100 யானைகள், 7000 குதிரைகள், ஏராளமான நகைகள், பணம் ஆகியவற்றோடு திரும்பினார்.

துவார சமுத்திரம்: ஹொய்சாள மரபின் அரசராகத் துவார சமுத்திரத்தினை ஆட்சி செய்தவர் மூன்றாம் வீர வல்லாளர். திடீரென்று அவருடைய அரசைத் தாக்கி மாலிக் ஏராளமான சொத்துக்களைக் கைப்பற்றினார். அதுமட்டுமின்றி ஹொய்சாள இளவரசனையும் டெல்லிக்குக் கைதியாக அனுப்பி வைத்தார். ஹொய்சாளர்களும் அலாவுதீனுக்கு அடிபணிந்தனர்.

மதுரை: மாலிக்காபூரின் படையெடுப்புகளில் குறிப்பிடத் தகுந்தது அவரது மதுரைப் படையெடுப்பேயாகும். இதுவரை முஸ்லீம்களின் காலடிபடாத இடமாகப் பெருமையுடன் தலை நிமிர்ந்து நின்ற தமிழகம் முதன் முதலில் மாலிக்காபூரின் படை யெடுப்பைச் சந்தித்தது. இவ்வாறு ஒரு படையெடுப்பு நிகழ் வதற்குக் காரணமாக அமைந்தவர்களே பாண்டியர்கள்தாம் என்பது அறிந்து வருந்தற் பாலதோர் வரலாற்று உண்மை யாகும்.

பாண்டிய மரபில் வந்த சுந்தர பாண்டியன், வீரபாண்டியன் எனப்பட்ட இரண்டு சகோதரர்கள் தமக்குள்ளேயே வாரிசுரிமைப் போரில் ஈடுபட்டனர். வீரபாண்டியன் சுந்தரபாண்டியனைத் தோற்கடிக்கவே, சுந்தரபாண்டியன் டெல்லி சென்று அலாவு தீனைத் தனக்கு உதவுமாறு வேண்டினான். இதுபோன்ற வாய்ப்புக்களை நழுவவிடாத அலாவுதீன் மாலிக்காபூரையே,

மதுரைப் படையெடுப்பிற்கும் அனுப்பி வைத்தார். மதுரை, மாலிக்காபூரால் சீரழிக்கப்பட்டது. ஆலயங்கள் சிதைக்கப் பட்டன. இராமேசுவரம்வரை சென்று மீண்டும் டெல்லி திரும்பினர் மாலிக். அங்கு மசூதி ஒன்றைக் கட்டிவைத்தார் என்றும் கூறுவர்.

மாலிக்காபூர் இராமேசுவரம்வரை சென்றது குறித்து அறிஞர் பெருமக்களிடையே கருத்தொற்றுமையின்மை நிலவு கிறது. டெல்லியிலிருந்து மதுரைவரை வந்த அவர் இராமேசு வரம் சென்று திரும்புவது சாத்தியமே ஆயினும், மசூதி கட்டு மளவிற்கு ஓய்வு இருந்திருக்குமா என்பது சந்தேகமே. இதன் விளைவாகப் பாண்டிய அரசு முகமது துக்ளக்கின் காலம்வரையில் கூட டெல்லிக்கு அடிபணிந்து கிடந்தது.

தேவகிரிப் படையெடுப்பு : இராமச்சந்திர தேவரின் காலம் வரை டெல்லிக்குத் தேவகிரி ஒழுங்காகத் திறை செலுத்தி வந்தது. ஆனால் அவருடைய மகன் சங்கர் ஒழுங்காகத் திறை செலுத்தாமல் போகவே, மாலிக்காபூர் சங்கரைத் தோற்கடித்துக் கொன்றதோடு, தேவகிரியை டெல்லி சுல்தானியத்தோடு இணைத்தார்.

இவ்வாறு பல வெற்றிகளைப் பெற்ற அலாவுதீன் சமுத்திர குப்தரோடு ஒப்பிட்டுப் பேசப்படுகின்றார்.

அரச பதவி குறித்து அலாவுதீனின் கருத்து : அரச பதவி குறித்த கோட்பாட்டிலும், இறைமை அதிகாரத்தை நிலைநாட்டு வதிலும், அலாவுதீன் தம்முடைய முன்னோர்கள் வகுத்து இருந்த வழியில் செல்லாது, தனி வழியே சென்றார். அரசாட்சியில் உலேமாக்கள் எனப்படும் சமயத் தலைவர்களின் குறுக்கீடிருப் பதை அவர் விரும்பவில்லை. 'ஆயிரக்கணக்கானோர் உயிர் துறக்கின்ற கிளர்ச்சிகளைத் தடை செய்வது மக்களின் நலனுக் குகந்தது என்று கருதி நான் ஆணைகளை வெளியிடுகின்றேன். ஆனால் மனிதர்கள் அவற்றைக் கேட்பதுமில்லை; மதிப்பதும் இல்லை; பணிவதுமில்லை. பின்னர் அவர்களைப் பணியச் செய்யக் கடுமையான நடவடிக்கையை நான் மேற்கொள் கின்றேன். இது சட்டத்துக்குப்பட்டதா அல்லது சட்டத்திற்குப் புறம்பானதா என்று எனக்குத் தெரியாது. நாட்டு நலனுக்குத் தேவையானது, நெருக்கடிக்கு ஏற்றது என்று எதை நான் கருதுகின்றேனே அதை நான் ஆணையிடுகிறேன். இறை வனின் இறுதித் தீர்ப்பில் என்ன நேரிடும் என்பதை நான் அறியேன்.' இவ்வாறு அலாவுதீன் கூறியதாகக் கூறப்படும்

செய்தி அவருடைய கருத்தை நன்கு புலப்படுத்துகிறது. இதை வைத்துக்கொண்டு அவர் இஸ்லாமிய சமயத்தைத் துறந்தவர் என்று கூறிவிட முடியாது.

அலாவுதீனின் சமயப்பற்று குறித்து இருவகையான கருத்துகள் நிலவுகின்றன. அலாவுதீன் இஸ்லாமிய சமயக் கோட்பாடுகளின்படி செயல்படவில்லையென்று பரணி என்பார் கூறுகின்றார். ஆனால் அமீர்குஸ்ரு என்பார் இவர் இஸ்லாமிய சமயத்தவராகவே செயல்பட்டாரென்று கூறுகின்றார். காஜியிடம் 'நான் விஞ்ஞானத்தையோ, நூல்களையோ கற்கவில்லை என்ற போதிலும் முஸ்லீம் மரபில் தோன்றிய முஸ்லீம்' என்று கூறியதாகச் சொல்லப்படுகிறது.

அரச பதவிக் கோட்பாட்டில் பால்பனின் வழியையே பின்பற்றிய அவர் மண்ணுலகில் இறைவனின் பிரதிநிதியாக ஆட்சி செலுத்துவோனே அரசன் என்று நம்பியதோடு, யாருடைய கட்டுப்பாட்டின் கீழும் செயல்பட இயலாதென அறிவித்தார். கலீபாவின் ஆசிகளைப் பெறவேண்டிய அவசியமில்லையென்றார்.

உள்நாட்டுக் கொள்கை

இராணுவ அமைப்பு: இராணுவத்தின் போக்கும், ஒழுங்கும் உயர்ந்த தரம் உடையதாயிருந்தால் தான், ஆட்சியைச் சிறப்பாக நடத்த முடியுமென்பதை உணர்ந்த அவர் அதனைச் சீர்திருத்துவதில் தமது கவனத்தைச் செலுத்தினார். அலாவுதீனின் இராணுவத் துறை சீர்திருத்தங்கள் எதிர்காலத்தில் ஆட்சிக்கு வந்தவர்களுக்கு வழிகாட்டும் வகையிலமைந்தன. ஷெர்ஷா, அக்பர் போன்றவர்கள் அலாவுதீனின் இராணுவ அமைப்பு முறைகளைப் பின்பற்றினர் என்ற செய்தி ஒன்றே அலாவுதீனுக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

பெரும் படையின் துணை கொண்டே சமுதாயத்தில் வலிவு மிக்கவர்களாக விளங்கும் உயர் குடியினரை ஒடுக்கிட முடியுமென்று அலாவுதீன் கண்டார். எனவே படை வீரர்களுக்கு ஊதியம் வழங்கினார். அதோடு படைவீரர்களின் செயல்களையும் கண்காணித்தார். படையில் ஒற்றர்கள் பலரை நியமித்து இராணுவ அதிகாரிகளின் செயல்கள் பற்றிய செய்திகளை அன்றாடம் அறிந்து கொண்டார். படைவீரர்களின் எண்ணிக்கை விவரம் போன்றவற்றை அறிவிக்கும் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டது. குதிரைகளுக்குச் சூடு போடும் முறையின் வாயிலாக குதிரைப் படையில் இருந்து வந்த ஊழல் களையப்பட்டது. ஒரே

குதிரையை மீண்டும் மீண்டும் காட்டிப் பல குதிரைகளுக்கான பணத்தை வாங்கும் வழக்கம் நின்றது. பெரிஷ்டாவின் கணிப்பின்படி படையில் 4,75,000 குதிரைப் படைவீரர்கள் இருந்திருக்க வேண்டும் என அறிகின்றோம்.

நில வருவாய்த்துறை : அலாவுதீன் நில வருவாய்த் துறையிலும் மாறுதல்கள் பலவற்றைச் செய்தார். நிலங்கள் யாவும் அளக்கப்பட்டு அரசாங்கத்தின் பங்கு வரையறுக்கப்பட்டது. இந்துக்கள் விளைச்சலில் பாதியையும், முஸ்லீம்கள் விளைச்சலில் கால்வாசியையும் நிலவரியாகச் செலுத்தினர். நில வருவாயைப் பணமாகவே செலுத்தவேண்டும் என்று குடியானவர்கள் கட்டாயப்படுத்தப்பட வில்லை. தானியமாகவும் செலுத்த அனுமதிக்கப்பட்டனர். நிலவரிப் பாக்கியை வசூல் செய்ய முஸ்தக்ராஜ் என்னும் அதிகாரி நியமிக்கப்பட்டார்.

அலாவுதீனின் நிலவரிக் கொள்கையைப் பரணி கண்டித்துள்ளார். பரணியின் கருத்திலிருந்து சில செய்திகள் தெரிய வருகின்றன. பரணி எதையுமே மிகைப்படுத்தக் கூடியவர். வருவாய்த்துறை அதிகாரிகள் கெடுபிடி செய்து மக்களிடம் வரி வசூலித்தபடியால் அத்தகைய அதிகாரிகளுக்குப் பெண்களைத் திருமணம் செய்து கொடுக்கக்கூட மக்கள் விரும்பவில்லை என்று அவர் குறிப்பிடுகிறார். இருப்பினும் தவறு செய்ததாக அறிந்த அதிகாரிகளைத் தண்டிப்பதிலும் அலாவுதீன் கண்டிப்பாயிருந்தார். மிக மிகச் சிறிய அளவு பொருளைக் கையாடிய போதிலும் அரசு அலுவலர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

பொருளாதாரச் சீர்திருத்தங்கள் : அலாவுதீன் பொருளாதாரச் சீர்திருத்தங்களை ஏற்படுத்தியதன் அடிப்படை நோக்கம் என்ன என்பது ஆராயத்தக்கது. நாட்டின் பொருளாதார வளனைப் பாதுகாப்பது அரசின் கடமை எனக் கருதியே அவர் சீர்த்திருத்தங்களைக் கொண்டு வந்தார் என்று ஒரு சிலர் கூறுகின்றனர் ஆனால் வேறு சிலரோ இப் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி வந்ததற்கான காரணம் அவரிடம் இருந்த பெரும்படையே என்று கருதுகின்றனர். அவ்வாறு கருதுபவர்களில் டாக்டர் சாரனும் ஒருவர் ஆவார்.

பொருளாதார நீதியில் திட்டங்கள் தீட்டிய பெருமைக்கு அலாவுதீன் உரியவராகிறார் விலைவாசியைக் கட்டுப்படுத்தினால் நாட்டின் வருவாயில் மாறுதல்கள் விளையுமென்று கருதி அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார். பல்வேறு வகையான பொருட்களுக்கும் அங்காடிகளை ஏற்படுத்தி, ஒழுங்குமுறைகளை வகுத்

தார். பொதுத் தானிய அங்காடி அல்லது மண்டி என்பது தானிய வியாபாரத்திற்கு ஏற்படுத்தப்பட்டது. துணி, சர்க்கரை பழங்கள், வெண்ணெய் முதலியவற்றிற்கான அங்காடி 'சிராய் அடில்' எனப்பட்டது. மூன்றுவதாக குதிரைகள், அடிமைகள், விலங்குகள் ஆகியவைகளுக்கான அங்காடி அமைக்கப்பட்டது. மற்றப் பொருட்களுக்கு என பொது அங்காடி ஒன்றும் உருவாக்கப்பட்டது.

இனி இந்த அங்காடிகள் சிறப்புற நடைபெற அலாவுதீன் விதித்த விதிகளைக் காண்போம். முதலாவதாகத் தானிய அங்காடிக்கு என எட்டு விதிகள் விதிக்கப்பட்டன என பரணியின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். முதலாவது விதியின் படி எல்லாவகையான தானியங்களுக்கும் விலை நிர்ணயம் செய்யப் பட்டது. பொருட்களின் விலை கூடவோ, குறையவோ செய்யாது ஒரே நிலையில் வைக்கப்பட்டிருந்தது ஆச்சரியம்தான். தானிய அங்காடியினைக் கட்டுப்பாட்டுடன் நிர்வகிக்க ஆணைகள் பிறப் பிக்கப்பட்டன. அரசின் பொறுப்பில் தானியங்கள் சேமித்து வைக்கப்பட்டதோடு வரிப்பணம் தானியமாகவும் பெறப்பட்டது. தானியங்களைக் கொண்டு செல்கின்ற வண்டிகளை வைத்திருப் பவர்கள் அரசின் கட்டுப்பாட்டில் விடப்பட்டனர். தானியங்களை அதிக விலைக்கு விற்போர் தண்டிக்கப்பட்டனர். சுல்தான் தானிய வங்கியிலிருந்து தினசரி நிலையைத் தெரிந்துகொண்டார், அரசு வருவாய்த்துறை அதிகாரிகள் வணிகர்களுக்குச் சான் றிதழ் வழங்க வேண்டியிருந்தது. பஞ்ச காலங்களில் உணவுப் பங்கீட்டு முறைக்கும் விதிசெய்யப்பட்டிருந்தபோதிலும், அலாவு தீனின் காலத்தில் அந்நிலை ஏற்படாததால் அவ்வாறு நடைபெற வில்லை. இவ் விதிமுறைகள் தானிய அங்காடிகளுக்கு விதிக்கப் பட்டதுபோன்று சர்க்கரை, பழங்கள். வெண்ணெய்ஆகிய வற்றை விற்பனை செய்த சிராய் அடிலெனப்படும் அங்காடி களுக்கும் விதிமுறைகள் வகுக்கப்பட்டன.

முதலாவது விதியின்படி வணிகர்கள் தரங்கள் கொண்டு வரும் பொருட்களை தனிப்பட்ட வீடுகளிலோ, அங்காடிகளிலோ விற்பனை செய்யக்கூடாது எனப்பட்டது. சிலவகையான துணி களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டது. வணிகர்கள் இந்துக்க ளாயினும் முஸ்லீம்களாயினும் அரசாங்கத்தில் தங்களைப் பதிவு செய்துகொண்டு அனுமதி (Licence) பெறவேண்டியிருந்தது. முல் தானி வணிகர்களுக்கு அரசாங்கம் பொருளுதவி செய்து. தொலை தூரங்களிலுள்ள இடங்களில் இருந்து பொருளைக் கொண்டு வந்து அரசு நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்ய ஏற் பாடு செய்யப் பட்டது. உயர்வகைத் துணிகளை வாங்குவோர்

சிறப்பு அனுமதி பெறவேண்டி இருந்தது. அமீர்கள், மாலிக்குகள் போன்றவர்களே அத்தகைய துணிகளை வாங்கிட அனுமதிக்கப்பட்டனர். மற்றவர்கள் அத்தகைய துணிகளை வாங்கிட இயலாது.

பொதுவாக நான்கு பொது விதிகளை அலாவுதீன் எல்லா அங்காடிகளுக்கும் விதித்திருந்தார். தரத்திற்கேற்ற விலை, வியாபாரிகளின் குறுக்கீட்டுக்குத் தடை, தரகர்கள்மீது கண்டிப்பான மேற்பார்வை,அரசரின் நேரடிவிசாரணை ஆகியவை அந்தப்பொது விதிகள். குதிரைகளின் விலை தரத்திற்கேற்றவாறு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அவைகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த அங்காடிகளிலேயே விலை நிர்ணயிக்கப்பட்டது. ஒற்றர்கள் மூலம் அவ்விதிமுறைகள் ஒழுங்காகப் பின்பற்றப்படுகின்றனவா என்பது அறியப்பட்டது.

அலாவுதீன் தகுந்த வர்த்தக அமைச்சரை நியமித்து அவரது அதிகாரத்தைப் பிறர் மதித்து நடக்கும் வண்ணம் உயர்வு செய்தார். எடைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் பலர் நியமிக்கப்பட்டனர். எடையில் ஏதாவது குறை செய்து விற்பதாக அறிந்தால் தகுந்த தண்டனை வழங்கப்பட்டது. அரண்மனையைச் சேர்ந்த சிறுவர்களைச் சோதனைக்காகப் பொருட்கள் வாங்கி வருமாறு அனுப்பி அவர்கள் வாங்கிய பொருட்களின் எடையைக் குறைவாகக் கொடுத்த வணிகர்களைத் தண்டித்தார். எவ்வளவு எடை குறைந்ததோ, அவ்வளவு சதை வணிகரின் உடலிருந்து எடுக்கப்பட்டது.

இதன் விளைவாகப் பொருட்கள் மலிவாகக் கிடைத்தன. தரமாகக் கிடைத்தன சரியான எடையில் கிடைத்தன. இந்தச் சீர்திருத்தங்களுக்கு அலாவுதீனின் நேரடிக் கவனிப்பும், அறிவுக் கூர்மையும், அதிகாரிகளின் நேர்மையுமே காரணமாகும். அரசில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மட்டுமின்றி, கூலி பெறும் அனைவருக்கும் வாழ்க்கையில் ஒருவகையான பாதுகாப்பு இருந்தது. நாம் வாங்கும் கூலிக்கு இந்தப் பொருட்களே வாங்கமுடியும் என்று தெரிந்தபடியால் திட்டமிட்டு வாழ்க்கையை ஒவ்வொரு வரும் நடத்த முடிந்தது. திட்டமிட்ட வாழ்க்கையால் மக்கள் தெவிட்டாத இன்பம் எய்தினர்.

இந்துக்களை நடத்திய முறை: அலாவுதீன் இஸ்லாமிய சமயத்தின்பால் தீவிரப் பற்றுக் கொள்ளாதவர்போல் தம்மைக் காட்டிக் கொண்டபோதிலும் இந்துக்களைக்கொடுமையான முறையில் நடத்தினார். நிலவரி விஷயத்தில் கூட இந்துக்களையும்,

முஸ்லீம்களையும் சமமாக நடத்தவில்லை. விளைச்சலில் பாதியை நிலவரியாக இந்துக்கள் செலுத்த நேரிட்டது. அது மட்டுமின்றி மேய்ச்சல் வரி, வீட்டு வரி போன்ற புதிய வரிகள் விதிக்கப் பட்டன. இவருடைய கடுமையான வரிகளின் பயனாக இந்துக் குடும்பங்கள் ஏழ்மை நிலைமையடைந்தன. முஸ்லீம்களின் இல் லத்தில் இந்துப் பெண்டிர் பணிப் பெண்களாக ஊழியம் செய் தனர். இந்துக்களுக்குச் சமமான வேலைவாய்ப்பு அளித்திடாது மரமறுத்தல், நீரிறைத்தல் போன்ற வேலை வாய்ப்புகளே அளிக் கப்பட்டன. இந்துக்களைப் பொறுத்தமட்டில் அலாவுதீன் கொள்கை என்ன என்பதை பயானுவின் 'காஜி' கீழ்க்கண்டவாறு கூறுகிறார்: 'இந்துக்களிடம் வெள்ளி கேட்டால் அவர்கள் தங்கம் தரவேண்டும். முகத்தில் காறி உமிழத் தொடங்கினால் வாயைத் திறந்து காட்டவேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமே, இந்து ஒருவன் தன்னுடைய பணிவையும் அடக்கத்தை யும் வெளிக்காட்ட முடியும்.' இந்துக்களைச் சமயநோக்கிலவ்வாறு அலாவுதீன் நடத்திடவில்லை, அரசியல் பொருளாதார காரணங் களின் விளைவாகவே அவ்வாறு நடத்தியிருக்கக்கூடும் என்று டாக்டர் திரிபாதி கூறியபோதிலும் இந்துக்களை மிகக் கொடு மையாக நடத்தினார் என்பதை மட்டும் மறுப்பதற்கில்லை.

உயர் குடியினருக்கெதிரான நடவடிக்கைகள்: மைய அரசு வலுவானதாய் இருந்தாலேயே கிளர்ச்சிகளை ஒடுக்கி அமைதி யான முறையிலாட்சி செலுத்திட இயலும் என்பதை அலாவுதீன் உணர்ந்திருந்தார். கிளர்ச்சிகளுக்கு அடிப்படை காரணம் என்ன என்பதைக் கண்டறிந்து அதற்கான தீர்வுகளைச் செய்தார். 1298இல் புதிய முஸ்லீம்களால் முதல் கிளர்ச்சி தோற்றுவிக்கப் பட்டது. இரண்டாவது கிளர்ச்சிக்குக் காரணமானவர் அலாவு தீனின் சகோதரனின் மகன் ஆகாத்கான். அவுத்திலும் (அயோத்தி) பதாவுனிலும் அலாவுதீனின் இரு மருமக்கள் கிளர்ச்சி செய்தனர். ஹாஜி மௌலா கிளர்ச்சி ஒன்றைத் தோற்றுவித்து தில்லிக் கொத்தவாலைக் கொலை செய்தார். இதை யெல்லாம் கண்ட அலாவுதீன் நான்கு காரணங்களாலேயே புரட்சிகள் தோன்றுகின்றன என்ற முடிவிற்கு வந்தார். (1) திறமையற்ற ஒற்றர் முறை (2) மது அருந்தும் பழக்கம் (3) உயர் குடியினர் தம்மிடையே கொண்டிருந்த நட்பும் திருமண உறவு களும் (4) சிலரிடம் அளவுக்கு மீறிக் குவிந்த செல்வம் ஆகிய வையே கிளர்ச்சிகளுக்குக் காரணம் என்று கண்டறிந்து அதற் கேற்ப அவர் நான்கு கட்டளைகளை விதித்தார்.

முதல் கட்டளை உயர் குடியினரிடத்துச் சேர்ந்திருந்த அளவற்ற தீமைகளுக்குக் காரணமான சொத்துக்களைப் பற்றி

முதல் செய்யும் நோக்கத்தின் அடிப்படையில் வெளியிடப் பட்டது. அவர்களிட்மிருந்த ஓய்வுத் தொகைகள், சமயப்பணிக் கொடைகள், மான்யங்கள் அனைத்தும் அகற்றப்பட்டன. இரண்டாவது கட்டளையின்படி ஒற்றர்முறை சீர்திருத்தியமைக் கப்பட்டது. அவ்வப்போது உடனுக்குடன் அரசுக்குச் செய்தி கிட்டிடும் வகையில் ஒற்றர்கள் ஏராளமாக நியமிக்கப்பட்டனர். மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவர மூன்றாவது கட்டளையை வெளியிட்டார். இக் கட்டளையின்படி மதுபானம் தயாரித்தல், விற்பனை செய்தல் இரண்டையும் அவர் தடை செய்தார் தாமே மதுப்பழக்கத்தைக் கைவிட்டார். சில நாட்களில் இக் கட்டுப் பாடு தோல்வி யுற்றதால் இக் கட்டுப்பாட்டினை சற்றுத் தளர்த்தினர். உயர் குடியினர் திருமண உறவுகளின் வாயிலாகத் தங்கள் நிலையைப் பலப்படுத்துதலைத் தடை செய்தற் பொருட்டு உயர்குடியினர் விருந்துகளேற்பாடு செய்தலோ, திருமண ஒப்பந்தமேதும் அரசின் அனுமதி இன்றிச் செய்து கொள்ளுதலோ கூடாது என்று நான்காவது கட்டளையின் வாயிலாக அறிவித்தார்.

இறப்பு : இத்தனைச் சாதனைகளையும் அலாவுதீன் தம் முடைய இருபதாண்டு கால ஆட்சியின்போதே நிகழ்த்தினர். அலாவுதீன் சாவின் வாயிலை அடைந்து கொண்டிருந்தார். கபூர் அவருடைய உடலில் கலந்தளித்த நஞ்சு, மெல்ல மெல்ல அவரை உடல் நலம் குன்றச் செய்தது என்று எல்பின்ஸ்டன் கருதுகிறார். இவ்வாறு நோயினால் வருந்திக்கொண்டு இருந்த வேதனையை அதிகப்படுத்துவதுபோல் குஜராத் கிளர்ச்சி, சித்தூர்க் கிளர்ச்சி, தேவகிரிக் கிளர்ச்சி ஆகிய எதிர்ப்புகள் தோன்றின. இதுமட்டு மின்றி மனைவியும் மக்களும் இவருடைய துன்பத்தை அதிகரிக்கச் செய்தனர். ஷிகாம் உத் உமார் எனப்படும் இளைய மகனை மாலிக்காபூரின் தூண்டுதலினால் தமக்குப்பின் வாரிசாக நியமித்தார். அரசுக்கெதிராகத் துரோகமிழைத்ததாக மூத்த மகன் கிஸிர்கான், அவருடைய அன்னை ஆகியோர் சிறை வைக்கப்பட்டனர். இத்தகைய சூழ்நிலைகளின் பிடியிலிருந்து 21, ஜனவரி 1316இல் சாவு அவரை விடுவித்தது.

மதிப்பீடு : டெல்லிச் சுல்தானிய அரசர்களிலேயே சிறந்த ஆட்சியாளராக விளங்கியவர் அலாவுதீன் கில்ஜியே ஆவார். இவருக்கு முன்னர் நாட்டு நிருவாகத்தினை இவ்வளவு செம்மை யாகச் சீர்திருத்தியமைக்க யாராலுமியலவில்லை என்று கூறலாம். அவர் பல்வேறு துறைகளிலும் மேற்கொண்ட சீர்திருத்தங்கள் பிற்காலத்தில் ஆட்சிக்கு வந்தவர்களுக்கு வழிகாட்டுபவையாக

அமைந்தன. ஷெர்ஷாவின் முன்னோடி அலாவுதீன் கில்ஜியே யாவார் என்று கருதப்படுகிறது.

டாக்டர் வின்சென்ட் ஸ்மித் அலாவுதீனின் ஆட்சிக் காலத் தினைச் சிறப்புமிக்க ஒன்றுகக் கருதவில்லை. தம் அதிகாரத்தை கோர்மையாகச் செலுத்தினார் என்று கூறி நிகழ்ச்சிகளிடமளிக்க வில்லையென்று அவர் கூறுகின்றார். இந்துக்களைக் கொடுமைப் படுத்தியது இவரிடத்துக் காணப்பட்ட ஓர் குறைபாடாகும். ஆட்சித்துறையில் இவர் ஏற்படுத்திய சீர்திருத்தங்களைப் போன்று வேறு யாரும் ஏற்படுத்தவில்லை. நிலையான இராணு வமைப்பையும், வரிவிதிப்பு விதிகளையும் கட்டுப்பாடு விதி களையும் ஏற்படுத்தி நிர்வாகத்தை அவர் திறம்படச் செய்தார். அதோடு தென்னிந்தியப் பகுதிகளில் முதன்முதல் முஸ்லீம்களின் காலடிபடச் செய்தவர் அவரே. அதன்மூலம் இஸ்லாமிய சமயம் தென்னகத்திலும் பரவிட வழிசெய்தார். இது ஓர் அருபெருஞ் சாதனை என்பதில் ஐயமில்லை.

அலாவுதீன் கல்வியற்றவராக விளங்கிய போதிலும் கற் றறிந்த பெருமக்களை ஆதரித்தார். அமீர் அர்சலன் ஹோஹி, ஷேக்நிஜாமுத்தின், ஷேக்ருக்னுதீன், அமீர்குஸ்ரு, அமீர்ஹாஸன் போன்ற அறிஞர்கள் இவருடைய அவையை அழகு செய்தனர். ஜமாத்கானு மஸூதி, அலைதர்வாஸா ஆகிய இரு கட்டடங்களை எழுப்பிக் கட்டடக் கலையில் தமக்குள்ள ஆர்வத்தை வெளிக் காட்டினார். சிரிக்கோட்டையையும், ஆயிரம் தூண்களையுடைய அரண்மனையையும் கட்டினரென்று கூறப்படுகிறது.

டாக்டர் எஸ். ஆர். சர்மா, அலாவுதீன் இந்தியாவின் முதல் முஸ்லீம் பேரரசன்று குறிப்பிடுகிறார். அலாவுதீன் கில்ஜியின் காலத்தில் பிறை உயர்ந்து காணப்பட்டது. அலாவுதீன் சீர் திருத்தங்கள் அவருடைய சொந்தக் கண்டுபிடிப்பேயாகும். முஸ்லீம் ஆட்சியைப் பிற முஸ்லீம் அரசர்கள் ஏற்படுத்த அடிக் கல்நாட்டியவர் இவரேயாவார் என்று டாக்டர் சர்மா கருதுகிறார்.

3. அலாவுதீனுக்குப் பின்னர்

குத்புதீன் முபாரக்ஷா : தம் மூத்த மகன் கிஸிர்கானின் உரிமையைப் புறக்கணித்து ஆறு வயதே நிரம்பப் பெற்ற ஷிகா புதீன் உமருக்கு அலாவுதீன் அரியணை உரிமையைத் தந்தார் மாலிக்காபூர் தாமே பகர ஆளாகயிருந்து ஆட்சி நடத்தினார். மாலிக்காபூர் முதலாவதாக மேற்கொண்ட திருப்பணி அலாவு தீனின் மற்ற வாரிசுகளை ஒழித்துக்கட்டுவதாகவே அமைந்தது.

யார், யார், காபூரைச் சார்ந்திருந்தார்களோ அவர்களுக்கே சலுகைகள், உயர் பதவிகள் அனைத்தும் வழங்கப்பட்டன. அலாவுதீனின் அடிமைகள் ஒன்று சேர்ந்து காபூரைத் தீர்த்துக் கட்டினர். காபூரின் மறைவிற்குப் பின்னர் குத்புதீன் முபாரக்ஷா பட்ட மெய்தினர். அவர் அலாவுதீனின் மூன்றாவது மகனான போதிலும் காபூரின் கொலை முயற்சியிலிருந்து தப்பித்தவர் அவர் ஒருவரேயாகும்.

பதவியேற்றதும் மக்களின் நல்லெண்ணத்தைப் பெறத் தந்தையின் கடுமையான விதிகளை நீக்கினர். அலாவுதீனல் தண்டிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்ட உயர் குடியினரைத் திரும்ப அழைத்தார். வரிக் குறைப்புச் செய்தார். இவ்வாறு எல்லாம் அவர் மேற்கொண்ட முயற்சிகள் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை மாறாக மக்களுக்கு அரசாங்கத்திடமிருந்த பயம் தெளிந்தது. மன்னரும் உயர் குடியினருடன் சேர்ந்து பொழுதை இன்பமாகக் குடியிலும், பொழுதுபோக்குகளிலும் கழித்தார். இவ்வாறு வாழ்ந்த மன்னரின் பலவீனத்தை உணர்ந்தவர்கள் கிளர்ச்சிகள் செய்யத் தலைப்பட்டனர். குஜராத்தில் கிளர்ச்சி நடைபெற்றது. தேவகிரி, மார்வார் ஆகியவை விடுதலை பெற்றன.

எனவே முபாரக்ஷா தாமே படை நடத்திச் சென்று தேவகிரி அரசரான ஹரபால தேவனைக் கொன்று தலையைத் தேவகிரிக் கோட்டையில் தொங்கிடச் செய்தார். குஜராத்திற்கு அய்ன்உல் முல்தானியை அனுப்பிக் கிளர்ச்சியை ஒடுக்கினர். இந்து ஆலயங்களைக் கொள்ளை அடித்துத் தேவகிரியில் மசூதி ஒன்றைக் கட்டினர். கிஸிர்கானின் மகனை அரியணையேற்றச் சதி ஒன்று நடப்பதையறிந்து சதிகாரர்களைத் தண்டித்தார். சதிகாரர்களோடு கிஸிர்கானும் கொல்லப்பட்டார். கண்கள் குருடாக்கப்பட்டுச் சிறையில் வாடிய கிஸிர்கான் அவருடைய மனைவியாகிய தேவால தேவியின்மீதுள்ள காதலைவிட்டுவிடு மாறு முபாரக் அஞ்சலெழுதினர். ஆனால் கிஸிர்கான் தேவால தேவியைப் பிரிவதைவிடச் சாவைத் தழுவுவதே மேலென்று எழுதியதாகவும், அக் கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு கிஸிர்கானைக் கொலை செய்தாரென்றும் கூறப்படுகிறது. அதன் பின்னர் தேவால தேவியின் கதி என்னவாயிற்று என்பது தெரிய வில்லை. தேவால தேவியை முபாரக் மணந்து கொண்டாரென்றே கூறப்படுகிறது.

இவ்வாறு கிடைத்த வெற்றிகள் முபாரக்கின் மூளையை மழுங்கச் செய்தன. வேடிக்கையாகப் பேசுவோர் மத்தியிலும், அழகிய இளம் பெண்கள் மத்தியிலும் பொழுதைக் கழித்தார்.

முபாரக்ஷா குஸ்ரூவிற்குச் சலுகைகள் வழங்கினார். குஸ்ரூவே 1320இல் திடீரென்று முபாரக்ஷாவைத் தாக்கித் தலையைத் துண்டித்தார். இம் மரபின் திறமையற்ற அரசரான முபாரக்கிற்கு முடிவு இவ்வாறு ஏற்பட்டது.

நசீருத்தீன் குஸ்ரு ஷா : குஸ்ரு, நசீருத்தேன் குஸ்ரூஷா என்ற பட்டத்தோடு 1320இல் அரியணை ஏறினார். கிஸிர்கானின் மனைவியாய் இருந்து பின்னர் முபாரக்ஷாவின் மனைவியான தேவால தேவி குஸ்ரூவின் மனைவியாக்கப்பட்டார்.

புதிதாகப் பதவியேற்ற இவர் எல்லோருடைய நம்பிக்கையையும் பெற முயற்சி செய்தார். நசீருத்தீன் குஸ்ரூஷா இந்துவாக இருந்து பின்னர் முஸ்லீமாக மாறியவர். காஜிமாலிக் எனப்பட்ட பஞ்சாப்பின் ஆளுநர் இந்திய முஸ்லீம்கள் ஆட்சியாளர்களாக வருவதை விரும்பவில்லை. அவர் குஸ்ரூவை எதிர்த்த முல்தானம், சமானா, சிவில்தான் போன்றவர்களின் ஆதரவை நாடினார். காஜிமாலிக் டெல்லியை நோக்கிப் படை எடுத்துப் போர்க்களத்தில் குஸ்ரூஷாவைச் சந்தித்தார். 1320இல் அவர் கொல்லப்பட்டார். எனவே எப்ரல் 15, 1320 முதல் செப்டம்பர் 5, 1320 வரையே அவர் ஆட்சி செலுத்தினார். குஸ்ரூஷாவின் ஆட்சிக்குப் பின்னர் கில்ஜிகளின் முப்பதாண்டு கால ஆட்சி முடிவுற்றது.

கில்ஜிகளின் ஆட்சி முப்பதாண்டு காலமே நடைபெற்ற போதிலும் அலாவுதீன் கில்ஜியின் காலத்தில் நடைபெற்ற ஆட்சித்துறை சீர்திருத்தங்களின் வாயிலாக அவர்கள் வரலாற்றில் நிலையானதோர் இடத்தைப் பெற்றுவிட்டனர்.

12. துக்ளக்குகள்

கியாஸ் உத்தீன் துக்ளக் ஷா : இளமை — அயல்நாடுக் கொள்கை— உள்நாட்டுக் கொள்கை — இறப்பு — மதிப்பு. முகமது - பின் - துக்ளக் ; ஆதாரங்கள்-பரணி - இபின்பதூதா—இளமை—வெளிநாட்டுக் கொள்கை— சீனத்தொடர்பு — மங்கோலியர் — கிளர்ச்சி — உள்நாட்டுக் கொள்கை — தோவாப் மீது வரி விதித்தல் —தலைநகரை மாற்றுதல் — அடையாள நாணயம் — சமய நோக்கமும், நீதி நெறியும்—மதிப்பீடு. பிரோஸ் துக்ளக் : பூரி, நாகர்கோட், சிந்து, படையெடுப்புகள் — உள்நாட்டுக் கொள்கை — ஜாகீர் முறை — கால்வாய்கள் — இராணுவம் — சட்டம், நீதி, கல்வி — அடிமை முறை — பொதுப்பணி — நாணயங்கள் — சமயக்கொள்கை — மதிப்பீடு பிற்காலத் துக்ளக்குகள் — துக்ளக் மரபின் வீழ்ச்சிக்குக் காரணங்கள் — தைமூரின் படையெடுப்பு.

1. கியாஸ் உத்தீன் துக்ளக் ஷா (1320-25)

ஒரு மரபினைத் தோற்றுவித்த அரசனின் பெயராலேயே அம் மரபு அழைக்கப்படுவதை முதன் முதலாக இப்போது காண்கிறோம். முதல் அரசனின் பெயரில் காணப்படும் 'துக்ளக்' என்னும் சொல்லே அம் மரபு முழுமைக்கும் தொடர்ந்தது. இபின் பதூதா என்னும் பயணியின் கூற்றிலிருந்து துக்ளக் மரபினர் 'கரௌனு துருக்கியர்கள்' என்னும் பிரிவினர் என அறிகிறோம் மத்திய ஆசியாவைச் சேர்ந்த மங்கோலியர்களின் ஒரு பிரிவினர் என்று கருதப்படும் இக் கரௌனுக்களைப் பற்றி இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர்கள் ஒரு சிறிதும் குறிப்பிடவில்லை என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

துக்ளக் மரபினைத் துவக்கியவர் கியாஸ் உத்தீன் துக்ளக் அல்லது காஜிமாலிக் என்பவர் ஆவார். இவருடைய தந்தை துருக்கிய அடிமை இனத்தைச் சேர்ந்தவராயும் தாய் 'ஜாட்' இனத்

தவராயும் விளங்கினர். மங்கோலியர்களுக்கு எதிராகப் போரிட அலாவுதீன் கில்ஜியின் படையில் சேர்ந்து, அவர்களை 29 முறை விரட்டி அடித்தமையால் இவர் மாலிக்-இ-காஜி அல்லது காஜி மாலிக் எனப்படும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார். அலாவுதீன் கில்ஜிக்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்திடத் தகுந்தவர் யாரும் இல்லாமையால் காஜி மாலிக் தாமே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

கியாஸ் உத்தீன் பதவி ஏற்றபோது டெல்லியில் குழப்பமான சூழ்நிலை நிலவியது. புத்தி சாதுரியத்துடனும் தந்திரத்துடனும் உறுதியுடனும் செயலாற்ற வேண்டிய நிலையில் கியாஸ் உத்தீன் இருந்தார். மிகத் திறமையாகக் குழப்ப சக்திகளை அழித்து ஆட்சியை நிலைநாட்டிய பெருமை பெற்றார். அது மட்டுமின்றி அலாவுதீனின் உறவினர்களைப் பெருந்தன்மையோடும் நடத்தினர். யாருடைய திறமையையும் குறைத்து மதிப்பிடா இயல்பு இவரிடத்துக் காணப்பட்டது. அவரவர் தகுதிகளுக்கேற்ற வகையில் உயர் பதவிகள் அளித்துக் கௌரவித்தார்.

அயல்நாட்டுக் கொள்கை : காஜி மாலிக் நாடு பிடிக்கும் ஆசை கொண்டவராக விளங்கினர். தன்னுடைய அதிகாரத்திற்கும், ஆட்சிக்கும் ஏற்பட்ட எதிர்ப்புக்கள் அத்தனையையும் முறியடிப்பதில் மிகக் கவனமாக இருந்தார்.

கி. பி. 1321இல் வாராங்கல்லைச் சேர்ந்த இரண்டாம் பிரதாப ருத்திரதேவர் அலாவுதீன் மறைவிற்குப் பின் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தம் நிலையைப் பலப்படுத்திக் கொண்டிருந்தார். டெல்லிப் பேரரசிற்குச் செலுத்திவந்த திறையையும் செலுத்த அவர் மறுக்கவே வாராங்கல்லை நோக்கித் தம் மகன் ஜூனாகானின் தலைமையில் படை ஒன்றை அனுப்பி காஜிமாலிக் முற்றுகையிடச் செய்தார். ஆனால் இம் முற்றுகை வெற்றி பெறவில்லை இதற்கு இவருடைய மகனே காரணம் என்று சிலர் கூறுவர். ஜூனாகான் முற்றுகையை முடித்துத் திரும்பிவந்தார். நான்கு மாதங்களுக்குப் பின்னர் மற்றொரு படை அனுப்பி வைக்கப்பட்டது. இம்முறை ஜூனாகான் பீடாரைக் கைப்பற்றி வாராங்கல்லை நோக்கி நடை போட்டார். பிரதாபருத்திர தேவரும் அவர் குடும்பமும் படையெடுப்பாளரிடம் சரண் புகுந்திட வேண்டியதாயிற்று. வாராங்கல் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு டெல்லிப் பிரபுக்களின் பொறுப்பில் விடப்பட்டதோடு, 'சுல்தான் பூர்' என்று அதன் பெயரும் மாற்றப்பட்டது.

டெல்லிக்குத் திரும்பிவரும் வழியில், ஜுனுகான் ஒரிஸ்ஸாவைச் சேர்ந்த 'உட்கல்' அரசரைத் தாக்கி வெற்றிகொண்டதோடு ஐம்பது யானைகளையும் விலை மதிப்பில்லாப் பொருட்களையும் பெற்றுவந்தார்.

காஜிமாலிக் வங்கத்திலும் அங்கு நடந்த உள்நாட்டுப்போரின் வாயிலாகத் தலையிடவேண்டியதாயிற்று. வங்காள அரசன் ஷம்சுதீன் பிரோஸ்ஷாவின் மூன்று மக்களும் ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொண்டிருந்தபோது. நசீருதீன் என்னும் மகன் இவர் உதவியை நாடவே சுல்தான் வங்கத்தை நோக்கிச் சென்றார். வங்காளம் டெல்லியின் பிடியில் அடங்கியது. நசீருதீன் டெல்லியின் பிரதிநிதியாக ஆட்சி செலுத்தினர். கி. பி. 1324இல் படையெடுத்து வந்த மங்கோலியர்களும் ஒடுக்கப்பட்டனர்.

உள்நாட்டுக் கொள்கை : குஸ்ரு ஷாவிற்கு ஆதரவாக இருந்த சிலரைத் தவிர மற்ற அனைவரையும் பெருந்தன்மையோடு நடத்தியதோடு அலாவுதீன் கில்ஜியின் காலத்தில் நிலங்களை இழந்த அனைவருக்கும் அவரவர்களுடைய நிலங்களை திருப்பியளித்தார். இலஞ்ச ஊழலைத் தடுத்து நிறுத்திட அரசு ஊழியர்களுக்கு நல்ல ஊதியம் வழங்கி உயர் பதவிகளும் வழங்கினர். ஒவ்வொருவருக்கும் உயர் ஊதியம் வழங்கும்போது அவரவர்களுடைய நிலை, தகுதி, பதவிக்காலம் ஆகியவை கருத்தில் கொள்ளப்பட்டன. மிக முக்கியமான காரியங்களில் பிறருடைய ஆலோசனையைக் கேட்டு அதன்படி செயல்பட்டார்.

வருவாய்த்துறையில் இவர் கடைப்பிடித்த கொள்கை இவருடைய அரச தந்திரத்தை எடுத்துக் காட்டுகிறது. மக்கள் நலனைக்கருத்தில் கொண்டே கொள்கைகளை வகுத்தார். அமீர்கள், மாலிக்குகள் ஆகியோர் மொத்த வருவாயில் ஐந்தில் ஒரு பங்கிற்கு மேல் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. நிலங்களை அளக்கின்ற முறை கைவிடப் பட்டது. இதற்குக் காரணம் அது சரிவரச் செயல்படாமையேயாகும். எனவே வரி வசூலிப்பவர்கள் தாமே நேரில் சென்று நிலவரியை மதிப்பிடவேண்டும் என்று ஆணையிட்டார். தரிசாகக் கிடக்கும் நிலங்களைப் பயிர்செய்து பயனுள்ள நிலங்களாக மாற்ற போதிய ஊக்கம் அளித்தமையால் ஏராளமான நிலங்களில் வேளாண்மை செய்யப்பட்டது. நிலங்களுக்குப் போதிய நீர் போய்ச்சேர கால்வாய்கள் அமைக்கப்பட்டன. வேளாண்மை செய்வோர்க்குப் பாதுகாப்பு அளித்திடக் கோட்டைகள் அமைக்கப்பட்டன.

நாட்டின் எல்லாத் துறைகளிலும் தம் கவனத்தைச் செலுத்தினர். அலாவுதீனுல் புகுத்தப்பட்ட சேரா (Chera) தா (Dah) என்னும் முறைகள் தொடர்ந்து பின்பற்றப்பட்டன. இவர் உருவாக்கிய அஞ்சல் முறை சிறப்பான செயலாகக் கருதப்படுகிறது; குதிரை வீரர்களும், நடந்து செல்பவர்களும் அஞ்சல்களைக் கொண்டுசெல்ல ஆங்காங்கே நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர். செய்திகள் ஒரே நாளில் நூறு மைல் தூரத்திற்குக்கூடச் சென்றன. ஏழை எளியவர்க்கு உதவும் திட்டமொன்றை வகுத்த அவர் சமயத்துறை அறிஞர்களைப் போற்றினர். அமீர்குஸ்ரு என்பார் அரசின் அரசவைக் கவிஞர் மாதம் ஒன்றுக்கு ஆயிரம் 'டங்காக்கள்' பெற்றார். அமீர்குஸ்ரு இவரைப் புகழ்ந்து உரைத்துள்ளார் என அறிகிறோம்.

இறப்பு: காஜி மாலிக் வங்காளத்தில் இருந்தபோது தன் மகன் ஜூனுகானைப் பற்றிய செய்திகளைக் கேள்வியுற்றார். காஜி மாலிக்கின் வெறுப்பிற்கு ஆளான ஷேக் நிஜாம் உத்தீன் என்பவனிடத்து ஜூனுகான் நட்புக் கொண்டுள்ளதாக அறிந்தார். சோதிடர்கள் காஜிமாலிக் டெல்லிக்குத்திரும்பமாட்டார் என்றுசோதிடம் கூறினர். எனவே அவசரமாக டெல்லிக்குத் திரும்பிய அவரை வரவேற்பதற்காக **ஆப்கான்பூர்** என்னுமிடத்தில் மரத்தினாலான மேடை ஒன்றினை ஜூனுகான் கட்டிவைத்தார். ஜூனுகான் தன் தந்தையிடம் வங்கத்திலிருந்து வந்த யானைகளை மேடைமீதிருந்து பார்வையிடும்படி கேட்டுக்கொண்டதாகவும், அங்ஙனம் வந்த யானைகள் மோதியவுடன் மேடை சரிந்து விழுந்து காஜிமாலிக் இறந்தார் என்றும் கூறப்படுகிறது.

வரலாற்று அறிஞர்களிடையே ஜூனுகான் தந்தையைக் கொன்றவரா? இல்லையா? என்பது குறித்து நீண்ட விவாதம் எழுந்துள்ளது. அக்கால வரலாற்று அறிஞர்கள் இதைப்பற்றி ஏதும் குறிப்பிடாததைக்கொண்டு ஜூனுகான் குற்றவாளி அல்லன் என்று உரைக்கின்றனர் சிலர். டாக்டர் ஈஸ்வரி பிரசாத் காஜி மாலிக்கின் இறப்பிற்குப் பின்னுல் சந்தேகப்படும்படியான சூழ்நிலை உள்ளது என்று கூறுகின்றார். ஆனுல் மக்தி ஹூசேன் (Mahdi Hussain) இது தற்செயலாக நேர்ந்த விபத்து என்றும், ஏற்கெனவே ஜூனுகானைத் தன் வாரிசாக நியமித்தபடியால் ஜூனுகான் கொலை செய்ய வேண்டிய அவசியம் ஏதும் இல்லை என்றும் கருதுகின்றார். பொதுவாக காஜிமாலிக்கின் மரணத்திற்கு ஏதோ ஒருவகையில் ஜூனுகான் காரணம் என்றே கருதப்படுகிறது.

மதிப்பீடு: காஜிமாலிக் சிறந்த இராணுவவீரர். தன்னுடைய உழைப்பினுலே உயர்ந்தவர். அலாவுதீன் கில்ஜியின் மறை

விற்குப் பின்னர் ஏற்பட்ட குழப்பத்தைத் தடுத்து டெல்லிச் சுல்தானியத்தின் வீழ்ச்சியையும் தடுத்து நிறுத்தியவர்! மக்களுடைய நலனில் அக்கறை கொண்ட மன்னனாகவே விளங்கினார். மக்களுக்கு நீதி வழங்குவதிலும் அக்கறை செலுத்திய அவர் ஒருநாளில் இரண்டுமுறை அவை கூட்டி முறை வழங்கினார்.

இவரிடம் காணப்படும் குறைபாடு தம் குடி மக்கள் அனைவரையும் சமமாக நடத்தவில்லை என்பதுதான். இந்துக்களை மிகவும் கடுமையாக நடத்தினார். தன்னுடைய படையெடுப்பின் போது வழியில் அகப்பட்ட இந்து ஆலயங்களை நொறுக்கி ஏராளமான சொத்துக்களைக் கொள்ளை கொண்டார். சமயக் கொள்கைகளில் தீவிரவாதியாகவே விளங்கினார்.

கற்பதில் ஆர்வம் கொண்டிருந்த இவருடைய அவையில் ஏராளமான அறிஞர்களும் புலவர்களும் இருந்தனர். காஜி மாலிக்கை ஜலாலுதீன் என்பார் பிரோஸ் கில்ஜியுடன் ஒப்பிடுகின்றார்.

காஜிமாலிக் சிறந்த போர் வீரராகத் திகழ்ந்தபோதிலும்சிறப்பு மிக்க வெற்றிகளுக்கு உரியவர் அல்லர். அலாவுதீன் கில்ஜியின் ஆட்சிக்குப் பின் ஏற்பட்ட குழப்பத்தைத் தீர்த்தவர் என்பதே இவருடைய சிறப்புச் செயலாகக் கருதப்படுகின்றது.

2. முகமது-பின்-துக்ளக்

இந்திய வரலாற்றில் முகமது பின் துக்ளக்கைப்போல, வரலாற்று அறிஞர்களால் குறை கூறப்பட்ட, இழித்துரைக்கப்பட்ட அல்லது பழித்துரைக்கப்பட்ட அரசர் எவரும் இல்லை என்று கூறலாம். இவருடைய கால வரலாற்றிற்குத் துணை புரியக் கூடிய அருமையான சான்றுகள் பல கிடைத்துள்ளன. அச் சான்றுகளைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல் துக்ளக்கைப் பற்றிய உண்மை நிலையினை உணர்ந்திட உதவும் என அறியலாம்.

ஜியாவுதீன் பரணி: ஜியாவுதீன் பரணி 'தோ ஆப்' பகுதியைச் சேர்ந்த 'பரணி' என்னுமிடத்தைச் சேர்ந்தவர். இவருடைய முன்னோர்கள் கில்ஜி அரசர்களின் கீழ் உயர் பதவிகளை வகித்தனர். முகமதுவின் அவையில் பதினேழு ஆண்டுகள் பரணி இருந்தார். முகமதுவிற்குப் பின்னர் ஆட்சி செலுத்திய பிரோஸ் ஷாவின் காலத்திலும் அவர் இருந்தார். 'தாரீக்கி பிரூஸ் ஷாகி (Tarikhi Firuz Shahi) என்னும் தம்முடைய நூலை கி.பி. 1359 இல் முடித்தார். இடைக்கால இந்தியாவின் சிறந்த வரலாற்று நூல்

களில் ஒன்றாக இதனைக் கருதலாம். முகமதுவைப்பற்றிய முக்கியச் செய்திகள் அதில் காணப்படுகின்றன. ஆனால் இந் நூலில் இவர் குறித்துள்ள செய்திகளுக்கும் பிற சான்றுகளுக்கும் வேறுபாடு காணப்படுகிறது. இந்நூலை இவர் எழுதி முடித்தபோது இவருக்கு வயது 74.

இவருடைய நூலை முழுமையாகச் சரியானவை என்று நம்பி விடுவதற்கில்லை. ஏனென்றால், இவர் யாரையாவது புகழ்ந்துரைத்தார் என்றால் புகழின் உச்சிக்கே அவரைக் கொண்டுபோய் விடுவார். இகழ்ந்துரைத்தால் பாதாளத்திற்கே தள்ளி விடுவார். இது பொதுவாக இவர் தம் நூலில் காணப்படும் குறைபாடு. எனினும் நிசாம் உத்தீன் அகமது, பதெளனி, ஃபெரிஷ்டா, ஹாஜியுத்தபிர் போன்ற பிற்கால வரலாற்றறிஞர்கள் இவர் நூலின் அடிப்படையிலேயே தமது கருத்துக்களை வெளியிட்டனர். சல்வத்-இ-கபீர், ஃபட்வாய் ஜஹாங்தரி, சனுப் முகம்மதி, அஸ்ரத் நாமா, இனுயத் நாமா, மாசிரி சாதத் ஆகியவை இவரின் மற்றைய நூல்கள்.

இபின் பதூதா : மற்றொரு சான்று மூர் தேசத்தைச் சேர்ந்த 'இபின் பதூதா' என்னும் பயணியின் குறிப்புக்களாகும். இபின் பதூதாவின் உண்மைப் பெயர் அபு அப்துல்லா முகமது பின் பதூதா ஆகும். தன்னுடைய நாட்டிற்குத் திரும்பிச் சென்ற இவர் இந்திய மண்ணில் தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டார். இந் நூல் 'துபாத் உன் நுஜார்-பி-கரைப்-இல்-அம்சார் எனப்படுகிறது.

இபின்பதூதாவின் நூலினையும் முழுவதுமாக ஏற்றுக் கொள்ள இயலவில்லை. காரணம் இவர் தம் குறிப்புகளைத் தம் தாய் நாட்டிற்குச் சென்று நினைவுபடுத்தி எழுதியதே. நினைவு தவறும்போது தவறுகள் ஏற்பட்டிருக்கக்கூடும் அல்லவா ?

இளமைக்காலம் : முகமது பின் துக்ளக்கின் உண்மைப் பெயர் பக்ருதீன் முகமது ஜூனுகான் என்பதாகும். கியாஸ் உத்தீன் துக்ளக்கின் மூத்த மகன் இவரே ஆவார். கியாஸ் உத்தீன் தம்முடைய மகனைச் சிறந்த போர் வீரனாக உருவாக்கினர். கில்ஜி அரசரான குஸ்ருஷா இவரைக் குதிரை லாயத் தலைவராக நியமித்தார். கியாஸ் உத்தீன் தமக்குப் பின்னர் ஆட்சி செலுத்திடத் தம் வாரிசாக இவரை நியமித்து உலுக்கான் என்ற விருதினை அளித்தார். கி. பி. 1322, 1323 ஆண்டுகளில் வாராங்கல்லுக்கு எதிராக இரு படையெடுப்புகளை மேற்கொண்டார்.

ஆனல் முதற் படையெடுப்பில் வாராங்கல் அரசர் பிரதாபருத்திர தேவரால் தோற்கடிக்கப்பட்டார்.

கி. பி. 1323ம் ஆண்டு மீண்டும் இரண்டாம் படையெடுப்பினை மேற்கொண்டார். இப் படையெடுப்பில் பிரதாபருத்திரரைத் தோற்கடித்து வெற்றி பெற்றார். இவர் பிரதாபருத்திரரைக் கைதியாக டெல்லிக்கு அனுப்பினர். பின்னர் ஒரிசாவை அடிபணியச் செய்தார். வெற்றி வீரருக்கு மன்னரால் வரவேற்பு அளிக்கப்பட்டது. மங்கோலியர்கள் இந் நிலையில் சமாளவைத் தாக்கிடவே அவர்களுக்கு எதிராகப் படை நடத்திச் சென்று அவர்களை விரட்டினர். அடுத்து மேற்கொள்ளப்பட்ட வங்கப் படையெடுப்பும் வெற்றியைத் தேடித் தந்தது. கி. பி. 1325இல் முகமது துக்ளக் என்ற பட்டத்துடன் அரியணையேறினர்.

முகமது பின் துக்ளக் பட்டம் பெற்று அரசாள வந்தபோது இருந்த சூழ்நிலைக்கும், இதற்கு முன்னர் ஆண்டவர்கள் அரசாள வந்தபோது ஏற்பட்ட சூழ்நிலைக்கும் பலத்த வேறுபாடு உண்டு, எவ்வித எதிர்ப்பும் இன்றி இவர் அரியணை ஏறினர். இவருடன் பிறந்த முபாரக்கான், நஸ்ரத்கான், மசூத்கான் மகமதுகான் ஆகிய நால்வரும் எவ்வித எதிர்ப்புணர்வினையும் காட்டவில்லை.

இடைக்கால இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தகுந்த இடத்தினைப் பெற்ற இவரது கொள்கைகளை வெளிநாட்டுக் கொள்கை உள்நாட்டுக் கொள்கை என்னும் இரு தலைப்புக்களில் காணலாம்

வெளிநாட்டுக் கொள்கை : முகமதுவின் வெளிநாட்டுக் கொள்கைகளை மூவகையாகப் பிரிக்கலாம். அவையாவன போரினல் பெறப்பட்ட வெற்றிகள், எல்லையைக் காத்திட மேற் கொள்ளப்பட்ட போர்கள், கிளர்ச்சிகளை அடக்கிட மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் ஆகும்.

இராசபுத்திரர்கள் : இராசபுத்திரர்களுக்கு எதிராக முகம்மது போர்களை மேற்கொண்டதாகவும், இராசபுத்திர அரசன் ஹமீர் தேவன் என்பானுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போரில் வெற்றி பெற்றதாகவும் சிலர் குறிப்பிடுகின்றனர். ஆனல் பாரசீக வரலாற்றாசிரியர்கள் யாரும் இராசபுத்திரர்களுக்கு எதிராகப் போர் ஏதும் மேற்கொண்டதாகக் குறிப்பிடவில்லை. எனவே இராசபுத்திரர்களுடன் இவர் நட்புப் பூண்டதாகவே கருதப்படுகின்றது.

குராசன், ஈராக், டிரான்ஸ் ஆக்ஸியானு : குராசன், ஈராக், டிரான்ஸ் ஆக்ஸியானு ஆகியவற்றைக் கைப்பற்றவேண்டும் எனத் தன் ஆட்சியின் துவக்கத்தில் எண்ணினார். இதற்குக் காரணம் குராசனைச் சேர்ந்த சில உயர்ந்த குடியினரே. சுல்தானின் தாராள மனப்பான்மையைப் பற்றிக் கேள்வியுற்ற அவர்கள் அதற்கான திட்டங்களை வகுத்துத் தந்தனர். 3,70,000 படை வீரர்கள் இதற்கெனத் திரட்டப்பட்டு ஓர் ஆண்டிற்குரிய ஊதியம் முன்னதாக அளிக்கப்பட்டது. குராசனில் ஏற்பட்டிருந்த நிலையில் மாறுதல் ஏற்பட்டுவிட்டமையால், போர் மேற்கொள்ள இயலாமல் போய்விடப் படை கலைக்கப்பட்டது.

நாகர்கோட் படையெடுப்பு : காங்ரா மாவட்டத்தில் பஞ்சாப்பில் மலை உச்சி ஒன்றில் இருந்த கோட்டை நாகர்கோட் கோட்டையாகும். துருக்கிய அரசர்கள் யாரும் அதனை அந்நாள் வரை கைப்பற்றிட வில்லை. அலாவுதீன் கில்ஜியின் காலத்தில் கூட இந்துக்களால் அப்பகுதி சுயேச்சையாக ஆளப்பட்டது. ஆனால் கி. பி. 1337இல் மகமதுவினால் கைப்பற்றப்பட்டது மகமதுவிற்குக் கிடைத்த சிறப்பாகும்.

கராஜல் படையெடுப்பு : கராஜல் என்னும் பகுதி யாது? எங்குள்ளது? என்பது இன்னும் விவாதத்திற்குரியதாக இருக்கிறது. எனினும் இமயமலைப் பகுதியின் அடிவாரத்தில் உள்ள பகுதியே அது என்பது பெரும்பாலானோரின் முடிவாகும். இமய மலைப் பகுதிகள் அடிபணியாதிருந்திடவே இப் படையெடுப்பினை முகமது மேற்கொண்டார். இமயமலையின் இயற்கை இடையூறுகளால் எடுத்த காரியத்தில் முழுமையாக வெற்றிபெற இயலவில்லை. எனினும், அப் பகுதித் தலைவனைத் தனக்குத் சிறை செலுத்துமாறு செய்வித்தார். இப் படையெடுப்பினைச் சீனு, மேலைத் திபெத் ஆகியவற்றிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பு என்றும் இதில் அவர் படுதோல்வி அடைந்தார் என்றும் சில ஆசிரியர்கள் கூறுவர். ஆனால் அவை யாவும் ஆதாரமற்ற கூற்றுகளாகும்.

சீனத் தொடர்பு : சீன அரசர் தோகான் தைமூர் கி. பி. 1341இல் தூதுக்குழு ஒன்றினை இமயமலைப் பகுதியில் சீர்கேடுற்றிருந்த பௌத்த ஆலயங்களை சீர் செய்ய அனுமதி பெற்று வரும்படி அனுப்பி வைத்தார். அவை கராஜல் படையெடுப்பின் போது இஸ்லாமிய வீரர்களால் சீரழிக்கப்பட்டவை. இதின் பதூதா சீனத் தூதுவராக அனுப்பி வைக்கப்பட்டார். சீனப் பேரரசரிடம் அவர், இஸ்லாமிய சட்டங்களின்படி ஜிஸியா

வரியினைக் கொடுக்காவிடில் ஆலயங்களை மீண்டும் எழுப்பக் கூடாது எனக் கூறியதாகத் தெரிகிறது.

மங்கோலியரின் படையெடுப்பு : தமாசிரின் என்பாரின் தலைமையின் கீழ் மங்கோலியர்கள் இந்திய எல்லையைக் கடந்து லாகூரிலிருந்து முல்தான் வரையிலான பகுதிகளில் சேதம் விளைவித்ததுடன் டெல்லிக்கு அருகிலான பகுதிகளிலும் வாழ்ந்த மக்களுக்குத் துன்பம் விளைவித்தனர். இதற்குக் காரணம் தலை நகரை அப்போது அவர் தக்காணத்திற்கு மாற்றியதே. மங்கோலி யர்களுக்கு ஏராளமான வெகுமதிகளை அளித்து மங்கோலியர் களால் ஏற்பட்ட ஆபத்தைத் தவிர்த்தார். இச் செயல் சுல்தானின் பலவீனத்தைக் காட்டுவதாய் அமைந்தது என்பர்.

கிளர்ச்சிகள் : எண்ணிறந்த கிளர்ச்சிகளைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை துக்ளக்கிற்கு ஏற்பட்டது. டெல்லிச் சுல்தானியத்திற்கு எப்போதும் வங்காளம் விசுவாசம் காட்டிய தில்லை. வங்கத்தை ஆண்டுவந்த பக்ருதீன் சுயேச்சை அரசராகத் தம்மை அறிவித்துத் தன் நிலையை வங்கத்தில் நன்கு பலப் படுத்திக் கொண்டார்.

அயோத்தியை ஆளுநராக ஆட்சி புரிந்து வந்த அய்ன்-உல்-முல்க் முல்தானி என்பாரைக் கி. பி. 1340-41இல் தௌலதா பாத்திற்கு அனுப்பிவைத்தார். ஆனால் தன்னை அங்கு அனுப்ப வேண்டாம் என்று முகமதுவை அவர் வேண்டிக் கொண்டார். இதற்குக் காரணமும் இருந்தது. அயோத்தியில் தனக்கு இருக்கும் செல்வாக்கை மட்டம்தட்டவே இந்த ஏற்பாடு என்று கருதிய அவர் அங்கு செல்ல மறுத்துக் கிளர்ச்சி செய்தார். கிளர்ச்சி ஒடுக்கப்பட்டு அய்ன்-உல்-முல்க் கைதியாக்கப்பட்டார். கைதி யான அவர் பல அவமரியாதைகளுக்கும், இன்னலுக்கும் ஆளாக நேரிட்டது. சுல்தானுக்கு அனுதாபம் பிறக்கவே இறுதியில் டெல்லியில் உள்ள அரசரின் தோட்டத்தை மேற்பார்வை செய் பவராக அவர் நியமிக்கப்பட்டார். சிந்து அரசரின் பலவீனமான சூழ்நிலைகளின் விளைவாகக் கிளர்ச்சி ஒன்றெழுந்தது. இக் கிளர்ச்சியும் ஒடுக்கப்பட்டது.

அய்ன்உல்முல்கைத் தௌலதாபாத்திற்கு அனுப்ப சுல்தான் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றதைக் கண்டோம். தௌலதாபாத்தின் ஆளுநர் பொதுப் பணத்தைத் தாறுமாறாகச் செலவழித்துவிடவே குட்லுகானைத் திரும்ப அழைத்துக் கொண்டும் தௌலதாபாத்தில் மாறுதல் ஏதும் ஏற்படவில்லை

குட்லுகானுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு இருந்தது. அவரை நிக்கியதை எதிர்த்து நாடெங்கிலும் கிளர்ச்சிகள் நடைபெற்றன.

மாளவம், தார் ஆகிய பகுதிகளின் ஆளுநராக விளங்கிய அஜீஸ்குமார் உயர் குடியினரை முறைப்படி நடத்தாமையால் அவர்கள் கிளர்தெழுந்தனர் இவ்வாறு கிளர்ச்சி செய்த எண்பது பேரின் தலைகள் கொய்யப்பட்டன. இதன் விளைவாகக் கிளர்ச்சி தீவிரமாயிற்று.

குஜராத்திலும் சுல்தானுக்கு எதிரான செயல்கள் வலுப் பெறத் தொடங்கவே, துக்ளக் தாமே நேரில் படையெடுத்துச் சென்றார். ஆனால் கிளர்ச்சியாளர்கள் தேவகிரிக்குச் சென்று விட்டனர் தேவகிரியில் ஆப்கானியர்கள் துருக்கியர்கள், இந்துக்கள் ஒன்றாக இணைந்து எதிர்த்தும் தெலுதாபாத் கிளர்ச்சியாளர்களிடமிருந்து மீட்கப்பட்டது.

தெலுதாபாத்தில் சுல்தான் இருந்தபோது 'தகி' என்பானின் தலைமையில் மற்றொரு கிளர்ச்சி நடைபெறும் செய்தியினைக் கேள்விப்பட்டார். நகர்வாலா, காம்பே புரோச் ஆகிய பகுதிகள் தகியின் வசமாயின. உடனே முகமது குஜராத்தை நோக்கி விரைந்தார். தகியைக் குஜராத்திலிருந்து துரத்தியடித்தார். தூரத்தப்பட்ட அவர் சிந்துவில் சரண் புகுந்தார்.

குஜராத்தில் இவ்வாறு அமைதி ஏற்படுத்தப்பட்டும் நாட்டில் முழுவதும் அமைதி ஏற்படவில்லை. அயல்நாட்டு அமீர்கான் தேவகிரி கோட்டையைக் கைப்பற்ற முயன்றார். தேவகிரியைச் சுல்தான் இழக்க வேண்டியதாயிற்று. இதன் விளைவாகப் பாமினிப் பேரரசு ஒன்று தக்காணத்தில் உருவாயிற்று.

சிந்துவில் சரண்புகுந்த தகியைச் சிறைப் பிடித்திடும் நோக்குடன் அவரை முகமது துரத்திச் சென்றார். ஆனால் வழியில் நோயினால் பீடிக்கப்பட்டு மார்ச் 20, 1351இல் உயிர் துறந்தார். 'அரசன் எவ்வாறு மக்களின் பிடியிலிருந்து விடுபட்டானோ, அது போலவே மக்கள் மன்னன் பிடியிலிருந்து விடுபட்டனர்' என்று பதாவுனி குறிப்பிடுகின்றார்.

வருவாய் நிலை: வருவாய் நிலையை அறிந்திட ஒவ்வொரு மாநிலமும் வருவாயையும் செலவினத்தையும் காட்டும் பதிவேடு ஒன்று வைத்திடல் வேண்டும் என்று ஆணையிடப்பட்டது. மாநில ஆளுநர்கள் அவ்வாறு அனுப்பிய புள்ளி விவரங்களின் வாயிலாக நாட்டின் நிதிநிலை குறித்த தெளிவான நிலை அரசருக்கு

தெரிந்தது. இம் முறையினை இவர் மேற்கொண்டமையால் எல்லாப் பகுதிகளையும் மதிப்பீடு செய்திட வாய்ப்பு ஏற்பட்டது.

தோவாப் மீது வரி விதித்தல்: சுல்தான் வாரிவழங்கும் வள்ளலாய் விளங்கியமையாலும் போர்களிலும் கிளர்ச்சிகளை ஒடுக்குவதிலும் ஈடுபட்டமையாலும் கருவூலம் காலியாயிற்று. நாட்டின் நிர்வாகத்தைத் தொடர்ந்து நடத்திடப் பொருள் இன்றி யமையாததாயிற்று. எனவே தோவாப் பகுதி மீதான வரிகளைச் சுல்தான் அதிகரித்தார். ஐந்து அல்லது பத்து சதவீதம் நிலவரி அல்லாத வீட்டுவரி, மேய்ச்சல்வரி, போன்றவற்றையே அதிகரித்திட விரும்பினர். ஆனால் பரணி பத்து அல்லது இருபது மடங்கு அதிக வரி வசூலிக்கப்பட்டதாகக் கூறுகிறார். எலியட் என்னும் வரலாற்று அறிஞரும் பத்து அல்லது ஐந்து சதவீதமே அதிகமாக வசூலிக்கப்பட்டிருக்கும் என்று கூறுகிறார்.

வேளாண்மையைக் கவனித்தல் பொருட்டு புதிய துறை ஒன்று உருவாக்கப்பட்டது. இந்த வேளாண்மைத் துறை **திவானி கோஹி** என்றழைக்கப்பட்டது. இந்தத் துறை உருவாக்கப்பட்ட நோக்கமே புதிதாக நிலங்களைப் பயிர் செய்விப்பதற்கும், வேளாண்மைத் துறையில் சீர் செய்வதற்கும்தான். இதற்காக 60 சதுரமைல் பரப்பளவு தேர்ந்தெடுக்கப்பட்டு வேளாண்மைப் பரிசோதனை செய்விக்கப்பட்டது. ஆனால் சுமார் 70 லட்சம் ரூபாய் அளவில் செலவழித்தது. ஆனால் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. இத் திட்டம் நல்ல நோக்கத்தில் ஆரம்பிக்கப் பட்டும் தோல்வியடைந்தது.

தலைநகரை மாற்றுதல்: டெல்லி அடிக்கடி மங்கோலியரின் தாக்குதலுக்கு ஆளாயிற்று. எனவே மங்கோலியரின் தாக்குதலிலிருந்து தலைநகரைக் காத்திடப் புதிய தலைநகரமாக வேறு இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலைக்குச் சுல்தான் ஆளாயினர். தௌலதாபாத் புதிய தலைநகரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தேவகிரியின் மைய பகுதியில் அந்நகர் அமைந்திருந்தது. தௌலதாபாத்தில் அரசு அலுவலர்களும், மக்களும், வாழ்வதற்குத் தகுந்த முயற்சிகளை அவர் மேற்கொண்டார். தௌலதாபாத்துக்கு டெல்லியிலிருந்து சென்ற பயணிகளின் நன்மைக்காகச் சாலைகள் அமைத்தல், நிழல் தரும் மரங்களை நடுதல், அஞ்சல் வசதிகள் ஏற்படுத்துதல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தலைநகர் மாறுதலுக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தைக் கூறுகின்றனர். பகாவத்தீன் குர்ஷாப்பின் கிளர்ச்சிக்குப் பின்னர், உறுதியான ஆட்சி நிறுவனம் தெற்கே இருந்திடல் வேண்டும் என்று எண்ணியே தலைநகரை மாற்றினர் என்பதே பெரும்பாலோரின் கருத்து.

தலைநகர் மாறுதல் எல்லோரும் எண்ணுவதைப்போல் உடனடியாகவோ, திடீரென்று தீர்மானித்தோ நிறைவேற்றப்படவில்லை. முதலில் சுல்தானின் அன்னை; அரண்மனையைச் சார்ந்தவர்கள்தான் அனுப்பி வைக்கப்பட்டனர். தௌலதாபாத்தில் அங்கு வருவோர் தங்கிட இலவச உறைவிடமும் உணவும் அளிக்கப்பட்டன.

எல்லா மக்களும் மொத்தமாக அங்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்ற தவருன கருத்து எப்படியோ பரவி நிலை பெற்றுவிட்டது. உண்மையில் உயர் வகுப்பினர், பிரபுக்கள், ஷேக்குகள், உலேமாக்கள் ஆகியோரே அனுப்பிவைக்கப்பட்டனர். இந்துக்கள் அங்கே அனுப்பிவைக்கப்படவில்லை என்பதனை 1327, 1328இல் கிடைத்த இரண்டு பட்டயங்கள் எடுத்துரைக்கின்றன.

இந்தப் புதிய தலைநகருக்குச் செல்வதை மக்கள் ஏற்றுக் கொள்ளாததற்குக் காரணம் இருந்தது. டெல்லி நகரத்தின் மீது ஒருவிதமான பற்றை அவர்கள் உருவாக்கிக் கொண்டிருந்தனர். மக்கள் சமய ரீதியான பற்று ஒன்றினை டெல்லியைச் சுற்றி உருவாக்கிக்கொண்டிருந்தனர். இதன் விளைவாகத் தங்கள் சமய உரிமையில் குறுக்கீடு ஏற்படுவதுபோன்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது.

சுல்தான் வல்லாட்சியாளராக விளங்கியதால், தன் சொல்லுக்குக் கீழ்ப்படியாதவரைத் தண்டிக்க எண்ணியது இயல்பானதேயாகும். அரசரின் தண்டனைகள் குறித்துக் கிடைத்துள்ள செய்திகளை உண்மையில்லை என்று தள்ளிவிட இயலாவிடினும், சற்று மிகைபடுத்திக் கூறப்பட்டிருக்கலாம் என்று எண்ணப்படுகிறது.

தௌலதாபாத் தலைநகரம் என்று கூறப்படுவதிலேயே கருத்து வேறுபாடு எழுந்துள்ளது. தௌலதாபாத் ஆட்சித் துறையின் வசதியின் பொருட்டு எழுந்த இரண்டாவது நகரம் என்று ஒரு கருத்து உலவுகிறது. அல் ஹல் ஹஷண்டி என்பவர் இரண்டு தலைநகரங்கள் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். இம் முயற்சியின் விளைவுகள் உடனடியாக அரசருக்குத் துன்பத்தைத் தந்தன. மக்களின் வெறுப்புக்கு ஆளாகச் செய்தன. ஆனால் எதிர்காலத்தில் இதன் விளைவாக வடக்கிற்கும், தெற்கிற்கும் இடையே இருந்த தடைகள் நீக்கப்பட இது உதவிற்று. இதன் வரையில் தெற்குப் பகுதியில் ஆட்சி செலுத்துபவர்கள் திறை செலுத்துவது என்ற அளவிலேயே தங்கள் பணிவை வெளிப்படுத்தினர்கள். அவர்களின் மற்றைய செயல்கள் சுல்தானின்

பார்வையில் படாமலிருந்தன. இம் முயற்சிக்குப் பின் இந் நிலையில் மாறுதல் தோன்றியது.

அடையாள நாணயம் : தலைநகர் மாற்றப் பரிசோதனைக்குப் பின்னர் முகமது மேற்கொண்ட மற்றொரு தீவிரமான செயல் அடையாள நாணயத்தை வெளியிட்டதாகும். 'நாணயச் சீர்திருத்தத்தின் இளவரசன்' என்று முகமது அழைக்கப்படுகிறார். இன்றைய மக்கள் அடையாள நாணய முறையை நன்கு அறிந்தவர்கள். ஆனால் துக்ளக்கின் காலமக்களுக்கு இது புதியது ஆகும். இந்திய மக்களுக்கு புதியதே தவிர ஆசிய மக்களுக்கு புதியது அல்ல. சீனாவில் குப்ளாய்கான், ஈரானில் கைகடாவ் கான் ஆகியோர் இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி பெற்றிருக்கின்றனர்.

இவர் அடையாள நாணயம் வெளியிட்டதற்குக் காரணம் யாது? பரணி குறிப்பிடும் காரணம், சுல்தான் போரில் கலந்து கொண்டதும் தாராளமாக வாரி வழங்கியதே என்பதேயாகும். இது முழுவதும் சரி என்று கூறிட இயலாது. சுல்தானின் தீர்க்கதரிசனமான நோக்கமே அடையாள நாணய வெளியீட்டிற்குக் காரணம். பிரச்னைகளுக்கு உடனடித் தீர்வு காணுதல் என்பதில் லாது அடிப்படை தீர்வு காண்பதே சுல்தானின் நோக்கம். இந்தியாவில் மட்டுமின்றி உலகத்திலேயே துக்ளக்கின் காலத்தில் வெள்ளித் தட்டுப்பாடு இருந்தது. வெள்ளி தங்கம் இவற்றை சேமிக்கும் நோக்கத்திலேயே அவர் அடையாள நாணயங்களை வெளியிட்டார்.

இந்த அடையாள நாணய வெளியீட்டினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை? மக்கள் தங்கள் வீட்டிலேயே நாணயம் தயாரிக்க ஆரம்பித்து விட்டார்கள். தங்களிடமிருந்த செம்பு பொருட்களை அழித்து நாணயங்கள் தயாரித்தனர். வெள்ளியை வீட்டில் பதுக்கி வைத்துவிட்டு அடையாள நாணயங்களைப் பயன்படுத்த ஆரம்பித்ததின் விளைவாக வெள்ளிக் கட்டுப்பாடு ஏற்பட ஆரம்பித்தது. நிலவரி போன்ற வரிகளைச் செலுத்துவதற்குக்கூட அடையாள நாணயங்களைப் பயன்படுத்தினர். சமூக விரோதிகள் கள்ள நாணயங்களைக் கொண்டு ஆயுதங்கள், போர்க் கருவிகள் வாங்கத் தொடங்கினர்.

கள்ள நாணயங்கள் அதிகமாக புழக்கத்தில் வரத் தொடங்கியதால் நாணயத்தின் மதிப்பு குறைந்தது. இதனால் அயல் நாடுகளிலிருந்து வருகின்ற வணிகர்களின் எண்ணிக்கை குறைந்தது. அயல்நாட்டு வர்த்தகம் பாதிக்கப்பட்டதால் நாட்டின்

பொருளாதார நிலை பலவீனம் ஏற்பட்டது. இந் நிலையில் அரசர் தம்முடைய திட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்.

சுல்தானின் மற்ற திட்டங்கள் எவ்வாறு தாக்குதலுக்கு இலக்காயினவோ அதைப்போலவே இத் திட்டமும் இலக்காயிற்று. அரசருடைய நோக்கம், திட்டம் இரண்டும் சரியானதாக இருந்த போதிலும் அதைச் செயல்படுத்தும் முறையில் ஏற்பட்ட இடையூறுகளே இத்தகைய தோல்விக்குக் காரணம் எனலாம். தகுந்த போதிய பாதுகாப்புக்கள் செய்யப்பட்டும் இன்றைய நாளில்கூட கள்ள நாணயங்களும் கள்ள நோட்டுக்களும் புழக்கத்தில் வந்து விடுகின்றன. அப்படி யிருக்கையில் அவ்வளவாக விஞ்ஞான முன்னேற்றமில்லாத அக்காலத்தில் தீர்க்க தரிசனத்தோடு அவர் மேற்கொண்ட முயற்சியில் ஏற்பட்ட விளைவுகள் எதிர்பார்க்கக் கூடியனவே ஆகும். எனவே அதற்காக அவரைக் குற்றம் சொல்வது தகாது.

சமய நோக்கும் நீதிநெறியும்: முகமது பரந்த நோக்கம் கொண்டவர். சிறந்த கல்வியாளர். எனவே உலேமாக்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதை விரும்பவில்லை குரானில் கூறப் பட்டுள்ள சட்ட ரீதியான வரிகளைத் தவிர வேறு பல வரிகளையும் விதித்தார். ஒரளவிற்கு சமயப் பொறையாளர் என்றே இவரைக் கூறவேண்டும். முகமது, அக்பரின் முன்னோடி என்று கருதப் படுகின்றார். ஈதி என்னும் கொடிய பழக்கத்தை நிறுத்திட முயன்றார்.

இதுவரையில் நீதித்துறையில் பொறுப்பு வாய்ந்தவர்களான மைய தலைவர்கள் அப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டனர். சுல்தான் தாமே உயர்நீதி மன்றமாக விளங்கினார். தம்மை 'இறைவனின் நிழல்' என்று கூறிக் கொண்டார். சுல்தானுக்கு அடங்கி நடப்பவன் கடவுளுக்கு அடங்கி நடப்பவன் ஆவான் என்று கூறிக் கொண்டவர். தன்னுடைய செல்வாக்கு மங்கத் தொடங்கியபோது தன்னுடைய நிலையை மாற்றிக் கொண்டார். அப்படி மாற்றியபோதும் கூட அவருடைய செல்வாக்கு மங்கியதே ஒழிய அவரை அழிவிலிருந்து காப்பாற்றவில்லை.

மதிப்பீடு : முகமது பின் துக்ளக்கைப் போல் வரலாற்றில் சர்ச்சைகளைக் கிளப்பிய மன்னர் வேறு எவரும் இலர். முகமது வைப் பற்றி இருவகையான கருத்துக்கள் நிலவுகின்றன. எல் பின்ஸ்டன், ஹேவல், ஸ்மித் வின்ஸ்டன் ஸ்மித் போன்றவர்கள் துக்ளக்கைப் பைத்தியக்காரர் என்று முடிவு கட்டினர். ஆஞல் கார்டினர், பிரவுன் என்பவர்கள் முகமதுவை தீர்க்கதரிசி என்று முடிவு கட்டினர்.

தனிப்பட்ட முறையில் முகமது, அளவை இயல், கணிதம், தத்துவம், வானநூல், பாரசீக இலக்கியம், கவிதை போன்ற வற்றில் அளவிடமுடியாத ஆர்வம் கொண்டவராக விளங்கினார். முகமதுவின் தனிவாழ்க்கை அப்பழுக்கில்லாதது அக் காலக் குறைபாடுகள் எதுவுமில்லாதது. ராணுவத் துறையைப் பொருத்தமட்டில் முகமது சிறந்த போர்வீரராக மட்டுமின்றி, சிறந்த தளபதியாகவும் விளங்கினார். அதுமட்டுமின்றி பரந்த மனப்பான்மை படைத்தவராகவும் பிற சமயத்தவரிடம் காணப் படும் நற்பண்புகளைப் போற்றுபவராகவும் விளங்கினார்.

ஆனால் அவரை சிறந்த ஆட்சியாளராகவும் நிர்வாகியாகவும் கருதிட இயலாது. இக் கால வரலாற்றறிஞர்கள் சிலர் ஆட்சித் துறையில் 'அவருக்கு ஏற்பட்ட தோல்விகளுக்கு அவர் பொறுப் பல்ல என்றும் சூழ்நிலைகளும் பின்தங்கிய நிலையில் இருந்த மக்களும் உலேமாக்களுமே அதற்குப் பொறுப்பு என்றும் கூறு வது ஓரளவிற்குப் பொருத்தமாகவே தோன்றுகிறது. அக் கால மக்களின் மனப் பாங்கிற்கு, இயல்பிற்கு ஏற்ற வகையில் திட் டங்களைத் தீட்டாததே அவருடைய குறைபாடாகும். சிலர் முகமதுவை அதிர்ஷ்டம் இல்லாதவர் என்றும், நல்ல ராசி இல் லாதவர் என்றும் கூறுகின்ற கருத்து ஏற்புடையதாய் இல்லை.

முகமதுவை மனநிலை சரியில்லாதவர் என்று முதன் முதலில் எல்பின்ஸ்டன் எடுத்துரைத்ததை மேல் நாட்டுப் பிற அறிஞர்கள் ஏற்றுக் கொண்டனர். அவர்கள் அவ்வாறு கருதியதற்கு பரணி, இபின் பதூதா, போன்றவர்களின் கூற்றுகளில் ஏதேனும் செய்தி காணப்படுகிறதா என்று பார்த்தால் அவர்கள் எல்லோருமே அத்தகைய கருத்தை எந்த இடத்திலும் கூறவில்லை. எல்லா குற்றங்களுக்கும் சமமான தண்டனை வழங்கியது, குற்றங்களுக்கிடையே உள்ள வித்தியாசத்தை உணரமாட்டாத அவரது தன்மையைத்தான் காட்டுகிறது. அது மட்டுமின்றித் தினமும் ஐந்துமுறை தொழுகையை நிகழ்த்தினார் என்பது அவர்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டின் அடிப்படைக்கு எதிராக உள்ளது. முகமதுவைக் கற்பனையாளர் என்று சிலர் கூறு வதுண்டு. டாக்டர் ஈஸ்வரி பிரசாத் முகமதுவை மாறுபட்ட குணங்களின் வடிவம் என்ற கருத்துத் தெரிவித்தார். 'வெறுப் பூட்டும் கொடுமை, அற்பமான சபலபுத்தி தம் எண்ணங்களே சரி என்ற நம்பிக்கை இவை இவருடைய எண்ணத்திலும் இதயத் திலும் இருந்த நல்ல பண்புகளுக்கு எதிராக இருந்தன.' பெரும் பாலும் அன்புடையையாளராக விளங்கிய அவர் நிதானமான தீர்ப்பு, கண்ணோட்டம் ஆகியவை அமைந்திராத காரணத்தால் தோல்வியைத் தழுவினார் என்றே கூறவேண்டும்.

பிரோஸ் துக்ளக் : கி. பி. 1309இல் பிறந்த இவர் கியாஸ் யுத்தீன் துக்ளக்கின் இளைய சகோதரன் ரஜாப்பின் மகன் ஆவார். இராண்மால் என்ற இராசபுத்திரரின் மகள் இவனுடைய தாயாவார். பிரோஸ் ஆட்சித் துறையிலும், போர்த் துறையிலும் போதிய பயிற்சி பெற்றார். முகமது தன்னுடைய சகோதரர்பால் நட்புக் கொண்டு பயிற்சி அளித்தார். தமக்குப் பின்னர் பிரோஸ் ஆட்சிக்கு வரவேண்டும் எனவும் அவர் விருப்பம் தெரிவித்தார்.

முகமது பின் துக்ளக் தாட்டாவில் இறந்தபோது தக்கர்கள் மங்கோலியர்கள் ஆகியோர்களால் முகமதுவின் படையினர் தாக்குதலுக்கு மேலும் இலக்காயினர். எனவே தங்களை வழி நடத்தத் தலைவன் ஒருவன் வேண்டும் என்பதை உணர்ந்த தாலும், முகமதுவே பிரோஸைத் தேர்ந்தெடுத்தமையாலும், அவரே ஆட்சிக்கு வரவேண்டும் என உயர் குடியினர் விருப்பம் தெரிவித்தனர். ஆனால் சிலர் சுல்தானின் சகோதரியின் மகனைப் பதவியிலமர்த்த விரும்பினர். இருப்பினும் உயர் குடியினர் சற்றுப்பருவம் எய்தியவரே தலைவராக வரவேண்டும் என்று விருப்பம் தெரிவித்தமையால் பிரோஸ் அரசராக்கப்பட்டார். இவர் கி. பி. 1351இல் டில்லி சுல்தானைப் பதவி ஏற்றபோது குவாஜாஜகான் என்பவர் போலிக் குழந்தை ஒன்றை முகமதுவின் மகன் என்று அறிவித்து அரியணையில் அமர்த்தினர். ஆனால் குவாஜாஜகான் போதிய வலிமைமிக்கவராகத் திகழாமையால் அக் குழந்தையின் உரிமை மறுக்கப்பட்டு அவருக்கும் மன்னிப்பு வழங்கப்பட்டது.

மகமதுவின் ஆட்சி நீங்கிப் பிரோஸின் ஆட்சி தொடங்கியது, வானத்தில் மழை மேகம் தோன்றியதுபோல் இருந்தது. பிரோஸிற்குப் போரில் ஈடுபடும் ஆர்வம் இல்லை. இழந்துவிட்ட அரசுகளைத் திரும்பப் பெறவும் அவர் முயற்சிக்கவில்லை. தென்னிந்தியாவின் அரசியலில் தலையிட மறுத்த அவர் விந்திய மலைக்கு வடபகுதிக்கு உட்பட்ட பகுதிகளைமட்டும் கைப்பற்றினால் போதும் என்று எண்ணினார். மேவார் மார்வர். ஆகிய பகுதி களைக் கூடத் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டுவர விரும்பவில்லை.

வங்காளம் : கி. பி. 1338லேயே வங்காளம் விடுதலை பெற்றது. வங்காளத்தின் அரசரான சம்சுதீன் இலியாஸ், டெல்லி சுல்தானியத்தின் கிழக்குப் பகுதியில் ஆக்கிரமிப்பு செய்ததைத் தடுத்து நிறுத்திட எழுபதாயிரம் குதிரைப் படை யுடனும், காலாட்படையுடனும் பிரோஸ் வங்கம் சென்றார். ஆனால் மழைக்காலமாகையால் டெல்லி திரும்பினார். கி. பி.

1359இல் மீண்டும் முந்தைய கீழை வங்கச் சுல்தான் ஒருவரின் மருமகனை ஜாபர்கானுக்கு உதவும் நோக்கத்தோடு இரண்டாவது முறையாகப் படையெடுத்தார். இலியாஸாவின் மகன் சிக்காந்தர்ஸா ஏக்தளா கோட்டையில் பிரோஸிடம் சரண் புகுந்தார். முற்றுகை முயற்சிகள் கெடுநாள் மேற்கொள்ளப்பட்டாலும் வங்கத்தை வெற்றிகொள்ள இயலாமையால் சுல்தான் இலியாஸுடன் உடன்படிக்கை ஒன்றினைச் செய்துகொள்ள நேர்ந்தது.

பூரிப் படையெடுப்பு: வங்கத்திலிருந்து மீண்டு வந்தபோது ஜான்பூரில் தங்கியிருந்த சுல்தான் ஒரிஸாமீது படையெடுத்து அதனைக் கைக்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டார். சுல்தானின் நோக்கம் பூரி ஜகந்நாதர் ஆலயத்தை அழிப்பதாக இருந்தது. இந்து அரசர் ஆண்டுதோறும் இருபது யானைகளை அனுப்புவதாக வாக்குறுதி அளித்தார். அதன் பின்னரே பிரோஸ் டெல்லி திரும்பினார்.

நாகர்கோட்: நாகர்கோட் முகமது துக்ளக்கினால் கைப் பற்றப்பட்டது என்று கண்டோம். ஆனால் அவருடைய ஆட்சியின் பிற்காலத்தில் அது விடுதலை பெற்றது. எனவே பிரோஸ் நாகர்கோட்டை நோக்கிப் படையெடுத்துச் சென்று முற்றுகையிட்டார். ஆறு மாதத்திற்குப் பின்னர் நாகர்கோட் அரசர் அடிபணிந்தார்.

சிந்துப் படையெடுப்பு: தொண்ணூறு ஆயிரம் குதிரைப் படையுடனும், ஏராளமான காலாட் படையுடனும், நானூற்று எண்பது யானையுடனும், சிந்துவை நோக்கிப் படையெடுத்துச் சென்றார். சிந்து அரசர் ஜாம் பாபானியாவிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பு தோல்வி அடைந்தது இதற்குக் காரணம் பஞ்சம், நோய் முதலியவற்றால் பேரரசு பெரிதும் சேதம் அடைந்திருந்ததேயாகும். ஆறுமாத காலம் அரசருக்கும் படைக்கும் என்ன நேர்ந்தது என்பதே தெரியாதபடியால் அமைச்சர், கான்-இ-ஜகான் மேலும் கூடுதலான படையை சிந்துவுக்கு அனுப்பி வைத்தார். இப் படை உதவியுடன் ஜாமை அரசரைத் தோற்கடித்து வெற்றி கொண்டார்.

பிரோஸின் காலத்தில் மங்கோலியர் படையெடுப்பு ஏதும் நிகழவில்லை. இரண்டு மங்கோலியர் தாக்குதல்கள் மட்டும் நடை பெற்றன என்றும் கூறப்படுகிறது.

முகமதுவின் காலத்தைப்போல் இவருடைய காலத்திலும் சில கிளர்ச்சிகள் நடைப்பெற்றன. முதலாவது கிளர்ச்சி குஜராத்தில்

அதன் ஆளுநர் தமகாணி என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் தமகாணியின் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டு அவருடைய தலை கொய்யப்பட்டு டெல்லிக்கு அனுப்பப்பட்டது. எட்டாவாவில் 1377இல் நடைபெற்ற இரண்டாவது கிளர்ச்சியும், கட்டேகார் என்னுமிடத்தில் 1380இல் நடைபெற்ற கிளர்ச்சியும் ஒடுக்கப் பட்டது. இக் கிளர்ச்சியின்போது ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். இதன் விளைவாக கிளர்ச்சிகள் தலை தூக்குவது நின்றது.

உள்நாட்டுக் கொள்கை; ஜாகீர் முறை: அலாவுதீன் கில்ஜியின் கைவிடப்பட்ட ஜாகீர்தாரி முறை இவருடைய காலத்தில் மீண்டும் புகுத்தப்பட்டது. இடைக்கால ஐரோப்பாவில் எவ்வாறு நிலமான்யதார்கள் இருந்தார்களோ அத்தகைய நிலை இவர் காலத்து நிலவிற்று. பேரரசு பல பெரிய பகுதிகளாகவும், பெரிய பகுதிகள் மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டு, அரசு அலுவலர்களின் பொறுப்பில் விடப்பட்டு நிலமான்யத்தோடு படியும் வழங்கப்பட்டமையால், ஜாகீர்தார்கள் ஏராளமான சொத்திற்கு அதிபதிகளானார்கள். நிலத்தின் தன்மை மதிப்பிடப் பட்டு, அதன் பின்னரே வருவாய் மதிப்பிடப்பட்டது. நில வரு வாயில் ஏற்பட்ட ஊழல்களை ஒழித்திட ஆவன செய்யப்பட்டன. நீர்ப்பாசனத்திற்கு அரசு உதவி செய்தமையால் வேளாண்மை சிறப்படைந்தது. வறுமை ஒழிந்தது. விவசாயிகள் மகிழ்ச்சிக் கடலில் நீந்தினர்.

வரிவிதிப்பு: குர்ஆனில் கூறப்பட்டுள்ள விதிமுறைக் கேற்ப வரிவிதிப்பு முறை மாற்றியமைக்கப்பட்டது. குர்ஆனியச் சட்டத்திற்குப் புறம்பாக பிரோஸின் முன்னோர்களின் காலத்தில் விதிக்கப்பட்டிருந்த வரிகள் நீக்கப்பட்டன. இவ்வாறு நீக்கப் பட்ட வரிகள் மட்டும் 23 என்றால் அவரது வரி விதிப்பின் தன்மையைப் புரிந்து கொள்ளலாம். குரானில் கூறப்பட்டுள்ள கிராஜ், ஜகாத், ஜிஸியா, காம் ஆகிய நான்கு வரிகளே வசூலிக்கப் பட்டன. குரானில் கூறப்பட்டுள்ளபடி போரில் கிடைத்த ஆதாயங்கள் அரசராலும், போர் வீரராலும் பங்கிட்டுக் கொள்ளப் பட்டன. நில வருவாயில் பத்து சதவீதம் தண்ணீர்த் தீர்வையாக வசூலிக்கப்பட்டது. குறைந்த விலையில் பொருள்கள் கிடைத்தன. புதிய வரிவிதிப்பு முறையினால், வர்த்தகமும் வேளாண்மையும் பெருகியது. பற்றாக்குறை என்பதே இல்லாமையால் அரசர் ஆண்டுதோறும் அறப்பணிக்கு நிறையப் பொருள் கொடுத்தார்.

கால்வாய்கள் அமைத்தல்: நாடெங்கிலும் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படவே மக்கள் தவித்தனர். ஆகவே தண்ணீர்

பஞ்சத்தைப் போக்கிடக் கால்வாய்கள் அமைத்திட வேண்டிய சூழ்நிலை ஏற்படவே யமுனையிலிருந்து ஒரு கால்வாயும், சட்லெஜ் ஜிலிருந்து ஒரு கால்வாயும் ஆக இரண்டு கால்வாய்கள் வெட்டப் பட்டன. தாரீக்கி முபாரக் ஷாகி என்னும் நூலில் நான்கு கால் வாய்கள் அமைக்கப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு கால்வாய்கள் அமைத்து பெரிய நதியிலிருந்து நீர் கொண்டுவரச் செய்ததின் மூலம் தண்ணீர்ப் பஞ்சம் தீர்க்கப் பட்டது.

இராணுவம்: பேரரசின் இராணுவ அமைப்பு நிலமான்ய முறையிலேயே அமைக்கப்பட்டிருந்தது. படை வீரர்களுக்கு ஊதியம் வழங்குதலும், மான்யம் வழங்குதலும் இருந்தது. நிலமான்யமோ ஊதியமோ பெருதவர்கள் வருவாயிலிருந்து பங்கு பிரித்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. பேரரசின் குதிரைப் படையில் 80,000 அல்லது 90,000 படை வீரர்கள் இருந்தனர். படை வீரர்கள் நல்ல முறையில் நடத்தப்பட்டனர். எல்லா வசதிகளும் அவர்களுக்குச் செய்து தரப்பட்டிருந்தன. படை வீரர்களிடத்து தாராள மனப்பான்மையுடன் சுல்தான் நடந்துகொண்டது படையைப் பலவீனப் படுத்தியது. போருக்குப் பயன்படாதவர்களும் படையில் கலந்து இருந்தனர். இக் குறையைப் போக்கச் சுல்தான் புதிய சட்டம் ஒன்று கொண்டு வந்தார். இச் சட்டம் அவ்வாறு போரில் கலந்திட இயலாதவர்களின் இளைஞர்களான மகனையோ, மருமகனையோ, அவர் சார்பில் போரில் கலந்துகொள்ள அனுமதித்தது.

சட்டம், நீதி: பிரோஸ் பதவிக்கு வந்தபோது, நாட்டின் சட்டம் மிகக் கொடுமையானதாக இருந்தது. உடலுறுப்புக் குறைத்தல் பொதுவான தீர்ப்பாக இருந்தது. மனிதாபிமான உணர்வுடன் தண்டனைகள் வழங்கப்படவேண்டும் என்று பிரோஸ் கருதினார். இதன் விளைவாக உண்மையை அறிய இம்சிக்கும் முறை ஒழிந்தது. இந்த முறைகள் இந்துக்களுக்கும் பொருந்துமாறு விதி செய்யப்பட்டது. வழிப்போக்கர் யாராவது இறந்து கிடந்தால் அவர் உடலில் ஏதேனும் காயம் இருக்கிறதா என்று பார்த்த பின்னரே புதைத்திட வேண்டும் என்றும் விதி செய்யப்பட்டது. ஏழைப் பெண்கள், அனுதைப் பெண்கள் ஆகியோரை மணம் செய்து கொடுத்தல் பொருட்டு **திவானி கைரட்** என்னும் துறை ஏற்படுத்தப்பட்டது. அரசாங்கத்தி லிருந்து வசதியற்றோர்க்குப் புனர்வாழ்வு அளித்திட **திவானி இஸ்திகாக்** என்னும் துறை ஏற்படுத்தப்பட்டது. வேலை யற்றோர்க்கு வேலை தேடித்தர வேலை தேடித்தரும் நிறுவனம்

ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. வேலை இல்லாது அலைந்தோர் கைது செய்யப்பட்டனர். எல்லோருக்கும் வேலைகள் அளிக்க அரசு ஆவன செய்தது.

கல்வி: நாட்டில் கல்வியின் வளர்ச்சியில் சுல்தான் போதிய அக்கறை செலுத்தினர். கல்வித்துறை அறிஞர்களுக்கு ஒய்வு ஊதியம் போன்றவை வழங்கப் பெற்றது. சுல்தான் வரலாறு படிப்பதிலே ஆர்வம் கொண்டிருந்தமையால் பல வரலாற்று நூல்களை எழுதச் செய்தார். நகர்கோட்டையைக் கைப்பற்றிய போது கிடைத்த 300 வடமொழி நூல்களைப் பாரசீக மொழியில் பெயர்த்திடச் செய்தார் என்னும் செய்தி, கல்வியின்பால் அவர் கொண்ட அக்கறையை எடுத்துக் காட்டுவதாயிருந்தது. கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு கல்லூரியிலும் சிறந்த இரண்டு பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.

அடிமை முறை: சுல்தான் அடிமை முறையை ஆதரித்தார். அடிமைகளைப் பராமரித்திட தனிக் கருவூலமே ஏற்படுத்தப் பட்டது. அடிமைகளுக்குப் பலவிதத் தொழில்கள் பயிற்று விக்கப்பட்டன. ஆனால் இந்துச் சுல்தான்களே இறுதியில் அரசுக்கு அடிமையாக மாறினர். சமுதாயத்தில் லஞ்ச ஊழலுக்குப் பொறுப்பாயினர்.

பொதுப்பணிகள்: ரோம் தேசத்து அரசரைப் போல் கட்டி டங்கள் கட்டுவதில் அரசர் ஆர்வம் செலுத்தினர் பிரூஸாபாத், பதேகாபாத், ஹிஸ்ஸார், ஜான்பூர், பிரோஸ்பூர், ஆகிய நகரங்கள் இவரால் உருவாக்கப்பட்டன, 4 மசூதிகள், 30 அரண்மனைகள், 200 சராய்கள், 5 நீர்த்தேக்கங்கள், 4 மருத்துவமனைகள், நூறு தூண்கள், பத்துக் குளியல் குளங்கள், 100 பாலங்கள், 150 கிண றுகள், 5 கால்வாய்கள், 1200 தோட்டங்கள் ஆகியவற்றை உரு வாக்க வைத்தார் என்று கூறப்படுகிறது. அது மட்டுமின்றி முன்னோர்களால் உருவாக்கப்பட்டுப் பாழடைந்து, சீரழிந்து கிடந்தவற்றைச் செப்பனிட்டார்.

நாணயங்கள்: புதிய வகை நாணயங்கள் எவற்றையும், இவர் வெளியிடவில்லை என்று கூறப்படுகிறது. ஏற்கெனவே முகமது பின் துக்ளக்கினால் வெளியிடப்பட்ட நாணயங்களே இவர் காலத்திலும் பழக்கத்தில் இருந்தன. எனினும் 'அதா' 'பிக்' எனப்படும் இரண்டு நாணயங்கள் இவர் காலத்திலும் வெளி யிடப்பட்டன என்று தெரிகிறது.

சமயக் கொள்கை : பிரோஸ் எவ்வாறு மற்றச் சீர்திருத்தங்களுக்காகப் பாடுபட்டாரோ, அவ்வாறே இஸ்லாமியச் சமயக் கொள்கைகளைப் பரப்பவும் பெரிதும் முயன்றார். சமயப் பற்று மிக்க முஸ்லீமாக விளங்கிய அவர் இஸ்லாமிய மதத்தைத் தழுவியவர்களுக்குப் போதிய வசதிகளையும், வாய்ப்புகளையும் தேடித்தந்தார். சமுதாயத்தில் உலேமாக்கள் சிறப்பிடம் வகித்தனர். அவர்களுடைய முடிவுகளுக்குச் சுல்தான் கட்டுப்பட்டு நடந்தார். இந்துக்களிடத்துப் பொறுமை காட்டவில்லை. சமயப் பொறை உணர்வின்றிச் செயல்பட்டார். இந்துக்களுடைய ஆலயங்களை நொறுக்கினர். சமய நூல்களையும் உருவச் சிலைகளையும் தீக்கிரையாக்கினர். இந்துக்களின் ஆலயங்களின்மேல் மசூதிகள் எழுப்பப்பட்டன. பிராமணர்களுக்கு இதுவரை வரி விதிப்பில் சலுகை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் பிரோஸ்ஷா அவர்களும் ஜிசியா என்னும் வரி செலுத்தியாக வேண்டும் என்று ஆணையிட்டார். பிராமணர்கள் இதை எதிர்த்துத் தீக்குளித்து இறக்கப் போவதாகக் கூறியதும் வரி குறைப்புச் செய்யப்பட்டது.

மக்களை இஸ்லாமிய மதத்திற்கு மாற்றுதல் பொருட்டு எல்லா வழிகளையும் கையாண்டார். இவ்வாறு மாறியவர்களுக்கு ஜாகீர்கள் வழங்கப்பட்டன. எகிப்திய கலீபாவிடத்து மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். கலீபாவின் துணைவன் என்று தம்மைக் கூறிக்கொண்டார். தன்னுடைய பெயரோடு கலீபாவின் பெயரையும், நாணயங்களில் பொறித்து வைத்தார்.

முகமது பின் துக்ளக்கின் பாவத்திற்குக் கழுவாய் தேடுவது போல் சில பணிகளைப் பிரோஸ் மேற்கொண்டார். அவருடைய காலத்தில் தண்டனைகளின் வாயிலாக உடல் ஊனமுற்றவர்களின் மனம் வருந்தா வண்ணம் பரிசுகள் பலவற்றை அளித்து அவர்களை மகிழ்வித்தார். அவர்களிடமிருந்து முகமதுவை மன்னித்ததாக எழுதிவாங்கி அவற்றை முகமதுவின் கல்லறையில் புதைத்து வைத்தார். வீடு இழந்தோர், நிலம் இழந்தோர், யாவரும் தாங்கள் இழந்தவற்றைத் திரும்பப் பெற வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டது.

சுல்தானின் கடைசிக் காலம் அமைதியான முறையில் நிம்மதியான வழியில் கழியவில்லை. கி.பி. 1374இல் தன்னுடைய மூத்த மகன் இறந்த அதிர்ச்சி அவரைப் பாதித்தது. தன்னுடைய மகன் முகமதுகான் என்பவனுடன் ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டிருந்தது இவருக்குக் கெடுதலை விளைவித்தது. முகமதுகான் ஆட்சிப் பணியை மேற்கொள்ளாது இன்பச் செயல்களில் வாழ்நாளைக் கழித்தார். முகமதுகானின் செயலை வெறுத்த

உயர் குடியினர் கிளர்ச்சி செய்யவே அவர் சீர்மூர் மலைக்கு ஓடி விட்டார். பதே கானின் மகன் கியாஸ் உத்தீன், துக்ளக் ஷா வைத் தனது வாரிசாக நியமித்தார். செப்டம்பர் 20, 1388 அன்று பிரோஸ் உயிர்நீத்தார். பிரோஸின் மறைவு ஒரு சகாப்தத்தின் முடிவு என்று மூர்லாந்து குறிப்பிடுகிறார். 'பிரோஸின் ஆட்சி அக்பரின் காலத்திற்கு முந்திய சிறப்பு மிக்க சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது' என்று சர் உல்ஸ்லி ஹெய்க் குறிப்பிடுகின்றார். சில வரலாற்றறிஞர்கள் பிரோஸ்ஸை ஜலாலுதீன் கில்ஜியுடன் ஒப்பிட்டுப் பேசுவர். சர் உல்ஸ்லி ஹெய்க் நசீருதின் முகமதுவுடன் இவரை ஒப்பிட்டுப் பேசுவதே பொருத்தம் என்று கருதுகின்றார். டாக்டர் ஈஸ்வரி பிரசாத் குறிப்பிடுவதுபோல பிரோஸ் நிலையான புத்தியும் திடமான கொள்கையும் இல்லாதவர். வாய்ப்பு இருந்தும் அதனைப் பயன்படுத்திக் கொள்ளும் திறமை இல்லாதவர். இவர் தொலை தூரப் படையெடுப்புகளை மேற்கொண்டபோது கான் ஜஹான் மக்பல் மிகத் திறமையுடன் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டார். அப்படிப்பட்ட திறமை மிக்கவர் அங்கிருந்தும் பிரோஸின் மறைவிற்குப் பின்னர் டெல்லிச் சுல்தானியம் மிக விரைவாகக் கரையத் தொடங்கியது. உள்நாட்டுக் குழப்பங்களும் மங்கோலியர்களின் படையெடுப்பும் நாட்டைச் சீரழித்தன.

மதிப்பீடு : முகமதுவை அவருடைய காலத்திய வரலாற்றறிஞர்கள் புகழ்ந்துரைக்கின்றனர். இதற்குக் காரணம் அவரது உள்நாட்டுக் கொள்கையே. பலவகையிலும் அறப்பணிகளை மேற்கொண்டதும் பொதுப்பணிகளை மேற்கொண்டதுமே அவரது புகழுக்குக் காரணம். ஆயினும் அவருடைய ஒருசில செயல்கள் அப் புகழுக்கு மாசு கற்பிக்கும் வகையில் அமைந்திருந்தன.

இவரிடம் காணப்படும் குறைபாடுகளில் ஒன்று இவர் சிறந்த தளபதியாக விளங்கவில்லை என்பதே. இவருடைய முன்னோர்கள் காலத்தில் இழக்கப்பட்ட பகுதிகளை மீட்க இவர் எம் முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை. ஆட்சி செலுத்துவதில் ஓர் அரசரிடம் காணப்படவேண்டிய கண்டிப்பு அவரிடத்தில் காணப்படவில்லை. ராணுவத்தை நிலமான்ய முறையில் அமைத்ததும் இவர் செய்த தவறே யாகும். அலாவுதீன் கில்ஜியினால் நீக்கப்பட்ட அம் முறையை இவர் மீண்டும் புகுத்தி இருக்கக்கூடாது. அடிமை முறையைப் புகுத்தியதும் ஆட்சிக்கு தீங்கு விளைவித்தது என்று ஏற்கெனவே கண்டோம். துக்ளக் மரபினர் வீழ்ச்சிக்கு இவருடைய சமயக்கொள்கையே பெரிதும் காரணமாயிற்று.

4. பிற்காலத் துக்ளக்குகள்

பிரோஸ் துக்ளக்கின் மறைவிற்குப் பின்னர் அவருடைய பேரன் இரண்டாம் கியாஸ் உத்தீன் துக்ளக் ஷா என்னும் பட்டத்துடன் அரியணை ஏறினார். அதை எதிர்த்த நசீருத்தீன் முகம்மது விரட்டியடிக்கப்பட்டார். கியாஸ் உத்தீன் திறமையற்ற வராதலால் ஆட்சியிலிருந்து விரட்டப்பட்டுத் தப்பி ஓடும்போது கொல்லப்பட்டார்.

இவருக்குப் பின்னர் கி. பி. 1389இல் அபுபக்கர் ஷா அரசராஞர். இவர் உருக்னுதீன் என்பவரைத் தமது அமைச்சராக்கிப் பின்னர் தமக்கு துரோகமிழைத்தார் என்பதால் கொலை செய்தார். அபுபக்கருக்கும் நசீருத்தீனுக்குமிடையே ஆட்சியைப் பிடிப்பதற்கான போர் நடைபெற்றது. இருவருக்குமிடையே போர்கள் பல நடைபெற்றன. தன்னுடைய சகாக்களுடன் அபுபக்கர் ஓய்வு எடுத்துக்கொள்ள நசீருத்தீன் முகம்மது 1390இல் அரசராக்கப் பட்டார்.

நசீருத்தீன் முகம்மது நான்கு ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர். நசீருத்தீன் முகமது தமது நான்காண்டுகால ஆட்சியின் போது கிளர்ச்சிகளை அடக்குவதிலேயே கழிக்கவேண்டியதாயிற்று. கி.பி. 1394இல் நசீருத்தீன் இறந்தார். அலாவுதீன் சிக்கந்தர் ஷா என்னும் பெயரில் இவர் மகன் மிகக் குறுகிய காலமே அதாவது சுமார் இரண்டு மாத காலமே ஆட்சி செய்து நோய்வாய்ப்பட்டு இறந்தார். பின்னர் நசீருத்தீனின் இளைய மகன் நசீருத்தீன் முகம்மது துக்ளக் எனும் பட்டத்துடன் ஆட்சிக் கட்டிலில் ஏறினர். இதை விரும்பாத இந்துக்களும், முஸ்லீம் ஆளுநர்களும் எதிர்த்தனர். உயர் குடியினர் சிலர் பிரோஸின் மற்றொரு பேரன் நஸ்ரத்காஞை ஆதரித்தனர். இதன் விளைவாக உள்நாட்டுப் போர் ஏற்பட்டது.

இந் நிலையில் ஆளுநர்கள் எந்தப் பக்கமும் சேராது தனித்து இருந்தனர். அப்போது தைமூரின் படையெடுப்பு ஏற்படவே ஆளுநர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பிய பக்கம் சேர்ந்தனர். வலிமை மிக்க ஆளுநர்கள் அரசரைத் தம் கைப்பாவையாக்கினர். நசீருத்தீன், மல்லு இக்பால் என்பவரின் கைப்பாவையாக இருந்தார். இவ்வாறு நிலைமை இருக்கையில் தைமூர் சிந்து, ஜீலம், இரவி ஆகிய நதிகளைக் கடந்து வந்து கொண்டிருக்கும் செய்தி வந்தது.

5. துக்ளக் மரபின் வீழ்ச்சிக்குக் காரணம் யாது ?

முகமது பின் துக்ளக்கின் ஆட்சியின்போது காஷ்மீர், கட்ச், கத்தியவார், ஒரிஸ்ஸா ஆகிய பகுதிகள் தவிர மற்றைய பகுதிகள் அவருடைய ஆட்சிக்குட்பட்டிருந்தன. ஆனால் அவருடைய பேரனின் காலத்தில் அவ் வரசானது டெல்லியிலிருந்து சில மைல் தூரத்தில் உள்ள பாலம் வரையே பரவியிருந்தது. அவ் வளவு பெரிய பரப்பினை ஆண்ட மரபு மிகமிகச் சிறிய பகுதியை ஆள்கின்ற மரபாக மாறியதற்குக் காரணங்கள் யாவை என்று ஆராய்தல் மிகமிக அவசியமாகும்.

துக்ளக் வம்ச வீழ்ச்சிக்கு முகமது பின் துக்ளக்கும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. இவருடைய திட்டங்களான தலைநகரை மாற்றுதல், அடையாள நாணய முறை, தோயாப் மீது அதிக வரி விதித்தல் போன்றவை மக்களிடையே பரவலாக அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தன. அவை மட்டுமின்றி இவர் பேரரசு பல கிளர்ச்சிகளைச் சந்திக்க வேண்டியதாயிற்று. தக்காணத்தில் விஜயநகர அரசு, பாமினி அரசு ஆகியவை தோன்றின. இவ்வாறு முகம்மது பின் துக்ளக்கின் காலத்திலேயே அம் மரபின் அழிவிற்கான சூழ்நிலை காணப்பட்டது. முகம்மது பின் துக்ளக்கின் சீர்திருத்தங்களை வரவேற்குமளவிற்கு மக்கள் முன்னேற்றக் கருத்துக்களைக் கொண்டிருக்கவில்லை.

இத்தகைய சூழ்நிலை இருப்பினும் அழிவை நோக்கிச் செல்லும் அரசைத் தடுத்திட வழியில்லாமல் இல்லை. முகம்மதுவிற்குப் பின் வருபவர் ஆற்றல்வாய்ந்தவராய் இருந்திருந்தாலே போதும். ஆனால் பிரோஸ் துக்ளக் அத்தகைய தகுதியற்றவராய் விளங்கினார். பிரோஸ் சிறந்த போர் வீரர் அல்லர். அவர் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டாலும், போர்கள் பல செய்து புதிய பகுதிகளைக் கைப்பற்றுமையால் அவர் புகழ் மங்கத் தொடங்கியது. நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாய் புதிய உணர்ச்சியுடன் வளர்ந்து வந்த விஜய நகரப் பேரரசிற்கு எதிராகவும், பாமினி அரசருக்கெதிராகவும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாதது இவ் வரசிற்குத் தீங்காய் அமைந்தது.

பிரோஸ் துக்ளக்கினால்தான் அவ்வாறு செய்திட முடியவில்லை என்றால் அவருக்குப் பிறகு வந்தவர்கள் காலத்திலோ நிலைமை இன்னும் மோசமாயிற்று. பிரோஸ் காலத்தில் அவருக்கு அடங்கி இருந்த நாடுகள்கூட நாளடைவில் விடுதலைபெறத் தொடங்கின. அழிவை நோக்கி நடைபோட்ட அரசைத் தடுத்து நிறுத்துவதற்கு மாறாக அவர்கள் அதை விரைவுபடுத்தினர்

என்றுதான் கூறவேண்டும். இவ் வரசர்கள் மக்களின் நலன் கருதி ஆட்சி செய்யவோ சீர்திருத்தங்கள் செய்யவோ இல்லை. மாறுக மக்களின் துயரை அதிகரித்தனர். அது மட்டுமின்றித் தமது நேரத்தை வீணான பொழுதுபோக்குகளில் கழித்தனர். மக்கள் இந்த ஆட்சி நீடிக்குமோ என்று ஆசைப்படுவதற்கு மாறுக எப்போது ஒழியுமோ என்று எண்ணினர்கள்.

பிரோஸ் துக்ளக்கின் போர்த் திறமற்ற செயல்கள் மட்டும் ஆட்சியின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது என்று கூறுவதற்கில்லை. அவருடைய தவறுகள் பலவும் அதற்குக் காரணமாயிற்று. அலாவுதீன் கில்ஜியினால் நீக்கப்பட்ட ஜாகீர் முறையை மீண்டும் புகுத்தியது இவரது முதல் தவறு. ஜாகீர்தார்கள் தங்கள் ஆட்சிக்குப்பட்ட பகுதிகளுக்குத் தாமே தலைவர்கள் என்று தம்மை எண்ணிக்கொண்டு தங்களது தலைவரையே எதிர்க்கத் தலைப்பட்டனர். இவ்வாறான பிளவுச் சக்திகள் இறுதியில் அழிவிற்கு வகுத்தன.

பிரோஸ் துக்ளக்கின் மற்றொரு தவறும் ஆட்சியின் நலிவுக்குக் காரணமாயிற்று. இவர் புகுத்திய அடிமை முறையே அத் தவறு எனலாம். அடிமைகள் எண்ணிக்கையில் அதிகமாக, அதிகமாக அவர்களது வலிமை பெருகியது. ஆட்சித்துறை நிறுவனங்களில் அவர்கள் குறுக்கிட ஆரம்பித்தனர். இதற்கு முன்னர் இருந்த அடிமைகள் யாவரும் நன்றி விசுவாச உணர்ச்சியுடன் செயல்பட்டனர். ஆனால் பிரோஸ் காலத்தில் அவர்கள் அரசுக்கு ஏற்படும் பாதிப்புக்களைப் பற்றிக் கவலை கொள்ளாது தமது சுய இலாபங்களைப் பற்றியே சிந்தித்து வாழ்ந்தனர். விளைவு அரசுக்குப் பக்கபலமாய் இருக்க வேண்டிய அடிமைப் படை தீராத தலைவலியாயிற்று.

இதனைப் போலவே பிரோஸ் துக்ளக்கின் இராணுவ அமைப்பும் ஒரு காரணமாயிற்று என்றே கூறவேண்டும். மாற்றிக் கொள்ளத்தக்க நிலமான்யங்கள் வழங்கப்பட்டன. இதன் விளைவாக நிறையத் தவறுதல்கள் நடைபெற்றன. இராணுவத்தில் பதவியளிப்பு வம்சவாரியாகத் தந்தைக்குப்பின் தனயன் என்ற முறையில் மாறியது. பதவி உயர்வு அளிப்பதில் தகுதிநிலையைப் பார்ப்பதில்லை என்று ஆனவுடன் படை வீரர்கள் உற்சாகம் குன்றினர். படை வீரர்கள் உயர் குடியினரின் பொறுப்பில் இருந்தமையால் மைய அரசுக்குப் படை வீரர்களிடத்து எவ்விதப் பிடிப்புமில்லாமல் போய்விட்டது. ஒரு நாட்டின் பாதுகாப்பிற்குச் சிறந்த இராணுவம் வேண்டும். அந்த

இராணுவமே இப்படிச் சீர்குலைந்தது என்றால் நாடு சீரழிவதற்கு வேறு காரணம் தேவையில்லை எனலாம்.

பிரோஸ் துக்ளக் கொண்டிருந்த இஸ்லாமியச் சமயப்பற்றும் அவருடைய சமயக் கொள்கையும் ஒரு காரணமாகக் காட்டப் படுகிறது. தீவிரமான மதப் பற்றுக்கொண்ட அவர் இந்துக் களையும், ஷியாக்களையும் வெறுத்தார். கட்டாயமாக அவர்களைத் தம் மதத்திற்கு மாற்ற நினைத்தார். ஆனால் அவருடைய முயற்சிகள் மக்கள் மத்தியில் வெறுப்பைத் தோற்றுவித்தன. இவருடைய சமயக் கொள்கையும், சமயத்தின் பேரில் செய்யப் பட்ட கொலைகளும் துக்ளக் மரபின் ஆட்சிக்கும் குழிபறித்தன. கட்டாயப்படுத்தி மாறுதல் செய்வதைவிட, அவர்களாகவே மனம் மாறச் செய்வதில்தான் உண்மையான வெற்றி உள்ளது என்பதை உணராது அவர் செய்த தவறு துக்ளக் ஆட்சியின் அழிவுக்கே காரணமாயிற்று எனலாம். வரிவிதிப்பில் இதுவரை விலக்குப் பெற்றிருந்த பார்ப்பனரும் வரி செலுத்த வேண்டிய தாயிற்று. இதனால் அவர்களது பகைமையையும் பிரோஸ் பெற்றார்.

பதினான்காம் நூற்றாண்டில் ஓர் அரசு நிலைபெறுவதற்கு இன்றியமையாத தன்மை 'வலிமை' என்பதாகும். அதுமட்டு மின்றி அரசரின் அவ் வலிமையைக் கண்டு மக்கள் அஞ்ச வேண்டும். ஆனால் மக்கள் அரசருக்கு எதிராகக் கிளர்ந்தெழு மளவுக்கு அச்சமின்றி இருந்தனர். சமயச் சார்பான அரசும் அதன் வலிமைக்குத் தீங்கு செய்தது. சமயம் வேறு, அரசியல் வேறு என்றில்லாமல் சமயத்துறைத் தலைவர்களின் குறுக்கீடு களுக்குச் செவி சாய்த்து அரசர் ஆளத் தலைப்பட்டால் ஆட்சி முறை சீர்கேடடையத்தான் செய்யும். அதற்கு உதாரணம் துக்ளக்குகளின் வீழ்ச்சி எனலாம். முல்லாக்களும், முப்திகளும் அன்றைட அரசியலில் தலையிட்டனர். எண்ணிக்கையில் குறைந்த முஸ்லீம்கள், எண்ணிக்கையில் அதிகமான முஸ்லீம் அல்லாதவர் களை ஆள்வதற்குக் குரானியச் சட்டத்தை மட்டுமே துணைக் கொண்டால் போதாது என்பதை அவர்கள் அறியவில்லை.

துக்ளக்குகளின் காலத்திற்கு முன்னர் வாழ்ந்தவர்களுக்கு இந் நாட்டில் நிலைபெற வேண்டும், தமது சமயம் வேரூன்ற வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அதற்கேற்றவாறு தமது வாழ்க்கையை அன்னர் அமைத்துக் கொண்டனர். துக்ளக்கின் காலத்தில் மன்னர்களின் வாழ்க்கையில் மாறுதல்கள் தோன்றின. கண்டிப்புடன்கூடிய வாழ்க்கையினை மேற்கொண்ட அவர்கள்

மது, மங்கை போன்றவற்றில் உளம் பறிகொடுத்து வாழ்ந்தனர் இதன் விளைவாக ஆற்றல் குன்றினர்.

இந்துக்களின் தொடர்ந்த முயற்சியும் துக்ளக்குகளின் வீழ்ச்சிக்கு ஓர் காரணம் என்று கூறவேண்டும். டெல்லி சுல்தானியத்திற்கு எதிராக அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பலவீனமான அரசர்களின் காலத்திலேதான் வெற்றிபெற்றன. தோ ஆப் டெல்லிக்கு மிக அருகிலே இருந்தபோதிலும் ஒரு போதும் பணிந்திடவில்லை. இராந்தாம்பூரைக் கைப்பற்ற டெல்லி சுல்தான்களுக்கு 150 ஆண்டுகள் பிடித்தன

டாக்டர் லேன்பூல் இந்து முஸ்லீம்களிடையே ஏற்பட்ட திருமண உறவை ஓர் காரணமாகக் காட்டுகிறார். ஆனால் அக் கருத்து அத்துணைப் பொருத்தமானதாகக் காணப்படவில்லை. பிரோஸின் தாய் இந்துவாக இருந்தபோதிலும் பிரோஸ் இந்துக்கள்பால் அன்பு செலுத்தவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

தைமூரின் படையெடுப்பு எரியும் நெருப்பைத் திடீரென்று ஊதி அணைத்திட்ட பெருங்காற்று எனக் கூறலாம். டெல்லி மக்களைச் சீரழித்த தைமூரின் படையெடுப்பே டெல்லி சுல்தானியத்திற்கு அடித்த சாவு மணியாகும். தைமூரின் படையெடுப் பிற்குப் பின்னர் மூன்று மாதங்கள் எங்கும் குழப்பம் பரவியது. பல்வேறு மாநிலங்கள் விடுதலை பெறத் துவங்கின. டெல்லி அரசர் இதற்குப் பின்னரும் ஏதும் முயற்சிகளை மேற்கொள் ளாது வீண் வழிகளில் பொழுதைக் கழித்தார்

நாம் இதுவரை பார்த்தவற்றிலிருந்து தெரிந்து கொள்ளு கின்ற உண்மை என்னவெனில் துக்ளக் மரபின் வீழ்ச்சிக்கு முழுக் காரணமாக முகம்மது பின் துக்ளக்கையோ, பிரோஸ் துக் ளக்கையோ நாம் சுட்டிக் காட்டிட இயலாது என்பதுதான். அவர்கள் இருவரின் செயல்கள் தவிர வேறுபல காரணங்களும் இருந்தன. எந்த அரசும் நித்திய ஜீவியாய் என்றென்றும் வாழ்ந் திட முடியாது. எதற்கும் அழிவென்று ஒன்றுண்டு. ஆனால் அந்த அழிவு தானாக வருவதும், தேடிக்கொள்வதும் என்று இரு வகை உண்டு. முகம்மது பின் துக்ளக், பிரோஸ் அவருடைய சந்ததியினர் ஆகியோர் அதனைத் தேடிக் கொண்டனர் என்றே கூறவேண்டும்.

6. தைமூரின் படையெடுப்பு

பாபருக்கு முன் இந்தியாவிற்குப் படையெடுத்து வந்தவர் களில் தைமூர் குறிப்பிடத் தகுந்தவர் ஆவார் தைமூரின் வருகை

இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாறுதலை ஏற்படுத்தியது. டெல்லி சுல்தானியம் எனும் நிலைகுலைந்து சாய்ந்திருந்த மரத்தின் கிளைகளை வெட்டியவர் தைமூர் என்று குறிப்பிடலாம். தைமூரின் அழிவுச் செயல்கள் நீண்ட நெடுங்காலம் மக்கள் நினைவில் தங்கி இருந்தன.

தைமூரின் இயற்பெயர் அமீர் தைமூர் குர்கான் என்பதாகும். இவர் அதிர்ஷ்டத்தின் தலைவர் எனும் பொருள்படும்படியான 'சாஹிப்ஹிரான்' எனும் பட்டப் பெயரைக் கொண்டிருந்தார். கி. பி. 1336இல் சாமர்க்கண்டிற்கு ஐம்பது மைல் தெற்கே உள்ள தேஷ் என்னுமிடத்தில் பிறந்த இவருடைய தந்தையின் பெயர் அமீர் துர்க்காய் என்பதாகும். தைமூர் துருக்கியர்களுக்குத் தலைவ ரானபோது அவருக்கு வயது 33. பாரசீகம் போன்ற அருகாமை நாடுகளின்மேல் அவர் முதலில் படையெடுத்து அங்குத் தன் அதிகாரத்தை நிலை நாட்டினார். இந்தியாவைக் கைப்பற்றுவதற்கு முன்னர் மெஸபடோமியா, ஆப்கானிஸ்தான் ஆகியவற்றைக் கைப்பற்றியிருந்தார்.

இந்தியாவின் மீது தைமூர் படையெடுத்ததற்கான கார ணங்கள் பலவாறுகக் கூறப்படுகின்றன. தைமூர் நாடுகள் பல வற்றை வெற்றிகொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை இயல்பா கவே பெற்றவர். இந்தியாவின் செல்வ வளத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட அவருக்கு இந்தியாவினை வெற்றிகொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது இயல்பானதே என நாம் கருதலாம். ஆனால் 'ஜாபர் நாமா' எனும் நூலில் அவர் இந்தி யாவின் மீது படையெடுத்ததன் நோக்கம் நாடு சேர்க்கும் ஆசையோ சொத்து சேர்க்கும் ஆசையோ இல்லை. இஸ்லாமிய சமயத்தில் நம்பிக்கை கொள்ளாதவரை அழித்திட வேண்டும் என்ற சமய வெறியே காரணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் டாக்டர் கே. எஸ். லால் அவரது தீவிரமான சமயப் பற்று இந் தியப் படையெடுப்புக்கு ஒரு காரணமல்ல என்று கருதுகிறார். அது மட்டுமின்றி மத்திய ஆசியாவிலிருந்து மாஸ்கோ வரை படையெடுத்துச் சென்ற ஒருவர் இந்தியாவையும் கைப்பற்ற எண் ணியது இயல்பென்றே கருதுகிறார். தைமூர் இந்தியாவின்மேல் படையெடுக்கு முன்னர் அனுப்பி வைத்த அவர் பேரன் உச்சா வைக் கைப்பற்றினார். முல்தானம் வரை வந்த அவர் அதற்கு மேல் சென்றிடத் தடைகள் ஏற்பட்டன. எனவே தைமூர் தம் பேரனுக்கு உதவ விரைந்து வந்தார்.

இந்தியாவிற்குப் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் மற்றொரு பேரன் பீர்முகம்மது என்பவனை முன்னால் செய்யவேண்டிய

ஆயத்தப் பணிகளுக்காக அனுப்பி வைத்தார். கி. பி. 1398இல் தைமூர் சாமர்கண்டை விட்டுப் புறப்பட்டார். சிந்துவைக் கடந்து ஜீலம் நதியை அடைந்த அவரை அப் பகுதியின் ஆட்சியாளர் ஷிகாபுத்தீன் முவாரக் எதிர்த்துத் தோல்வியடைந்தார். துலம்பா என்னுமிடத்தை அடைந்த அவர் தனக்கு ஒரு குறித்த தொகையை அளித்தால் அந் நகருக்கு அழிவேதும் ஏற்படுத்தாது விட்டுவிடுவதாகக் கூறிவிட்டுப் பின்னர் மக்களைக் கொன்று குவித்தார். தைமூர் சட்லெட்ஜை அடைந்தபோது, பீர்முகம்மது இவருடன் சேர்ந்து மற்றையப் போர் நடவடிக்கைகளுக்கும் துணை நின்றார்.

கிபல்பூர், பாக்பட்டர், பட்னீர் ஆகியவை எதிர்த்துத் தோல்வியைத் தழுவின. பட்னீர் மக்கள் படுகொலை செய்யப் பட்டனர். டெல்லியை அடையும் வரை வழியில் இருந்த நகரங் களைத் தீக்கிரையாக்கி, மக்களைத் தமது வாளுக்கு இரையாக் கினர்.

டெல்லியை அடைந்தபோது நசீருத்தீன் முகம்மதுவும், மல்லு இக்பாலும் படைகளைத் திரட்டிக்கொண்டு கோட்டை வாயி லில் அணிவகுத்து நின்றனர்.

பின்னர் நடைபெற்ற போரில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான இந்துக்கள் கொல்லப்பட்டனர். இக் கொலைக்காக வரலாற்று அறிஞர்கள் தைமூரை இகழ்ந்துரைத்துள்ளனர். ஆனால் போர்க் கைதிகளைக் கொல்வது தவறில்லை என்று சிலர் வாதிடுகின்றனர். கி.பி. 1398இல் தைமூர் யமுனையைக் கடந்தார். டெல்லிக்கு வெளியே இரண்டு படைகளும் மோதின. சுல்தான் முகமது ஷாவும், மல்லு இக்பாலும் தீவிரமாகப் போரிட்டனர். இறுதியில் இருவரும் போர்க்களத்திலிருந்து ஓடிவிடத் தைமூரின் கொடி டெல்லிக் கோட்டையில் ஏற்றப்பட்டது இதன் பின்னரும் தைமூர் வாளாயிருக்கவில்லை. சிலர் அடிமையாக்கப்பட்டனர். பலர் படுகொலை செய்யப்பட்டனர்.

பழைய டெல்லியின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கட்டிடக் கலைஞர்கள் சாமர்கண்டிற்கு அழகிய கட்டடம் கட்ட அழைத்துச் செல்லப்பட்டனர். டெல்லியில் தைமூரின் நட வடிக்கை மனிதாபிமான மற்ற குரூரமான நடவடிக்கையாகும். இதில் வேடிக்கை என்னவெனில் இதற்கெல்லாம் தாம் பொறுப் பாளியில்லை என்று தைமூர் கூறியதுதான்.

தைமூர் டெல்லியிலிருந்து மீரத்தை நோக்கிப் படை யெடுத்துச் சென்றார். மீரத்தில் கோட்டைகள் தொறுக்கப்பட்டு

மண்ணோடு மண்ணுக்கப்பட்டன. இந்துக்களின் இல்லங்கள் நெருப்புக்கு இரையாக்கப்பட்டன. கங்கையைக் கடந்து முபாரக் கானின் தலைமையில் வந்த படையைத் தைமூர் தோற்கடித்தார். அங்கிருந்து ஜம்முவை நோக்கிப் படையெடுக்க முயற்சிகள் மேற்கொண்டிருந்த வேளையில் காஷ்மீர் அரசர் அடிபணிந்த செய்தி வந்தது. பின்னர் லாகூரை நோக்கிப் படை ஒன்று அனுப்பப்பட்டு அந் நகர் சூறையாடப்பட்டது. முல்தானத் திற்கு கிஸிர்காஜனத் தம் சார்பில் ஆள நியமித்துவிட்டுத் திரும்பினார்.

விளைவுகள்: தைமூரின் படையெடுப்பு இந்திய மண்ணில் நீங்காத வடு ஒன்றை ஏற்படுத்தியது எனலாம். அவ் விளைவுகள் யாவை என்பதைக் காண்போம். டெல்லி நகரமே சீரழிந்து பாழடைந்தது. மக்கள் யாரும் வசிக்கத் தகுதியற்ற ஓரிடமாக அது மாறியது. அங்கு வாழ்ந்த மக்கள் பஞ்சம், நோய் முதலியவற்றினால் பீடிக்கப்பட்டு வேதனைக் கடலில் மூழ்கினர். இலட்சக்கணக்கான இறந்த பிணங்கள் வீதியில் கிடந்தமையால், அதனால் எழுந்த துர்நாற்றம் நல்ல காற்றைக்கூட மக்கள் சுவாசிக்க இயலாத நிலையை உருவாக்கியது. இவை மக்களுக்குப் பொதுவாக ஏற்பட்ட விளைவுகள்.

துக்ளக் பேரரசு முழுவதுமாக அழிந்தது. ஜான்பூர், வங்காளம், குஜராத், மாளவம், பஞ்சாப், மேல்சிந்து, சமானா, பயானா ஆகியவை தன்னிச்சையாகச் செயல்பட்டன. தைமூரின் படையெடுப்பின் விளைவால் துக்ளக் மரபு அழிந்து சையது மரபு தோன்றியது.

இந்தியாவின் செல்வம் கொள்ளைபோனது. இந்தியப் பொருளாதார நிலையில் பலவீனம் ஏற்பட்டது. டெல்லி, பட்னீர், மீரட் ஆகிய இடங்களில் இருந்த விலைமதிக்க முடியாத செல்வங்கள் அழிக்கப்பட்டன.

இந்துக்கள் முஸ்லீம்களை மிலேச்சர்கள் என்று கருதிவந்த நிலையில் முகம்மது பின் துக்ளக் போன்றவர்களின் காலத்தில் சிறிதுமாறுதல் தோன்றி வந்தது. ஆனால் தைமூர் இந்துக்களைப் பூண்டோடு அழிக்கத் தலைப்பட்டார். இதனால் இந்து முஸ்லிம் ஆகிய இரு வகுப்பாரிடையே இருந்த பிளவு விரிந்து கொண்டே சென்றது.

இந்தியக்கலை மத்திய ஆசியாவில் பரவிடத் தைமூரின் படையெடுப்பு துணை செய்தது. தைமூரினால் சாமர்கண்டிற்கு

அழைத்துச் செல்லப்பட்ட கலைஞர்கள் இந்தியக் கலை முறைகளை அங்கே புகுத்தினர்.

தைமூர் பிற்கால முகலாயர்களில் குறிப்பாகப் பாபர் போன்றவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்தார் என்றால் மிகையாகாது. முகலாயர்கள் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தபோது, அது ஏதோ தமது பிறப்புரிமை என்பதுபோல் எண்ணிக் கொண்டு வந்தனர். தைமூர், பஞ்சாப், டெல்லி ஆகியவற்றைக் கைப்பற்றியதால் அவர் வழிவந்த பாபர் அதில் தமக்கு உரிமை உண்டு என்று கருதி இந்தியாவின் மீது படையெடுத்தார்.

அதுமட்டுமின்றி தைமூர் கொள்ளையடித்துச் சென்ற பெருஞ் செல்வத்தைக் கண்டவர்கள், கொள்ளையடிப்பதற்கு இன்னும் ஏராளமாகச் செல்வம் இந்தியாவில் இருக்கக்கூடும் என்று எண்ணினர். இந்தியப் படையெடுப்பாளர்களுக்குத் தைமூர் ஒரு வழிகாட்டி எனலாம். தைமூரின் படையெடுப்பு இந்திய மக்களின் சமுதாய வாழ்க்கையில் பல மாறுதல்களை ஏற்படுத்தியது என்பது உண்மை. ஆனால் இம் மாறுதல்களால் நல்ல பலன்கள் ஏதும் இந்தியருக்கு ஏற்படவில்லை என்பது ஈண்டு நன்கு அறிதற் பாற்றாகும்.

13. சையதுகளும் லோடிகளும்

சையதுகள் : கிஸிர்கான்—மதிப்பீடு—முபாரக் ஷா—முகம்மது ஷா—அலாவுதீன் ஆலம் ஷா. லோடிமரபினர்: இந்தியாவின் முதல் ஆப்காளியப் பேரரசு — பஹ்லோல்லோடி — மதிப்பீடு — சிக்கந்தர் லோடி—போர்கள்—கலைப்பணி — இப்ராஹீம் லோடி — போர்கள் — உயர்குடியினருக்கு எதிரான நடவடிக்கை—வீழ்ச்சி. லோடி மரபினரின் ஆட்சிமுறை :—பஹ்லோலின் ஆட்சி — இறைமைப் பணி — உயர் குடியினர் — வாரிசுரிமை—அதிகாரச் செறிவு - வசீர் - ஆட்சிப் பிரிவுகள்.

1. சையதுகள்

பதினைந்தாம் நூற்றாண்டு இந்தியாவின் குறிப்பிடத்தக்க கூறுபாடு யாதெனின் வலிமைமிக்க மத்திய அரசாங்கம் ஒன்று இல்லாமையேயாகும். இந்தியா முழுவதையும் கட்டி ஆளுகின்ற பேரரசர் என்று கூறத்தக்க அரசர் யாருமில்லை. ஆனால் சுயேச்சை பெற்ற சிறிய அரசுகள் பல நாடெங்கும் தோன்றலாயின. அத்தகைய அரசுகள் பலவும் முஸ்லீம் அரசுகளாக இருந்தது ஈண்டு கவனிக்கத்தக்கது.

துக்ளக்குகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் எழுந்த சுயேச்சை அரசுகள் நாளடைவில் வலிவும் ஏற்றமும் பெறத் தொடங்கின. டெல்லி அரசாங்கம் சையதுகள் என்பவர்களின் பொறுப்பில் வந்தது. ஆயினும் அவ் வகையிலும் டெல்லியை ஆண்ட சையதுகளின் அரசு சுயேச்சை அரசுகளைவிட உயர்ந்ததாகத் தோற்றமளிக்கவில்லை.

கிஸிர்கான் : சையதுகளின் மரபினைத் தோற்றுவித்தவர் கிஸிர்கான் என்பவரே ஆவார். இம் மரபின் அரசுகளில் சிறந்த

அரசரும் இவரே. சையதுகளின் ஆட்சி மிகக் குறுகிய காலமே அதாவது 37 ஆண்டுகளே நடைபெற்றது. மாலிக் மர்தன் தௌலத் என்பவர் முல்தானின் ஆளுநராகப் பிரோஸின் காலத்தில் விளங்கினர். அவருக்குக் கிஸிர்கானின் தந்தை மாலிக் சுலைமான் உதவியபோது, கூறிய குறிப்பு ஒன்றிலிருந்து, மாலிக் மர்தன் இளவரசர் சையது என்று குறிப்பிட்டதாக அறிகிறோம். கிஸிர்கான் வீரமும், தாராள மனப்பாங்கும், பணிவுடைமையும் படைத்தவராக விளங்கினர்.

கிஸிர்கான் இளையோனாக இருந்தபோது நசீர் உல் முல்க் மர்தன் தௌலத் என்பவரால் வளர்க்கப்பட்டார். மர்தன் இறந்த பின்னர் பிரோஸ் துக்ளக் முல்தானத்தை கிஸிர்கானின் பொறுப்பில் விட்டார். இதுவே கிஸிர்கானின் வாழ்க்கையில் முதன் முதலாகக் கிடைத்த சிறப்பான பதவியாகும். பிரோஸ் துக்ளக்கின் மறைவிற்குப் பின்னர் குழப்பம் நிலவியது.

தைமூரின் படையெடுப்பின்போது, கிஸிர்கான் அவரோடு சேர்ந்து அவருக்கு உதவி தன் திறமையை வெளிப்படுத்தினர் அதன் பயனாக முல்தானம், திபல்பூர், லாகூர் ஆகியவற்றின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். கி. பி. 1405இல் மல்லுகான் தோற்கடிக்கப்பட்ட பின்னர் கிஸிர்கானின் புகழ் மேலும் பரவியது. கி. பி. 1414இல் தௌலத்கானைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டுக் கிஸிர்கான் டெல்லியின் தலைவரானார்.

டெல்லியின் தலைவரான கிஸிர்கான் தம்மை அரசர் என்றோ சுல்தான் என்றோ அழைத்துக் கொள்ளவில்லை. தம்மை 'இரயத் இசுலர்' என்றே அழைத்துக் கொண்டார். நாணயங்கள் அச்சடித்த அவர், தைமூரின் பெயராலேயே குத்பா வாசிக்கச் செய்ததோடு தனது வெகுமதிகளையும் அனுப்பி வைத்தார்.

கிஸிர்கான் எதிர்கொள்ள வேண்டிய இடையூறுகள் பல இருந்தன. தோயாப்பில் இருந்த இந்துக்களும் கடேகரில் இருந்த இந்துக்களும், திறை செலுத்திட மறுத்திடவே தாஜ்உல் முல்க் என்பானின் தலைமையில் படையொன்று நடத்திச் செல்லப் பட்டது. கடேகரின் அரசன் ஹரிசிங் ஓடிவிட்டார். நிலச்சுவான்தார்கள் கிஸிர்கானின் தலைமையை ஏற்றுக்கொண்டனர்.

கி. பி. 1418இல் தாஜ்உல் முல்க், பயானை, குவாலியர் ஆகிய வற்றிற்கு எதிராக அனுப்பப்பட்டார். கி. பி. 1418இல் ஹரிசிங் மீண்டும் கிளர்ச்சி செய்தார். தாஜ்உல் முல்க் அவரைத் தோற்

கடித்த போதிலும் துரத்திச் சென்று பிடித்திடச் செய்த முயற்சிகள் பலனளியாது போயின. அதனால் வெறுப்புற்ற ஹரிசிங் தம்மிடம் சரண் புகுந்திருந்த மக்களைத் தாக்கினார். கடேகரில் இருந்து எடாவாவை நோக்கிப் படை நடத்திச் செல்லப் பட்டது. ஆயினும் எடாவாக் கோட்டையினைக் கைப்பற்றிட இயலாமல் போயிற்று.

கிஸிர்கான் ஆறுமாத காலம் பதாவுனை முற்றுகையிட்டார். இறுதியில் அதனைக் கைப்பற்றிட இயலாது திரும்ப வேண்டிய தாயிற்று. 1420இல் மீண்டும் முற்றுகை தொடரப்பட்டது. மக்களுக்குத்தொல்லை தந்து கொள்ளையடிக்கவே சார்வார் எனப் படும் அவ்வரசன் ஒழுங்காகத் திறை செலுத்த ஒப்புக் கொண்டான்.

கி. பி. 1421இல் மேவாட்டிற்கு எதிராகத் தன் வலிமையை வெளிக் காட்டிடப் படை நடத்திச் சென்றார் கிஸிர். குவாலியர் அரசர் திறை செலுத்திட ஒப்புக் கொண்டார். தனக்குப் பின் வாரிசாகத் தன் மகன் முபாரக்கானை நியமித்த கிஸிர்கான் மே 20, 1421இல் உயிர் துறந்தார்.

மதிப்பீடு: உண்மையிலே சையிதாகக் கிஸிர்கான் விளங் கினார் என்று கூறப்படுகிறது. உண்மையான 'சையது' அனுவசியமாக இரத்தம் சிந்துவதையோ, எதிரிகளைப் பழிவாங்கு வதையோ விரும்பமாட்டான். அத்தகைய பண்புகள் இவரிடம் காணப்பட்டன. வாழ்நாள் முழுவதும் போர்களிலும், கிளர்ச்சியை அடக்குவதிலும் கழிந்தமையால் சீர்திருத்தங்கள் ஏதும் செய்திட ஓய்வு இருக்கவில்லை.

முபாரக்ஷா: (1421—1434) கிஸிர்கானைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த முபாரக்ஷாவைப் பற்றிய வரலாற்றுச் செய்தி களை யாஹியா பின் அகமது என்பவர் எழுதிய தாரீக்கி முபாரக் ஷாகி என்னும் நூலின் வாயிலாக அறிகிறோம். இவர் காலத்தில் ஏராளமான கிளர்ச்சிகள் நடைபெற்றன.

உயர் குடியினர் அடிக்கடி இடமாறுதல் செய்யப்பட்டனர். இவ்வாறு செய்ததன் வாயிலாகத் தங்கள் செல்வாக்கை உயர் குடியினர் உயர்த்திக் கொள்ளும் வாய்ப்பு மறைந்தது என்ற போதிலும் திறமைமிக்க ஆட்சியின் மூலம் செல்வாக்குப் பெற்றனர். சார்வர் உல் முல்க் வசீர் பதவியைச் சிறப்பாக வகித்திடாமையால், அவருடன் இணைந்து பணியாற்ற கமால்உல் முல்க் என்பவர் நியமிக்கப்படவே சார்வர் இதை விரும்பவில்லை.

சுல்தானுக்கு எதிராகச் சதியில் ஈடுபட்டார். முபாராகாபாத் திற்குச் சுல்தான் சென்றபோது அங்கே அவர் கொலை செய்யப் பட்டார்.

முபாரக்ஷா திறமைமிக்க அரசராக விளங்கியதோடு தன் தந்தையின் வெற்றிகளை நிலைநிறுத்திட முயன்றார். சிறந்த புத்திக் கூர்மை உடையவராகவும் விளங்கினர்.

முகம்மதுஷா : (1434—1444) முபாரக்ஷா கொலை செய்யப் பட்டபோது தமக்குப்பின் வாரிசாக யாரையும் விட்டுச் செல்ல வில்லையாதலால், முபாரக்கின் சகோதரர் மகன் முகம்மது ஷாவிற்கு உயர் குடியினர் முடிசூட்டினர். முபாரக்ஷாவின் மறைவிற்குப் பழிவாங்க எண்ணங் கொண்டிருந்தவர் கமால் உல்முல்க். அரசருக்குச் சார்வரின் தீய எண்ணங்கள் தெரிய ஆரம்பித்தன. லாகூர், சர்ஹிண்டு பகுதியை ஆண்ட ஆளுநர் பக்லோல் கான் லோடி அரசனின் அன்பிற்குப் பாத்திரமானார். இவ்வாறு உயர் குடியினரை இவர் இடமாற்றம் செய்ததே இவரது கொலைக்குக் காரணமாயிற்று.

இவ்வாறு கிளர்ச்சி செய்தவர்களில் ஜஸ்ரத் கோக்கர் என்பவர் குறிப்பிடத்தகுந்தவர் ஆவார். இறுதியில் ஜஸ்ரத் தோற்கடிக்கப்பட்டுக் குன்றுகளில் ஒளிந்தோடச் செய்யப்பட்டார். 1432இல் மீண்டும் தொல்லைகளை ஜஸ்ரத் அளித்தபோதிலும் துரத்தி அடிக்கப்பட்டார்.

முபாரக்ஷாவின் காலத்திலும் தோயாப்பில் தொல்லைகள் எழுந்தன. 1423இல் கடேகரை நோக்கிப் படையெடுத்துச் சென்றார். கம்பிலா, மேவாட்டி, எடாவா அரசர்கள் அடிபணிந் தனர். பயானுவின் ஆளுநரான முகம்மதுகானும் தோற்கடிக்கப் பட்டார்.

பௌலத் துர்க் பாக்சா என்னும் அடிமை பட்டிண்டாவில் சரண் புகுந்தார். அமீர் ஷேக் அலி என்பவரின் துணையை நாடினார். அமீர் பஞ்சாப், முல்தானம் ஆகிய பகுதி களைக் கொள்ளையிட்டார். அமீர் தோற்கடிக்கப்பட்டு, படையும் சிதைக்கப்பட்டது. 1432இல் முபாரக்ஷா மேவாட்டை நோக்கிப் படையெடுத்துச் சென்று உடன்படிக்கை ஒன்றை மேற் கொண்டார். பஹ்லோல் லோடியைச் சுல்தான் தம் மகனைப் போல் எண்ணியபோதிலும், தீயவர்களின் போதனையால் பஹ் லோல் டெல்லியைக் கைப்பற்ற முயன்றார். ஆயினும் அம் முயற்சி தோல்வியடைந்தது. டெல்லி காப்பாற்றப்பட்ட போதிலும், சையதுகளின் வீழ்ச்சி இப்பாவோ அப்போவோ என்றிருந்தது.

அலாவுதீன் ஆலம்ஷா : முகம்மது இறந்தவுடன் உயர் குடியினர் ஒன்று சேர்ந்து முகம்மதுவின் மகனை அலாவுதீன் ஆலம் ஷா என்னும் பட்டத்துடன் முடிசூட்டினர். அலாவுதீன் ஆட்சியில் அக்கறையற்றவராகவும், தகுதியற்றவராகவும் விளங்கினர். பஹ்லோல் லோடி பதவிக் கிளர்ச்சி ஒன்றினைச் செய்து அலாவுதீனை நீக்கிவிட்டுத் தாமே சுல்தான் ஆனார். பதாவுன் பகுதியை அலாவுதீன் சாகும்வரை ஆட்சி செலுத்திட அனுமதிக்கப்பட்டது. கி. பி. 1451இல் டெல்லிச் சுல்தானியம் லோடி அரசர்களின் கைக்கு மாறியது. கி. பி. 1478இல் வரை பதாவுனில் வாழ்ந்த சுல்தான் மறைந்தார். இவர் மறைவோடு சையதுகளின் ஆட்சி முடிவுற்றது.

2. லோடி மரபினர்

இந்தியாவின் முதல் ஆப்காானியப் பேரரசு : கில்ஜிக்களின் சந்ததியினர் தங்கள் ஆற்றலை நிலைநிறுத்த இயலாதவர்களாக மாறியதன் விளைவாக டெல்லிப் பேரரசு மறைந்து தனித்தனி அரசுகளின் கை ஓங்கிற்று. தக்காணம், குஜராத், மாளவம், ஜான்பூர், வங்காளம் ஒவ்வொன்றும் தனித்தனி சுயேச்சை அரசுகளாயின. சையதுகள் டெல்லிப் பேரரசைக் காத்திட மேற் கொண்ட முயற்சிகள் பலனளியாமல் போயின. இதன் விளைவாகப் பஹ்லோல் லோடியின் தலைமையில் புதிய மரபு ஒன்று ஏற்படலாயிற்று.

பஹ்லோல் லோடியினால் உருவாக்கப்பட்ட இம் மரபு 1451 இலிருந்து 1526 வரை நீடித்தது. பஹ்லோலின் முன்னோர்கள் பிரோஸ் துக்ளக்கின் காலத்தில் இந்தியாவிற்கு வந்தவர்கள். பஹ்லோல் சாமர்க்கண்டின் ஆளுநராக்கப்பட்டார். லாகூரையும் அதனுடன் இணைத்து ஆட்சி செலுத்த அனுமதிக்கப்பட்ட பஹ்லோல் சையதுகளின் காலத்தில் மிக முக்கியமான ஆளுநராகக் கருதப்பட்டார்.

பஹ்லோலுக்கு அரசராகும் வாய்ப்பு 1448இல் கிட்டியது. பஹ்லோலுக்கு இவ் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தவர் அஹம்மதுகான். ஏப்ரல் 19, 1451 அன்று பஹ்லோல் அரசராக ஆனார். எந்த அஹம்மதுகான் வாய்ப்பை ஏற்படுத்தி உதவினாரோ அந்த அஹம்மது சிறை வைக்கப்பட்டார். சுல்தானாகப் பதவியேற்ற பஹ்லோல் தன் நிலையைப் பலப்படுத்தப் படை வீரர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கினார். அவர்களைப் பதவி உயர்வு கொடுப்பதாகக் கூறித் தன் வலையில் இழுத்தார்.

பஹ்லோல் பதவியேற்றதை விரும்பாது ஜான்பூர் ஆட்சியாளர் முகம்மதுஷா ஷார்கி படையெடுத்து வந்து தோல்வியைத் தழுவினார். முகம்மதுஷாவைத் தோற்கடித்த பஹ்லோலின் செயல்கள் அவர்பால் ஒரு மதிப்பை ஏற்படுத்தியதோடு, அவருடைய நிலையைப் பலப்படுத்துவதாக அமைந்தது. மற்ற எதிரிகள் அடங்கி ஒடுங்கினர். 1472இல் பஹ்லோல் முல்தானத்திற்கு எதிராகப் படையை நடத்திச் சென்றார். ஜான்பூருக்கு எதிராகப் பலதடவை போர் நடத்தி இறுதியில் வெற்றிபெற்றார். 1477இல் முகம்மதுஷா இறந்த பின்னர் பதவிக்கு முகம்மதுஷா என்ற பெயருடன் அவர் சமாதான உடன்படிக்கையினை மேற்கொண்டார்.

ஜான்பூரில் புரட்சி ஒன்றினைச் செய்து பதவியைக் கைப்பற்றிய ஹுசைன்ஷாவும் தோற்கடிக்கப்பட்டுச் செல்வாக்கு இழந்தார். இருவருக்குமிடையே பல போர்கள் நடைபெற்றன. ஹுசைன்ஷா பீகாருக்கு ஓடிவிடவே தம் மகனை ஜான்பூர் அரியணையில் ஏற்றினார்.

மதிப்பீடு : நிலையில் தாழ்வடைந்து கொண்டிருந்த டெல்லிப் பேரரசை ஒரு சிறிது காலம் காத்துத் தாங்கி நிறுத்தியவர் என்பதால் பஹ்லோல் வரலாற்றில் உயர்வான இடத்தைப் பெறுகிறார். ஆனால் பஹ்லோலைச் சிறந்த திறமைமிக்க ஆட்சியாளர் என்று கூறிட இயலாது. தனிப்பட்ட வாழ்க்கையில் அவருக்கு முன்னாலே வாழ்ந்தவர்களைவிட எத்தனையோ மடங்கு உயர்ந்தவராக எல்லா வகையிலும் அவர் காட்சியளிக்கிறார். அவருடைய அறப்பண்பு, அனைவரையுமே சமமாக நடத்திடும் இயல்பு ஆகியவை பாராட்டைப் பெறுகின்றன. அரண்மனைப் பிரபுக்களிடையே 'சமமானவர்களில் முதல்வர்' என்று திகழ்ந்தாரே தவிர, மற்றெல்லாரையும்விட உயர்ந்தவர் என்று அவர் எண்ணவில்லை.

சிக்கந்தர்லோடி : பஹ்லோலின் மறைவிற்குப் பின்னர் சிக்கந்தர்ஷா என்னும் பெயரோடு, அவர் தம் மைந்தர் நிஜாம்கான் அரியணை ஏறினார். இவர் உயர் குடியினரால் தேர்ந்தெடுக்கப் பட்டார். தம்முடைய தந்தையைப்போல டெல்லிப் பேரரசின் பெருமையைக் காத்திடவேண்டும் என்ற பேரவாக் கொண்டிருந்தார். இவரும் பல போர்களைச் செய்ய வேண்டியவரானார். பார்பக் என்பப்டும் ரேபாரி ஆளுநர் ஆலம்கானின் தம்பியைப் போரில் புறமுதுகிட்டு ஓடச்செய்து ஜான்பூரைக் கைப்பற்றினார். பின்னர் பிர்பக்ஷானைவத் திறை செலுத்தி தனக்குக் கீழ் சிற்றரச

ராக இருந்து வரும்படிச் செய்தார். அங்கிருந்து சென்று கல்பி, குவாலியர், பயானு, ஆக்ரா ஆகியவற்றின் தலைவர்களை அடி பணியச் செய்து டெல்லிக்குத் திரும்பினர்.

சின்னட்களுக்குப் பின்னர் ஜான்பூரில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான படையைத் திரட்டி இந்துக்கள் கிளர்ச்சி செய்தனர். இக் கிளர்ச்சியில் பார்பக்ஷாவிற்கும் தொடர்பு உள்ளது என்று கேள்விப்பட்ட சுல்தான் அவரைக் கைது செய்யச் செய்தார். சூனரில் ஹுசைன்ஷாவின் உயர் குடியினர் ஒன்று திரண்டு எதிர்த்தனர். அவர்களையும் தோல்வியைத் தழுவச் செய்தார். ஆனால் சூனரைக் கைப்பற்ற முடியவில்லை. ஹுசைன்ஷா 100 யானைகளுடனும் இலட்சக்கணக்கான குதிரைகளுடனும் எதிர்த்துப் போரிட்டுத் தோல்வியுற்றுத் தலைமறைவாகவே வாழ்ந்து மறைந்தார். இங்ஙனம் அவர் பீஹாரைவிட்டுத் துரத்தப்பட்டார்.

ஹுசைன்ஷாவுக்கு அடைக்கலம் தந்த வங்க ஆட்சியாளரை எதிர்த்திட சிக்கந்தர் தம் மகனை அனுப்பி வைத்தார். இருவருமே போர் செய்வதனால் எவ்விதப்பயனும் இல்லை என்பதை உணர்ந்து உடன்படிக்கை ஒன்றினை மேற்கொண்டனர். வங்க அரசன் சிக்கந்தரின் எதிரிகளுக்கு உதவுவதில்லை என்று உறுதியளித்தார். சிக்கந்தரின் படை பீகாரில் சிறிது காலம் தங்கியிருந்தது. அங்குப் பஞ்சம் தோன்றவே அங்கிருந்து ஜான்பூர் சென்றது. அங்கிருந்து படை டெல்லிக்குத் திரும்பியது. பீஹார் முற்றிலும் சிக்கந்தரின் வசப்பட்டது. டிர்கட், சரன் ஆகிய நாடுகளும் வெல்லப்பட்டன. ஆப்கானிய ஆளுநர்கள் அங்கு நியமிக்கப் பட்டனர். ஆனால் அவ் வாப்கானிய உயர் குடியினருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. சில ஆப்கானிய உயர்-குடியினரின் கணக்குகளைத் தணிக்கை செய்ய ஆணையிட்டவுடன் அவர்கள் அதை விரும்பாது எதிர்த்துக் கிளர்ச்சி செய்த போதிலும் அக் கிளர்ச்சிகள் அடக்கப்பட்டன. தீர்மானம் வாய்ந்த ஒற்றர் படை மூலம் அவர்களது நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டன. அவரது பர்மன்கள் எனும் கட்டளைகளை அவர்கள் பின்பற்றும்படி வற்புறுத்தப்பட்டனர்.

ஆக்ரா: ஆக்ரா நகரின் தோற்றத்திற்கு இவரே காரணமாவார். ஆக்ரா உருவாக்கப்பட்டதற்குச் காரணம் இருந்தது. எடாவா, பயானு, கோயில், குவாலியர், தோல்பூர் ஆகிய பகுதிகளில் குடியிருந்த நிலவுடைமையாளர்கள்மீது தனிக்கட்டுப்பாடு செலுத்த விரும்பி 1504இல் இவர் ஆக்ராவைத் தோற்றுவித்தார்.

பின்னர் தம் இருப்பிடத்தை டெல்லியிலிருந்து ஆக்ராவிற்கு மாற்றிக் கொண்டார்.

நார்வார் : (1508) மாளவத்துடன் எப்போதும் இணைந் திருந்த நார்வார் சிக்கந்தர் 1508இல் படையெடுத்தபோது குவாலி யரின் கீழ் இருந்தது. எங்கும் பஞ்சமும், பட்டினியும் இருந்ததால் நார்வார் சரணடைந்தது. இங்கு சிக்கந்தர் இந்து ஆலயங்களைச் சேதப்படுத்தி அவற்றின்மேல் மசூதிகளைக் கட்டிவைத்தார்.

சாந்தேரி : மாளவத்துக்குக் கட்டுப்பட்டிருந்த சாந்தேரி அரசன் சிக்கந்தரின் தலைமைக்குக் கட்டுப்படச் சம்மதித்தார்.

தோல்பூர்: குவாலியரைப் பணியவைக்க எண்ணி அதற்கு உட்பட்டிருந்த தோல்பூரை முற்றுகையிட்டார். தோல்பூர் வீழ்ச்சி யடைந்தது. ஆனால் பணியவில்லை. அதன் அரசர் ராஜாமான் சுயேச்சையாகவே இருந்தார். 1517இல் சிக்கந்தர் இறந்தார்.

ஆட்சி அமைப்பு: பஹ்லோல் லோடியைப்போல் தொடர்ந்து போரில் ஈடுபட்ட போதிலும் சிக்கந்தர் லோடிக்கு ஆட்சி அமைப்பு முறையில் கவனம் செலுத்த வாய்ப்புக் கிடைத்தது. பல்வேறுபட்ட தலைவர்களின் நிலையைப் பலவீனப்படுத்தித் தம் நிலையை உறுதிப்படுத்திக் கொண்டார். உயர் குடியினரின் கணக்குகளைத் தணிக்கை செய்யும் முறையினைப் புகுத்தினர். சிறந்த ஒற்றர்களின் மூலமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்ற செய்திகள் அன்றுடம் உடனுக்குடன் அரசுக்கு எட்டின. வேளாண்மையை விருத்தி செய்ய வேண்டிய வசதி களைச் செய்து தந்த அவர் தானியங்களின்மேல் விதிக்கப்பட்ட வரிகளை நீக்கினர். வணிகர்கள் தங்கள் பணியைச் செய்திட ஊக்கமளிக்கப்பட்டனர். ஏழையெளியவர்கள் என்றென்றும் அரசர்பால் நன்றியுடன் நினைத்திட அரிய திட்டமொன்று தீட்டப்பட்டது.

ஏழைகளின் பட்டியல் ஒன்று தயார் செய்யப்பட்டு அவர் களுக்கு ஆறு மாதத்திற்கு வேண்டிய உணவு அளிக்கப்பட்டது. கைதிகளைச் சில முக்கிய நாட்களில் விடுதலை செய்யும் முறை இருந்தது. கற்றவர்கள் மன்னவரால் போற்றப்பட்டனர். மியான் புவா (Mian Bhua) என்பவர் வட மொழியில் இருந்த மருத்துவ நூலொன்றினைப் பாரசீக மொழியில் பெயர்க்க அரசர் வேண்டிய உதவிகளைச் செய்தார். மன்னர் நாட்டின் வழக்கங் களுக்கு மாறுக எப்போதும் நடந்ததில்லை என 'தர்க்கி தாவூத்' என்னும் நூல் குறிப்பிடுகின்றது. மியான் தஹிர் (Mian Tahir) என்ற கலா வல்லுநரை அவர் ஆதரித்தார்.

ஆட்சித்துறையில் இத்துணைக் கவனம் செலுத்திச் சிறப்புப் பெற்ற போதிலும், சிக்கந்தர்ஷாவின் ஆட்சியில் காணப்பட்ட முக்கியக் குறைபாடு ஒன்று உள்ளது. அது அவரிடம் காணப் பட்ட சமயப்பொறையின்மையே ஆகும். இந்துக்களின் எண்ணங் களை, இதயங்களை நோகும்படி செய்தார். புகழ்மிக்க ஆலயங் களைச் சிதைத்த அவர், அவற்றின்மேல் மசூதிகளைக் கட்டினார். அதுமட்டுமின்றி இந்துக் கடவுளரின் வடிவங்களை இறைச்சி விற்பவர்களிடம் கொடுத்து எடைக் கற்களாகப் பயன்படுத்து மாறு செய்வித்தார். ஜ்வல்முகி ஆலயத்தின் இறை வடிவங் களைச் சிதைத்தார். இந்துக்களை யமுனைக் கரையில் குளித்திட அனுமதிக்க மறுத்தார். முடிதிருத்துவோர் இந்துக்கள் விரும்பும் வகையில் முடிதிருத்தினால் தண்டிக்கப்பட்டனர். இச் செயல்கள் லோடி மரபின்மீது இந்துக்களுக்கு வெறுப்பு கொள்ளச் செய்தது. இவற்றை அக் கால மரபுக்கு ஏற்ப அவர் நடந்து கொண்டார் என்றும் உண்மையான இஸ்லாமியராக நடந்து கொண்டார் என்றும் சிலர் அவரது நடத்தைக்குச் சமாதானம் கூறிய போதிலும் மனிதாபிமான உணர்வின் அடிப்படையில் பார்க்கும் போது அரசர் இந்துக்களைச் சரிவர நடத்தத் தவறிவிட்டார் என்பதே பொருத்தம்.

மதிப்பீடு : சிக்கந்தர் லோடி மனிதர்களின் உள்ள இயல் பினை அறிந்திடும் ஆற்றல் பெற்றிருந்தார். அதுமட்டுமின்றி தாராள மனப்பான்மை படைத்தவராயும் திகழ்ந்தார். இவருடைய இத்தகைய மனப்பான்மை குறித்து எண்ணிறந்த கதைகள் கூறப்படுகின்றன. சிக்கந்தர் லோடி பேராசைக்காரராகவோ அல்லது கஞ்சராகவோ திகழவில்லை. இம் மரபின் மூன்று அரசர் களில் தலைசிறந்தவர் சிக்கந்தர் என்பது சர் உல்ஸ்லி ஹெய்க் எனப்படும் வரலாற்று அறிஞரின் கருத்து.

சிக்கந்தர் லோடி கல்வி, கலைகளைப் போற்றி வளர்த்தவர். கற்றறிந்த பெருமக்களின் மத்தியில் இருந்திடலே தமக்குச் சிறப்பு என்று கருதினார். பாரசீக மொழியினை நன்கு கற்றுத்தேறிய இவர் 'குல்ருகி' என்ற புனைபெயரில் ஏராளமான கவிதைகளைப் பொழிந்துள்ளார். உயர் குடியினரின் அதிகாரங்களைக் கட்டுப் படுத்தி அவர்களது செல்வாக்கைக் குறைத்தார். மக்களுடைய நலனில் அக்கறை கொண்டவராகத் திகழ்ந்தார். பாண்டே என்பார் இவரை ஆரம்பகால இஸ்லாமிய ஆட்சியாளருள் மிகக் கௌரவமான இடத்தைப் பெற்றவர் என வருணிக்கிறார்.

இப்ராஹிம் லோடி : (1517-1526) ஆப்கானிய லோடி அரசு நிலைபெற்றதற்குக் காரணமானவர்களாக விளங்கியவர்கள் உயர்

குடியினர். ஆனால் சிக்கந்தர் லோடிக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த இப்ராஹிம் லோடியின் காலத்தில் ஆப்கானிய அரசரின் போக்கில் மாறுதல் ஏற்பட்டது. எந்த உயர் குடியினரைத் தமக்கு இணையாக பஹ்லோல் லோடி நடத்தினரோ அந்த உயர் குடியினர் கை கட்டி வாய்பொத்தி அரசனின் ஆணையை எதிர் பார்த்து நிற்கும்படி செய்யப்பட்டனர்.

உயர்குடியினர் அரசனைத் தங்களுக்குச் சமமானவன் என்று எண்ணி வந்த நிலையில், அவர்களின் உரிமை தலைக்கனமும், மமதையும் கொண்ட இப்ராஹிமினால் அடக்கப்பட்டது. இப்ரா ஹிமின் காலத்தில் பேரரசு ஓரளவிற்குப் பரந்த அமைப்புக் கொண்டதாக விளங்கிற்று. தந்திரம், எதிர்காலத்தை உணர்ந்து செயல்படும் தன்மை ஆகிய எதுவும் இப்ராஹிமிடம் இருக்க வில்லை. ஆப்கானியப் பிரபுக்களைக் கேவலமாக நடத்தத் தொடங் கியதன் விளைவாக அவர்கள் இப்ராஹிம் என்று மடிவார் என்று ஏங்கத் தொடங்கினர்.

ஜலாலின் கிளர்ச்சி : உயர்குடியினர் அரசனுக்கு எதிராகச் சதிவேலைகளில் ஈடுபட்டனர். இவரது சகோதரரான ஜலாலை ஜான்பூர் அரியணையில் அமர்த்திட சதிகாரர்கள் முயன்றனர். ஜலால் ஜான்பூரின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட போது சிக்கந்தரின் உயர்குடியினரில் ஒருவரான 'கான் ஜஹான் லோடி' இதனை விரும்பாது, ஜலாலை ஆதரித்த மற்ற உயர் குடி யினரைக் கண்டிக்கவே அவர்கள் தம் தவறை உணர்ந்து, ஜலாலை ஜான்பூரிலிருந்து பின்வாங்கும்படி செய்ய கைபத்கான் என் பவரை அனுப்பினர். ஆனால் ஜலால் அதற்கு உடன்படவில்லை.

இப்ராஹிம் தனது சகோதரனைத் தனது போட்டியாளன் எனவும் யாரும் உதவிடக் கூடாது எனவும் ஆணையிட்ட போதிலும், சுல்தானின் மேல் ஆத்திரம் கொண்டிருந்த ஆலம் ஹுமாயூன் ஜலாலுக்கு உதவினர். ஜலாலைக் கொலை செய்ய இப்ராஹிம் ஆணையிட, ஜலால் குவாலியர் அரசரிடம் சரண் புகுந் தார். குவாலியர் கைப்பற்றப் பட்டது. கோண்டுவானாவைச் சேர்ந்த ஜமீன்தார்கள், ஜலாலைக் கைது செய்து அனுப்பி வைத் தனர். அரசரின் ஆணைப்படி ஜலால் வழியில் கொல்லப்பட்டார்.

குவாலியரில் இருந்த ஆலம் ஹுமாயூன், மற்ற உயர் குடி யினர், ஆலமின் மகன் முதலானோர் அழைத்துவரப்பட்டுச் சிறை யிலடைக்கப்பட்டனர். ஆலம் அவமானப் படுத்தப்பட்டதைக் கேள்விப்பட்ட மற்ற உயர் குடியினர் கிளர்ச்சிக்குத் தயாராயினர்.

போரிடப் பெரும் படை ஒன்றினைத் திரட்டிய அவர்களை ஷேக் இர்ஜாபுகார் என்பவர் அமைதிப்படுத்தினார். ஆஸம் ஹுமாயூனை விடுதலை செய்ய வேண்டும் என்பது அவர்களின் கோரிக்கை. அரசர் அதற்கு உடன்படவில்லை. இதன் விளைவாகப் பெரும் போர் ஒன்று நடைபெற்றது. பீகார், காஜிபூர், அயோத்தி முதலிய பகுதிகளின் படைகள் ஒன்று திரண்டமையால் உயர்குடியினர் தோல்வி அடைந்தனர். இதற்குப் பின்னர் இப்ராஹிம் தன் தந்தையின் முக்கிய ஆலோசகரான மியான் புவாவைச் சிறையிலடைத்தார்.

மேவாருடன் போர்: இராணுசங்கா எனப்படும் இராஜபுத்திரனே மேவாரின் தலைவர் ஆவார். இராணு சங்காவிற்கும், இப்ராஹிம் லோடிக்கும் இடையே போர் ஒன்று நடைபெற்றதாகவும் அப்போரில் இராணுவின் படை தோல்வியடைந்ததாகவும் 'தாரீக்கிசலாடினி ஆப்காணு' என்ற நூலில் குறிப்பிட்டுள்ள இச் செய்தியின் உண்மைத் தன்மையைப் பரிசீலித்திட வழியில்லை. ஏனென்றால் பதாவுனி, பெரிஷ்டா போன்ற வரலாற்று அறிஞர்கள் இதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. இராசபுத்திரச் சான்றுகளிலும் இது பற்றிய குறிப்பு இல்லை. எனவே இச் செய்தி உண்மையின்பாற் பட்டதாக இருக்கமுடியாது என்பதே டாக்டர் ஈசுவரி பிரசாத்தின் கருத்து.

உயர்குடியினருக்கு எதிரான இப்ராஹிமின் நடவடிக்கை

உயர்குடியினர் தங்கள் சகாக்களான மியான் புவா, ஆஸம் ஹுமாயூன் ஆகியோருக்கு நேர்ந்த கதியைக் கண்டனர். தௌலத்கான் லோடியின் மகன் திலாவர்கான் அரசரிடம் அனுப்பி வைக்கப்பட்டபோது, அரசனின் ஆணையை மீறி நடந்தவர்களுக்குநடந்த கதியைப் பார்த்துப்பயந்து தப்பி ஓடிவந்து தன் தந்தையிடம் சொல்ல தௌலத்கான் திலாவர்கானைக் காபூலுக்கு அனுப்பிப் பாபரை இந்தியாவின் மீது படை நடத்தி வரும்படிக் கேட்டுக்கொள்ளச் செய்தார். தன்னுடைய நில ஆட்டம் கண்டு போயிருந்த பாபருக்கு இந்தியாவின் மீது படை நடத்துமாறு கிடைத்த அழைப்பு சிறந்த வரப்பிரசாதமாக அமைந்தது. தௌலத்கானின் அழைப்பு முகலாயப் பேரரசு வேரூன்றக் காரணமாய் அமைந்தது.

இப்ராஹிம் லோடியும், பாபரும்: இப்ராஹிம் லோடியும் பாபரும் டெல்லிக்கு அருகிலிருந்த பானிப்பட்டு என்னுமிடத்தில் 1526ம் ஆண்டு நடைபெற்ற போரில் மோதிக்கொண்டனர். பெரும்

படையினைக் கொண்டிருந்த போதிலும் கட்டுப்பாடு நிறைந்த பாபரின் படைகளிடம் இப்ராஹிம் தோற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தியாவின் வரலாற்றின் திருப்புமுனைகளில் ஒன்றாக இப்போர் கருதப்படுகிறது.

மதிப்பீடு : இப்ராஹிம், லோடி மரபின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்த போதிலும் புத்தி சாதுரியமும், வீரமும், ஆற்றலும் மிக்கவராக விளங்கினார். மிக விரைவில் எதிரிகளையும் நண்பர்களாக்கும் பண்பு அவருக்கு அமைந்திருந்தது. இசை ஞானம் மிக்கவர். வீரம் மிக்கவராய் விளங்கியபோதிலும் சிறந்த தளபதியாக விளங்கவில்லை. இப்ராஹிமின் ஒரு சில தவறுகள் தாம் அவர் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தன. அது மட்டுமின்றி பாபர் போன்ற படையெடுப்பாளர்களை எதிர்த்து வென்றிடும் ஆற்றல் அவரிடம் இல்லை.

2. ஆப்காளிய லோடிகளின் ஆட்சி முறை

பஹ்லால் லோடி : பஹ்லால் லோடி சுல்தானாகியபோது மிகப்பெரும் துயர்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அதற்கு மற்றைய ஆப்கானியர்களின் தயவை நாடலானார். இதன் விளைவாக மக்களிடையே அரசர் உயர்ந்தவர் என்னும் எண்ணம் மறைந்து, சமமானவர்களில் முதல்வர் என்னும் கருத்து ஏற்பட்டது. பஹ்லால் லோடி இதன் விளைவாக உயர் குடியினர் அனைவரையும் மிகவும் பொறுப்புடனும், மிக மரியாதையுடனும் நடத்தத் தலைப்பட்டார். அரசனுடைய இறைமையை எப்போதும் வெளிப்படையாகக் காட்டவில்லை. உயர் குடியினருடன் அளவளாவும் போது அவர்களுக்கு மேலாக அரியாசனத்தில் அமராது அவர்களோடு சமமாக அமர்ந்தார். யாராவது ஓர் உயர் குடியைச் சார்ந்தவர் மன்னருடைய அதிருப்திக்கு ஆளானால் அரசர் நேரடியாக அவரிடமே சென்று பேசினார். இது உயர் குடியினரிடையே தாமும் ஆளுகின்ற வர்க்கத்தைச் சார்ந்தவர் என்னும் எண்ணத்தைத் தோற்றுவித்தது. பஹ்லால் லோடி மஸ்நத் அலி என்று அழைத்தபோது தங்கள் நிலை உண்மையிலேயே உயர்வானது என எண்ணினர். இவ்வாறான ஆப்கானியர்களின் போக்கு, அரசருக்குப் பணியாத தன்மை இன அமைப்பு முறைத் தலைமைக்கு (Tribal chief-tancy) வழிகோலியது.

இறைமைப் பலி : பேரரசை நிலைபெறச் செய்வதற்கு வேண்டிய பொருள் வசதியோ, ஆள் பலமோ இல்லாத நிலையில் பிறரைச் சார்ந்திருக்க வேண்டிய நிலைமைக்கு அரசர் தம்மை ஓரளவு தாழ்த்திக் கொண்டார். உறவினர்களின் ஆதரவைப்

பெறவேண்டித் தமது இறைமையைப் பலி கொடுக்க வேண்டிய தாயிற்று. இவ்வாறு அரசர் எல்லோருக்கும் முதல்வராய் இருந்துபோக இப்போது சமமானவர்களிடையே முதல்வர் என்னும் நிலைக்கு வந்தார். ஜான்பூர் சுல்தானுகிய மகமது டில்லியில் முற்றுகையிட்ட போது தமக்கு உதவி செய்வதற்காக இந்தியாவிற்கு வருமாறு ஆப்கானிய உயர் குடியினருக்கு இவர் வேண்டுகோள் விடுத்தார். அவ் வேண்டுகோளில் இறைமை என்பது தம்மோடு பெயரளவில் இருக்கட்டுமென்றும், வெல்லப் படுகின்ற நாடுகளனைத்தும் உயர்குடிப் பிரபுக்களுக்குச் சமமாகப் பிரித்துத் தரப்படும் என்றும் வாக்குறுதி அளித்தார். பஹ்லால் லோடி எல்லா நிலங்களையும், சொத்துக்களையும் தமக்குச் சமமான வர்களிடத்தே பிரித்துக் கொடுத்துவிட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். நிலங்களை உரிமையாக்கிக் கொண்டவர்கள் எவ்வித நிலவரியும் செலுத்தவில்லை என்பதையும் அறிகிறோம்.

உயர் குடியினர் : இதன் விளைவாக இந்தியா முழுவதும் ஆப்கானியத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது அளவுக்கு மீறி உயர் குடியினருக்கு இடம் கொடுக்கப்பட்டதால் அவர்கள் ஒரு சிறிய கட்டுப்பாட்டைக் கூடப் பொறுக்க முடியாத அளவுக்கு சுதந்திர வாழ்வில் பழக்கப்பட்டு விட்டனர். இரத்தம் சிந்துவதின் மூலமாகவே, தாம் வேண்டியதைப் பெற முடியும் என்னும் எண்ணம் அவர்கள் பால் குடிகொண்டது. அரசர் மீதோ அல்லது தாங்கள் வாழ்கின்ற நாட்டின்மீதோ பற்றுக் கொள்வதற்கு மாறுகத் தங்கள் குழுக்கள் அல்லது கூட்டத்தின் மீது பற்றுக் கொண்டனர். முதலில் குழுதான் அவர்களுக்குப் பெரியது. அரசர், நாடு எல்லாம் அதற்குப் பின்னர்தான்.

வாரிசுரிமை : துருக்கியர்கள் வாரிசு பற்றி எவ்வித கொள்கையும் கொண்டிருக்கவில்லை. அடிமைகள், சிறுவர்கள், பெண்கள், முஸ்லீம்களாக மாறியவர்கள், அரை முஸ்லீம்கள் **(half muslims)** யாராயிருந்தாலும் அரசாள அனுமதித்தனர். ஆப்கானியர்கள் இதில் சில மாறுதல்களைச் செய்தனர். தேர்வு முறையே இவர்களிடம் இருந்தது. இன அமைப்பு முறை இருந்தமையால் அரசனைத் தேர்ந்தெடுத்தனர். பஹ்லால் லோடி தேர்ந்தெடுக்கப்பட்டதும் அவ்விதமேதான். பஹ்லால் லோடியின் விருப்பப்படி அவருடைய மகனை அரசோச்ச அனுமதிக்கவில்லை. யார் தகுந்தவர் என்பதை இனத்தவர் கூடித் தீர்மானித்தனர்.

சவால்: மையத்தில் அதிகாரம் செறிந்த ஓரர்ட்சி ஏற்படுவதற்கு வழி இல்லாமல் போய்விட்டது. ஆப்கானியர்களின் சமுதாய

அமைப்பில் மன்னர் பெயருக்கு மட்டுமே தலைவராகக் கருதப்பட்டார். மிகத்திறமையானவர்கள் கூடத் தமது குலத்தவரிடையே ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் ஏற்படுத்த இயலவில்லை. அரசரையே எதிர்பார்ப்பதற்குரிய மனப்பான்மையை உயர்குடியினர் பெற்றனர். பயத்தோடும், பக்தியோடும் மன்னர்க்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக அடங்காப் பிடாரிகளான உயர் குடியினர் அவரது அதிகாரத்திற்கே சவால் விட்டனர். ஆப்கானிய அரச பதவியின் தன்மை இவ்வாறு இருந்ததை அடிப்படையாகக் கொண்டு நாம் டில்லிப் பேரரசிலிருந்த ஆட்சி முறையின் நிறுவனங்களைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

அதிகாரச் செறிவு : டில்லிப் பேரரசு நாடுகளில் ஆப்கானியர்களின் நிலமானியக் கருத்துகளும், இனமுறை அமைப்பும், லோடிகளின் அரசாங்க அமைப்பும், இந்தியப் பின்னணியில் அமைக்கப்பட்ட ஆப்கானிய நிறுவனங்களே யாகும். இன அமைப்பைப் பற்றிய எண்ணங்கள் காரணமாக அரசாங்கமானது முற்றிலும் தனிப்பட்ட மனிதர்களின் சொந்த விவகாரமாயும், நிலமானியக் கருத்துகளின்படி அரசாங்கத்தின் அதிகாரமானது சிதறடிக்கப்பட்டும் இருந்தது. மேற்கூறிய காரணங்களின் விளைவாக அதிகாரம் ஓரிடத்தில் செறியப் பெற்ற ஆட்சிமுறை உருவாவதற்கு வழி இல்லாமல் போயிற்று. அரசர் சமமானவர்களில் முதன்மையானவர் எனக் கருதப் பட்டார் என்பதை ஏற்கெனவே கண்டோம். சுல்தானின் அதிகாரம் குறைக்கப்பட்டுப் பெயரளவிற்கே அவர்கள் இறைமை பூண்டு விளங்கினர். ஆப்கானிய உயர் குடியினரின் அதிகாரத்தையும், செல்வாக்கையும் குறைக்க முயன்று தோல்வி கண்டவர்கள் தம்மையே அழித்துக்கொண்டு, ஆப்கானியப் பேரரசின் அழிவிற்கும் வகை தேடினர். நிலமானிய முறை, இன முறை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த அரசாங்கமே ஆப்கானிய அரசாங்கம். வரம்பற்ற முடியாட்சி என்பது அங்கு இல்லை. ஆக்கத் திறன் கொண்ட மேதைத் தன்மையான எந்தவித அரசியல் நிறுவனத்தையும் அவர்கள் தங்களது சொந்த நாட்டிலிருந்து கொண்டுவரவில்லை. லோடி அரசாங்கத்தில் இன முறைக் கொள்கைகளும் நிலமானியக் கோட்பாடுகளும் இருந்ததோடு டில்லிச் சுல்தான்கள் காலத்து யதேச்சாதிகார மரபுகளும் புகுந்து விட்டன.

கட்டுப்பாடு : அரசர் குடிமக்கள் மீது ஏராளமான கட்டுப்பாட்டையும் அதிகாரத்தையும் செலுத்தி வந்தார். கொள்கையளவிலும், உண்மையிலும் அரசரே நீதியின் ஊற்றுகத் திகழ்ந்தார். நாட்டில் உள்ள நிலம், நீர் அனைத்தும் அவரால் கொடுக்கப்பட்ட அன்பளிப்புகள் என்னும் கருத்தே நிலவியது. அவர்

அரசியல் கௌரவங்களுக்கு ஊற்றுகவும், மதத்திற்குப் பாதுகாப்பாகவும் விளங்கினர். பெரும்பான்மையோர் மதவெறிபிடித்தவர்களாகவே இருந்தனர். இஸ்லாம் மதத்திற்கு புறம்பானவர்களுடைய கோவில்களையெல்லாம் தரைமட்டமாக்கி அடையாளம் தெரியாதவாறு சில மன்னர்கள் செய்தனர். முக்கியமான இந்துக் கோவில்களையெல்லாம் பிரயாணிகளின் தங்குமிடமாகவும், கல் ஸ்தாரிகளாகவும் மாற்றினர்கள். சமுதாயத் துறையிலும், சமயத் துறையிலும் முக்கியமான விஷயங்களைச் சுல்தான்கள் தங்களுடைய அதிகாரத்தைச் செலுத்திய முறையானது ஏற்படுத்தியது. ஆப்கானியர்களின் ஆட்சியானது அரசர்களின் சொந்த யதேச்சாதிகார ஆட்சியாகவே இருந்து வந்தது. சமமானவர்களிடையே ஒரு தலைவர் என்னும் நிலையானது காலடைவில் மாறியது. சிக்கந்தர் லோடியும் இப்ராஹிம் லோடியும் மையத்திலிருந்து கட்டளைகள் பிறப்பித்து எல்லாவற்றையும் வழி நடத்தல் என்னும் முறையினால் ஆப்கானிய இராஜரீகத்திற்கு வலிமையும், கௌரவமும் அதிகரிக்கச் செய்தனர். முடியரசானது காலுக்கு கால் வரம்பற்ற வல்லரசாக மாறிக்கொண்டு வந்தது.

வசீர்: லோடி அரசர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு உதவியாகப் பல அமைச்சர்களிருந்தனர். அவர்களில் உண்மையிலேயே மிகவும் முக்கியமானவர் வசீர் என்பவரேயாவார். வருமானங்கள் பற்றிய காரியங்கள் அனைத்திலும் வசீரே முடிவான அதிகாரம் உடையவராய் விளங்கினர். வருமானத் துறையை வழி நடத்தவும், கட்டுப் படுத்தவும் வசீருக்குத் துணையாயிருந்தவர் திவான் என்னும் அதிகாரியாவார். கணக்கு வழக்குகளைப் பற்றிய பதிவேடுகள் அனைத்தையும், ஜாகீர்கள், மானியங்கள் பற்றிய பல்வேறு பத்திரங்களையும் வைத்துப் பாதுகாத்து வந்த அலுவலகத்தின் தலைவராகத் திவான் விளங்கினர். வருமானத்தைப் பற்றிய வழக்கு அல்லது முறையீடு எதுவாயிருந்தாலும் அவரே உலேமாவின் துணை கொண்டு தீர்த்து வைத்தார். நீதித் துறையின் தலைவராக விளங்கியவர் வக்கீல் என்னும் அதிகாரியாவார். அவர் வசீருக்குக் கீழே அவருக்கு அடுத்தபடியாக அல்லது ஒருவேளை சமமாக அதிகாரம் செலுத்தி வந்தவராவார். பிரபுக்களில் முதலிடம் வகித்தவரும் மிகவல்லமை பொருந்தியவருமான ஒருவரே அப் பதவியைவகித்தார். அவர் தம் முடைய கடமைகளை நிறைவேற்றும்போது, அவருக்கு உதவியாக ஒரு காஜியும், பன்னிரண்டு உலேமாக்களும் இருந்தனர். வருமானம் பற்றிய வழக்குகளில் திவானுக்கு உலேமாக்கள் உதவி புரிந்தனர். ஊரியல், குற்ற இயல் வழக்குகளையும், சமயச் சம்பந்தமான வழக்குகளையும் கொள்கையைத் துறந்தவர் அல்லது

அறநெறி, சமய நெறி முதலியவற்றில் பிசகியவர்கள் பற்றிய வழக்குகளையும் தீர்க்க காஜியும் வக்கீலும் திவானுக்குப் பெரிதும் துணையாக இருந்தனர். சிக்கந்தரின் ஆட்சிக் காலத்தில் முக்தாரி, முட்லக் எனப்படுவோர் ஆட்சி முறையைப் பற்றிய விவகாரங்கள் அனைத்தையும், கல்விமான்களுக்கும், சமய விற்பன்னர்களுக்கும் நிலங்களையும், வேறு பல பரிசுகளை வழங்குவதையும் கவனித்துக் கொண்டனர்.

போர் வீரர்கள் : போர் வீரர்களின் கணக்கெடுப்பையும், அவர்களின் சம்பளப் பட்டுவாடாவையும், பக்ஷி என்னும் அதிகாரி கவனித்துக் கொண்டார். கஜீ:ப் என்பவர்கள் அரசருக்கு அருகிலிருந்து கொண்டு பணிவிடை செய்து வந்தனர். லோடி அரசாங்கத்தின் ஒரு புதுமையான இயல்பு என்னவென்றால் அதிலிருந்த மிக முக்கியமான உயர் குடியினர் யாவரும் மன்னரோடு நெருங்கிய தொடர்புள்ளவர்களாகவும் முக்கியமான காரியங்களில் அவருக்கு ஆலோசனை கூறுபவர்களாயும் இருந்ததே யாகும். திரிபாதியின் கூற்றுப்படி லோடி அரசுரிமையானது ஒரு விதக் கூட்டுத் தலைமையே ஆகும்.

ஆட்சிப் பிரிவு : லோடிகளின் ஆட்சியின்கீழ் சர்க்கார்கள், பர்காணாக்கள் போன்ற பிரிவுகளும் இருந்தன. ஆனால் இப் பிரிவுகளின் பரப்பளவு என்ன என்பது பற்றியும் ஆளுநர்கள் அல்லது நாய்:புக்களின் கடமைகள்யாவை என்பதுகுறித்தும் நாம் உறுதியாக எதையும் அறிய முடியவில்லை. நாய்:ப் என்பவர் உதவி ஆளுநராக, ஆளுநருக்குக் கீழ்ப்பட்டவராக இருந்திருக்கலாம் எனச் சிலர் கூறுகின்றனர். அரசரின் பிரதிநிதியாக விளங்கிய அவர் ஏதாவது ஒரு நிலப்பிரிவை ஆண்டு வந்தவராகவே இருந்தார். ஆளுநர்கள் அமைச்சர்கள் அல்லது அவர்களுக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகள் ஆகிய பலவகையான அதிகாரிகளுள் எவரும் எந்தத் தரத்தைச் சார்ந்தவர்? அவர் பெற்று வந்த ஊதியம் எவ்வளவு? என்பவற்றையெல்லாம் பற்றி எதையும் திட்டவட்டமாகக் கூறுவது இயலாது. ஒவ்வொரு அதிகாரிக்கும் ஒரு ஜாஹீர் அல்லது மானியம் வழங்கப்பட்டதே ஒழிய ரொக்கப் பணமாக ஊதியம் ஏதும் தரப்படவில்லை. ஜாகீர்களை வழங்குகின்ற ஒரு வழக்கமானது இந்த நாட்டில் நன்கு நிலை பெற்றிருந்தது. எனவே அம் முறையினை ஆப்கானியர்கள் அப்படியே ஏற்றுக் கொண்டனர். அக்பரின் காலத்தில் இருந்த மான்சப்தாரி முறையைப் போன்ற திட்டம் ஒன்று இந்நாட்டில் இருந்தது என்று கூறப்படுகிறது.

14. டெல்லிச் சுல்தானிய ஆட்சிமுறை

மன்னர்நிலை — சமயப்பொறை — மைய ஆட்சித்துறை — நயாபீமாம் லிகாத்—திவானி அரீஸ்மமாலிக் — காஜிமாலிக்— வசீர்—புதிய பதவிகள் — மாநில அரசு — வருவாய் — வரி உயர்வு — படைவீரர்கள்—படைகள் — நீதித்துறை — தண்டனைகள் — பிரதேசங்கள் — ஆட்சிப் பிரிவு— கிராமம். சிற்றரசுகளின் ஆட்சிமுறை: அரசரின் பணிகள் — நீதி – தடைகள் — சமயம்—வசீரும் பேஷ்வாவும் — சேனாதிபதி — எட்டு அமைச்சர்கள் — ஊரியல் அரசு—மருத்துவமனை — வரம்பில்லா ஆட்சித்தடை.

1. பேரரசு ஆட்சி

வட இந்தியாவின் ஆட்சி குத்புத்தீன் ஐய்பெக்கின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டது என ஏற்கனவே கண்டோம். 1193ஆம் ஆண்டில் குத்புதீன் டெல்லியைத் தலைநகராகக் கொண்டார். நிலமார்க்கத்தில் வட இந்தியாவுக்கு வழிவிடும் வாயிலாக விளங்கிய டில்லிதான் இந்தியாவின் தலைநகராக இருந்து வரத் தொடங்கியது. குத்புதீன் ஐய்பெக்கினால் தோற்றுவிக்கப்பட்ட அடிமை வமிசம் என்று சொல்லப்படுகின்ற டில்லி சுல்தானிய அரசு முழுமையாகத் தொன்னூறு ஆண்டுகள் ஆட்சி பீடத்தில் இருந்தது. அவர்களுக்குப்பின் டில்லியைக் கைப்பற்றிய கில்ஜிகள் காலத்தில் அதன் பரப்பு இன்னும் விரிவுற்றது. கில்ஜிகளின் ஆட்சி முப்பதாண்டுகள் நீடித்தது. ஆட்சித்துறை அமைப்பில் பல வகையிலும் திருப்பம் ஏற்பட்டது, கில்ஜி வம்சத்து அரசரான அலாவுதீன் கிஜில்யின் காலத்தில்தான். அவர் காலத்தில் தென்னிந்தியா (தக்காணம்) முதன் முதலில் முஸ்லீம்களால் ஆளப்பட்டது. கில்ஜிகளுக்குப்பின் துக்ளக்குகள் ஏறக்குறைய ஒரு நூறு ஆண்டு காலம் ஆண்டனர். அவர்களுகுப்பின்

முஸ்லீம்கள் கடைப்பிடித்துவந்த ஆட்சிக் கொள்கைகள் மாற்றம் பெற்றன. முஸ்லீம் பேரரசு மெல்ல மெல்ல சுருங்கத் தொடங்கியது. நாடு கொஞ்சம் கொஞ்சமாக நலிவுற்று சிதற ஆரம்பித்தது. அது 1398இல் தைமூரின் படையெடுப்பினால் வீழ்ந்தது. வீழ்ச்சி அடைவதற்கு முற்பட்ட காலத்தில் டெல்லி சுல்தானிய அரசில் நிலவிய ஆட்சி அமைப்பு முறைகளை இனிக் காண்போம்.

டில்லி சுல்தானிய அரசு தோன்றி நின்று அழிவுற்ற இரு நூறு ஆண்டு காலத்தில் ஒழுங்காக ஆட்சி முறையை நிறுவப் பல முயற்சிகள் நடைபெற்றன. ஆனால் அவை யாவும் செம்மையற்றனவாயும், பண்படாத முயற்சிகளாகவுமே இருந்தன.

மன்னர் நிலை: டில்லி சுல்தானிய அரசில் மன்னர் ஒரு யதேச்சாதிகாரியாக (autocrate) இருந்தார். தாம் பெற்ற வெற்றியின் மூலமாகவோ அல்லது பரம்பரையாகப் பெற்ற ஓர் உரிமை காரணமாகவோ இந்திய ஆட்சியைத் தாம் பெற்றுள்ளதாகக் கருதிய அவர் தம்மால் வெல்லப்பட்ட நாடுகளின் மீது தமக்குப் பரம்பரை உரிமை உண்டு என்றும், அந் நாடுகளை ஆளக் காலிஃபாவின் ஒப்புதலைத் தாம் பெற்றவர் என்றும் கூறிக் கொண்டார். டில்லி சுல்தானிய அரசர் தம்மால் ஆளப்பட்ட மக்களுக்கு இருவகையில் தோற்றம் அளித்தார். முஸ்லீம் மக்களுக்கு மதக் காவலராயும், மத விசுவாசங்களில் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வராயும் தோன்றினர். ஆனால் முஸ்லீம் அல்லாதவர்களுக்கு வரம்பற்ற வல்லரசராகவும், வெளி நாட்டுப் படையெடுப்பாளரும், அந்நியருமாகவே தோற்றமளித்தார். சுல்தானின் வாயிலிருந்து புறப்பட்ட சொற்கள் எல்லாமே சட்டமாக இருந்த போதிலும், அச் சொற்கள் குர்ஆனில் கூறப்பட்டுள்ள கருத்துகளின் அடிப்படையிலேயே இருத்தல் வேண்டும். குர்ஆனின் கோட்பாடுகளுக்கு முரணுகவோ, புனித சட்டத்திற்குப் புறம்பாகவோ இருத்தல் கூடாது. காலிஃபாவின் பிரதிநிதியாக ஆட்சி செய்தமையால் இஸ்லாமிய சமயத்தை ஒங்கச் செய்வதும், இஸ்லாமிய சமயத்தவரைப் பாதுகாப்பதும் சுல்தானின் கடமை எனக்கருதப்பட்டது. இஸ்லாமிய மன்னர்கள் சமயத்தின் வழியே ஆட்சிபுரிய வேண்டியிருந்தது. அவர்களுடைய கைகளைக் கட்டிப்போட்டது போலாயிற்று சமயத்தின் வழி ஆட்சி சமயக் குருமார்களின் ஆதிக்கத்தை ஒங்கச் செய்து, அரசருடைய அதிகார வரம்பைக் குறைத்தது. எனவே சில சமயங்களில் பொறுமை இழந்த அரசர்கள் குரானின் கட்டளைகளுக்கும், சமயச் சட்டங்களுக்கும் எதிராக நடக்கத் தொடங்கினர்.

சமயப்பொறை : இக் காலத்தில் ஆண்ட சுல்தான்கள் யாரும் எல்லா சமயங்களையும் ஒன்றுகக் கருதுகின்ற மனப்பாங்கினைப் பெற்றிருக்கவில்லை. இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் ஒரே மாதிரியான சமயப்பொறை வழங்கப்படவில்லை. நாட்டில் சில புதிய முறைகளைப் புகுத்தியபோது அலாவுதீன் கில்ஜி அரசியல் அதிகாரத்தைத் தமது கையில் வைத்துக் கொண்டார். செல்வம் அனைத்தையும் சேர்த்து மங்கோலியப் படையெடுப்பை முறியடித்து அதன் மூலமாக உள்நாட்டு அமைதியைப் பாதுகாக்க எண்ணினார். மத விவகாரங்களில் அவர் தலையிட்டுக் கொள்ளவில்லை. அதைப்போலவே சமயத்துறைத் தலைவர்களும் ஆட்சியில் தலையிடுவதை அவர் விரும்பவில்லை. டில்லி சுல்தானிய அரசர்களில் பெரும்பாலோர் சமயமானது அரசின் மீது அதிகமான ஆதிக்கத்தைச் செலுத்துவதாகவே உணர்ந்தனர். சமய வல்லுநர்கள் பரந்த அளவிலேயே நாட்டில் செல்வாக்கையும், அதிகாரத்தையும், செலுத்தி வந்தாலும், திறமையும், தகுதியும் ஒன்றுக வாய்க்கப்பெற்ற அரசர்கள் சிலர் அவர்கள் செலுத்தி வந்த அதிகாரத்தையும், அதிகாரவரம்பையும் கட்டுப்படுத்தும் வகையில் செயலாற்றினர். நாட்டின் நன்மைக்காகவும், நாட்டு மக்களின் நலனுக்கும் மட்டுமே தாம் ஆணைகளை வெளியிடுவதாகவும், அவை சட்டத்திற்கு உடன்பட்டனவா இல்லையா என்பதைப்பற்றி அக்கறை கொள்ளவில்லை என்றும் சுல்தான்கள் சிலர் கூறினர். இத்தகைய மாற்றம் சுல்தான்களிடத்தில் தோன்றியதன் காரணம் சூழ்நிலையே ஆகும். குரானியக் கட்டளைகளுக்குப் புறம்பாகச் செல்லவும் முஸ்லீம் சட்ட நிபுணர்களின் செல்வாக்கைக் கட்டுப்படுத்தவும், தங்களுடைய விருப்பம்போல் ஆணைகளை வெளியிடவும் முயன்றதன் விளைவாக டில்லி சுல்தான்கள் உண்மையில் ஒரு வகையான தனிப்பட்ட யதேச்சாதிகாரத்தை நிறுவவே முயன்றனர் என்பதில் ஐயமில்லை. ஆனால் மிதமான யதேச்சாதிகாரமே செலுத்தினர் என்றே கூறவேண்டும்.

துறைத் தலைவர்கள் : இனி டில்லி சுல்தானிய அரசின் மைய ஆட்சித்துறையைப் பற்றிக் காண்போம். டில்லி மைய அரசின் நிறுவனத்தில் சுல்தானுடைய கட்டளைகளுக்கு நேரடியாகக் கட்டுப்பட்டு இருந்த பல துறைத் தலைவர்கள் இருந்தனர். துறைத் தலைவர்களுக்கும், சுல்தானுக்கும் இடையில் இருந்த உறவு எந்த நிலையான கொள்கையின் அடிப்படையிலும் இருக்கவில்லை. சுல்தான்கள் வல்லமையுள்ளவராக இருந்தால், துறைத் தலைவர்கள் அவர்களுக்குக் கட்டுப்பட்டிருந்தனர். சுல்தான்கள் வலிமையற்றவராக இருந்தால் அவர்கள் துறைத் தலைவர்களுக்குக் கட்டுப்பட்டு நடந்தனர்.

நாயாபி மாம்லிகாத்: நாயாபி மாம்லிகாத் என்பவரே சுல்தானுக்கு அடுத்தபடியாக இருந்த அதிகாரியாவார். அவர் துணைத்தலைவராக விளங்கினர். சில சுல்தான்களின் காலத்தில் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்று அவர் யதேச்சாதிகாரியாக நடந்து கொண்டார். அரசர் வயது வராத சிறுவராயிருந்தால் இடைக்காலப் பாதுகாப்பாளராக அவரே இருந்து ஆட்சியை நடத்தினர். நாட்டின் சேனாதிபதியாகவும் அவர் விளங்கினர். உண்மையான அரசப் பிரதிநிதியாக அவர் விளங்கினர் என்று கூறலாம். ஏனென்றால் சஜ்னவைடுகளின் காலத்தில் அரசருக்கு அடுத்தபடியாக இருந்த வசீர், ஊரியல் (சிவில்) துறைத் தலைவர் களாக மட்டுமே விளங்கினர். ஆனால் நாயாபி இராணுவத் துறைக்கும் தலைமை தாங்கினர். நாயாபிக்கு அடுத்தபடியாக மிக வல்லமையுள்ள அதிகாரியாக அரசாங்கத்தில் மிக முக்கிய மான இடத்தை வகித்தவர் வசீர் என்பவராவார். அவர் மதத் துறைத் தலைவர்களாவும் விளங்கி வந்தார். வசீருக்கு அடுத்த படியாக முக்கிய அதிகாரிகளாக விளங்கியவர்கள் அமைச்சர் களாவர். அவர்களுள் அமீரிஹஜீப் (Amir-I-Hajib), மாலிக்உல் (Malik ul) ஹுஜாப் ஆகிய அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் அரசருக்கு அருகாமையில் இருந்து கொண்டு பணிவிடை புரிந்து வந்தனர். சிலர் அரசினரின் குடும்பப் பணிகளைக் கவனித்துக் கொண்டனர். சிலர் மாநில விவகாரங்களைக் கவனிக்கவோ அல் லது போர்ப்படைகளை ஒட்டிய காரியங்களை மேற்கொள்ளவோ அனுப்பப்பட்டனர். அமீரி ஹஜீப்புடன் அவரது பிரதிநிதியான நாயாபி அமீரி ஹஜீப் (Nayab-I-Amir-I-Hajib) என்பவர் இருந் தார். அவர் அரண்மனைக் காவலரின் தலைவராக விளங்கினர் என எலியட்தாசன் முதலியோரின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம்.

திவானி அரீஸ் மமாலிக்: அமீரி ஹஜிப்புக்கு அடுத்த படியாக வைத்து எண்ணப்படத்தக்கவர் திவானி அரீஸ் மமாலிக் (Diwan-I-Ariz-Mamalik) என்பவர் ஆவார். இவர் போர் வீரர். கணக்கெடுப்புத் துறைக்குத் தலைவராக இருந்தார். அரீஸ் என்பவர் ஒற்றுத்துறையை நன்கு கண்காணித்தலையும், படையில் ஒழுங்குமுறையையும் கட்டுப்பாட்டையும் நிலை நிறுத்துதலையும் செய்து வந்தார். அரீஸிற்குத் துணை அதிகாரி ஒருவர் இருந்தார். இவர்களேயன்றி முஷ்ரிஃபி மமாலிக் (Mushrifi Mamalik) அஷ்ரிஃபி மமாலிக் (Ashrifi Mamalik) என்னும் அதிகாரிகளும் இருந்தனர்.

இந்தப் பதவிகளோடு சுல்தானுடைய ஆணைகளையெல்லாம் எழுதி அரசின் ஆவணங்களைப் பாதுகாத்து வந்த சதர்உல்முல்க்

(Sadr-ul-Mulk) என்னும் பதவியும் சேர்க்கப்பட்டது. நஸீருதின் காலத்தில் சதருல்முல்க் பதவியை வகித்தவரே முஷ்ரிஃபி மமாலிக் அல்லது அஷ்ரீபி மமாலிக் விசாரத் (Wizarat) பதவியையும் வகித்தார் எனக் கூறப்படுகிறது.

காஜி மமாலிக்: (Gagi Mamalik) என்பவர் சமயச் சட்டப்படி நீதி வழங்குவதையும், சமயத்திற்கும், அறப்பணிகளுக்கும் என அர்ப்பணிக்கப்பட்ட நிலங்களையும் நீதிகளையும் நிருவகித்து வந்தார். ஹாஜி (Haji) கதீஃப் (Katif) இமாம் (Imam) ஆகிய மூவரின் பணிகளையும் ஹாஜிகள் செய்து வந்தனர். மேலும் சட்ட சம்பந்தமான எல்லாக் காரியங்களுக்கும் ஹாஜி தலைமை வகித்தார். முக்கியமான நகரங்களிலிருந்து சமயக் கல்லூரிகள் யாவும் ஹாஜிகளின் மேற்பார்வையில் இருந்தன. அமீர்தாட் என்பார் கிரிமினல் வழக்குகளை மட்டும் விசாரிக்கும் அதிகாரியாக இருந்திருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது. நாம் இதுவரையில் பார்த்த அதிகாரிகள் மைய அரசின் அதிகாரிகளே. அவர்கள் மைய அரசு துறைகளை மட்டுமின்றி மாகில அரசு துறைகளையும் கண்காணித்தனர்.

வசீர் பதவியின் தாழ்வு நிலை: அலாவுதீன் கில்ஜியினுடைய காலத்தில் வசீரைப் பற்றி அனைவரும் மறந்துவிட்டனர். மிகச் சாதாரணமான மனிதர்கள் அப் பதவியில் அமர்த்தப்பட்டதால் அது மிகத் தாழ்ந்த நிலையை அடைந்துவிட்டது. அப் பதவியின் செல்வாக்கு, சிறப்பு எல்லாம் குறையக் குறைய வெறும் நீதித் துறைத் தலைவராகவே அவர் மதிக்கப்பட்டார். பிற்காலத்தில் நீதித்துறை திவானி விசாரத்(Divani I-Wizarat) என அழைக்கப் பட்டது. வசீர் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார் இல்தத் மிஷின் காலத்திலிருந்து படிப்படியாக அமைந்த அதிகாரிகளின் கூட்டமொன்று நாட்டில் ஏற்பட்டுவிட்டது. அதில் நாயாபி வசீர் (Nayabi wazir) முஸ்தஃபி, முஸ்ரிஃபி, காஜி நாடார், (Gazi Naadar) பால்லதார் ஆகியோர் அடங்கி இருந்தனர்.

புதிய பதவிகள்: டில்லிச் சுல்தான்களில் இல்தத்மிஷின் காலத்தில் நாயாபி வசீர் (Nayabi wazir) என்னும் புதிய பதவி தோற்றுவிக்கப்பட்டது. பல நாயாபி வசீர்கள் தெலிங்காணா, குஜராத், டில்லி போன்ற இடங்களுக்கு ஆளுநராக நியமிக்கப் பட்டனர். டில்லி சுல்தான்கள் நாட்டில் ஓடுகின்ற ஆறுகள் பற்றி மிகுந்த அக்கறைகொண்டு, நதிகள் படகுகள் ஆகிய வற்றைக் கண்காணித்து வருதற் பொருட்டு ஷஹ்னேகிபாஹர் என்னும் அதிகாரியை நியமித்தனர். ஓடங்களைப் பார்த்துக்

கொள்வதும், சுங்கவரி வசூல் செய்வதும் அவரது முக்கிய கடமைகளாகும். ஜலாலுதீன் கில்ஜியின் காலத்தில் திவானி வாஹீப் என்னும் புதிய பதவியும், அலாவுதீன் கில்ஜியின் காலத்தில் திவானி முஸ்தக்ராஜ் என்னும் புதிய பதவியும் முகம்மது பின் துக்ளக் காலத்தில் திவானி, அமீரி, கோஹி என்னும் புதிய பதவிகளும் ஏற்படுத்தப்பட்டன. இவர்களைத் தவிர சுல்தான்களின் குடும்பங்களோடு தொடர்பு கொண்ட வேறு சில அதிகாரிகளும் இருந்தனர்.

மாநில அரசு : இனி மாநில அரசுத் துறைகள் பற்றிய செய்திகளைக் காண்போம். மைய அரசு விரிவடைந்ததற்கு ஏற்ப மாநில ஆட்சித் துறைகளும் விரிவடைந்தன. மாநில அரசுகளின் போக்கில் யதேச்சாதிகாரத் தன்மையும், மத்திய அரசாங்கக் கட்டுப்பாட்டை வெறுக்கும் இயல்புகளும் காணப்பட்டன. மாநிலத்தின் தலைவராக நயாப் (Nayab) என்னும் அதிகாரி விளங்கினார். அரசரின் பிரதிநிதியாக விளங்கிய அவர் ஜாஹீர்தாராகவும், உயர் குடி மக்களில் ஒருவராகவும் இருந்தார். அவரது ஆட்சிக்குட்பட்ட பெரு நகரங்களில் கொத்தவால்கள் (Kotwal) கதீஃபுகள், காஜிகள் என்னும் அதிகாரிகள் ஆட்சி புரிந்தனர். அதனை மைய அரசின் சிறிய உருவம் (Miniature) எனக் கருதலாம். மைய அரசின் அரிஸ் (Ariz) கஜிஃப், முஷ்ரிஃப், முஸ்தாஃபி போன்ற அதிகாரிகளின் பெயர்கள் மாநில அரசாங்கத்திலும் காணப்பட்டன.

வருவாய் : சுல்தானியர்களின் அரசுக்கு இருவகையில் வருவாய்கிட்டியது. அவ்விருவகைகளைச் சமயச் சார்புடைய வருவாய்களென்றும், சமயச் சார்பிலா வருவாய்களெனவும் அழைக்கலாம். சமயச் சார்புடைய வரிகள் இஸ்லாமியரிடத்திலிருந்து மட்டுமே வசூலிக்கப்பட்டன. அவைகளை ஜஹாத் அதாவது ஒரு பொருளுக்கு ஓராண்டு உரிமையாளராக இருந்தவரிடமிருந்து வசூலிக்கப்பட்டது. இவ் வரிக்கு எனத் தனி கருவூலம் இருந்ததாக அறிகிறோம். ஜிஸியா என்பது இந்துக்கள் மீது விதிக்கப்பட்ட தலைவரியாகும். பெண்கள், குழந்தைகள், முனிவர்கள், இரவலர், கண் தெரியாதோர், உடல் ஊனமுற்றோர் ஆகியோரிடமிருந்து வரி வசூலிக்கப்படவில்லை. பெரோஸ்ஷாவைத் தவிர மற்ற அரசர்கள் பிராமணர்களுக்கு வரிவிலக்கு அளித்தனர் என்று கூறப்படுகிறது.

வரி உயர்வு : அரசுக்கு நிலவரியே மிக முக்கியமான வருவாயாக இருந்தது. வருவாய்த் துறை ஆட்சியில் முக்கிய மாறு

தல்களைச் செய்தவர் அலாவுதீன் கில்ஜியே ஆவார். சமயத்தின் பெயரால் அனுபவிக்கப்பட்டு வந்த இனாம் நிலங்கள் போன்றவை சுல்தானுல் திரும்பப் பெறப்பட்டன. சுல்தானின் பங்கு விளை பொருளில் பாதியாக உயர்ந்தது. வீட்டு வரி, மேய்ச்சல் நிலங்களுக்கான வரிகள் எனவும் சில வரிகள் விதிக்கப்பட்டன. அவருடைய கொள்கைகள் எல்லா சமயத்தவரும் வரிச்சுமையை அனுபவிக்க வேண்டும் என்பதே. இந்து உழவர்கள், கிராமத் தலைவர் ஆகியோர் பெற்றிருந்த சலுகைகளனைத்தையும் அலாவுதீன் அகற்றினார். முகம்மது துக்ளக் தோ ஆப் பிரதேசத்தில் ஐம்பது சதவீதம் வரிகளை உயர்த்தினார். திவானி ஹோகி எனப்படும் புதிய விவசாயத்துறை நிறுவனம் ஒன்று இவர் காலத்தில் ஏற்பட்டது. நிலவரி மட்டுமின்றித் தண்ணீர்த் தீர்வை மூலமும் அரசுக்கு வருவாய் கிட்டியது. குடி மக்கள் மன்னர்க்கு அன்பளிப்புகள் அளித்தனர். யாராவது ஒருவர் சுல்தானைக் காண வேண்டுமாயின் அன்பளிப்போடு சென்று காண்பதே வழக்கமாகும். இம் முறை முகலாயர்கள் காலத்திலும் தொடர்ந்து நிலை பெற்றது.

படைவீரர்கள் : மக்களின் விருப்பப்படி உருவாக்கப்பட்ட அரசாகச் சுல்தானியர்கள் அரசு அமையவில்லை. எனவே அரசைக் காத்திட வலிமை மிக்க படை ஒன்று அவசியமாயிற்று. சில படை வீரர்கள் அரசரின் சொந்தப் பொறுப்பிலும் மற்றவர்கள் உயர் குடியினரின் கட்டுப்பாட்டின் கீழும் இருந்தனர். அரசரிடமிருந்து படையின் எண்ணிக்கையைக் காட்டிலும் உயர் குடியினரின் கட்டுப்பாட்டிலிருந்த படையின் எண்ணிக்கை மிகுதியாய் இருந்தது. எனவே அலாவுதீன் கில்ஜி நிலையான வலுவுள்ள படை அமைத்திட வழிகோலினார். இக் காலத்தில் படையில் வீரர்களைச் சேர்த்திட எவ்வித விதிமுறைகளும் வகுக்கப்படவில்லை. படையில் பல்வேறுபட்ட துருக்கிய இனத்தவரும். தாஜிகள் பாரசீகர்கள், மங்கோலியர்கள், ஆப்கானியர்கள், அராபியர்கள், அபிசீனியர்கள், இந்திய முஸ்லீம்கள், இந்துக்கள் ஆகியோர் இருந்தனர். இவர்கள் எவ்வித விசுவாச அடிப்படையிலும் இல்லாது பணத்திற்காகவே பணிபுரிந்தனர்.

படைகள்: படையில் குதிரைப் படை, காலாட் படை, யானைப் படை ஆகியவை இருந்தன. காலாட்படை வீரர் பாயக் என அழைக்கப்பட்டனர். வில்லாளிகள் தனுக்குகள் என அழைக்கப்பட்டனர். சுல்தான்கள் யானைப் படையிலே தனிக் கவனம் செலுத்தினர். பால்பன் போன்ற சுல்தான்கள் ஐந்நூறு குதிரை வீரர்களுக்கு ஒரு யானை சமம் என்று கருதினர். படையின்

அளவு காலந்தோறும் வேறுபட்டிருந்தது. படை வீரர்களுக்கு ஊதியமும், நிலப்பகுதிகள் ஒதுக்கீடும் இருந்தன.

நீதித்துறை: சுல்தானியர்களின் காலத்தில் நீதித் துறை சீராக செம்மையாக அமைக்கப்படவில்லை. திவானி காஜி என்பவர் மூலம் சுல்தான் நீதி வழங்கினர். திவானி சியாசட் என்னும் தனித்துறை ஒன்றை முகம்மது துக்ளக் உருவாக்கினர் என்று இபின் பதூதா (Ibin Batuta) உரைக்கின்றார். ஒவ்வொரு நகரத்திலும் காஜி என்பவர் மூலம் சுல்தான் நீதி வழங்கினர். வழக்குகளைத் தீர்த்து வைத்ததோடு அனுதை இல்லங்கள், வசதியற்றோர் வாழுமிடங்கள் ஆகியவற்றை மேற்பார்வையிட்டார். மாநில ஆளுநர்கள் காஜியின் பணி சிறந்திட உதவி புரிய வேண்டியிருந்தது. காஜிகள் நேரடியாக மைய அரசினால் பதவியில் அமர்த்தப்பட்டமையால் அவர்கள் ஆளுநர்களின் கட்டுப்பாட்டில் இல்லை. சுல்தான்கள் சட்டத்தை மதித்துப் போற்றினர். சிறப்பாக முகமது பின் துக்ளக் போன்றவர்கள் மிகவும் மதித்து நடந்தனர் என இபின் பதூதாவின் மூலம் அறிகிறோம். வழக்கு மன்றத்தில் காஜி அமர்ந்த போது சுல்தானுக்கு எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டியதில்லை என்னும் நிலை இருந்தது.

தண்டனைகள்: நாட்டின் பாதுகாப்பில் சுல்தான் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். காவல் துறைப் பணிகளைக் கொத்தவால் கவனித்து வந்தார் என்று கண்டோம். குற்ற இயல்துறை மிகவும் கடுமையானது. கடும் தண்டனைகள் வழங்கப்பட்டன. கிராமப்புறங்களிலும் கொத்தவாலின் அதிகாரம் செல்லுபடியாயிற்று. குற்றவாளிகள் தெருக்களில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

பிரதேசங்கள்: அலாவுதீன் கில்ஜி வெற்றி கொண்டபோது மூவகைப் பிரதேசங்கள் இருந்தன. முதலாவது வகை ஏற்கனவே இருந்தவை; அவை இக்தாஸ்கள் எனப்பட்டன. இரண்டாவது வகை புதிதாகக் கைப்பற்றப்பட்டவை ஆகும். மூன்றாவது வகை பிரதேசங்களில் இந்துக்கள் ஆளுநர்களாக இருந்தனர். சுல்தானிய அரசின் உச்சநிலையில் 23 பிரதேசங்கள் இருந்தன. ஒவ்வொரு பிரதேசத்திலும் ஷகிமிதிவான் என அழைக்கப்பட்ட குவாஜா (Khwaja) என்பவர் இருந்தார். கணக்குகளை மேற்பார்வையிட்டுத் தலைநகருக்கு அனுப்பியவர் இவரே. குவாஜா ஆளுநருக்குக் கீழ்ப்பட்டவராக இருந்தாலும் ஆளுநருக்குத் தடையாக விளங்கியவர் இவரே. அரசரிடம்

செய்யப்படும் குவாஜாவின் புகார் ஆளுநருக்குப் பதவி இழப்பைக் கூட உருவாக்கும் என்று கூறப்படுகிறது.

ஆட்சிப் பிரிவு : பதின்மூன்றும் நூற்றாண்டில் இக்தா என்பது ஆட்சித்துறையில் அடிப்படையான ஒரு பிரிவாக இருந்தது. ஆனால் பதினான்காம் நூற்றாண்டில் பிரதேசங்கள் **ஷிக்குகளாகப்** பிரிக்கப்பட்டன. எல்லா இடங்களிலும் அவ்வாறு செய்யப்படவில்லை. தென்னிந்தியா நான்கு ஷிக்குகளாக முகமது துக்ளக்கினால் பிரிக்கப்பட்டது. ஷிக்குகளின் தலைவர் **ஷிக்தார்** ஆவார். இவர் இராணுவத்துறை அதிகாரி தன் ஆட்சிப் பிரதேசத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தல் இவரது பணியாக இருந்தது.

கிராமம் : ஷிக்குகளுக்கு அடுத்த பிரிவு **பர்கானா** என மூர்லாண்டு உரைக்கின்றார். அதற்கு அடுத்தபிரிவு **கிராமம்** ஆகும். கிராமங்களின் ஆட்சி இந்துக்களின் பொறுப்பில் இருந்தது என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் **பஞ்சாயத்து** ஒன்று இருந்தது. வழக்குகள் அங்கே தீர்த்துக் கொள்ளப்பட்டன. **முக்காடம் (Muggadam)** என்னும் அதிகாரிகள் கிராமங்களில் வரி வசூல் செய்தனர். **சௌத்ரி** என்பவர் பொருளாளராகவும் ஆவணக்காப்பாளராகவும் பணியாற்றினார். படை வீரர்களுக்கும் உயர் குடியினருக்கும் நிலங்கள் மானியங்களாகவும் வழங்கப்பட்டன. நிலையில்லாப் படையைச் சார்ந்தவர்கள் ஊதியம் பெற்றனர். மானியங்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டன. தணிக்கை செய்யப்படுவதற்காகக் கணக்குகளைக் கருவூலத்தில் ஒப்படைக்கும்படி கட்டளை இடப்பட்டது. கணக்குகளைத் தணிக்கை செய்யும் பணி கருவூலத்தில் நடைபெற்றது. மிகவும் கவனமாகத் தணிக்கை செய்யப்பட்ட பின்னரும் ஆட்சித்துறையில் ஊழல்கள் பல இருந்தன. கையூட்டுப் பெற்று இல்லாததை இருப்பதாகக் காட்டும் அதிகாரிகள் பலர் இருந்தமையால் படைகளின் வலிமையும் பொது ஆட்சித்துறையின் திறமையும் குறையலாயின.

முடிவுரை : 1398ஆம் ஆண்டில் தைமூரின் படையெடுப்பு, துக்ளக்குகளின் வீழ்ச்சி ஆகியவை டில்லி சுல்தானிய வரலாற்றில் ஒரு குழப்பமான காலத்தைத் தோற்றுவித்தன. மாநிலங்கள் தம்மை ஆண்ட அரசப் பிரதிநிதிகளின் தலைமையின் கீழ்ச் சுயேச்சை பெற்றுச் சுதந்திர நாடுகளாக மாறி ஒன்றுக்கொன்று போரிட்டுக் கொள்ளத் தலைப்பட்டன. இதன் விளைவாக அரசியல் இறைமையானது (Sovereignty) இடம் மாறத் தொடங்கியது.

2. டெல்லிச் சுல்தானியத்தின்கீழ் இருந்த சிற்றரசுகளின் ஆட்சிமுறை

அரசரின் பணிகள்: அரசரே மக்களின் உண்மையான தலைவராகத் திகழ்ந்தார். அரசர் விரும்பினால் எந்த மக்களுடைய சொத்தையும் நிலத்தையும் அவர்களைக் கேளாமலேயே எடுத்துக் கொள்ளும் உரிமை பெற்றிருந்தார். நாட்டிலுள்ள நிலம், நீர் அனைத்துக்கும் அரசரே தலைவராக விளங்கினார். சமயக் காவலர் ஆயினும் பொதுத் தொழுகையைத் தலைமை தாங்கி நடத்துபவராயும், சில வணக்கத்தை வேறுப்பவராயும் விளங்கிய அரசரின் நேரடியான கட்டுப்பாட்டிற்குள் அரசாங்கம் இருந்தது. அவர் பெயரளவில் மட்டுமின்றி உண்மையிலேயே நாட்டை ஆண்டு வந்தார். நாட்டின் படைகளுக்கு அரசரே தலைவர். தளபதிகள் போர்க்களத்தில் மாண்டபோதும், போர் முனையில் தோல்வியுற்றபோதும் அரசரே தலைமை தாங்கிப் படைகளை நடத்திச் சென்றார். ஆட்சித்துறை பற்றிய கட்டளைகளை அவ்வப்போது பிறப்பித்துக்கொண்டிருந்தார். நீதி, போலீஸ், இராணுவம், சமயம் ஆகிய துறைகள் பற்றிய ஆட்சி நுணுக்கங்களைக் கட்டுப்படுத்தி வந்தவர் மன்னரேயாவர். அவரது அமைச்சர்களுக்குச் சொந்தமாக எந்த அதிகாரமும் தரப்படவில்லை. அவர்கள் மன்னரின் கட்டளைகளை நிறைவேற்றுவதையும், ஆட்சித் துறையைக் கண்காணிப்பதையும் கடமையாகக் கொண்டனர்.

நீதி: நீதிக்கும், பெருமைக்கும் அரசர் ஊற்றாகத் திகழ்ந்தார். ஒழுங்குமுறை (**Moral Regulations**) பற்றிய விவகாரங்களில் அவரது தீர்ப்பே முடிவானதாயும் எல்லோரையும் கட்டுப்படுத்தக் கூடியதாயும் இருந்தது. நீதித் துறையைப் பொறுத்தமட்டில் அரசரே முடிவான அதிகாரத்தை உடையவராக இருந்தபோதிலும் உண்மையில் சட்ட விளக்கம் செய்பவர்களின் துணையைக் கொண்டுதான் அவர் தமது இறுதித் தீர்ப்புகளை வழங்கினார். அதைப் போலவே நீதிமன்றங்களில்கூடத் தம்மால் ஆக்கப்படாத சட்டங்களின்படியேயும் தீர்ப்பு வழங்கினர்.

தடைகள்: ஆட்சித்துறை பற்றிய செயல்களில் வரம்பற்ற வல்லாட்சி செலுத்தக்கூடிய நிலையில் அரசர் இருந்தாலும், முழு வல்லாட்சியைச் செலுத்துவதினின்று அவரைத் தடை செய்ய அவரது அதிகாரத்தின்மீது தடைகள் இல்லாமல் இல்லை. மதச் சம்பந்தமான காரியங்களில் அரசருக்கென்று தனிப்பட்ட அதிகாரம் இல்லை. உலேமாக்களும், காஜிகளும் சமய சம்பந்தமான காரியங்களிலும் தனிப்பட்ட அதிகாரத்தைச் செலுத்தினர்.

தாங்கள் ஆற்றுகின்ற செயல்களுக்கு அரசரிடம் பதில் ஏதும் கூறவேண்டிய நிலையில் அவர்கள் இருக்கவில்லை. கொள்கை அளவில் அரசர் சட்டத்தின் ஆட்சிக்குட்பட்டவரே. சட்டத்தை விட உயர்ந்தவராக, மேம்பட்டவராக அரசர் கருதப்படவில்லை. சட்டத்தைப் புறக்கணித்தபோது அரசராயிருந்தாலும்கூடச் சாதாரணக் குற்றவாளிகளைப்போல நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் பலவற்றை நாம் வரலாற்றிலே காண்கிறோம். சட்டக் காவலர் களும் தங்களுக்குமேல் எந்த அதிகாரத்தையும் ஒப்புக்கொள்வ தில்லை என்னும் ஒரு நிலைமையின் விளைவாக நாட்டில் ஒன்றுக் கொன்று சமமான இரு அதிகாரங்கள் தழைத்தன. அது ஒப்பற்ற தனித் தலைமையை அதாவது இறைமை என்று பேசப்படுவதை அரசர் அடைய இயலாதவகையில் செய்யும் தடையாக இருந்தது. சமுதாய நீதி (Social Justice) எங்ஙனம் பெறப்பெற்றது என்பதற்குச் சான்று இது. இதனையே தடைகளும் சமநிலையும் (Checks and Balances) என்று குறிப்பிடுகின்றனர்.

சமயம்: மேற்கூறிய தடை தவிர மற்றொரு தடையும் இருந்தது. அரசன் தான் அடைந்த ஓர் உரிமையானது செல்லு படியாக வேண்டுமானாலும் மக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானாலும் சமயத்தின் சம்மதத்தைப் பெற வேண்டும் என்பது கட்டாயமாகிவிட்டது. கதீட்ப்புகளால் குத்பா ஓதப்பட வேண்டுவது அவசியம் எனக் கருதப்பட்டது. அரசரொருவர் அரியாசனத்தைத் தமக்கே பெறவேண்டுமானால், அதற்குக் குத்பா ஓதப்படுவதென்பது ஒரு தடுக்க முடியாத சடங்காகிவிட்டது. இக் காலப் பகுதி முழுவதையும் ஒன்றாக எடுத்துக்கொண்டு பார்க்கும்போது சமய விற்பன்னர்களும் சட்ட அறிஞர்களும் மன்னர்கள்மீது ஏராளமான ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள் என்பதையும் அரசர்களின் அதிகாரச் செயல் முறையைத் தங்களது விருப்பப்படிக் கட்டுப்படுத்தி வந்தனர் என்பதையும் அறிகிறோம். சமயக் குருமார்களை எதிர்த்த மன்னர் களும் இருந்தனர் என்னும் செய்தியும் கிடைத்துள்ளது.

வசீரும் பேஷ்வாவும்: இனி அரசர்க்குதவிய ஆட்சித்துறை நிறுவனங்களில் முதலில் மைய அரசில் இருந்தவற்றை அறிந்து கொள்வோம். அரசருக்கு ஆலோசனை கூற அமைச்சர்கள் பலர் இருந்தனர். அவர்களுக்குத் தலைவராகத் தலைமை அமைச்சர் ஒருவரிருந்தார். அவர் வசீர் என வட இந்தியாவிலும் பேஷ்வா எனத் தென்னிந்தியாவிலும், அழைக்கப்பட்டார். சிறப்பாக பீஜப்பூர், கோல்கொண்டா, அகமத் நகர் முதலிய நாடுகளில் பேஷ்வா என்றும், குஜராத், காஷ்மீர், வங்காளம் போன்ற இடங்

களில் வசீர் என்றும் அழைக்கப்பட்டார். தந்திரமாக நடந்து கொள்வதிலும், சதி வேலைகளில் ஈடுபட்டு அரசருடைய செல் வாக்கைப் பெறுவதிலும் வல்லவராய் யார் விளங்கினரோ, அவரே தலைமை அமைச்சராக (பேஷ்வா) முடிந்தது. தென்னிந்திய நாடுகளில் பேஷ்வா தானைத் தலைவராகவும் பணியாற்றினர். மன்னரொருவர் உயிரோடு வாழ்ந்தபோதும், அவர் இறந்த பின்பும் வசீர் மிக மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தார். பொதுவாக மற்றவர்களைக் காட்டிலும் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தவராய்த் திறமைமிக்க தளபதியாய்ச் சாமர்த்தியம் நிறைந்த இராஜதந்திரியாய், நல்ல நிர்வாகியாய் இருந்தார். வாரிசு உரிமைப் போராட்டங்களைத் தவிர்ப்பதற்காகச் சில மன்னர்கள் சற்று வழக்கத்திற்கு மாறுகத் தங்கள் உடன் பிறந்தோர்கள் அல்லது மைந்தர்களைத் தலைமை அமைச்சர்களாக வைத்துக் கொள்வது வழக்கம். வசீர் வயதுக்கு வராத அரச பதவிக்கு வர இருக்கின்ற இளைஞருக்குப் பதிலாக இளவரசின் பாதுகாவலராக இருந்து கொண்டு செயலாற்றி வந்த வேளைகளில் அவர் **வக்கீல்** எனவும் அழைக்கப்பட்டார். வசீருக்கு இணையான பதவியாக வக்கீலுஸ் என்னும் பதவி கூறப்படுகிறது.

சேனுதிபதி: வசீருக்கு அடுத்தபடியாக அரசில் குறிப்பிடத் தகுந்தவர் சேனுதிபதியாவார். பொதுவாகச் சேனுதிபதியின் பதவியானது வேறொரு அமைச்சரின் பணியோடு பொருத்தப் பட்டிருப்பது வழக்கம். ஏனென்றால் அக் காலத்தில் ஒவ்வொரு பொதுத்துறை அதிகாரியும், பொதுத்துறை, இராணுவத்துறை எனப் பணிகள் சரிவரப் பிரிக்கப்படாத காரணத்தால், ஒவ்வொரு இராணுவத்துறை அதிகாரியாகவும் பணியாற்றினர். சேனுதிபதி என்னும் அதிகாரியோடு அரண்மனைச் சேவகர்களின் தலைவர் ஒருவர் இருந்தார். அரசரின் மெய்க்காப்பாளருக்கு அவரே தலைமை பூண்டு விளங்கினர். பெரும் பொறுப்பும், பெருஞ் சிறப்பும் கொண்ட அவரிடம் அரச குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது. அவர் **மீர் நௌபத்** அல்லது சரி நௌபத் என்று அழைக்கப்பட்டார். அவரிடத்தில் உயர் குடியினரின் பிள்ளைகளிலிருந்து பொறுக்கி எடுத்த இளைஞர் களும், **பெர்தேதார்கள்** அல்லது குடும்பக் காவலர்கள் என்னும் அதிகாரிகளும் இருந்தனர்.

எட்டு அமைச்சர்கள்: இந் நூற்றாண்டுக் காலத்தில் தென் னாடுகளில் எட்டு அமைச்சர்கள் அடங்கிய அவை ஒன்று இருந்து வந்திருக்கிறது. சர் உல்ஸ்லி ஹேக் என்பார் எட்டு அமைச்சர் களின் பெயர்களைப் பின்வருமாறு குறித்துள்ளார்,

(i) வக்கிலுஸ் சுல்தானத் (Wakil-us-Sultanat) நாட்டின் துணைத்தலைவர்.

(ii) வஸீரிகுல் (Waziri Kull) மேற்பார்வையிடும் அமைச்சர்.

(iii) அமீரி ஜும்லா (Amiri Jumla) நிதி அமைச்சர்.

(iv) வஸீரி அஷ்ராஃப் (Waziri - Ashraf) வெளி நாட்டு விவகார அமைச்சரும், சடங்குகளின் தலைவரும்.

(v) நஸீர் (Nazir) பொருளாதாரத்துறை அமைச்சர்

(vi) பேஷ்வா (Peshwa) நாட்டின் துணைத் தலைவரோடு சேர்ந்து நின்று பணியாற்றியவர். பிற்காலத்தே அப் பதவியும் இவருடையதும் வேறுபாடு இன்றி ஒன்றுகப் பிணைந்துவிட்டன.

(vii) கொத்வால் (Kotwal) முக்கியப் போலீஸ் அதிகாரியும், தலைநகரின் மாஜிஸ்திரேட்டுமாயிருந்தவர்.

(viii) சதரி ஜஹான் (Sadri Jahan) முக்கிய நீதிபதியும், மதம், மதமானியம் பற்றிய அமைச்சருமாக விளங்கியவர்.

ஊரியல் அரசு: (Local Government) ஊரியல் அரசை மாநிலங்களிலும், மாவட்டங்களிலும் அந்தந்தப் பகுதிகளில் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டிருந்த அதிகாரிகளும், நகரங்களில் கொத்தவால்களும் காஜிகளும், கிராமங்களில் ஹவில்தார்களும் நடத்தி வந்தனர். ஆளுநரிலிருந்து ஹவில்தார்வரை அரசின் ஊரியல் அதிகாரிகள் இராணுவ அதிகாரிகளாகவே இருந்தனர். ஆளுநர்கள் அவரவரது மாநிலங்களில் வரி வசூல் செய்து, அதில் வந்த வருமானத்தில் ஒரு பகுதியை ஊரியல் அரசுகளின் செலவுகளுக்காகவும், மற்றொரு பகுதியைத் தமது அரண்மனைச் செலவுகளுக்கென்றும், மூன்றாவது பகுதியைக் குதிரைப்படை வீரர்களுக்காகவும் ஒதுக்கி வைத்தனர். உள் நாட்டு அமைதியைப் பாதுகாக்கச் சில அரசர்கள் தனிப் போலீஸ் படையை நிறுவினர். போலீஸ் அதிகாரிகள் கடமை தவறினால் அரசு பொறுப்பேற்றுக் கொண்டது. மாநிலங்களை ஆண்டு வந்த ஆளுநர்கள் திருடர்களையும், வழிப்பறி செய்வோரையும் அறவே ஒழிக்க முயன்றனர்.

மருத்துவமனை: ஒரு சில அரசர்கள் குடிமக்களின் ஒழுக்க நலனைப் பேணுவதில் பெரிதும் அக்கறை காட்டினர். வறியோர்க்கென மருத்துவ மனைகளைக் கட்டி அங்கு இந்துச் சமயத்தைச் சார்ந்த மருத்துவர்களை மட்டுமின்றி முஸ்லீம் மருத்துவர்களையும்

நியமித்துச் செலவுகளைச் சமாளிக்க நிலங்களை மானியங்களாக வழங்கினர். சில மன்னர்கள் யாவருக்கும் சமநீதி வழங்கப்படத் தனிப்பட்ட சட்டங்களின் தொகுதி (Code) ஒன்றை ஏற்படுத்தி அதைச் செப்பேடுகளில் பொறிக்கச் செய்து பொதுச் சந்தைகளிலும் நீதி மன்றங்களிலும் அவற்றை வைக்குமாறு செய்தனர்.

வரம்பிலா ஆட்சித் தடை : முஸ்லீம் மன்னர்கள் கொள்கை அளவில் நாட்டிலுள்ள நிலம், நீர், உடைமை ஆகிய எல்லாவற்றிற்கும் அதிபதிகள் என்றாலும் உள்நாட்டுத் தலைவர்களின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களைத் தமக்குச் சொந்தமாக ஆக்கிக் கொள்ளத் துணிந்ததில்லை. நாட்டின் வெவ்வேறு பாகங்களில் பொதுமக்களின் நன்மதிப்பையும், விசுவாசத்தையும் பெற்றிருந்த இராயர்கள், இராணுக்கள், மண்டலிக்குகள், தேசாய்கள், இராஜாக்கள், பாளையக்காரர்கள் என்று பலவிதமாக அழைக்கப் பட்டவர்கள் அதிகாரத்தைச் செலுத்தி வந்தமையானது இக் கால முஸ்லீம் மன்னர்களின் வரம்பிலா ஆட்சிக்குப் பெருந்தடையாக மட்டுமின்றி, இஸ்லாமின் சட்டமானது நாடெங்கும் பரவுவதற்கும் தடையாக இருந்தது. எனவே சட்டபூர்வமான இறைமையானது இராணுவ பலத்திற்குத் தக்கபடி செலுத்தப்பட்டது. இக் காலத்தில் ஒரே மாதிரியான சட்ட முறைமையோ, நீதி முறைமையோ அல்லது நீதித்துறை நிறுவனமோ இல்லை.

15. டெல்லிச் சுல்தானியர்களின் காலத்திய சமூக, பொருளாதார வாழ்க்கை, கலை, இலக்கியம்

கிராம மக்களின் நிலை — பாதுகாப்பு — நகரமக்கள் — இரு பெரும் பிரிவு — பொருளாதார நிலைமை — கட்டடக்கலை — ஜான்பூர் அரசர்கள் இலக்கியங்கள் — வட மொழி — பாரசீகம் — இந்துக்களின் பங்கு.

டெல்லி சுல்தானியர்களின் காலத்திய மக்களின் வாழ்க்கை முறையினை அறிந்துகொள்ளுதல் சாலச் சிறப்புடையதாகும். ஏனெனில் மக்களின் வாழ்க்கையில் பல்வேறு மாறுதல்கள் இக் காலத்தே ஏற்பட்டன. இதுவரையில் இந்திய மண்ணில் வாழ்ந்த மக்கள் இந்துக்களாயினும், சமணர்களாயினும் பௌத்தர்களா யினும் இந்திய நாட்டைச் சேர்ந்தவர்கள். எனவே அவர்தம் பண்பாடு ஓரளவிற்கு ஒத்ததாக இருந்தது. ஆனால் இப்போது புதிய பண்பாடு ஒன்று இந்தியப் பண்பாட்டில் வந்து கலந்தது. அதன் விளைவாகச் சமூகப் பொருளாதார வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதல்கள் என்ன என்பதை ஆராய்வோம்.

கிராமமக்களின் நிலை : மக்கள் நகரங்களிலும் கிராமங் களிலும் வசித்தபோதிலும் கிராமங்களில் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை நகரங்களில் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கையை விட அதிகமாகவே இருந்தது. கிராமங்கள் நிறைய இருந்தமை யால் பெரும்பாலான மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டனர். தொன்று தொட்டு வேளாண்மையில் என்ன முறையினைக் கடைப் பிடித்து வந்தனரோ அம் முறையே கடைப்பிடிக்கப் பட்டாலும் விளைச்சல் அதிகமாக இருந்தது. உணவு விஷயத்தில் தன்னி றைவு ஏற்பட்டிருந்தது என்று கூடக் கூறலாம். ஆயினும்

வானம் பொய்த்துப் பூமி வழங்காமலே வறுமை தாண்டவமாடிய வளமற்ற காலங்களும் உண்டு. மக்களின் அடிப்படைத் தேவை யான உணவில் தன்னிறைவு ஏற்பட்டதுபோன்று, உறைவிடம் பெறுவதிலும் போதிய வசதிகள் இருந்தன. கிராமப் புறங்களில் வாழ்ந்த மக்கள் ஓலைக் குடிசைகளில் வாழ்ந்தனர். நகர்ப் புறங் களில் வாழ்ந்தவர்கள் கட்டிடங்கள் கட்டி வாழ்ந்தனர்.

கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் அவர்களுக்குப் பாது காப்பு இருந்தது. ஏனென்றால் கூட்டுக் குடும்ப வாழ்க்கையினை அவர்கள் மேற்கொண்டு இருந்தனர். குடும்பத்தில் சற்று பின் தங்கியிருந்தோரையும் உடல் நலமற்றவர்களையும் அதன் ஏனைய உறுப்பினர்கள் சேர்ந்து பாதுகாத்தனர். கிராம மக்கள் தங்கள் வழக்குகளைப் பஞ்சாயத்துக்களிலேயே தீர்த்துக் கொண்டனர். கிராம மக்கள் வாழ்க்கை மகிழ்ச்சி நிரம்பியதாய் இருந்தது. அவ்வப்போது விழாக் காலங்களில் ஆடல் பாட லுடன் வாழ்க்கையை நடத்தினர்.

நகர மக்கள் : சுல்தானியர்களின் காலத்தில் ஏராளமான நகரங்கள் இருக்கவில்லை. டெல்லி, ஜான்பூர், லாகூர் போன்ற சில நகரங்களே இருந்தன. நகர மக்களின் வசதிக்காகப் பொதுக் குளியல் இடங்கள் அங்காடிகள் முதலியன இருந்தன. மாடி வீடுகள் குறைவாக இருந்தன. உயர் குடியினர் மட்டுமே மாடி வீடுகளில் வசித்தனர் என்று கூறலாம். உயர் குடியினரிடத்துச் செல்வ வசதி நிரம்பக் காணப்பட்டமையால் ஆடம்பரமாகச் செல வழித்தனர். மது, மங்கை என மனம் போன வழிகளில் வாழ்க்கை நடத்தினர். உயர்குடியினர் கலாச்சார உணர்வுகொண் டவர்கள், பொழுது போக்குகளில் செல்வத்தைச் சீரழித்த போதிலும் கலை, இலக்கியம் ஆகியவற்றையும் அவர்கள் போற்றி வளர்த்தனர். நகரங்களில் உயர் குடியினரைத் தவிர நடுவர்கள், சமய ஞானிகள், அறிஞர்கள், தத்துவ ஞானிகள், உலோமாக்கள், ஷேக்குகள், சூபிகள், பண்டிதர்கள், யோகிகள் ஆகியோரும் வாழ்ந்தனர்.

இரு பெரும் பிரிவு : சுல்தானியர்களின் காலச் சமுதாயம் இரண்டே பிரிவுகளாகத்தான் பிரிக்கப் பட்டிருந்தது. இன்றைய நாளில் இருப்பதுபோல் செல்வர், நடுத்தர வர்க்கத்தினர். ஏழைகள் என்று பிரிவுகள் இல்லை, நடுத்தரவர்க்கத்தினரே இச் சமுதாயத்தில் இல்லை என்று கூறப்படுகிறது. வசதி படைத்த வர்கள், வசதியில்லாதவர்கள் என்ற இரு பிரிவுகளே இருந்தன. வசதியான பிரிவில் அரண்மனையைச் சார்ந்தவர்கள் இருந்தனர்.

மற்ற எல்லோம் வசதியற்ற பிரிவைச் சார்ந்தவர்களாகவே கருதப்பட்டனர். இபின் பதூதா, அப்துல் இரசாக் போன்ற வர்கள் இவ் விருபிரிவினருக்குமிடையே காணப்படும் பெரும் வேறுபாட்டை எடுத்துக் காட்டுகின்றனர்.

பெரும்பாலான முஸ்லீம்கள் இந்துக்களாக வாழ்ந்து பின்னர் முஸ்லீம்களாக மாறியவர்கள். அப்படி மாறிய இந்துக்களே தீவிரவாதிகளாகக் காணப்பட்டனர். இவர்களே இந்துக்கள் மீது நிகழ்த்தப்பட்ட கொடுங்கோன்மைக்கு ஆதரவாளர்களாய் இருந்தனர். இவ்வாறு முஸ்லீம்களான பலர் ஏழைகளாய் இருந்த போதிலும், தம்மை உயர்வானவர்களாகக் கருதிக்கொண்டனர். இந்தியாவில் வாழ்ந்த முஸ்லீம்கள் இரண்டு பிரிவாக பிரிந்திருந் தனர். ஒரு பிரிவினர் தீவிர வாதிகள் அல்லது சுன்னி முஸ்லீம்கள், மற்றொரு பிரிவினர் ஷியாக்கள். டெல்லிச் சுல்தான்கள் சுன்னி முஸ்லீம் பிரிவைச் சார்நதவர்களாகவே இருந்தனர். சிந்து, முல்தானம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த வர்கள் ஷியாக்கள் எனப்பட்டனர். இவர்கள் சிந்துவை அராபி யர்கள் கைப்பற்றியபோது அவர்களுடன் வந்தவர்கள்.

சுன்னி முஸ்லீம்களுக்கும், ஷியாக்களுக்குமிடையே விரோத உணர்வே காணப்பட்டது. ஷியாக்களோ, இந்துக்களைப் போலவே கருதினர். இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள் என்ற மூவகைச் சமயப் பிரிவினர் இருந்தனர். பௌத்த சமயம் ஐபெக்கின் துணை யாளான பக்தியார் கில்ஜியினால் அழிந்தது. இந்துக்கள் எதிர்ப் பால் நலிவுற்றிருந்த சமணம் மேலும் பரவிட இயலாமல்போயிற்று முஸ்லீம்களாகப் பல்வேறு காரணங்களால் மத மாற்றம் செய்து கொண்ட இந்துக்கள், மீண்டும் இந்துச் சமயத்திற்கு வர விரும் பினால் அவர்களை இந்துச் சாத்திரம் அனுமதிப்பதில்லை. அதோடு பிற சமயத்திற்கு மாறினாலும், சமயக் கொள்கை மாறுமே தவிர சாதி மாறாது. ஏனென்றால் மக்கள் பிறப்பிலேயே ஒவ்வொரு சாதியினராகப் பிறந்து விடுகிறார்கள் என்னும் எண்ணம் மதம் மாறியவர்களிடையேயும் நிலவியது. இந்துக்களாயினும் முஸ் லீம்களாயினும் சாதிப் பழக்க வழக்கங்கள் அவர்களிடையே தொடர்ந்தன என்பது குறிப்பிடத் தகுந்த அம்சமாகும்.

இந்துக்களில் பிராமணர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியமையால் உயர்வாக எண்ணப்பட்டனர். பிராமணர் களைப் போலவே முல்தானத்திலிருந்து ஷியாக்களைத் துரத்திட கஜினி எண்ணங் கொண்டார். ஆனால் அம் முயற்சியில் அவர் வெற்றி பெறவில்லை. அடிமை வம்சம் என்றழைக்கப்பட்ட வம்

சத்தின் ஆட்சியின் போது, ஓரளவிற்கு வீயாக்களின் வலிமை முற்றியது. இரஸியா பேகத்தின் ஆட்சியின்போது அவர்கள் ஒன்று திரண்டு கிளர்ந்தெழுந்தனர். ஆயினும் அவர்கள் முயற்சி வெற்றி பெறவில்லை. இதன் பின்னர் சுன்னி முஸ்லீம்களின் மேலாண்மையை எதிர்த்திடும் ஆற்றல் இன்றிப் போயினர்.

இந்துக்களில் எண்ணிறந்த சாதி வேறுபாடுகள் காணப் பட்டன. பழைய பெரிய சாதிகள் மட்டுமின்றிப் புதுக் கும்பல்கள் புது உட்சாதிகளாகத் தோற்றமளித்தன. இந்துச் சமுதாயத்தி லிருந்த சாதிகளின் எண்ணிக்கை வளர்ந்துகொண்டேபோயிற்று. இந்துப் பெண்களும் முஸ்லீம் பெண்டிரைப் போல் பர்தா என்னும் முகத்திரை அணியும் வழக்கத்தைக் கைக்கொண்டனர். அவ் வாறே மூக்குத்தி அணியும் வழக்கமும் கைக் கொள்ளப்பட்டது. சத்திரியர்களுக்கு சமுதாயத்தில் செல்வாக்கு இருந்தது. வைசியர்கள் வாணிபம், வர்த்தகம், வேளாண்மை ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தனர். தாழ்ந்த இனத்தவர் என்ற பிரிவில் தச்சர்கள் கொல்லர்கள் போன்றவர்கள் அடங்கியிருந்தனர். பெண்கள், நல்ல முறையில் நடத்தப்பட்ட போதிலும் சமுதாயத்தில் ஆண்களே மதிப்பும் பெற்றனர். இந்துக்களிடத்தில் உடன் கட்டை ஏறுதல், குழந்தை மணம், தீக்குளித்தல், பெண் மகவுக் கொலை ஆகிய தீய பழக்கங்கள் காணப்பட்டன.

இந்துக்களும், முஸ்லீம்களும் சமய உணர்வினால் வேறுபட்டு வாழ்ந்தபோதிலும் இருவருக்குமிடையே பெரும் பிளவு இருந்தது என்று கூறிவிட முடியாது. இந்துக்கள் சகிப்புத் தன்மையை வளர்த்துக் கொண்டனர். எதையும் தாங்கும் மனப்பக்குவம் பெற்றனர். இந்துக்களும், முஸ்லீம்களும் ஒன்று கலந்திடும் வாய்ப்பு புதிதாகச் சமய மாற்றம் பெற்றவர்களால் ஏற்பட்டது. இஸ்லாமியர்களாக மாறியபோதிலும், அவர்கள் உறவினர்களைப் பிரிந்து வாழ இயலாது. அதுமட்டுமின்றி இந்துக்களுடைய விழாக்களில் முஸ்லீம்களும், முஸ்லீம்களுடைய விழாக்களில் இந்துக்களும் கலந்து கொண்டனர் இதனால் விழாக்களின் தன்மையே மாறுதல் பெற்றது எனலாம். இந்துக்களின் கொண் டாட்ட முறைகள், முஸ்லீம்களிடமும், முஸ்லீம்களின் கொண் டாட்ட முறைகள் இந்துக்களிடமும் பரவியது.

சூபிக்கள் எனப்படும் மற்றொரு முஸ்லீம் பிரிவினர் பாரசீகத் திலிருந்து பத்தாம் நூற்றாண்டில் துருக்கியர்களுக்கு முன்னரே இந்தியாவிற்கு வந்தனர். இந்தியாவில் குரானைத் தவறாக இந்திய முஸ்லீம் உலேமாக்கள் மொழி பெயர்த்தனர் என்பது அவர்கள்

கருத்து. சூபிக்கள் செல்வாக்கு பெற்றிருந்தால், சமயப் பொறை உணர்வு அற்றவர்களாக டெல்லி சுல்தான்கள் இருந்திருக்க மாட்டார்கள் என்று கருதப்படுகின்றது.

டெல்லிச் சுல்தானியர்களின் காலத்தில் அடிமை முறை வழக்கில் இருந்தது. ஆண்களும் பெண்களும் ஆட்சியாளர்க ளாலும், உயர் குடியினராலும் அடிமைகளாக்கப்பட்டனர். அரண் மனையில் ஏராளமான அடிமைகள் இருந்தனர். அவர்களுக் கென்று உரிமைகள் ஏதும் கிடையாது. சிலர் அடிமைத் தளையி லிருந்து விடுவிக்கப்பட்டு உயர் பதவிகளில் நியமிக்கப்பட்டனர். சமுதாய வாழ்க்கையில் அடிமை முறை ஒரு குறைபாடுள்ள அம்சமாகவே கருதப்பட்டது.

பொருளாதார நிலைமை: நீண்ட நெடுங்காலமாக இந்தியா செல்வச் சிறப்புமிக்க நாடாகவே திகழ்ந்து வந்துள்ளது. இந்தியச் செல்வம்தான் அந்நியர்களை வாவென்று கூவி அழைத் தது என்று பார்த்தோம். எனவே படையெடுத்து வந்தவர்கள் இந்துக்களிடமிருந்தும், ஆலயங்களிலிருந்தும் ஏராளமான செல்வத்தைக் கொள்ளை அடித்தனர். அவ்வாறு கொள்ளை கொண்ட செல்வங்களைத் தமக்கு என்று வைத்துக் கொள்ளாது ஆடம்பரமான வழிகளில் செலவழித்தனர். இவ்வாறு செலவழிக் கப்பட்ட செல்வம் பொதுச் சந்தைகளில் புரளத் தலைப்பட்டது. ஏராளமான செல்வம் கையில் இருந்தமையால் ஆடம்பரப் பொருட் களைப் பெற உயர் குடியினர் விழைந்தனர். அவர்களின் தேவையை நிறைவுசெய்யும் வண்ணம் பல உற்பத்தி நிலையங்கள் தோன்றின.

தனியார் துறையைச் சார்ந்த உற்பத்தி நிலையங்கள் மட்டு மின்றி அரசாங்கத்தைச் சேர்ந்த உற்பத்தி நிலையங்களும் ஏற் பட்டன. தொழில் நிலையங்களில் உற்பத்தி பெருகிட அரசு உதவி செய்தது. சுல்தானியர்களின் காலத்தில் பொருள் உற் பத்தி அதிகம் இருந்தது. மார்க்கோ போலோ போன்றவர்கள் எழுதி வைத்துள்ள குறிப்புகளே இதற்குச் சான்று பகர்கின்றன.

குஜராத்தில் உயர்ரகப் பருத்தித் துணிகள் நெய்யப்பட்டன. வங்காளத்தில் அழகிய, சிறப்பு மிக்கத் துணி வகைகள் நெய்யப் பட்டன. அது மட்டுமின்றி வங்காளத்திலிருந்து அழகிய பட்டுக் கைக்குட்டைகள், வண்ணம் தீட்டப்பட்ட பாத்திரங்கள், ஜரிகை வேலைப்பாடு நிரம்பப்பெற்ற குல்லாய்கள், கத்தி வகைகள் முதலியன ஏற்றுமதி செய்யப்பட்டன. வங்காளமும், காம்பேயும்,

சிரியா, அரேபியா, பாரசீகம் போன்ற இடங்களுக்கு பருத்தி, பட்டுத்துணிகள் ஏற்றுமதி செய்தன.

இந்தியக் கைவினைஞர்கள் அழகிய ஆபரணங்களை உருவாக்கும் ஆற்றல் பெற்றவர்களாக விளங்கினர்கள். தொடர்ந்து பரம்பரை, பரம்பரையாகக் கைத்தொழிலில் ஈடுபட்டிருந்தமையால் அவர்கள் அதில் தேர்ச்சி பெற்றனர். தொழில் வளம் பெறுவதற்குச் சிறந்த போக்குவரத்துச் சாதனம் தேவை. அத்தகைய சிறந்த போக்குவரத்துச் சாதனங்கள் நாட்டில் இருந்தால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை எளிதில் வணிகர்கள் வெவ்வேறிடங்களுக்குக் கொண்டு சென்றனர். பெரும்பாலும் இந்துக்களே வாணிபம் செய்தனர். இந்து வியாபாரிகள் ஏராளமான ஆபரணங்களை அணிந்திருந்தனர்.

வெளிநாட்டு வாணிபம் தரைமூலமாகவும், கடல் மூலமாகவும் நடைபெற்றது. தெற்கு ஆசியா, கிழக்கு ஆசியா, மேற்கு ஆசியா ஆகியவற்றிலிருந்து வந்த பொருட்களுக்கு இந்தியா அங்காடியாக விளங்கிற்று. இந்தியாவிலிருந்து நகைகள், முத்துக்கள், யானைத் தந்தங்கள், சந்தனம், அகில், இலவங்கம், மிளகு, கற்பூரம், துணி வகைகள் முதலியன ஏற்றுமதி செய்யப்பட்டன. துருக்கியிலிருந்தும், அரேபியாவிலிருந்தும் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. இந்தியாவிற்கு அயல் நாடுகளிலிருந்தும் வாணிபத்தின் மூலமாகச் செல்வம் வந்து குவிந்தது. இவ்வாறு செல்வம் வந்து சேர்ந்ததன் விளைவாகக் கலைகளில் தங்கள் கவனத்தைச் சுல்தான்கள் திருப்பினர் இந்தியர்கள் கடல் வாணிபத்தைச் சிறப்பாக நடத்தினர். சிறந்த கப்பல்களைக் கட்டி அவற்றின் மூலமாகக் கடல் வாணிபத்தைச் சிறப்புற நடத்தினர்.

சுல்தானியர்களின் காலம் செல்வச் சிறப்புமிக்க காலம் ஏராளமான செல்வம் எல்லோருடைய கையிலும் பரந்து காணப்படவில்லை. ஒரு சிலரிடமே குவிந்து இருந்தது. ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமிடையே பெருத்த வேறுபாடு காணப்பட்டது.

டெல்லிச் சுல்தானியர்களின் கலையும் இலக்கியமும்

டெல்லிச் சுல்தானியர்களின் கட்டிடக்கலை முழுமையாக இஸ்லாமியக் கலையின் அடிப்படையிலே அமைந்தது என்று கூறிவிட முடியாது. இந்து, முஸ்லீம் கலைகளின் இணைந்த அமைப்பே முஸ்லீம்களின் கட்டிடக் கலையாக இந்தியாவில் காணப்பட்டன. இந்தியக் கலையின் சாயலும், இஸ்லாமியக் கலை

யின் சாயலும் இணைந்து உருவானமையால் அதனை **இந்திய இஸ்லாமியக் கலை** என்று அழைக்கின்றனர். இக் கட்டிடக் கலையினை எடுத்துக் கொண்டு அதில் எந்த அளவிற்கு, இந்தியக் கலையின் சாயல் பிரதிபலிக்கிறது, எந்த அளவிற்கு இஸ்லாமியக் கலையின் கூறுபாடுகள் உள்ளன என்று பிரித்து ஆராய்வது கடினம். ஏனென்றால் இந்தியாவின் பல பகுதியிலும் நிலவிய வடிவங்களைத் தம் கற்பனைத் திறனுக்கு ஏற்ப அவர்கள் எடுத்துக் கொண்டனர்.

இந்தியக் கலையின் சாயலும், இஸ்லாமியக் கலையும் இணைந்தமைக்குக் காரணம் இல்லாமலில்லை. முதலாவது காரணம் இஸ்லாமியர்கள் தாங்கள் உருவாக்கிய கட்டிடங்களுக்கும் கலை வடிவங்களுக்கும் இந்தியத் தொழிலாளர்களையும் சிற்பிகளையும் பயன்படுத்தியதேயாகும். இந்தியாவில் அவர்கள் மேற்கொண்ட பணிகளுக்கு ஏராளமான சிற்பிகள் கிடைத்தனர். அதுவும் குறைந்த ஊதியம் கொடுத்தே அவர்களிடமிருந்து வேலைவாங்க முடியும் என்ற நிலையும் இருந்தது. அவ்வாறு பணியாற்றிய இந்தியக் கலைஞர்கள் தங்களுடைய குருதியோடு, எண்ணத்தோடு கலந்திருந்த இயல்புகளைத் தம்மையறியாமலேயே தம் கலைப் படைப்புகளில் புகுத்தினர். இரண்டாவதாக முஸ்லீம்கள் பெரும் பாலான மசூதிகளையும் வழிபாடு மண்டபங்களையும் இந்துக்களின் சமணர்களின் ஆலயங்களின் இடித்த பகுதிகளைக் கொண்டோ அல்லது அவ் வாலயங்களின் மேலேயோ கட்டினர். முன்றுவதாக இந்து ஆலயங்களும், மசூதிகளும் கருவறைக்கு முன்னர் காலியிடங்களைக் கொண்டவையாகவும், வேலைப்பாடுகள் கொண்டவையாகவும் இருந்தமையால் எளிதில் மாற்றிக் கொள்ள வசதியாக இருந்தது.

எங்கெங்கு இஸ்லாமியர்களின் ஆதிக்கம் தலைதூக்கியதோ அங்கெல்லாம் இந்திய இஸ்லாமியக் கலை பரவி நின்றது. ஹேவல் என்னும் வரலாற்று ஆசிரியர் இஸ்லாமியர்களின் கட்டிடக் கலை இந்திய மக்களின் சிந்தனையின் அடிப்படை வடிவமே தவிர, அயல் நாட்டு மாதிரிகளின் வடிவம் அல்ல என்று குறிப்பிட்டார்.

அராபியர்களின் படையெடுப்பின் விளைவாக இந்திய மக்களின் கட்டிடக் கலையில் எவ்வித மாறுதல்களும் ஏற்படவில்லை. கஜினி மாமூதுவின் காலத்திலிருந்துதான் நாம் இந்தியக் கலையில் இஸ்லாமியர்களின் ஆதிக்கம் ஏற்படும் நிலையைக் கண்ணுறுகின்றோம்.

இந்தியக் கட்டிடக் கலையைக் கஜினி மாமூது புகழ்ந்து பாராட்டியிருக்கின்ருர். அது மட்டுமின்றி இந்தியக் கலைஞர் களின் திறமையை வியந்து எண்ணிறந்தோரைக் கஜினிக்குத் தம்மோடு அழைத்துச் சென்று அங்கு புகழ்பெற்ற மசூதி ஒன்றை யும் கட்டினர். குத்புத்தீன், இல்துத்மிஷ் ஆகியோரின் காலங் களில், ஏராளமான நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டன. அஸ்மீர் மசூதி, குதுப் மசூதி, குதுப்மினர் ஆகியவை எழுப்பப் பட்டன. குதுப் மசூதியைக் கட்டிடமட்டும் ஏறக்குறைய 27 இந்துக் கோவில்கள் இடிக்கப்பட்டனவாம். குத்புத்தீனின் மசூதி யில் கட்டப்பட்ட பதினேரு வளைவுகளைக் கொண்ட திரை (மறைப்பு) வியந்து போற்றுதற்குரியது.

குதுப்மினர் குத்புதீனல் துவக்கப்பட்டு, இல்துத்மிஷினல் முடிக்கப்பட்டது. இதனுடைய சிறப்பை மார்ஷல் புகழ்ந்து எழுதியுள்ளார். அவர் 'இக் கம்பீரமான ஆச்சரியப்படத்தக்க படைப்பைப் போல் வேறு எதுவும் இருக்கமுடியாது, இஸ்லாமிய அதிகார வளர்ச்சியை இது நன்கு புலப்படுத்துகிறது. இதனு டைய உயரிய ஆனல் அளவோடு கூடியவேலைப்பாடுகளைப்போல் வேறெதுவும் இருக்க முடியாது.' என்று குறிப்பிடுகின்ருர்.

அலாவுதீனின் காலத்தில் இஸ்லாமியர்களின் அதிகாரம் பெருமளவிற்கு விரிவடைந்தது, வடக்கும். தெற்கும் அவரு டைய மேலாண்மைக்கு அடிபணிந்தன. ஏராளமான போர்களில் ஈடுபட்டிருந்த போதிலும், கோட்டைகள், அரண்கள், குளங்கள் முதலியவை அமைத்திடும் பணியினை அவர் மேற்கொண்டார். 1303இல் சிரிக் கோட்டையையும், ஆயிரம் தூண்கள் கொண்ட அரண்மனையையும் கட்டி வைத்தார். இக் கோட்டையின் அடியில் ஆயிரக் கணக்கான மங்கோலியர்கள் புதைக்கப்பட் டனராம்.

பதினன்காம் நூற்ருண்டில் டெல்லிச் சுல்தானியர்களுக்குச் சோதனைக் காலம் என்றே கூறவேண்டும். அரசியல் சோதனைகள் கலை வாழ்க்கையிலும் பிரதிபலிப்பதுண்டு. மங்கோலியர்களின் படையெடுப்பு, இந்து அரசர்களின் கிளர்ச்சிகள் ஆகியவற்றினல் பாதிக்கப்பட்ட அரசு ஆடம்பரமான கலைகளில் கவனம் செலுத்த வில்லை. முகமது பின் துக்ளக் கலையார்வம் மிக்கவராகத் திகழ்ந்தபோதிலும், அரசியல் சூழ்நிலைகள் அவருக்குச் சிறந்த கலைப் படைப்புக்களைப் படைத்திடும் ஒய்வைத் தரவில்லை. முகமதுவின் கட்டிடங்களில் ஜனன்பனு குறிப்பிடத் தக்கது ஆகும். ஆனல் பிரோஸ் ஷா சிறந்த கட்டிடங்களை உருவாக்

கியவர் ஆவார். புதிய நகரங்கள், அரண்மனைகள், மசூதிகள், தோட்டங்கள் முதலியன அவர் காலத்து உருவாக்கப்பட்டன. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதி இந்திய-முகம்மதியக் கட்டிடக் கலையின் மறுமலர்ச்சியின் துவக்கமாக அமைந்தது என்றே கூறலாம்.

ஜான்பூர் அரசர்கள் கலை, கல்வி ஆகியவற்றைப் போற்றி வளர்த்தனர். அவர்களின் கலைச் சிறப்புக்கு இன்னும் எடுத்துக் காட்டாக நின்று விளக்குபவை அவர்கள் விட்டுச் சென்ற அழகு மிக்க உயர்ந்த கட்டிடங்களே, முஸ்லீம் கட்டிடக் கலையின் நினைவாக இன்னும் இருப்பவை அடாலா மஸ்ஜித், ஜாமிமஸ்ஜித், லால் தர்வாஜா மசூதி ஆகியவையே. இவைகள் இந்துக் கோவில்களை இடித்து எடுக்கப்பட்ட பொருட்களைக் கொண்டு கட்டப்பட்டவையே. இவை இந்துக் கட்டிடக் கலைஞர்களால் கட்டப்பட்டவை என்ற போதிலும், அந்நிய ஆட்சியின் கீழ் பணியாற்றுகிறோம் என்ற உணர்வு அதில் தோன்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது என்று ஃபியூரர் கூறுகின்றார்.

ஜான்பூரின் அழகிய நினைவுச் சின்னங்கள் லோடி அரசர்களால் சிதைக்கப்பட்டன. இல்துத்மிஷ், கௌஜி ஷாம் சி, ஷாம் சி இத்கா, ஜாமி மஸ்ஜித் ஆகியவற்றை பதாவுனில் கட்டினர். ஜாமி மஸ்ஜித் இந்தியாவில் உள்ள மசூதிகளில் பெரியதாகவும் உயர்ந்ததாகவும் உள்ளது. 280 அடி தெற்கிலிருந்து வடக்காக நீளவாக்கில் அமைக்கப் பட்டுள்ளது. பன்னிரண்டடி உயரம் இந்துக் கோவில்களில் இருந்து எடுக்கப்பட்ட கற்களால் உருவாக்கப்பட்டது. உத்திரப் பிரதேசத்தில் உள்ள கல்பி என்னுமிடத்தில் சௌரசி கும்பாஸ் என்னும் கட்டிடம் அழகுமிக்கது ஆகும். இது லோடி வம்சத்து அரசர் ஒருவரின் ஓய்வுக்கால மாளிகையாக விளங்கிற்று என்று கருதப்படுகிறது.

பக்ருதீன் முபாரக் ஷாவிற்குப் பின்னர் கவுர் மாநிலம் டெல்லியிலிருந்து பிரிந்தது. தீவிர இஸ்லாமிய சமயத்தவர் இந்து ஆலயங்களையும், பௌத்த விகாரங்களையும் தரைமட்டமாக்கி அவற்றின்மேல் மசூதிகளைக் கட்டிவைத்தனர். இதன் விளைவாகப் புதிய பாணி ஒன்று உருவாயிற்று. ஹீ சைன் ஷாவின் மசூதி, தங்க மசூதி ஆகியவற்றோடு கலை விமர்சகர்களின் கவனத்தைக் கவர்ந்திருப்பது அடினா மசூதி எனப்படும் மசூதி ஆகும். இது 1368இல் சிக்கந்தர் ஷாவினால் கட்டப்பட்டது.

சுல்தான்களின் காலக் கட்டிடப் பாணியினை டெல்லிப்பாணி, மாநிலப் பாணி என்று இரு வகையாகப் பிரித்துப்பேசுகின்றனர்.

குஜராத் நீண்ட காலமாக இந்துக்களால் ஆளப்பட்டு வந்தது. பின்னர் சமண சமயத்தின் பிடியில் இருந்தது. சமண சமயக் கட்டிடக் கலை எளிமையானது. இதன் பின்னர் வந்த இஸ்லாமியர்களின் இந்து சமண முறைகளில் தேவையான மாறுதல்களைச் செய்யத் தலைப்பட்டனர்.

கி. பி. 1032இல் அடி மலையில் கட்டப்பட்ட சமண ஆலயம் சமணர்களின் அழகிய கட்டிட வேலைப்பாட்டிற்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. அகமது ஷா சிறந்த கட்டிடங்களை உருவாக்கினர். அகமதாபாத் என்ற நகரை உருவாக்கி அழகு படுத்தினர். பதினைந்தாம் நூற்றாண்டில் அகமதாபாத், காம்பே, சாம்பனீர் ஆகிய இடங்களில் புதிய கட்டிடங்கள் உருவாயின. இன்றும் அகமதாபாத் அழகிய பிளவுச் சின்னங்களைத் தாங்கி அதன் பழம் பெருமையை எடுத்தியம்புகிறது. ஜாமி மஸ்ஜித், இண்டோல மகால், ஜஹால் மகால், ஹீசாங் ஷாவின் கல்லறை, பாஸ்பஹதூர், ரூப்மதி ஆகியோரின் அரண்மனைகள் ஆகியவை பதினைந்தாம் நூற்றாண்டில் மாளவத்தில் எழுந்தன.

காஷ்மீரத்தை முஸ்லீம்கள் கைப்பற்றியபோது அங்கு இருந்த இந்துக்களின் கற்கோவில்களை மசூதிகளாக மாற்றினர். ஜாமி மசூதி, ஷா ஹம்தான் மசூதி ஆகியவை காஷ்மீரத்தில் குறிப்பிடத் தகுந்த கட்டிடங்கள் ஆகும்.

மாநிலங்களில் இருந்த கட்டிடங்களின் அமைப்பு டெல்லிக் கட்டிடக் கலையைப் போன்றவையினும், அதனின்று வேறு பட்டதே ஆகும். துருக்கியர்களின் காலத்திற்கு முற்பட்ட கலை மரபுகள் மாநிலக் கட்டிடக் கலையில் எதிரொலித்தன. மாநிலங்களில் நிலவிய ஒரு மாதிரியான சூழ்நிலை மாநிலங்களின் கலையம்சத்தில் மாறுதல்களைத் தோற்றுவித்தன.

இலக்கியம்: சுல்தானியர்களின் காலம் இலக்கியத் துறையில் எவ்விதச் சிறப்பும் பெறாத காலம் என்று எண்ணப் பட்ட காலமும் உண்டு. ஆனால் டாக்டர் குரேஷி (Dr. Krayshy) டெல்லிச் சுல்தானியம் பண்பாடு செறிந்த அரசு என்று குறிப்பிட்டார். அதாவது இலக்கியச் சிறப்பு உச்ச நிலையை அடைந்திருந்த காலம் என்று குறிப்பிட்டார். ஆனால் இவ் விரண்டு கருத்துக்களுமே சரியானவை என்றோ தவறானவை என்றோ கூறிவிட இயலாது. துருக்கிய ஆப்கானிய ஆட்சியாளர்கள் போர் வீரர்கள் மட்டுமின்றி இலக்கியப்பற்று மிக்கவர்களாகவும் விளங்கினர்,

அராபியர்கள் சிந்துவைக் கைப்பற்றியதன் விளைவாக பிரம்மகுப்தரின் பிரம்மசித்தாந்தம், காண்ட காந்தியகா போன்ற வட மொழி இலக்கியங்கள் அராபிய மொழியில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டன. மகமதுவுடன் இந்தியாவிற்கு வந்த அல்பெருணி சிறந்த வட மொழி அறிஞராவர். அவர் நல்ல வரலாற்றுசிரியருமாவார். பிரோஸ் துக்ளக் தமது நாகர் கோட்டை யெடுப்பிற்குப் பின்னர் கைப்பற்றிய வட மொழி நூல் ஒன்றைப் பாரசீக மொழியில் பெயர்த்து அதற்கு **தலயால் பிரூஸ் ஷாகி** என்று பெயரிட்டார்.

இக் காலத்தில் வாழ்ந்தவர்களில் **அமீர் குஸ்ரு** எனப் படுபவர் சிறந்த கவிஞராவர். இவர் 4 லட்சம் பாடல்கள் எழுதி யுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தியச் சிந்தனையைத் தமது பாடலில் முதலில் புகுத்தி எழுதியவர் இவரே. **காஜியன்-உல்-புட்டுவா, துக்ளக் நாமா தரீக்கி அலாய்** ஆகியவை இவருடைய சிறப்புப் படைப்புக்களாகும். அமீர் ஹாசன் தெளல்வி, பத்ருத்தீன் ஆகியோர் மற்றைய கவிஞர்கள் ஆவர்.

ஜியாவுதீன் பரனி எழுதிய நூல் **தரீக்கி பருஸ் ஷாகி** என் பதாகும். **மின் ஹாஜீ-உஸ்-சிராஜ்** என்பவர் எழுதிய நூல் **தபக்கத்தி நசீர்** என்பதாகும். ஜியாவுதீன் பரனியின் நூலைத் தொடர்ந்து எழுதி நிறைவு செய்தவர் ஷாம்ஷி ஷிராஜ் **அபீப்** என்பராவர். குலாம் யாஹியா பின் அகமது தரீக்கி முபராக் வாஹி என்னும் நூல் மேற்கூறப்பட்ட மூவரின் செய்திகளின் உண்மைத் தன்மையை ஒப்பிட்டு அறிய உதவுகிறது. மாநிலங் களில் இருந்த சிறந்த அறிஞர்கள் **காஜி ஷிகாப்புத்தீன் தௌலதாபாத்தி, ஷேக் மௌலானு இலாஹ்தாத், ஹஸ்னுவி, ஜாகிர் தௌல்வி, மௌலானு ஹசன் நஷ்ஹி, மௌலானு அலி அஹமத் நிஷானி நூருல்ஹஹ்** ஆகியோர்.

இஸ்லாமிய சமயத்தவர் மட்டுமின்றி இந்துக்களும் அருமை யான இலக்கியங்களைப் படைத்தனர். **ராமானுஜர்** பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதினர். யோகம், நியாயம், வைசேஷிகம் ஆகிய தத்துவங்கள் பற்றி நூல்கள் பல எழுதப்பட்டன. **ஜெய தேவர்** சிறந்த கவிஞராவர். எண்ணிறந்த நாடகங்கள் இக் காலத்தில் எழுதப்பட்டன. பன்னிரண்டாம் நூற்றாண்டில் **ஹர் கேலி** நாடகம், **லலித விக்கிரஹ ராஜா** நாடகம் என்னும் நூல் களும் **ஜெயதேவரால் பிரசன்ன இராகவன** என்னும் நாடகமும், **ஜெயசிங் சூரியால் ஹம்மீர் மரட மர்த்தன** என்னும் நாடகமும்

இக் காலத்தில் எழுதப்பட்டவையே. இந் நாடகங்களைப் போன்று ஏராளமான நாடகங்கள் வெளிவந்தன.

வடமொழியில் **ஜிவகோஸ்வாமி** என்பவர் 25 நூல்கள் எழுதினர். கி. பி. 1114இல் காஷ்மீரத்தின் வரலாற்றை விளக்கும் புகழ்மிக்க **இராஜதரங்கிணி** என்னும் நூலைக் **கல்ஹணர்** எழுதினர். வேத நூல்களுக்கு **சாயானர்** என்பவர் விளக்க உரை எழுதினர். **ஹேமசந்திரர், நாகசந்திரர், பிரபசந்திரர், ஹஸ்தி மல்லர், அசாதரா, சாகாவகிருதி** ஆகியோர் சமண சமயப் புலவர்கள் ஆவார்கள்

பக்தி இயக்கத்தின் தலைவர்களும் இக் கால இலக்கிய வளத் திற்குத் துணைபுரிந்தனர். இதுவரை நாம் சுல்தானியர் கால இலக்கியங்களில் ஓரளவிற்குக் குறிப்பிடத்தகுந்த சிலவற்றையே கண்டோம். இன்னும் பல இலக்கியப் படைப்புக்களும் இலக்கியக் கர்த்தாக்களும் வாழ்ந்தனர். எல்லாவற்றையும் இங்குக் காண்பது என்பது இயலாது.

நாம் இதுகாறும் கூறியவற்றுல் சுல்தானியர்களின் காலம் இலக்கியத்துறையில் பூஜ்யமாகத் திகழாது, பல படைப்புக் களைக் கொண்ட காலமாகவே திகழ்ந்தது என்பது நன்கு பெறப்படும்.

16. பக்தி நெறி இயக்கம்

வட இந்தியப் பக்தி நெறி இயக்கம் — இராமானுசர் — இராமானந்தர் — வல்லபாச்சாரியர் — சைதன்யர் — நாமதேவர் — கபீர் — குருநானக் — அடிப்படைக் கொள்கை.

தென்னிந்தியாவில் எவ்வாறு இந்து சமயத்தில் ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் மாறுதல்கள் ஏற்படுத்தப் பட்டனவோ, அதேபோன்று மக்கள் வாழ்க்கையில் மாறுதல் களைத் தோற்றுவிக்கத் தோன்றிய இயக்கமே வட இந்தியப் பக்தி நெறி இயக்கமாகும். இஸ்லாமியர்களின் ஆட்சிக்கால நிகழ்ச்சி களில் பக்தி நெறி இயக்கமும் குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும். அராபியர்களும், துருக்கியர்களும், வந்தபின், இந்து சமயத்தின் தூய்மைகெட்டு இந்தியா பிளவுண்ட வீடாகக் காட்சி அளித்தது. சிலர் பக்தி நெறி இயக்கம் தோன்றியதற்கு இஸ்லாமின் வளர்ச்சியே காரணம் என்று தவறுதலாகக் கணக்கிட்டனர். பண்டைய இந்திய மக்கள் பிறப்பு, இறப்பு எனப்படும் பெரும் பிணியிலிருந்து விடுபட ஞானம் அல்லது அறிவு வழி, செயல், பக்தி ஆகிய மூன்றுமே மருந்து என எண்ணினர். சுல்தானியர் களின் காலத்தில் மூன்றாவது வழியான பக்தி நெறி சிறப்புப் பெற்றது. சங்கரர் ஞானம் அல்லது அறிவு வழியைக் கடைப் பிடித்துப் பெரும்பாலான இந்துக்கள் பௌத்தர்களாக மாறாமல் தடுத்துக் காத்தார். ஆனால் அவருடைய வழி சாதாரண மக்களுக்குப் பயன்தரத்தக்கதாக அமையவில்லை. பக்தி நெறியைப் பின்பற்றுவதன் வாயிலாகச் சாதாரண — மானவர் களும் இறைவனின் நிழலைப் பின்பற்ற இயலும் என அறிவுறுத் தப்பட்டது. பக்தி நெறியைப் பின்பற்றித் துன்ப நினைவு களிலிருந்து தப்பிக்கும் வாய்ப்பு கிட்டியது. இவ் வியக்கத்திற்கு உறுதுணையாக இருந்தவர்கள் இராமானுசர், இராமானந்தர், வல்லபாச்சாரியார், சைதன்யர், கபீர் போன்றவர்கள் ஆவர்.

இராமானுஜர் : பக்தி இயக்கத்தின் தோற்றம் இராமானுஜரின் தோற்றத்துடன் தோன்றியது எனக் கூறலாம். பன்னிரண்டாம் நூற்றாண்டில் சிறந்த வைணவத் தலைவராக அவர் விளங்கினார். இவருடைய சிறந்த கல்வித் திறமையினைக் கண்டு பொறுமை கொண்ட சிலர் இவரைக் கொலை செய்யவும் முயன்றனர். சோழ அரசர் இவரைச் சைவ சமயத்தில் சேருமாறு வற்புறுத்தவே ஹொய்சாள அரசரவையில் தஞ்சம் புகுந்தார். ஹொய்சாள மன்னர் விஷ்ணுவர்த்தனரின் தம்பியை வைணவ சமயப் பற்றுடையவராக மாற்றினார். இவருடைய கொள்கை சங்கரரின் அத்வைதக் கொள்கைக்கு எதிரானது. ஜீவாத்மா வேறு பரமாத்மா வேறு அதாவது தனி மனிதனின் உயிர் வேறு, இறைவன்பால் நம்பிக்கை கொண்ட இவர் இறைவனைச் சகுண ஈஸ்வரர் என்று கருதினர். இராமானுஜரைப் பின்பற்றியவர்கள் வட இந்தியாவில் குறைவு. தென்னிந்தியாவிலேதான் அதிகம். இவருடைய சீடர்களில் குறிப்பிடத்தகுந்தவர் இராமானந்தர் என்பவராவார். இராமானுஜரைப் பற்றி முன்னரே நாம் அறிந்திருந்தபோதிலும் அவர் சீடர் இராமானந்தர் வட இந்தியப் பக்தி இயக்கத்திற்கு உதவியவர் என்பதால் மீண்டும் அவரைப் பற்றி ஈண்டு குறிப்பிட வேண்டியதாயிற்று.

இராமானந்தர் : இராமானந்தரின் பிறப்பு, இறப்பு காலம் பற்றிய கருத்து வேறுபாடுகள் இன்னும் இருக்கின்றன. இராமானந்தர் அலகாபாத்தில் கன்யா குப்ஜ பிராமண குடும்பத்தில் பிறந்தார். வட இந்தியாவின் புனித ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்தார். இராமானந்தர் பல இடங்களில் அலைந்து திரியும் துறவியாக இராமானுஜரின் கொள்கைகளைப் பரப்பி வந்தார். சாதி முறையைப் புறக்கணித்து எல்லாச் சாதியினரையும் தம்முடைய சீடர்களாக்கிக் கொண்டார். இவருடைய பன்னிரண்டு சீடர்களான அனந்தானந்தா, கபீர், பீபா, பாவானந்தர், சுகர், சர்சுரா, பத்மாவதி, நரஹரி, ராயதாசர், தாணு, செய்னு, சர்சுராவின் மனைவி ஆகியோரில் ஒருவர் நாவிதர், மற்றொருவர் செருப்புத்தைப்பவர், மூன்றாமவர் சமையற்காரர். கபீரோ முஸ்லீம் நெசவாளர். இராமானந்தர் இராமனைக் கடவுளாகத் தொழுதார். ஆண் பெண் இரு பாலர்க்கும் பக்திக் கொள்கையை இந்தி மொழியில் பரப்பினர்.

வல்லபாச்சாரியர் : வல்லபாச்சாரியர் 1479இல் வாரணாசியில் தெலுங்குப் பிராமண குடும்பத்தில் பிறந்தவர். உயிர்கள் பக்தி வழியின் மூலமாகத்தான் பிரம்மத்துடன் இணைய முடியும் என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார். இளமைப் பருவத்தி

லேயே மேதையாக விளங்குதற்குரிய அறிகுறிகள் அவரிடம் காணப்பட்டன. வட இந்தியப் பயணம் வந்த இவருடைய பெற்றோர்கள் வடஇந்தியாவிலேயே தங்கிவிடக் காசியில் தம் கல்வியை முடித்துப் பின்னர் கிருஷ்ண தேவராயரின் அரசவையில் அமர்ந்தார், அங்குப் பொது மேடையில் வாதஞ் செய்து சில சைவப் பண்டிதர்களைத் தோற்கடித்தார். பரமாத்மாவும், ஜீவாத்மாவும் வேறல்ல, இரண்டும் ஒன்றே என்று கருதினர். கிருஷ்ண வழி பாட்டை இவர் போதித்தார். உலகப் பற்றுக்களை யெல்லாம் துறந்து கண்ணன் மீது கொண்டுள்ள பற்று ஒன்று மட்டுமே கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினர். மனிதனைத் தீமையிலிருந்து இறைவனாலேதான் காக்க முடியும் என வலியுறுத்தினர். இவருடைய கொள்கை சுத்த அத்வைதம் அதாவது தூய இரண்டற்ற கொள்கை என்று அழைக்கப்பட்டது. மோனியர் வில்லியம்ஸ் வல்லபாச்சாரியாரின் கொள்கை தாழ்வுற்ற கீழ் நாட்டு எபிக்கூரியன் கொள்கையாக ஆய்விட்டது என்று கூறியுள்ளார். பிற்காலத்தில் வல்லபாச்சாரியாரின் கொள்கை பழித்துரைக்கப்பட்டது.

சைதன்யர் : கி. பி. 1485இல் வங்காளத்தில் நதியா என்ற ஊரில் கல்வியறிவு மிக்கப்பிராமண குடும்பத்தில் சைதன்யர்பிறந்தார். பக்தி நெறியினைப் போதித்தவர்களில், வைணவ முனிவர்களுள் மிகப் புகழ்பெற்றவரும் மிகப் பெருமைபெற்றவரும் இவரே என்று கருதப்படுகிறார். 25 வயதிலேயே உலகியல் இன்பங்களைத் துறந்து சன்னியாசியாக நாடு முழுவதும் சுற்றி அலைந்து கிருஷ்ணனை வழிபடவும், அன்பு செலுத்தவும் போதித்தார். இளமைப் பருவத்திலேயே இலக்கிய ஆர்வம் கொண்டு விளங்கினர்.

சைதன்யரைப் பின்பற்றுவோர் சைதன்யரைத் திருமாலின் அவதாரம் என்றே கருதுகின்றனர். புரோகிதர்களால் செய்யப்பட்டு வந்த சடங்கு முறைகளை எதிர்த்து விஷ்ணுவையே முழு நம்பிக்கையுடன் தொழ வேண்டும் என்று போதித்தார். எல்லா உயிர்களும் கிருஷ்ணரின் வடிவம் எனவும், எனவே மற்றவரை மதித்துப் போற்ற வேண்டும் எனவும் அறிவுறுத்தினர். ஏழைகளிடத்தும், எளியவர்கள், வலுவற்றவர்களிடத்தும் சைதன்யர் பேரன்பு செலுத்தினர். எளியவர்களின் துயரத்தைக் கண்ணுற்ற போது அவர் மனம் வேதனைப் பட்டது. சைதன்யரின் சீடர்களில் தாழ்த்தப்பட்டவர்களும் முஸ்லீம்களும் இருந்தனர். அவருடைய கருத்துகள் சாதி சமய வேறுபாடின்றி அனைவருக்கும் பயன்பட்டது. சைதன்யர் சமுதாயப் புரட்சியைத்தோற்றுவித்தார்.

என்ருல் கூட மிகையாகாது. அன்பே கடவுள் என்று அறி வுறுத்திய அவர் அனைவரும் ஆண்டவனின் முன் சமம் என்பதை உணர்த்தினர். இவரது முயற்சிகளால் இந்தியாவின் பல பாகங் களிலும் கண்ணனின் நாமத்தைப் பக்தி சிரத்தையுடன் மக்கள் உரைத்தனர். சைதன்யரின் பக்தி நிலை மக்களிடத்தில் ஒருவித மான உளவியல் விளைவுகளை ஏற்படுத்தி, மக்களைக் கண்ணன் மீது பைத்தியமாகவே ஆக்கியது என்பர் சிலர். கி.பி. 1533 இல் சைதன்யர் மறைந்தார்.

நாம தேவர் : நாம தேவர் மகாராட்டிரத்தில் தோன்றியவர். இவரைப் பின் பற்றியவர்கள் எல்லாச் சாதியினராயும் இருந் தனர். இவரே தையற்காரராகத் தொழில் புரிந்து வந்தார். நாம தேவரின் பிறப்பின் காலத்தைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந் தவர் என்றே நம்பப்படுகிறது. கடவுள் மீது பக்தி செலுத்து வதன் மூலமாகவே முக்தி நிலை அடைய முடியும் என்று நம்பினர்.

'என் இதயத்தில் நிறைந்திருக்கும் அவன்மேல் உள்ள அன்பு என்றும் பிரிக்கமுடியாது. நாம தேவன் உண்மையான பக்தியுடையவனுக்குத் தன் இதயத்தை அளித்துள்ளான். குழந்தைக்கும் அதன் தாய்க்கும் இடையே உள்ள பாசம்போல் என் ஆன்மா கடவுளுடன் இணைக்கப்பட்டுள்ளது' என்பது அவருடைய சிந்தனைகளுள் ஒன்றாகும்.

கபீர் : கபீரின் பிறந்த காலமும், இறந்த காலமும் இராமா னந்தருடையதைப் போன்று பிரச்சினைக்குரியதாகவே உள்ளது. பண்டார்க்கர் போன்றோர் அவர் கி. பி. 1398இல் பிறந்தார் எனவும், வெஸ்ட்காட், பர்குஹர், பர்ணஸ் முதலியோர் கி. பி. 1440இல் பிறந்தார் என்றும் கூறுகின்றனர். கர்ண பரம்பரைச் செய்தியின்படி இந்துக் குடும்பத்தில் பிறந்த இவர் முகம்மதிய நெசவாளியினால் வளர்க்கப்பட்டார். கபீர் இராமானந்தரின் பன்னிரு சீடர்களில் ஒருவர் என எண்ணப்படுகிறார்.

கபீர் சில வழிபாட்டையும் சாதி முறையையும் கண்டித்தார். கபீரைப் பின்பற்றுவோர் கபீர் பந்திகள் அல்லது கபீர் பாதை யில் செல்லும் சுற்றுப் பயணிகள் என அழைக்கப்பட்டனர். இந்துக்களும், முஸ்லீம்களும் இவருக்குச் சீடர்களாக இருந்தனர். கபீரைப் பின்பற்றுவோர் தம்மை அல்லா, இராமர் இவர்களின் பிள்ளைகள் என்று கூறிக் கொண்டனர். ஆயினும் கார்பெண்டர்

என்பவர்'கபிரின் எண்ணங்களின் அடிப்படை முழுவதும் இந்து சமயச் சார்புடையனவே, என்று குறிப்பிட்டார். கபிர் போதித்த சமயம் அன்புச் சமயம் அவருக்கு இராமனும் அல்லாவும் ஒன்று தான். அவருடைய போதனை ஜலாலுத்தீன்ரூமியும், ஹஃபீஸும் மற்ற பாரசீக அறிஞர்களும் அளித்துள்ள போதனையை ஒத்துள்ளது. கபிரின்போதனைகள் சிலவற்றைக் காண்போம். அவருடைய சிந்தனை பற்றிய விளக்கத்தை அதன் மூலமாகப் பெறலாம்.

'இந்துவும் துருக்கியனும் ஒரே களிமண்ணால் செய்யப்பட்ட குடங்களே; அல்லாவும் இராமனும் ஒரே கடவுளின் வெவ்வேறு பெயர்களே.'

'ஓ பணியாளனே என்னை எங்கே தேடுகிறாய்? பார்! நான் உன் பக்கத்திலேயே இருக்கின்றேன். நான் கோவிலிலுமில்லை, மசூதியிலுமில்லை, நான் காபாவிலுமில்லை; கைலாசத்திலுமில்லை.'

'பட்டினி கிடப்பதாலோ, பிரார்த்தனைகளையும் சமயக கொள்கைகளையும் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருப்பதாலோ ஒருவன் விண்ணுலகம் அடைவதில்லை. மெக்காக் கோவிலுக்கு உண்மையான அகத்திரை மனிதனின் இதயத்திலே இருக்கிறது. இவ் வுண்மையை உணரவேண்டும். உள் மனத்தைக் காபாவாகவும் உடலை அதைச் சுற்றியுள்ள கோவிலாகவும் ஆக்கி உன் மனச்சாட்சியைத் தலையாய ஆசிரியனாகக் கொள். கோபம், ஐயம், வெறுப்பு இவற்றை விட்டுவிடு. ஐந்து தடவை செய்யும் பிரார்த்தனைகளின் மந்திரமாகப் பொறுமை என்பதை உச்சரி. இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் ஒரே கடவுள்தான்.

'புனித நீராடுமிடங்களில் நீரைத்தவிர வேறெதுவும் இல்லை. இவையெல்லாம் பயன் அற்றவை என்பதை நான் உணர்வேன்.'

'ஏனெனில் இவற்றில் நான் நீராடியிருக்கிறேன். சிலைகள் உயிரற்றவை, அவை பேசமாட்டா. நான் அவைகளிடம் உரக்கக் கூறி இருக்கிறேன். ஆதலால் இதை நான் அறிவேன். புராணமும் குர்ஆனும் வெறும் வார்த்தைகளே.'

'இந்த மசூதியில்தான் கடவுள் இருக்கிறார் என்றால் இந்த உலகம் யாருக்குச் சொந்தம்? இந்த வடிவத்தில் இராமன் இருக்கிறான் என்றால் வெளியில் நடப்பதை அறிந்து கொள்வது யார்? ஹரி தெற்கில் இருக்கிறார், அல்லா மேற்கில் இருக்கிறார்

உன்னுடைய இதயத்தைப் பார். அங்கே கரீமையும் இராம்னையும் காண்பாய்.'

'உலகில் வாழும் ஆண் பெண் அனைவரும் அவனது வாழும் வடிவங்களே. கபீர், அல்லா, இராமர் ஆகியோரின் பிள்ளைகளே.'

குருநானக்: கபீர் இந்துக்களையும் முஸ்லீம்களையும் இணைக்க முயன்றார். இருந்த போதிலும் சீக்கியர்களுக்கும், முகம்மதியர்களுக்குமிடையில் தணிக்க முடியாத வெறுப்பு மூண்டது. அவ் வெறுப்பிலிருந்து கல்சாவும் சீக்கிய இராணுவ நிறுவனமும் தோன்றின. இவைகள் முகலாயப் பேரரசர்களின் பகைவர்களைப் படைத்தன. சாதி முறையைப் புறக்கணித்த ஒவ்வொரு சமயத்திலும் சாதிமுறை நுழைந்தது என்று டாக்டர் பர்குஹார் குறிப்பிடுகின்றார். இந் நிலையில் சீக்கிய சமயப் பெரியார்கள் தோன்றி சமுதாய ஒற்றுமைக்கு வழி வகுத்தனர். இவர் கி.பி. 1469இல் லாகூருக்கு அருகிலுள்ள தல்வாண்டி என்ற ஊரில் குருநானக் பிறந்தார். இவர் உபநிடதங்களின் கொள்கையாகிய ஒரு கடவுட் கொள்கையை உயிர்ப்பித்தார். வாழ்க்கை முழுவதிலும், இந்து சமயத்திலும், இஸ்லாமிய சமயத்திலும் உள்ள சிறந்த அடிப்படையான கருத்துகளை எடுத்து சமயப் பொறையை மக்களுக்குப் போதித்தார். சமயப் பிணக்குகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திட முயன்றார்.

'வெறும் வார்த்தைகளில் சமயம் அடங்கிடவில்லை. எல்லா மனிதரையும் சமமாகக் காண்பவனே சமயப் பற்றுள்ளவனுவான். கல்லறைகளைத் தேடியோ, சுடுகாட்டிற்கு ஓடியலைந்து கொண்டிருப்பதோ சமயம் அன்று. வெளிநாடுகளுக்குச் செல்வதோ புண்ணியத்தலங்களில் தீர்த்தமாடுவதோ சமயமாகாது. உலக ஆசாபாசங்களுக்கிடையில் தூய்மையாக வாழ்ந்தாலே உண்மையான சமயத்திற்கு வழிகிட்டும்' என்று போதித்தார். மேலும் அவர் 'தன்னடக்கத்தை உலக்கூடமாகவும், துறவு மனப்பான்மையை பொற்கொல்லனுகவும், ஞானத்தைப் பட்டறையாகவும், தெய்விக அறிவைக் கருவிகளாகவும், தவத்தை நெருப்பாகவும், தெய்வ பக்தியை வழிபாடாகவும் வைத்து ஆண்டவனின் பெயரை உருக்கியூற்று. அந்த நாணயச் சாலையில் கடவுளின் சொல் காசுகளாக உருவாகும்' என்றும் போதித்தார்.

அடிப்படைக் கொள்கை: பக்தி நெறி இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளை இரு பிரிவாகப் பிரிக்கலாம். முதலாவது, கொள்கை, இந்து சமயத்தைச் சீர்திருத்துவது. இரண்டாவது

கொள்கை, இந்து முஸ்லீம் ஒற்றுமையை உருவாக்குவது. பக்தி நெறி 'இயக்கம் முதலாவது கொள்கையில் ஓரளவு வெற்றி பெற்றது எனலாம். இந்துச் சமுதாயத்தில் எல்லோரும் சமம், 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற எண்ணம் ஓரள விற்கு எல்லோர் மனத்திலும் படியாவிடினும் ஒரு சிலரின் மனத்தில் படிந்தது. ஆனால் இரண்டாவது கொள்கையான 'ஈஸ்வர அல்லா தேரே நாம்' ஈஸ்வரனும் அல்லாவும் ஒரே பெயர்தான் என்ற கொள்கை மட்டும் நிலை பெருமல் போய் விட்டது. இந்து, முஸ்லீம் ஆகிய இரு சாராரும் தீவிர சமயப் பற்றுக்கொண்டு தம்தம் கொள்கைகளில் கோட்பாடுகளில் இருந்து மாறிட விரும்பாதவர்களாய் வாழத்தலைப்பட்டனர். சமயப் பொறை உணர்வு ஏற்படுவதற்கு மாறாக சமயப்பொறை யின்மையே நிலவியது. பக்திநெறி இயக்கம் இலக்கியத் துறையில் அரும்பணி ஆற்றியது என்று கூறலாம்.

பக்திநெறி வழியைக் காட்டியவர்கள் வட்டார மொழி வளர்ச்சிக்குத் துணை புரிந்தனர். தம் கருத்துகளை அவ்வவ் வட்டார மொழியில் வெளியிட்டு இலக்கியம் வளர்ந்தது. எனவே தான் வட்டார மொழிகளின் வளர்ச்சியின் பொற்காலம் என்று இப் பக்தி நெறிக்காலம் போற்றப்படுகிறது.

17. பாமினி அரசு

அலாவுதீன் பாமன் ஷா — முதலாம் முகமது ஷா — அலாவுதீன் முஜாஹித் ஷா — இரண்டாம் முகமது ஷா — பிரோஸ் ஷா — அகமது ஷா — இரண்டாம் அலாவுதீன் ஷா — ஹுமாயூன் ஷா—நிஜாம் ஷா — மூன்றும் முகமது ஷா — மாமூது காவன் — இளமைப் பருவம்—இராணுவத்துறைச் சீர்திருத்தங்கள் — காவனின் மறைவு - மதிப்பீடு — பாமினி அரசின் வீழ்ச்சி - அரசைப் பற்றிய மதிப்பீடு.

முஸ்லீம் அரசர்கள் பதின்மூன்றும் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலம்வரை தெற்கில் உள்ள நாடுகளின்பால் தங்கள் கவனத்தைச் செலுத்தவில்லை. தெற்குப் பகுதியில் எப்போதாவது கொள்ளை அடித்துச் செல்லுதலை மட்டுமே செய்துவந்தனர். அப்போதெல்லாம் தெற்கில் இருந்த அரசுகள் நாணலைப்போல் வளைந்து கொடுத்தனவே தவிர மூங்கிலைப்போல் முறிந்திட வில்லை. தேவகிரி, வாரங்கல் இரண்டுமே அநேகப் படையெடுப் புகளுக்கு ஆளாயின. அங்கு இருந்த செல்வங்களும் யானைகளும் அன்னியர்களை வாவென்று அழைத்தன. மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று அழைப்பதில்லை. எனவே அழைக்காமலேயே பழுத்த கனியைத் தேடிச் செல்லும் வௌவால்களைப் போல் தெற்குப் பகுதியைத் தேடி முஸ்லீம்கள் வந்தனர்.

1325இல் உலூக்கான் முகம்மது பின் துக்ளக் என்ற பட்டத்துடன் அரியணை ஏறிய பின்னரே தென்னிந்தியாவின் அரசியற்றிலும் மாறுதல்கள் தோன்றத் தொடங்கின தேவகிரி, வாரங்கல் அரசுகள் அழிக்கப்பட்டன. விசய நகரத்தில் புதிய அரசு ஒன்று எழுந்தது.

டெல்லியில் ஏற்பட்டிருந்த குழப்பத்தின் விளைவாகப் பேரரசின் பிடி தென்பகுதி அரசுகளின்பால் தளர்ந்து இருந்தது

தௌலதாபாத்திலிருந்த முஸ்லீம் உயர் குடியினர் சுல்தானை எதிர்த்துக் கலகம் விளைவித்தனர். தௌலதாபாத்தை அடைந்த கலகக்காரர்கள் அதன் ஆளுநரைக்கொன்றுவிட்டு அரசைக் கைப் பற்றி மாலிக் இஸ்மாயில் என்பவரை 1346இல் தக்காண மன்னர் என்று முடிசூட்டினர். இது சுல்தானின் கோபத்தை அதிகரிக்கச் செய்தது. எனவே முகமது பின் துக்ளக் தௌலதாபாத்தை முற்றுகையிட்டார். ஆனால் மூன்று மாதத்திற்கெல்லாம் அம் முற்றுகையினைப் பாதியில் நிறுத்திவிட்டுக் குஜராத்சென்றார். குஜராத்திலிருந்த அயல்நாட்டவர் சுல்தானுக்கு எதிராகச் செய்த கிளர்ச்சி ஒடுக்கப்பட்டது. இந் நிலையில் தேவகிரியில் ஏற்பட்ட புரட்சியை அடக்கச் சுல்தான் முயன்றார். அவ்வாறு முயன்ற போது குஜராத்தில் மீண்டும் புரட்சி ஏற்படவே சுல்தான் குஜராத் திற்குத் தேவகிரியிலிருந்து புறப்பட்டார். இது ஹஸன்கங்கு என்பவரின் கீழ் பாமினி அரசு ஏற்பட அடிகோலிற்று.

பெரிஷ்டா என்னும் வரலாற்றறிஞர் ஹசனின் பூர்வீகம் குறித்துக் கூறியுள்ள கருத்துகளைப் பிற வரலாற்றறிஞர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. ஹஸன் பிராமண குலத்தவரிடம் வேலை யாளராக இருந்தார், அந் நிலைவு காரணமாக இம் மரபு பிராமணி அல்லது பாமினி மரபு எனக் கூறப்படுவதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாயில்லை. தென்னிந்தியாவில் ஆண்ட முஸ்லீம் குலத்தைத் தொடங்கி வைத்தவர் அலாவுதீன் பாமன்ஷா என்பவர் ஆவார். அவ் வரசு பாமனி அல்லது பாமினி அரசு எனப் பெயர் பெற்றது. பர்ஹானி மசீர் எனப்படும் நூல் பெரிஷ்டாவைவிடத் தெளிவாக தக்காண வரலாற்றை விளக்கும் நூல். அந் நூலிலும் இம் மரபின் பிராமணத் தோற்றம் குறித்து ஏதும் கூறப்பட வில்லை.

அலாவுதீன் பாமன்ஷா : ஹஸன்கங்கு தேவகிரி அரியணை யில் அபுல் முசாபர் அலாவுதீன் பாமன்ஷா என்ற பெயருடன் அரசாளத் தொடங்கினர். அவர் தமது தலைநகரைக் குல்பார்காவில் அமைத்துக் கொண்டார். தமது ஆட்சிக் காலத்தில் பாமினி அரசின் தென் எல்லையை கிருஷ்ணை ஆற்றங்கரை வரை விரிவுபடுத்தினர். பாமினி அரசு நிறுவப்பட்டபோதே விசய நகர அரசும் நிறுவப்பட்டது. பாமினி அரசு இஸ்லாமிய அரசு. ஆனால் விசய நகர அரசு இந்து அரசு. இஸ்லாமை எதிர்த்து இந்துச் சமயத்தின் கோட்பாடுகளை நிலைபெறச் செய்வதே தமது பணியாகக் கொண்ட விசய நகர அரசு, பாமினி அரசுடன் மோதத் தொடங்கியது. இவர் கோவா, தாபோல், கோல்காபூர், தெலிங்கானா ஆகிய பகுதிகளை வெற்றி கொண்டார். இவருடைய

அரசு வடக்கே வைன் கங்கை நதியிலிருந்து தெற்கே கிருஷ்ணை வரையிலும், மேற்கே தௌலதாபாத்திலிருந்து கிழக்கே மேலத் தெலிங்காணப் பகுதிவரை கிழக்கிலும் பரவி இருந்தது. ஆட்சி நலனைக் கருதி குல்பார்கா, தௌலதாபாத், பீரார், பீடார் என நான்கு மாநிலங்களாகப் பிரித்தார். சுல்தான் அலாவுதீன்ஷா நேர்மையான ஆட்சியாளர். மக்களால் விரும்பப் பெற்றவர். படை வீரர்களும் மக்களும் அமைதியான நிறைவு பெற்ற வாழ்க்கை வாழ்ந்தனர். பாமன்ஷாவிற்கு நல்வாய்ப்புக்கள் கிடைத்ததற்குக் காரணம் முகமது பின் துக்ளக்கின் மறைவும், தக்காணத்தில் இழந்த பகுதிகளை மீட்க வேண்டும் என்ற ஆர்வமும் பிரோஸ் துக்ளக்கிடம் இல்லாமையே ஆகும்.

முதலாம் முகமதுஷா (1358—73): அலாவுதீன அடுத்து அவர் மூத்த மகன் முதலாம் முகமதுஷா ஆட்சிக்கு வந்தார். பாமினியின் சிறந்த அரசர்களில் ஒருவராக எண்ணப்படுகின்றார். அரசின் உறுப்புக்களான அமைச்சரவை, படை, மாநில ஆட்சி ஆகியவற்றைச் சீர்படுத்தினர். வாழ்நாள் முழுவதும் வாரங்கல்லுடனும், விஜய நகரத்துடனும் போரிட்டுக் கொண்டிருந்தார். வீரத்துடன் போரிட்ட இந்துக்கள் இவரால் தோற்கடிக்கப் பட்டனர். முகமதுஷா ஒரு லட்சம் இந்துக்களின் உயிரைப் பழிவாங்காமல் உயிர் விடுவதில்லை என்று சபதமிட்டார். பாமினி அரசிலிருந்த பொற்கொல்லர்கள் முதலாம் முகமதுவினால் அச் சிடப்பட்ட பொன் நாணயங்களை உருக்கித் தங்கமாக அனுப் பியதை விஜய நகர மன்னர்கள் மீண்டும் தம் நாணயமாக அச்சடித்துப் பயன்படுத்தியது பாமினி அரசருக்குச் சினத்தை ஏற்படுத்தியது. அதுமட்டுமின்றி முதலாம் புக்கர் ராய்ச்சூர் ஆற்றிடைப் பகுதியைத் தமக்கு விட்டுத்தர வேண்டி பேச்சு வார்த்தை நடத்தினர். அது பலன் அளியாது போகவே போர் தொடங்கியது. அப் போரில் இந்துக்கள் தோல்வியுற்றனர். இவர் வாரங்கல் அரசரான கபாயநாயக்கரைத் தோற்கடித்தார். அவரிடமிருந்து கோல்கொண்டாவையும் பெரும் திறைப் பொருட்களையும் பெற்றார். விஜய நகர அரசரான புக்கரைத் தோற்கடித்ததோடு அல்லாமல் குழந்தைகளையும் மகளிரையும் கொன்று குவித்தனர். பாமினி மன்னர் விஜய நகர நாட்டில் பெரும்சேதம் விளைவித்த போதிலும் அந் நாட்டின் தலைநகரைத் தாக்காமல் விடுத்தார்.

முகமதுஷா சிறந்த ஆட்சியாளர் என்று பேராசிரியர் ஷெர் வாணி கருதுகின்றார். படை வீரர்களையும், குடிமக்களையும், அதிகாரிகளையும் அன்புடன் நடத்தினர் என்று கூறப்படுகிறது.

இவர் காலத்தில் தக்காணம் கல்வியறிவு பெற்ற புலவர்களின் நிலைக்களனுய் விளங்கியது. ஷேக்-உய்-முஷாய்டு, ஜயின் உத்தீன், அயின்—உத்தீன், மௌலானு, நிஜாம் உத்தினுன், ஹக்கீம், ஜாகீர் உத்தீன் போன்ற கல்வியில் தேர்ந்த அறிஞர்கள் இவர் காலத்தே வாழ்ந்தனர். நாட்டில் மதுவை விலக்கினுர். அவரது நீதி, நகர்க் காவல், வரி வசூல் நிர்வாகத் துறைகள் திறமையாகப் பணியாற்றின. பல முறை தம் நாட்டைச் சுற்றி வந்து அலுவலாளர்கள் எங்ஙனம் பணிபுரிகின்றனர் எனக் கண் காணித்தார். எட்டு பேர் கொண்ட அமைச்சர் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. 1373இல் உயிர் துறந்தார்.

அலாவுதீன் முஜாஹித்ஷா (1373—78): கி. பி. 1373இல் முகமதுஷா இறந்த பின்னர் அவருடைய மகன் அலாவுதீன் முஷாஹித்ஷா அரியணை ஏறினுர். விசய நகரப் பேரரசிற்கு எதிராக இவரால் இரண்டு படையெடுப்புக்கள் மேற்கொள்ளட் பட்டன. ஆனுல் இவர் மேற்கொண்ட இரண்டு படையெடுப்புக் களும் தோல்வி அடைந்தன. இதற்குக் காரணம் விசய நகரப் பேரரசு நன்கு வளர்ச்சி பெற்றதே ஆகும். சுல்தான் சமாதான உடன்படிக்கை ஒன்றினை மேற்கொண்டார். முஜாஹிதீன் மாமனுன தாவூதுகான் சுல்தானைக் கொன்று அரசைக் கைப் பற்றினுர். ஆனுல் தாவூதும் நீண்ட நாட்கள் ஆட்சியில் இருந் திடவில்லை. அவரும் கொல்லப்பட்டார். அவருக்குப் பின்னர் அலாவுதீன் பாமன்ஷாவின் பேரன் இரண்டாம் மகமது பாமினி யின் அரசரானுர்.

இரண்டாம் முகமதுஷா: அமீர்களும் உயர் குடியினரும் 1378இல் முகமதுஷாவை அரியணை ஏற்றினர். முகமதுஷா அமைதியை விரும்பியவர். போர் இல்லாமையால் இவர் தம் பொழுதை இலக்கியங்கள் படிப்பதிலும், விஞ்ஞானம் படிப்பதிலும் கழித்தார். மசூதிகளை அமைத்த அவர் பொதுப் பள்ளிகளை அமைத்தார். இவருடைய காலத்தே கிளர்ச்சிகள் ஏதும் நடை பெறவில்லை என்று கூறப்படுகிறது. உயர் குடியினரும், அரசு அலுவலகரும், விசுவாசத்துடன் செயல்பட்டனர் கற்றறிந் தோரை ஆதரிக்கும் இவரது தன்மையினை உணர்ந்த புலவர்கள் இவரை நாடினர். அரசன் என்பவன் எப்படிப்பட்டவனுயிருத்தல் வேண்டும்? அரசுரிமையை எங்ஙனம் காத்திடல் வேண்டும்? என்பதிலே உயர்வான கருத்துக் கொண்டிருந்தார். அரசர்கள் அறங்காவலர்களைப் போன்றவர்கள், நாட்டுடைமையனைத்தும் அரசனின் உடைமையல்ல ஆண்டவனின் உடமை. அதைப் பொறுப்புடன் நிருவகித்திட வேண்டும் என்று கருதினுர். மக்கள்

நலன் கருதி ஆட்சி செலுத்திய அவர் பஞ்சம் ஏற்பட்டபோது ஆயிரம் எருதுகளில் உணவைப் பிற பகுதிகளில் இருந்து கொண்டு வரச் செய்தார். இவருடைய மைந்தர்கள் கியாஸ் உத்தீனும், ஷம்சுத்தீனும் சுமார் ஆறு மாதங்களே ஆட்சி செலுத்தினர். அலாவுதீன் ஹஸன்ஷாவின் பேரனான பிரோஸ் குல்பார்க்கா வந்து ஆட்சியைக் கைப்பற்றி ஆட்சி நடத்தத் தொடங்கினர். அப்போது பதவியில் இருந்த சுல்தான் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார்.

பிரோஸ்ஷா (1397—1422) : பிரோஸ்ஷா ஆட்சி செலுத்திய இருபத்தாறு ஆண்டுகளில் பலமுறை விசயநகர மன்னரோடு போரிட நேரிட்டது. விசயநகரமும், பாமினி அரசும் பரம்பரைப் பகை நாடுகளாக மாறிவிட்டன. 1398இல் இரண்டாம் ஹரிஹரர் இராய்ச்சூர் படையைக் கண்டதும் பின்வாங்கினர். பிரோஸ் எங்கும் வெற்றிக்கொடி நாட்டிப் பெரும் பொருளுடன் திரும்பினர்.

1399இல் கோண்டுவானா மன்னரை வென்றார். 1401இல் தக்காணம், மாளவம், குஜராத் மாநிலங்களுக்குத் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். விசயநகரத்தை முற்றுகையிட்டுத் திரும்பி வருகையில் தேவராயரின் படைகளைச் செம்மையாகத் தாக்கி, அவருடைய பெண்களில் ஒருத்தியை மணந்து கொண்டார். வாரங்கல் மீது 1417இல் படையெடுத்துச் சென்று வென்றார். பிரோஸ் இவ் வமிசத்து சிறந்த அரசர்களின் வரிசையில் வைத்து எண்ணப்படுகின்றார். இவருடைய மரபின் மற்றைய அரசர்களைப் போலவே கற்றறிந்தோரைப் போற்றிப் பேணினர். இவருடைய அரண்மனையின் அந்தப்புரத்தில் இந்தியாவின் பல பகுதிகளைச் சேர்ந்த அழகிகள் பலர் இருந்தனர். இவர் பல மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவராக விளங்கியமையால் அவர் களோடு, அவர் தம் மொழியில் பேசி உறவாடினர் என்பர். இவர் ஓர் அறிவு சான்ற அரசராகக் கருதப்படுகின்றார். பிரோஸா பாத் என்னும் நகரினை உருவாக்கினர். பிரோஸ் கி.பி. 1422இல் இறந்தார்.

அகமது ஷா : பிரோஸ் தம்முடைய சகோதரருக்காக அரியணையைத் துறந்தார். கி.பி. 1425இல் அகமது ஷாவினால் தலைநகரம் மாற்றப்பட்டது. இதுவரை தலைநகராக இருந்த குல்பார்க்காவிற்குப் பதிலாக பீடார் தலைநகராயிற்று. தமது முன்னோர்கள் கொண்டிருந்த பகை உணர்வைத் தாமும் விசய நகரின் மேல் கொண்டு ஆட்சி செலுத்தினர். விசய நகர அரசர்

இரண்டாம் தேவராயருக்கு எதிராகப் படை நடத்திச் சென்று, தலைநகரைத் தாக்கிப் போரில் வெற்றி பெற்றார். இதன் பின்னர் வாரங்கல்லிற்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டார். வாரங்கல் அரசர் போரில் தோற்கடிக்கப்படவே வாரங்கல் பாமினி அரசுடன் இணைக்கப்பட்டது. மாளவத்திற்கு எதிராக மேற்கொண்ட போர் நடவடிக்கைகளில் வெற்றி கண்ட இவர் குஜராத்தைக் கைப்பற்ற மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்க வில்லை. அகமது ஷா சமயப் பொறையின்மை இல்லாதவர். இஸ்லாமிய சமயத்தின்பால் தீவிரப் பற்றுக் கொண்டவர். இவரும் கற்றறிந்த பெரியோர்களை ஆதரித்தவரே. சுல்தானைப் புகழ்ந்து இரண்டு பாடல்கள் பாடிய ஷேக் ஆஸாரி என்பவருக்கு ஏழு இலட்சம் தக்காணத்து டங்கா நாணயங்களை வழங்கினர். மக்கள் நலனில் அக்கறை கொண்ட இவர் பஞ்ச காலங்களில் மக்களுக்குத் தேவையான தானியங்களை இலவசமாக வழங்கினர்.

இரண்டாம் அலாவுதீன் ஷா (1436—58): அகமது ஷாவிற்குப் பின்னர் அவருடைய மகன் இரண்டாம் அலாவுதீன் ஆட்சிக்கு வந்தார். இவருடைய காலத்தில் பதவியைப் பிடித்திட உள்நாட்டுப் போர் நடைபெற்றது. இவருடைய சகோதரர் முகமதுவே அதனைத் தொடங்கித் தோல்வி கண்டார். முகமதுவை மன்னித்தார். கொங்கனை அடிபணியச் செய்தார். தேவராயர் முஸ்லீம்களின் வெற்றிக்குக் காரணம் பெரும்படை யென்று கருதி முஸ்லீம்களையும் தமது படையில் சேர்த்தார். பாமினி அரசுக்கும், விசயநகர அரசுக்கும் வெற்றி மாறி மாறிச் சேர்ந்தது. இறுதியில் தேவராயர் சமாதான உடன்படிக்கை யினை மேற்கொண்டார். தான் மது அருந்திய போதிலும் அதனைத் தடை செய்தார். தந்தையினுல் சிறப்பான முறையில் கல்வி கற்பிக்கப்பட்டிருந்தார். அலாவுதீனிடம் காணப்பட்ட சில சிறப்பான குணங்களுக்காகப் பாராட்டப்படுகிறார். இவரும் தீவிர இஸ்லாமிய சமயபற்றுக் கொண்டவராகவே விளங்கினர். இறுதிவரை வீரத்துடன் போராட வேண்டும் என்ற எண்ணம் கொண்ட இவர் 1458இல் போரினுல் ஏற்பட்ட காயத்தினுலேயே இறந்தார்.

ஹுமாயூன்: அலாவுதீனுக்குப் பின்னர் அவருடைய மூத்த மகன் ஹுமாயூன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். கொடுங்கோன்மையின் மொத்த வடிவமாக விளங்கினர் இவர். வரலாற்றில் புகழ்பெற்ற கொடுங்கோலர் களான நீரோ போன்றவர்களின் வரிசையில் வைத்து எண்ணப் படுகின்றார். கொடுங்கோலனை இவ் வரசனுக்கு உதவி புரிந்தவர் மகமது காவன் என்னும் அமைச்சராவார். ஹுமாயூன்

'மனித உருவில் திரிந்த ஒரு பேய்' என்றே மக்களால் கருதப் பட்டார். அவரது கொடுமையையும் தீய பழக்க வழக்கங் களையும் ஒருவராலும் கட்டுப்படுத்திட இயலவில்லை. இவருடைய கொடுமையான இயல்புகளால் இவரை ஸலீம் (கொடுமையாளர்) என்று பெயரிட்டனர். நாடெங்கிலும் பல எதிர்ப்புக்களை இவருடைய ஆட்சிக்காலம் கண்டது. பல கொடுமைகளின் மொத்த வடிவமான இவர் 1461இல் இறந்தார்.

நிஜாம் ஷா (1461—63): ஹுமாயூனிற்குப் பின்னர் அவருடைய மகனான நிஜாம் ஷா 1461இல் அரியணை ஏறினார். இவர் அரியணை ஏறியபோது எட்டு வயதுச் சிறுவனாக இருந் தமையால் மறைந்த மன்னரின் மனைவி, மாமூது காவன், குவாஜா ஜஹான் ஆகியோர் அடங்கிய ஆளுநர் குழு ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டிருந்தது. ஒரிசா, தெலிங்கானா அரசுகளின் படைகள் இணைந்து பாமினியின் பகுதிகளில் ஊடுருவல்களை மேற்கொண்டன. ஆனால் அப் படைகள் புறமுதுகிட்டு ஓடின. மாளவச் சுல்தான் மாமூது கில்ஜி பாமினி அரசின்மீது படை யெடுத்துப் படைகளை முறியடிக்கவே, மாமூது காவன், குஜராத் ஆளுநரை உதவிக்கு அழைத்தார். அவரின் உதவி தக்க தருணத்தில் கிட்டியமையால் மாளவச் சுல்தான் தோற்று ஓட நேர்ந்தது. மற்றொரு முறையும் அவர் படையெடுத்திட மேற் கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்தன. கி.பி. 1463இல் நிஜாம் ஷா இறந்தார். நிஜாம் ஷாவிற்குப் பின்னர் அவர் இளைய சகோதரர் மூன்றாம் முகமது ஷா ஆட்சிக்கு வந்தார்.

மூன்றாம் முகமது ஷா (1463-82): மூன்றாம் முகமது ஷா பதவியேற்ற போது அவருக்கு ஒன்பதே வயது நிரம்பப் பெற்றிருந்தது. குவாஜா ஜஹான் அரசுக் கருவூலத்துச் செல்வங்களைக் கையாடல் செய்த குற்றத்திற்குக் கொலை செய்யப்பட்டவுடன் மாமூது காவன், குவாஜா ஜஹான் என்ற பட்டத்துடன் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டார். சுல்தானின் படையெடுப்புகளில் காவன் குறிப்பிடத் தகுந்த பங்கினை வகித்தார். முகமது ஷாவின் போர் நடவடிக்கைகள் வெற்றிப்பட்டியலைக் காட்டிய போதும், சுல்தான் மனநிலை சரியில்லாதவராகத் தோன்றினர். இதற்குக் காரணம் அவரிடம் காணப்பட்ட குடிப்பழக்கமே ஆகும். திறமை மிக்க மாமூது காவனின் மறைவிற்குக் காரணமாக இருந்த இவர் பாமினி அரசின் வீழ்ச்சிக்கும் காரணமானவராக மாறினர். அழிவுச் சக்திகளைத் தடுத்து நிறுத்திய மாமூது காவனைத் தொலைத்த

வுடன், பிளவுச் சக்திகள் மெல்லத் தலைதூக்கத் தொடங்கின. மாமூது காவனின் பணிகளை நினைவுகூருதல் அவசியமே ஆகும்.

மாமூது காவன்: பாமினி அரசு என்றவுடனே ஒருவருடைய நினைவிற்கு வருகின்ற பெயர் மாமூது காவனின் பெயராகவே இருக்கும். அத்தகைய சிறப்புப் பெற்ற காவனின் வாழ்க்கை ஒரு தனி வாழ்க்கை. எந்த பாமினி அரசிற்காகப் பாடுபட்டாரோ அந்த பாமினி அரசிற்குச் சேவை செய்தே உயிர் விட்டார்.

இளமைப்பருவம்: நிஜாமுத்தீன் மகமது பின் முகமது காவன் கிலானிஎன்பது இவருடைய இயற்பெயராகும். காஸ்பியன் கடலின் மேலக் கரையோரம் இருந்த கிலான் என்னும் நாட்டில் பிறந்தவர் என்பதை இவருடைய பெயரின் கடைசியில் காணப்படும் கிலானி என்பது எடுத்துக் காட்டுகிறது. காவன் என்பது ஈரானிலுள்ள காவன் என்னுமிடத்தைக் குறிக்கும். காவனுக்கு வாணிபம் செய்வதில் ஆர்வம் இருந்தது. இவர் உயர் குடியில் பிறந்தவர். இவர் தக்காணத்திற்கு வாணிபம் செய்ய வந்தபோது இவருக்கு வயது 45.

பாமினி அரசு அலாவுதீன் அகமதினால் ஆளப்பட்டு வந்த போது காவன் அதனை அடைந்தார். அலாவுதீன் இவரை ஓர் அமீராக நியமித்தார். பின்னர் ஆயிரம் படை வீரர் கொண்ட படைக்கு மான்சப்தாராக நியமித்தார். அலாவுதீன் இறந்து விடவே ஹுமாயூன் அடுத்து பதவியேற்றார். இவர் தம் திறமையையும், ஆற்றலையும் அறிந்த ஹுமாயூன் இவருக்கு 'மலிகுட் துஜ்ஜர்' என்ற விருதினை அளித்துக் கௌரவித்தார். ஹுமாயூனுக்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்ட நிஜாம்ஷா வயதில் இளையவனாயிருக்கவே அவன் வயது வரும்வரை, அவ்விளவரசனின் அன்னை, காவன், குவாஜா, ஜஹான் மூவரும் இணைந்து நாட்டின் ஆட்சிப் பொறுப்பினை நிருவகித்தனர்.

ஒரிஸ்ஸாவின் இராய்களும், தெலுங்கானாவின் அரசர்களும் ஒருங்கிணைந்து எதிர்த்த எதிர்ப்பைக் காவன் மிகத் திறமையாகச் சமாளித்தார். குவாஜா ஜஹானும், மாமூது காவனும் படை நடத்தி வந்த மாளவ அரசன் மாமூது கில்ஜியைத் தடுத்து நிறுத்தினர். மூன்றும் மகமதுஷாவிற்கு ஆட்சிப் பொறுப்பினை மேற்கொள்ளும்போது எட்டு வயதே ஆகியிருந்தமையால், மூன்று பேர் சேர்ந்த குழுவே கவனித்து வந்தது. மூன்று பேரில் ஒருவரான குவாஜா ஜஹான் இலஞ்ச ஊழல் குற்றம் சாட்டப்பட்டு உயர் குடியினருள் ஒருவரால் கொல்லப்பட்டார். அதன்

பின்னர் காவன் குவாஜா ஜஹான் என்ற பட்டத்தினைப் பெற்று அரசின் முக்கியமான தலைமை அலுவலராக மாறினார்

உயர்நிலை அடைதல்: மூன்றும் மகமதுவிற்குத் தம் முன்னோர்களைப்போல் புனிதப் போர் நிகழ்த்திட வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படவே சிந்து அரசர்களுக்கு எதிராக மாமூதுவின் தலைமையில் படை ஒன்றினை அனுப்பி வைத்தார். இப் படை கொங்கணப் பிரதேசத்தை அடைந்து கோட்டைகள் பலவற்றைக் கைப்பற்றியது. இவ்வாறு வெற்றிமீது வெற்றி பெற்று வந்த காவனுக்கு ஏராளமான பட்டங்களை வழங்கிக் கௌரவித்த சுல்தான் அரசவையில் இருந்த உயர் குடியினருள் தலைமை யானவர் என்ற நிலையில் இவரை உயர்த்தினார். ஒரிஸ்ஸா அரசனுக்கு எதிராகப் படை நடத்திச் சென்று அம் மன்னனை திறை செலுத்தச் செய்தார். அதுபோன்று பெரும்படையுடன் எதிர்த்த நரசிம்ம இராயனையும் தோற்கடித்தார். பாமினி அரசிற்குத் திறை செலுத்தி வந்த அமீர்ராயின் தலைமையில் தெலிங்கானாவில் எழுந்த கிளர்ச்சியை ஒடுக்கியதிலும் இவருடைய பங்கு குறிப்பிடத்தக்கது ஆகும்.

ஆட்சித்துறைப் பணிகள்: நாட்டில் இருவகைப் பிரிவினர் ஆட்சி நிருவாகப் பொறுப்பினை மேற்கொண்டிருந்தனர். முதலாவது வகையினர் தக்காணத்தைச் சேர்ந்தவர்கள். இரண்டாவது வகையினர் அரேபியர்கள், பாரசீகர்கள், முகலாயர்கள், துருக்கியர்கள் போன்றவர்கள். இரு பிரிவினருக்குமிடையே ஒற்றுமையின்மை காணப்பட்ட போதிலும் சுல்தானின் அன்புக்குப் பாத்திரமானவராக இவர் விளங்கினார்.

இவருடைய கண்களுக்குப்படாமல் எந்தத்துறை நிருவாகமும் தப்பியது இல்லை. நாட்டின் பொருளாதாரத் துறையை உன்னிப் பாகக் கவனித்துக் கொண்டார். கிராமப் புறங்களில் இருந்த நிலங்களின் அளவைக் கண்டறியச் செய்து வரிவசூலைச் சீர் படுத்தினார்.

முதலாம் முகமதின் காலத்தில் அரசு நான்கு தரப்தார்களின் கீழ் இயங்கும் நான்கு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன என்று கண்டோம். அப்போது இருந்த நிலையில் நான்கு பிரிவாகப் பிரித்தது சரியாயிற்று. ஆனால் கவானின் காலத்தில் அரசு பரப்பில் விரிந்து இருந்தது.

எனவே மாமூது காவன் நாட்டை எட்டு மாநிலங்களாகப் பிரித்தார். தரப்தார்கள் தங்கள் பகுதிகளில் செல்வாக்குப்

பெற்று இருந்தனர். அந்தச் செல்வாக்கைக் குறைத்திடவேண்டி மாநிலங்களின் வரம்பிலிருந்து சில பகுதிகளை அரசின் நேரடி வரம்பிற்குட்படுத்தினர். பழைய மாநிலப் பகுதிகளின் பரப்பில் அரைப்பங்கே இருக்குமாறு புதிய மாநில எல்லைகள் வகுக்கப் பட்டன.

இராணுவத்துறைச் சீர்திருத்தங்கள்: வலிமைமிக்க இராணுவத்தின் மூலமே போரில் வெற்றிபெற இயலும் என்ற போதிலும் இராணுவத்துறை அமைப்பு ஒழுங்காக இருந்திடல் வேண்டும். மாநில ஆட்சி முறையில் எல்லையில்லாத அதிகாரத்தைப் பெற்ற வர்களாக விளங்கியவர்கள் தரப்தார்கள். தரப்தார்களிடமிருந்த வரம்பிலா அதிகாரம் பறிக்கப்பட்டு அவர்களிடம் கோட்டையின் பொறுப்பு மட்டுமே இருந்திடுமாறு செய்யப்பட்டது. மற்றையக் கோட்டைகளின் பொறுப்பு கிலாதார்கள் எனப்பட்ட தளபதிகளின் கீழ் விடப்பட்டது. மான்சாப்தாரி முறையில் மாறுதல்களைச் செய்வித்தார். இன்ன எண்ணிக்கை உள்ள மான்சாப்தார் இன்ன எண்ணிக்கை உள்ள படையினை வைத்திருக்க வேண்டும் என விதி செய்யப்பட்டது. மான்சப் தார்கள் ஊதியமாகப் பெறுது, நிலமான்யமாகப் பெற்றிருந்த முறையை மாற்றி அவர்களுக்குரிய ஊதியம் நிர்ணயிக்கப் பட்டது. குறித்த அளவு படை வைத்திருக்கவில்லையெனில் அதற்கேற்ற வகையில் ஊதியக் குறைப்பு செய்யப்பட்டது. கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் எல்லைகள் வகுக்கப்பட்டன. நாட்டின் வருவாயைக் கணக்கிடும் முறை முழுமையாகப் பரிசீலிக்கப்பட்டது. இவ்வாறு வருவாய்த் துறையிலும் சீர்திருத் தங்களைப் புகுத்தி ஆட்சி அமைப்பில் மாறுதல்களைச் செய் வித்தார். சிறந்த போர் வீரர் மட்டுமல்லர், சிறந்த ஆட்சியாளர் என்பதையும் காவன் நிரூபித்துக் காட்டினர்.

காவனின் மறைவு: பாமினி அரசு உருவாக்கப்பட்டத் திலிருந்தே ஆப்கானியர், முகலாயர் போன்ற பல்வேறு குடி யினரும் நாட்டின் அரசியல் வரலாற்றில் நல்ல செல்வாக்கைப் பெற்றிருந்தனர். இவர்கள் இந்தியப் பெருநாட்டின் செல்வத்தைத் திரட்டிச் செல்லவும், போர்களில் கலந்து கொண்டு தமது திறமையை வெளிக் காட்டவும் உலகின் பல பாகங்களில் இருந்து இந்தியாவிற்கு வந்தனர். அவ்வாறு வந்தவர்களின் திறமை யினைக் கண்ட சுல்தான் அவர்களைச் சிறப்பாக நடத்தினர். சுல்தான் இவ்வாறு அவர்களை நடத்தியதைக் கண்ட தக்காணத்து முஸ்லீம்கள் அதனை விரும்பவில்லை. தங்களுடைய பகைவர்களாக அவர்களை எண்ணத் தலைப்பட்டனர். அகமது ஷாவின் காலத்தில் தக்காணத்து முஸ்லீம்கள் ஏற்றம் பெற்ற

போது, அயல் நாட்டிலிருந்து வந்து இந்தியாவில் குடியேறிச் சுல்தானின் சிறப்பைப் பெற்றவர்களைக் கொலை செய்தனர். சில போர்களில் சுல்தானுக்கு ஏற்பட்ட தோல்விக்கு அயற் பெருங் குடியினரே காரணம் என்று சுல்தான நம்ப வைத்தனர். ஆனால் நாளடைவில் அவர்களுடைய தீச்செயல்கள் கண்டுபிடிக்கப் பட்டுத் தண்டிக்கப்பட்டனர். எனவே அதற்கு வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பை எதிர்பார்த்திருந்தனர்.

எனவே தக்காணிய உயர் குடியினர் மாமூது காவனைப் பழி வாங்கிட எண்ணங்கொண்டு சதிபுரியத் தொடங்கினர். ஏன் என்றால் அயல்நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்களில் மிகச் சிறப்பான இடத்தை அரசில் வகித்தவர் இவரே. இதற்காக அவருடைய வேலையாளிற்குக் கையூட்டு அளித்து, வெள்ளைத் தாள் ஒன்றில் அவருடைய முத்திரையைப் பெற்றுக்கொண்டு காவனைச் சதிகாரர் எனக் காட்டக்கூடிய செய்திகளை எழுதி வைத்தனர். அது நரசிங்க இராயருக்கு இரகசியமாக எழுதப் பட்டது எனக் கூறினர். சுல்தான் அதனை முழுமையாக நம்பி, உண்மை என்ன என்பதைக்கூடப் பரிசீலித்திடாது, காவனைக் கொல்லுமாறு குடிவெறியில் ஆணையிட்டார். காவன் அரசரின் ஆணைக்குக் கட்டுப்பட்டு உயிரிழந்தார். நாட்டின் உயர்வுக்கு அல்லும் பகலும் பாடுபட்ட நல்லோனின் உயிரைப் பழிவாங்கி விட்டோமே என்று பின்னரே செய்தி அறிந்து சுல்தான் வேதனைப்பட்டார்.

சுல்தானின் இச் செயல் அவருடைய நிலையைப் பலவீனப் படுத்தியது. பாமினி அரசின் சிதைவிற்கும் வழி வகுத்தது. எனவேதான் அறிஞர்கள் 'காவனின் மறைவுடன் பாமினியின் ஒற்றுமைக் கூறுகளும், அதிகாரமும் மறைந்தன' என்று குறிப்பிடுகின்றனர்

மதிப்பீடு: இடைக்கால இந்திய வரலாற்றில் இராசதந்திரம் மிக்கவர்களில் ஒருவராக மாமூது காவன் வைத்து எண்ணப் படுகின்றார். 'காவன்' என்றாலே 'ஈடுபாடு' என்று பொருள் கூறத்தக்க அளவில் அவர் செயல் திறம் அமைந்திருந்தது. பாமினி அரசின்பால் ஈடுபாடு கொண்டிருந்தார், மக்களின்பால் ஈடுபாடு கொண்டிருந்தார், ஆட்சித்துறை நிருவாகத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார்.

ஏழை மக்களின் நலனை எப்போதும் கருத்தில் கொண்டிருந்தார். எளிய வாழ்க்கை மேற்கொண்டிருந்த அவர் விரும்பியிருந்தால் எப்போதோ சுல்தானுக்கூட மாறியிருக்கக்கூடும் அள

விற்குச் செல்வாக்குப் பெற்றபோதும் அவ்வாறு செய்திடாது கடமை வீரராகவே பணியாற்றினர். தன்னுடைய அயராத உழைப்பிலேயே அத்தகைய உயர்ந்த ஓர் இடத்தை வகித்தார் என்ற போதிலும், மிக எளிய வாழ்க்கை வாழ்ந்தார். பஞ்சணையைத் துறந்து பாயில் படுத்துறங்கி, பாணியிலே உணவு சமைத்துப் பசியாறிய அவர் வெள்ளிக்கிழமை இரவுகளில் சாதாரணமான ஆடையணிந்து வெளிச்சென்று, வசதியற்றவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து திரும்புவார். தனக்கென்று மிகக் குறைந்த அளவு பொருளை வைத்துக்கொண்டு மீதியை அறப்பணிக்குப் பயன்படுத்தினர்.

இவர் நூல்களைக் கற்பதிலே பேரார்வம் கொண்டிருந்தார். இவருடைய நூலகத்தில் மட்டும் 3000 நூல்கள் இருந்தன கணக்கில் புலியாக விளங்கிய இவர் மருத்துவம் இலக்கியம் ஆகிய துறைகளிலும் சிறப்புறத் திகழ்ந்தார். இவ்வளவுச் சிறப்புக்கள் இருந்த போதிலும் இவரிடத்துக் காணப்படும் குறைபாடு சமயப் பொறையின்மை இன்றிக் கொஞ்சமும் ஈவு இரக்கமின்றி முஸ்லீம் அல்லாதவர்களைக் கொன்று குவித்ததே. இவர் இன்னும் சிறப்பான இடத்தை வகித்து இருக்க வேண்டியவர். ஆனால் அவ்வாறு அமைந்திட முடியாமற் போனதற்கு இவர் வாழ்ந்த காலச் சூழ்நிலையே காரணம் என்று கூறவேண்டியுள்ளது. ஆடம்பரமும், டாம்பீகமும் நிறைந்த அக் காலத்தில் எளிமையான வாழ்க்கையினை மேற்கொண்ட இவருடைய செயல் புதுமையானதாய் இருந்தது. மற்றவர்கள் தங்கள் நலனை முன்னிருத்தி நாட்டு நலனைப் பின்னிருத்துவர். ஆனால் இவர் நாட்டு நலனையே முன்னிருத்தினர்.

இவருடைய மறைவினால் பாமினி அரசு அழிந்தது என்று கூறினாலும் மிகையாகாது. ஏனென்றால் வலிமைமிக்க தூண் இல்லையென்றால் அக் கட்டிடம் எத்தனை நாளைக்குத்தான் நிலைத்திடும்? எனவே பாமினி அரசை நிலைபெறச் செய்த தூண் என்று காவலைக் குறிப்பிடலாம்.

பாமினி அரசின் வீழ்ச்சி : 1482இல் முகமதுஷா மறைந்தார். அவருக்குப் பின்னர் அவர் தம் மைந்தர் மாமூதுஷா ஆட்சிக்கு வந்தார். இவர் திறமையற்றவர். பிளவுச் சக்திகளைத் தடுத்து நிறுத்திடும் ஆற்றல் அற்றவர். பாமினி அரசு அளவில் குறுகத் தொடங்கியது. 1518இல் இவர் இறந்த பின்னர் பாமினி அரசு முடிவிற்கு வந்தது எனலாம். 1524இல் ஆட்சிக்கு வந்த கலீம் உல்லா ஷா எனப்படும் கடைசி அரசர் பாபரின் உதவியை

நாடினார். ஆனால் அவர் எதிர்பார்த்த உதவி கிட்டவில்லை. 179 ஆண்டு கால ஆட்சிக்குப் பின்னர் பாமினி அரசு சாய்ந்து ஐந்து கிளைகளாகப் பிரிந்தது.

ஐந்து சுயேச்சையான அரசுகள்

(1) பீராரைச் சேர்ந்த இமாத்சாஹி மரபு
(2) அகமது நகரைச் சேர்ந்த நிஜாம் ஷாகி மரபு
(3) பீஜப்பூரைச் சேர்ந்த அடில்ஷாகி மரபு
(4) கோல்கொண்டாவைச் சேர்ந்த குதுப்ஷாஹி மரபு
(5) பீடாரைச்சேர்ந்த பரீத்ஷா மரபு என அழைக்கப்படுகின்றன.

பாமினி அரசைப் பற்றிய மதிப்பீடு: பாமினி அரசில் மொத்தம் 14 அரசர்கள் ஆட்சி செய்தனர். அவர்களில் மிகச் சிலரைத்தவிர மற்றவர்கள் இரத்தவெறி பிடித்த கொடுங்கோலர்களாகவே இருந்தனர். இந்துக்களைக் கொடுமைப்படுத்தி ஆட்சி நடத்துவது எளிதான தல்ல. அவர்களுடைய ஆதரவு இருந்தாலே ஆட்சி சிறப்புற அமையும் என்பதை அக்பருக்கு முன்னர் ஆட்சி செலுத்திய முஸ்லீம்கள் அனைவருமே மறந்து விட்டிருந்தனர்.

காவனின் காலம் தவிர்த்த மற்றையக் காலங்களில் திறமை மிக்க ஆட்சி இருந்திடவில்லை. கிராம ஆட்சி முறையே தொடர்ந்து நடந்து வந்தது. வருவாய்த் துறையில் காவனின் காலத்தில் செய்யப்பட்ட மாறுதல்கள் பலனறிந்த போதிலும், ஆட்சியின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட அவை அழிவினின்று அதனைக் காத்திடப் போதுமானவையாக இருக்கவில்லை.

ஆடம்பரமான வாழ்க்கை முறையினைப் பாமினி சுல்தான்கள் மேற்கொண்டதன் விளைவாக அரசக் கருவூலம் தேய்ந்தது. இடைக்கால இந்தியாவில் நிலவிய சூழ்நிலையே அதுதான். பாமினி அரசர்கள் கலைகளின் புரவலர்களாக விளங்கினர். கற்றறிந்த அறிஞர்களின் தொடர்பைப் பெரிதும் விரும்பினர். அறக்கட்டளைகள் பலவற்றை இஸ்லாமியக் கல்வியைப் பரப்புதற் பொருட்டு, ஏற்படுத்தி வைத்தனர்.

மிகப் பெரிய அளவிலான மாளிகைகள் எதனையும் கட்டி வைக்கவில்லை என்ற போதிலும், பீடார் அழகிய கட்டிடங்கள் நிறைந்த நகரமாகவிளங்கிற்று என்பதை வரலாற்றுச் சான்றுகள்

நினைவுபடுத்துகின்றன. கட்டிடக்கலைச் சிறப்பிற்கு குவாலிகார், நார்லுல்லா கோட்டைகள் எடுத்துக் காட்டாகப் பேசப் படுகின்றன.

பாமினி அரசர்கள் வரலாற்றில் எல்லோருடைய கண்டனத் திற்கும் ஆளாகத்தக்க சில காரியங்களைச் செய்தனர். மனித உயிருக்கு இவர்கள் உடலுக்குச் சிறிதும் மதிப்பு வழங்கினார்கள் இல்லை. எங்கும் கொலை, கொள்ளை என்னும் நிலை நிலவிற்று. பிற சமயத்தவரையே பூண்டோடு வேரறுத்திடத் திட்டமிட்டனர். அவர்தம் செயல் கண்டிக்கத்தக்கதே.

18. விசயநகரப் பேரரசு


அரசியல் வரலாறு: தோற்றம்—சங்கம வம்சம்—முதலாம் அரிகரர்—முதலாம் புக்கர் — இரண்டாம் அரிகரர் — இரண்டாம் தேவராயர் — இரண்டாம் விருபாட்சர்—சாளுவ வம்சம்—சாளுவ நரசிம்மர்—கிருஷ்ணதேவராயர்—இலக்கியப்பணி — அச்சுததேவராயர் — தலைக்கோட்டைப் போர்- அரவீடு வம்சம், ஆட்சிமுறை: முடிசூட்டு விழா — குறுநிலத் தலைவர்கள் — திருமுழுக்கு — இணை அரசு முறை — சமுதாயம் — பொறுப்பாளர்கள் — வல்லாட்சி — பேரவை அமைச்சரவை — செயலகம் — மாநில ஆட்சி — நாயன்கார முறை—நிலமானிய முறை—கிராமம் — வருவாய்—நிலஅளவை—பங்கு — தொழில்வரி — இராஜுவ வரி — பல்வேறு வரிகள் — நீதி — காவல் படை — இராஜுவம். சமுதாய, சமய, பொருளாதார நிலை.

(வெற்றித் திருநகரம்)

இந்திய வரலாற்றில் சிவாஜியின் காலத்திற்கு முன்னர் சீரும் சிறப்புமாய் முஸ்லீம்களின் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தி, இந்துப் பேரரசை நிறுவி, இந்து சமயத்தினை அழிவிலிருந்து காத்தவர்கள் என்ற பெருமைக்குரியவர்கள் விசயநகரப் பேரரசர்கள் ஆவர். தென்னிந்தியாவின் நீண்டகால வரலாற்றில் முகமதியர்களின் நுழைவு பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்றது. அலாவுதீன் கில்ஜியின் காலத்தில் ஏற்பட்ட இந்த நிலை 1344ஆம் ஆண்டிற்குப் பின்னர் நீடிக்கவில்லை. அதன் பின்னர் சுமார் 250 ஆண்டுகள் தென்னகம் காக்கப்பட்டது. இவ்வாறு தென்னகத்தைக் காத்து, இந்துப் பண்பாட்டின் பெருமையினை நிலை பெறச் செய்தவர்கள் 'ஆனகுண்டி' என்ற பகுதியினை ஆண்ட அரசர்கள். இதுவே விசயநகரப் பேரரசாகப் பெருமையுடன் பின்னுட்களில் திகழ்ந்தது.

விசயநகரப் பேரரசு கி. பி. 1336 இல் உருவாக்கப்பட்டது என்பது விசயநகரப் பேரரசின் வரலாற்றினைத் தொகுத்து அளித்த சீவெல் (Sewell) என்பவர் குறிப்பிட்டு அதற்குச்

சான்றுகளையும் எடுத்துக் காட்டுகின்றார். இபின் பதூதா நியூனிஸ் (Nuniz) ஆகியோரின் கருத்துகளே அச் சான்றுகள். அவர்களின் குறிப்புக்களின் அடிப்படையிலேயே அம் முடிவிற்கு அவர் வருகின்றார்.



படம் 15

விசயநகரப் பேரரசின் தோற்றம் குறித்துப் பலவிதமான செய்திகள் கூறப்படுகின்றன. சில கற்பனையாகத் தொன்று தொட்டுக் கூறப்படுபவை.

தோற்றம்: முகம்மது துக்ளக்கின் ஒன்றுவிட்ட சகோதர ரான பகாவுதீன் குல்பார்காவில் டெல்லியை எதிர்த்துக் கலகம் செய்யவே அவரைத் தண்டிக்க முகம்மது படைகொண்டு சென்ற போது அவர் ஆனகுண்டி மன்னரவையில் தஞ்சம் புகுந்தார். முகம்மது மேலும் துரத்தவே ஆனகுண்டியிலிருந்து வீர வல்லாளர் எனப்படும் ஹொய்சாள மன்னரிடம் சரண் புகுந்தார். ஆனால் மூன்றும் வல்லாளர் முகமதுவிடம் அவரைக் காட்டிக் கொடுத்துவிடவே, பகாவுதீன் சுல்தானால் மிருகத்தனமான முறையில் நடத்தப்பட்டுக் கொல்லப்பட்டார். 1334இல் துக்ளக் ஆனகுண்டியைக் கைப்பற்றி மாலிக் நைப் என்பவரை ஆளுநராக அமர்த்தி வடக்கு நோக்கிச் சென்றார். மக்கள் துக்ளக் சென்ற வுடனேயே கிளர்ச்சி செய்து தேவராயர் என்பவரை ஆட்சி பீடத்தில் அமர்த்தினர். ஏழு ஆண்டுகள் ஆட்சி நடத்திய அவர் வித்யாரண்யர் என்ற ஞானியின் அறிவுரைப்படி விசயநகரினை உருவாக்கினர் என்றும் அதனை வித்யார்ஜுனா (கல்வித் திரு நகரம்) என்று பெயரிட்டு அழைத்தனர் என்றும் கூறப்படுகிறது. வித்யாரண்யர் நினைவாக ஆலயம் ஒன்றும் எழுப்பப்பட்டது என்பர்.

அரிகரர், புக்கர் என்னும் இரு சகோதரர்கள் வாரங்கல் அரச ரிடம் பணி புரிந்தனர் எனவும், அவ்வரசு சிதைக்கப்பட்டவுடன் சிறு குதிரைப் படையுடன் ஆனகுண்டியை அடைந்தனர் எனவும் கூறப்படுகிறது. அவர்களுடன் மாதவர் அல்லது மாதவாச் சாரிய வித்யாரண்யர் சென்றார். வைணவ சமய மத்துவர் இவரே என்பர் சிலர். இவருடைய அறிவுரைப்படி விசயநகரை அரி கரரும் புக்கரும் நிறுவினர் என்ற கருத்தும் உண்டு. மேற்கூறப் பட்டுள்ள கருத்து 'வித்யாரண்ய சிக்கா' எனப்படும் வடமொழி நூலில் காணப்படுகிறது. எவ்வாறு உடனடியாகப் பெரும் அரசை நிறுவினர் என்பது விளக்கப்படவில்லை.

1309இல் முகமதிய ஆளுநரிடம் வாரங்கல் இருந்தபோது இவ் விரு சகோதரர்களும் பணி புரிந்தனர் எனவும், மாலிக்கபூரின் தலைமையில் வாரங்கல்லுக்கு அனுப்பப்பட்ட படையில் இவ் விரு வரும் தலைமை வகித்துச் சென்ற பிரிவு தோல்வியடையவே ஆன குண்டிக்குச் சென்று மாதவரைக் கண்டு அவர் உதவியால் பேரரசை நிறுவினர் எனவும் கூறப்படுவதுண்டு. இதனையே சிறிது மாற்றி படையினைத் தலைமை வகித்த இவர்கள் இருவரும் இந்துக்கள் ஆனமையால் வாரங்கல் அரசரும் இந்துவாகிவிடவே எதிர்த்திட மனமின்றிப் பிரிந்து சென்று தனி அரசை நிறுவினர் என்றும் கூறுவர்.

விசயநகரப் பேரரசை மாதவரே நிறுவியவர் என்னும் கருத்து ஒன்றும் நிலவுகிறது. பூமியில் புதைந்து கிடந்த புதையலைக் கண்டெடுத்த மாதவர் அதைக் கொண்டு அரசு ஒன்றை நிறுவிச் சிறிது காலம் தாமே இருந்து ஆட்சி செலுத்திப் பின்னர் குருபா குலத்தவரான அரிகரர், புக்கர் ஆகியோரிடத்து விட்டுச்சென்றார் என்பதும் ஒரு கருத்து.

கௌடோ என்பவரால் கூறப்படும் செய்தி இது. மாதவர் காட்டில் துறவி வாழ்க்கையினை மேற்கொண்டு இருந்தபோது புக்கர் எனப்படும் ஆட்டிடையன் தினமும் அவருக்கு உணவளித்தான். அவன் செயலைக் கண்டு மகிழ்ந்த அவர் இந்துஸ்தானத்தின் மன்னனாகவும், பேரரசனாகவும் ஆவாய் என்று வாழ்த்தினார். அதைக் கண்ணுற்ற மற்ற இடையர்கள் அவனைத் தம் தலைவனாக்கினர். அதன் பின் புக்கர் அண்டை நாடுகளை வென்று விசயநகரப் பேரரசை உருவாக்கினார் என்று கூறப்படும் இச் செய்தி பல கதைகளின் தொகுப்புப் போன்றே காணப்படுகிறது.

புக்கரும், அரிகரரும் ஆகிய இருவரும் ஹொய்சாள அரசர்களுக்குத் திறை செலுத்தும் அரசர்களாக விளங்கி நாளடைவில் சுயேச்சையாகப் பேரரசை நிறுவினர் என்றும் கருதுவார் உளர். நிகிடின் என்ற இரஷ்யப் பயணி கடம்ப குலத்தைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்தினை விளக்கும் வகையில் 1474ஆம் ஆண்டிலேயே 'பிச்சேநகரில் வாழ்ந்த இந்து சுல்தான் கடம்' என்று குறிப்பிட்டுள்ளார். இத்தனைக் கருத்துகளுக்கும் கதைகளுக்கும் மத்தியில் எதைக் கொள்வது, எதைத் தள்ளுவது என்பது உண்மையில் மிகவும் கடினமானதொன்றேயாம்.

விசயநகர வரலாற்றினை எழுதிய சீவெல் என்பார் கூற்றுப்படி புக்கர், அரிகரர் ஆகிய இரண்டு சகோதரர்களும் வாரங்கல்லின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஆனகுண்டியில் பணிபுரிந்தனர். முஸ்லீம்களின் கொடுமையை எதிர்த்து இந்து சமயத்தைக் காத்திட உறுதி பூண்டனர். ஆனகுண்டி வீழ்ந்த பின்னர், மாலிக் நைப்பை ஆளுநராக நியமித்ததை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்தபோது சுல்தான் முகமது அரிகர புக்கர் ஆகிய இருவரிடமும் ஆட்சியை ஒப்படைத்தார். நாளடைவில் அவ் விருவரும் புதிய மரபை உருவாக்கி ஆளத் தலைப்பட்டனர்.

இக் கருத்தும் மற்றக் கருத்துகளைப் போன்று அநுமானத்தின் பேரிலான பல வரலாற்றுச் செய்திகளின் தொகுப்பே ஆகும். எனவே மேலும் தெளிவு மிக்கச் சான்றுகள் கிடைக்கின்றவரை ஓரளவிற்கு இக் கருத்தினை ஏற்றுக் கொள்ளலாம்.

1335இல் உருவாக்கப்பட்ட விசயநகரம் நாளடைவில் சிறப்புப் பெறத் தொடங்கியது. இம் மரபின் முதல் ஆட்சியாளர் தங்களை அரசர்கள் என்றோ, பேரரசர்கள் என்றோ அழைத்துக் கொள்ளாது தலைவர்கள் என்றே அழைத்துக் கொண்டனர். அப் பொருளில் 1340இல் வெளியிடப்பட்ட பட்டயம் ஒன்றில் அரிகர உடையார் என்ற குறிப்புக் காணப்படுகிறது. 'மகாமண்டலேசுவரன்' என்றும் அழைக்கப்பட்டனர். அது பெருந்தலைவன் என்ற சொல்லே ஆகும். விசயநகரப் பேரரசை நிறுவிய முதல் அரசர்களின் வம்சம் சங்கம வம்சம் என்று கூறப்படுகிறது.

விசய நகரை வெளிநாட்டில் பலப்பலப் பெயரிட்டு அழைத் தனர். பிஜநகர், பிஸ்நகர் என்றெல்லாம் அழைக்கப்பட்ட அந்நக ருக்கு விருபாட்சபுரம், ஹொஸபட்டணம், வித்யா நகரம் என்று பல பெயர்கள் உண்டு. விசயநகர வரலாற்றில் சங்கம, சளுவ, துளுவ, அரவிடு என்ற நான்கு வம்சங்கள் இடம் பெறுகின்றன. இந்துமதக் காப்பாளர்களாகத் தென்னிந்தியாவில் முஸ்லீம்கள் வேரூன்றுவதற்குத் தடைக்கல்லாக விளங்கிய விசயநகரப் பேரரசின் அரசியல் வரலாற்றைக் காண்போம்.

சங்கம வம்சம்

முதலாம் அரிகரர்: இரு சகோதரர்களாலும் நிறுவப்பட்ட இவ் வரசு சங்கமர் என்ற அவர்களின் தந்தையின் பெயராலேயே சங்கம வம்சம் என்று கூறப்படுகிறது. முதலாம் அரிகரர் அரி யணையில் அமர்ந்ததும் தம் எல்லையினை விரிவு படுத்தும் பணி யினை மேற்கொண்டார். கிருஷ்ண நாயகரால் முஸ்லீம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் கலந்துகொண்ட இவர் ஹொய்சாள மரபின் இறுதி மன்னர் விருபாக்ஷ வல்லாளன் இறந்தவுடன் அவர் ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதிகளைத் தம் ஆட் சியின் கீழ்க் கொண்டுவந்தார்.

ஆனகுண்டியிலிருந்து தலைநகரத்தை வித்யா நகரம் என அழைக்கப்பட்ட விசயநகரத்திற்கு மாற்றினார். நெல்லூர் மாவட் டத்தில் உதயகிரி அரண் இவரால் கட்டப்பட்டது. ஹம்பியில் தன் குருவின் நினைவாக ஆலயம் ஒன்று எழுப்பினார். இபின் பதூதா இவரை அரைப். அரீப் என்றழைக்கின்றார். அரிகரர் 1336லிருந்து 1343 வரை ஏழாண்டுகள் ஆட்சி புரிந்தான். அரிகரரின் ஏழாண்டுகால அரசியல் வாழ்க்கை அமைதியாகவே கழிந்தது எனலாம்.

1356இல் வெளியிடப்பட்டுள்ள பட்டயம் ஒன்றில் அரிகரர் 'சுல்தானைத் தோற்கடித்தார்' என்று கூறப்பட்டிருப்பதிலிருந்து முகம்மது துக்ளக்குடன் போர் நிகழ்த்தியிருக்கக்கூடும் என்று

கம்பப்படுகிறது. 1346இல் நான்காம் வல்லாளர் இறந்த பிறகு தென்னாட்டில் பெரும்பகுதி அரிகரரின் ஆட்சிக்குட்பட்டது. அவருடைய சகோதரர் மகனான குமார கம்பணர் தென்னாட்டில் படையெடுத்து மாவார் சுல்தானைத் தோற்கடித்துக் குமரிமுனைவரை விசய நகரத்தின் ஆட்சியைப் பரப்பினார். பாமினி அரசரான முதலாம் அலாவுதீன் அரிகரரைத் தோற்கடித்தார் என்று பெரிஷ்டா போன்ற வரலாற்றாசிரியர்கள் குறித்துள்ளனர். மேலைக் கரையில் சுல்தானையிருந்த ஜலாலுதீன் முகம்மது என்பவர்கூட இவருக்குக் கீழ்ப்படிந்தார். கி.பி. 1343இல் இவர் இறந்திருக்கக்கூடும் என சீவெல் கருதுகின்றார்.

முதலாம் புக்கர்: சங்கம வம்சத்தின் அடுத்த அரசர் முதலாம் புக்கராவார். நியூனிஸ் (Nuniz) என்பாரின் கருத்துப்படி இவர் 37 ஆண்டுகள் ஆட்சி நடத்தினார் எனத் தெரிகிறது. தென்னிந்தியாவைச் சார்ந்த பெரும்பாலான அரசுகள் இவர் ஆட்சியின் கீழ் வந்தன. ஒரிஸ்ஸாவும் இவருடைய ஆட்சிக்குட்பட்டது. விசயநகருக்கு எழுபத்தி எட்டுமைல் தொலைவில் உள்ள குட்டி கோட்டையில் கிடைத்த பட்டயத்தின் அடிப்படையில் டாக்டர் 'ஹூல்ட்ச்', முதலாம் புக்கர் கி.பி.1343 லிருந்து 1379வரை ஆட்சி புரிந்திருக்கக் கூடும் என்ற முடிவிற்கு வருகிறார்.

முதலாம் புக்கர் ஆட்சிக்கு வந்தது குறித்து வேறுபாடு நிலவுகிறது. வாரிசுரிமைப் போர் ஒன்று நடைபெற்றிருக்க வேண்டும் என்றே பெரும்பாலானோர் கருதுகின்றனர். எனவே 1354லிருந்து அரசு புரியத் தொடங்கினார் எனவும் அதற்கு முன்னர் சங்கமரின் மற்றொரு மைந்தரான கம்பரும், அவருக்குப் பின் இரண்டாம் சங்கமரும் 1343லிருந்து 1354வரை ஆட்சி செலுத்தியிருக்கக் கூடும் எனவும் எண்ணப்படுகிறது. தம்முடைய ஆற்றலினால் விசயநகரப் பேரரசைப் பலதிசைகளிலும் பரவிடச் செய்தார். அரிகரரால் துவக்கி வைக்கப்பட்ட விசயநகரத்தின் நிர்மாணத்தை முடித்து வைத்தார். 'கீழை, மேலை தெற்குக் கடல்களின்' தலைவன் என்று பட்டயங்களில் சிறப்பித்துப் பேசப்படுகின்றார். கொங்கணித் தலைவர்கள், ஆந்திரர்கள், கூர்ஜரர்கள், காம்போஜர்கள், கலிங்கர்கள் ஆகியோர் இவர் தம் ஆற்றலுக்கு அஞ்சினர். சீன நேசத்திற்குத் தூதுக்குழு ஒன்றினை அனுப்பி வைத்தார் எனத் தெரிகிறது

சமயப் பொறையாளராக விளங்கிய இவர் சமண சமயத்தவர்களுக்கும், வைணவர்களுக்குமிடையே இருந்த பகை உணர்வுகள்

மறைந்திட முயற்சிகள் செய்தார். ஒருவருடைய கையை மற்றொருவர் பற்றச் செய்து, அவரவர் விருப்பம்போல், அவரவர் சமயத்தைச் சம உரிமையுடன் பின்பற்றலாம் என உறுதி எடுக்கச் செய்தார். விசயநகரப் பேரரசை உண்மையிலேயே உருவாக்கியவர் இவரே என்று கூறத்தக்க அளவிற்குச் சாதனைகளைப் புரிந்தார். புக்கரிடம் மதுரைச் சுல்தான் தோல்வியுற்றார். கொண்ட வீடு, அஹோபிலம், வினு கொண்டா ஆகிய இடங்களைச் சார்ந்த நிலப்பகுதிகளைக் கைப்பற்றினர். இவருடைய ஆட்சிக்காலத்தில் தான் முதன் முதலாகப் பாமினி அரசுக்கும் விசயநகரப் பேரரசுக்கும் இடையே பகைமை உணர்வு துளிர்த்தது.

இரண்டாம் அரிகரர் (1377—1404): முதலாம் புக்கரின் மறைவிற்குப் பின்னர் விசயநகரப் பேரரசின் அரசரானவர் இரண்டாம் அரிகரர் ஆவார். இவர் காலத்திலிருந்துதான், இப் பேரரசின் அரசர்கள் பேரரசுப்பட்டங்களைச் சூட்டிக் கொள்ளத் தலைப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. முதலாம் புக்கரின் மைந்தரான இவர் தம்மை 'மகாராஜாதிராஜர்' என்று அழைத்துக் கொண்டார்.

இவருடைய ஆட்சிக்காலம் அமைதியானது என சீவெல், வின்சென்ட் ஸ்மித் போன்றவர்கள் கருதுகின்றனர் இருப்பினும் இவர் காலத்திலும் குறிப்பிடத்தக்க சில போர் நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. துருக்ஷகர்கள் அடோனிக் குன்றுக் கோட்டையைக் கைப்பற்றிட முயன்றனர். ஆனால் அக் கோட்டை, கைப்பற்றப்பட்ட மல்லப்ப உடையாரின் மகனால் அரிகரரிடம் ஒப்படைக்கப்பட்டது. மீண்டும், மீண்டும் முயற்சிகள் மேற்கொண்ட துருக்ஷகர்கள் தோற்கடிக்கப்பட்டனர்.

தன்னுடைய பேரரசுக் கொள்கையில் நாட்டம் கொண்ட இவர் கேரளர்கள், தெளலவர்கள், ஆந்திரர்கள், குடகர்கள் ஆகியோரைத் தோற்கடித்து ஏராளமான செல்வத்தை பெற்றார். மாபார் சுல்தானியத்தில் சற்று மிச்சம் மீதி இருந்த வற்றையும் ஒழித்துத் தென்னகத்தின் தென் கோடியிலும் விசய நகர ஆட்சியை நிறுவினர். தாவூது, இரண்டாம் முகம்மது, பிரோஸ் சுல்தான் போன்றவர்களோடு போரிட்ட போதிலும் குறிப்பிடத்தக்க வெற்றியினை எய்தவில்லை.

முதலாம் புக்கர் சமயப்பொறை உணர்வுடனே செயல் பட்டார் என அறிகிறோம். சைவ வைணவ சமயங்களைப் பொது நோக்குடனேயே கொண்டிருந்தார். காளகத்தி, சிதம்பரம்

திருப்பதி, திருவரங்கம் முதலிய கோவில்களில் இவரது திருப்பணிகள் நடைபெற்றன. நாஞர்த்தரத்ஞமாலை என்னும் வடமொழி நிகண்டு ஒன்றினை இயற்றிய இருசப்பா என்னும் சமணர் இவரிடம் அமைச்சராயிருந்தார்.

இரண்டாம் அரிகரருக்குப் பின்னர் இரண்டாம் புக்கர் என அழைக்கப்பட்ட அவர் மகன் மன்னராஞர். இரண்டாம் புக்கர் 1404 முதல் 1406 வரை இரண்டு ஆண்டுகளே ஆட்சி செலுத்தினர். அதன் பின்னர் முதலாம் விருபாட்சர், முதலாம் தேவராயர் ஆகியோர் ஆட்சி செய்தனர். முதலாம் தேவராயருக்கும் பாமினி அரசுக்கும் இடையே நடைபெற்ற போரில் முதலாம் தேவராயர் தோற்கடிக்கப்பட்டார். இவருக்கு அடுத்து ஆட்சிக்கு வந்தவர் விஜயபுக்கர் அல்லது வீர விஜயர் எனப் படுவோர் ஆவார். சில மாதங்களே நடைபெற்ற இவர்தம் ஆட்சிக்குப் பின்னர் இரண்டாம் தேவராயர் ஆட்சிக்கு வந்தார்.

இரண்டாம் தேவராயர்: கி.பி. 1422 முதல் 1446 வரை இரண்டாம் தேவராயர் 24 ஆண்டுகள் ஆட்சி செய்தார். இவருடைய முன்ஞோர்களின் காலத்தைப் போன்றே இவர்தம் காலத்திலும் பாமினி அரசுடன் தொடர்ந்து போர் நடைபெற்றது. பாமினி அரசரான அகமது ஷா விசயநகர மக்களைப் படுகொலை செய்தார். இவரால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 20,000 ஆனதும் அதை விழாவெடுத்தார். முஸ்லீம்களின் குதிரைப் படையின் திறத்தைக் கண்டு வியந்த அவர் தமது படைவீரர்களைச் சேர்த்துக்கொண்டார். 1443இல் மீண்டும் பாமினியுடன் போர் செய்ய நேரிட்டது. இப்போது முஸ்லீம்கள் பெரும் சேதம் விளைவித்தன. எனவே இரண்டாம் தேவராயர் திறை செலுத்தி அடிபணிவதைத் தவிர வேறு வழியில்லாது போயிற்று. ஆனல் இரண்டாம் தேவராயர் தோற்றது குறித்து முரண்பாடான கருத்துகள் நிலவுகின்றன. ஒரு கருத்தின்படி இவர் தோல்வியடையவில்லை என்று கூறப்படுகிறது.

இரண்டாம் தேவராயர் சீர்திருத்தங்கள் பலவற்றைச் செய்தார். இலட்சுமணர் அல்லது இலக்கண்ணு என்பவரை அயல்நாட்டு வர்த்தகத்தைக் கவனித்துக் கொள்ளும் தலைவராக்கினர். நிகோலோ கோன்டி, அப்துல் ரசாக் போன்ற பிற நாட்டுப் பயணிகள் இவர் காலத்தில் வருகை புரிந்து தாம் கண்டவற்றை கேட்டவற்றைக் குறித்து வைத்துள்ளனர்.

அப்துல்ரசாக் உலகில் இத்தகைய நகரத்தை எங்கும் காண முடியாது என்கிறார். விசயநகரத்தைப் பற்றிய தெளிவான

விளக்கத்தினை இவர்களின் குறிப்புக்களில் இருந்து அறிகிறோம். மக்களின் சமூக வாழ்க்கை, நாட்டின் பொருளியல் நிலை போன்ற வற்றை இவர்களின் குறிப்புக்களிலிருந்து தான் அறிகிறோம்.

தேவராயரின் படையெடுப்புக்களில் குறிப்பிடத்தக்கது ஈழத்தின் மீது அவர் எடுத்த படையெடுப்பே. போர்க்கள வாழ்க்கையை மேற்கொண்ட போதும், புண்ணியம் தேடும் பணி களான ஆலயம் அமைத்தல், நுண் கலைகளை வளர்த்தல் முதலிய வற்றைத் தொடர்ந்து செய்தார்.

தேவராயருக்குப்பின் கி.பி. 1447இல் ஆட்சிக்கு வந்தவர் அவர்தம் மைந்தர் 'மல்லிகார்ச்சுனன்' ஆவார். இவருடைய காலத்தில் பாமினி அரசரும், ஒரிஸ்ஸா அரசரும் ஒன்று சேர்ந்து, விசயநகரத்தைத் தாக்கினர். ஆனால் மல்லிகார்ச்சுனர் தம் ஆற்றலால் விசயநகரத்தைக் காத்தார். ஒரிஸ்ஸாவின் புகழ் ஓங்கியிருந்த காலம் அது என்றும், மல்லிகார்ச்சுனர் தேவராயரைப் போல் இருமடங்கு பெருமையுடையவர் என்ற பொருளைத் தருகின்ற இம்மடி தேவராயர் என்ற பட்டப் பெயரைச் சூட்டிக் கொண்டார் என்றும் கூறப்படுகிறது.

மல்லிகார்ச்சுனருக்குப் பின்னர் அவர் தம்பி இரண்டாம் விருபாட்சர் ஆட்சிக்கு வந்தார். மல்லிகார்ச்சுனரும், இரண்டாம் தேவராயரின் இளைய சகோதரரான இரண்டாம் விசயர்ராசரும் ஒருங்கிணைந்து ஆட்சி செய்தனர் என இலக்கியங்களிலும், கல் வெட்டுக்களிலும் கூறப்பட்டுள்ளது. மல்லிகார்ச்சுனர் அவ்வளவு திறமை மிக்க வீரராக விளங்காமையினால் கொண்ட வீடு, உதயகிரி ஆகிய கோட்டைகளை இழந்தார். இலக்கியச் சான்றுகளில் இரண்டாம் விருபாட்சர் இவரைக் கொலை செய்து விட்டு ஆட்சிக்கு வந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாம் விருபாட்சர்: இரண்டாம் விருபாட்சரும் தகுதி யற்றவர் என்றே கருதப்படுகின்றார். பாமினி சுல்தான் முகம்மது ஷா படையெடுத்து வந்து இவரைத் தோற்கடித்து வட திசைக் கொங்கனையும் வடதிசைக் கர்னாடகத்தில் பெரும் பகுதியையும் கைப்பற்றினார்.

இரண்டாம் தேவராயரின் காலத்திலிருந்து சற்றுக் குழப்ப மான வரலாற்றுச் சூழ்நிலையே விசயநகரத்தைப் பொறுத்தவரை யிலும் காணப்படுகிறது. சரியான சான்றுகள் இல்லை என்றே கொள்ளலாம். கிடைக்கின்ற செய்திகளும் ஒன்றுக்கொன்று முரண்பாடாகவே உள்ளன. சாளுவ நரசிம்மன் என்பவரால் ஆட்சி செய்யப்பட்ட புதிய குலத்தின் காலத்திற்கு முற்பட்ட

நாற்பது ஆண்டுகளில் ஒருவர் பின் ஒருவராகச் சிலர் ஆட்சி செய்தனர் என்பது மட்டுமே உறுதியாகத் தெரிகிறது. விருபாட்சர் தம் மூத்த மகனால் கொல்லப்பட்டார். ஆனால் விருபாட்சரின் மூத்த மகன், தன் தம்பியான பாதேரர்வ் என்பவ ரால் கொல்லப்பட்டார். அதன் பின்னரே சாளுவ நரசிம்மர் பதவியைக் கைப்பற்றி ஆட்சிக்கு வந்தார். இதற்கு முன்னர் பதவியை வலுக்கட்டாயமாகப் பறித்து ஒருவர் ஆளும் சூழ்நிலை விசயநகரப் பேரரசில் ஏற்பட்டதில்லை.

விசயநகரம் புதிய குலத்தினால் ஆளப்பட்டது. சாளுவ குலத்தைச் சேர்ந்த நரசிம்மரின் வழியினர் ஆளத்தொடங்கியமை யால் இவ் வாட்சியினை சாளுவ குல ஆட்சி என்று குறிப்பிடு கின்றோம். நரசிம்மராயர் புதிய குலத்தின் ஆட்சியைத் தொடங்கிய அந் நேரத்தில், தக்காணத்தில் ஐந்து புதிய பிரி வுகளாக பாமினி அரசுபிரியத் தொடங்கியது. பாமினி அரசும் பலவீனப்பட்டது. இரண்டாம் அகமதின் மறைவிற்குப் பின்னர் பாமினி அரசு வீழ்ந்தது.

சாளுவ வம்சம்

சாளுவ நரசிம்மர் : சாளுவ நரசிம்மருக்கும், சங்கம குலத்தவ ருக்கும் இடையே நிலவிய உறவுமுறை குறித்து ஏதும் தெளி வாகக் கூறுவதற்கு இல்லை. நரசிம்மர் ஆட்சியைக் கைப்பற்றி 44 ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர்.

'இராஜராத்திண்டிமர்' என்பவர் தாம் எழுதிய 'சாளுவாப் யுதயம்' என்னும் நூலில் 'சாளுவர்கள் முன்பு கல்யாணியருகில் குறுநில மன்னர்களாயிருந்து பின்பு பாமினி ஆட்சி ஏற்பட்ட போது பதவியிழந்து தெற்கே வந்தவர்கள்' என்று குறிப்பிடு கின்றார்.

பெரிஷ்டாவும், டாபர்டாவும் இவர்களின் பூர்வீகம் பற்றிக் குறிப்பிடுவது இதுவே. சாளுவ திப்பா என்பவர் சாளுவ நரசிம்மரின் மாமனுவார். அவர் இரண்டாம் தேவராயரின் மூத்த சகோதரியை மணந்து கொண்டவர். சாளுவ குலத்தவர் சந்திரகிரி யில் சிற்றரசர்களாயிருந்தனர். விருபாட்சருக்குப் பணிந்து சாளுவ நரசிம்மர் 1450இல் சந்திரகிரியை ஆண்டார். விசய நகரத்தின் இழந்த பகுதிகளை மீண்டும் கைப்பற்றிய பெருமை சாளுவ நரசிம்மருக்கு உண்டு. இவருடைய முயற்சிகளில் இவருக்குத் துணை புரிந்தவர் நரச நாயகர் என்ற அமைச்சராவார். ஒரிஸ்ஸாவின் அரசர் கஜபதி என்பவரை இவர் வென்றார். இராய்ச்சூரைப் பாமினி அரசரிடமிருந்து கைப்பற்றினர்.

போரில் மட்டும் அவர் வல்லவராக விளங்கவில்லை. சிறந்த நூலியற்றும் ஆற்றலும் பெற்று விளங்கினர். இவர் இயற்றிய நூல் 'ராமாப்யுதயம்' என்பதாகும். தமக்குப் பின் வாரிசுகள் இளையவர்களாய் இருந்தமையால் ஆட்சிப் பொறுப்பை நரச நாயக்கரிடம் ஒப்படைத்துச் சென்றார். நரசிம்மரின் இறுதிக் காலத்தில் விசயநகர அரசு ராய்ச்சூர், உதயகிரி, கொண்ட வீடு என்னும் பகுதிகளை இழந்தது. நரசிம்மரின் இரண்டு மக்களும் கொல்லப்பட்டனர். தம் வாழ்நாளின் இறுதிவரை நரச நாயக்கர் ஆட்சி புரிந்தார். இவருடைய ஆட்சி எவ்வளவு காலம் நடை பெற்றது என்பது தெரியவில்லை.

சாளுவ நரசிம்மருக்குப் பின் அவரது மூத்த மகன் பட்ட மெய்தினர். ஆனால் கொல்லப்பட்டார். அவரது தம்பி இம்மிடி நரசிம்மர் அவருக்குப்பின் அரசரானபோது நரசநாயகரே ஆட்சியை நடத்தினர். ஆனால் நரசநாயகரின் மகன் கலகம் செய்து ஆட்சியைக் கைப்பற்றினர். அவரே வீரநரசிம்மர் என்ற துளுவ மரபினை ஏற்படுத்திய முதல் அரசர் ஆவார்.

வீரநரசிம்மர் எனப்பட்ட நரசநாயகரின் மகன் காஞ்சி, தில்லை, திருவரங்கம் முதலிய கோயில் திருப்பணிகளைச் செய்வித்தார். 1509இல் வீரநரசிம்மர் இறந்தார். கிருஷ்ணதேவர் வீரநரசிம்மரின் மகளை விலக்கிவிட்டுத் தாமே பட்டம் எய்தினர். இந்த வீர நரசிம்மரும் பதவியை வலுக்கட்டாயமாகக் கைப்பற்றியவர் என்பதைக் கண்டோம்.

நரசநாயகர் சாளுவ நரசிம்மரின் மைந்தர்களைக் கொலை செய்தார் என்பது முஸ்லீம் வரலாற்றுசிரியர்களின் கருத்து. ஆனல் பட்டயங்கள் வாயிலாக அறியும் செய்தி வேறாக இருக்கிறது. தாமே காப்பாளராக இருந்து ஆட்சி செலுத்தினர் என்பதே பட்டயங்களில் காணப்படும் செய்தி.

வீர நரசிம்மரின் காலத்தில் நடைபெற்ற போர்களில் முக்கிய மானது போர் பாமினி அரசர் மாமூதுஷாவுடன் நடைபெற்ற போரே. இப் போரில் பாமினித் துருப்புக்கள் அபோனி, கர்நூல் ஆகியவற்றைக் கைப்பற்றின. ஆனல் வீரநரசிம்மர் அவற்றைத் தாமே கைப்பற்றி அரவீடு குறுநில மன்னர்களுக்கு மானியங் களாக வழங்கினர். துளு மாவட்டத்தைத் தமது அதிகாரத்தின் கீழ்க்கொண்டு வந்தார்.

கிருஷ்ணதேவராயர்

இந்திய வரலாற்றில் குறிப்பிடத் தகுந்த சாதனைகளை நிகழ்த்தி அனைவரது கவனத்தையும் திருப்பிய மன்னர்கள்

கிருஷ்ணதேவராயரும் ஒருவராவார். ஆனால் விசயநகர வரலாற்றைப் பொறுத்தமட்டில் சீருடனும், சிறப்புடனும் ஆட்சி செலுத்திய மிகப் பெரிய அரசர் இவரே ஆவார். விசயநகரம் கலை, கல்வி ஆகியவற்றில் மட்டும் அல்லாது புகழிலும் சிறப்பிலும் உன்னதமான நிலையை அடைந்ததற்கு இவரே காரணமாவார்.

ஆகஸ்டு 8, 1509 வரை இவருடைய முடிசூட்டு விழா நல்ல நாளொன்றை எதிர் பார்த்து நடைபெறாது இருந்தது. கிருஷ்ண தேவராயர் எதிர்கொள்ள வேண்டிய பிரச் னைகள் இடையூறுகள் ஏராளமாயிருந்தன. அரசு உரிமைகூட இவருக்கு உரியதாக இல்லை. வாரிசுக்குரியவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு அதன் பின்னர் அரசராக ஆக்கப்பட்டமையால் வாரிசுக்கு உரிய வர்கள் என்று தம்மைக் கருதிக் கொண்ட வர்கள் ஆங்காங்கே தொல்லைகள் அளித் துக் கொண்டிருந்தனர். உம்மத்தூரைச் சேர்ந்த கங்கராஜா சுயேச்சை அரசர் போ லத் தம்மை எண்ணிக் கொண்டு ஆளத் தலைப்பட்டார். பிரதாபருத்திர கஜபதி என் பார் உதயகிரி வரை உள்ள கடற்கரைப்பட் டினங்களில் இருந்து விசயநகரின் அமைதி யை குலைத்துக் கொண்டிருந்தார். வட நாட்டை ஆண்ட முஸ்லீம் ஆட்சியாளர் களுடன் விசயநகரம் போர் செய்து கொண் டிருந்தது. போர்த்துக்கீசியர்கள் மேலைக் கடற்கரையில் பையப்பைய ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியிருந்தனர்.



கிருஷ்ணதேவராயர்

இத்தகைய சூழ்நிலையில் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற கிருஷ்ண தேவராயர், புத்தி சாதுரியத்துடனும், திறமையுடனும் செயல்பட வேண்டியிருந்தது. சாளுவதிம்மரை அவர் வகித்து வந்த பதவியைத் தொடர்ந்து வகித்திடச் செய்தார். தன்னை எதிர்த்து அணி திரட்டி நின்ற சகோதரர்களைச் சந்திரகிரிக் கோட்டையில் சிறை வைத்தார். இராணுவ, வருவாய்த் துறைகளைப் பரிசீலித்து, வரி பாக்கியிருந்த ஆளுநர்களிடமிருந்து வரியைப் பெற்றார். போர்த்துக்கீசியர்களுக்குத் தகுந்த சமாதானங்களைச் சொல்லி புதிதாக ஏதும் குழப்பம் நேராவண்ணம் பார்த்துக் கொண்டார். இவ்வாறு ஆட்சியை வலுப்படுத்துவதிலும் தம்மை நிலைப்படுத்திக் கொள்வதிலும் சிறிது காலம் கழித்தார்.

போர்ச்செயல்கள்: கிடைத்துள்ள சான்றுகளை ஆராய்கின்றபோது அவர் நிகழ்த்திய போர்கள் எத்தனை என்று கூறவோ அல்லது அவைகளை வரிசைப்படுத்தவோ இயலவில்லை. உதயகிரிக் கோட்டையைக் கைப்பற்றுவதற்கு முன்னர் அவர் எவ்விதப் போரையும் நிகழ்த்தியதாக ஆமுக்தமால்யதாவோ அல்லது நியூனிஸின் குறிப்புக்களோ எடுத்துக்காட்டவில்லை. ஆனல் இராயவாசகடு, கிருஷ்ணராய விஜயம் ஆகியவற்றில் உதயகிரிக்கு எதிராகப்படை நடத்திச் செல்வதற்கு முன்னர் பீஜப்பூர், அகமதுநகர், கோல்கொண்டா ஆகியவற்றின் சுல்தான்களைத் தோற்கடித்தார் எனவும், முட்கல், ரெய்ச்சூர், அடோனி ஆகியவற்றைக் கைப்பற்றினர் எனவும், உம்மத்தூர் அரசராக இருந்த கங்க ராஜாவைத் தாக்கினர் எனவும் கூறப்பட்டுள்ளது.

கிருஷ்ணதேவராயர் தமது முதல் போரினை பீஜப்பூர் சுல்தான் யூசுப் அடில்ஷாவிற்கு எதிராக நிகழ்த்தியிருக்கக்கூடும் என அல்புகர்க்கின் கருத்துகளின் வாயிலாக அறிகிறோம். கி.பி. 1510இல் யூசுப்பைத் தோற்கடித்தார். யூசுப்பிடம் சிறைப்பட்டிருந்த மாமூதுவைப் பாமினியை ஆளச்செய்தார். இவ்வாறு வட எல்லையைப் பாதுகாத்து அங்கிருந்து ஆபத்து ஏதும் இல்லை யென்றவுடன், உள்நாட்டினுள் கிளர்ச்சி செய்து கொண்டிருந்தவர்களை அடக்கினர். உம்மத்தூர் அரசர் கங்கராஜா தோற்கடிக்கப்பட்டு, முதல் அமைச்சு சாளுவதிம்மரின் சகோதரர் சாளுவ கோவிந்தரின் பொறுப்பில் அந்நாடு விடப்பட்டது.

இவ்வாறு பாதுகாப்பும் அமைதியும் தேடிக்கொண்ட பின்னர் தமது கவனத்தைக் கீழைத்திசையை நோக்கிச் செலுத்தினர். கிழக்கு மாவட்டங்களை ஒரிஸ்ஸாவின் அரசர் பிரதாபருத்திர கஜபதியிடமிருந்து கைப்பற்ற முயற்சி செய்தார். கஜபதி எண்ணிறந்த மலைக்கோட்டைகளைக் கொண்டிருந்தார். கிருஷ்ணராயர் தனித்தனிப் படையெடுப்புக்களை மேற்கொண்டு அவற்றைக் கைப்பற்றி, அவற்றினைத் திறமையாக அரசு செலுத்த, நம்பிக்கை மிக்க தளபதிகளிடம் ஒப்படைத்தார். இவ்வாறு செய்தமையால் போர் முடிந்த உடனேயே கவலையற்றுத் தன்னுடைய கவனத்தை இறைபணியில் திருப்ப முடிந்தது.

34,000 படைவீரர்களுடனும், 800 யானைகளுடனும் உதயகிரியை நோக்கிப் படையை அனுப்பினர். உதயகிரி கஜபதியின் மலைக்கோட்டைகளில் ஒன்றாக விளங்கியது. ஒன்றரை ஆண்டு கால முற்றுகைக்குப் பின்னர் உதயகிரி அடிபணிந்தது. இம் முற்றுகைக்குப் பின்னர் கஜபதியின் அத்தையும், மாமனும்

சிறைப்பிடிக்கப்பட்டனர். பாலகிருஷ்ணரின் உருவச்சிலை ஒன்றைத் தமது வெற்றியின் விளைவாகக்கொண்டு வந்த அவர், திருப்பதியில் சென்று சிறப்பு வழிபாடுகளை நிகழ்த்தினர். பாலகிருஷ்ணரின் உருவச்சிலையை விசயநகரத்தில் கிருஷ்ணசாமி ஆலயத்தில் இருந்த மண்டபத்தில் நிறுவினர்.

அடுத்த படையெடுப்பு கொண்டவீடிற்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட படையெடுப்பு ஆகும். கொண்டவீடு படை யெடுப்பிற்கு முன்னர் அத்தாங்கி, வினுகொண்டா, பெல்லம் கொண்டா, நாகார்ச்சுன கொண்டா, தாங்கிதா, கேட்டவரம் ஆகிய கோட்டைகளைக் கைப்பற்றினர். 1515இல் கொண்டவிடு கைப்பற்றப்பட்டது. கைதிகளை விசயநகருக்கு அனுப்பிவிட்டு அமராவதி, ஸ்ரீசைலம் முதலிய தலங்களுக்கு யாத்திரை சென்றார் உதயகிரி படையெடுப்பில் கஜபதி போர்க்களத்தை விட்டு ஓடிச் சென்றுவிட்டார். கொண்ட பள்ளிக்குச் சென்று அவர் ஒளிந்து கொண்டார். எனவே கொண்ட பள்ளியைக் கிருஷ்ணதேவராயர் படையெடுத்தார். கொண்டபள்ளிக் கோட்டை வீழ்ந்ததும் கஜபதி நம்பிக்கையிழந்து வடக்கு நோக்கி ஓடிவிட்டார். இராயர் தொடர்ந்து சென்று ஆனந்தகிரி, கண்டிகொண்டா, நள கொண்டா, கம்பமேட்டு ஆகியவற்றைக் கைப்பற்றி போத்தனூரு என்னுமிடத்தில் வெற்றிக்கம்பம் ஒன்றை நட்டார். பின்னர் வராக இறைவன் நரசிம்மருக்கு ஆபரணங்களை அளித்தார்.

கஜபதிக்கு எதிரான போர் முடியவில்லை. தனது படையைத் தொடர்ந்து போரை நடத்தச் செய்து விட்டுத் தம்முடைய தலை நகருக்கு அவர் திரும்பினர். பிரதாபருத்திரன் எனப்படும் கொண்டவீடு அரசன் உடன்படிக்கை ஒன்றினை 1519இல் மேற் கொண்டான். இத்துடன் இவருடைய போர் நடவடிக்கைகள் ஓய்ந்துவிடவில்லை. இஸ்மாயில் அடில்ஷாவும், கஜபதியும் ஒன்று சேர்ந்து பெல்காமைக் கைப்பற்றினர். நிலைமையின் தன்மையை உணர்ந்த அவர் போர்த்துக்கீசியர்களுடன் நல்ல தொடர்பு கொண்டார். தக்காணத்தில் இருந்த முஸ்லீம்களை அரவணைத்துக் கொண்டார். இதன் பின் அடில்ஷா தோற்கடிக்கப்பட்டார். அவருடைய தளபதி சலாபத்கான் கைதியாக்கப்பட்டார். ஏராள மான செல்வம் இராயர் கைகளைச் சேர்ந்தது. ரெய்ச்சூரை முறை யாக ஆட்சிசெய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத் திரும்பினர் இராயர். குல்பார்க்கா இராயரால் சேதப்படுத்தப் பட்டது. இத்தோடு கிருஷ்ணதேவராயரின் போர் வாழ்க்கை முடிவுற்றது.

போர்கள் எல்லாம் ஒருவாறு முடிந்தபின் ராயர் தன்னுடைய கவனத்தைக் கல்வி கலைப்பணிகளில் திருப்பினர். அவரது சிறப்புக்களை அவர் காலத்தில் விசய நகருக்கு வருகை புரிந்த பிற நாட்டவர்கள் சிறப்பித்துப் பேசுகின்றனர்.

இராயரின் இறுதிக்காலம் துன்பம் சூழ்ந்ததாகவே அமைந்தது. 1524இல் தம்முடைய ஆறு வயது மகன் திருமலையை யுவராஜாவாக முடிசூட்டினர். ஆனால் முடிசூட்டப்பட்ட எட்டு மாதத்திற்குள் நோய்வாய்ப்பட்டு இளவரசன் இறந்துவிட்டான். சாளுவ திம்மரும் அவருடைய மைந்தர்களும் அவரை நஞ்சிட்டுக் கொன்று இருக்கக்கூடும் என்று கருதிய இராயர் அவர்களைச் சிறையிலடைத்தார் எனவும், மக்களில் ஒருவன் மீண்டும் தப்பி வந்து கிளர்ச்சி செய்ததாகவும், அக் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டான் எனவும் நியூனிஸ் என்பார் கூறுகின்றார். இவ்விதமான சூழ்நிலையில் இஸ்மாயில் அடில்ஷா ரெய்ச்சூரைக் கைப்பற்றிவிடவே, இராயர் தாமே நேரில் புறப்பட்டுச் சென்று பெல்காமைக் கைப்பற்றினர். ஆனால் இதற்குள் நோய்வாய்ப்பட்டு 1529இல் இறந்தார்.

பொதுப் பணிகள்: விசயநகரத்தின் அருமை பெருமைகளை நியூனிஸ், பியாஸ் ஆகிய இருவரும் மிக அழகாக எடுத்துக் காட்டியுள்ளனர். கிருஷ்ண தேவராயரின் பணிகளை விளக்கும் சான்றுகளாக இன்றும் கலைச் செல்வங்கள் சிறப்புற விளங்குகின்றன. மாதவாச்சாரியின் நினைவாக எழுப்பப்பட்ட கோபுரத்தை தனது ஆட்சியின் முற்பகுதியில் செப்பனிட்டார். 1513இல் கிருஷ்ணஸ்வாமி கோவிலைக் கட்டினர் அரண்மனையில் ஹஸாரா ராமஸ்வாமி ஆலயத்தைக் கட்டினர்.

குடிமக்களின் நலனில் அக்கறை கொண்டவராகத் திகழ்ந்தமையால் நீர்ப்பாசனத்தில் அக்கறைசெலுத்திப் புஞ்சை நிலங்களை விளைநிலங்கள் ஆக்கியதோடு, கொர்ராகல் கால்வாயையும், பசவண்ணா கால்வாயையும் உருவாக்கினர். ஹாஸ்பெட்டிற்கு அருகே பெரிய அணை ஒன்றைக் கட்டுவித்தார் எனவும் அதற்குப் போர்த்துக்கீசிய எஞ்சினியர் உதவினர் எனவும் கூறப்படுகிறது.

மிகவும் அரிய சிற்பம் ஒன்றை கி. பி. 1528இல் செய்து வைத்தார். அச் சிற்பம் திருமாலின் நரசிம்ம அவதாரத்தை எடுத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது. 1565இல் இஸ்லாமியர்களின் சமயப் பொறையின்மையால் இச் சிற்பம் சிதைக்கப்பட்ட போதிலும் இன்றும் பார்ப்போரைக் கவரத்தக்கதாய் உள்ளது.

கிருஷ்ணதேவராயர் இலங்கையின் ஒரு பகுதியையும் வென்றிருந்தார் என்று நம்பப்படுகிறது. கிருஷ்ண தேவராயர் 'தட்சிண சமுத்திராதீஸ்வரன்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப் பட்டார்.

பேரரசின் ஆட்சிமுறை சாளுவதிம்மரின் உதவியுடன் சீர் திருத்தி அமைக்கப்பட்டது. மைய அரசு பலவீனமாய் இருந்தால் எவ்வளவுதான் வெற்றிச் சிறப்புக்கள் பெற்ற போதிலும் ஆட்சி நிலை பெற்றிட இயலாது என்பதை உணர்ந்து மைய ஆட்சி பலமிக்கதாக ஆக்கப்பட்டது. வேளாண்மையையும், வாணிபத்தையும் பெருக்கி நாட்டின் பொருளாதாரத்தின் நிலையை சீர்படுத்தினர். விசய நகரத்தில் அழகுமிக்கக் கட்டிடங்களையும், கோவில்களையும் கட்டி மேலும் அழகுமிக்கதாக ஆக்கினர். ஹஜரா இராமர், கிருஷ்ணசாமி, வித்தல் ஆலயம் ஆகிய ஆலயங்களைக் கட்டினர். அகோபிலம், காளஹஸ்தி, திருப்பதி, திருவண்ணுமலை ஆகிய ஆலயங்களைச் செல்வச் சிறப்பு மிக்கதாக ஆக்கினர். தன்னுடைய தாய் நாகம்மாவின் நினைவாக நாகலாபுரம் என்னும் நகரத்தை உருவாக்கினர்.

கலை, கல்வி ஆகியவற்றில் சிறப்புப் பெற்றிருந்த புலவர்கள் இவர்தம் அவையை அலங்கரித்தனர். 'அஷ்டதிக்கஜங்கள்' எனப்படும் புலவர்கள் இவர் அவையில் இருந்தனர். அவர்கள் வடமொழியோடு, தென்னிந்திய மொழிகளிலும் சிறப்புப் பெற்றவர்கள். சாளுவ திம்மர், அவருடைய உறவினர்களான அப்பண்ணு, கோபண்ணு ஆகியோர் இலக்கியச் சிறப்புப் பெற்றவர்கள். 'சங்கீத சூர்யோதயா' என்னும் இசை இலக்கியம் கிருஷ்ணதேவராயருக்கு அர்ப்பணிக்கப்பட்டது. கிருஷ்ண தேவராயரின் ஆதரவில் இருந்தவர்களில் துவைத அறிஞர் வியாஸராயர், கன்னடப் புலவர் திம்மண்ண கபி ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

இலக்கியம் : கிருஷ்ணதேவராயரின் காலம் தெலுங்கு மொழி இலக்கியத்தின் பொற்காலம் என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது. அஷ்டதிக்கஜங்களில் சிறப்பானவர் அல்லசானி பெத்தண்ணு என்பதில் சிறிதும் ஐயமில்லை. தாம் எழுதிய மனுசரிதம் என்ற நூலை கிருஷ்ணதேவராயருக்கு அவர் அர்ப்பணித்தார். நந்திதிம்மா என்பவர் தாம் எழுதிய பாரிஜாத பகரணம் என்ற நூலை இவருக்கு அர்ப்பணித்தார். கிருஷ்ண தேவராயரின் கை வாள், வேல் பிடிக்கும் கைமட்டுமில்லை. எழுது கோலும் பிடித்த கை அது. வடமொழி, தெலுங்கு ஆகியவற்றில் சிறந்த புலவராக அவர் விளங்கினர். தெலுங்கு இலக்கியத்தின்

ஐந்து முக்கிய காவியங்களில் ஒன்றாக இவரால் இயற்றப்பட்ட 'ஆமுக்தமால்யதா' கருதப்படுகிறது.

தென்னிந்தியாவின் அரசர்களில் கிருஷ்ணதேவராயர் சிறந்த வராக விளங்கினர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இராணுவச் சிறப்புக்களாலும், இலக்கியச் சிறப்புக்களாலும், மக்கள் நலம் பேணிய சிறந்த ஆட்சியாலும் இவர் பெயர் சிறப்புப் பெற்று விளங்குகிறது. அறிஞருக்கு வாரி வழங்கியமையால் ஆந்திர போஜர் என்னும் பட்டம் பெற்றார். சமுத்திர குப்தர், விக்கிர மாதித்தர், மிகிரபோஜர் போன்றோரின் நல்லியல்புகள் இவரிடம் நிறைந்து காணப்பட்டன. இவரைச் சோழப் பேரரசன் இராச ராசனோடு ஒப்பிட்டுப் பேசுவதும் உண்டு.

கிருஷ்ண தேவராயரைப் பாராட்டாத வரலாற்றாசிரியர்களே இல்லை எனலாம். குறைபாடுகள் இவரிடத்துக் குறைத்துக் காணப்படுவது இவரிடம் உள்ள சிறப்பு.

'நடுத்தர உயரமும் நல்ல நிறமும், கனத்த சரீரம் என்றோ, மெலிந்த சரீரம் என்றோ கூற முடியாத இடைப்பட்ட நிலையுடைய உருவத்தைப் பெற்ற அவர் முகத்தில் அம்மைத் தழும்புகளைக் காணலாம். அவர் சிறந்த ஆட்சியாளர் மட்டுமின்றி சிறந்த நீதி வழங்குபவராகவும் விளங்கினர்'. இது கிருஷ்ணதேவராயரைப் பற்றி பியாஸ் என்பவரின் வர்ணனையாகும்.

கிருஷ்ணதேவராயர் பெயரளவில் இல்லாது உண்மை யிலேயே அரசராக முழுமையான அதிகாரங்களுடன் விளங்கினர். 'வீரம் மிக்கவர் ஆற்றல் மிக்கவர்' என்றெல்லாம் சீவெல் அவரைப் புகழ்ந்துரைக்கின்றார்.

அச்சுத தேவராயர்: கிருஷ்ணதேவராயருக்குப் பின்னர் எங்கும் குழப்பம் நிலவியது. உள்நாட்டுப் போர்களின் விளை வாகப் பேரரசின் பெருமை குறைந்தது. கிருஷ்ணதேவராயர் தமக்குப் பின்னர் வாரிசாக ஆட்சிப்பொறுப்பை ஏற்கத் தம் தம்பி அச்சுதராயரை நியமித்து இருந்தார். ஆனால் கிருஷ்ண தேவராயரின் மருமகன் இராமராயர் இதை விரும்பவில்லை. இதன் விளைவாக இராமராயருக்கும், அச்சுதராயருக்குமிடையே உள் நாட்டுப்போர் நடைபெற்றது. இந்த நல்ல வாய்ப்பினைக் கஜபதி யும், அடில்ஷாவும் விட்டுவிட விரும்பவில்லை. இதற்கு முந்திய ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட தோல்விகளுக்கு அவமானத்திற்குப் பழி தீர்த்துக்கொள்ள எண்ணினர். ஆனால் அவர்கள் எண்ணத் தில் மண்விழச் செய்தார் அச்சுதர். ஓர் உடன்படிக்கையினை இராமராயருடன் செய்து கொண்டார். இவ்வாறு பேரரசை அழிவிலிருந்து காத்து 1542 வரை ஆட்சி புரிந்தார்.

1542இல் அச்சுதர் இறந்தவுடன் அவருடைய இளம் மைந்தன் வெங்கடபதி அரசனுக்கப்பட்டான். ஆனால் வெங்கட பதியின் மாமனுகிய திருமலையே உண்மையில் ஆட்சியை நடத்தி வந்தார். நாளடைவில் தாமே அரசர் என அறிவித்தார். ஆனால் இராமராயர் சதாசிவன் என்பவரை அரசர் என்று அறிவித்து விசயநகரை நோக்கிப் படையெடுத்தார். சதாசிவன் கிருஷ்ண ராயரின் தம்பி மகனுவார். இருவருக்குமிடையே போர் ஒன்று நடைபெற்றது. இப் போரில் திருமலை இறந்து விடவே சதாசிவனை இராமராயர் அரசராக முடிசூட்டினர். உண்மையில் ஆட்சிப் பொறுப்பை இராமராயரே நிருவகித்து வந்தார். சதாசிவன் உண்மையில் பெயரளவிலேயே ஆட்சியாளராக விளங்கினர். ஆட்சி அதிகாரம் இராமராயரின் கையில்தான் இருந்தது.

இராமராயர் சிறந்த தளபதியாகவும், அனுபவமிக்க ஆட்சி யாளராகவும், புத்தி சாதுரிய மிக்க இராச தந்திரியாகவும் விளங்கினர். இவருடைய காலத்தில் வலிமை மிக்கதாகவும், பிற அரசுகள் அஞ்சத்தக்கதாகவும் விசய நகர அரசு அமைந்தது. இராமராயரின் செல்வாக்கு பேரரசின் நன்மைக்கு உதவவில்லை. அதிகாரவெறி கொண்டு செயல்பட்ட அவர் ஆட்சியின் விளைவுகள் எதிர்காலத்தில் பிரதிபலித்தன. எவரெவர் தம்மை எதிர்த்தார்களோ அவர்களையெல்லாம் இருக்குமிடம் தெரியாமல் செய்தார். விசயநகரப்படையில் இஸ்லாமியர்களைச் சேர்த்தார். அவ்வாறு சேர்க்கப்பட்ட இஸ்லாமியர்கள் விசுவாசமாகச் செயல் படுவார்கள் என்று எதிர்பார்த்திட முடியாது. முஸ்லீம் அரசு களுக்கிடையே நிலவிய போர்களில் தலையிட்டார்.

சதாசிவனின் ஆட்சிக் காலத்தின் துவக்கத்தில் ஆட்சியை உறுதிப்படுத்தவேண்டிய முயற்சிகளைச் செய்தார். குமரிமுனை வரை சின்ன திம்மர், விட்டலர் ஆகிய இருவரின் கீழ்ப் படையை அனுப்பி உயர் குடியினரைத் தம் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்தார். இதன் விளைவாக மதுரை, தஞ்சாவூர், செஞ்சி ஆகிய வற்றின் நாயக்கர்கள் அடிபணிந்தனர். இச் சந்தர்ப்பத்தில் போர்த்துக்கீசியர்கள் எதிர்ப்பு உணர்வுடன் செயல்பட்டனர். போர்த்துக்கீசியர்கள் தோற்கடிக்கப்பட்டனர்.

இவ்வாறு தமது அதிகாரத்தை நிலைநிறுத்தியவுடன் தக்காணத்துச் சுல்தான்களுக்கு எதிராகத் தனது கவனத்தைத் திருப்பினர். பாமினி சுல்தான்களிடையே பிளவு ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் இவர் இதன் பொருட்டு மேற்

கொண்ட நடவடிக்கைகள் இவருக்கு எதிராகவே திரும்பின. பாமினி சுல்தான்களிடையே பிளவு ஏற்படுத்த வேண்டும் என்ற இவருடைய நோக்கம் நிறைவேறுமல் போனலும் பரவாயில்லை. ஆனல் அது ஏற்கனவே பிளவுபட்டு இருந்த அவர்களிடையே ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தியது. சிறிது காலத்திற்கு வேண்டுமானல் இவருடைய முயற்சிகள் பலனளித்திருக்கலாம்.

1543இல் பர்ஹான் நிஜாம்ஷா இராமராயருடனும், கோல் கொண்டா அரசன் குதுப்ஷாவுடனும் நட்பு பூண்டு பீஜப்பூர் அரசன் அடில்ஷாவிற்கு எதிராகப் படையெடுத்தார். அடில்ஷா பர்ஹான் நிஜாம்ஷாவுடன் ஓர் உடன்படிக்கையும் விசய நகருடனும் ஓர் உடன்படிக்கையும் மேற்கொண்டார். பின்னர் கோல்கொண்டாவிற்கு எதிராகப் படை நடத்திச் சென்று குதுப்ஷாவைத் தோற்கடித்தார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் நிஜாம்ஷா, குதுப்ஷா ஆகியோருக்கு எதிராக அடில் ஷாவிற்கு உதவினர். அகமது நகர்மீது படையெடுத்து நிஜாம் ஷாவைக் கல்யாண் கோட்டையை அடில்ஷாவிற்கு அளிக்கச் செய்தார். இப்ராகீம் குதுப்ஷா கோல்கொண்டாவில் பதவியில் அமர்ந்திட உதவி செய்தார். ஆனல் கோல்கொண்டா அரசனன இப்ராகீம் குதுப்ஷா, நிஜாம்ஷாவுடன் சேர்ந்துகொண்டார்.

இதனல் ஆத்திரமடைந்த இராமராயர் குதுப்ஷாவிற்கு எதிராகப் படை நடத்திச் சென்று அவரைப் பணியவைத்ததோடு விசய நகருக்கே ஒரு பகுதியைப் பிரித்து அளிக்குமாறு செய்தார். இதன் விளைவாகக் குதுப்ஷா ஆத்திரமடைந்து விசய நகரைப் பழி வாங்கிடத் தக்க தருணத்தை எதிர்பார்த்து இருந்தார். மற்ற முஸ்லீம் ஆட்சியாளர்களும் விசயநகரின் செல்வாக்கும் உயர் வதைக் கண்டு, அதன் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்கத் தொடங் கினர். இதன் விளைவாகக் கூட்டாகச் சேர்ந்தனர். இராம ராயரின் கொடுங்கோன்மையான செயல்கள், இஸ்லாமிய சமயத் தின்பால் அவர் காட்டிய வெறுப்பு ஆகியவையே அவர்களை ஒன்றுக இணையவைத்தது என்று பெரிஷ்டா போன்ற சில இஸ்லாமிய வரலாற்றறிஞர்கள் கூறுகின்றனர்.

ஆனல் உண்மையில் அவர்கள் கூறுபவை மிகைப்படுத் தியோ, சமய உணர்வுடனே கூறப்பட்டவை என்பது சான்று களை முறையாக ஆய்பவர்களுக்கு விளங்கும். இராமராயர் சமயப்பொறை உணர்வுமிக்கவராகவே வாழ்ந்தார். எனினும் 1565இல் கோல்கொண்டா, அகமது நகர், பீடார், பீஜப்பூர் ஆகியவற்றின் சுல்தான்கள் அணி திரண்டு போர் முழக்க

மிட்டனர். பெரும்படை ஒன்றினைத் திரட்டிய அவர்கள் தெற்கு நோக்கி வந்தனர். இரக்சாஸ், தக்தி என்னுமிடத்தில் ஜனவரி 23, 1565 அன்று போர் நடைபெற்றது. இப் போரே வரலாற்றுப் புகழ்பெற்ற தலைக்கோட்டைப் போர் ஆகும்.

போரில் விசய நகரப் படை தோல்வியைத் தழுவியது. நயவஞ்சகமாக இராமராயர் அமைதி உடன்பாட்டிற்கு அழைக்கப் பட்டுக் கொல்லப்பட்டார். நிஜாம்ஷா தம் கையாலேயே இராம ராயரின் தலையைத் துண்டித்து 'நான் பழிதீர்த்துக் கொண்டேன். இறைவன் எனக்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொள்ளட்டும்' என்றார். இப் போர் விசய நகரத்திற்குத் தோல்வி மட்டுமில்லை, அழிவும் ஆகும். இலட்சக்கணக்கான இந்துக்கள் வாளுக்கு இரையாயினர்.

தோல்விச் செய்தியைக் கேள்விப்பட்ட இராமராயரின் தம்பி திருமலைராயர் விசய நகரைக் காலி செய்துவிடத் தீர்மானித்தார். அரசருக்கு விசுவாசமாய் இருந்த வீரர்களுடன், அரசச் சின்னம் முதல் ஆபரணங்கள்வரை அத்தனையையும் 550 யானைகளின் மேல் ஏற்றி, சதாசிவராயரையும் அழைத்துக்கொண்டு பேனு குண்டாவிற்குச் சென்றுவிட்டார்.

அதன் பின்னரே உண்மையான அழிவை விசய நகரம் சந்தித்தது. மக்களின் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன. ஆலயங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. மிகப் பெரிய வடிவம் கொண்ட நரசிம்மரின் சிலையை உடைத்தனர். அரசர்கள் நின்று வேடிக்கை பார்க்கும் மேடைகள் முதற்கொண்டு அத்தனையும் தூள்தூளாக்கப்பட்டன. அந்த அளவிற்கு வெறி உணர்வு அவர்களை ஆட்டுவித்தது. இந்திய வரலாற்றிலே மட்டுமின்றி உலக வரலாற்றிலும்கூட இத்தகைய அழிவுத் திருப்பணியை யாரும் செய்ததில்லை என்று கூறலாம். சீரும், சிறப்புமாய்ச் சிங்கார நகரமாய்த் திகழ்ந்த விசய நகரம் இத்தகைய அழிவை அடையுமென்று யாரும் கனவில்கூட எண்ணியதில்லை.

டாக்டர் ஈஸ்வரி பிரசாத் 'இந்திய வரலாற்றின் திரும்பு முனைகளாக அமைந்த போர்களில் தலைக்கோட்டைப் போர் குறிப்பிடத்தக்கது. தென்னிந்தியாவில் இந்துப் பேரரசிற்குச் சாவுமணி அடித்தது மட்டுமின்றிக் குழப்பமான நிலையையும் தோற்றுவித்தது. அதன் விளைவாக அரசியல் நிறுவனமே சீர் குலைந்தது,' என்று குறிப்பிடுகின்றார். 'இந்தியாவின் வாட்டர்லூ' என்று தலைக்கோட்டை கருதப்படுகிறது. ஆனால் அவ்வாறு கூறுவது பொருத்தமில்லை.

விசய நகரம் சீர்குலைந்தது. துளுவ வம்சத்தின் ஆட்சி முடிவிற்கு வந்தது. கிருஷ்ணை, துங்கபத்திரா, தோஆப் பகுதிகள் நிலையாக முஸ்லீம்களின் கைக்கு மாறின. மதுரை, தஞ்சை ஆகியவை தனியே தலைதூக்கின. விசய நகர வீழ்ச்சியினால் பாதிக்கப்பட்டவர்களில் போர்த்துக்கீசியரும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். விசய நகர அரசர்கள் பக்கமே இருந்த அவர்கள் கோவாவை இழந்தனர் என்றே கூறவேண்டும். கோவா விசய நகரோடு வீழ்ந்தது.

டாக்டர் சத்யநாதய்யர், தலைக்கோட்டைப் போர் இந்துப் பேரரசை முழுவதுமாகச் செயலற்றுவிடச் செய்யவில்லை. தென்னிந்திய வரலாற்றிற்கு விசய நகரம் தொடர்ந்து அரசியல், பண்பாட்டுப் பணிகளை ஆற்றி வந்தது என்கின்றார். தலைக்கோட்டைப் போரின் வெற்றியினால் தக்காணத்துச் சுல்தான்கள் தலைநிமிர்ந்து நின்றுவிட முடியவில்லை. அவர்களுக்குள்ளேயே தக்க தலைமை இல்லாமையால் ஒருவருக்கொருவர் பகை உணர்வுடன் செயல்பட்டனர். இதன் விளைவாகத் தக்காணச் சுல்தான்கள் என்ற முஸ்லீம் மீன்கள், முகலாயர்கள் என்று பின்னால் வந்த சுறு மீன்களுக்கு இரையாயின.

அரவீடு வம்சம்: தலைக்கோட்டைப் போரில் இராமராயரும், அவருடைய சகோதரர்களில் ஒருவரான வெங்கடாத்திரியும் வீழ்ந்தனர். திருமலை என்னும் மற்றொரு சகோதரர் பெனுகொண்டாவிற்குச் சென்று விட்டார். முஸ்லீம்கள் விசய நகரை அழித்துவிட்டு நீங்கியதும் திருமலை அங்குச் சதாசிவராயருடன் சென்று அதன் இழந்த புகழைத் திரும்ப நிலைநாட்டிட முயன்றார். ஆனால் இராமராயரின் மக்களின் சதி வேலைகளினால் பெனுகொண்டா சென்று சுயேச்சை அரசராக ஆளத் தலைப்பட்டார். 1570-வரை சதாசிவராயர் பெயரளவில் விஜய நகர அரசராக நீடித்தார். அதன்பின் சதாசிவரைக் கொலை செய்துவிட்டுத் திருமலைராயர் தாமே மன்னரானார்.

திருமலை இரண்டாண்டுகளே ஆட்சி செலுத்தினார். தமது அரசைத் தம் மக்கள் ஸ்ரீரங்கர், இராமர், வேங்கடர் ஆகிய மூவருக்கும் பகிர்ந்தளித்தார். அவர்கள் மூவரும் முறையே உதயகிரி, ஸ்ரீரங்கப் பட்டணம், சந்திரகிரி என்னுமிடங்களிலிருந்து ஆட்சி செலுத்தினர். 1572—75-வரை ஆண்ட திருமலை இறந்ததும் ஸ்ரீரங்கர் பேரரசராக ஆட்சி புரிந்தார். 1575ல் மன்னரான வேங்கடர் பேரரசின் தலைநகரைச் சந்திரகிரிக்கு மாற்றிக் கொண்டார். 1614இல் வேங்கடர் இறந்தார். அவரோடு விசய நகரப் பேரரசும் மறைந்தது. இரண்டரை நூற்றாண்டுக்

காலம் 1336-லிருந்து 1614-வரை ஆட்சி செலுத்திய விசய நகரப் பேரரசர்கள் இந்துக்களிடையே ஒற்றுமையுணர்வை ஏற்படுத்தி முஸ்லீம்களின் தாக்குதலிலிருந்து நாட்டைக் காத்தனர். இந்திய வரலாற்றில் இவர்களுடைய இக் கால ஆட்சிக் காலம் இனிமை யான கனவைப் போலத் தோன்றி மறைந்தது.

விஜயநகரப் பேரரசின் ஆட்சிமுறை

இடைக்கால ஐரோப்பிய வரலாற்றினை எழுதுகின்ற வரலாற்று ஆசிரியர்கள் பொதுவாக நிலமானிய முறை அக் காலத்தின் தேவையாக இருந்தது என்று உரைப்பது வழக்கம். அதைப் போலவே விசயநகரப் பேரரசில் தோன்றிய ஆட்சி முறையும் அமைந்திருந்தது. பேரரசரின் இறைமையை ஒட்டி முடியரசுகள் செயல்பட்டன. விசயநகரப் பேரரசு இதற்கு விலக்கு அன்று. மற்ற முடியரசுகளில் இருந்ததுபோலவே விசயநகரப் பேரரசிலும் அரசரே ஆட்சித்துறைத் தலைவராக உன்னதமான இடத்தினை நாட்டில் வகித்து வந்தார். கிருஷ்ண தேவராயரின் ஆமுக்த மால்யதாவில் பழங்கால இந்தியாவின் இறைமையின் ஏழு கூறுகளில் அரசர் மிகவும் முக்கியமானவர் என்று கூறப்பட்டுள்ளது.

முடி சூட்டு விழா : இந்து அரசுகள் எல்லாவற்றிலும் முடி சூட்டும் விழா மிக முக்கியமானதாகும். முடிசூட்டு விழாவினை நிகழ்த்தத் தனியான அவை கூட்டப்பட்டது அவ் வவையில் சிற்றரசர்கள், வகுப்புத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். அமைச்சர்கள் இவ் வவையில் சிறப்பிடம் வகித்த தோடு அதனை நடத்தியும் வைத்தனர். முடிசூட்டு விழா ஓர் வாக்குறுதியை அரசர்க்கு அளித்தது. அரசர்களும் இவ் விழாவில் உறுதிமொழிகளை எடுத்துக்கொண்டனர். விசயநகரப் பேரரசில் அரசர்கள் தங்களுக்குப்பின் ஆட்சி நடத்தத் தங்கள் வாரிசை நியமித்து யுவராஜா எனப் பட்டம் சூட்டினர்கள். இளவரசன் ஆட்சித்துறையில் போதிய அனுபவம் பெற்ற பின்னரே யுவராஜ பட்டாபிஷேகம் நிகழ்த்தப் பெற்றது. இளவரசர்கள் பட்டம் சூட்டப்பட்ட பின்னர் அறிவுத் திறனைப் பெருக்குவதிலும் உடல் ஆற்றலை வளர்ப்பதிலும், போர்க்கலை யிலும் தேர்ச்சி பெற்றனர். வாரிசைத் தேர்ந்தெடுப்பதில் சமுதாயத்தில் முதன்மையானவர்களுக்கு உரிமை இருந்ததாக அறிகிறோம். ஆனால் வாக்கு எடுப்பு ஏதும் நடைபெறவில்லை. அரசன் முதன்மையானவர்களைக் கலந்து ஆலோசித்துச் செயல் பட்டார் என்றே கருதப்படுகிறது.

குறுநிலத் தலைவர்கள்: இந்த அவையினில் குறுநில மன்னர்களும் சமுதாயத்தில் இருந்த தலைவர்களும் கலந்து கொண்டனர். கிருஷ்ணதேவராயரின் முடிசூட்டு விழாவின் போது குறுநிலத் தலைவர்களும், சமுதாயத் தலைவர்களும் கலந்து கொண்டனர் என கிருஷ்ணராஜ விஜயமு என்னும் நூல் குறிப் பிடுகின்றது.

திருமுழுக்கு: முடி சூட்டு விழா நிகழ்ச்சிகள் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றன. புரோகிதர் பொன்னுல் செய்யப்பட்ட முடியினை மந்திரங்கள் ஓதப்பட இறைவணக்கம் நிகழச் சூட்டினர். அவ்வாறு சூட்டப்பட்டவுடன் அரசனுக்குத் திருமுழுக்கு (அபிஷேகம்) செய்விக்கப்பட்டது.

இணை அரசு முறை: விசயநகரப் பேரரசுக் காலத்தில் இணை அரசுமுறை (Co-rulership) இருந்ததா என்பதனை ஆராய்கின்ற போது அத்தகைய முறை இருந்திருக்க வேண்டும் என்ற முடி விற்கு வருகின்றோம். பங்களூர் தாலுக்காவில் இருந்து கிடைத் துள்ள சாசனம் ஒன்று முதலாம் புக்கர் முதலாம் ஹரிஹரருடன் சேர்ந்து இணை அரசராக ஆண்டதாக உரைக்கின்றது. கோபி நாதராவ் என்பவர் விஜயநகர வரலாற்றில் ஓர் அரசர் உயிருடன் இருக்கும்போது அவருடைய வாரிசாக மற்றொருவருக்கு முடி சூட்டும் வழக்கம் இல்லை என்கிறார். இணை அரசராக இளவரசர் அல்லது யுவராஜா ஆட்சி செய்திருக்கலாம் என்று கருத இடம் உள்ளது.

அரசனின் கடமை: அரசனின் முதலாவதும் தலையாயது மான கடமை குடிமக்களுக்குப் பாதுகாப்பினை அளித்து அவர்கள் குறைகளைக் களைவதே ஆகும். அரசனுக்கு இரட்டைப் பொறுப்புகள் இருந்தன. அந்நியர்களிடமிருந்து மக்களைக் காத்தல் முதலாவதும், உள்நாட்டில் அமைதியையும், ஒழுங்கை யும் நிலைநிறுத்தும் காவல் துறைப்பணி இரண்டாவதுமாகும். அரசனின் மற்றொரு முக்கியக் கடமை நீதித்துறையினை நல்ல முறையில் அமைப்பது ஆகும். அரசரே நாட்டின் நீதி முறையின் தலைவர். கீழ் வழக்கு மன்றங்களில் நீதியைப்பெற இயலாத வர்கள் அரசனிடம் முறையிட்டனர். தீவிரமான வலிமை மிக்க அயல்நாட்டுக் கொள்கையினை அரசர் மேற்கொண்டார். கொடுந் தண்டனைகள் வழங்கப்படவில்லை.

நாநிலத் தலைவர்கள் மக்களைத் துன்புறுத்தினால் அவர்களிட மிருந்து மக்களைக் காக்கின்ற கடமையினையும் அரசர்கள் மேற் கொண்டனர். கட்டாயமாக அமைச்சர்கள் மக்களை வற்புறுத்திப்

பரிசு பெறுவதை வெறுத்த மக்கள் வெளிநாடுகளுக்குச் சென்று விடுவதை அறிந்த அரசர் அவ்வாறு மக்கள் செல்லாது தடுத்தல் பொருட்டு அமைச்சர்களைக் கண்டித்து அச்செய்தியினை மக்கள் அறியும்படிக் கல்வெட்டுகளிலும் பொறித்து வைத்தார். இதனைத் தென்னற்காடு மாவட்டம் கீழூர் என்னும் இடத்தில் உள்ள சான்று ஒன்று அறிவிக்கின்றது.

இந்தச் சாதாரண கடமை தவிரச் சமுதாய ஒற்றுமையை ஏற்படுத்துதல் அரசனின் முக்கிய கடமைகளில் ஒன்றாக இருந்தது. ஒவ்வொரு தனிமனிதனும் நிறைவேற்ற வேண்டிய தர்மம் ஸ்வதர்மம் ஆகும். அதனை அவரவர் நிறைவேற்றிட இடையூறுகள் ஏற்படாதவாறு காத்தல் அரசனின் கடமையாகும். தனிமனிதனின் வாழ்க்கையில் அரசு எப்போதும் தலையிடுவ தில்லை. அரசன் சமய ஆச்சாரியர்களை நியமித்து ஸ்வதர்மத்தை நிறைவேற்றினான்.

சமுதாயம்: விசயநகரப் பேரரசு காலத்தில் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. மக்களுடைய பொருளாதார வாழ்க்கையிலும் மாறுபாடுகள் இருந்தன. அரசன் அவற்றைச் சமப்படுத்த முயற்சிகள் ஏதும் செய்ததாகத் தெரியவில்லை. மக்களின் பொருளியல் முன்னேற்றத்திற்கான வசதிகளைச் செய்யவேண்டியது அரசனின் கடமை. ஆதலால் காடுகள் அழிக்கப்பட்டு புதிய கிராமங்கள் உருவாயின. அவ்வாறு செய்திட இயலாதபோது மக்களுக்கு வரிச் சலுகை அளிக்கப் பட்டது. நில வருவாயைப் பெருக்கிட முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. அயல் நாடுகளுடன் வாணிபம் பெருகிட ஆவன செய்யப்பட்டது. அயல்நாட்டு வணிகர்கள் தலைநகரில் தங்கி வாணிபம் செய்திடப்போதிய உதவி செய்யப்பட்டது. சில தொழில்களுக்கு அரசு ஊக்கம் அளித்தது. சுரங்கத் தொழில் அரசின் வசமிருந்தது.

அயல்நாட்டுக் கொள்கை: அரசர்கள் தீவிரமான அயல் நாட்டுக் கொள்கையினைக் கடைப்பிடித்தனர். தகுந்த நேரத்தை எதிர்பார்த்து எதிரியின் மீது பாய்ந்திட அரசன் காத்திருக்க வேண்டியிருந்தது. எதிரிக்கு அவன் நாட்டிலேயே எதிரிகள் இருந்தால் அவர்களை ஊக்குவித்து அந்நாட்டினைப் பலவீனப் படுத்தி அதன் மூலம் அரசர்கள் வெற்றிபெற்றனர். இடைத் தடை நாடு (Buffer State) எதிரியோடு நட்புப் பூண்டு அந்நாடு உருவாவதற்குக் காரணமாக இருந்த நாட்டிற்கு எதிராக நடந்தால் அதனை அழித்திட வேண்டியது அரசரின் கடமை யாகும்.

பொறுப்பாளர்கள்: ஆட்சியாளரைத் தேர்வு செய்தல் அமைச்சர்கள் உயர் குடியினர் ஆகியோர் முன்னிலையிலேயே நடைபெற்றது. அரசர்கள் பதவியைத் துறந்து வாழ்தலும் உண்டு. அவ்வாறு முடிதுறந்த அரசர்கள் அரசியல் வாழ்க்கையை நீக்கி ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபட்டனர். தங்களுக்குப்பின் குழப்பம் எதுவும் நேரிட்டு விடக் கூடாது என்பதற்காகத் தங்கள் வாரிசு யார் என அறிவித்து அவ் வாரிசுக்கு யுவராஜா என்று பட்டம் சூட்டினர். அவ்வாறு பட்டம் சூட்டப் பட்டவருக்கு ஆட்சிப் பிரிவு ஒன்று அளிக்கப்பட்டு, ஆளும்முறை பயிற்றுவிக்கப்பட்டது. பட்டத்து அரசன் இளையோனாக இருந்தால், அவ்வரசன் தக்க பருவம் அடையும் வரை யாருடைய பொறுப்பிலாவது இருந்தான். அப்படி அரசனைத் தங்கள் பொறுப்பில் வைத்திருந்தவர்கள் சுயநலமிகளாய் இருந்தனர்.

வல்லாட்சி: அரசன் எல்லா அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தாலும் வல்லாட்சியாளனாகத் (Despot) திகழவில்லை. அரசனுடைய அதிகாரத்திற்குத் தடை விதிக்கத் தக்க அரசியல் சட்டத்தடைகள் (Constitutional checks) இருந்தனவா என்பதை ஆராய்கின்றபோது அரசியல் சட்டத்தடைகள் என்று சொல்லத்தக்க அளவில் தடைகள் ஏதும் இல்லாவிடினும் அவற்றைவிட வலுவான வழக்காறுகளும், அனுபவங்களும் இருந்தன. விசயநகரப் பேரரசர் யாரும் புதிதாகச் சட்டங்களை உருவாக்கியவர்கள் அல்லர். ஏற்கெனவே இருந்தவற்றை அமுல் நடத்துவதே அவர்கள் பணியாயிற்று. அரசர்கள் தர்மத்தைக் காக்க வேண்டுமென கிருஷ்ணதேவராயர் வலியுறுத்தினர். ஒருங்கிணைக்கப்பட்ட சமுதாயமும் அரசனின் அதிகாரத்திற்குத் தடையாக விளங்கியது. மக்களின் எண்ணமும் வழக்கங்களும் ஓரளவிற்கு அரசன் அதிகாரத்தினைத் தடை செய்யும் வகையில் விளங்கின. பெரும்பாலும் மக்களின் எண்ணங்களே மன்னர்களால் மதிக்கப்பட்டன. மன்னருடைய செயல் தங்கள் விருப்பத்திற்கு மாறுக இருக்குமேயானால் மக்கள் வரி செலுத்த மறுத்தனர். அரசனின் அதிகாரத்திற்குத் தடையாக இருந்த அமைப்பு அரச அவையாகும். அரசர்கள் அவையினரைக் கலக்காமல் நாட்டின் பணி எதையும் ஆற்றவில்லை. அரசனின் பட்டமளிப்பு விழாவினை இவ் வவையினரே நடத்தினர். கிருஷ்ண விஜயமு என்னும் நூலிலிருந்து கிருஷ்ணதேவராயர் போன்ற ஆற்றல் மிக்க அரசரும் அவையினரைக் கலந்து ஆலோசித்தனர் என அறிகிறோம்.

பேரவை: விசயநகரப் பேரரசில் பேரவை ஒன்று இருந்தது. இப் பேரவையில் அறிஞர்கள், புலவர்கள், இசைவாணர்கள்

ஆகியோர் கலந்து கொண்டனர். கிருஷ்ண தேவராயரின் பேரவையில் குறுநில மன்னர்களும், வணிகர்களும், அயல்நாட்டுத் தூதுவர்களும் கலந்துகொண்டனர். இப் பேரவை தவிர மௌரியப் பேரரசு காலத்தில் இருந்த மந்திரி பரிஷத்தைப்போன்ற அரசன் ஆலோசனை கலந்திட வேண்டிய சிறிய அவை ஒன்றும் இருந்தது. இவ் வவையின் தலைவர் சபாநாயகர் என்று அழைக்கப்பட்டார். இந்த அவையோடு அரசன் எத்தகைய உறவு கொண்டிருந்தான் என்பது தெரியவில்லை. அரசன் இல்லாத போது சபாநாயகர் தலைமை வகித்து நடத்தியிருக்கலாம். இந்த அவை தனியான ஓரிடத்தில் கூடியது. இச் சபையின் எண்ணிக்கை நிலையானதாக இல்லை. காலந்தோறும் மாறுபட்டது. தலைமை அமைச்சர், மற்ற துறைத் தலைவர்கள், அரசனின் உறவினர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டிருக்கலாம். நியூனிஸ் (Nuniz) என்பார் இரண்டாம் தேவராயரின் உறவினர் ஒருவர் அரசனின் இருபது அமைச்சர்களில் ஒருவர் என்று குறித்துள்ளார். எனவே அரசனின் உறவினர்களும் அமைச்சர்களாகப் பணியாற்றியிருக்க வேண்டும் என்னும் முடிவிற்கு வருகின்றோம். அவர்கள் ஏதேனும் துறைகளின் பொறுப்பாளர்களாக இல்லாது பெயரளவில் அமைச்சர்களாக இருந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

பிரதானி, தல அதிகாரி, தனி நாயகர், சாமந்த அதிகாரி ஆகியோர் அமைச்சர்களாவர். மகாசிரப் பிரதானி, உபப் பிரதானி என்று பிரதானி எனப்பட்டவர் அழைக்கப் பட்டார். அமைச்சரவையில் ஆட்சித்துறை அலுவலர்களுக்கும் இடமிருந்தது.

அமைச்சரவை: அமைச்சரவையினர் அரசனுக்கு முடிசூட்டி ஆட்சி நடத்துவதில் வழிகாட்டினர். வலிமை மிக்க அரசர்கள் தங்கள் ஆளுமையினாலும், வலிமையாலும் அமைச்சரவையினரின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தினர். ஆனால் பலவீனமான அரசர்கள் அமைச்சர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தனர். எவ்வாறு அமைச்சர் குழுவின் முடிவுகள் அரசரைக் கட்டுப்படுத்தின என்பது தெரியவில்லை. அரசன் இக் குழுவின் ஆலோசனையை முக்கியமான சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. சிலர் தம்முடைய முடிவிற்கு அவையினரைப் பணிய வைத்தனர். கிருஷ்ண தேவராயர் குறித்து நியூனிஸ் கூறுகின்ற சான்று உள்ளது. அரசர் வலுவுள்ளவராயின் அமைச்சர்கள் அரசரின் ஆலோசனைக்குப் பணிந்தனர். வலுவற்றவராயின் அமைச்சர்கள் அரசரைப் பணியவைத்தனர்.

அமைச்சரின் தகுதி: அமைச்சர்களாக அமர்த்தப்பட்டவர்கள் சிறந்த அறிவாளிகளாகவும், அதர்மத்தைக் கண்டு அஞ்சுபவர்களாகவும், இராஜ நீதியில் தேர்ந்தவர்களாகவும், ஐம்பது வயதிற்கு மேற்பட்ட உடல் நலம் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. அரசர்களுக்கும் அமைச்சர்களுக்கும் இடையே உறவு முறை நட்புடையதாக எப்போதும் இருந்திருக்கவில்லை. வலிவுமிக்க அமைப்பாகத் திகழ்ந்தமையால் அரசன் இதன் நடவடிக்கையினை உன்னிப்பாகக் கவனித்தான். அமைச்சர்களை ஒற்றர்கள் மூலம் கண்காணித்து வந்தான். அமைச்சர்கள் குழுவினுல் அரசர்கள் பொம்மையைப்போல நடத்தப்பட்டனர். ஆயினும் அரசனுடைய நம்பிக்கைக்கு உரியவர்களாக இருந்தவரையிலேயே அமைச்சரவையினரின் பதவி நிலைத்தது.

செயலகம்: மிகப் பரந்து விரிந்த பேரரசு அவை ஒன்றின் துணைக்கொண்டு மட்டுமே அரசனுல் ஆளப்பட்டிருக்க முடியாது. அரசின் ஆணைகளை நிறைவேற்றச் செயலகம் ஒன்று இருந்திருக்க வேண்டும். இராயசம் என்னும் அலுவலகம் ஒன்றினைப்பற்றியும் அதன் அலுவலர்களைப் பற்றியும் குறிப்புகள் பட்டயங்களில் அடிக்கடி காணப்பட்டாலும், ஆட்சிப் பிரிவில் எந்தப் பகுதி அது என்பது தெரியவில்லை. அரசர்கள் ஆணைகள் ஏதும் தாங்களாகவே எழுதி அனுப்பவில்லை எனவும் செயலர்கள் இப் பணியைச் செய்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. இதைத் தவிர கணக்காயர் என்னும் பொருளைத் தருகின்ற காரணீகம் என்னும் சொல் ஒன்று காணப்படுகிறது. சரவனுயகா அல்லது மணிய பிரதானு, அக்கினி பரிபாலகா, வாசல் காரியம் என அழைக்கப்படும் அலுவலர்கள் மைய அரசில் இருந்தனர்.

மாநில ஆட்சி: இனி மாநில ஆட்சி பற்றிக் காண்போம். பேரரசு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு ஆளுநர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஆளுநர்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். மாநிலங்களின் உள் ஆட்சி இவர்களின் கீழ் நிலவியது. தங்களுக்கு என்று தனி அவை, தனிப்படை, தனி அலுவலர்களைக் கொண்டு அன்னூர் ஆட்சி செய்தனர். ஆளுநர்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி உயர்தர அதிகாரிகளாக இருந்தாலும் சரி, ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுதல் செய்யப்பட்டனர். அமைச்சர்களின் ஆலோசனையின் பேரிலேயே பொதுவாக ஆளுநர்கள் அமர்த்தப்பட்டனர். மக்களை ஆளுநர்கள் கடுமையாக நடத்தியபோது, மைய அரசு தலையிட்டது. மாநில ஆளுநர்

களுக்குச் சிறப்புப் பட்டங்கள் அளிக்கப்பட்டன. சட்டத்தினையும் ஒழுங்கினையும் தங்கள் ஆட்சிப் பகுதியில் பாதுகாத்தலும் மாநில ஆளுநர்களின் கடமை ஆயிற்று. ஆளுநர்கள் மைய அரசில் முக்கிய பதவிகளில் அமர்த்தப்பட்டனர் எனவும் அறிகிறோம்.

நாயன்கார முறை: விஜயநகரப் பேரரசில் குறிப்பிடத்தகுந்த அம்சம் நாயன்கார முறையாகும். இம் முறைப்படி அரசன் நிலத்தின் சொந்தக்காரன் ஆவான். எனவே அரசன் தன்னைச் சார்ந்தவர்களுக்கு நிலங்களைப் பகிர்ந்தளித்தான். அரசனுக்கு ஆற்றிய அருஞ்சேவைகளுக்கு மானியமாக நிலம் வழங்கப் பட்டது. அரசனிடமிருந்து நிலத்தைப் பெற்றவர்கள் நாயக் கர்கள் என்று அழைக்கப்பட்டனர். பிற்காலத்தில் இப் பட்டம் சாதியைக் குறிப்பதாயிற்று. நாயக்கர்கள் தங்களுடைய பகுதி களைச் சுயேச்சையாக ஆண்டு வந்தனர். தங்கள் வருவாயில் பாதியை அரசுக்கு அளித்தனர். தங்கள் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைதியை நிலைநாட்டியதோடு குற்றங்களைக் கண்டு பிடிக்கும் பொறுப்பும் அவர்களுக்கு இருந்தது. அரசனுக்கு ஆண் மகவு பிறந்தபோதும், அரசனின் பிறந்த நாட்களின் போதும் இவர்கள் அன்பளிப்புகள் வழங்கினர். இத்தகைய கட்டுப்பாடு களை நிறைவேற்றுதவர்களுடைய உடைமைகள் பறிமுதல்செய்யப் பட்டன. ஆளுநர்களுக்கும் நாயக்கர்களுக்கும் வேறுபாடு உள்ளது. ஆளுநர்கள் அரசனின் பிரதிநிதிகள். ஆனால் நாயக் கர்கள் இராணுவத் தலைவர்கள் நாயக்கர்களுடைய மாவட்டங் களின் உள் ஆட்சியில் அரசன் குறுக்கிடுவதோ அல்லது மாறுதல் செய்வதோ வழக்கமில்லை. நாயக்கர்கள் எண்ணிறந்த கடமைகளை அதாவது காடுகளை வாழுமிடங்களாக மாற்றுவது, விவசாயத்தைக் கொண்டு வருவது ஆகிய பணிகளைச் செய்தனர். ஆளுநர்கள் தண்ட நாயகர்கள் என்று அழைக்கப்பட்டனர். பெரும்பாலும் பிராமணர்களே ஆளுநர்களாக நியமிக்கப் பட்டனர்.

நிலமானிய முறை: நாயக்கர்களின் பிரதிநிதியாக அரசனின் அவையில் ஸ்தானுபதி என்பவர் இருந்தார். இந்த நாயன்கார முறையானது இடைக்கால ஐரோப்பாவிலிருந்த நிலமானிய முறையினை நமக்கு நினைவூட்டுகிறது. இருப்பினும் ஐரோப்பிய நிலமானிய முறையினின்றும் இது வேறுபட்டது. ஏனென்றால் நாயன்கார முறையில் அரசனே பகுதிகளை அளித்து நிலமானியத்தவர் செலுத்தவேண்டிய அள வினையும் வகுத்தான். மேலும் ஐரோப்பிய நிலமானிய முறையில் சமுதாயம் முழுவதுமே ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது. ஆனால்

நாயன்கார முறையில் மக்களில் ஒரு பகுதியினரே இம் முறையில் இருந்தனர். நாயன்காரர்களைத் தவிரத் தோல்வியுற்ற மன்னர்கள் பேரரசனுக்கு அடங்கிக் கப்பம் செலுத்தி வந்தனர். பேரரசின் மாநிலங்கள் தன்னுட்சி பெற்றனவாக விளங்கிய போதிலும் அவற்றைக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரத் தனியாணை யாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அரச குடும்பத்திலிருந்த வர்களே தனி ஆணையாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கிராமம்: மாநில அரசில் கிராமம் ஆட்சித்துறைப் பிரிவாக இருந்தது. ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்றதாக விளங்கியது. கிராமத்தின் ஆட்சியை கிராம அவையே மேற் பார்வையிட்டது. கிராம அவையின் முக்கியமான பணிகளில் ஒன்று வரிவசூலித்தல் ஆகும். கிராம அவைகள் நீதித்துறை அதிகாரங்களும் பெற்றிருந்தன. வழக்குகளை விசாரிக்கவும், குற்றம் இழைத்தோர்களுக்குத் தண்டனை வழங்கவும் தவறிழைத் தோர் நிலங்களைப் பறித்துக்கொள்ளவும் உரிமை பெற்றிருந்தன. கிராம அவைகள் நீதித்துறை ஆலயங்களைக் கண்காணித்தன கிராம அவைகள் தனிப்பட்ட சிலருக்கு விருதுகள் வழங்கின. அறக்கட்டளைகள், அறநிலையங்கள் ஆகியவற்றின நிர்வகிக்கும் பொறுப்பினையும் மேற்கொண்டன. நாடு கிராமத்தைவிடப் பெரிய அமைப்பு ஆகும். நாட்டிலிருந்த சபைகள் நாடு எனவும் அதன் உறுப்பினர்கள் நாட்டவர் எனவும் அழைக்கப்பட்டனர். கிராம அவையைப் போலவே நாடும் தன் ஆட்சிப் பகுதியில் நிருவாகம் நடத்தியது. அரசர்கள் கிராமக் குடியரசுகளின் உரி மையில் தலையிடவில்லை. ஒவ்வொரு கிராமத்திலும், ஆயக்காரர்கள் என்று சொல்லப்படும் பன்னிரண்டு அலுவலர்கள் இருந்தனர் இவர்கள் மரபுவழி உரிமை பெற்றவர்கள்.

வருவாய்: வருவாய்த்துறையைப் பற்றி நமக்கு விளக்கு கின்ற சான்றுகளில் குறிப்பிடத் தகுந்தவை பட்டயங்களும், அயல்நாட்டு அறிஞர்களின் குறிப்புகளும் ஆகும். சாசனங்களில் கடமை, மகமை, காணிக்கை, கட்டணம், வரி, பட்டயம், இறை கட்டாயம் ஆகிய சொற்கள் காணப்படுகின்றன.

விசயநகர வருவாயின நிலவரி, சொத்துவரி, வணிகவரி, தொழில்வரி, தொழிற்சாலை வரி, இராணுவவரி, சமூகவரி, நீதித் துறை அபராதம் விடப்பட்ட இனங்கள் என்று பிரிக்கலாம்.

நிலம் நன்செய், புன்செய், காடுகள் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. நிலவரியே முக்கிய வரியாய் இருந்தது. நிலவரி

விதிக்கும்போது நிலத்தின் அமைப்பு, நிலத்தின் தன்மை, பயிராகும் பொருளின் தன்மை ஆகியவைகளைக் கருத்தில் கொண்டனர். கோவில் நிலங்கள் தேவதானம் எனவும் பிராமணர்களின் நிலங்கள் பிரம்ம தேயம் எனவும் அழைக்கப்பட்டன.

புன்செய்ப் பயிர்கள், காய்கறிகள் ஆகியவற்றிற்கும் வரி விதிக்கப்பட்டது. புன்செய் நிலத்தில் விதைக்கப்பட்ட நன்செய்ப் பயிருக்கும் புன்செய் நிலத்தில் விதைக்கப்பட்ட புன்செய்ப் பயிருக்கும் வரி வேறு பட்டது. தோட்ட நிலங்களிலிருந்து தோட்டப் புரவு என்னும் வரி வசூலிக்கப்பட்டது. இவை தவிர இடையர்கள் ஆடுகளை மேய்ப்பதற்கு மேய்ச்சல் வரி விதிக்கப்பட்டது. வீடுகளுக்கு விதிக்கப்பட்ட வரி, வாசல் பணம் என்றும், வீட்டு வரி மனைகளின்மீது விதிக்கப்பட்ட வரி மனை என்றும் அழைக்கப்பட்டன. கிராம அதிகாரிகள் செலவிற்கு வசூலிக்கப்பட்ட வரி **காரணீக்க ஜோதி, தலையாரிக்கம், இராயசவர்த்தனை, அவசரவர்த்தனை, அதிகார வர்த்தனை, நோட்டவர்த்தனை, நிருபகம் பனம், அழுக்கு நீர்ப்பட்டம், படிக்காவல்** முதலியனவும் ஆகும். இவ் வரிகள் எல்லாம் உள்ளூர் அரசுகளால் வசூலிக்கப்பட்டன.

நில அளவை : நில அளவைக்கு ஒரே மாதிரியான அளவு கோல் இருக்கவில்லை. பல்வேறு வகையான அளவுகோல் பற்றி சாசனங்கள் குறிப்பிடுகின்றன. திருப்புக்குழிச் சாசனம் நாடளவு கோல், இராஜ விவாதன்கோல் ஆகியவை பற்றியும், திருப்பாலவனம் பட்டயம் கண்டராய கண்டன்கோல் என்பதுபற்றியும் குறிப்பிடுகின்றன.

பங்கு : அரசின் பங்கு ஆறில் ஒன்று என்பது நீண்ட கால மாகவே வழக்கில் இருந்து வந்தது. இருப்பினும் அரசின் செலவை சரிக்கட்டச் சில நேரங்களில் பங்கு அதிகரிக்கப்பட்டது. நூனிஸ் என்பார் பத்தில் ஒன்பது பங்கை உயர்குடியினர் பெற்றன ரென்றும், அதில் பாதியை அரசனிடம் செலுத்தினர் என்றும் கூறினார். அதனை டாக்டர் மகாலிங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. நிலவரி தவிரச் சொத்துவரி மூலமும் அரசுக்கு வருமானம் கிட்டியது. பட்டயங்கள் சொத்துக்கள் மீது விதிக்கப்பட்ட வரி பற்றிக் கூறுகின்றனவே தவிர எவ்வளவு என்பதுகுறித்து ஏதும் கூறவில்லை.

வணிகவரி : அரசு வருவாயின் பெரும்பங்கில் வணிகவரியும் சேர்ந்திருந்தது. கடல் வழியாகவும், தரை வழியாகவும் செல்லும் போக்குவரத்துக்குச் சுங்கவரி விதிக்கப்பட்டது. ரைஸ் (Rice) என்பவர் சுங்கவரிகளை ஸ்தலதாயம் (ஒரே இடத்தில் விற்பதிற்கு

இறக்குமதி செய்யப்படும் வரி) மார்க்கதாயம் (மாவட்டங்கள் வழியே செல்லும் பொருளுக்கு விதிக்கப்படும் வரி) மாமூலதாயம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு விதிக்கப்பட்ட வரி) என மூன்று பிரிவாகப் பிரித்தார். **விலக்காணம், விற்பனம், கைவிலக்காணம், மாஸ்தி, அதிகாசு, சந்தை முதல், பாசிவிலை, அட்டகாடசுங்கம்:** மூலவிசாபாடி ஆகியவை வாணிகம் சார்ந்த வரிகளில் சில.

தொழில் வரி : தொழில் செய்வோர் இக் காலம் போல அக் காலத்திலும் தொழில்வரி செலுத்த வேண்டியிருந்தது. தொழில் செய்வதற்காக மட்டுமின்றி அத் தொழில் செய்யும் இனத்தில் பிறந்ததற்காகவும் சேர்ந்தே வரி விதிக்கப்பட்டது. இத் தொழில் வரி பெரும்பாலும் பணமாகவே செலுத்தப்பட்டது. மாதந்தோறும் வசூலிக்கப்படாது ஆண்டு முழுவதற்குமாகச் சேர்த்தே வரிவசூலிக்கப்பட்டது.

தொழில் செய்வோருக்கு மட்டுமின்றி தொழிற்சாலைகளுக்கும் வரி விதிக்கப்பட்டது. தறிக் கடமை, செக்குக் கடமை, அரிசிக் காணம், பொன் வரி, செம்பொன் வரி, புல்வரி, நூலாயம், பட்டாடை, நூலகம் ஆகியவை தொழிற்சாலை வரிகளாகும்.

இராணுவ வரி : இராணுவச் செலவிற்காகச் சில வரிகள் விதிக்கப்பட்டன. கோட்டைகளைப் பராமரிக்க வசூலிக்கப்பட்ட வரி கோட்டை மகமை என்று அழைக்கப்பட்டது.

திருமணங்கள் செய்து கொள்பவர்களும் அரசருக்கு வரி செலுத்த வேண்டும் எனப்பட்டது. சோழர் காலத்திலேயே திருமண வரி பற்றிக் கூறப்பட்டுள்ளது. அப்போது கல்யாண காணிக்கை என அது அழைக்கப்பட்டது. திருமண ஊர்வலங்கள், திருமணப் பந்தல் பல்லக்கு ஆகியவற்றிற்கும் வரி விதிப்பு இருந்தது. கிரம தேவதைக்குரிய ஆலயப் பாதுகாப்பிற்கு பிடாரி வரியென்னும் வரி வசூலிக்கப்பட்டது.

நீதி வரி: இவைத்தவிர நீதித்துறையில் விதிக்கப்பட்ட அபராதங்களும் அரசின் முக்கிய வருவாயில் பங்கு பெற்றன வழக்காற்றில் தோரணக் காணிக்கை, தரிசனக் கரணிக்கை எனப்படும் சில வரிகளும் இருந்தன.

இதுவரை குறிப்பிடப்பட்டுள்ளவற்றைத் தவிரவும் வேறு வரிகள் வசூலிக்கப்பட்டன. பதினெட்டு ஜாதியினரைச் சேர்ந்தவர்

களின் சொத்துக்கள், அவர்களுக்கு வாரிசு இல்லாமல்போனதால் அரசுக்குச் சொந்தமாயின.

வரி தள்ளுபடி : அப்துல் ரசாக் என்பவரின் கூற்றிலிருந்து வரைவின் மகளிரிடமிருந்து பன்னிரண்டாயிரம் பணம் கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது. வரி விதிப்பு அதிகமாகவே மக்களிடம் எதிர்ப்பு உணர்ச்சி பரவுதலைக் கண்ணுற்ற அரசு வரிக்குறைப்பு அல்லது வரி நீக்கம் செய்தது.

நீதித்துறை : நீதித்துறையைப் பொறுத்தமட்டில் அரசனே தலைமை நீதிமன்றமாவான். முக்கியமான வழக்குகளில் அரசனின் தீர்ப்பே முடிவானது. ஊரியல் வழக்குகள் இந்து சட்டப்படியும், வழக்காறுகளின்படியும் தீர்மானிக்கப்பட்டன. சான்றுகள் பரிசோதிக்கப்பட்டன. குற்ற இயல் சட்டம் கடுமையானது. உண்மையைக் கண்டுபிடிக்க சித்திரவதை அனுமதிக்கப்பட்டது. திருட்டுக் குற்றத்திற்கு மரண தண்டனையோ அல்லது உடல் உறுப்புக் குறைப்புத் தண்டனையோ வழங்கப்பட்டது. சில நேரங்களில் குற்றவாளிகள் யானைகளால் இடரப்படுமாறு செய்யப்பட்டனர். சில குற்றங்களுக்கு அபராதம் விதிக்கும் பழக்கமிருந்தது என அறிகிறோம். அரசினுல் அநீதி வழங்கப்பட்டவர்க்கு இழப்பீடு வழங்கப்பட்டது. விசய நகர அரசர்கள் காலத்தில் நீதிமுறை ஆட்சியைப் பற்றி அறிகின்றபோது அரசர்கள் நல்ல முறையில் நீதி வழங்கவேண்டும் என்னும் எண்ணம் உடையவர்களாக இருந்தனர் என்று அறிகிறோம். தண்டனையின் கடுமையே மக்களைக் குற்றம் செய்யவிடாமல் தடுத்தது. குற்றவியல் சட்டநீதி விசய நகரப் பேரரசில் மட்டுமின்றி இடைக்காலம் முழுவதிலுமே கடுமையாக இருந்தது.

காவல் படை : அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டச் சிறந்த காவற்படையினை வைத்திருப்பது அரசின் கடமையாயிற்று. காவற்படை இரண்டு வகைப்பட்டதாக இருந்தது ஒரு வகை அரசினுல் நிர்வகிக்கப்பட்டது. மற்றொரு வகை மக்களால் அவரவர் பகுதிகளில் நிருவகிக்கப்பட்டது. தலைநகரில் தனிக் காவற்படை ஒன்றும் இருந்தது. காவற்றுறையினர் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதையும், குற்றங்களைக் கண்டுபிடிப்பதையும் முக்கியப் பணிகளாகக் கொண்டிருந்தனர். குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கத் தவறியவர்கள் களவு போன பொருட்களுக்கு ஈடாகத் தங்கள் சொத்துக்களை இழந்தனர். நாயன்கார முறையில் இருந்த மாநிலங்களில் நாயக்கர்களே அப் பணியை மேற்கொண்டு அதனை நிறைவேற்றக் காவல்காரர்கள்

என்று சொல்லப்படுவோரை அமர்த்தினர். பேரரசின் சிலபகுதி களில் தலைமைக் காவல்காரர், அரசு காவல்காரர்கள் என அழைக் கப்பட்டனர். காவல் காரர்கள் தங்களுக்குக் கீழே தலையாரிகள் என்று சொல்லப்படுவோரை அமர்த்தி அவர்களுக்கு ஊதியம் பணமாகவோ, பண்டமாகவோ வழங்கினர். காவல் துறையை மக்களே ஏற்பாடு செய்தனர். அரசு காவல் துறையின் ஒரு பகுதியை மட்டுமே நிர்வகித்தது. காவற்றுறை ஏற்பாடுகள் சிறப்பான முறையில் இருந்தபோதிலும் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்காத அலுவலர்கள் மிகவும் கடுமையாகத் தண்டிக்கப் பட்டது அவ்வளவு சிறப்பாக இல்லை. பாடி காவல் என்பது காவல் பணி அல்லது காவல் துறையைப் பாதுகாக்கும் அமைப்பு என்று கூறப்படுகிறது.

இராணுவம்: இடைக்கால இந்தியாவில் இராணுவத்தின் முக்கியத்துவம் பெரிதும் உணரப்பட்டது. இந்தியப்படை மிகவும் பெரிதாகவே இருந்தது. நூனிஸ் என்பாரின் கூற்றுப்படிக் கிருஷ்ண தேவராயர் ஆறுயிரம் குதிரைப்படை வீரர்கள் அடங்கிய ஐம்பதாயிரம் படை வீரர்களை வைத்திருந்தார். படை வீரர்களைத் தேர்ந்தெடுக்கப் பல வகைகள் பின்பற்றப்பட்டன. முதல் வகை அரசர்களே படை வீரர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்கித் தங்களின் பொறுப்பின் கீழ் வைத்துக் கொள்வதாகும். இரண்டாவது வகை நிலமானியத் தலைவர்களால் அரசுக்குப் படை வீரர்கள் போருக்கு அளிக்கப்படுவதாகும். பேரரசு பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுக் குறித்த அளவு இராணுவத் தினரைக் கொடுப்பதற்காகத் தலைவர்களிடம் வழங்கப்பட்டது.

கண்டசாரா: விசய நகரப் பேரரசின் இராணுவத்துறை கண்டசாரா என்னும் துறையின் கீழ் இருந்தது. அதில் காலாட் படை, குதிரைப்படை, பீரங்கிப்படை, ஒட்டகப்படை முதலியன அடங்கியிருந்தன. யானைகள் மீது மிகவும் நம்பிக்கை வைத்துப் போருக்குக் கொண்டு சென்றனர். ஆனால் அவைகள் பீரங்கிப் படைகள் முன் நிற்க அஞ்சி ஓடின.

விசய நகரப் பேரரசு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள் ளாமையால் வெற்றிபெற இயலாமல் போய்விட்டது என்று வரலாற்றறிஞர்கள் சிலரால் கருதப்படுகிறது. போர்த்துக்கீசியர் களுக்குச் சலுகைகள் வழங்கியமையால் நாட்டில் உறுதிப்பாடு குலைந்தது. விசய நகர அரசர்கள் இராணுவத்துறையில் அதிகக் கவனம் செலுத்தாமையால் எதிரிகளை அழித்திட இயலவில்லை. இதனால் அவ் வரசு நிலைபெற்ற அமைப்பாக மாறிட இயலாமல் போய்விட்டது. இக் குறைபாடுகள் பேரரசின் அழிவிற்கு வழி வகுத்தன.

19. பிறநாட்டார் கண்ட விசயநகரம்

அரசரைப் பற்றிய குறிப்புகள் — பெண்கள் நிலை — உணவுப் பழக்கங்கள் — வரி வசூல்

விசயநகரப் பேரரசுக் காலத்தில் வருகை புரிந்த பிறநாட்டவர் தாம் கண்டவற்றைக் குறிப்புகளாக எழுதி வைத்துச் சென்றுள்ளனர். அக் குறிப்புகளின் வாயிலாக விசய நகரப் பேரரசின் அரசியல்நிலை, சமுதாயநிலை, சமயநிலை ஆகியவை பற்றிய செய்திகளை அறிகிறோம். ஏற்கனவே கிடைத்துள்ள பட்டயங்களில் காணப்படும் செய்திகளைச் சரி பார்த்து உண்மை நிலையை அறிந்திட இக் குறிப்புகள் பெரிதும் துணைபுரிகின்றன. பிறநாட்டவர்களில் இரஷ்ய தேசத்தைச் சேர்ந்த **நிகிடின்**, இத்தாலியைச் சேர்ந்த **நிகோலா கோண்டி**, பாரசீகத்தைச் சேர்ந்த **அப்துல் ரசாக்**, போர்ச்சுக்கல்லைச் சேர்ந்த **டாமிங்கோபேயஸ்**, **நியூனிஸ்**, **பாரபோஸ்** ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஆவர்.

டாமிங்கோ பேயஸ் அரசரைப் பற்றிக் குறிப்பிடும் தகவல்கள் வேடிக்கையானவை. 'தினமும் சூரிய உதயத்திற்கு முன்னர் அரசர் ½ பின்ட் நல்லெண்ணெயைக் குடித்து, அதே எண்ணெயை உடல் முழுவதும் பூசிக்கொண்டு, சிறிய துணியை இடையில் அணிந்துள்ளார். பின்னர் கனத்த, எடையைத் தூக்கி, கத்தியால் சண்டை செய்து, உடல் வேர்க்கும்வரை உடல் பயிற்சி செய்கிறார். அதன் பின்னர் மல்யுத்தப் பயிற்சி செய்கிறார். இப் பயிற்சிக்குப் பின்னர் குதிரைமீது அமர்ந்து பொழுது விடியும் வரை இங்கும் அங்கும் வேகமாகச் சவாரி செய்கிறார். பின்னர் பிராமணரால் நீராட்டப்படுகிறார்.' என்று குறிப்பிடுகிறார்

கிருஷ்ண தேவராயரை வெகுவாகப் புகழ்ந்து கூறியுள்ளார். 'அவர் மிகவும் கற்றறிந்த அரசராகவும், ஓர் அரசர் எவ்வளவு

முழுமைப் பண்புகள் உடையவராய் இருக்க முடியுமோ அவ்வளவு பண்புகள் நிரம்பியவராய் இருந்தார்; எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கும் இயல்புடையவராய் இருந்தார். மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். பிற நாட்டவருக்கு மதிப்புக் கொடுத்து அவர்களை அன்புடன் வரவேற்கும் பண்புடையவராக இருந்தார். அவர் களுடைய நிலை எப்படிப்பட்டதாயினும், அவர்களுடைய விவ காரங்களையெல்லாம் விசாரிக்கும் இயல்பினராயிருந்தார். அவர் ஒரு சிறந்த ஆட்சியாளர். மிகுந்த நீதிமனப்பான்மை உடையவர். ஆனால் சில சமயங்களில் கடுங்கோபம் கொண்டு விடுவார். வீரஞ் செறிந்த, எல்லாவற்றிலும் முழு நிறைவு அடைந்தவருக்கு வேண்டிய எல்லாத் தகுதிகளும் அவரிடம் நிறைந்திருந்தன' என்று அவர் வர்ணித்துள்ளார்.

கி. பி. 1420இல் விசய நகரினைப் பார்வையிட்ட இத்தாலியப் பயணியான **நிக்கோலா கோன்டி**, 'நகரின் சுற்றளவு அறுபது மைல்கள். அதனுடைய சுவர்கள் மலையை முட்டும்வரை உயர்த் தப்பட்டுள்ளன; அச் சுவர்களின் கீழே சமவெளிகள் உள்ளன. அச் சமவெளிகளின்மூலம் நகரின் பரப்பினை விரிவுபடுத்த முடியும். இந்த நகரில் படைக்கலந் தாங்கக் கூடியவர்கள் தொண்ணூ றாயிரம் பேர் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அரசர் இந்தியா வின் மற்ற அரசர்களைக் காட்டிலும் மிகுந்த ஆற்றல் வாய்ந்த வராய் உள்ளார்' என்று எழுதியுள்ளார்.

அப்துல் ரஸாக் 'நாடு மிகவும் நன்றாக மக்கள் தொகை நிரம்பியிருக்கிறது. அதனால் ஒரு குறிப்பிட்ட அளவுள்ள இடத்தில் அந் நாட்டைப் பற்றிய கருத்தை விளக்கிட முடியாது. அரசரின் கருவூலத்தில் பல அறைகள் உள்ளன. அவை புதைக் கப்பட்டு உருக்கிவார்த்த தங்கத்தால் ஒன்றாய் மூடப்பட்டுள்ளன. நாட்டில் எல்லோரும் உயர்ந்தவராயினும், தாழ்ந்தவராயினும், வீதியிலிருக்கும் சாதாரண வேலைக்காரர்வரை நகைகள் அணிந் துள்ளனர்' என்று கூறுகின்றார்.

கி.பி. 1516இல் இந்தியாவில் இருந்த **எடோர்டோ பாரபோஸ்**, விசய நகர் பெரும் பரப்புடையது; மிக நெருக்கமான மக்கள் தொகை உடையது; நாட்டிலேயே சுறுசுறுப்பான வாணிகக் களமாக உள்ளது. பெகுவிலிருந்து மாணிக்கங்களும் சீனாவி லிருந்தும் அலெக்சாண்டிரியாவிலிருந்தும் பட்டும் மலபாரிலிருந்து இலவங்கம், கற்பூரம், கஸ்தூரி, மிளகு, சந்தனம் இவையும் வந்துள்ளன என்று கூறும் கூற்றிலிருந்து விசய நகரின் செல்வச் செழிப்பினை அறிகிறோம்.

பேயஸ் 'இந்த நகரத்தில் ஒவ்வொரு இனத்தைச் சேர்ந்தவரும் இருக்கின்றனர். ஏனெனில் இந் நகரில் பெரிய வாணிகம் நடை பெறுகிறது; பல விலையுயர்ந்த மணிக் கற்கள் முக்கியமான வைரங்கள் இருக்கின்றன. உலகிலேயே எல்லாப் பொருள்களும் நிரம்பிய சிறந்த நகரமிதுவே. இங்கே அரிசி, கோதுமை, தானி யங்கள், கம்பு, சோளம், ஒரளவு பார்லி, அவரை, பயறு. கொள்ளு முதலியவையும், இன்றும் இந் நாட்டில் வளரும் பயிர் களும், மக்களுக்கு உணவாயிருக்கும் இவை போன்றனவும் மிக அதிகமாகச் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. அவை மிக மலிவாக விற்கப்படுகின்றன' என்று குறிப்பிடுகின்ருர்.

விசய நகரின் பொருளாதார வாழ்க்கையினைப் பற்றி **அப்துல் ரஸாக்** 'ஒவ்வொரு தனித்தனி சங்கம் அல்லது தொழிலின் வணி கர்கள் தங்கள் கடைகளை அடுத்தடுத்து வைத்துக் கொண்டிருந் தனர் எனவும் ஒவ்வொரு தெருவிலும் கோவில்கள் இருந்தன. எல்லா வணிகர்களுக்கும், தொழிலாளிகட்கும் இவை மேல் நாட்டில் உள்ள 'சகோதர நட்புக் கழகங்களுக்கு' ஈடாகச் சமமானவையாய் இருந்ததோடு பெரும்பயன் விளைவித்தன எனவும் குறிப்பிடுகின்ற கருத்துகளின் வாயிலாக நாட்டின் பொருளாதார வாழ்க்கையினைப் பற்றி அறிகிறோம்.

நிபூனிஸின் கருத்துகளிலிருந்து விசயநகரின் அரசியல் வாழ்க்கையைப்பற்றி மட்டுமின்றிச் சமய சமுதாய வாழ்க்கை யைப் பற்றியும் அறிகிறோம். பெண்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, 'அரசர் மற்றோர் செய்யக்கூடிய பெண்களையும் வைத்துள்ளார். சில பெண்கள் குறி சொல்லுவோராயும், சோதிடர்களாயும் உள்ளனர். வாயில்களுக்கு உள்ளாகச் செய்யப்படும் எல்லாச் செலவுகளைப் பற்றிய கணக்குகளையும் எழுதும் பெண்கள் அவரிடம் இருந்தனர். சில பெண்டிருடைய கடமை நாட்டின் எல்லா விவகாரங்களையும் எழுதி அவற்றை வெளியே இருப்பவர்கள் எழுதியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்ப் பதாக இருந்தது. அவர்கள் இசைக் கருவிகளை மீட்டுபவர் களாயும், பாடுபவர்களாயுமிருந்தனர். அரசரின் மனைவியர்கள் கூட இசையில் தேர்ச்சி பெற்றவராயிருந்தனர்' என்று குறிப் பிடுகிறார்.

'பிராமணர்கள் வாணிகத்தில் நேர்மையானவர்களாயுள்ளனர்; அதிகத் திறமையுள்ளவர்கள்; கணக்கில் மிகவும் திறமையான வர்கள்; ஒல்லியானவர்கள்; நல்ல தோற்றத்தினர். ஆனால் கடின வேலைக்குச் சிறிதும் இலாயக்கற்றவர்கள்' என்றுகூறி யுள்ளார்.

விசயநகர அரசர்கள் உணவுகளைப் பற்றி நூனிஸ் கீழ்க் கண்ட விளக்கத்தைத் தருகிறார் :

'இந்தப் பிஸ்நாக(விசயநகர) அரசர்கள் எல்லாவகையான பொருள்களையும் உண்கின்றனர். ஆனால் பசுக்கள், எருதுகள் ஆகியவற்றின் இறைச்சியைத் தின்பதில்லை. அவர்கள் இறைச்சி, பன்றிக் கறி, மீன்கறி, கோழிக்கறி, முயல்கள், புறுக்கள், குருவிகள் போன்ற எல்லாவகையான பறவைகளின் இறைச்சியைத் தின்கின்றனர். சிறு குருவிகள், எலிகள், பூனைகள், பல்லிகள் இவற்றின் இறைச்சிகள் பிஸ்நாக நகரின் சந்தையில் விற்கப்படுகின்றன.

'ஒவ்வொன்றும் உயிருடன் விற்கப்பட வேண்டும். அப்போது தான் வாங்குகிறவர்கள் என்ன வாங்குகிறோம் என்று அறிய இயலும். இது பெருவிலங்குகளைப்பற்றிய வரையே. ஆறுகளிலிருந்து பெரிய எண்ணிக்கைகளில் மீன்கள் கொண்டு வரப்படுகின்றன.

நியூனிஸ் 'உழவர்கள் தங்கள் விளைச்சலில் பத்தில் ஒரு பங்கைக் கொடுக்க நேர்ந்தது' என்று வரி அமைப்பு முறையை விளக்கினார். இரஷ்ய தேசத்து நிகிடின் விசயநகரை 'பிச்சி நகர்' என அழைத்தார்.

பிறநாட்டவரின் குறிப்புகள் ஒவ்வொன்றும் நூல் வடிவில் தொகுத்திடத் தக்கவை. அவற்றை ஈண்டு முழுமையாகக் காண்பது இயலாது. எனவே ஆங்காங்கே அரசியல், சமூகம் பற்றிக் கூறியுள்ளவற்றை மேலெழுந்த வாரியாகக் காண்போம். மேனுட்டாரின் குறிப்புக்களைப் பற்றிய முழுமையான விளக்கத்தினை அறிந்திட இராபர்ட் சீவெல் என்பார் எழுதிய 'A Forgotten Empire' என்னும் நூல் பெரிதும் துணை புரிகிறது.

விசயநகரப் பேரரசின் கீழ் சமுதாய, சமய, பொருளாதார நிலை

சமுதாய நிலை : விசயநகரப் பேரரசு முஸ்லீம்களின் தாக்கு தலிலிருந்து இந்துச் சமுதாயத்தைக் காக்க வேண்டும் என்ற நோக்கத்தில் உருவாக்கப்பட்டது. இந்துக்களையும், இந்து தர்மத்தையும் காக்க எழுந்த அரசு என்ற போதிலும் விசயநகரப் பேரரசர்கள் சமயப் பொறையுணர்வுடன் எல்லா மக்களையும் சமமாக நடத்தினர். விசயநகரப் படைவீரர்களில் முஸ்லீம்களும் இருந்தனர்.

சாதிப் பாகுபாடுகள்: சாதிப் பாகுபாடுகள் ஆழமாக வேரூன்றி இருந்தன. பிராமணர்கள் சமுதாயத்தில் மதிப்பு மிக்க இடத்தை வகித்தனர். சிலர் அமைச்சர்களாகவும், தளபதி களாகவும் பணியாற்றினர். பெரும்பாலோர் வேறுபல தொழில் களையும் செய்து வந்தனர். சாதிப்பூசல் நாட்டில் நிலவியது. இடங்கை, வலங்கைச் சாதியினர் தங்களுக்குள் சச்சரவிட்டுக் கொள்ள, அரசர்கள் தலையிட வேண்டிய நிலை ஏற்பட்டதுமுண்டு. இஸ்லாமின் வருகை இந்து மக்களின் வாழ்க்கையிலும் மக்க ளுடைய எண்ணங்களிலும் மாறுதல்களைத் தோற்றுவித்தது என்று கூறலாம். தீண்டாமை, சாதிப்பற்று ஆகியவைகளைக் கைவிட்டு விட வேண்டிய அவசியத்தை மக்கள் உணர்ந்தனர். வேமனு போன்ற தெலுங்குப் புலவர்கள் அத்தகைய மாற்றத்தை வலியுறுத்தி எழுதி வைத்தனர்.

பெண்கள்: சமுதாயத்தில் பெண்களுக்கு உயர்வானதோர் இடமளிக்கப்பட்டது. அவர்கள் அரசியல், சமயம், சமூகம், இலக்கியம் ஆகியவை குறித்தவற்றில் கலந்து கொண்டனர். பெண்கள் மல்யுத்த வீரர்களாக, சோதிடர்களாக, கணக்காயர் களாக இசைக் கலைஞர்களாகப் பணியாற்றினர் என்பதனை நியூனிசின் (Nuniz) குறிப்பிலிருந்து அறிகிறோம். அது மட்டு மின்றி அரண்மனையில் இரவுக் காவற்காரர்களாகக் கூடப் பெண்கள் பணியாற்றினர் என்ற செய்தியிலிருந்து அச் சமுதாயத்தில் பெண்களுக்கு இருந்த சமத்துவ நிலை தெரிய வருகின்றது.

கலைஞர்கள்: விசயநகரத்தைக் கலைச்செல்வங்களால் அலங் கரித்த கலைஞர்கள் பலர் கோவில் அரண்மனை ஆகியவற்றின் சுற்றுப்புறங்களில் வாழ்ந்தனர். கைக்கோளர்கள் என்பவர்கள் கோவில் நிர்வாகத்தில் தொடர்புடையவர்களாக விளங்கினர்.

மக்கள் வாழ்க்கை: ஒருவர் பல பெண்களை மணந்து கொண்டு வாழ்ந்து வந்த முறையும் இருந்தது. நகர்ப்புறங் களிலும், பிற இடங்களிலும் விலை மாதர்கள் வாழ்ந்தனர். இவ் விலை மாதர்களிடமிருந்து அரசுக்கு வரி கிட்டியது. இவ் வரியி லிருந்து கிடைத்த 12,000 பணம் காவலர்களின் ஊதியத்திற்குச் செலவிடப்பட்டது என அப்துல் ரசாக் குறிப்பிட்டுள்ளார். கணிகையருடன் கொள்ளும் தொடர்பு இழிவானதாகக் கருதப்பட வில்லை போலும்!

உணவு: உணவு வகையில் மக்கள் எல்லாவகையான உணவுகளையும் உட்கொண்டனர். பழங்கள், காய்கறிகள்,

புலால் ஆகியவற்றை உண்டனர். ஆனால் பசு, எருது ஆகிய வற்றின் இறைச்சியை உண்பதில்லை. ஏனென்றால் அவற்றை அவர்கள் வழிபட்டனர். பன்றி இறைச்சியையும் மீன், பறவைகள், பூனைகள், சிறுத்தைகள் போன்றவற்றின் இறைச்சி யைக்கூட உண்டனர் என்று நியூனிஸ் ஒரு பட்டியலே காட்டு கிறார். அப் பிராணிகளை உயிரோடு விலைக்கு வாங்கிப் பின்னர் மக்கள் அவற்றைச் சமைத்து உண்டனர் என்று கூறப்படுகிறது.

நீதி: வழக்குகளைத் தீர்த்துக் கொள்வதற்கு ஒருவருக் கொருவர் போரிடும் முறையைச் சிலர் கடைப்பிடித்தனர். அவ்வாறு இறந்தவர்கள் மரியாதையுடன் அடக்கம் செய்யப் பட்டனர். இறந்தவரின் சொத்துக்கள் வென்றவரைச் சேர்ந்தன. இவ்வாறு இருவர் மட்டும் கைகலப்பது அமைச்சருடைய அனு மதியைப் பெற்ற பின்னரே நடைபெறவேண்டி யிருந்தது. இம் முறை காட்டுமிராண்டித்தனமானது என்று **பெரிஷ்டா** குறிப் பிட்டுள்ளார். ஆனால் தக்காணத்துச் சுல்தான்களால் புகுத்தப் பட்டதே இம் முறை ஆகும். உடன்கட்டை ஏறும் வழக்கம் பொதுவாக உயர்குடி மக்களிடையே காணப்பட்டது.

விழாக்கள்: விழாக் காலங்களில் பலியிடுதல் எங்கும் காணப்பட்டது. அவ்வாறு பலியிடுதலை அரசர்களே நேரில் இருந்து நடத்தினர். ஒரே அடியில் 24 எருமைகள் 150 ஆடுகள் பலியிடப் பட்டன என்றும், மகாநவமி விழாவின் கடைசி நாளன்று 250 எருமைகளும், 4500 ஆடுகளும் பலியிடப்பட்டன என்றும் **பியாஸ்** (Paes) குறிப்பிட்டுள்ளார். ஏராளமான கால் நடைச் செல்வங்கள் இருந்தமையால் பொருளாதார இழப்பு ஏதும் அரசுக்கோ, மக்களுக்கோ ஏற்படவில்லை.

செல்வச் சிறப்பு: விசய நகரம் செல்வச் சிறப்புமிக்க நகர மாக விளங்கிற்று. பிற நாடுகளுடன் வாணிபமும் வர்த்தகமும் நடைபெற்றன. பிறநாட்டிலிருந்து வந்து சென்றவர்களின் குறிப்புக்களில் விசயநகரத்தின் செல்வ வளத்தைப் பற்றிய சான்றுகள் காணப்படுகின்றன.

வேளாண்மை: நாட்டின் செல்வச்சிறப்பிற்கு வேளாண்மை, தொழில்கள், வாணிபம், வர்த்தகம் ஆகியவையே காரணமாக அமைந்தன. திறமைமிக்க நீர்ப்பாசன முறைகளைக் கையாண்டு வேளாண்மையைப் பெருக்கினர். தொழில்களுக்கு அரசின் ஆதரவு இருந்தது. மால்டிவ் தீவுகளிலிருந்து கப்பல்கள் கட்டப் பட்டு தென்னிந்தியாவிற்கு அனுப்பப்பட்டன என்று பார்போசா

குறிப்பிடுகின்றார். தங்கம், வெள்ளி, செம்பு நாணயங்கள் பயன் படுத்தப்பட்டன.




விசயநகரச் சிற்பம் - கலை காஞ்சிபுரம்

பொருளாதார நிலை : மக்கள் எல்லோரும் ஏழை யாய் இருந்த போதும் செல்வந்தராய் இருந்தபோ தும் காது மூக்கு கழுத்து ஆகியவற்றில் ஆபரணங் களை அணிந்திருந்தனர் என்று ரசாக் குறிப்பிடுகின் றார். விசயநகரப் பேரரசர் ஏராளமான செல்வம் படைத்தவராகவிளங்கினர் என்று பியாஸ் எழுதி வைத்துள்ளார். பலநாட்டுப் பொருட்களும் விசயநகரத் தில் விற்பனை செய்யப்பட் டன. 300 துறைமுகங்க ளின் மூலமாக கடல் வாணி பம் நடைபெற்றது என்ற செய்தி ஒன்றே விசயநகரத் தின் செல்வச் சிறப்பிற்குச் சான்று பகர்வதாகும்.

இலக்கியம் : இலக்கியத் துறையில் விசய நகர அரசர்கள் ஆற்றிய அரும்பணி குறிப்பிடத்தக்கது ஆகும். அரச அவையி லிருந்த பெரும் புலவர்கள் வடமொழியில் நல்ல இலக்கியங்களைப் படைத்து அளித்துள்ளனர். இரண்டாம் தேவராயர், கிருஷ்ண தேவராயர் போன்ற அரசர்களும் இலக்கியப் படைப்பாளிகளாக விளங்கியுள்ளனர். எப்போதும் கற்றறிந்த பெருமக்களின் சுற் றத்தையே அன்னார் விரும்பினர். தென்னிந்திய இலக்கியத்தில் குறிப்பாகத் தெலுங்கு புதிய சகாப்தத்தை உருவாக்கியவர் என்று போற்றப்படுகின்றார் கிருஷ்ண தேவராயர்.

நால்வகை வேதங்களுக்கு விளக்க உரைகள் எழுதப்பட்டன. கங்கமாதேவியின் மதுரா விஜயம், திருமலாம்பாவின் வரதாம்பிக பரிணயம் என்னும் நூல்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. தெலுங்கு இலக்கியத்தின் பொற்காலம் என்று விசயநகர ஆட்சி யாளர்களின் காலம் கருதப்படுகிறது. தெலுங்கு இலக்கியத்தின்

ஐந்து காவியங்களில் ஒன்று கிருஷ்ணதேவராயரின் ஆமுக்த மால்யதா ஆகும். அஷ்டதிக்கஜங்கள் என்ற எட்டுப் புலவர்களில் அல்லசானி பெத்தண்ணு முன்னணியில் நிற்கிறார். நந்தி திம்மண்ணு, துர்ஜதி, மதய்யகரி மல்லண்ணு, பட்டுமூர்த்தி, பிங்காலி சூரண்ணு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.



விசய நகரச் சிற்பம் — கலை, திருவரங்கம்

தெலுங்குமொழி இலக்கியங்கள் மட்டுமின்றிக் கன்னடமொழி இலக்கியங்களும் ஏற்றம் பெற்றது இக் காலத்தேதான். இராய அரசர்களின் ஆதரவில் இருந்த சமணர்களே இதற்குக் காரண மாவார்கள். **மதுரா, பாஸ்கரா, நேமண்ணு** ஆகியோர் சமணப் புலவர்கள். சமண இலக்கியங்கள் மட்டுமின்றி வீரசைவர்களால் சைவ இலக்கியங்களும் படைக்கப்பட்டன. சமரசர் என்பவர் பிரபு லிங்க லீலை என்னும் நூலையும், **ஜக்கநாராயணர்** நுரோந்துஸ் தலா என்னும் நூலையும், **பாசவர்** வீரசைவக் காவியங்களையும் இயற்றினர். குப்பி மல்ல நாராய, சர்வஜ்ஞமூர்த்தி ஆகியோர் சைவ எழுத்தாளர்கள் ஆவர். மகாபாரதத்தை **திம்மண்ணு** மொழிபெயர்ப்பு செய்து கிருஷ்ணராய பாரதம் என்று பெயரிட் டார். **விட்டலநாதர்** பாகவத புராணத்தைக் கன்னட மொழியில் பெயர்த்தார். **புரந்தரதாஸர்** எண்ணிறந்த பக்திநயம் சொட்டும்

பாடல்களை இயற்றினார். ஹரி பக்தி சாரம் என்ற நூலை இயற்றியவர், கதைதாசர் எனப்படும் இடையர் ஆவார். இவ்வாறு இலக்கியப் பணிகளை மன்னவர்கள் மேற்கொண்டனர் என்றால் அதற்கு மக்கள் மத்தியில் ஆதரவு இருந்தது என்பதே பொருள். அதுமட்டுமின்றி மக்களின் உயர்கல்வி நிலையையும் எடுத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

சமய நிலை : இஸ்லாமியரின் முன்னேற்றத்தைத் தடுக்கவும், இந்துச் சமயத்தை அழிவிலிருந்து காக்கவுமே விசயநகரப் பேரரசு எழுந்தது. இன்றையத் தென்னிந்திய இந்து மதத்தை உருவாக்கியவர்கள் விசயநகரப் பேரரசர்களே என்று கூறலாம். இந்துக்களை மட்டும் ஆட்சி செய்யாது, சமணர்கள், முகமதியர்கள், கிருத்துவர்கள் ஆகியோரையும் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டு, சமயப்பொறை உணர்வுடன் அனைவரையும் ஆட்சிசெய்தனர்.

பல கோவில்களைக் கட்டிவைத்த பெருமையும் இவர்களுக்கு உண்டு. ஸ்ரீ விருபாக்ஷா கிருஷ்ணசாமி கோவில், விட்டலா கோவில், அச்சுதராயர் கோவில், ஹஸாரா இராமசுவாமி கோவில் ஆகியவை இவர்களால் எடுக்கப்பட்ட ஆலயங்களில் குறிப்பிடத் தகுந்தவை. கிருஷ்ணதேவரால் எடுக்கப்பட்ட ஒரே கல்லில் வடிக்கப்பட்ட நரசிம்ம வடிவம் கலைச்சிறப்புமிக்கது. இன்றும் ஸ்ரீரங்கம் ஆலயத்தில் விசயநகரக் கலைச் சிறப்பைக் காட்டும் சிற்பங்களைக் காணலாம். முதலாம் புக்கர், இரண்டாம் தேவராயர் போன்றவர்கள், ஆலயங்கள் அமைத்துக் கொள்ளும் உரிமையைச் சமணர்களுக்கும் வழங்கினர். எல்லாச் சமயத்தவரும் அவரவர் சமய முறைப்படி வாழ அனுமதித்ததே இவர்களின் தனிச் சிறப்பாகும்.

20. டெல்லிச் சுல்தானியம்

ஒரு மதிப்பீடு

இது வரையில் இந்திய வரலாற்றில் பாபரின் வருகை வரை உள்ள காலத்தில் நிகழ்வுற்ற வரலாற்று நிகழ்ச்சிகளைக் கண்டோம். அரசியல் ரீதியாக ஏற்பட்ட மாறுதல்களை மட்டும் கண்டு விட்டு ஒதுங்கி விட்டால் நம் பணி நிறைவு பெற்று விடாது. எனவே இதுவரை நடைபெற்றவற்றை வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு மறு பரிசீலனை செய்து பார்த்திடும் பணியினை மேற்கொள்வோம். ஒரு மதிப்பீட்டினைச் செய்வோம்.

தோற்றது ஏன் : துருக்கியர்கள் படையெடுப்பினை நிகழ்த்திப் பல்வேறு பகுதிகளை வென்றனர். ஆனால் வலுவோடு எந்த இந்திய அரசரும் மாமூது போன்றவர்களைத் தாக்கித் தோல்வியைத் தழுவிடச் செய்யவில்லை. இதில் வேடிக்கை என்ன வென்றால் இந்தியர்கள் துருக்கியரைவிட ஆற்றலிலும் அறிவிலும் ஒரு சிறிதும் குறைந்தவர்கள் அல்லர் என்பதே. ஆனால் ஏராளமான சுயேச்சை அரசுகளாக இந்திய அரசுகள் பிரிந்து சிதறுண்டு கிடந்தன. ஒன்றுக்கொன்று நல்லுறவு நிலவவில்லை என்பதும் கண்கூடு.

மக்கள் மனப்பான்மை : மக்களுக்கும் ஆள்பவர்களுக்கு மிடையே நெருக்கமான தொடர்பு இல்லாத காரணத்தால் ஆள்பவரைப் பற்றியும், அவர் எதிர் நின்று போரிடும் வேந்தரைப் பற்றியும் சிறிதும் கவலை கொள்ளாது தமக்கு என்று உள்ள சொந்தக் கடமைகளைத் தவறாது செய்து வந்தனர். சுருக்கமாகச் சொல்லப் போனால் இராமன் ஆண்டால் என்ன,

இராவணன் ஆண்டால் என்ன என்ற மனோபாவமே தலைதூக்கி நின்றது. இந்திய மக்கள் அயலவர் படையெடுப்புக்களைச் சந்திக்கின்ற நேரங்களில் தைரியமான கொள்ளைக்காரன் எதிரே ஏதும் செய்ய இயலாது செயலற்று நின்றுவிடுகின்ற வீரமிக்க குடும்பத் தலைவர்களைப் போல இந்திய மக்கள் நிலை இருந்தது என்று ஸ்ரீவஸ்தவா குறிப்பிடுகின்றார். மேலும் தமக்கு நேரிட்ட படையெடுப்பு ஆபத்துக்களெல்லாம் விதிவசத்தால் நிகழ்ந்தவை, தவிர்க்க முடியாதவை என்று நம்பினர். கொள்ளையடித்து விட்டுத் திரும்பிச் சென்றுவிடுவார்கள் என்று எண்ணியவர்கள், நிலையாக அவர்கள் தங்கியவுடனே முழுமூச்சாக எதிர்க்கத் தலைப் பட்டார்கள். இந்த இடத்தில் வரலாற்று மாணவர்கள் அறிந்து தெரிந்திட வேண்டிய உண்மை ஒன்றுள்ளது.

ஏன் முயலவில்லை ?: வரலாற்றைக் கற்கின்ற மாணவரிடத்து எழுகின்ற வினோதமான ஐயம் ஒன்றுள்ளது. அந்நியர் படையெடுத்து ஒரு சில பகுதிகளைத் தமக்குரியதாக ஆக்கிய பின்னரும் அவர்களைத் துரத்திட ஏன் முயலவில்லை என்பதே அது. இதற்கும் நாம் ஏற்கனவே கூறிய பதிலையே முதலாவது காரணமாகக் கூறவேண்டியுள்ளது. அவர்களிடையே ஒன்றி ணைந்து செயல்படும் மனப்பாங்கு இல்லாமை என்பதே அது வாகும்.

இந்திய மனப்பான்மை : இரண்டாவதாக இந்தியரிடத்தே இயல்பாக உள்ள மனப்பான்மையையும் கூறலாம். பிறநாடுகளை வலியச் சென்று கைப்பற்றுதலையோ, ஆக்கிரமிப்புச் செய்தலையோ இந்தியர் ஒரு போதும் விரும்பியதில்லை எனலாம். மூன்றாவதாக அராபியர்களின் இயல்பையும் இதற்குக் காரணமாகக் கூறலாம். இந்துக்களைப் பணயமாகச் சில நேரங்களில் கருதி, தம் விருப்பத்திற்கு உடன்படவில்லையெனில் ஆலயங்களை நொறுக்குவதாகவும், இந்துக்களைக் கொலை செய்வதாகவும் பய முறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்துச் சமுதாயத்தில் இஸ்லாமியச் சாயல் : இந்தியத் திருநாடு இஸ்லாமியரின் படையெடுப்புகளுக்கு முன்னர் கிரேக்கர்கள் பாரசீகர்கள், ஹூணர்கள் போன்றோரின் படையெடுப்பினைச் சந்தித்திருக்கிறது. ஆனால் அப் படையெடுப்பாளர்கள் எல்லாம் தனியாக இனம் பிரித்துக் காட்ட இயலாதவகையில் இந்தியப் பண்பாடு என்னும் கடலில் கரைக்கப்பட்டு விட்டனர். ஆனால் இஸ்லாமியர்களோ தனித்த ஒரு பண்பாடுடையவர்களாகப் பிரித்துக் காட்டத்தக்க வகையில் இருந்தனர். இஸ்லாமியப் பண்பாட்டினை, இந்துப்பண்பாடு கி.பி எட்டு அல்லது ஒன்பதாம்

நூற்றாண்டில் முதன்முதலாகச் சந்தித்தது. இஸ்லாமியப் பண்பாட்டின் சாயல்கள் எவ்வாறு இந்துச் சமுதாய வாழ்க்கையில் பிரதிபலித்ததோ, அது போலவே இந்தியப் பண்பாட்டின் அடிச்சுவடுகள் இஸ்லாமியப் பண்பாட்டில் பதிந்தன. கொள்ளல் இருந்தது போலவே கொடுத்தலும் இருந்தது என்றால் மிகையாகாது.

யார், யாரிடத்துக் கற்றனர்? டாக்டர் தாராசந்த் போன்றவர்கள் சங்கராச்சாரியாரின் தத்துவங்களில் இஸ்லாமிய சமயக் கொள்கையின் ரேகை படிந்திருப்பதாகக் கருதினர். ஆனால் அவர்தம் கருத்தினை ஏற்றுக் கொள்வதற்கில்லை. சங்கராச்சாரியார் இஸ்லாமிய சமயக்கொள்கையினைக் கைக்கொண்டார் என்றால், ஏன் அவர் உருவ வழிபாட்டினைக் கண்டித்திடவில்லை? என்ற கேள்வி எழுகிறது. ஒரே சாயலுடைய கருத்துகள், இரண்டு பேருக்கிடையே தோன்றுதலும் சாத்தியமே.

பக்தி இயக்கம்: டாக்டர் மஜும்தார் போன்றவர்கள் ஏற்றுக்கொள்கின்ற இந்து, இஸ்லாமியத் தொடர்புகளின் விளைவே 'பக்தி இயக்கம்' என்பதனையும் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஏனென்றால் கோடிக்கணக்கான இந்திய மக்கள் தம் சமயக் கொள்கையினைப் பொறுத்த மட்டில் ஏதும் பாதக மடைந்திடவில்லை ஆனால் இந்துச் சமுதாயத்தின் மேல்தட்டில் இருந்தோரும், தென்னிந்தியத் தலைவர்களும் இவ்விரு சமயங்களுக்கிடையே இணைப்புப் பாலம் அமைத்திடும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் இந்துக்களின் இந்த முயற்சியினுக்கு இஸ்லாமியரின் முழு ஒப்புதல் கிட்டவில்லை. எனவே இந்து சமயத்தைக் காத்திட வேண்டி இந்துத் தலைவர்கள் தீவிர சமயப் பற்றுடையவர்கள் ஆயினர்.

இந்துச் சமுதாயத்தில் நேர்ந்தவை: மாதவர், விசுவேசுவரன் போன்றவர்கள் கடுமையான வாழ்க்கை முறைகளை சமய வாழ்க்கையில் உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டிய வழி முறைகளைக் காட்டினர். இந்துக்கள் மத்தியில் இளம் வயதில் திருமணம் செய்து கொள்ளும்முறை புகுத்தப்பட்டது. பர்தா முறையும் வலியுறுத்தப்பட்டது. உணவு, திருமணம் போன்ற வற்றில் கட்டுப்பாடுகள் கடுமையாயின. இது இஸ்லாமியத்தின் வருகையினால் முதலாவதாக மேற்கொள்ளப்பட்ட மாறுதல்.

இந்துச் சமூகத்தின் தலைவர்கள் இஸ்லாமின் கொள்கைகளான சாதி வேற்றுமையினை ஏற்றுக்கொள்ளாமை போன்ற வற்றை ஏற்று முக்தி பெறச் சாதி தடையில்லை என வலி

யுறுத்தினர். பக்தி இயக்கமானது இந்துச் சமுதாயத்தின்மேல் படிந்த இஸ்லாமின் நேரடிச் சாயல் இல்லையெனினும் ஓரளவிற்கு ஏதோ ஒருவகையில் தொடர்புள்ளது போலத் தோன்றுகிறது. இந்துச் சமயச் சீர்திருத்தவாதிகள் சமய ஒற்றுமையை வலியுறுத்தி, எல்லாக் கடவுளர்களும் ஒன்றே என்ற கொள்கையினைப் பரப்பலாயினர். இந்துக்களில் மிகச் சிறுபான்மையினரே பாரசீக, அராபியமொழிகளைக் கற்றனர். அக் கால வடமொழி, இந்தி இலக்கியங்களை இஸ்லாமின் வருகை ஆட்கொள்ளவில்லை. அமீர் குஸ்ருவிற்குப் பிறகு டெல்லியில் தலை சிறந்த இசைக் கலைஞன் யாருமில்லை. டெல்லித் துருக்கிய அரசர்கள் ஓவியக் கலையில் ஆர்வம் கொண்டிருந்தனர் என்பதை எடுத்துக் காட்டச் சான்றேதும் இல்லை.

ஒழுக்கச் சிதைவு: மக்களுடைய ஒழுக்கச் சிதைவுக்கு துருக்கிய ஆட்சி காரணமெனில் அது மிகையாகாது. இந்துச் சமூகத்தைச் சேர்ந்த, துருக்கிய ஆட்சியாளரோடு அன்றாடம் தொடர்பு கொண்டிருந்த சிலர் சமயம் குறித்த தங்கள் உணர்வுகளை, பண்பாடு குறித்த கருத்துகளை மறைத்து வைத்துக் கொண்டனர். அவற்றை வெளிப்படுத்தினால் எங்கே தாம் வாழும் வாழ்க்கைக்குப் பழுது ஏற்பட்டு விடுமோ என அஞ்சினர். ஏமாற்று, எத்து வேலைகளைக் கற்றுக் கொள்ளத் தலைப்பட்டனர். நீதி, தர்மம் போன்றவற்றின் மீது இருந்த அச்சம் ஓரளவு குறைந்தது.

துருக்கியர் ஆட்கொள்ளப்படல்: ஆனால் துருக்கியர்கள் விரும்பியோ விரும்பாமலோ இந்துப் பண்பாட்டினால் ஆட்கொள்ளப்பட்டார்கள். இந்துவாக இருந்து இஸ்லாமியர்களாக மாறியவர்கள் தங்கள் பழக்க வழக்கங்களைக் கைவிட இயலாதவர்களாயிருந்தனர். ஞானிகளை வழிபடுதல் என்ற பழக்கம் இஸ்லாமியரித்துப் புகுந்தது. இந்து சமய வேதாந்தக் கருத்துக்களிலிருந்து இஸ்லாமிய சூபிப் பிரிவு தூண்டுதல் பெற்றது. இஸ்லாமிய அறிஞர்கள் இந்துத் தத்துவம், யோகம், வேதாந்தம் போன்றவற்றால் கவரப்பட்டனர். சிலர் இந்திய மருத்துவ முறைகள், வான இயல் போன்றவற்றைக் கற்றனர். இந்திய உடைகளை, உணவுப் பழக்கங்களைத் தேவையை முன்னிட்டுக் கடைப்பிடித்தனர்.

ஆட்சித்துறையில் இராசபுத்திரர்களிடத்துக் காணப்பெற்ற அணிவகுப்பு முறை போன்றவற்றைக் கற்றனர். இந்திய யானைகளைப் போரிடப் பயன்படுத்தினர். இஸ்லாமியக் கட்டிடக்கலை இந்துக்கள், முஸ்லீம்களின் ஒன்றுபட்ட முயற்சியின் விளைவே,

அரசவை மொழியாகப் பாரசீகம் விளங்கியபோதிலும், பிற மொழியினருடன் அவர்கள் கொள்ள வேண்டியிருந்த தொடர்புகளின் விளைவாகவே உருது மொழி உருவாயிற்று எனலாம். இஸ்லாமியரான இந்துக்கள் சாதிமுறை போன்ற இந்து அடிப்படைகளைவிட்டு விடவில்லை. உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இந்துப் பழக்கங்களாக சதி அல்லது உடன் கட்டை ஏறுதல் என்பதனைக் கடைப்பிடித்தனர்.

ஏன் தோற்றது? : முந்தையக் கிரேக்கர், சாகர், ஹூணர் போன்றவர்களை விழுங்கி ஏப்பம்விட்டு விட்ட இந்துச் சமுதாயம் எப்படி இஸ்லாமியக் கோட்பாட்டை ஆட்படுத்திக்கொள்ளாது, தனியாக விட்டுவிட்டது? சிலர் இந்துச் சமுதாயம் பிற சமயங்களைத் தன்னருகில் அண்டுவதற்கு விடவில்லை என்ற தவறான கருத்தைக் கொண்டிருந்தனர். ஆனால் உண்மையில் தாராள மனப்பான்மை கொண்டவர்களாகவே இந்துக்கள் இருந்தனர். ஏராளமான வணிகச் சலுகைகளை வழங்கினர். அயல் நாட்டு முஸ்லீம் பெருமக்கள் மதிப்புடனே நடத்தப்பட்டனர். ஆனால் சடங்குகளைப் பொறுத்தமட்டில் அந்நியர்களை இந்துக்கள் அருகில் விடவில்லை.

இந்துக்களில் பெரும்பான்மையோர் சைவர்கள். ஆனால் முஸ்லீம்கள் அனைவருமே இறைச்சியை உண்பவர்கள். மேலும் இந்துக்களுக்கு வெறுப்பை விளைவிக்கின்ற பசுவதை, பசு மாமிசம் உண்ணுதலை அவர்கள் கைவிடவில்லை. இந்துக்களை விடத் தாம் பன்மடங்கு உயர்ந்தவர் என எண்ணி இந்துக்களைத் தாழ்ந்தவர் என எண்ணினர். தம் சமயத்தை மிகப் பெருமையாக எண்ணிக் கொண்டிருந்த அவர்கள், சாதிப் பாகுபாடுகளால், உட்பூசல்களால் நிரம்பியிருந்த சமூகத்தில் கலப்பதை விரும் பாததில் ஆச்சரியமேதுமில்லை.

முஸ்லீமாக மாறிய ஒருவன் மீண்டும் தன் பழைய சமயத்திற்கு மாற விரும்பினால் டெல்லிச் சுல்தானியர் அவனுக்குத் தண்டனை வழங்கினர். முஸ்லீமை மணந்து கொள்ள விரும்பிய ஆணை, பெண்ணை இஸ்லாமிய சமயத்திற்கு மாறிய பின்னரே மணம் செய்து கொள்ளலாம் என்று கொண்டிருந்த கொள்கை இருவருக்குமிடையே நல்லுறவிற்கு வழி வகுக்கவில்லை. இத்தகைய சூழ்நிலையில் இரு சமயத்தவர்க்குமிடையே இணக்கமான சூழ்நிலை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்தன.


ஆனால் இந்த நிலை தொடர்ந்து நீடித்ததா? என்றால் நாம் இதுவரை ஆராய்ந்த காலத்திற்குப் பின்னர் நிச்சயம் இல்லை

என்றே கூறவேண்டும். டெல்லிச் சுல்தானியர்களின் காலத் திற்குப் பின்னர் சிற்றரசுகளின் ஆதிக்கம் வலுப்பெற்றதையும், தென்னகத்தில் விசயநகரப் பேரரசு தோன்றியதையும் ஏற்கனவே கண்டோம். 1526இல் பாபரின் படையெடுப்பினைச் சந்திக்கின்ற இந்திய நாட்டினருக்கு இதுவரை பார்த்திட்ட இஸ்லாமியர் அல்லாத புதிய முஸ்லீம்கள் அறிமுகம் ஆகின்றனர்.


பாபரின் வருகையிலிருந்து இந்திய நாட்டின் வரலாறு வேறொரு கோணத்தில் செல்கிறது. அக்பரின் காலத்தில்தான், டெல்லிச் சுல்தானியர்களின் காலத்தில் வாழ்ந்தவர்கள் முயன்ற உடன்பாட்டு உணர்வு ஏற்படுகிறது. ஆனால் அது நீடித்ததா? நிலைத்ததா? என்பதனைத் தொடர்ந்து வரலாற்றினைப் படிப்போர் தெரிந்து கொள்வர்.


வம்சாவளி அட்டவணை

பல்லவர்கள்




சோழ அரசர்கள்


விசயாலயன்
முதலாம் ஆதித்தன்
முதலாம் பராந்தகன்
முதலாம் இராசாதித்தன்
கண்டராதித்தன்
அரிஞ்சயன்
மதுராந்தகன்
இரண்டாம் பராந்தகன்
இரண்டாம் ஆதித்தன்
முதலாம் இராசாதித்தன்
முதலாம் இராசேந்திரன்
குந்தவி




ஒன்றுவிட்ட சகோதரர்
இரண்டாம் இராசாதிராசன்
வழித் தோன்றல்கள்
மூன்றும் குலோத்துங்கன்
மூன்றும் இராசராசன்
நான்காம் இராசேந்திரன்

★ முதலாம் இராசாதித்தன் என்பதனை முதலாம் இராசராசன் என திருத்தி வாசிக்கவும்


அரிகேசரி
பராக்கிரம
மானவர்மன்
குலசேகரன்
அல்லது
ஸ்ரீவல்லவன்
பராக்கிரமன் அல்லது
குலசேகரன்
அரிகேஸ்வரன்
சகோதரி
ஜடாவர்மன் பராக்கிரமன்
அல்லது
வீரபாண்டியன்
ஜடாவர்மன் பராக்கிரமன்
அல்லது
ஸ்ரீ வல்லபன்
அபிராம பராக்கிரமன்
அகவர்மன்
ஸ்ரீ வல்லபன்
குலசேகர பராக்கிரமன்
திருநெல்வேலிப் பெருமாள்
குலசேகரன்
குணராகன்
வரதுங்கராமன்
ஆதிவீரராமன்
ஸ்ரீ வல்லபன்
ஸ்ரீ வல்லபன்
அபிராம ஆதிவீராமன்

வாதாபிச் சாளுக்கியர்


முதலாம் ஜெயசிம்மன்
இரண ராகவன்
1. முதலாம் புலிகேசி
2. கீர்த்திவர்மன்
3. மங்களேசன்
4. இரண்டாம் புலிகேசி
விஷ்ணுவர்த்தனன்
ஜயசிம்மன்
நாகவர்த்தன்
சந்திராதித்தியன்
ஆதித்தியவர்மன்
5 விக்கிரமாதித்தன்
ஜெயசிம்மன்
6 வினயாதித்தன்
7 விஜயாதித்தன்
8 இரண்டாம் விக்கிரமாதித்தன்
முதல் பீமன்
9 இரண்டாம் கீர்த்திவர்மன்

கல்யாணியைச் சேர்ந்த சாளுக்கியர்கள்

விஜயாதித்தன்

முதலாம் பீமன்

மூன்றும் கீர்த்திவர்மன்

முதலாம் தைலபன்


மூன்றும் விக்கிரமாதித்தன்

இரண்டாம் பீமன்


முதலாம் அய்யனன்


நான்காம் விக்கிரமாதித்தன்

இரண்டாம் தைலன்



சத்தியாசிராயன்
தசவர்மன்
ஐந்தாம் விக்கிரமாதித்தன்
இரண்டாம் அய்யனன்
இரண்டாம் ஜெயசிம்மன்
முதலாம் சோமேசுவரன்
ஆவல்லா தேவி
இரண்டாம் சோமேசுவரன்
ஆரும் விக்கிரமாதித்தன்
ஜெயசிம்மன்
விஷ்ணுவர்த்தன விஜயாதித்தன்
ஐயகர்ணன்
மூன்றும் சோமேசுவரன்
மைலால தேவி
இரண்டாம் ஜகதேகமல்லன்
மூன்றும் தைலபன்
நான்காம் சோமேசுவரன்


வெங்கி சாளுக்கியர்


1 குப்ஜ விஷ்ணுவர்த்தனன்
2 ஜெயசிம்மன்
3 இந்திரபட்டாரகன்
4 இரண்டாம் விஷ்ணுவர்த்தனன்
5 மங்கியுவராஜன்
6 இரண்டாம் ஜெயசிம்மன்
8 மூன்றும் விஷ்ணுவர்த்தனன்
7 கோக்கிள்ளி
9 முதல் விஜயாதித்தன்
10 நான்காம் விஷ்ணுவர்த்தனன்
11 இரண்டாம் விஜயாதித்தியன்
நிருபருத்திரன்
12 ஐந்தாம் கலிவிஷ்ணுவர்த்தனன்
13 மூன்றும் விஜயாதித்தியன்
முதலாம் விக்கிரமாதித்தியன்
முதலாம் யுத்தமல்லன்
14 முதலாம் பீமன்
18 தாரபன்
21 யுத்தமல்லன்



15 நான்காம் விஜயாதித்தியன்
19 இரண்டாம் விக்கிரமாதித்தன்
16 அம்மன்
ஆரும் விஷ்ணுவர்த்தனன்
ராஜமகேந்திரன்
மூன்றும்
22 சாளுக்கியபீமன்
23a பாதயன்
இரண்டாம் தாலன்
24 தாஞர்ணவன்
23a இரண்டாம் அம்மன்
ஆரும் விஜயாதித்தியன்
17 பேடா
ஐந்தாம் விஜயர்
தித்தியன்
20 இரண்டாம் பீமன்
25 சத்திவர்மன்
26 விமலாதித்தியன்
27 இராஜராஜநரேந்திரன்
ஏழாம் விஜயாதித்தியன்
28 மூன்றும் இராஜேந்திரன்

ஹொய்சளர்



நிருபகாமன்
விநயாதித்தன்
ஏரெயங்கன்
முதலாம் வல்லாளன்
விஷ்ணுவர்த்தனன்
உதயாதித்தன்
நரசிம்மன்
இரண்டாம் வல்லாளன்
இரண்டாம் நரசிம்மன்
சோமேசுவரன்
மூன்றும் நரசிம்மன்
மூன்றும் வல்லாளன்
நான்காம் வல்லாளன்
இராமநாதன்
விசுவநாதன்


இராட்டிரகூடர்
தந்திவர்மன்
முதலாம் இந்திரன்
முதலாம் கோவிந்தன்
முதலாம் கர்க்கன்
இரண்டாம் இந்திரன்
முதலாம் கிருட்டிணன்
தந்தி துர்க்கன்
இரண்டாம் கோவிந்தன்
துருவன்
கம்பர் (ஸ்தம்பர்)
மூன்றும் கோவிந்தன்
இந்திரன்
நிருபதுங்கன் (முதலாம் அமோகவர்ஷன்)
இரண்டாம் கிருட்டிணன்
சங்கை (மூன்றும் நந்திவர்மரின் மனைவி)
ஜகதுங்கன்
மூன்றும் இந்திரன்
மூன்றும் அமோகவர்ஷன்
இரண்டாம் அமோகவர்ஷன்
நான்காம் கோவிந்தன்
மூன்றும் கிருட்டிணன்
நிருபமன்
நான்காம் இந்திரன்
அமோகவர்ஷன்


கஜ்னா வைடுகள்


அல்ப்டஜின்
சபுக்டஜின் (மருமகள்)
கஜினிமாமூது
இஸ்மாயில்
முகம்மது
முதலாம் மசூது
அப்துல் இரஷ்து
மஜ்தூத்
மௌதூத்
அலி
பருக்சாத்
இப்ராகிம்
இரண்டாம் மசூது
மகமது
மன்சூர்
மூன்றும் மசூது
ஷெர்ஷாத்
அர்சலன்
பகரம்ஷா
குஸ்ரூஷா
குஸ்ரூமாலிக்


கோரி மரபினர்


ஈசுதீன் ஹாசன்
பக்ருதீன்
சைபுத்தீன்சூரி
குட்தீன்
பஹாஉத்தீன்
அலாஉத்தீன்
சைபுத்தீன்
ஷிகாபுத்தீன்
சூஜாஉத்தீன்
பஹாவுத்தீன்
சம்சுதீன்
(கியர்ஸ்உத்தீன்)
ஷிகாபுத்தீன்
(முயிஸ்ஸுத்தீன்)


அடிமை வம்சம்


I குத்புத்தீன் அய்பெக்
II ஆராம்
மகள் III இல்துத்மிஷ்
நசீருத்தீன்
IV ருக்னுதீன்
V இரஸியா
VI பஹ்ராம்
VIII நசீர்உத்தீன் மம்மூத்
மகள் IX பால்பன்
VII அலாவுதீன் மஸுத்
மகம்மது
புக்ராகான்
X முயிஸுத்தீன் கைக்குபாத்
XI கயூமர்


கில்ஜி மரபினர்


யாக்ரேஷ்கான்
நசீருத்தீன்
ஷிகாபுத்தீன்
ஜலாலுத்தீன் பிரோஸ்
மாலிக்
அசாஉத்தீன்
அர்கலிகான்
உருக்னுதீன்
அலாவுதீன் முகம்மது
அல்மாஸ்பெக்
குட்லுகான்
முகம்மது
அகமதுகான்
கிஸிர்கான்
ஷாதிகான்
குத்புத்தீன் முபாரக்
நசீருத்தீன் குஸ்ரு
(வலுக்பின் மூலம் பதவிக்குவந்தவர்)
ஷிகாபுத்தீன் உமர்


துக்ளக்குகள்


?
கியாஸ்உத்தீன் துக்ளக்
இரஜ்ஜாப்
முகமது பின் துக்ளக்
பெண்மகவு
மகமதுகான்
மகமது
தாவர்மாலிக்
பிரோஸ் துக்ளக்
குத்புத்தீன்
இப்ராஹிம்
பதேகான்
ஜாபர்கான்
முகமதுபின் பிரோஸ்
இரண்டாம் கியாஸ் உத்தீன்
நஸ்ரத் ஷா
ஹுமாயூன்கான் அலாவுதீன்
நசிருத்தீன் மகமது
தௌலத்கான் லோடி (கிளர்ச்சியாளர்)


சையிது வம்சம்


மாலிக் சுலைமான்
கிஸிர்கான் சையிது
மூயிஸ் உத்தீன் முபாரக்ஷா
பரீதுகான்
முகமது ஷா
அலாவுதீன் ஆலம் ஷா
பஹ்லோல் லோடி
(கிளர்ச்சியாளர்)


லோடி வம்சம்


பஹ்ரம் லோடி
இஸ்லாம்கான்
மாலிக் காலா
பிரோஸ்
முகம்மது
மாலிக் குவாஜா
குதுப்கான்
பெண்
பஹ்லோல் — பொற்கொல்லர் மகளை மணந்தார்
குவாஜா
பயாசித்பார்பக்ஷா
நிசாம்கான் சிக்கந்தர்
முபாரக்
ஆலம்கான்
யாகூப்கான்
பதேகான்
மூசாகான்
ஜலால்கான்
இப்ராகிம் லோடி
இஸ்மாயில்
ஹுசைன்
மகமது


பாமினி அரசர்கள்


அலாவுத்தீன் பாமின்ஷா
முதலாம் முகம்மது
தாவூத்
அகமத்கான்
மகமூத்கான்
முஜாஹித்
∴பத்கான்
மகமதுசன்ஜார்
∴பெரோஸ்
அகமது
மகமதுகான் II
ஹஸன்
முபாரக்
அலாவுதீன் அகமது
தாவூத்
மஹ்மூத்
முகம்மது
மகள்
மகள்
கியாஸ்உத்தீன்
ஷம்ஸ்உத்தீன்
மகள்
ஹஸன்கான்
யாஹியாகான்
நிஸாம்
முகம்மது III
அகமது
மகமது
அகமது
அலாவுத்தீன்
வலிஉல்லா
கலீமுல்லா

விசய நகர யாதவர்கள்



விசய நகர துளுவ அரவீடு அரசர்கள்



மேற்கோள் நூற்பட்டியல்

(இரண்டாம் பாகம்)

Alberuni	—	India
Aga	—	Rise and fall of Md. Bin Tughlaq
Amir Ali	—	History of the Saracens
Banerjee Ac	—	Rajput Studies
Banerjee R.D.	—	Palas of Bengal
Bhanderker	—	Vaishnavism and saivism
Bhanderker R G.	—	Early History of Deccan
Basham A.L.	—	The wonder that was India
Briggs	—	History of the Rise of the Muhammedan Power in India
Carpenter	—	Theism in Medieval India
Cambridge History of India Vol. I, II, III	—	Ed. Rapson, Haig
Dikshitar V.R.R.	—	Studies in Tamil Literature and History
Doru	—	History of the Afghans
Day Upendranath	—	Administrative System of Delhi Sultanate
Elliot and Dowson	—	History of India as told by its own Historians 8 Volms.
Edwards Michael	—	History of India
Gibb	—	Travels of Ibn Batuta

Ganguli	—	History of Paramaras
Gopalan	—	History of Pallavas of Kanchi
Gopalachari	—	Early History of the Andhra Country
Havell E.B.	—	Medieval Architecture
Haq S.M.	—	A Short History of Delhi
Hussain M.	—	Life and Times of Muhammad Bin Tughlaq
Habib	—	Sultan Muhammad of Gazni
Habibullah A.B.M.	—	The foundation of Muslim Rule in India
Heras	—	Beginnings of Vijayanagar History
,,	—	Aravidu dynasty of Vijayanagar
,,	—	Studies in Pallava History
Hussain Yusuf	—	Glimpses of Medieval Indian Culture
Ishwari Prasad	—	Medieval India
,,	—	History of the Qaraunala Turks in India
Jafar S.M.	—	Some Cultural Aspects of Muslim Rule in India
King	—	History of the Deccan
Krishnaswamy Aiyangar S.	—	Sources of Vijayanagar History
,,	—	Krishnadevaroya of Vijayanagar
,,	—	Little Knowr Chapter of Vijayanagar Empire
,,	—	Beginnings of South Indian History
,,	—	South India and Her Muhammadan invader
Kanagasabai Pillai	—	Tamils Eight Hundred years ago
Krishna Rao	—	Early dynasties of Andhradesa
Lane Poole	—	Medieval India
Law B. C.	—	Concept of Buddhism

Lal K.S.	—	History of the Khalgis
Majumdar R.C.	—	Arab invasions of India
Mahalingam T.V.	—	Administration and Social Life under the Vijayanagar Empire
	—	Economic Life in the Vijayanagar Empire
Mahajan V.D.	—	Delhi Sultanate
Meenakshi C.	—	Administrative and social life under the Pallavas
Nigami K. A.	—	Studies in Medieval Indian History
Nadvi Sulaiman	—	Arabs and India
Narayan Iyer C. V	—	Origian and early History of saivism in South India
Ojha	—	History of Rajaputana
Pande A.B.	—	The first Afghan Empire in India
Palande	—	Introduction to Indian Administration
Qwanungo	—	Studies in Rajput History
Quereshi	—	The Administration of the Sultanate of Delhi
Risley Herbert	—	The People of India
Ray H.C.	—	Dynastic History of Northern India
Smith V. A.	—	Oxford History of India
,,	—	History of Fine Art in India and Ceylon
Sastri K.A.N	—	History of South India
Sarkar D.C.	—	The early Pallavas successors of the Sathavahanas in the lower Deccan
Sewell R.	—	Historical Inscriptions of South India
Sewell M.	—	A Forgotten Empire
Sharma S.R.	—	The Crescent in India
Shastri A.M.A.	—	Outlines of Islamic culture
Saran P.	—	Studies in Medieval Indian History

Sherwani H.K.	—	The Bahmanis of Deccan
Sherwani	—	The Bahmini Kingdom
,,	—	Muhammad Gawan
Salatore	—	Social and Political life in the Vijayanagar Empire
Sinha	—	Development of Indian Polity
Subramaniam K.R.	—	Buddhist remains in Andhra and Andhra History
Subramanian N.	—	Sangam Polity
Sama Shastri	—	Evolution of Indian Polity
Srivatsava	—	History of India
Thomas	—	The Chronicle of the Pathan Kings of Delhi
Tarachand	—	Influence of Islam on Indian Culture
Todd	—	Annals and Antiquities of Rajasthan
Tripathi	—	Some Aspects of Muslim Administration
Venkatramanayya N.	—	Vijayanagar—Origin of the city and Empire.
,,	—	The Early Muslim expansion in South India
,,	—	Vijayanagar—six—centenary commemoration Volume
,,	—	Indian culture through the Ages
Vaidya C.V.	—	History of Medieval Hindu India
Yazdani	—	The Early History of the Deccan
Zaffar	—	The rise and fall of the Gaznavites

கலைச்சொற்கள்

A

Abdication	—	முடிதுறப்பு, அரசு துறத்தல்
Absolute Government	—	முழுவல்லாட்சி அரசு
Administration	—	ஆட்சி, ஆளுகை, நிருவாகம்
Administrative Boards	—	ஆட்சி வாரியங்கள்
Age Epics	—	காவியங்களின் காலம்
Age Vedic	—	வேத காலம்
Age Copper	—	தாமிரக்காலம்
Age Iron	—	இரும்புக் காலம்
Ambassador	—	தூதர்
Amil	—	வருவாய்த்துறை அதிகாரி
Amir	—	டில்லி சுல்தானிய மூன்றுவது நிலை அலுவலர்
Amir-I-Akhur	—	குதிரைப்படை அதிகாரி
Amir-I-Kajip	—	அரசவை அதிகாரி
Amir-I-Koh	—	வேளாண்மைத்துறை அதிகாரி
Amir-I-Shikar	—	வேட்டைப்படையின் அதிகாரி
Amir-I-Tarab	—	பொழுதுபோக்குக் குழு அதிகாரி
Anarchy	—	அரசியல் குழப்பம்
Anthropology	—	மானிட இயல் நூல்
Anthropologist	—	மானிட இயல் நூல் வல்லுநர்
Arch	—	வளைவு
Archaeology	—	தொல் பொருளாய்வு, அகழ் வாராய்வு
Architecture	—	கட்டடக்கலை
Archives	—	ஆவணக்களரி
Art	—	கலை

Art Fine	—	நுண்கலை
Artillery	—	பீரங்கிப்படை
Appeal	—	முறையீடு
Appointment	—	நியமனம்
Aristocracy	—	உயர் குடியாட்சி
Ariz	—	படை வீரர்கள், குதிரைகள் ஆகியவற்றின் எண்ணிக்கைக்குப் பொறுப்பான அதிகாரி
Assassination	—	அரசியல் கொலை
Assessment	—	மதிப்பீடு
Assembly	—	அவை, சபை
Authorities	—	ஆதாரங்கள்
Autocracy	—	தன்னரசு, தன்னுட்சி

B

Bahadur	—	வீரம்மிக்கவர்
Balance of Power	—	வல்லமைச் சமநிலை
Banjara	—	தானிய வியாபாரி
Barid Mamalik	—	ஒற்றுமைத் துறை தலைவர்
Barter	—	பண்டமாற்று
Ballot Paper	—	வாக்குச் சீட்டு
Bhang	—	கஞ்சா
Battle	—	சண்டை
Board	—	வாரியம்
Blockade	—	போக்குவரத்துத் தடை
Boycott	—	புறக்கணிப்பு
Bribery	—	கையூட்டு இலஞ்சம்
Bakthi Cult	—	பக்தி இயக்கம்
Besiege	—	முற்றுகையிடு
Bibiliography	—	நூலடைவு
Buffer state	—	இடைநாடு, இடுக்கிடை நாடு
Buddha	—	புத்தர், பௌத்தர், ஞானம் பெற்றவர்

C

Cabinet	—	அமைச்சரவை
Caste		சாதி
Casting Vote	—	முடிவுசெய்வாக்கு

Capital — தலைநகர். அரசு இருப்பிடம்
Campaigns — படையெடுப்புகள்
Census — குடிக் கணக்கு
Censure — கண்டனம்
Central Government — மைய அரசு, மத்திய அரசு
Central Assembly — மையச் சட்ட மன்றம்
Ceremony — சடங்கு
Charity — அறம்
Charai — சத்திரம்
City Council — நகர அவை
Chronology — கால வரன்முறை
Contemporary — சமகாலத்திய
Civilisation — நாகரிகம்
Civil Service — ஊரியல் பணித்துறை
Civil Servant — ஊரியல் அலுவலர்
Clan — வகுப்பு
Colony — குடியேற்றம்
Commissioner — ஆணையர்
Contract — ஒப்பந்தம்
Consent — இசைவு, ஒப்பம், சம்மதம்
Corps — படைப்பிரிவு
Corruption — இலஞ்சம் கையூட்டு
Cosmic — இயலுலகு சார்ந்த
Coup de tat — வன்முறை ஆட்சிமாற்றம்
Criminal — குற்ற இயல்
Conversion — சமயமாற்றம்
Court — அரச அவை, நீதிமன்றம்
Crown — அரசு, மன்னர்
Culture — பண்பாடு
Community — இனம்
Conversation — உரையாடல்

D

Date — காலம், தேதி
Data — விவரங்கள்
Dagh — சூடுபோடுதல்
Darbar — அரசவை கூடுமிடம்
Decentralisation — அதிகாரப் பன்முகப்படுத்தல்
Decipher — விளக்கு

Decree	—	ஆணை
De Facto	—	நிகழ் முறையில்
De Jure	—	சட்ட முறையில்
Despot	—	வல்லாட்சியாளன்
Despotism	—	வல்லாட்சி
District	—	மாவட்டம்
Dinar	—	ரோம் வெள்ளிநாணயம், தினார்
Dictator	—	வல்லாட்சியாளர், யதேச் சாதிகாரி
Divan	—	அலுவலகம், மையத்தலைமைச் செயலகம்
Divani Ariz	—	இராணுவத்துறை அலுவலகம்
Divine Law	—	தெய்வீகச் சட்டம்
Diwani Insha	—	தலைமைச் செயலரின் அலுவலகம்
Diwani Wizarat	—	வசீரின் அலுவலகம்
Divine Right Theory	—	இறைவழி உரிமைக் கோட்பாடு, தெய்வீக உரிமைக் கோட்பாடு.
Doab	—	இரு நதிகளுக்கு இடைப்பட்ட நிலம்
Dynasty		அரசமரபு, குலம் வம்சம்,

E

Election	—	தேர்ந்தெடுத்தல்
Earthenware	—	மண்பாண்டம்
Embassy	—	தூதுக்குழு
Empire	—	பேரரசு
Emperor	—	பேரரசர்
Enlightened	—	புதுநோக்கம் கொண்ட
Enthronement	—	முடிசூட்டல்
Espionage	—	ஒற்று
Epigraphy	—	கல்வெட்டு
Episode	—	கிளைக்கதை
Era	—	சகாப்தம், ஆண்டு
Etymology	—	சொல்லிலக்கணம்
Expansion	—	விரிவாக்கம்
Expeditions	—	படையெடுப்புகள்
Executive	—	செயல்துறை

F

Farman	—	அரசாணை
Fable	—	நீதிக்கதை
Faujdar	—	இராணுவத்துறைப் பிரிவின் தளபதி
Federation	—	உறுப்புகளால் அமைந்த கூட்டு இணை அமைப்பு
Fortress	—	அரண்
Foster mother	—	மாற்றுந்தாய்
Field measurement	—	நில அளவை
Fiscal Policy	—	வரியைப்பற்றிய கொள்கை
Federal State	—	கூட்டாட்சி அரசு
Feudalism	—	நிலமான்ய முறை
Fundamental Rights	—	அடிப்படை உரிமைகள்
Freseo	—	சுவர்ச்சித்திரம்

G

Gallery	—	கூடம்
Ghusul khana	—	குளிக்கும் அறை
Geneology	—	குடிவழி, குலமரபு
Ghats	—	மலைத் தொடர்கள்
Governor	—	ஆளுநர்
Government organisation	—	அரசு நிறுவனம்
Grades	—	நிலைவரிசைகள்
Greater India	—	பரந்த இந்தியா
Guardian	—	பாது காவலர்

H

Hazari	—	ஆயிரம் வீரர்களுக்குத்தலைவன்
Harem	—	அந்தப்புறம்
Half-brother	—	ஒன்றுவிட்ட உடன் பிறப்பாளன்
Heritage	—	மரபுரிமை
Hereditary	—	இனமரபு
History	—	வரலாறு
Historical sense	—	வரலாற்று உணர்வு
Historical geography	—	வரலாற்று நிலவியல்

Hitoriography — வரலாறு எழுதும் கலை
Homage — மரியாதை வணக்கம்
Hymn — துதிபாடல்
Hypothetical — புனைவிக்கோல் இயல்பான விளக்கம்.

I

Ibadat khana — தொழுகை இல்லம்
Iconoclast — சிலைவணக்க மறுப்பாளர்
Idol worship — சிலை வழிபாடு
Imperial — பேரரசுக்குறிய
Imperialism — பேரரசுக் கோட்பாடு
Inscription — பட்டயம், சாசனம்
Immemorial — தொன்றுதொட்டு
Imam — உயர்தளபதி
Interregnum — ஆட்சி இடையீடு
Infallibile — பிழையாத்தன்மை
Inam — அன்பளிப்பு
Institutions — நிறுவனங்கள்
Izzat — மதிப்பு
Iqtadar — ஆளுநர்

J

Jagir — அரசினுல் அலுவலர்க்கு வழங்கப்பட்ட நிலம்
Jarokha — அரசன் தோற்றமளிப்பதற் கான ஜன்னல்
Jizya — முஸ்லீம் அல்லாதோர் செலுத்த வேண்டிய வரி
Janizary — மெய்க்காப்பாளர்

K

Kalima — முஸ்லீம் சமயத்தின் வாய்பாடு
Kalifa — சமயத் தலைவர்
Karkuns — தொழிலாளர்கள்
Khutba — இஸ்லாமியப் பொதுவழிபாடு
Khan — மங்கோலியர்கள், துருக்கியர்கள் ஆகியோரிடையே சுயாட்சி யாளர்.

Khiray — நிலவருவாய்
Khwaja — தலைவன், வணிகன், மதிப்புப் பெற்றவன்
Kotwal — நகரப் பொறுப்பாளன்
Khalsa — அரசு நிலங்கள்
Kingdom — அரசு

L

Law of Dharma — தர்ம கோட்பாடு
Law of Primogenitive — மரபு வழிச் சட்டம்
Local institutions — ஊர் நிறுவனங்கள்
Local Government — ஊர் அரசு
Legal — சட்டரீதியான

M

Madrassa — கல்வி நிலையம்
Magistrates — அமைதி காப்பு நடுவர்கள்
Maritime — கடலோட்டம்
Mateial Culture — உலகியல் பண்பாடு
Mausoleum — மசூதி
Megalithic age — பெரும் பாறைக்கல் சகாப்தம்
Malik — டெல்லி சுல்தானியத்தில் கான்களுக்கும் அமீர்களுக்கும் இடைப்பட்ட அதிகாரிகள்
Malik Naib — அரசனுடைய பொறுப்புகளை நிறைவேற்றியவர்
Muhtasib — நகர்மன்றத்தில் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை மேற்பார்வையிட்டவர்
Minar — கோபுரம்
Mosque — மசூதி, இஸ்லாமிய ஆலயம்
Muqqaddam — கிராமத்தலைவர்
Mushriff — கணக்குப் பொறுப்பு அதிகாரி
Middle Ages — இடைக்காலம்
Minorities — சிறுபான்மையோர்
Mixed state — கலப்பு அரசு
Moral State — குறிக்கோள் அரசு
Moral Regulations — ஒழுங்குமுறை

Monarchy	—	முடியரசு, கோலுட்சி
Municipal Council	—	நகராண்மைக் கழகங்கள்
Mythology	—	புராண இயல்
Monolithic	—	ஒரே கல்லாலான

N

Naib	—	உதவியாளர், பிரதிநிதி
Nation	—	நாடு
National	—	தேசீயம், நாட்டுணர்ச்சி
Neolithic	—	புதிய கற்காலம்
Nomads	—	நாடோடிகள்
Natural Law	—	இயற்கைச் சட்டம்

O

Obligations	—	கடப்பாடு
Obsolete	—	வழக்கொழிந்த
Organisation	—	நிறுவனம்
Ordeal	—	சோதனை முறை
Origin	—	தோற்றம்
Officer	—	அதிகாரி, அலுவலர்

P

Paleolithic Age	—	பழைய கற்காலம்
Patriotism	—	நாட்டுப்பற்று
Patriarch	—	தந்தை வழிச்சார்ந்தது
Paintings	—	ஓவியங்கள்
Parganas	—	மாவட்டப் பிரிவுகள்
Philosophical	—	தத்துவரீதியிலான
Principle	—	கோட்பாடு
Politics	—	அரசியல்
Puritans	—	தூய்மையாளர்
Penal Law	—	தண்டனைச் சட்டம்
Province	—	மாநிலம்
Pre-historic	—	வரலாற்றிற்கு முற்பட்ட
Punch marked	—	அடையாளத் துளையிடப்பட்ட
Puisne	—	சாதாரண நீதிபதி

Q

Qila	—	கோட்டை
Quorum	—	கோர் எண்
Quota	—	வீதப் பங்கு
Quasi governmental	—	ஆட்சி முறை போன்ற

R

Rank	—	படி நிலை முறை, வரிசை
Rebellion	—	கிளர்ச்சி
Ratnanis	—	இரத்தினங்கள்
Religion	—	சமயம்
Revenue	—	வருவாய்
Religious Toleration	—	சமயப் பொறை
Revenue officer	—	வருவாய் அலுவலர்
Revolt	—	கலகம்

S

Secretariat	—	செயலகம்
Secretary	—	செயலர்
Shahibi Thanji	—	பணத்துறைச் சிப்பந்திகளை மேற்பார்வையிடுபவர்
Shaik	—	தலைவன்
Social Contract	—	சமுதாய ஒப்பந்தம்
Secular State	—	சமயச் சார்பற்ற அரசு
Society	—	சமூகம், சமுதாயம்
Sovereignty	—	இறைமை
Siphasalar	—	படைகளின் தளபதி
Spiritual	—	மன இயல்
State of Nature	—	இயற்கை நிலை
Stone Age	—	கற்காலம்
Stupas	—	ஸ்தூபிகள்
Social club	—	சமூகக் குழாம்
Social Justice	—	சமுதாய நீதி
Superintendent	—	கண்காணிப்பாளர்
Sultan	—	சுல்தான், அரசன்
Sub-Continent	—	துணைக்கண்டம்

T

Tenure	—	பதவிக்காலம்
Terra Cotta	—	சுட்ட மண்
Theocracy	—	சமயங்சார்ந்த ஆட்சிமுறை
Trade and Commerce	—	வர்த்தகம், வாணிபம்
Tribal State	—	திறை
Territory	—	இனவழி அரசு
Tyranny	—	ஆட்சிப்பகுதி

U

Urban	—	கொடுங்கோலாட்சி நாட்டுப்புறம், புறநகர் நகர்ப்புறம்
Ulama	—	முஸ்லிம் கல்விமான்கள்

V

Viceroy	—	அரசப் பிரதிநிதி
Vakil	—	வாதாடுபவர் துணை அதிகாரி

வரலாற்று முக்கிய நிகழ்வுகள்

கி. பி.

543 சாளுக்கிய அரசு நிறுவப்படுதல்

575 சிம்ம விஷ்ணுவின் ஆட்சித் தொடக்கம்

600 முதல் மகேந்திரவர்மனின் ஆட்சி

630 முதல் நரசிம்மவர்மனின் ஆட்சி

642 இரண்டாம் புலிகேசியின் வீழ்ச்சி

656 கீழைச் சாளுக்கிய அரசு நிறுவப்படுதல்

713 அராபியர் சிந்துவை வெற்றி கொள்ளுதல்

745 இராட்டிரகூட அரசு தொடக்கம்

788 சங்கராச்சாரியாரின் பிறப்பு

845 மூன்றாம் நந்திவர்மனின் ஆட்சி

850 விசயாலயனின் ஆட்சி

985 முதல் இராசராசனின் ஆட்சி

999 மாமூது இந்தியாவின்மீது படையெடுக்க ஆளுரைத்தல்

1012 முதல் இராசேந்திரனின் ஆட்சி

1191 முதலாம் தரைன் சண்டை

1192 இரண்டாம் தரைன் சண்டை

1206 குத்புதீன் அய்பெக் டெல்லிச் சுல்தானியத்தை நிறுவுதல்

1211 இல்துத்மிஷ் சுல்தானுதல்

1236 இரஸியா பேகம் அரசியாதல்

கி.பி.

1240 பஹ்ரம் அரசனுதல்

1242 மஹூத் அரசனுதல்

1246 பால்பன் அரசனுதல்

1279 மங்கோலியரின் படையெடுப்பு

1287 முயிஸுத்தீன் கைக்குபாத் அரசனுதல்

1290 கில்ஜிப் பேரரசை ஜலாலுதீன் நிறுவுதல்

1292 மூன்றும் வீர வல்லாளன் அரசனுதல்

1296 அலாவுதீன் முடிசூட்டப்படுதல்

1311 மாலிக் காபூரின் மதுரைப் படையெடுப்பு

1320 துக்ளக் மரபு நிறுவப்படுதல்

1325 மகமதுபின் துக்ளக் அரசனுதல்

1336 விசய நகரப் பேரரசு நிறுவப்படுதல்

1343 மூன்றும் வீர வல்லாளனின் மறைவு

1347 பாமினி அரசு நிறுவப்படுதல்

1351 பிருஸ் ஷா துக்ளக் அரசனுதல்

1398 தைமூரின் படையெடுப்பு

1414 சையத் மரபு நிறுவப்படல்

1451 பஹ்லோல் லோடி அரசனுதல்

1509 கிருஷ்ணதேவராயரின் ஆட்சி தொடக்கம்

1517 இப்ராஹிம் லோடி அரசனுதல்

1524 பஞ்சாப்பைப் பாபர் கைப்பற்றுதல்

1526 முதலாம் பானிப்பட்டுப் போர்

1565 தலைக்கோட்டைப் போர்

இந்திய வரலாறு I

பல்கலைக்கழக வினாக்கள்

ஏப்ரல் 1968

1. "வேதப் பாடல்களிலிருந்து வடமொழிக் காப்பியங்களுக்குட்புகும் போது, புதுமையான உலகத்தினுள் நாம் நுழைகிறோம்"—விளக்குக.

2. இந்தியாவில் பௌத்த சமயத்தின் வரலாற்றில் முக்கிய நிலைகளைச் சுட்டிக் காட்டுக. பிற்காலப் பௌத்தம் கௌதம புத்தரின் போதனைகளில் எவ்வகையில் வேறுப்பட்டுள்ளது.

3. மகதநாடு அசோகரின் காலம் வரையில் பேரரசாக விரிவடைவதற்கான நிலைகளைக் கிடைத்துள்ள ஆதாரங்களைக் கொண்டு சுட்டிக் காட்டுக.

4. சுங்க வமிசத்தின் வரலாற்றினைக் கூறி, முந்தைய இந்திய வரலாற்றின் முக்கிய காலத்தினை அது குறித்தது எங்ஙனம் என்பதைச் சுட்டிக் காட்டுக

5. ஆந்திர வமிசத்தின் எழுச்சியையும் விரிவாக்கத்தையும், வீழ்ச்சியையும் மதிப்பிடுக.

6. குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்களை விளக்குக,

7 பழங்கால இந்தியா கடல்கடந்து பரவிய வரலாற்றினைச் சுருக்கமாக வரைக.

8. பத்து, பதினென்றும் நூற்றாண்டுகளில் சோழப் பேரரசு பரவியதை விளக்கி வரைக. சோழ ஆட்சியின் முக்கிய இயல்புகள் யாவை ?

9. பதினான்காம் நூற்றாண்டில் டெல்லிச் சுல்தானியர் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகளை விளக்கி வரைக.

10. பேரரசர் கிருஷ்ண தேவராயரின் வாழ்க்கையையும், சாதனைகளையும் மதிப்பிடுக.

செப்டம்பர் 1968

1. வேதகால நாகரிகத்தின் முக்கியக் கூறுபாடுகளை விளக்குக.

2. இந்திய வரலாற்றில் கி. மு. ஆறும் நூற்றாண்டின் முக்கியத் துவம் குறித்து விளக்குக.

3. அசோகரின் ஆட்சி அமைப்பு முறைகளை விளக்கி, அது பேரரசின் உறுதிப்பாட்டை எங்ஙனம் பாதித்தது என எடுத்துக் காட்டுக.

4. இந்திய - கிரேக்கர்களின் வரலாற்றினை ஆராய்ந்து இந்தியப் பாட்டில் கிரேக்கத்தின் சாயல் எந்த அளவிற்குப் படிந் துள்ளது என ஆராய்க.

5. குப்தர் கால ஆட்சி இந்தியப் பண்பாட்டிற்கு ஆற்றிய பணிகள் யாவை என விளக்குக.

6. இந்தியாவிற்கு வருகைபுரிந்த சீனப் பயணிகளின் குறிப்பு களை எழுதி, அதனை மதிப்பீடு செய்க.

7. இடைக்கால இந்து இந்தியாவின் வரலாற்றில் கூர்ஜாரப் பிரதிகாரர்கள் வகித்த பங்கு யாது ?

8. அடிமை வம்சத்து அரசர்களில் இல்துத்மிஷ் சிறந்தவர் என்று கருதிடத் தக்க அடிப்படைகள் யாவை ?

9. துருக்கிய சுல்தான்களால் பின்பற்றப்பட்ட ஆட்சி அமைப் புத்துறையில் முக்கியக் கூறுபாடுகளைச் அவை எந்த அள விற்குச் சிறப்பானவை எனச் சுட்டிக் காட்டுக.

10. கி. பி. 1565 வரை விசய நகரப் பேரரசிற்கும் முகமதிய அரசு களுக்குமிடையே நிலவிய உறவு முறையினை ஆராய்க.

ஏப்ரல் 1969

1. இந்திய நாகரிகத்தில் இருக்கு வேதத்திற்கு முந்திய பின் னணியினை மதிப்பிடுக.

2. சமணமும், பௌத்தமும் சமயங்களல்ல, சீர்திருத்த இயக் கங்களே என எடுத்துக் காட்டுக.

3. அசோகரைப் பௌத்தராகவும், அரசராகவும் மதிப்பிடுக.

4. சாகர்களுடன் சதவாகனர் கொண்ட தொடர்பினை விளக்கி வரைக.

5. சமுத்திரகுப்தரின் வாழ்க்கையையும், சாதனைகளையும் எடுத் துக் காட்டுக.

6. இராட்டிர கூடர்களைப் படையெடுப்பாளர்களாகவும், கலை இலக்கியப் புரவலர்களாகவும் கருதி வரைக.

7. பாசவரும் அவருடைய சைவமும் கொண்டிருந்த, சமூக, அரசியல் சிறப்பினை விளக்குக.

8. பிற்கால பாண்டியரின் சிறப்புக்குறித்து விளக்குக.

9. கி. பி. 1336 வரை முஸ்லீம்கள் தக்காணத்திலும், தென்னகத் திலும் பரவிய நிலைகளை எடுத்துக் காட்டுக.

10. விசய நகரப் பேரரசின் சங்கம் வமிசத்து ஆட்சியாளர்களின் அரசியல், பண்பாட்டுச் சாதனைகளை மதிப்பிடுக.

செப்டம்பர் 1969

1. சூத்திர இலக்கியங்களில் காணப்படும் சமுதாய வாழ்க்கை, சமய நம்பிக்கைகளை விளக்குக.

2. மௌரிய ஆட்சிமுறை குறித்துச் சுருக்கமாக வரைக.

3. கனிஷ்கரை இரண்டாம் அசோகர் என்பது எங்ஙனம் பொருந்தும்.

4. இந்தியாவின் சமூக, பண்பாடு வாழ்க்கை முறை குறித்த யுவாங் சுவாங்கின் குறிப்புகளை விளக்கி பாஹியானின் குறிப்புகளோடு பொருந்துவது எங்ஙனம் என ஆராய்க.

5. தென்னிந்தியாவில் பல்லவர் - சாளுக்கியரிடையே நிலவிய தலைமைப் போராட்டத்தினை விளக்குக.

6. முதலாம் குலோத்துங்கனின் வாழ்க்கை சாதனைகளை மதிப் பிடுக.

7. ஹர்ஷர் முதல் முகம்மது கோரிவரை கன்னௌசியே ஆர்வ மிக்கப் படையெடுப்பாளர்களின் ஆர்வத்தைத் தூண்டுவ தாக அமைந்தது என எடுத்துக்காட்டுக.

8. இந்திய வாழ்க்கையில் எல்லாப் பகுதியையும் முஸ்லிம் படை யெடுப்புகள் பாதித்தன என விளக்குக.

9. பாமினிப் பேரரசு தோன்றுவதற்கான சூழ்நிலைகள் யாவை என எடுத்துக் காட்டுக.

10. விசய நகர - பாமினிப் போர்களைச் சுருக்கமாக வரைந்து சமயம் மட்டும் ஒரே அல்லது முக்கிய காரணமா என ஆராய்க.

ஏப்ரல் 1970

1. இந்திய வரலாற்றின் போக்கில் நிலவியல் கூறுபாடுகள் எந்த அளவில் செல்வாக்குப் பெற்றிருந்தன என்பதை விவரிக்க

2. புத்தரின் போதனைகள் பற்றி விவரிக்க. புத்த மதம் விரைவில் பரவியதற்கான காரணங்களைக் கூறுக.

3. மௌரியப் பேரரசின் ஆட்சி முறையை சுருக்கமாகத் தருக.

4. அசோகர், கனிஷ்கர் இவர்களின் சிறப்பு அம்சங்கள் ஹர்ஷரின் ஆளுமையில் எவ்வாறு பிரதிபலித்தது,

5 பல்லவர்களின் தோற்றத்தையும், அவர்கள் காலத்திய கலாச்சார முன்னேற்றத்தையும் பற்றி ஆராய்க.

6. அராபியர்கள் சிந்துவைக் கைப்பற்றிய முறையை விவரிக்க அது இந்திய வரலாற்றில் பின் விளைவுகளற்ற ஒரு வெற்றி என்னும் கூற்றை ஆராய்க.

7. இராஷ்டிரகூடர்கள் தங்கள் ஆட்சியை எவ்வாறு ஒருமைப்படுத்தினர்? கலைத்துறைக்கு அவர்கள் ஆற்றிய தொண்டுகள் யாவை?

8. அலாவுதீன் கில்ஜி ஒரு வலிமை பொருந்திய ஆட்சியை எவ்வாறு ஏற்படுத்தினரென்பதை விவரிக்க:

9. கலை, இலக்கியம் இவற்றின் முன்னேற்றத்தில் ஹொய்சாலர்களுடைய பங்கினை விவரிக்க.

10. விசய நகர வரலாற்றில் கிருஷ்ணதேவராயரின் பங்கினை விவரிக்க

செப்டம்பர் 1970

1. சிந்து வெளி நாகரிகத்தை சுருக்கமாகக் கூறுக. இந்த நாகரிகம் ஆரியரல்லாதார், ஆரியருக்கு முந்தியவர்கள் என்று கூறப்படுவதை விளக்குக.

2. அலெக்சாந்தர் படையெடுப்பின்போது வடமேற்கு இந்திய அரசியல் நிலையினை ஆய்க. படையெடுப்பின் விளைவுகளை சுட்டிக் காட்டுக.

3. பௌத்த சமயத்திற்கு கனிஷ்கர் ஆற்றிய தொண்டினை மதிப்பிடுக.

4. குப்த பேரரசின் வீழ்ச்சியின் காரணங்கள் யாவை?

5. சோழர்களின் ஆட்சிமுறையை விவரிக்க.

6. இராஜபுத்திரர்கள் யார்? அவர்களுடைய சமுதாய வாழ்வினை குறிப்பிடுக.

7. முஸ்லீம் படையெடுப்பாளர்களின் வெற்றியின் காரணத்தையும், இந்து அரசின் வீழ்ச்சியையும் குறிப்பிடுக.

8. முகம்மது பின் துக்ளக்கின் உயர்ந்த நோக்கங்கள் தோல்வியடையக காரணமென்ன?

9. இந்திய கலை, இலக்கியம், சமயம் ஆகிய துறைகளில் முஸ்லிம் பண்பாட்டின் செல்வாக்கினை சுட்டிக் காட்டுக.

10. பாமினி அரசில் மாமூது காவனின் பங்கினை ஆய்க.

ஏப்ரல் 1971

1. வேத காலத்திற்கு முந்திய வரலாற்றைப் பற்றி ஓர் குறிப்பு வரைக.

2. சமணம், பௌத்தம் ஆகிய இரு சமயங்களின் கொள்கைகளையும் அவைகள் இந்தியாவில் பரவிய விதத்தையும் ஒப்பிடுக.

3. சுங்க வம்ச ஆட்சியில் ஏற்பட்ட கலாச்சார வளர்ச்சியை மதிப்பிடுக.

4. விசயபுரி இக்ஷ்வாகு வம்சத்தினர் வரலாற்றை வரைக.

5. ஹூனர்கள் [Hunas] யாவர்? குப்த பேரரசிற்கு அவர்களால் உண்டான பலன்களைக் கூறுக.

6. சிம்மவிஷ்ணு முதல், முதலாம் நரசிம்மவர்மன் வரை பல்லவ வரலாற்றை விளக்கி எழுதுக.

7. சோழ சாளுக்கிய அரசியல் உறவுகளை மதிப்பிடுக.

8. இல்துத்மிஷ்-பால்பன் ஆகிய இருவரையும் ஒப்பிட்டு இவ் விருவரில் யார், ஏன் சிறப்புடையவர் என மதிப்பிடுக.

9. குல்பர்க்காவில் பாமினி ராஜ்ஜியம் ஏற்படுவதற்கு சாதகமாக இருந்த வரலாற்றை வரைக.

10. விசய நகரப் பேரரசில் சங்கம வம்சத்தினர் ஆட்சியின் போது ஏற்பட்ட சமூக—சமய வாழ்க்கை வரலாற்றை விவரித் தெழுதுக.

ஏப்ரல் 1973

1. ஹரப்பா (நகர) நாகரிகத்தை உண்டாக்கியவர்கள் யாவர்? அதற்கும் மற்ற நாகரிகங்களுக்கும் உள்ள தொடர்பைத் தெளிவாக்குக.

2. மௌரிய வரலாற்றின் ஆதாரங்கள் யாவை? அவற்றிலிருந்து மௌரிய அரசியலைப் பற்றி நாம் அறிந்து கொள்பவை யாது?

3. கனிஷ்கர் இரண்டாவது அரசர் எனக் கூறப்படுவது எங்ஙனம் பொருந்தும்?

4. இந்திய அரசியலுக்கும், பண்பாட்டிற்கும் சமுத்திரகுப்தருடைய சேவைகளை மதிப்பிடுக.

5. சீலாதித்திய ஹர்ஷவர்த்தனருடைய ஆட்சியில் வட இந்தியாவில் நிலவிய சமூக-சமயநிலையைக் கூறுக.

6 சமயத்திற்கும், இலக்கியத்திற்கும் ஆதி சங்கரருடைய சேவைகளை மதிப்பிடுக.

7 சோழர்கள் ஆட்சியில் இந்தியாவிற்கும் தென்கிழக்காசியப் பிரதேசங்களுக்கும் நிலவிய உறவைக் கூறவும்.

8. 1206 கி. பி.க்கு முன் டெல்லியில் துருக்கியர்களின் ஆட்சி பரவிய வரலாற்றை விளக்குக.

9. விசய நகர அரசிற்கும், பாமினி ராஜ்யத்திற்கும் நிலவிய உறவை விளக்கவும்.

10. டெல்லியில் லோடி வமிச அரசர்களின் ஆட்சியைச் சுருக்கமாகக் கூறுக.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை

★

பின்வரும் பொருள்களில்

பட்டப்படிப்பிற்குரிய நூல்கள்

விரைவில் வெளிவரும்

கணிதம்	—	41 நூல்கள்
இயற்பியல்	—	28 ,,
வேதியியல்	—	39 ,,
தாவரவியல்	—	30 ,,
விலங்கியல்	—	40 ,,
பொறியியல்	—	50 ,,
வரலாறு	—	45 ,,
அரசியல்	—	34 ,,
பொருளாதாரம்	—	83 ,,
வணிகவியல்	—	36 ,,
பூள்ளியியல்	—	16 ,,
உளவியல்	—	[illegible]
[illegible]	—	18